290

2901

ஸ்ரீ:

# திருப்பாவை

உரையாசிரியர்:-

ஸ்ரீ. உ. வே. கி. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி.

கிடைக்குமிடம்:-

ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,

(ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் ஆசிரியர்)

புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

T02901
R001G05

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



# திருப்பாவை

## வ்யாக்யானம்

[ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் வெளியீடு]

(இரண்டாம் பதிப்பு)

உரையாசிரியர்:-

ஸ்ரீ. உ. வே. கி. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி.

★

கிடைக்குமிடம்:-

**ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அட்வகேட்,**

(ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் ஆசிரியர்)

3. புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

★

**விலை ரூ. 3-00.**

தபால் கூலி 0-37.

பிலவ, மார்கழி.

ஸ்ரீநிவாஸம் பிரஸ், 8-புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

ஸ்ரீ:

# ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்

சிறந்த ஸ்ரீவைஷ்ணவ மாதப்பத்திரிகை

பிலவ மார்கழியிலிருந்து பதினைந்தாவது வருடம் நடைபெறுகிறது.


ஆசிரியர்:-

## ஸ்ரீ S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,

அட்வகேட்,

3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி,


**வருடச்சந்தா ரூ. 3-00.**

வேதம், ஸ்மிருதிகள், இதிஹாஸங்கள் முதலியவற்றிலிருந்து ஸ்ரீமந்நாராயணனின் பெருமையை விளக்கும் கட்டுரைகளும், தமிழில் கீதா வ்யாக்யானமும், விவரண ஸஹிதமான ஸ்ரீராமாயண தனிச்லோகமும், திவ்யப்ரபந்தங்களுக்கு எளிய விவரணங்களோடு கூடிய பூர்வாசார்ய வ்யாக்யானங்களும், கம்பராமாயணவுரையும், பெரியாழ்வார் ப்ரபாவமும், விசிஷ்டாத்வைத ப்ரகரணக்ரந்தமான விவரண ஸஹித சாரீரக காரிகாவளியும், விசிஷ்டாத்வைதவிஜயமும், மற்றும் பல விஷயங்களும் வெளிவருகின்றன.



இந்நூலின் உரையாசிரியரும்

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் ஸ்தாபகருமான

**ஸ்ரீ. உ. வே. கி. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி.**

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



# திவ்யப்ரபந்தஸாரம்

# திருப்பாவை வ்யாக்யானம்

## தனியன்கள்

1. நீளாதுங்கஸ்தநகிரிதடீஸுப்தமுத்போத்ய க்ருஷ்ணம்
பாரார்த்யம் ஸ்வம் ஶ்ருதிஶதஶிரஸ்ஸித்தமத்யாபயந்தீ।
ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜி நிகளிதம் யா பலாத்க்ருத்ய புங்க்தே
கோதா தஸ்யை நம இதமிதம் பூய ஏவா஽ஸ்து பூய:॥

**பதவுரை:—யா கோதா**—*யாதொரு ஆண்டாள்,* **நீளா துங்க ஸ்தன கிரி தடீ ஸுப்தம்**—*நப்பின்னைப் பிராட்டியினுடைய ஓங்கிப் பணைத்திருந்துள்ள திருமுலைத்தடங்களாகிய மலைத் தாழ்வரையிலே உறங்குபவனாய்,* **ஸ்வோச் சிஷ்டாயாம்**-*தன்னாலே சூடிக்களையப்பட்ட,* **ஸ்ரஜி**-*மாலையிலே,* **நிகளிதம்**-*கட்டப்பட்டவனாயிருக்கும்,* **க்ருஷ்ணம்**—*க்ருஷ்ணனாகிற ஸிம்ஹத்தை,* **உத்போத்ய**—*உணர்த்தி,* **ஶ்ருதி ஶத ஶிரஸ் ஸித்தம்**—*நூற்றுக்கணக்கான வேதாந்த வாக்கியங்களினால் ஸித்திக்கிற,* **ஸ்வம்**—*தன்னுடைய,* **பாரார்த்யம்**—*பாரதந்த்ர்யத்தை,* **அத்யாபயந்தீ**—*அறிவித்து,* **பலாத்க்ருத்ய**—*பலாத்கரித்து,* **புங்க்தே**—*அனுபவிக்கிறாளோ,* **தஸ்யை**—*அப்படிப்பட்ட ஆண்டாளின் பொருட்டு,* **பூயோ பூய ஏவ**—*மறுபடியும் மறுபடியும்,* **இதமிதம் நம:**—*இந்த இந்த 'நம:' என்கிற உக்திகள்,* **அஸ்து**—*ஆகவேண்டும்.*

**அவதாரிகை:**—*திருவரங்கம் பெரியகோயிலில் பட்டர் தர்சனப்ரவர்த்தகராயிருந்த நாளில் திரிவிக்கிரமன் திருமதிள்*

ஜீர்ணமாயிருந்தது; அதனைக் கட்டத்தொடங்கிய **வீரஸுந்தரப்ரம்ஹராயன், கூரத்தாழ்வானுடைய** சிஷ்யரான **பிள்ளைப் பிள்ளையாழ்வானுடைய** திருமாளிகை அந்த மதிளின் நேர்மைக்கு மாறுகவிருப்பதைக்கண்டு அதை இடித்துக் கட்ட முயன்றான். அப்படிச் செய்வது சரியன்று என்று பட்டர் தடுத்ததையும் கேளாமல் பிள்ளைப்பிள்ளையாழ்வானுடைய திருமாளிகையை இடித்துக் கட்டுவித்தான். இதனால் பட்டருக்கும் அவ்வரசனுக்கும் உண்டான மனஸ்தாபம் நாளடைவில் அதிகரிக்க, அவனுடைய உபத்ரவம் பொறுக்காமல் பட்டர் திருக்கோட்டியூருக்கு எழுந்தருளினார். பெரியபெருமாளைப் பிரிந்ததினால் ஏற்பட்ட துக்கத்தைத் தணிப்பதற்காக, பட்டரை, அவருடைய சிஷ்யரான **நஞ்ஜீயர்** ஆண்டாளை ஒரு ஶ்லோகத்தாலும், ஆழ்வார்களை ஒரு ஶ்லோகத்தாலும் துதிக்கவேணும் என்று வேண்டினார். அவரும் இந்த ஶ்லோகத்தால் ஆண்டாளையும், **''பூதம் ஸரஸ்ய''** என்ற ஶ்லோகத்தால் ஆழ்வார்களையும் துதித்தருளினார். இந்த ஶ்லோகத்தில் திருப்பாவையின் தாத்பர்யத்தைச் சுருக்கமாக அருளிச்செய்து கொண்டு ஆண்டாளை சரணமடைகிறார். **''நீளாம் தேவீம் ஶரணமஹம் ப்ரபத்யே''** [நீளாதேவியைச் சரணமடைகிறேன்.] என்று வேதத்தில் உத்கோஷிக்கப்பட்டது. இவர் அந்த நீளாதேவியையும், நீளாநாயகனை நாராயணனையும் துயிலுணர்த்திய கோதையைச் சரணமடைகிறார். 'நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்'' என்று வம்பவிழ் கோதையைத் துயிலுணர்த்திய கோதையன்றோ இவள்.

**வ்யாக்யானம்:—** (நீளா) வேதப்ரஸித்தமான திருநாமத்தை அநுஸந்திக்கிறார். எம்பெருமான் சேதனர்களை உஜ்ஜீவிக்கச் செய்வதற்காக அவதரித்ததைப்போல் இவளும் யசோதைப் பிராட்டியின் ஸஹோதரரான கும்பர் குமாரத்தியாக அவதரித்தருளினாள்.

**''ஸ்யாலோऽத நந்தகோபஸ்ய மிதிலேஷு கவாம் பதி: |**
**ப்ரவ்ருத்தகோதநோ தக்ஷ: கும்பகோ நாம நாமத: ||**

> தாதா துக்தஸ்ய ஸர்வேஷாம் தக்ரஸ்ய ச க்ருதஸ்ய ச|
> ஜநஸ்ய ப்ரியவாக் நித்யம் யஶோதாயா ஜகந்யஜ:||
> தர்மதா தஸ்ய பார்யாऽऽஸீத் தர்மதைவதநாமத:|
> ஸாऽஸூதாऽபத்யயுகளம் கோபநம் கோபபூஷணம்||
> தயோஸ்தத்ர புமாந் ஜஜ்ஞே ஸ்ரீதாமா நாம விச்ருத:|
> ஸர்வைஶ்சாஸீத் குணைர்யுக்த: ஸர்வப்ராணிமநோரம:||
> நீளாநாமா ச கந்யா ஸா ரூபௌதார்யகுணாந்விதா||"

*[மிதிலாதேசத்தில் நந்தகோபனுக்கு மைத்துனனும், எண்ணிறந்த பசுக்களை செல்வமாக உடையவனும், மஹா ஸாமர்த்யவானுமான ஆயர்க்கரசனொருவன் வாழ்ந்துவந் தான். எல்லாருக்கும் பால், மோர், நெய் முதலியவைகளை வழங்குபவனாகவும் ஜனங்களிடம் எப்போதும் பிரியமாகப் பேசுபவனாகவும் விளங்கினான் அவன். அவன் யசோதையின் தம்பி. தர்மதேவதையின் பெயரையுடைய* **தர்மதை** *என் பவள் அவனுக்குப் பத்னியாயிருந்தாள். ஆயர்களுக்கு ஆப ரணமாகவும், ஒளியாகவும் விளங்கிய இருகுழந்தைகளை அவள் பெற்றாள். அவர்களுள் ஆண்குழந்தை* **ஸ்ரீதாமா** *என்று பெயர்பெற்றவனாகவும், எல்லா குணங்களுடன் கூடியவ னாகவும், எல்லா ஜந்துக்களுடைய மனங்களையும் உகப்பிப் பவனாகவும் விளங்கினான். அழகு, வண்மை முதலிய குணங் களுடன் கூடியவளாய் விளங்கினாள்* **நீளை***யென்ற பெண் குழந்தை.] என்ற ப்ரமாணங்கள் இங்கு அனுஸந்திக்கத் தக்கன. (நீளா)* **"விஷ்ணோர் தேஹாநுரூபாம் வை கரோத் யேஷாऽऽத்மநஸ்தநும்"** *[விஷ்ணுவினுடைய தேஹத்திற்குத் தகுந்ததாக இவளும் தன்னுடைய தேஹத்தை ஆக்கிக் கொள்ளுகிறாள்.] என்கிறபடியே அவன் ஆயர் கொழுந்தாகத் தோன்றினபோது இவளும் குலவாயர் கொழுந்தாக அவ தரித்தாள்.* **"பரிவீத ஆகாத்"** *[(பிராட்டிமார்களாலும், நித்யஸூரிகளாலும்) சூழப்பட்டவனாக அவதரித்தான்.] என்று வேதத்தில் சொல்லியபடியே நீளாதேவியுடன் கூட அவதரித்ததை உணர்த்துகிறார். (நீளா) ஸ்ரீவைகுண் டத்தில் பெரிய பிராட்டியாருடைய பெருமை பொலியும். க்ருஷ்ணாவதாரத்தில் நப்பின்னைப் பிராட்டியின் ஏற்றம்*

விளங்கும். இங்கு பெரிய பிராட்டியாருக்கும் பூமிப்பிராட்டியின் அம்சபூதையாகிய ஆண்டாளுக்கும் நப்பின்னைப் பிராட்டியே புருஷகாரமாகவேணும். அங்கு எம்பெருமானுடைய ஐச்வர்யத்துக்குப் பெரிய பிராட்டியார் ஒப்பானாற்போலே இங்கு எல்லாவிதத்திலும் க்ருஷ்ணனுக்கு ஒப்பாயிருப்பவள் இவள். **"நீளா குலேந ஸத்ருஶீ"** என்றல்லவோ **ஆழ்வானும்** அருளிச்செய்தார். (நீளா) ஆச்ரிதர்கள் குற்றத்தைப் பொறுப்பித்துச் சேரவிடும் புருஷகார ஸம்பந்தத்தை அனுஸந்திக்கிறார். "ஆஶ்ரிதர் குற்றத்தைப் பொறுப்பிக்கும் பிராட்டி; குற்றம் காண்பானென்? பொறுப்பானென்? என்றிருக்கும் ஸ்ரீபூமிப்பிராட்டி; நப்பின்னைப் பிராட்டி க்ஷமைதான் ஒரு வடிவாயிருக்கும்; பெரிய பிராட்டியார் இவனுக்கு ஸம்பத்தாயிருக்கும்; அது விளையும் தரை (பூமி); அதனை அனுபவிக்கும் போக்தாவாயிருக்கும் நப்பின்னை" என்ற **பெரியவாச்சான் பிள்ளையின்** ஸ்ரீஸூக்தி இங்கு அனுஸந்திக்கத்தக்கது. இப்படி குணாதிக்யத்தினால் மற்ற பிராட்டிமார்களைக் காட்டிலும் இவளுக்கு உண்டான மேன்மையால் இவளை அனுஸந்திக்கிறார்.

**"சூட்டு நன்மாலைகள் தூயனவேந்தி விண்ணோர்கள் நன்னீர்**
**ஆட்டியந்தூபம் தராநிற்கவே அங்கோர் மாயையினால்**
**ஈட்டிய வெண்ணெய் தொடுவுண்ணப் போந்(து) இமிலேற்று வன் கூன்**
**கோட்டிடை ஆடினை கூத்(து) அடலாயர்தம் கொம்பினுக்கே.**

என்று **நம்மாழ்வார்** அருளிச்செய்தபடியே நித்யஸூரிகள் செய்யும் கைங்கர்யத்தையும் கணிசியாமல், ஆஶ்ரிதருடைய வெண்ணெயைக் களவுசெய்தாவது, உண்பதற்காகவும் ஏழு எருதுகளையும் வென்று நப்பின்னைப் பிராட்டியை மணம் புரிவதற்காகவுமன்றோ அவதரித்தான் ஸர்வேஶ்வரன். (துங்கஸ்தநகிரிதடீஸுப்தமுத்போத்ய) நப்பின்னைப் பிராட்டியுடைய ஓங்கிப் பணைத்திருந்துள்ள திருமுலைத்தடங்களாகிய மலைத்தாழ்வரையிலே உறங்குகிற க்ருஷ்ணனாகிற ஸிம்ஹத்தை உணர்த்தி. "யசோதை இளஞ்சிங்கம்" என்று

ஸிம்ஹமாகச் சொல்லப்பட்ட க்ருஷ்ணன் நப்பின்னைப் பிராட்டியின் திருமுலைத்தடங்களாகிய மலைத்தாழ்வரைகளில் உறங்குகிறான் என்று பாவம். "நப்பின்னை கொங்கைமேல் வைத்துக்கிடந்த மலர்மார்பா" என்றல்லவோ **ஆண்டாள்** அருளினாள். "பஹு குடும்பியாயிருப்பார் சிலர் ஒரு மலையடிவாரத்தைப்பற்றி ஜீவிக்குமாப்போலே ஸர்வலோக குடும்பியான ஸர்வேச்வரன் இவள் முலையடியைப்பற்றிக் கிடக்கிறான்" என்று **பிள்ளைலோகம்ஜீயர்** அருளிச்செய்தார். 'துங்கம்' என்று இனிமையின் மேன்மையைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். (உத்போத்ய) பிறர் உணர்த்த வேண்டும்படியாக போகபரவசனானான். (நீளா......உத்போத்ய) "நப்பின்னை கொங்கைமேல் வைத்துக் கிடந்த மலர்மார்பா வாய்திறவாய்" என்றதை நினைக்கிறார். (க்ருஷ்ணம்) உபயவிபூதிக்கும் தலைவனாய், ஆனந்தமயனாயிருக்கும் கிருஷ்ணனல்லவோ இப்படி நப்பின்னைப் பிராட்டியிடம் மயங்கினான் என்று ஈடுபடுகிறார்.

**"க்ருஷிர் பூவாசகஶ் ஶப்தோ ணஶ்ச நிர்வ்ருதிவாசக:।**
**விஷ்ணுஸ் தத்பாவயோகாச்ச க்ருஷ்ண இத்யபிதீயதே ॥"**

['க்ருஷி' என்னும் ஶப்தம் இவ்வுலகைச் சொல்லும்; 'ண:' என்பது ஆனந்தமயமான நித்யவிபூதியைச் சொல்லும். அந்த உபயவிபூதியையும் உடையவனாயிருப்பதால் விஷ்ணுவானவன் க்ருஷ்ணன் எனப்படுகிறான்.] என்றல்லவோ சொல்லப்பட்டது. (நீளாதுங்கஸ்தநகிரிதடீஸுப்தம்) "மலராள் தனத்துள்ளான்" என்னும் பெரியபிராட்டியாரின் ஸ்தனத்தையும், "தென்னனுயர் பொருப்பும் தெய்வ வடமலையும் என்னுமிவையே முலையா வடிவமைந்த—அன்ன நடைய அணங்கு" எனப்பட்ட பூமிப்பிராட்டியின் ஸ்தனத்தையும் இகழ்ந்து ஆயர்மடமகளான நப்பின்னைப் பிராட்டியின் திருமுலைத்தடங்களிலே, பொற்குப்பியின் நுனியிலே கருமாணிக்கத்தைப் பதித்தாற்போலவும், அன்றலர்ந்த தாமரையில் வண்டு படிந்தாற்போலவும் அழுந்திக் கிடக்கிறபடியைக்கண்டு ஈடுபடுகிறார்.

(உத்போத்ய) "துயிலெழப்பாடி" "உம்பர்கோமானே! உறங்காதெழுந்திராய்" "செற்றார்க்கு வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்" என்று எழுப்பியதை உணர்த்துகிறார். (பாரார்த்யம் ஸ்வம்...அத்யாபயந்தி) இத்தால் எழுப்பியதற்கு ப்ரயோஜனம் சொல்லப்படுகிறது. (ஶ்ருதிஶத ஶிரஸ்ஸித்தம் ஸ்வம் பாரார்த்யம்) நூற்றுக்கணக்கான வேதாந்தங்களில் உத்கோஷிக்கப்பட்ட தன் பாரதந்திரியத்தை. **"யஸ்யாஸ்மி"** [எந்த எம்பெருமானுக்கு நான் அடிமையாயிருக்கிறேனோ...] என்றும், **"க்ஷராத்மாநாவீஶதே தேவ ஏக:"** [அசேதனத்தையும் சேதனர்களான ஆத்மாக்களையும் ஒரு தேவன் நியமிக்கிறான்.] **"அந்த: ப்ரவிஷ்டஶ்ஶாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா"** [ஸர்வாந்தர்யாமியான நாராயணன் ஜனங்களை உள்நுழைந்து நியமிக்கிறான்.] என்றும், **"பதிம் விஶ்வஸ்ய"** என்றும் உத்கோஷிக்கும் உபனிஷத் வாக்யங்களும், **"ஈஶ்வரஸ் ஸர்வபூதாநாம்"** என்பது முதலான கீதோபனிஷத் வாக்யங்களும், **"பரவாநஸ்மி"** [பரதந்திரனாயிருக்கிறேன்.] என்றும், **"தாஸோஹம் கோஸலேந்த்ரஸ்ய"** [கோஸலதேசத்து அரசனாகிய ஸ்ரீராமபிரானுக்கு நான் தாஸன்.] என்றும் வேதத்தின் அவதாரமாகப் புகழ்பெற்றிருக்கும் ஸ்ரீராமாயணத்தில் படிக்கப்பட்ட வாக்யங்களும், **"தாஸபூதா: ஸ்வதஸ்ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந:"** [பரமாத்மாவுக்கு எல்லா ஆத்மாக்களும் இயற்கையாகவே அடிமைப்பட்டவர்கள்.] என்றும், **"ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்திதம்"** [உடைமையாயிருக்கும் தன்மை ஆத்மாவிடம் உள்ளது. உடையவனாயிருக்கும் தன்மை ப்ரம்ஹத்திடம் உள்ளது.] என்றும், **"ஆத்மதாஸ்யம் ஹரே: ஸ்வாம்யம் ஸ்வபாவஞ்ச ஸதா ஸ்மர"** [ஆத்மாவின் தாஸனாயிருக்கும் தன்மையையும், ஹரியின் ஸ்வாமியாயிருக்கும் தன்மையையும், அவைகளின் ஸ்வபாவத்தையும் நினைப்பாயாக.] என்றும் உத்கோஷிக்கும் ப்ரமாணங்களும் இங்கு அனுஸந்திக்கத்தக்கன. ஆழ்வார்களும், "உனக்குப் பழவடியேன்" என்றும், "உனக்கே நாம் ஆட்செய்வோம்" என்றும், "தனக்கேயாக

எனைக்கொள்ளுமீதே" என்றும், "அடியேனுள்ளான்" என்றும் இதைப் பலகால் அருளிச்செய்தனரன்றோ. (ஶ்ருதி ஶதசிரஸ்ஸித்தம்) மஹாநிதியானது மலைக்குகைகளில் கிடக்குமாப்போலே உபனிஷத்துக்களிலே காணலாயிருக்கும் வஸ்து. "ஶ்ருதிஶதசிரஸ்ஸித்தம்" என்கையாலே சிற்சிலவிடங்களிலன்றிக்கே எல்லாவிடங்களிலும் ஆத்மாவினுடைய தாஸ்யமும், நாராயணனுடைய ஸ்வாம்யமும் கோஷிக்கப்படுகின்றன என்பது தோற்றுகிறது. "**ஸர்வே வேதா யத்பதமாமநந்தி**" [எல்லா வேதங்களும் எந்தப் பதத்தைப் பேசுகின்றனவோ...] என்றும், "**வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்ய:**" [எல்லா வேதங்களாலும் நானே அறியப்படுபவன்.] என்றும், "**நாராயணபரா வேதா:**" [வேதங்களெல்லாம் நாராயணனைப் பேசுபவை.] என்றும், "உளன் சுடர் மிகு சுருதியுள்" என்றும், "மறையாய நால் வேதத்துள் நின்ற மலர்ச்சுடரே" என்றும் சொல்லப்பட்டதன்றோ. (அத்யாபயந்தீ) அனுஷ்டிப்பாரில்லாமையாலே, இந்த சேஷசேஷிபாவத்தை அவனும் மறந்து கைவிட்டிருக்க, "உன்தன்னோடுற்றோமேயாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்" என்று அவனுக்கும் ஓதுவித்தாள். "**யோ வை வேதாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை**" என்று பிரமனுக்கு வேதத்தை ஓதுவித்த வாஸுதேவனுக்கு இவள் ஓதுவித்தாள். "பாசி தூர்த்துக்கிடந்த பார்மகட்குப் பண்டொருநாள்...பேசியிருப்பனகள்" என்கிறபடியே அவன் இவளுக்கு உபதேசித்த அந்த நிலை குலைந்து இவள் அவனுக்கு உபதேசித்தாள். (அத்யாபயந்தீ) 'ஸர்வஜ்ஞனான எம்பெருமானுக்கு இவள் தன் பாரதந்த்ரியத்தை உபதேசிக்கவேண்டுமோ?' என்னில்: அவன் பரமப்ரணயியாகையால் இவளைத் தனக்கு ஸ்வாமினியாகவும், தன்னை இவளுக்கு தாஸபூதனாகவும் அறுதியிட்டிருந்தான். "நீ அங்ஙனம் நினைக்கலாகாது; எங்களுடைய ஸ்வரூபத்துக்கு அனுரூபமான கைங்கர்யத்தைக் கொடுக்கவேணும்" என்று உணர்த்துகிறாள். 'பரதந்த்ரையான இவள் ஸ்வாமியான எம்பெருமானை நியமிப்பது ஸ்வரூபவிருத்தமன்றோ' என்

னில்: ஆற்ருமையுடையவளாகையாலே நியமிக்கக் குறையில்லை. தேவதாந்தரங்களைக் குறித்து பகவத் ப்ராப்திக்காக நோன்புநோற்கும்படியானதன்ரே இவளுடைய ஆற்ருமை. சீதா பிராட்டி,

> ''ஸ்த்ரீசாபலாதேததுதாஹ்ருதம் மே
> தர்மஞ்ச வக்தும் தவ கஸ்ஸமர்த்த: ।
> விசார்ய புத்த்யா து ஸஹாநுஜேந
> யத் ரோசதே தத் குரு மா சிரேண ॥''

[ஸ்த்ரீசாபல்யத்திஞல் நானிதைச் சொன்னேன்; உனக்கு தர்மத்தைச் சொல்ல எவன் ஸமர்த்தன். திருத்தம்பியாருடன் கூட ஆலோசித்து இஷ்டப்பட்டதை சீக்கிரம் செய்தருளுவீராக.] என்று ஸ்ரீராமபிரானை நியமித்ததைப் போல் இவளும் ''பொற்ருமரையடியே போற்றும் பொருள் கேளாய்'' என்று நியமித்து, ''சிறுபேர் அழைத்தனவும் சீறியருளாதே'' என்கிருள்.

இப்படி ஸர்வஜ்ஞனை எம்பெருமானுக்கும் அத்யயனம் பண்ணுவிக்கிறவளுடைய மேன்மையை (ஸ்வோச்சிஷ்டாயாம்...புங்தே) என்று அருளிச்செய்கிருர். தான் சூடிக்களைந்த மாலையாகிற விலங்காலே இவனைப் பேராதபடி விலங்கிட்டு பலாத்காரமாக அனுபவித்தாள். (ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜி நிகளிதம்) 'நாம் சூடிக்களைந்த மாலைகளை நம் அடியார்கள் சூடிப் பரமானந்தமடைகிருர்கள்; இந்த ரஸத்தை நாமும் அனுபவிக்கவேண்டும்' என்று திருவுள்ளங்கொண்ட ஸர்வேஶ்வரன் இவள் சூடிக்களைந்த மாலைகளையே திருவுள்ளமுகந்து சாத்திக்கொண்டானன்ரே. அந்த வ்ருத்தாந்தத்தை அனுபவிக்கிருர். (ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜி நிகளிதம்) மாலை மாலையாலே விலங்கிட்டாள். ''தந்தை காலில் விலங்கற வந்து தோன்றிய தோன்றல்'' என்கிறபடியே பிறக்கும்போதே கால் விலங்கைக் கழற்றிக்கொண்டு பிறந்தவனுகையாலே, அங்ஙனம் கழற்றவொண்ணுதபடி கழுத்துக்கு விலங்கிட்டாள். எல்லா

ரையும் கர்மானுகுணமாகக் கட்டுமவன் காமினியின் கண்ணியாலே (மாலையாலே) கட்டுண்டான். க்ருஷ்ண னுகிற யானையை மாலையாகிற சங்கிலியாலே பிணைத்து ஸ்தனங்களாகிய கட்டுத்தறியிலே கட்டினுள். (யா பலாத் க்ருத்ய புங்க்தே) யாவளொரு ஆண்டாள் க்ருஷ்ணனை பலாத்கரித்து புஜிக்கிருளோ. 'பலாத்கரித்து புஜிக்கை ஸ்வரூபவிருத்தமன்றோ. பகவதனுபவமும் நம்முடைய ஆனந்தத்துக்காகவல்ல என்று நினைத்திருக்கும் இவள் அம் மாதிரி செய்யலாமோ?' என்னில்: பரமரஸிகனன க்ருஷ்ண னுக்கு இவள் பலாத்கரித்து புஜிப்பதே பரமபோக்யமா யிருக்கிறதாகையால் அங்ஙனம் செய்வது தவறல்ல. (கோதா) திருநாமத்தை அனுஸந்திக்கிருர். கோதை-மாலை. மாலைபோலே இனியளாயிருக்கை. மாலாகாரராகிய பெரி யாழ்வார் திருமகளாகையாலே மாலை' என்னலாய்படி யானுள். மாலையான தான் தலையான மாலை வழங்கினுள்; திருமாலை வழங்கினுளன்றோ. (கோதா) திருமாலுக்கு பாமாலை சூட்டினவள் என்றும் பொருள் கொள்ளலாம். 'அத்யாபயந்தீ' என்றதால் பாமாலை பாடிக்கொடுத்தபடியை யும், 'ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜி நிகளிதம்' என்கையாலே பூமாலை சூடிக்கொடுத்தபடியையும் அனுபவிக்கிருர். இவை களால் இவளுக்கு எம்பெருமானை வசீகரித்து ஆத்மாக்களை உய்விக்கவல்ல புருஷகாரத்வமும், ப்ராப்யத்வமும் சொல் லப்படுகிறது. இவளுடைய திருக்குணங்களில் ஈடுபட்ட எம்பெருமானுரும் "நாறு நறும் பொழில்" என்ற பாட்டில் இவள் மனோரதித்தபடியே நூறு தடாவில் வெண்ணெயும் நூறு தடா நிறைந்த அக்காரவடிசிலும் ஸமர்ப்பித்தருளி னர். திருப்பாவையை நாடோறும் அனுஸந்தித்து திருப் பாவைஜீயர் என்ற கீர்த்தியுடன் விளங்கினர். 'பெரும் புதூர் மாமுனிக்குப் பின்னுனாள்" என்று அவளுக்கு ஏற்றம். "சூடிக்கொடுத்தவள் தொல்லருளால் வாழ்கின்ற வள்ளல்" என்று இவருக்கு ஏற்றம். (தஸ்யை நம இத மிதம் பூய ஏவாஸ்து பூய:) அவள் பொருட்டு நம' என்கிற

இந்த உக்தியானது மறுபடியும் மறுபடியும் ஆகக்கடவது. அவள் பாமாலை பாடிக்கொடுத்தபடியை நினைத்து நம:' என்கிறார். பூமாலை சூடிக்கொடுத்தபடியை அனுஸந்தித்து மறுபடியும் 'நம:' என்கிறார். அவளுடைய புருஷகாரத்வத்தை நினைத்துத் தோற்றேன்' என்கிறார். அவளுடைய ப்ராப்யத்வத்தை நினைத்து மறுபடியும் 'தோற்றேன்' என்கிறார். அவளுடைய எல்லையற்ற கருணையை நினைத்து மறுபடியும் 'நம:' என்று எழுதிக்கொடுக்கிறார். "எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு உற்றோமேயாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்" என்று **ஆண்டாள்** பகவத் விஷயத்தில் ப்ரார்த்தித்ததைத் தாம் அவள் விஷயத்திலே ப்ரார்த்திக்கிறார். இத்தால் திருப்பாவையின் அர்த்தத்தை அனுஸந்தித்துப் பரமானந்தக்கடலில் ஆழ்ந்தவராய், ஆண்டாளைத் தாம் ஶரணம் புகுந்தபடியை அனைவரும் அனுஸந்திக்கும்படி அருளிச்செய்தாராயிற்று.

2. **அன்ன வயல் புதுவை ஆண்டாள் அரங்கற்குப்**
**பன்னு திருப்பாவைப் பல் பதியம்—இன்னிசையால்**
**பாடிக் கொடுத்தாள் நற்பாமாலை பூமாலை**
**சூடிக் கொடுத்தாளைச் சொல்.**

**பதவுரை:—அன்ன வயல்**—ஹம்ஸங்கள் ஸஞ்சரிக்கிற வயலையுடைய, **புதுவை ஆண்டாள்**—ஸ்ரீவில்லிபுத்தூரிலே திருவவதரித்தருளின ஆண்டாள், **அரங்கற்கு**-ரங்கநாதனுக்கு **பன்னு**—ஆராய்ந்து அருளிச்செய்யப்பட்ட, **திருப்பாவை**—திருப்பாவையாகிற, **பல் பதியம்**—பல பாட்டுக்களை, **இன் இசையால்**-செவிக்கினிய இசையாலே, **நல் பாமாலை**-அழகிய பாட்டுக்களாகிற மாலையை, **பாடிக் கொடுத்தாள்**—பாடிக் கொடுத்தாள்; **பூமாலை**—பூக்களால் ஆன மாலையை, **சூடிக் கொடுத்தாளை**–(தன் திருக்குழலிலே) சூடி (எம்பெருமானுக்குக்) கொடுத்தவளான ஆண்டாளை, **சொல்**—(நெஞ்சே) அனுஸந்திப்பாயாக.

**அவதாரிகை:**—இப்பாசுரமும் அடுத்த பாசுரமும் புண்டரீகாக்ஷர் என்ற திருநாமத்தையுடைய **உய்யக்கொண்**

டார் அருளிச்செய்தவை. இவர் ஆசாரியர்களுக்குள் தலைவரான **நாதமுனிகளின்** சிஷ்யர். திருவெள்ளறையில் பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ குலத்திலே அவதரித்தவர். ஸ்ரீதேசிகருடைய சததூஷணி என்னும் கிரந்தத்திலிருந்து இவர் ஸம்ஸ்க்ருதத்தில் சில க்ரந்தங்கள் இயற்றியிருக்கிறாரென்று தெரிய வருகிறது. அவை இப்போது கிடைக்கவில்லை. இப்டாசுரத்தில் ஆண்டாளுடைய திருநாமத்தை அனுஸந்திக்கும்படியாகத் தம் நெஞ்சைக்குறித்து அருளிச்செய்கிறார்.

**வியாக்யானம்:**—(அன்ன வயல் புதுவை) "மென்னடையன்னம் பரந்து விளையாடும் வில்லிபுத்தூர்" என்று ஆண்டாள் அருளிச்செய்ததை உணர்த்துகிறார். "தண் புதுவைப் பட்டன்" என்றும், "வில்லிபுத்தூர் விட்டு சித்தன்" என்றும் அவருக்கு நிரூபகம். இவளுக்கும் "புதுவையாண்டாள்" என்று நிரூபகம். (புதுவையாண்டாள்)லக்ஷ்மீப்ரதானமாயிருப்பது திருவெள்ளறை. பூதேவியின் அம்சமான ஆண்டாளுடைய ப்ராதாந்யத்தை உடையது ஸ்ரீவில்லிபுத்தூர். நீளாதேவியை ப்ரதானையாகக் கொண்டது திருநறையூர் என்னும் நாச்சியார்கோவில். ஒன்று **திரு**வெள்ளறை; ஒன்று **நாச்சியார்** திருமாளிகை; ஒன்று **நாச்சியார்** கோவில். ஆண்டாளுடைய ப்ராதாந்யம் தோற்ற "புதுவையாண்டாள்" என்று அருளிச்செய்கிறார். (அரங்கற்கு...பாடிக் கொடுத்தாள்) இவள் க்ருஷ்ணனுக்கன்றோ திருப்பாவை பாடிக்கொடுத்தது. அப்படியிருக்க ரங்கநாதனுக்குப் பாடிக் கொடுத்ததாகச் சொல்லும்படியென்னென்னில்: "அண்ணாந்திருக்கவே ஆங்கவளைக் கைப்பிடித்த பெண்ணாளன் பேணுமூர்ப்பேரும் அரங்கமே" என்றும் "செம்மையுடைய திருவரங்கர் தாம் பணித்த மெய்ம்மைப் பெருவார்த்தை" என்றும் ஸ்ரீரங்கநாதனையே க்ருஷ்ணனாக அறுதியிட்டிருந்தவளன்றோ ஆண்டாள். "பெரியபெருமாள் கொறுட்டை மோந்து பார்த்தால் இப்போதும் வெண்ணெய் நாறுகிற்கும்" என்று நம் ஆசாரியர்கள் பலகாலும் அருளிச்செய்வர்கள். "கோவலனாய் வெண்ணெயுண்ட வாயன்" என்று அரங்கனை அனுஸந்தித்

தாரன்றோ **திருப்பாணாழ்வார்.** "சுடரே துயிலெழாய்" என்று எழுப்பவேண்டும்படி பள்ளிகொண்டிருக்கிறானன்றோ அரங்கன். (பன்னு திருப்பாவை) அர்த்தத்தின் சீர்மையாலே எல்லாராலும் ஆராய்ந்து அனுஸந்திக்கப்படும் திருப்பாவை என்றும், ஆராய்ந்து அருளிச்செய்யப்பட்ட திருப்பாவை என்றும் பொருள் கொள்ளலாம். (பல் பதியம்) பல பத்யங்கள்; பல பாட்டுக்கள். (இன்னிசையால் பாடிக்கொடுத்தாள்) செவிக்கினிய செஞ்சொற்களாலே பாடிக் கொடுத்தாள். (நற்பாமாலை) அழகியதான பாட்டுக்களாலான மாலை. "சூட்டினேன் சொல் மாலை" என்கிறபடியே ஸர்வேஶ்வரன் தரிக்கும்படியான மாலை. (பூமாலை) செண்பக மல்லிகையோடு செங்கழுநீர் இருவாட்சிகளுடன்கூடிய துழாய் மாலையை. (சூடிக் கொடுத்தாள்) தன்னுடைய வாசஞ்செய் பூங்குழலிலேசூடி மணமேற்றிக் கொடுத்தாள். (சூடிக்கொடுத்தாளைச் சொல்) சூடிக்கொடுத்தவளான ஆண்டாளை ஆனுஸந்திப்பாயாக. 'சொல்' என்று நெஞ்சைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். நெஞ்சுபோல் இனியர்களான சிஷ்யர்களைக் குறித்துச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். இத்தால் அவளுடைய திவ்யப்ரபந்தத்தைக் கற்கவும் வேண்டா; அவளுடைய திருநாமத்தை அனுஸந்திப்பதே பரமபோக்யம்' என்று அருளிச்செய்தாராயிற்று.

3. **சூடிக் கொடுத்த சுடர்க்கொடியே! தொல்பாவை**
**பாடியருளவல்ல பல்வளையாய்!—நாடி நீ**
**வேங்கடவற்கென்னை விதியென்ற இம்மாற்றம்**
**நாம் கடவா வண்ணமே நல்கு,**

**பதவுரை:— சூடி—** (மாலையை திருக்குழலிலே) சூடி, **கொடுத்த—**(எம்பெருமானுக்கு) ஸமர்ப்பித்தருளிய, **சுடர்க் கொடியே**-பிரகாசிக்கும் பொற்கொடிபோன்ற வடிவை யுடையவளே! **தொல்**-பழமையான, **பாவை**-திருப்பாவையை, **பாடி அருளவல்ல**—பாடி உபகரிக்க வல்லவளாய், **பல் வளை யாய்**—பல வளைகளை அணிந்தவளாய் விளங்குபவளே! **நாடி**—(மன்மதனை) அடைந்து, **'நீ**–(மன்மதனை) நீ, **என்னை**—

(அவனைக்காண ஆசைப்படுகிற) என்னை, **வேங்கடவற்கு—** திருவேங்கட மலையிலே வாழும் எம்பெருமானுக்கு, **விதி-** (கைங்கர்யம் செய்யும்படி) விதிக்கவேணும்', **என்ற**—என்று அருளிச்செய்த, **இம் மாற்றம்**—இப்பாசுரத்தை, **நாம்**— (உனக்கு அடியராயிருக்கிற) நாம், **கடவா வண்ணமே** — மீறாதபடி, **நல்கு**—உபகரிக்கவேண்டும்.

**அவதாரிகை:—** இப்பாசுரத்தில், ஆண்டாள் சூடிக் கொடுத்ததையும், பாடிக் கொடுத்ததையும் அனுபவித்து, அவளைப்போன்ற ஆற்றுமை தமக்கும் உண்டாகவேண்டு மென்று வேண்டுகிறார்.

**வியாக்யானம்:—** (சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே) சுரும்பார் குழற்கோதை தன்னுடைய திருக்குழலிலே மாலைகளைச் சூடி வாஸிதமாக்கிக்கொடுத்தபடியை நினைக் கிறார். (சுடர்க்கொடி) "ஸ்ரீரங்க ஹர்ம்யதலமங்களதீபலே காம்" என்று **பட்டர்** அருளிச்செய்தபடியே திருவரங்கம் பெரியகோயிலுக்கு மங்களதீபம்போல் விளங்குபவள். **(கொடி)** அவனையும் கட்டக்கூடிய கொடி. **(சூடிக்கொடுத்த சுடக்கொடியே)** இவளுக்கு இதுவே நிரூபகமாயிருக்கிறது. சூடிக்கொடுத்த நாச்சியார் என்றல்லவோ ப்ரஸித்தி. **(தொல் பாவை பாடியருளவல்ல பல்வளையாய்)** பழையதான நோன்பைத் திருப்பாவையாலே பாடியருளினாள் என்றும், பழையதாயிருக்கிற திருப்பாவை என்னும் ப்ரபந்தத்தைப் பாடியருளினாள் என்றும் பொருள் கொள்ளலாம். 'பாவை' என்னும் பதம், நோன்பை என்றும், திருப்பாவையை என்றும், பாட்டுக்களை என்றும் பொருள்படும். 'தொல் பாவை' என்றதினால் இதினுடைய அபௌருஷேயத்வமும் உணர்த்தப்படுகிறது. **(பல் வளையாய்)** "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்று சொல்லும்படியான அநந்யார்ஹஶேஷத்வத்தை உணர்த்துகின்ற பல வளைகளை அணிந்தவளே!

**"பதிவ்ரதாநிமித்தம் ஹி வலயாதிவிபூஷணம்"**

*[வளை முதலிய ஆபரணங்கள் பதிவ்ரதை என்பதைக் காட்டுவதற்கல்லவோ அணியப்படுகின்றன.] என்றல்லவோ சொல்லப்பட்டது. (நாடி நீ) 'தொழுது எழுதும்' என்னுமிது மிகையான எம்பெருமானைப் பற்றியவளான நீ,*

**''தையொரு திங்களும் தரை விளக்கித்**
**தண்மண்டலமிட்டு மாசி முன்னுள்''** *என்றும்.*

**''மத்தநன்னறுமலர் முருக்க மலர்**
**கொண்டு முப்போதும் உன்னடி வணங்கி''** *என்றும்*

*காமனை ஸமாஶ்ரயணம் பண்ணி. 'நீ' என்னும் பதம் ஆண்டாளைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். அன்றிக்கே, 'நீ விதி' என்று கூட்டி மன்மதனைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். வேங்கடவற்கு என்னை விதி) ஆண்டாள் காமதேவனை நோக்கி*

**''வெய்யதோர் தழலுமிழ் சக்கரக்கை**
**வேங்கடவற்கென்னை விதிக்கிற்றியே''**

*என்று பிரார்த்தித்ததை உணர்த்துகிறார். (இம்மாற்றம்) இச்சொல்லை. (யாம் கடவாவண்ணமே நல்கு) நாங்கள் கடக்காதபடி உதவவேணும். ''வேங்கடவற்கென்னை விதி'' என்ற சொல்லை எங்களையும் அனுஸந்திக்கும்படி செய்யவேணும். தேவதாந்தரங்களின் காலில் விழுந்தாவது எம்பெருமானைக் கூடவேணும் என்னும் ஆற்றாமையை உடையவர்களாக எங்களையும் செய்தருளவேண்டும் என்று தாத்பர்யம். ஆற்றாமை யுக்தாயுக்தங்களைப் பார்க்கவொட்டாதன்றோ.* **''ஸர்வாந் தேவாந் நமஸ்யந்தி ராமஸ்யார்த்தே''** *[ராமனுக்காக எல்லா தேவதைகளையும் நமஸ்கரித்தார்கள்.] என்று சொல்லப்பட்டதன்றோ. பரமபக்தனை திருவடியும்* **''நமோऽஸ்து வாசஸ்பதயே''** *என்றானன்றோ.*

# திருப்பாவை வ்யாக்யானம்

அவதாரிகை:— தேஹத்தையே ஆத்மாவாக நினைத்திருப்பவர்களான ஸம்ஸாரிகளுக்கும், ஆத்மஸ்வரூபத்தை அறிந்தவர்களான ரிஷிகளுக்கும் மிகவும் வாசி (வித்தியாசம்) உண்டு. ஸ்வயத்னத்தால் புருஷார்த்தத்தைப் பெறவிருக்கும் ரிஷிகளுக்கும், பகவானாலே மயர்வறமதிநலமருளப் பெற்ற ஆழ்வார்களுக்கும் நெடுவாசியுண்டு. பகவதனுபவத்தை ஆசைப்பட்ட ஆழ்வார்களுக்கும், பகவத் ஸம்ருத்தியை ஆசைப்பட்ட பெரியாழ்வாருக்கும் நெடுவாசியுண்டு. பகவத் ஸம்ருத்தியை ஆசைப்பட்ட பெரியாழ்வாருக்கும் பாகவத ஸம்ருத்தியை ஆசைப்பட்ட ஆண்டாளுக்கும் அம்மாதிரியே நெடுவாசியுண்டு. ஆழ்வார்கள் எம்பெருமானாலே மயர்வற மதிநலமருளப் பெற்றார்கள். இவள் எம்பெருமானுக்கு மயர்வற மதிநலமருளினாள். ஸம்ஸாரத்தில் உறங்கிக்கிடந்தவர்களான ஆழ்வார்களை ஸர்வேச்வரன் எழுப்பினான். பள்ளியுணர்த்தும் பிராணாகிய தொண்டரடிப்பொடியாழ்வாரும் முதலில் நாராயணனாலே உணர்த்தப்பெற்று பின்பு அவனை உணர்த்தினார்.

''அவரைப் பிராயம் தொடங்கி என்றும்
ஆதரித்தெழுந்த என் தடமுலைகள்
துவரைப் பிரானுக்கென்றே சங்கற்பித்துத்
தொழுதுவைத்தேன்......''

என்கிறபடியே பிறந்ததிலிருந்தே கேசவனைக் காமுற்றவளாயிருந்து அவனை எழுப்பினாள் இவள். ஆழ்வார்கள் இளைய பெருமாளைப்போன்றவர்கள். பெரியாழ்வார் ஸ்ரீபரதாழ்வானுக்கு ஒப்பானவர். ஆண்டாளும் மதுரகவிகளும் ஸ்ரீஶத்ருக்னாழ்வானை ஒப்பர்கள். ஆழ்வார்களும், இளையபெருமாளும் பகவதனுபவத்தை ஆசைப்பட்டார்கள். ஸ்ரீபரதாழ்வானும், பெரியாழ்வாரும் பகவத்ஸம்ருத்தியை ஆசைப்பட்டார்கள். ஸ்ரீஶத்ருக்னாழ்வானும், ஆண்டாளும், ஸ்ரீமதுர

கவிகளும் பாகவதசேஷத்வத்திலே நிலைநின்றவர்கள். மேலும் புருஷன் புருஷனைக்கண்டு காமுறுவதிற்காட்டில், ஸ்த்ரீ புருஷனைக் கண்டு ஸ்நேஹிக்கை பள்ளமடையாகையாலே ஆழ்வார்களுடைய பக்தியைக்காட்டில் பதின்மடங்கு அதிக மான அன்பை உடையவாயிருப்பாளிவள். "பதின்மருடைய ஜ்ஞானமும் ஸ்த்ரீதனமாக இவள் பக்கலிலேயிறே குடி கொண்டது; பத்துப்பேர்க்கு ஒரு பெண்பிள்ளையிறே" என்று **ஜநந்யாசார்யர்** அருளிச்செய்தார்.

இக்காரணங்களாலே நம் ஆசாரியர்கள் இத்திருப் பாவையை மிகவும் ஆதரித்துப் போருவர்கள். எம்பெரு மானாருக்கு இப்பிரபந்தத்தின் மேலுள்ள ப்ரேமம் அள வற்றது. திருப்பாவை ஜீயர் என்று இதையிட்டு நிரூபிக் கும்படியாக விளங்கினாரன்றோ நம்மிராமானுஜன். திருப் பாவை ஈராயிரப்படி வியாக்யானத்தில் அருளிச்செய்யப்பட்ட பின்வரும் ஐதிஹ்யம் இங்கு உணரத்தக்கது. "எம்பெரு மானாரை 'ஒருரு திருப்பாவைக்கு அர்த்தம் அருளிச்செய்ய வேணும்' என்ன; திருப்பல்லாண்டுக்கு ஆள் கிடைக்கிலும் திருப்பாவைக்கு ஆள் கிடையாது...மோவாயெழுந்த முரு டர் கேட்கைக்கு அதிகாரிகளல்லர்; முலையெழுந்தார் கேட்க வேணும்; அவர்களிலும் எம்பெருமானைத் தாங்கள் அனு பவிக்கவேணுமென்றிருக்கும் பரிவாணிச்சிகளான பிராட்டி மார்க்கும் கேட்க நிலமல்ல; பல சொல்லி என்? பத்து ஆழ்வார்களுடைய ஸாரபூதையான தானே சொல்லித் தானே கேட்குமித்தனை' என்று அருளிச்செய்தார்.

இப்படிப்பட்ட பெருமையையுடைய இப்பிரபந்தத் துக்கு நம் பூர்வாசாரியர்கள் பலர் அமுதினுமினிய வியாக் யானங்கள் இட்டருளியிருக்கிறார்கள். பரமகாருணிகரான **பெரியவாச்சான்பிள்ளை** மூவாயிரப்படி என்னும் வியாக் யானமும், **அழகியமணவாளப்பெருமாள்நாயனார்** ஆறாயிரப் படி என்னும் வியாக்யானமும் திருநாராயணபுரத்துக்கு ஆய் என்று ப்ரஸித்தரான **ஜநந்யாசார்யர்** ஈராயிரப்படி, நாலாயிரப்படி என்னும் இருவியாக்யானங்களும் அருளி யிருக்கிறார்கள். இவைகளை அனுஸரித்துத் திருப்பாவையின் பொருளை இங்கு விவரிப்போம்.

**பெரியாழ்வார்** பெற்றெடுத்த பெண்பிள்ளையாகிற **ஆண்டாளுடைய** ஜ்ஞானபக்திகள் க்ஷணந்தோறும் பகவத் விஷயத்திலே கைவளர்ந்துவந்தன. ஒரு கொள்கொம்பிலே சேர்க்கவேண்டும் பருவத்தையடைந்தாள். "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்னும்படியான உறுதியையுடையவளானாள். வடபெருங்கோயிலுடையானுடன் தழுவி முழுசிப் பரிமாறவேணும் என்னும் ஆற்றாமை கரைபுரண்டது. அப்பெருமானிடம் சென்றபோது அவன் முகங்கொடாதேயிருந்தான். "ஐச்வர்யார்த்திகளுக்காகத் திருவுலகளந்தருளின களைப்பாலே சாய்ந்து கிடக்கிறான் போலும்" என்று நினைத்துத் தன் திருமுலைத்தடங்களாலே அப்பெருமானை நெருக்கினாள். அவ்வளவிலும் பேசக்கண்டிலள். விசிறி முதலியவைகளாலே ஶிஶிரோபசாரம்பண்ணியும் எழுந்திருக்கக் காணவில்லை. "இது களைப்பல்ல; நம்மிடம் ப்ரணயாபராதத்தினாலே முகங்கொடாதே கிடக்கிறான்" என்றறிந்து வருந்தி, "இவனை அனுபவித்தாருண்டோ" என்று ஆராய்ந்தாள். "திருவாய்ப்பாடியில் பெண் பிள்ளைகள் இவனை அனுபவித்தார்கள்; ஆனால் அது காலாந்தரத்திலேயாகையாலே நாம் அதுக்கு உதவப்பெற்றிலோம்" என்று ஏங்கினாள். "இனி அவன் உலாவிப்போன அடிச்சுவடும், அவனும் பெண்களுமாய்த் திளைத்த யமுனையும், அவன் எடுத்த கோவர்த்தனமும் கிடந்ததாகில் அவற்றைக் கண்டாகிலும் உயிர்வாழ்வோம்" என்று பார்த்து, அவ்விடங்களுக்குப்போக பலமில்லாமையாலே கலங்கினாள். "ஜனகராஜன் திருமகளைப்போலே 'வில்' என்று ஒரு அவதி பெற்றிலேன்; நப்பின்னைப்பிராட்டியைப்போலே 'ரிஷபங்கள்' என்று ஒரு அவதி பெற்றிலேன்; என்செய்வேன்" என்று நிலைதடுமாறினாள். அப்போது சில பெரியார்கள் "ராஸக்ரீடைசெய்த பிறகு க்ருஷ்ணனைப் பிரிந்த இடைப்பெண்கள் தங்கள் ஆற்றாமையாலே க்ருஷ்ணனுகத் தங்களை பாவித்துக்கொண்டு உயிர்தரித்தார்கள்; அம்மாதிரியே நீயும் செய்வாயாக" என்று உரைத்தனர். இவ

ளும் "க்ருஷ்ணனை அனுகரிப்பதைக்காட்டிலும் அவனை அனுகரித்த பெண்களை அனுகரிப்பது நல்லது" என்று தீர்மானித்து, ஸ்ரீவில்லிபுத்தூரைத் திருவாய்ப்பாடியாகவும், அங்குள்ள பெண்களை இடைப்பெண்களாகவும், தன்னை அவர்களிலே ஒருத்தியாகவும், வடபெருங்கோயிலை ஸ்ரீநந்தகோபர் திருமாளிகையாகவும், வடபெருங்கோயிலுடையானை க்ருஷ்ணனாகவும் பாவித்து, இடைப்பெண்கள் நோற்ற நோன்பைத் தான் நோற்கிறாள். பாவநாப்ரகர்ஷத்தாலே (நினைவின் முதிர்ச்சியாலே) இவளுக்கு இடை நடையும், இடைமுடியும், இடைப்பேச்சும் முடைநாற்றமும் உண்டாயின.

இடைப்பெண்கள் நோற்ற நோன்பு யாதென்பதை இனி விவரிப்போம். ஸர்வஸ்வாமியான நாராயணன் சேதனர்களை உய்விப்பதற்காக க்ருஷ்ணனாய் அவதரித்து இடைச்சேரியில் வளர்ந்துவந்தான். அப்போது அவ்வூரிலுள்ள பெரியவர்கள் "க்ருஷ்ணன் யௌவனவயதை அடைந்துவிட்டான். அத்துடனன்றியில் தூர்த்தனாயிருக்கிறான்; இவன் முகத்திலே பெண்கள் விழிக்கலாகாது" என்று ஆலோசித்துப் பெண்களை நிலவறைகளிலே அடைத்தார்கள். க்ருஷ்ணனும் பெண்களும் செய்த பாக்யத்தினாலோ, அல்லது இவர்கள் பிரிந்திருக்கும் தர்மஹானியைக்கண்டோ வருணதேவன் மழைபொழியாதொழிந்தான். அப்போது இடையரெல்லாம்கூடி "பெண்கள் மழை பொழிவதற்காக நோன்பு நோற்கவேண்டும்; அந்நோன்பிற்கு க்ருஷ்ணன் தலைவனாயிருந்து வேண்டியவைகளை ஸம்பாதித்துக் கொடுப்பான்" என்று தீர்மானித்துப் பெண்களை நோற்கச்சொல்லி, க்ருஷ்ணனை அழைத்து நீ இதற்குத் தலைவனாயிருக்கவேணும் என்று பிரார்த்தித்தார்கள். தான் உடனே சம்மதித்தால் இவர்கள் ஸந்தேஹிக்கக்கூடுமென்றறிந்த அம்மாயவன் "என்னாலே முடியாது கிடீர்" என்றான். இவர்களும் அவனைப் பல நல்லவார்த்தைகள் சொல்லி நிர்ப்பந்திக்கவே ஒருவாறு இசைந்தான். பெண்களை க்ருஷ்ணன் கையில் காட்டிக் கொடுத்துவிட்டு இடையரும் அகன்றனர். அவர்களும் இரவு

சிறிதுநேரம்வரையில் விளையாடிவிட்டு "இனி நாம் இங்கிருந்தோமாகில் ஆயர்கள் ஸந்தேஹிப்பர்கள். இப்போது எல்லாரும்போய் பின்னிரவில்வந்து நோன்புக்குக் குளிக்கலாம்படி எழுப்புங்கள்" என்றுகூறித் தானும் நப்பின்னைப்பிராட்டியின் திருமாளிகையில் புகுந்தான். பெண்களும் க்ருஷ்ணனைப் பிரிந்து உறங்கமுடியாமல், முற்பட உணர்ந்தவர்கள் க்ருஷ்ணனுடைய குணசேஷ்டிதங்களை நினைத்துக்கிடக்கிறவர்களை உணர்த்திக்கொண்டு நந்தகோபர் திருமாளிகைக்குச் சென்று, க்ருஷ்ணனை எழுப்பித் தங்கள் அபேக்ஷிதமாகிற கைங்கர்யத்தைப்பெற்று முடித்தார்கள். "மேலையார் செய்வனகள்" என்கிறபடியே ஆண்டாளும் தன்னை இடைப்பெண்ணாக பாவித்துக்கொண்டு நோன்பு என்கிற வியாஜத்தினால் பகவத்கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கிறாள் இத்திருப்பாவையில். பொய்யே 'நோற்கிறோம்' என்னலாமோவெனில்: விவாஹங்களிலும், மரணபர்யந்தமான தசைகளிலும் பொய்சொல்லலாம் என்று சொல்லப்பட்டதாகையால் சொல்லலாம்.

'மற்ற ஆழ்வார்களைப்போல் மடலூராமல், நோன்பு நோற்பானென்?' என்னில்: ராஜமஹிஷி பிச்சையெடுத்து ஜீவித்தால் அது அரசனுக்கன்றோ இழுக்கு; ஆகையால் மடலைக்காட்டிலும் இழிவுபடுத்துவதும், ஸ்வப்ரயத்னரூபமானதுமான நோன்பிலே கைவைக்கிறார்கள். மேலும் இவர்கள் மடலெடுத்தால் தானும் மடலெடுக்கக்கூடிய சுணைகேடனன்றோ க்ருஷ்ணன். 'அவன் இவர்களுடைய நோன்பையும் உபேக்ஷியானோ?' எனில்: "எல்லா தர்மங்களையும்விட்டு என்னைப் பற்று" என்றவனாகையால் தன்னடியார் பகவத்ப்ரவ்ருத்திவிரோதியான ஸ்வப்ரவ்ருத்தியில் இழிவதை ஸஹிக்கமாட்டான். 'நோன்பு வ்யாஜமாத்ரமாகில், வருணன் வர்ஷிப்பானோ' என்னில்: வ்ரதத்தினால் வாடியிருக்கும் வடிவைப் பார்த்தால், சைதன்யத்தையுடைய வருணன் மழை பொழிவான் என்று நிச்சயித்தார்கள்.

## திருப்பாவை முதற்பாட்டு

1. மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்
நீராடப்போதுவீர் போதுமினோ நேரிழையீர்!
சீர் மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர் வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர் மதியம் போல் முகத்தான்
நாராயணனே நமக்கே பறை தருவான்
பாரோர் புகழப் படிந்தேலோரெம்பாவாய்.

**பதவுரை:—நேர் இழையீர்**—*அழகிய ஆபரணங்களை அணிந்துள்ளவர்களே!*, **சீர் மல்கும்**—*செல்வம் நிறைந்துள்ள*, **ஆய்ப்பாடி**—*திருவாய்ப்பாடியிலுள்ள*, **செல்வச் சிறுமீர்காள்**—*(பகவத் ஸம்பந்தமாகிற) செல்வத்தையும், இளம் பருவத்தையுமுடைய பெண்களே!* **மார்கழித் திங்கள்**—*(வைஷ்ணவமான) மார்கழி மாதமாகவும்*, **மதி நிறைந்த நல் நாள்**—*சந்திரன் பூர்ணமாயுள்ள அழகிய நாளாகவும் இருக்கிறது;* **பாரோர்**—*இவ்வுலகிலுள்ளோரார்*, **புகழ**—*கொண்டாடும்படி*, **படிந்து**—*இந்நோன்பிலே ஈடுபட்டு*, **நீராட போதுவீர்**—*க்ருஷ்ணனுபவம் பண்ண விருப்பமுடையவர்கள்*, **போதுமின்**—*வாருங்கள்;* **கூர்வேல்**—*கூரிய வேலை உடையவரும்*, **கொடும் தொழிலன்**—*(க்ருஷ்ணனுக்குத் தீங்கு செய்யவரும் சிறு ஜந்துக்கள் விஷயத்திலும்) கொடுமையான தொழிலை உடையவருமான*, **நந்தகோபன்** — *ஸ்ரீநந்தகோபருடைய*, **குமரன்**—*பிள்ளையாய்*, **ஏர் ஆர்ந்த கண்ணி**—*அழகு நிறைந்த திருக்கண்களை உடையவளான*, **யசோதை** – *யசோதைப் பிராட்டிக்கு*, **இளம் சிங்கம்**—*சிங்கக் குட்டிபோல் இருக்குமவனாய்*, **கார்**—*மேகம்போன்ற*, **மேனி**—*திருமேனியையும்*, **செம் கண்**—*சிவந்த கண்களையும்*, **கதிர் மதியம் போல் முகத்தான்**—*சூரியனையும், சந்திரனையும் போன்ற திருமுகத்தையும் உடையவனான*, **நாராயணனே**—*(ஸர்வஸ்வாமியான) நாராயணனே*, **நமக்கே**— *(அவன் கை பார்த்திருக்கும்)*

நமக்கே, **எம் பா ஆய்** - நம்முடைய நோன்பைப் பின்சென்று, **பறை**—நம்முடைய விருப்பத்தை, **தருவான்**—கொடுப்பான்.

**அவதாரிகை:—** இப்பாட்டில் 'இந்நோன்புக்கு ஒரு காலம் நேர்படுவதே!' என்று காலத்தைக் கொண்டாடுகிறார்கள். இப்பிரபந்தத்தில் சொல்லப்போகிற ப்ராப்ய ப்ராபகங்கள் இதில் சுருக்கமாகச் சொல்லப்படுகின்றன என்றும் அருளிச்செய்வர்கள். "மார்கழித்திங்கள்" என்பது முதல் "சிறுமீர்காள்" என்பதுவரையில் ப்ராப்யத்தைச் சொல்லுகின்றது. பகவத்ஸம்பந்தமுண்டான காலமும், பாகவதர்களும் ப்ராப்யகோடியில் சேருகின்றனரன்றோ. "கூர்வேல் கொடுந்தொழிலன்" என்றுதொடங்கி இவர்களுக்கு உபாயம் நாராயணனே என்று உத்கோஷிக்கப்படுகிறது. அர்ஜுநன் நெடுநேரம் பதினெட்டு அத்யாயங்களையும் கேட்டுப்போந்து கடைசியில் சரமஶ்லோகத்தாலே எப்பெருமானைக்கொண்டு உபாயத்தை வெளியிடுவித்தான். ஸ்ரீபராசர்வான் ப்ராப்யத்தை நிலையிடுவித்தான். ஆண்டாள் முதற்பாட்டிலேயே ப்ராப்யத்தையும், ப்ராபகத்தையும் தானே வெளியிடுகிறாள். "முதற்பாட்டில் ப்ராபகம் சொல்லப்படுகிறது; கடைசியில் 'உனக்கே நாம் ஆட்செய்வோம்' என்று ப்ராப்யம் சொல்லப்படுகிறது. நடுவே தேஹயாத்ரைக்கு உடலாக்கிவிடுகிறாள்" என்றும் அருளிச்செய்வர்கள்.

**வியாக்யானம்:—**(மார்கழித் திங்கள்) க்ருஷ்ணனோடே தங்களைக் கூட்டின காலத்தைக்கொண்டாடுகிறார்கள். மழை விழுந்து ஹ்ருதயம் குளிரும் காலம். மலையுச்சியில் கிடந்த பயிர்களும் நிலத்தில் கிடந்த பயிர்களும் ஒக்க முளைவிடும் காலம்.

**"வாஸுதேவதருச்சாயா நாதிஶீதா ந கர்மதா"**

[வாஸுதேவனாகிற மரத்தின் நிழல் அதிகக் குளிரும், அதிக உஷ்ணமுமற்றது.] என்கிறபடியே அதிகக் குளிரும், அத்யுஷ்ணமும் இன்றிக்கேயிருக்கும் மாதம். நாளுக்கு ப்ராம்ஹ முஹூர்த்தம்போல் வருஷத்துக்கு இந்த மாஸமாகையாலே,

ஸத்வம் தலையெடுக்கும் காலம். "மாஸாநாம் மார்க்கஶீர்ஷோ ऽஹம்" [மாஸங்களுக்குள் மார்கழி மாஸமாகிறேன்.] என்று அவனே அருளிச்செய்கையால் மாதங்களுக்குள் வைஷ்ணவமான மாதம். 'பயிர்களுங்கூட முளை கிளம்புங்காலத்தில் உயிர்களாகிய நாம் விழிக்கவேண்டாவோ?' என்று பாவம். 'குளிருக்கு அஞ்சி ஆயர்கள் வெளிப்புறப்படாத காலமாயிற்றே. இந்த அரிய ஸமயத்தை இழக்கலாமோ?' என்கிருள். 'வைஷ்ணவமான மாதத்தில் விஷ்ணுவைப் பெறவேண்டாவோ? ஸத்வோத்தரமான காலத்திலன்றோ ஸாத்விக பலத்தைப் பெற அடுப்பது?' என்கிருள். காலத்தினலேற்படும் மாறுபாடில்லாத தேசத்தைக் கொண்டாவதுபோல், பரிணமத்துக்குக் காரணமான காலத்தைக் கொண்டாடுகிருர்கள். "ஒழிவில் காலமெல்லாம்" என்று ஆழ்வாரும், "அநாதிர் பகவந் கால:" என்று மஹர்ஷியும், "சைத்ர: ஸ்ரீமாநயம் மாஸ:" என்று சக்கரவர்த்தியும் காலத்தைக் கொண்டாடினுர்களன்றோ. ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையர் எம்பெருமானுர் பார்த்துக்கொண்டிருக்கும்போதே "ஒழிவில் காலமெல்லாம்" "ஒழிவில் காலமெல்லாம்" என்று ஒரு நாள் முழுவதும் பாடிப்பாடி முழுதும் கண்ணநீரோடே கைவாங்கிஞராம். "பகவத்விஷயத்திலே இவனுக்கு ஆபிமுக்யம் பிறந்தால் பின்னை அவன் தன்னையல்லகாணும் கொண்டாட அடுப்பது; அக்காலத்தையாய்த்து" என்று அழகியமணவாளப்பெருமாள்நாயனுர் அருளிச்செய்வர்.

(மதி நிறைந்த) "மாஸம் நேர்பட்டாற்போலே ஒரு பக்ஷமும் நேர்பட்டபடியென்?" என்று ஆச்சரியப்படுகிருர்கள். "ஆபூர்யமாணே பக்ஷே புண்யே நக்ஷத்ரே" சுக்லபக்ஷத்தில் புண்யமான நக்ஷத்திரத்தில் (மங்கள காரியம் செய்ய வேண்டியது.)] என்ற சாஸ்திரவிதியும் இவர்களுக்கு யத்ருச்சையாகச் சேரவிழுந்தது. "விதயஶ்ச வைதிகாஸ் த்வதீய கம்பீரமநோऽநுஸாரிண:" [வேதவிதிகளும் உன்னடியார்களின் கம்பீரமான மனஸ்ஸைப் பின்செல்லுகின்றன.] என்றல்லவோ ஆளவந்தாரும் அருளினுர். (மதி நிறைந்த) க்ருஷ்

ணுபவம் கிடைக்கப்பெருத நாளிலே இருளை விரும்புவள். இப்போது அவ்வனுபவம் கிடைக்கவிருக்கிறதாகையாலே "மதிநிறைந்த" நாளைக் கொண்டாடுகிருள். நாயகனுடன் கூடப்பெருதவர்களன்ருே சந்திரனை வெறுப்பர்கள். நாயகனை அடையப்போகிருர்களாகையால் சந்திரனைக் கொண்டாடுகிருர்கள். "க்ஷயாதிகள் நீங்கி அவன் பூர்ணனுகும் போது நாமும் நம் ஸத்தையைப்பெற்றுப் பூர்ணைகளாக வேண்டாவோ?" என்கிருள். "நாம் ஒருவரையொருவர் முகங்கண்டு வாழலாம் நாளன்ருே" என்கிருள். ஊரார் இசையாத காலத்தில் "நள்ளிருட்கண் என்னை உய்த்திடுமின்" என்று இருளை வேண்டுவார்கள்; இப்போது ஊரார் இசைந்திருப்பதால் நிலவை விரும்புகிருர்கள். (மதி நிறைந்த) "ஒரு சந்திரனேயோ பூர்ணனுயிருக்கிறது; அஞ்சுலக்ஷம் குடியில் பெண்களின் முகச்சந்திரர்களெல்லாம் பூர்ணமாயிருக்கும் நன்னுளன்ருே" என்கிருள். "திங்கள் திருமுகத்துச் சேயிழையார்" என்றல்லவோ அருளினுள். (மதி நிறைந்த நன்னுளால்) 'மதி' என்பதை 'ஞானம்' என்று பொருள்கொண்டு, 'நம்முடைய ஜ்ஞானபலம் பூர்ணமான நாளன்ருே' என்பதாகவும் கொள்ளலாம்.

(நன்னுளால்) 'மாஸத்துக்கும், பக்ஷத்துக்கும் நாயகக்கல்போலே இருப்பதொரு நாள் உண்டாவதே!' என்று வியப்புறுகிருர்கள். இதற்குமுன் சென்ற நாட்களையெல்லாம் தீயநாட்களாகக் கருதுகிருர்கள்போலும். "அன்று நான் பிறந்திலேன்" என்ருரன்ருே. "விபீஷணுழ்வான் ராமனை சரணமடைய வந்தவுடன், '**வத்யதாம்**' [(அரக்கனை இவன்) கொல்லப்படட்டும்.] என்ற ஸுக்ரீவனே, '**அஸ்மாபிஸ் துல்யோ பவது**' [நம்முடன் ஒக்க ராமகைங்கர்யம் செய்யக்கடவன்.] என்ருப்போலே நம்மை க்ருஷ்ணனேடு கிட்டவொட்டாதவர்களே; க்ருஷ்ணனுடன் கூட்டிவைக்கும்படியான இதுவன்ருே நன்னுள்" என்கிருர்கள். பகவத்ஸம்பந்தம் ஏற்பட்ட நாளன்ருே நன்னுள்' எனத்தகுந்தது.

**"அத்ய மே ஸபலம் ஜந்ம ஸுப்ரபாதா ச மே நிஶா"**

*[இன்றே என் ஜன்மம் ஸாபல்யமடைந்தது; இன்றே எனக்கு இரவு நன்றாக விடிந்தது.] என்ற அக்ரூரனைப் போலே கொண்டாடுகிறார்கள்.*

*(நீராட) க்ருஷ்ணனைப் பிரிந்ததினால் குளிர்காலமே கோடைகாலமாயிற்று; அந்த விரஹதாபம் ஆறும்படி குளிக்க. இவர்கள் எந்தக் குளத்தில் குளிக்கவிரும்புகிறார் களெனில்;*

**"செந்தாமரைத் தடங்கண் செங்கனி வாய் செங்கமலம்**
**செந்தாமரை அடிக்கள்"** *என்றும்,*

**"கண்ணும் செந்தாமரை கையும் அவை அடியோ அவையே'**

*என்றும் சொல்லுகிறபடியே 'தாமரை பூத்த தடாகமோ' என்று நினைக்கத்தக்க க்ருஷ்ணனாகிற குளத்திலே குளிக்க விரும்புகிறார்கள்.* **ஆழ்வாரும்** *"தயரதன் பெற்ற மரதக மணித்தடம்" என்றும்,*

**"மாயக்கூத்தா! வாமனா! வினையேன் கண்ணா! கண்கைகால்**
**தூய செய்ய மலர்களாச் சோதிச் செவ்வாய் முகிழதா**
**சாயல் சாமத் திருமேனி தண் பாசடையா தாமரை நீள்**
**வாசத் தடம் போல் வருவானே!"** *என்றும்*

*எம்பெருமானைத் தடாகமாக அனுபவித்தாரன்றோ.* **"ஏஷ ப்ரஹ்ம ப்ரவிஷ்டோऽஸ்மி க்ரீஷ்மே ஶீதமிவ ஹ்ரதம்"** *[முது வேனிற் காலத்தில் குளிர்ந்தமடுவில் நுழைவதுபோல் நான் ப்ரம்ஹத்தினுள் நுழைகிறேன்.]என்றும் சொல்லப்பட்டது. தமிழரும் கலவியை (ஸம்ஶ்லேஷத்தை) 'சுனையாடல்' என்றார்கள்.* **திருமங்கையாழ்வாரும்** *"பொற்றாமரைக்* **கயம் நீராடப்** *போனாள்" என்று அருளிச்செய்தார். (நீராட) தங்களுடைய குணசேஷ்டிதங்களாலே க்ருஷ்ணனை நீர்ப் பண்டமாக உருக்கி வைத்திருக்கிறார்கள்போலும். (நீராட) பகவத்ஸம்பந்தமுடையவர்களாகையாலே, தோழிகளா யிருந்தும் 'நீராட' என்று கௌரவமாக வார்த்தை சொல்லுகிறார்கள்.*

"...கள்ளவிழ் சோலைக் கணபுரம் கைதொழுதும்
பிள்ளையைப் பிள்ளையென்று எண்ணப் பெறுவரே?" என்றும்,

"பேராளன் பேரோதும் பெண்ணை மண்மேல்
பெருந்தவத்தள் என்றல்லால் பேசலாமே?"

என்றுமன்றோ தாயார் பெண்ணைக் குறித்து வார்த்தை சொல்லிற்று.

"வளர்த்ததிஞல் பயன் பெற்றேன் வருகவென்று
மடக்கிளியைக் கைகூப்பி வணங்கிஞளே"

என்று தான் வளர்த்த கிளியைக் கைகூப்பி வணங்கினவர்களும் உண்டன்றோ. இவ்விடத்தில், **பட்டர்** ஸ்ரீபாததீர்த்தத்தை அவருடைய திருத்தாயாரான **ஆண்டாள்** ஸ்வீகரித்ததும். எம்பெருமானுர் ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்துடன் எழுந்தருளும்போது அவருடைய ஆசார்யரான **பெரிய நம்பிகள்** தண்டனிட்டதும் அனுஸந்திக்கத்தக்கன. (நீராட) இத்தால் க்ருஷ்ணனுபவமே தங்களுக்கு ப்ராப்யம் என்று சொல்லுகிறுர்கள்.

"அல்பபலமான ஸ்வர்க்கம் முதலியவைகளைப் பெறுவதற்கு மிகுந்த முயற்சிகள் செய்யவேண்டியிருந்தது; அநந்தபலமான இதற்கு அவற்றைக்காட்டிலும் முயற்சிகள் செய்யவேண்டியிருக்குமோ?" என்னில்: (போதுவீர் போதுமினே) வரவிருப்பமுடையவர்கள் வரலாம்; இவ் விஷயத்தில் இச்சைக்கு மேற்படச் செய்யவேண்டுவதொன்று இல்லை. "கூடும் மனம் உடையீர்... கூடுமினே" என்ற தமப்பனருடைய பாசுரத்தை நினைக்கிருள். மற்ற விஷயங்கள் ஸ்வரூபத்துக்குத் தகாதவையாகையால் அவைகளைப் பெறுகைக்குக் கடினமான விதிகளையும், இவ்விஷயம் ஸ்வரூபத்துக்குத் தக்கதாகையால் இச்சையே போதுமானதென்றும் விதித்தருளினன் காருணிகனை ஸர்வேச்வரன். தாய் தந்தையருக்குக் கைங்கர்யம் செய்வதற்கு இச்சைக்கு மேற்பட ஒரு அதிகாரம் வேண்டுமோ? நமக்குத் தாயாகவும், தந்தையாகவும், மற்றெல்லாமாகவுமிருப்பவனன்றோ மாதவன்.

"தேந சேத₃விவாத₃ஸ்தே மா க₃ங்க₃ாம் மா குரூந் க₃ம:"

[அந்த ஸர்வேஶ்வரனிடத்தில் அத்வேஷமிருந்ததாகில் புண்யதீர்த்தஸ்நாநம், புண்யக்ஷேத்ராடனம் முதலிய ஸாதநாந்தரங்களில் கைவைக்கவேண்டா.] என்றல்லவோ மனுவும் அருளினர். (போதுமினோ) க்ஷுத்ரவிஷயங்களை அனுபவிப்பதற்குத் தனியிடங்களைத் தேடுவார்கள்; இது அளவற்றவனான அச்யுதனைப்பற்றிய விஷயமாகையாலே பலர் கூடி அனுபவிக்கவேண்டுமாகையாலே 'வாருங்கள்' என்று கூப்பிடுகிறாள். அவர்கள் கூடுவதைத் தன்பேறாக நினைத்து யாசிக்கிறாள். ப்ரதிகூலனான ராவணனையும், "தேந மைத்ரீ ப₄வது தே" [சக்ரவர்த்தித்திருமகனுடன் உனக்கு நட்புண்டாகட்டும்.] என்று திருத்துமவர்கள், அனுகூலரைப் பெற்றால் விடுவார்களோ? (போதுமினோ) அவர்கள் வர இசைந்த பின்பும் 'போதுமினோ' என்கிறார்கள்; "நீங்கள் முன்னாலே போகவேண்டும்; நாங்கள் உங்கள் நடையழகை அனுபவித்துக்கொண்டு பின்னே வருகிறோம்" என்று யாசிக்கிறார்கள். (நேரிழையீர்) அழகிய ஆபரணத்தை உடையவர்களே! இவர்கள் 'போதுமினோ' என்றவுடன் அவர்கள் வடிவு ஆபரணமணிந்ததுபோலாயிற்று என்று பாவம். அன்றிக்கே, க்ருஷ்ணன் எப்போது வருவானென்று அறியாமையாலே, அவன் வரவை எதிர்பார்த்து எப்போதும் ஆபரணங்களை அணிந்திருப்பார்கள் என்றும் கொள்ளலாம். அன்றிக்கே, முன்பே க்ருஷ்ணனுடன் ஸம்ஶ்லேஷித்ததால் பிறந்த அழகைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். (நேரிழையீர்) "'உருவுடையார்' என்கிற உங்கள் வடிவழகே அமையாதோ?" என்கிறாள். (நேரிழையீர்) "ப்ரதிபத்தியை ஆபரணமாக உடையீர்" என்று ஈராயிரப்படி. "அவனே உபாயம்" என்னும் நினைவையே பூஷணமாகக்கொண்டவர்கள் என்று தாத்பர்யம்.

(சீர் மல்கும் ஆய்ப்பாடி) 'இக்காலம் நேர்பட்டாற்போலே ஒரு ஊர் நேர்படுவதே!" என்கிறாள். பிள்ளைகள் பிறந்த அத்ருஷ்டத்தாலே பாலும், வெண்ணெயும் வெள்ளமிடும் ஊர். நாழிப்பாலிலிருந்து, நாழிநெய் கிடைக்கும்

படியான ஸம்ருத்தி. (சீர்மல்கும்) உழக்கிலே பதக்கிட்டாப் போலே செல்வம் மிக்கிருந்துள்ள ஊர். (சீர்மல்கும் ஆய்ப் பாடி) பரமபதத்திலும் சென்று பெருகும்படியான ஐச்வர் யத்தையுடைய ஆய்ப்பாடி. (சீர் மல்கும் ஆய்ப்பாடி) 'சீர்' என்று பகவானுடைய குணங்களைக் குறிப்பதாகக்கொண்டு 'பகவத்குணங்கள் வெள்ளமிடும் ஆய்ப்பாடி' என்றும் பொருள் கொள்ளலாம். பரமபதத்திற்காட்டிலும் குணங் கள் பிரகாசிக்கும் இடமன்றோ இது. அங்கு தன்னைக் காட்டிலும் குறைந்தாரில்லாமையால், குணங்கள் பகல் விளக்குப்போலே இருக்கும். இங்கேயே இருட்டறையில் விளக்குப்போலே விளங்குவது. அங்கு மேன்மையே உண்டு; நீர்மை (ஸௌலப்யம்) இல்லை. அதிமானுஷசேஷ்டிதங் களாலே இங்கு மேன்மையும் மிக விளங்கும்; நீர்மையே ஸ்வரூபமாயிருக்கும். அது கும்பீடுகொண்டிருக்குமிடம்; இது கும்பிடுகிற இடம். "அழுகையும், அஞ்சிநோக்கும் அந்நோக்கும் அணிகொள் செஞ்சிறு வாய்நெளிப்பதுவும், தொழுகையும் இவைகண்ட அசோதை" என்கிறபடியே இங்குள்ள தொழுகையும் அழுகையும் அங்கு காணமுடியா தன்றோ. அதனாலன்றோ ஆழ்வாரும் "தொல்லை இன்பத்து இறுதி கண்டாளே" என்று அருளிச்செய்தார். இந்த நீர்மையைக் காண்பதற்காகவன்றோ பிராட்டிமார்களும் க்ருஷ்ணனை வைகுண்டத்திற்கு வரச்செய்தது. **"ஸ உஶ்ரே யாந் ப$_4$வதி ஜாயமாந:"** [அவன் பிறந்த பின்பே மேன்மையை அடைகிறான்.] என்று வேதம் உத்கோஷித்தது. "பல பிறப்பாய் **ஒளிவரும் முழு நலம்"** என்றார் வேதம் தமிழ் செய்த **மாறன். "சீர்மல்கும்** ஆய்ப்பாடி" என்கிறாள் **ஆண்டாள்.**

(ஆய்ப்பாடி) பரமபதம்போலே வேறொரு தேஹ மெடுத்துச்சென்று அனுபவிக்கவேண்டாதபடி, இங்கேயே க்ருஷ்ணானுபவம் பண்ணத்தக்க ஊர். ஸ்ரீராமபிரானுடைய குணங்கண்டு உகக்கும் அயோத்திபோலின்றியே க்ருஷ்ண னுடைய தீம்புகண்டு உகக்கும் ஊர். தம்பி தீம்புக்குத் தமையன் துணை செய்யும் ஊர். "இந்திரனுக்கிட்ட சோற்றை மலைக்கு இடுங்கள்" என்றால் அதுக்கு இசையும்

ஊர். ஆசாரசீலர்களான வஸிஷ்டர் முதலியோர் வாழுமூர் போலின்றியே அநாசாரம் நிறைந்தவர்களும், இடக்கையும் வலக்கையும் அறியாதவர்களுமான இடையர்கள் இருக்கும் ஊர். "பட்டர் திருப்பாவை அருளிச்செய்யாநிற்க, பூணூல் சாத்தாத ஒரு ஸ்ரீவைஷ்ணவர் வர, 'கூசாதே உள்ளே புகுவீர்; இவ்விடம் திருவாய்ப்பாடியாய்க்காணும் செல்லு கிறது' என்று அருளிச்செய்தார்" என்று ஆய் அருளிச்செய்வர்.

(செல்வச் சிறுமீர்காள்) இவ்வாத்மாவுக்கு நிலைநின்ற ஐச்வர்யமாகிற பகவத்ஸம்பந்தம் இங்கு 'செல்வம்' எனப் படுகிறது. செல்வங்களையெல்லாம்விட்டு வெறுங்கையோடே ஸ்ரீராமபிரானைப் பின்தொடர்ந்த **லக்ஷ்மணன் "லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:"** எனப்பட்டான். **ராவணனுடைய** செல்வங்களையெல்லாம் வெறுத்து **ராமனைச்** சரணமடையக் கிளம்பிய **விபீஷணன் "அந்தரிக்ஷகத: ஸ்ரீமாந்"** எனப்பட்டான். தன் முயற்சியைக் கைவிட்டு எம்பெருமானையே கதியாகப் பற்றிய **கஜேந்திராழ்வான் "ஸ து நாகவர: ஸ்ரீமாந்"** எனப் பட்டான். இளையபெருமாளைப்போல் கைங்கர்யலக்ஷ்மியை உடையவர்களாகவும், விபீஷணாழ்வானைப்போல் அந்ய சேஷத்வமற்றவர்களாகவும், கஜேந்திராழ்வானைப்போல் ஸ்வஸ்வாதந்த்ரியமற்றவர்களாகவுமிருப்பதால் இவர்களை "செல்வச் சிறுமீர்காள்" என்று அழைக்கிறார்கள்.

(சிறுமீர்காள்) "'நான்' 'என்னுடையது' என்னும் அஹங்காரமமகாரமுடைய ஆண்களல்லவே நீங்கள்; பருவம் கழிந்து ஒரு கணவனுக்கு வாழ்க்கைப்பட்டவர்களல்லவே நீங்கள்; அவனுடன் ஒத்த பருவத்தை உடையவர்களா யிருந்துவைத்து இழக்கலாமோ?" என்கிறாள். (சிறுமீர்காள்) அவனும் ஆண்களைக் கண்டால் ஸ்வதந்த்ரர்களைப்போலே நினைத்திருப்பன்; பருவம் நிரம்பிய பெண்களைக் கண்டால் மற்ற தெய்வங்களைத் தொழுபவர்களைப்போலே நினைத்திருப்பன்: சிறுமிகளைக்கண்டால் தன்னையே கதியாகப் பற்றிய அநந்யப்ரயோஜனரைப்போலே நினைத்து உகப்பன். ஆக, இவ்வளவால் ப்ராப்யத்தை நிஷ்கர்ஷித்தார்கள்.

"கூர்வேல் கொடுந்தொழிலன்" என்று தொடங்கி எம்பெருமானைப் பெறுவதற்கு அவனே உபாயம் என்று உரைக்கப்படுகிறது. (கூர்வேல் கொடுந்தொழிலன்) ஸ்ரீநந்தகோபர் முன்பு புல் பூண்டுகளைக்கூட மிதிக்கமாட்டார். "நம் சிறியாத்தானைப்போலே ஆந்ருஶம்ஸ்ய ப்ரதாநராயாய்த்துப் போருவது" என்றார் **பெரியவாச்சான்பிள்ளை.** அப்படிப்பட்டவர் பிள்ளைகள் பிறந்த பின்பு அவர்கள் மேலுண்டான அன்பின் மிகுதியாலே 'அவர்களுக்கு என் வருகிறதோ?' என்று அஞ்சி வேலைக் கூராக்கி வைத்துக்கொண்டு கண்ணை இமை காப்பதுபோல் காத்துவந்தார். (கொடுந்தொழிலன்) தொட்டிலுக்குக் கீழே ஒரு சிற்றெறும்பு புகுந்தாலும் ஸிம்ஹத்தின்மேலே விழுமாப்போலே விழுந்து கொல்லுமவரானார். ஜீவஹிம்ஸை சாஸ்திர விருத்தமன்றோ என்னில்: **"ந ஹிம்ஸ்யாத் ஸர்வா பூ$_4$தாநி"** [எல்லா பூதங்களையும் ஹிம்ஸிக்கலாகாது.] என்ற சாஸ்திரமே, **"அக்$_3$னீஷோமீயம் பஶுமாலபே$_4$த"** [அக்னீஷோமம் என்னும் யாகத்தைச் சேர்ந்த பசுவைக்கொல்லவேண்டும்.] என்று விதித்ததன்றோ. அம்மாதிரியே தனக்காகச் செய்யும் ப்ராணிஹிம்ஸை பாபமாகும். 'எம்பெருமானுக்கு என்ன தீங்கு வருகிறதோ' என்று அஞ்சிச் செய்யும் ஹிம்ஸை தர்மமேயாகும்.

**"மந்நிமித்தம் க்ருதம் பாபமபி புண்யாய கல்பதே"**

[எனக்காகச் செய்யப்பட்ட பாபமும் புண்யமாகவே ஆகிறது.] என்றல்லவோ சொல்லப்பட்டது. பரமதயாளுவான **தொண்டரடிப்பொடிகளும்** "நின்பால் பொறுப்பரியனகள் பேசில்...கூடுமேல் தலையை ஆங்கே அறுப்பதே கருமங் கண்டாய்" என்றாரன்றோ. (கூர்வேல் கொடுந்தொழிலன்) "நமக்கு அவனைக் கொடுத்தவனைக் கொண்டாடுங்கள்" என்கிறாள். பெரியாழ்வார் திருமகளாகையால் எம்பெருமானைக் காவலிடுவாரை அனுஸந்தித்து உயிர்தரிக்கிறாள். (கூர்வேல்) இக்குடிக்கு வேலே ஆயுதம்; க்ருஷ்ணனைச் சொல்லும்போதும் "நின் கையில் வேல் போற்றி" என்றார்களன்றோ.

(நந்தகோபன்) "'அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்' என்கிறபடியே எல்லாருக்கும் தாரக போஷக போக்யங்களைக் கொடுக்குமவன் நமக்கு தாரக போஷகபோக்யமானவனைத் தாராதோ?" என்கிறாள். (நந்தகோபன்) ஆநந்தமே ஒரு வடிவு கொண்டாற்போலே இருப்பவன்; க்ருஷ்ணனுக்கு ஒரு தீங்கு வராதபடி ரக்ஷிக்குமவன். (நந்தகோபன் குமரன்) "வெண்ணெய் களவு கண்டான், பெண்களைத் தீம்பு செய்தான்" என்று எல்லாரும் வந்து முறையிடுவதைக்கேட்ட **நந்தகோபர்** "அவன் என் முன்னே வரட்டும். கடுமையாக தண்டிக்கிறேன்" என்பர்; அவர் முன்பு கண்ணன் தோற்றும் போது "ஐயோ இவனையோ குற்றம் சொன்னார்கள்" என்று அவர்களையே கோபிக்கும்படியாகச் சக்கரவர்த்தித் திருக்குமாரனைப்போலே விநயம் பாவித்துக்கொண்டு வருகிறபடியை அனுபவிக்கிறார்கள்.

(ஏரார்ந்தகண்ணி யசோதை) "**ஸதா₃பஶ்யந்தி**" என்று ஸதாதர்ஶனம் பண்ணும் நித்யஸூரிகளைப்போலே பிள்ளையைக் கண்கொட்டாமல் கண்டுகொண்டிருப்பவளாதலால் 'அழகு நிரம்பிய கண்ணையுடையவள்' எனப்படுகிறாள். 'அழுகையும் அஞ்சி நோக்கும் அந்நோக்கும் அணிகொள் செஞ்சிறு வாய் நெளிப்பதுவும் தொழுகையும்' கண்ட கண்ணன்றோ இவளுடையது.

(ஏரார்ந்த கண்ணி) தகப்பனுகிற நந்தகோபர், கையிலே வேலொன்று கொண்டு கண்ணனை ரக்ஷிப்பர்; தாயாகிற இவள் முகத்திலே அம்பு இரண்டு கொண்டு காவலிடுகிறாள். 'அம்பன்ன கண்ணாள் அசோதை'யன்றோ. (யசோதை) "நந்தகோபாலா! எழுந்திராய்" என்றும், "யசோதாய்! அறிவுறாய்" என்றும் சிறுமிகளுக்கும் ஏவிக் காரியம் கொள்ளலாம்படி அனுகூலர்களாயிருக்கிறபடி. (யசோதை) அவ்வூருக்கே **யஶஸ்ஸை**க் (கீர்த்தியைக்) கொடுக்கவல்லவள். "படிறு பல செய்து இப்பாடியெங்கும் திரியாமே கொடியேன் என் பிள்ளையைப் போக்கினேன்" என்னும்படியாக அவன் தீம்புசெய்வதையே தனக்குப் பேறாகக் கொண்டிருக்கு

மவள். (இளம் சிங்கம்) நந்தகோபரிடம் மிக்க அடக்கத்துடனிருக்குமவன் இவளிடம் மிகுந்த செருக்குடனிருக்கிறபடி; அவருக்குக் குமரன்; இவளுக்கு இளஞ்சிங்கம். (இளம் சிங்கம்) 'சிங்கக் குருகு' [குருகு-குட்டி] என்று பட்டர் அருளிச்செய்வராம். (சிங்கம்) கம்ஸனைக் கொல்ல வல்ல வலியுடையனாயிருக்கை. (இளம் சிங்கம்) அவர்கள் கிறுமிகள்; இவன் இளஞ்சிங்கம். அவர்களுடைய ஶேஷத்வமும் இவனுடைய ஶேஷித்வமும் இருக்கிறபடி. **"ராக₄வோ ऽர்ஹதி வைதே₃ஹீம் தம் சேயமஸிதேக்ஷணா"** [ராகவனே வைதேஹிக்குத் தக்கவன்; அவனுக்கும் கறுத்த கண்களையுடையவளான இவளே தக்கவள்.] என்றாற்போலே யிருக்கை. எம்பெருமானே உபாயம் என்று சொல்லவேண்டிய இடத்தில் "கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்" என்றும், "ஏரார்ந்த கண்ணி யசோதை இளம் சிங்கம்" என்றும் விஶேஷித்ததிற்குக் கருத்தென்ன? என்னில்: உபாயமான ஸர்வேஶ்வரனைப் புருஷகாரத்தை முன்னிட்டே பற்றவேண்டுமாகையால் புருஷகாரபூதர்களான ஸ்ரீநந்தகோபரையும், யசோதைப் பிராட்டியையும் அநுஸந்திக்கிறார்கள். மேலும், ஸ்வாபதேசத்தில் நந்தகோபர் ஆசாரியனையும், யசோதை திருமந்திரத்தையும் குறிக்கின்றனரன்றோ; ஆசாரியனிடமிருந்து மந்த்ரோபதேஶம் பெற்றவனுக்கன்றோ உபாயஸ்வீகாரத்தில் அதிகாரமுள்ளது; ஆகையாலே அவர்களை முன்னிட்டுச் சொல்லுவதாகவும் கொள்ளலாம்.

(கார் மேனி) "நீலதோயத₃மத்₄யஸ்த₂ா" என்றும், "புருஷம் க்ருஷ்ணபிங்க₃ளம்" என்றும், "நீலமுண்ட மின்னன்ன மேனி" என்றும் மறைகள் அறையும் திருமேனியை அநுபவிக்கிறார்கள். "மேகம்போலே நம்முடைய ஸகலதாபங்களையும் ஆற்றும் வடிவழகைக்கண்டுவைத்தும் ஆறியிருக்கலாமோ?" என்கிறாள். (கார்மேனி) தாய் தந்தையர் ஒளித்து வைத்தாலும் களவுகண்டாவது அநுபவிக்கவேண்டிய திருமேனி. (கார்மேனி) மேகம்போலே ஒரு ப்ரதிப்ரயோஜனத்தை எதிர்பாராமல் தன்னை உபகரிக்கும் திருமேனி.

(கார்மேனி) இவர்கள் நீராடப்போகிற தடாகமிருக்கிறபடி. (கார்மேனி) பகவானுடைய திவ்யமங்களவிக்ரஹத்திற்கு உபாயத்வம் உண்டாகையாலே அதை அனுஸந்திக்கிறார்கள். பரமகாருணிகரான **பெரியவாச்சான்பிள்ளை** "ஈச்வரன் குண த்வாரா உபாயபூதனுமோபாதி, விக்ரஹத்வாராவும் உபாய பூதனும் என்று விக்ரஹத்தினுடைய ஸ்வதந்த்ரோபாயத்வம் தோற்றுகைக்காக, தனியே விக்ரஹத்தை உபாதானம் பண்ணுகிறதென்னவுமாம்... இடக்கையும் வலக்கையும் அறியாத இடைச்சி, போக்யமான பூவைவிற்று வயிறு வளர்க்கும் மாலாகாரர் தொடக்கமானாரை...தன் பக்கலிலே நிரதிசயமான ப்ராவண்யத்தைப் பிறப்பித்து, அதுவே கருவியாக இதரவிஷயவிரக்தியையும் பிறப்பித்து, தானே முடிய நடத்தக்கடவதாயிறே விக்ரஹமிருப்பது" என்று **பரந்த ரஹஸ்யத்தில்** விக்ரஹத்துக்கு உபாயத்வமுண்டென்று அருளிச்செய்தது இங்கு அனுஸந்திக்கத்தக்கது.

(செங்கண்) "**தஸ்ய யதா₂ கப்யாஸம் புண்ட₃ரீகமேவ மக்ஷிணீ**" [ஸூர்யனால் மலர்ந்த தாமரை எப்படிவிளங்குமோ அப்படிப்பட்ட இருகண்கள் அவனுக்கு உள்ளன.] என்றும், "செந்தாமரைத் தடங்கண்" என்றும் சொல்லப்பட்ட திருக்கண்களை அனுபவிக்கிறாள். தடாகம்போன்ற திருமேனியில் தாமரைகள் பூத்ததுபோலிருக்கிறபடி.

**"வன்காற்றறைய ஒருங்கே மறிந்து கிடந்(து) அலர்ந்த**
**மென் கால் கமலத்தடம்போல் பொலிந்தன...எம்பிரான**
**தடங்கண்களே"**

என்று **ஆழ்வார்** அருளியதும் இங்கு அனுஸந்திக்கத்தக்கது. (கார்மேனிச் செங்கண்) "அத்திருமேனியாலே அணைக்கப் பெற்று அத்திருக்கண்களாலே குளிர நோக்கப் பெறுவோமோ?" என்று ஆசைப்படுகிறார்கள்.

(கதிர் மதியம் போல் முகத்தான்) கதிர்-ஸூர்யன்; மதியம்-சந்திரன். முகத்தின் ஒளியைப் பார்த்தால் ஆதித்யனைப்போல் விளங்கும்; குளிர்ச்சியைப் பார்த்தால் சந்தி

ரனைப்போலிருக்கும். ஸூர்யனுடைய ஒளியுடன்கூடிய சந்திரனைப்போன்ற திருமுகத்தை உடையவன். "**தத்ர கே₃ாவிந்த₃மாஸீநம் ப்ரஸந்நாதி₃த்யவர்ச்சஸம்**" [குளிர்ந்த ஆதித்யனைப் போன்ற ஒளியையுடையவனாய் அங்கு எழுந்தருளியிருக்கும் கோவிந்தனை (உபாஸித்தார்கள்).] என்றும், "**சந்த்₃ரப₄ாஸ்கரவர்ச்சஸம்**" [சந்திரனையும், ஸூர்யனையும்போன்ற ஒளியுள்ளவனை.] என்றும், "முளைக்கதிரை" என்றும் சொல்லப்பட்டதன்றோ. (கதிர் மதியம்...) விரோதிகளுக்கு ஸூர்யன் போலே அணுகவொண்ணாததாகவும் அடியார்களுக்குக் கிட்டி நின்று அனுபவிக்கலாம்படியுமிருக்கும் திருமுகத்தை உடையவன். அடியார்க்குப் 'புனலுரு'வாகவும், ப்ரதிகூலர்க்கு 'அனலுரு'வாகவும் இருக்கிறபடி. (கதிர் மதியம்...) ஆண்களுக்கு ஸூர்யன்போல் அணுகவொண்ணாதவனாகவும் சிறுமிகளுக்குச் சந்திரன்போன்றவனாகவும் இருக்கை. (முகத்தான்) "கதிர் மதியம் போல்" என்று சொன்னதில் த்ருப்தியடையாமல் 'முகம்' என்று சொல்லுமித்தனையொழிய உபமானமற்றதன்றோ இது என்கிறார்கள். "எத்தனை செய்யிலும் என் மகன் முகம் நேரொவ்வாய்" என்றல்லவோ இவளுடைய தந்தையார் அருளினார். "**சந்த்₃ரகாந்தாநநம் ராமம்**" [சந்திரனைப்போன்ற அழகிய முகத்தை உடையவனான ராமனை.] என்ற **வால்மீகியும்**, "ஐயோ! தப்பச்சொன்னோம்" என்று அனுதபித்து "**அதீவ ப்ரியத₃ர்ஶனம்**" [(அந்தச் சந்திரனைக்காட்டிலும்) இனிதாகக் காட்சியளிப்பவன்.] என்றானன்றோ.

'ஸர்வேச்வரனே உபாயம்' என்று சொல்லவேண்டிய இந்த ப்ரகரணத்தில் "கார் மேனிச் செங்கண்...முகத்தான்" என்று விசேஷிப்பதற்குக் கருத்து என்னென்னில்: உபாயமாகிய வாஸுதேவனைப் பற்றுவதற்கு அனுகுணமான வாத்ஸல்யம், ஸ்வாமித்வம், ஸௌசீல்யம், ஸௌலப்யம் என்னும் நான்கு குணங்களையும், மோக்ஷத்தைக் கொடுப்பதற்கு அனுகுணமான ஜ்ஞானம், சக்தி, அவாப்தஸமஸ்தகாமத்வம், ஸர்வஸ்வாமித்வம், இரக்கம் என்னும் ஐந்து

குணங்களையும் உபாயப்ரகரணங்களில் அநுஸந்திப்பது வழக்கம். சரமஶ்லோகத்தில் **'மாமேகம் ஶரணம் வ்ரஜ'** [என்னையே சரணமாக அடை.] என்ற விடத்திலுள்ள 'மாம்' என்னும் பதத்தில் முன்சொல்லப்பட்ட நான்கு குணங்களையும், உத்தரார்த்தத்திலுள்ள 'அஹம்' என்னும் பதத்தில் பின் சொல்லப்பட்ட ஐந்து குணங்களையும் நம் ஆசாரியர்கள் அனுஸந்தித்துப் போருவர்கள். த்வயத்தின் பூர்வவாக்யத்திலுள்ள நாராயணபதத்திலும் இந்த ஒன்பது குணங்களையும் அனுஸந்திப்பார்கள். அபாரகருணாஸாகரரான **பெரியவாச்சான் பிள்ளையும்** "தன் தோஷம் கண்டு இறாயாமைக்கு வாத்ஸல்யத்தை அனுஸந்திக்கவேணும்; அவன் அப்ராப்தனென்று இறாயாமைக்கு ஸ்வாமித்வத்தை அநுஸந்திக்கவேணும்; மேன்மை கண்டு இறாயாமைக்கு ஸௌஶீல்யத்தை அனுஸந்திக்கவேணும்; அதீந்த்ரியனென்று இறாயாமைக்கு ஸௌலப்யத்தை அனுஸந்திக்கவேணும்;" என்றும், "ஆஶ்ரிதருடைய ஹிதாஹிதங்கள் அறியும்போதைக்கு ஸர்வஜ்ஞனாகவேணும்; அறிந்தபடியே கார்யம் செய்கைக்கு ஸர்வஶக்தி ஆகவேணும்; ஸர்வ ஶக்தனானாலும் இவன் பக்கல் ஒன்றும் நச்சாதொழிகைக்கு அவாப்தஸமஸ்தகாமனாகவேணும்; இத்தனையும் உண்டானாலும் தன் பேறாகக் கார்யம் செய்யும்போதைக்கு ஸர்வ ஸ்வாமியாகவேணும்; அநாதிகாலம் கர்மாநுகுணமாக அறுத்தறுத்துத் தீற்றுகைக்குக் கருவியாய்ப்போந்த இவை ரக்ஷணத்துக்கு உறுப்பாகைக்கு இரக்கம் வேணும்." என்றும் பரந்த ரஹஸ்யத்தில் அருளிச்செய்தாரன்றோ. ப்ரதமாசார்யரான **நம்மாழ்வாரும்** "நிகரில் புகழாய்! உலகம் மூன்று உடையாய்! என்னையாள்வானே!—திருவேங்கடத்தானே!" என்று ஆஶ்ரயிக்கும் ஸமயத்தில் முன் சொன்ன நான்கு குணங்களையும் அனுஸந்தித்தருளினார். இவைகளில் **வாத்ஸல்யமாவது:**—அன்றீன்ற கன்றினுடைய அழுக்கையே போக்யமாகக் கொள்ளும் பசுவைப்போல் தோஷங்களையே போக்யமாகக் கொள்ளுகை. **ஸ்வாமித்வமாவது:**— "ஈஶ்வர ப்ராப்தி ஆத்மாவுக்கன்று; ஆத்மப்ராப்தி ஈஶ்வரனுக்கு"

என்னும்படி இச்சேதனனை உடையனாயிருக்கை; **ஸௌசீல்யமாவது:**-பெரியவன் சிறியவனோடு ஒருநீராகக் கலந்து பரிமாறுகை. **ஸௌலப்யமாவது:**—அணுகவொண்ணாத ஸ்ரீவைகுண்டம் முதலியவிடங்களிலிராதே அருகே இருக்கை. **ஸர்வஜ்ஞத்வமாவது:**—எல்லாவற்றையும், எப்போதும், ஒரே ஸமயத்தில் ஸ்வரூபத்தாலேயே அறிகை; **ஸர்வசக்தித்வமாவது:**-பிறரால் செய்யமுடியாத காரியத்தையும் மிக எளிதில் செய்யவல்லவனாயிருக்கை; **அவாப்தஸமஸ்த காமத்வமாவது:**—இவர்களிடம் ஒரு ப்ரதிப்ரயோஜனத்தை எதிர்பார்க்கவேண்டாதபடி எல்லாவற்றாலும் பூர்ணனாயிருக்கை; **ஸர்வஸ்வாமித்வமாவது:**—இவர்களுடைய காரியத்தைத் தன்னுடையதாக நினைக்கும்படியாக இவர்களை உடையவனாயிருக்கை; **இரக்கமாவது:**—பிறருடைய துக்கத்தைப் பொறுக்காமலிருக்கை. இந்த குணங்களெல்லாம் இங்கு உணர்த்தப்படுகின்றன. எங்ஙனேயென்னில்: 'செங்கண்' என்று அன்பினாலும், வகுத்த ஸ்வாமியாயிருப்பதாலும் சிவந்திருக்கும் கண்ணைச் சொல்லியதால் வாத்ஸல்யமும் ஸ்வாமித்வமும் சொல்லப்பட்டன. "ஏரார்ந்த... இளஞ்சிங்கம்" என்றும், "நந்தகோபன் குமரன்" என்றும் ஸர்வஸ்வாமியாயிருப்பவன் ஒரு இடைச்சிக்கும் இடையனுக்கும் கட்டவும், அடிக்கவுமாம்படியிருக்கிறான் என்கையால் ஸௌலப்யமும், ஸௌசீல்யமும் உணர்த்தப்படுகின்றன. "இளஞ்சிங்கம்" என்றும், "கதிர்போல் முகத்தான்" என்றும் சொல்லப்பட்டதால் ஸர்வசக்தித்வமும் தோற்றுகிறது. இது ஸர்வஜ்ஞத்வத்துக்கும் உபலக்ஷணம். "மதியம் போல் முகத்தான்" என்பதிலிருந்தும் ஸௌலப்யம் தோற்றுகிறது. "கார்மேனி" என்று ப்ரயோஜனத்தை எதிர்பாராமல் உபகரிக்கும் மேகம்போன்ற வடிவையுடையவன் என்றதால் அவாப்தஸமஸ்தகாமத்வமும் உணர்த்தப்படுகிறது.

ஆக, இவ்வளவால் புருஷகாரயோகமும், உபாயபூதனான ஸர்வேச்வரனுக்கு அவச்யம் வேண்டியவையான குணங்களும் திருமேனியும் அனுஸந்திக்கப்பட்டன. "நாரா

யணனே'' என்று இவனே உபாயம் என்பதைத் தெரிவிக்கும் அஸாதாரணமான திருநாமத்தை அனுஸந்திக்கிறார்கள்.

**''நாரஶப்தே₃ந ஜீவாநாம் ஸமூஹ: ப்ரோச்யதே புதை₄:।**
**கதிராலம்ப₃நம் தஸ்ய தேந நாராயண: ஸ்ம்ருத:॥''**

[பெரியோர்களால், (நரர்களாகிய) ஜீவர்களின் ஸமூஹம் நாரஶப்தத்துக்கு அர்த்தமாகச் சொல்லப்படுகிறது. அந்த ஸமூஹத்திற்கு ப்ராப்யமாகவும், உபாயமாகவும் இருப்பவன் இவன்; ஆகையினால் நாராயணனென்று சொல்லப்படுகிறான்.] என்று சொல்லப்பட்டதன்றோ. நாராயணஶப்தத்துக்கு வியாக்யானம் செய்த நாராயணனுவாகமும் **''நாராயணம்–பராயணம்''** [மேலான உபாயமாயிருப்பவன் நாராயணன்.] என்றல்லவோ ஓதிற்று. ஸுபாலோபனிஷத்தும் **''ஶரணம்-நாராயண:''** என்றல்லவோ உத்கோஷித்தது. (நாராயணனே) 'க்ருஷ்ணனை இவர்கள் நாராயணனென்று அறிந்தது எப்படி?' என்னில்: அதிமானுஷகாரியங்களாலே இவனே ஸர்வேச்வரன் என்று பெண்களுக்கும் தெரியும்படியாயன்றோ இவ்வவதாரமிருப்பது. **''ஏஷ நாராயண: ஸ்ரீமாந்...ஹ்யாக₃தோ மது₂ராம் புரீம்''** [இந்த ஸ்ரீமந்நாராயணனன்றோ மதுராபுரிக்கு வந்துள்ளான்.] என்றல்லவோ ரிஷியும் அருளிச்செய்தார். (நாராயணனே) நோன்புக்கு அங்கமாக ஆயர்கள் ஜபிக்கச்சொன்ன மந்திரத்தை அனுஸந்திக்கிறார்களென்றும் கொள்ளலாம். (நாராயணனே) வேதங்களாலும், வைதிகர்களாலும், ஆழ்வார்களாலும் பலகால் அனுஸந்திக்கப்பட்ட திருநாமமாகையாலே இதை முதலில் அனுஸந்திக்கிறாள். **''விஶ்வம் நாராயணம்''**, **''நாராயணம் மஹாஜ்ஞேயம்''**, **''நாராயண பரம் ப்₃ரஹ்ம...நாராயணஸ் ஸ்தித:''** என்றும், **''ஏகோ ஹ வை நாராயண ஆஸீத்''** என்றும், **''சக்ஷுஶ்ச த்₃ரஷ்டவ்யஞ்ச நாராயண:...''**, **''மாதாபிதா...நாராயண:''** என்றும், **''தி₃வ்யோ தே₃வ ஏகோ நாராயண:''** என்றும் வேதங்களும், **''நமோ நாராயணாயேதி மந்த்ர:''** என்றும், **''நாராயணேதி ஶப்தோ₃ ऽஸ்தி''** என்றும், **''நாராயண ஶப்த₃மாத்ரம்'** என்றும் வைதிகர்களும். **''வண்புகழ் நாரணன்''**, **''செல்வ நாரணன்''**,

"நாரணன் முழுவேழுலகுக்கும் நாதன்", "வாழ் புகழ் நாரணன்", "நாடு நகரமும் நன்கறிய நமோ நாராயணாய", "ஓவாதே நமோ நாரணா", "நாராயணாவென்னும் நாமம்", "நாராயணா! ஓ மணிவண்ணா", "நாத்தழும்பெழ நாரணா", "நலந்திகழ் நாரணன்" "நான்முகனை நாராயணன் படைத்தான்" "நன் மாலை பலகொண்டு நமோ நாரணா" "நாமம் பல சொல்லி நாராயணா" *என்றும் ஆழ்வார்களும் கணக்கற்ற இடங்களில் இத்திருநாமத்தை அநுஸந்தித்துப் போந்தார்களன்றோ.* (*நாராயணனே*) *'ஏ'காரத்தினாலே சணற்கயிறுகண்ட ப்ரம்ஹாஸ்த்ரம்போலே வேறொன்றையும் ஸஹியாத உபாயமாயிருப்பவனென்று உணர்த்தப்படுகிறது. நித்யாநபாயினியான பிராட்டியையும் அபேக்ஷியாதபடியன்றோ இவனுடைய உபாயத்வமிருப்பது.* "மாமேகம் ஶரணம் வ்ரஜ" [என்னையே *உபாயமாக அடை.*]. "த்வமேவோபாயபூ$_4$தோ மே ப$_4$வ" [நீயே *எனக்கு உபாயமாவாயாக.*]. "த்வாமேவ ஶரணம் ப்ராப்ய நிஸ்தரந்தி" [உன்னையே *ஶரணமடைந்து ஸம்ஸாரத்தைக் கடக்கிறார்கள்.*] "மாமேவ யே ப்ரபத்$_3$யந்தே" [என்னையே *எவர்கள் சரணடைகிறார்களோ...*], "தமேவ சாத்$_3$யம் புருஷம் ப்ரபத்$_3$யே" [*ஆதிபுருஷனாகிய* அவனையே *சரணடைகிறேன்.*], "தமேவ ஶரணம் க$_3$ச்ச" [அவனையே *சரணடை.*], *"நாகணைமிசை நம்பிரான்* சரணே *சரண் நமக்கு" என்று நாராயணன் வேறொன்றையும் அபேக்ஷியாத உபாயமாயிருப்பவனென்பது சொல்லப்பட்டதன்றோ.*

(*நாராயணனே நமக்கே பறைதருவான்*) *"உடையவனன்றோ உடைமையைப்பற்றிக் கவலைகொள்ளுவான்" என்கிறாள்.* (*நமக்கே*) *அவன் கை பார்த்திருக்கும் நமக்கே. 'ஏ' காரம் தங்களிடம் ஒரு கைம்முதலுமில்லையென்பதை அறிவிக்கிறது.* (*பறை*) *"பறை" என்று கைங்கர்யத்தை நினைக்கிறார்கள்.* (*நாராயணனே...பறை தருவான்*) *"பிள்ளைகளுக்குச் சோறுபோடாத தகப்பனும் உண்டோ? சரீரத்தை நோக்காத சரீரியும் உண்டோ?" என்கிறார்கள்.* (*தருவான்*) *'நாம் ஸ்வதந்த்ரமாகக் கைங்கர்யம் செய்ய*

லாகாது; அவன் தரக்கொள்ளவேணும்' என்று உணர்த்து கிருள். "க்ரியதாமிதி மாம் வத$_3$" ['இதைச் செய்' என்று என்னைக் கட்டளையிடு.] என்ருரன்ருே இளையபெருமாள். "ஏவ மற்றமரராட்செய்வார்" என்ருர் ஆழ்வார்.

(பாரோர் புகழ) நம்மையும் அவனையும் சேரவொட்டாதவர்களே நம்மைக் கொண்டாடும்படி; 'இப்பெண்களாலேயன்ருே மழைபொழிந்து பஞ்சம் நீங்கிற்று' என்று கொண்டாடும்படி. (படிந்து) இந்நோன்பிலே ஈடுபட்டு: க்ருஷ்ணனுகிற குளத்திலே அமிழ்ந்து. "நீராடப் போதுவீர் போதுமினே" என்று கூட்டிக்கொள்வது. (ஏலோர்) பாதத்தை நிறைத்துக்கிடக்கும் சொல். 'இப்படி புத்தி பண்ணுங்கள்' என்பதாகவும் கொள்ளலாம். (எம்பாவாய்) எம்முடைய நோன்பைப் பின்சென்று என்றும், எம்முடைய நினைவைப் பின்சென்று என்றும் பொருள்கொள்ளலாம். 'எம்பாவாய் பறைதருவான்' என்று அந்வயம். 'எம்பாவாய்-எம் பிள்ளாய், ஏல்-கேள்; ஓர்-(இதை) நினைப்பாயாக' என்றும் கொள்ளலாம். (எம்பாவாய்) "மேல் காமனை நோற்கையாலே அவன் அகமுடையாளான ரதியைச் சொல்லிற்ருகவுமாம்" என்றும் அருளிச்செய்வர்கள்.

## திருப்பாவை இரண்டாம்பாட்டு

2. வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ! பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடி பாடி
நெய்யுண்ணேம் பாலுண்ணேம் நாட்காலே நீராடி
மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்ருேதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கை காட்டி
உய்யுமாறெண்ணி உகந்தேலோர் எம்பாவாய்.

பதவுரை:—வையத்து—இப்பூவுலகில், வாழ்வீர்காள்—வாழப்பிறந்தவர்களே!, நாமும்—(அவனுலே பேறு என்றிருக்

கும்) நாமும். **உய்யும் ஆறு எண்ணி**—உஜ்ஜீவிக்கும் உபாயத்தை உணர்ந்து, **உகந்து**-மகிழ்ச்சியுடன், **நம் பாவைக்கு**—நம்முடைய நோன்புக்கு, **செய்யும் கிரிசைகள்**—பண்ணும் காரியங்களை, **கேளீரோ**—கேளுங்கள்; **நாம்,-பால் கடலுள்**—திருப்பாற்கடலினுள், **பைய துயின்ற பரமன்**—கள்ளநித்திரை கொள்ளும் புருஷோத்தமனுடைய. **அடிபாடி**—திருவடிகளைப் பாடி, **ஐயமும்**—தகுந்தவர்களுக்குக் கொடுக்கும் பொருளையும், **பிச்சையும்**—(ப்ரஹ்மசாரிகளுக்கும் ஸந்யாஸிகளுக்கும் கொடுக்கும்) பிக்ஷையையும். **ஆந்தனையும்**—(அவர்கள்) கொள்ளவல்லராயிருக்குமளவும், **கை காட்டி**—கொடுத்தும், **நெய் உண்ணோம்**-நெய் புசிக்கமாட்டோம்; **பால் உண்ணோம்**—பாலும் அமுதுசெய்யமாட்டோம்; **நாட்காலே**—விடியற்காலையில், **நீராடி**—ஸ்நாநம் செய்துவிட்டு, **மை இட்டு எழுதோம்**-(கண்ணில்) மையிட்டு அலங்கரித்துக்கொள்ளமாட்டோம்; **மலர் இட்டு முடியோம்**—பூக்களைக்கொண்டு குழலிலே முடியமாட்டோம்; **செய்யாதன**—(பெரியோர்கள்) செய்யாதவற்றை, **செய்யோம்**—செய்யமாட்டோம்; **தீக்குறளை**—(பிறருக்கு) அநர்த்தத்தைத்தரும் கோட்சொற்களை, **சென்று ஓதோம்**—(எம்பெருமானிடம்) சென்று சொல்லமாட்டோம்.

**அவதாரிகை:**—முதற்பாட்டில் "மார்கழித் திங்கள்" என்றுதொடங்கி "சிறுமீர்காள்" என்னும்வரையில் ப்ராப்யமும், "கூர்வேல் கொடுந்தொழிலன்" என்றுதொடங்கி "பறை தருவான்" என்னும்வரையில் ப்ராபகமும் சொல்லப்பட்டது. இங்கு இச்சையையுடைய அதிகாரிக்கு இயற்கையாகவே அமைந்திருக்கும் ஸ்வபாவங்களைச் சொல்லுகிறது. இப்பாட்டில் இச்சையையுடைய அதிகாரி செய்ய வேண்டியவற்றையும், செய்யக்கூடாதவற்றையும் சொல்லுகிறது என்றும் அருளிச்செய்வர்கள்.

**வியாக்கியானம்:**—(வையத்து வாழ்வீர்காள்) வழிபறிக்கும் தேசத்திலே முடிசூடியிருப்பவர்களே! தாழ்வைக் கொடுக்கும் உலகத்திலிருந்தும் வாழ்வையுடையவர்களாயிருப்பவர்களே! 'நெருப்புச் சட்டியிலே தாமரை முளைப்

படுதே' என்று ஆச்சரியப்படுகிறார்கள். 'ஸாதநாநுஷ்டானம் பண்ணும் பூமியிலேயே பலனை அனுபவிக்கும் பாக்யவதிகளே!' என்கிறார்கள். (வையத்து வாழ்வீர்காள்) குணங்கள் பகல் விளக்குப்போலே பிரகாசிக்கும் வைகுண்டத்தில் போய்ச் சிறையிராதே குணங்கள் ஒளிவிடும் இவ்வுலகத்திலிருந்து க்ருஷ்ண குணங்களை அனுபவிக்கப்பெற்றவர்களன்றோ இவர்கள். 'நித்யஸூரிகளைக் காட்டிலும் ஒரு வாழ்ச்சிபெற்றவர்களை இவ்விருள் தருமாஞாலத்திலே கிடைக்கப்பெறுவதே!' என்கிறாள். இங்குள்ள நீர்மையிலே ஈடுபட்டவர்கள் பரமபதத்திலுள்ள மேன்மையையும் விரும்பமாட்டார்களன்றோ. "அச்சுவை பெறினும் வேண்டேன்" என்றும், "கண்டகண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்றும் ஆழ்வார்கள் அருளினார்கள். "**ப$_4$ாவோ நாந்யத்ர க$_3$ச்சதி**" [(உன்னிடத்தில் ஈடுபட்ட) என் நினைவு வைகுண்டநாதனிடமும் செல்லவில்லை.] என்றான் திருவடி. (வாழ்வீர்காள்) இவ்வூரில் இருப்பே வாழ்வாகும். "கடைத்தலையிருந்து வாழும் சோம்பர்" என்றும், "வேங்கடத்தைப் பதியாக **வாழ்வீர்காள்**" என்றுமன்றோ ஆழ்வார்கள் அருளினார்கள். (வாழ்வீர்காள்) அவ்வூரில் பிறந்தும் ஆண்களாயிராதே பெண்களாயிருக்கப்பெற்றவர்களே! பெண்களாயிருந்தும், பருவம் நிரம்பியிராதே அவனோடொத்த பருவத்தையுடைய பாக்யவதிகளே! (வாழ்வீர்காள்) பகவத் விஷயத்தைத் தனியே அநுபவித்தால் ரஸமற்றிருக்கிறதாகையாலே அதை ரஸமாக்கித்தருபவர்களைக் கொண்டாடுகிறார்கள். (வாழ்வீர்காள்) "வாழாட்பட்டு நின்றீருள்ளீரேல்" என்று பெரியாழ்வாரைப்போலே தேடவேண்டாதபடி ஊர் முழுவதும் வாழாட்பட்டவர்களாயிருக்கிறபடி.

(நாமும்) 'அவனாலே அவனைப் பெறவேணும்' என்றிருக்கும் நாமும். அவனைப் பெறவேணும் என்னும் ஆசையால் இருந்தவிடத்திலே இருக்கவொட்டாத நாமும். (நம் பாவைக்கு) நம்முடைய நோன்புக்கு. அவனையும் அவனடியாரையும் அழிப்பதற்காக இந்த்ரஜித் முதலியோர் செய்த

யாகம்போலன்றியே அவனும் அடியார்களும் வாழுகைக்குப் பண்ணும் யாகம். அவனிடம் ஒரு பலனை விரும்பிச் செய்யும் நோன்புபோலன்றியே அவனுக்கு நம்மைக் கொடுத்து அவனையும், அவனுடைய விபூதியையும் உண்டாக்குவதற்காகச் செய்யும் நோன்பு. 'தசரதசக்ரவர்த்தி நாலு ஆஹுதி பண்ணி நாலு ரத்னத்தைப் பெற்றாப்போலே நமக்கும் ஒரு நோன்பு வாய்க்கப்பெறுவதே!' என்கிறார்கள். (செய்யும் கிரிசைகள்) நாம் பொழுது போவதற்காகச் செய்யவேண்டிய காரியங்களை. கிரிசை—க்ரியை. உபாயத்வபுத்தியுடனன்றியே காலக்ஷேபத்துக்காகச் செய்பவை. (செய்யும் கிரிசைகள்) மடல்போலே ஆரம்பித்துத் தவிருமதன்றியே செய்து முடிக்கவேண்டிய காரியங்கள்.

(கேளீரோ) க்ருஷ்ணனைப் பெறவிருக்கிறோம் என்னும் ஆனந்தத்தாலே அவர்கள் மெய்ம்மறந்திருந்தார்கள். 'கேளீரோ' என்று அவர்களை உணர்த்துகிறாள். 'மேய்ச்சல் தரையிலே அசையிடலாமோ? காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டாமோ? இந்த நாலுநாளும் சென்றால் நம்மை ஒருவரையொருவர் சேரவிடுவார்களோ?' என்கிறாள். (கேளீரோ) அவர்களைக் கேட்பித்தாலொழிய உயிர்தரியாளாகையாலே "கேளுங்கள்" என்று யாசிக்கிறாள். ஆசார்ய பதம் நிர்வஹிக்கைக்காகச் சொல்லுகிறாளல்லள்; அவர்களுக்குத் தெரியாததொன்று என்று நினைத்துச் சொல்லுகிறாளல்லள்; தன் செல்லாமையாலே "போ₃த₄யந்த: பரஸ்பரம்" [ஒருவரையொருவர் உணர்த்துகிறவர்கள்.] என்கிற முறையிலே 'கேளீரோ' என்கிறாள். (கேளீரோ) கேட்கையே ப்ரயோஜனமாயன்றோ இருப்பது. "ஸம்ச்ரவே மது₄ரம் வாக்யம்" என்றும், "செவிக்கினிய செஞ்சொல்" என்றும் சொல்லுகிறபடியேயிருக்கை. மஹாபாரதத்திலே லக்ஷத் திருபத்தையாயிரம் க்ரந்தங்களாலும் தர்மார்த்தகாமமோக்ஷங்களைச் சொல்லி "இவற்றுள் நீ எதைப் புருஷார்த்தமாக நினைத்திருந்தாய்?" என்று வைசம்பாயன பகவான் தன் சிஷ்யனை **ஜனமேஜயனைக்** கேட்க, அவன் "நீர் பக

வத் குணங்களைச் சொல்ல நான் கேட்டிருந்ததையே பரம புருஷார்த்தமாக நினைத்திருந்தேன்'' என்றானன்றோ. (கேளீரோ) ''செவிபடைத்த லாபம் பெறவேண்டாமோ?'' என்கிறாள்.

(பாற்கடலுள்...) முதற்பாட்டிலே நாராயணன் என்று ஸ்ரீவைகுண்டத்திலிருப்பைச் சொல்லிற்று. இங்கு அவன் உயிர்களை உய்விப்பதற்காகப் பாற்கடலில் யோகநித்ரை செய்வதைச் சொல்லுகிறது. (பாற்கடலுள்...பரமன்) வேதாந்தங்களில் தலைசிறந்ததான நாராயணானுவாகமும் **'பரமம் ப்ரபு₄ம்'** என்றும் 'நாராயணம்' என்றும் ஸ்ரீவைகுண்டத்திலிருப்பை அனுபவித்து, ''ஸமுத்₃ரேந்தம்'' என்று பாற்கடலிலே சாய்ந்தருளின அழகிலே ஈடுபட்டதன்றோ. (பையத் துயின்ற) ''கள்ளநித்திரை கொள்கின்ற'' என்கிற படியே தூக்கம் என்று பேராய் ஜகத்ரக்ஷணத்துக்கு உபாயத்தைச் சிந்தித்துக் கிடக்கிறபடி. (பரமன்) ''நம் பாற்கடல் சேர்ந்த பரமன்'' என்ற **ஆழ்வார்** வாக்யத்தையும் **''பரமம் ப்ரபு₄ம்**...ஸமுத்₃ரேந்தம்'' என்ற வேதாந்த வாக்யத்தையும் உணர்த்துகிறது. பரமன்–ஒப்புயர்வற்றவன். திருவனந்தாழ்வான்மேலே சாய்ந்தவுடன் வடிவில் பிறந்த ஒளியைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். அங்யப்ரயோஜனங்களைக்கொண்டு அகலுமவர்களை ரக்ஷிப்பதற்காகப் படுகாடு கிடப்பவனாகையாலே குணத்தின் ஏற்றத்தைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். (பரமன்) பரமபதத்திலே வீற்றிருக்குமிருப்பைக்காட்டிலும், திருப்பாற்கடலில் சாய்ந்தருளினபோது அழகுமிக்கிருக்கிறபடி. ''கிடந்ததோர் கிடக்கை'' என்றும், ''கோலம் திகழக் கிடந்தாய்'' என்றும் ஆழ்வார்களும் இதை அனுபவித்தார்களன்றோ.

(அடி பாடி) அவனுடைய மேன்மைக்குத் தோற்று அவன் திருவடிகளைப் பாடி. (பாடி) '''நம்மை ரக்ஷிக்கை அவனுடைய பாரம்' என்று இராமல் நம்முடைய ரக்ஷணத்துக்கு நாம் முயற்சி செய்வதன்மூலம் நம்முடைய ஸ்வரூபத்தையும் அவனுடைய ஸ்வரூபத்தையும் அழிக்கக்கடவோம்'' என்கிறார்கள். ஆற்றாமை ஸ்வரூபத்தைப் பார்க்கவொட்டாதன்றோ.

(அடிபாடி) கைக்குழந்தைக்குத் தாயின் முலேயே தாரகமா யிருப்பதுபோல் இவர்களுக்கும் எம்பெருமானுடைய திருவடிகளே தாரகம். **"செவ்வடி** செவ்வி திருக்காப்பு" என்றவர் திருமகளன்றோ. (பாற்கடலுள்...அடிபாடி) க்ருஷ்ணனுடைய திருவடிகளைப் பாடாதே க்ஷீராப்திநாதனுடைய திருவடிகளைப் பாடுவதற்குக் கருத்தென்னென்னில்: "நோன்புநோற்கப் புகுந்தவர்கள் க்ருஷ்ணனைப் பாடுகிறார்கள்" என்று இடையர்கள் ஸந்தேஹிப்பார்களாகையால் ஒரு தைவத்தின் பேரையிட்டுப் பாடுகிறார்கள். மேலும், க்ஷீராப்திநாதனேயன்றோ க்ருஷ்ணனாகத் திருவவதரித்தது.

**"ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந:।**
**நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம்॥"**

[க்ஷீராப்திநாதனான ஸ்ரீமந்நாராயணனன்றோ ஆதிசேஷனாகிய படுக்கையைவிட்டு மதுராபுரிக்கு க்ருஷ்ணனாக வந்திருக்கிறான்.] என்று ஹரிவம்சத்திலும் சொல்லப்பட்டதன்றோ.

(பாடி நெய்யுண்ணோம்...) எம்பெருமானைப் பாடுவதாகிற பரமபோக்யவஸ்துவை அடையப்பெற்ற நாங்கள் இவ்வுலகத்திலுள்ள போக்யவஸ்துக்களை புஜிக்கமாட்டோம்- 'உண்டார்க்கு உண்ணவேணுமோ?' என்கிறார்கள். 'பாலைக் குடித்தபின் வேப்பங்காயைத் தின்பாருண்டோ?' என்கிறார்கள். பகவதனுபவத்தையே உணவாகக் கொள்ளுபவர்களன்றோ இவர்கள்.

**"கண்ணா! நான்முகனைப் படைத்தானே!**
**காரணா! கரியாய்! அடியேன் நான்**
**உண்ணாநாள் பசியாவதொன்றில்லை**
**ஓவாதே நமோ நாரணாவென்று**
**எண்ணாநாளும் இருக்கெசுச்சாம**
**வேத நாண்மலர் கொண்டு உன் பாதம்**
**நண்ணாநாள் அவை தத்துறுமாகில்**
**அன்றெனக்கவை பட்டினி நாளே"**

என்றவர் மகளன்றோ. "உண்ணும் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்" என்றும்,

"கூறை சோறிவை வேண்டுவதில்லை" என்றும் அருளினர்களன்றோ. "பாதே₂யம் புண்ட₃ரீகாக்ஷ நாம ஸங்கீர்த்தநாம்ருதம்" [புண்டரீகாக்ஷனுடைய திருநாமஸங்கீர்த்தனம் செய்வதாகிற அம்ருதமே கட்டுச்சோறு.] என்றல்லவோ காருட புராணம் கோஷித்தது. (நெய்யுண்ணோம் பாலுண்ணோம்) இடக்கையும் வலக்கையும் அறியாத ஆய்ச்சிகளாகையாலே 'நெய் குடியோம்; பால் குடியோம்' என்னாதே 'நெய்யுண்ணோம் பாலுண்ணோம்' என்கிறார்கள். 'உண்ண' என்று குடிக்கைக்குச் சாதிப்பேச்சு. (நெய்யுண்ணோம்...) "ஈட்டிய வெண்ணெய் தொடுவுண்ணப்போந்து' என்கிறபடியே நித்யஸூரிகளுக்குத் தலைவனாயிருப்பவன் நம்முடைய நெய் பால் முதலியவற்றைக் களவுசெய்தாவது உண்பதற்காகவன்றோ அவதரித்திருக்கிறான்; அப்படியிருக்கும்போது அவனுக்கு தாரகமான அவற்றை நாம் உண்ணலாமோ?" என்கிறாள். (நெய்யுண்ணோம்...) 'சரீரபூதர்களான நாம் பட்டினி கிடந்தால் சரீரியான அவன் உபேக்ஷித்திருப்பானோ?' என்கிறாள்.

"தம் விநா கைகயீபுத்ரம் ப₄ரதம் த₄ர்மசாரிணம்।
ந மே ஸ்நாநம் ப₃ஹுமதம் வஸ்த்ராண்யாப₄ரணாநி ச॥"

[தருமநெறியில் நடப்பவனும், கைகயீபுத்ரனுமான அந்த பரதனில்லாமல் எனக்கு ஸ்நாநமும், வஸ்த்ரங்களும், ஆபரணங்களும் ருசிக்கமாட்டா.] என்றவன் அபலைகளான இவர்கள் 'நெய்யுண்ணோம் பாலுண்ணோம்' என்றால் பேசாமலிருப்பனோ? (நாட்காலே நீராடி) க்ருஷ்ணனைப்பிரிந்ததால் ஏற்பட்ட தாபம்தீர விடியற்காலையில் குளிக்கக்கடவோம்; ஸ்வரக்ஷணத்திலே ப்ரவர்த்திப்பதன் மூலம் அவனுடைய ஸ்வரூபத்தை அழிக்கப்பார்க்கிறார்கள் (மையிட்டெழுதோம்) 'மையகண்ணாள்' எனப்பட்டவர்களாகையாலே இவர்கள் அழகுக்காக மையிடவேண்டியதில்லை. இவர்களுக்கு மையிட்டுத் தன் ஸத்தையைப்பெறுபவன் அவன். அதற்கு இடங்கொடோம் என்கிறார்கள். (மலரிட்டு நாம் முடியோம்) 'சூடிக்களைந்தன சூடும் இத்தொண்டர்களோம்' என்னும்

நாம் அவன் நம்மை உபேக்ஷித்திருக்கும்போது பூச்சூட மாட்டோம் என்கிருர்கள். (நாம்முடியோம்) அவன் வந்து மலர்சூட்டினுலல்லது செய்யலாவதில்லை; நாமாக மலர் முடிக்கமாட்டோம். (செய்யாதன செய்யோம்) முன்னோர் கள் செய்யாதவற்றைச் செய்யமாட்டோம். 'பஞ்சலக்ஷங் குடியிலுள்ள பெண்களில் ஒருத்தி வாராவிடிலும் க்ருஷ்ண னிடம் போகமாட்டோம்' என்று கருத்து. அவனடியார் களை முன்னிட்டுக்கொண்டல்லவோ அவனைப் பற்றவேண் டும். பரதாழ்வானை முடிசூடச் சொன்னபோது 'இக்குடி யில் இதுவரையில் ஒருவரும் செய்யாததை நான் செய்ய மாட்டேன்' என்றானன்றோ. கூரத்தாழ்வானை "நீங்கள் ஏன் மற்ற தெய்வங்களைப் பணிவதில்லை" என்று சிலர் கேட்க, "எங்கள் பூர்வர்கள் செய்து போந்திலர்கள்" என்று பதிலளித்தாராம். (தீக்குறளை சென்றோதோம்) பிறர்க்குத் தீங்கை விளைவிக்கும் பொய்வார்த்தைகளைப் பேசமாட் டோம்; கோட் சொல்லமாட்டோம். நாம் ஒருவர்க்கொரு வர் 'பேய்ப்பெண்ணே' 'நாயகப்பெண்பிள்ளாய்' என்று பெயரிட்டழைத்துக்கொண்டதை க்ருஷ்ணனிடம் சொல்ல மாட்டோம் என்று கருத்து. பத்துமாதம் படாதபாடு படுத்திய ராக்ஷஸிகளைப்பற்றி ஸ்ரீராமபிரானிடம் கோட் சொல்லவில்லை பிராட்டி. அப்படியிருக்கும்போது அனு கூலர்களைப்பற்றிக் கோட் சொல்லுவார்களோ இவர்கள்.

(ஐயமும் பிச்சையும்...) ஐயம்—தகுந்தவர்கள் விஷயத் தில் மிகுதியாகக் கொடுப்பது; பிச்சை—பிக்ஷை; ப்ரஹ்மசாரி களுக்கும் ஸந்யாஸிகளுக்கும் கொடுப்பது. இங்கு ஐய மாவது,-க்ருஷ்ணனுபவம் பண்ணவேணுமென்றிருப்பார்க்கு அவனை அனுபவிப்பிக்கை; பிச்சையாவது,-அவனடியார்களை அனுபவிக்கவேணுமென்றிருப்பார்க்கு அவர்களை அனுபவிப் பிக்கை. (ஆந்தனையும்) அவர்கள் கொள்ளவல்லராந்தனை யும்; யாசிப்பார் இருக்கும்வரையிலும். (கைகாட்டி) எல்லாவற்றையும் கொடுத்தாலும் 'நாம் கைகாட்டினோமே யொழியக் கொடுக்கவில்லை' என்றிருக்கை; இவர்களுக்கு க்ருஷ்ணனுபவம் பண்ணிவைத்தும் 'ஒன்றும் செய்யப்

பெற்றிலோம்' என்றிருக்கை. ஐயம்—பகவத் விஷயமான ஜ்ஞானம்; பிச்சை—ஆத்மஸ்வரூப விஷயமான ஜ்ஞானம் என்றும் பொருள் கொள்ளலாம்.

(உய்யும் ஆறு எண்ணி) இப்படி உஜ்ஜீவிக்கும் வழிகளை எண்ணி.

**"அஸந்நேவ ஸ ப₄வதி । அஸத் ப்₃ரம்ஹேதி வேத₃ சேத் ।**
**அஸ்தி ப்₃ரம்ஹேதி சேத் வேத₃ । ஸந்தமேநம் ததோ விது₃: ॥"**

[ப்ரஹ்மத்தைப்பற்றிய ஜ்ஞானமில்லையாகில் அவன் இல்லாதவனாகிறான்; ப்ரஹ்மஜ்ஞானமுள்ளவனாகில் அதிலிருந்தே இவனை உள்ளவனாக அறிகிறார்கள்.] என்கிறபடியே பகவத்விஷயத்தில் ஈடுபடுகையே சேதனருக்கு உய்வுபாயமாகும். (எண்ணி உகந்து) இவ்விஷயத்தில் மநோரத மாத்ரமே பரமபோக்யமாயிருக்கும். "நின்புகழில் வைகும் தம் சிந்தையிலும் மற்றினிதோ நீயவர்க்கு வைகுந்தம் என்றருளும் வான்" என்றல்லவோ **ஆழ்வார்** அருளினார். "உகந்து செய்யும் கிரிசைகள் கேளீரோ" என்று அன்வயம்.

## திருப்பாவை மூன்றாம்பாட்டு

**3. ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி**
**நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீர் ஆடினால்**
**தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து**
**ஓங்கு பெருஞ் செந்நெல் ஊடு கயல் உகள**
**பூங்கு வளைப் போதில் பொறி வண்டு கண் படுப்பத்**
**தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலை பற்றி**
**வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்**
**நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்.**

**பதவுரை:—ஓங்கி** — உயர வளர்ந்து, **உலகு**—மூன்று உலகங்களையும், **அளந்த**—(தன் திருவடிகளாலே) அளந்து கொண்ட, **உத்தமன்**—புருஷோத்தமனுடைய, **பேர்**—திருநாமங்களை, **நாங்கள் பாடி**-(திருநாமத்தைச் சொல்லாவிடில் உயிர் தரிக்காத) நாங்கள் பாடி, **நம் பாவைக்கு சாற்றி**—

எங்கள் நோன்புக்கு என்றொரு வ்யாஜத்தையிட்டு, **நீராடினால்**-ஸ்நாநம் செய்தால், **நாடு எல்லாம்**--தேசமெங்கும், **தீங்கு இன்றி**—ஒரு தீமையுமில்லாமல், **திங்கள்** — மாதந் தோறும், **மும்மாரி பெய்து**—மூன்று மழை பெய்திட, (அதனால்) **ஓங்கு பெரும் செந்நெல் ஊடு**—உயர்ந்து பருத்த செந்நெற்பயிர்களின் நடுவே, **கயல் உகள**—கயல் மீன்கள் துள்ள, **பொறி வண்டு**—அழகிய வண்டுகள், **பூம் குவளைப் போதில்**—அழகிய நெய்தல் மலரிலே, **கண் படுப்ப**—உறங்க, **வள்ளல்**—வண்மையை உடையனவாய், **பெரும் பசுக்கள்**—பெருத்திருப்பனவான பசுக்கள், **தேங்காதே**—ஏங்காமல், **புக்கு**—(பால் கறக்கப்) புகுந்து, **இருந்து**—நிலையாக இருந்து, **சீர்த்த முலை**—பருத்த முலைகளை, **பற்றி**—(இரு கைகளாலும்) அணைத்து, **வாங்க**—இழுக்க, **குடம் நிறைக்கும்**—குடங்களை நிறைக்கும்; **நீங்காத செல்வம்** — (இப்படிப்பட்ட) அழிவில்லாத ஸம்பத்து, **நிறைந்து**—நிறைந்திடும், (ஏல் ஓர் எம்பாவாய்-அசைகள்.)

**அவதாரிகை:**-தங்கள் நோன்பாலே லோகத்துக்குப் பலிக்கும் பலம் இப்பாட்டில் சொல்லப்படுகிறது. முதற் பாட்டில் 'நாராயணனே' என்று ஸ்ரீவைகுண்டத்திலிருப்பு அனுபவிக்கப்பட்டது; இரண்டாம் பாட்டில் அவதாரம் செய்வதற்காகத் திருப்பாற்கடலில் சாய்ந்தருளினபடியை அனுபவித்தார்கள். இப்பாட்டில் திரிவிக்கிரமனாக அவதரித்துத் திருவுலகளந்தருளிய விருத்தாந்தத்திலே ஈடுபடுகிறார்கள்.

**வியாக்கியானம்:**-(ஓங்கி) திருப்பாற்கடலில் ப்ரஜைகளை ரக்ஷணம் செய்யப்பெறாமையாலே பனிப்பட்ட மூங்கில் போலே சாய்ந்து கிடந்தவன், மஹாபலியாலே நோவுபட்ட தேவர்களின் கூக்குரல் கேட்டவுடன், ஸூர்யகிரணம்பட்ட மூங்கில்போலே ஓங்கியபடி. பிறர் காரியம் செய்யப் பெறுகையாலே வளர்ந்தருளினானன்றோ வாமனன். "உவந்த உள்ளத்தனாய் உலகமளந்து" என்று திருப்பாணாழ்வாரும் அருளினார். (ஓங்கி) "இந்த்ரன் கண்ணீர் கண்டு சிரும்பின

படியும், மஹாபலி நீர் வார்த்தவாறே வளர்ந்தபடியும்'' என்று ஆறாயிரப்படி. அதாவது:— இந்திரனின் கண்ணீரைக்கண்டு வருந்தி வாமனனாகச் சுருங்கினான் எம்பெருமான்; மஹாபலி நீர் வார்த்தவுடன் உண்டான ஆனந்தத்தாலே திரிவிக்கிரமனாக வளர்ந்தான் என்று தாத்பர்யம். (ஓங்கி) ''ஸதை₃கரூபரூபாய்'' என்கிறபடியே விகாரமற்றதான அப்ராக்ருதசரீரமன்றோ விகாரத்தை அடைந்தது. ஸம்ஸாரிகளின் விகாரம் கர்மானுகுணமாகையாலும், தமக்காகவாகையாலும் தோஷத்தைக் கொடுக்கும்; இவனுடைய விகாரம் கிருபையினாலேயாகையாலும், பிறர்க்காகவாகையாலும் குணத்தைக் கொடுக்கும்.

''வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்₄ருஶம் ப₄வதி து₃:க்கி₂த:''

[மனுஷ்யர்களுடைய வ்யஸனங்களில் அவர்களைக்காட்டிலும் ஸ்ரீராமன் துக்கப்படுகிறான்.] என்கிறபடியே துக்கமும் இவன் விஷயத்தில் குணமாகவன்றோ கருதப்படுகிறது. (உலகு அளந்த) 'தன் செல்லாமையாலே, விலக்காமையே பற்றாசாக வஸிஷ்ட சண்டாளவிபாகமற உலகெல்லாமளந்தவனன்றோ இவன்' என்கிறார்கள். '' 'அடிச்சியோம் தலைமிசை நீ அணியாய் ஆழியங்கண்ணா! உன் கோலப் பாதம்' என்று ஞானிகள் ஆசைப்படும் திருவடிகளைக்கொண்டு காடு மேடெல்லாம் அளப்பதே!'' என்று ஈடுபடுகிறார்கள். உறங்குகிற குழந்தையை அணைத்துக் கிடந்து உகக்கும் தாயைப்போலே இவற்றை அளப்பதைத்தன் பேறாக நினைத்திருக்கிறான் எம்பெருமான். இந்த குணதிக்யத்தினாலேயே வேதங்களும், வைதிகர்களும், ஆழ்வார்களும் இச்செயலிலே ஈடுபட்டனர். அதிமானுஷசேஷ்டிதங்களாலும் ஆஶ்ரிதபக்ஷபாதத்தாலும், வடிவழகினாலும், வாத்ஸல்யத்தாலும் க்ருஷ்ணாவதாரத்தோடு ஒத்திருக்கையாலே ஸ்ரீவாமனாவதாரத்தை அனுபவிக்கிறார்கள். (உலகளந்த உத்தமன்) ''இசையாதார் பக்கல் மேல் விழுமவன் இசைந்தார் பக்கல் மேல் விழச்சொல்லவேணுமோ?'' என்கிறார்கள்.

(உத்தமன்) உலகளந்ததை இவர்களுக்கு உபகாரம் செய்ததாக எண்ணாமல் தன் பேறாக நினைத்திருப்பவன்.

ஒரு ப்ரயோஜனமுமில்லாமல் பரஹிம்ஸை செய்பவன் அதமாதமன்; பரஹிம்ஸையினுல் தன் வயிறு வளர்க்குமவன் அதமன்; 'பிறரும் ஜீவிக்கவேணும்; நாமும் ஜீவிக்கவேணும்' என்றிருக்குமவன் மத்யமன்; தன்னை அழித்தாவது பிறர்க்குதவுமவன் உத்தமன்; ஸகலபலப்ரதனை இவன் தன் ஸ்வரூபத்தை அழித்து யாசகனாக மாறித் தன்னையடைந்தார்க்கு உதவினுகையால் இவனே உத்தமனெனத்தகுந்தவன்.

''ந தே ரூபம் ந சாகாரோ நாயுதாநி ந சாஸ்பதம்|''

[உன்னுடைய ஸ்வரூபமும் திவ்யமங்களவிக்ரஹமும், ஆயுதங்களும், இருப்பிடமும் உனக்கல்ல; (பக்தர்களுக்காகவே)] என்றல்லவோ ஜிதந்தே ஸ்தோத்ரத்தில் சொல்லப்பட்டது. (உத்தமன்) தனக்காகவும், தனக்கும் பிறர்க்குமாகவுமிராதே தென்றலும் நிலவும்போலே பிறர்க்கேயாயிருக்கை. (உலகளந்த உத்தமன்) உலகளந்த விருத்தாந்தத்திலிருந்தே இவன் ஸர்வாதிகனென்று தோற்றுகிறது என்று பாவம். உயரச்சென்ற திருவடியை ஒருவன் கழுவினன்; மற்றொருவன் அந்த ஸ்ரீபாததீர்த்தத்தைத் தலையிலே தரித்தான்; இம்மூவரில் எவன் **உத்தமன்** என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? எல்லாருடைய தலைகளிலும் காலை வைத்தவன் உத்தமனே? திருவடியின் கீழே துகையுண்டவர்கள் உத்தமரோ? (உத்தமன் பேர் பாடி) இவனுடைய ஸர்வாதிகத்வத்தையும், ஸௌலப்யத்தையும், வாத்ஸல்யத்தையும், மற்றுமுள்ள குணங்களையும் காட்டும் திருநாமங்களைப் பாடி. முதற்பாட்டில் 'நாராயணன்' என்கையாலும், இரண்டாம்பாட்டில் 'பரமன்' என்று அத்திருநாமத்தின் அர்த்தத்தை அநுஸந்திக்கையாலும், இப்பாட்டில் அத்திருநாமத்தில் சொல்லப்பட்ட வ்யாப்தியை நினைவுறுத்தும் திரிவிக்கிரம விருத்தாந்தத்தை அனுஸந்திக்கையாலும் இங்கு 'உத்தமன் பேர்' என்று திருமந்திரத்தைச் சொல்லுகிறது. (உத்தமன் பேர்) பிறரைக்காட்டிலும் அவன் மேலானவனயிருப்பதுபோல்

அவனைக்காட்டிலும் திருநாமம் உத்க்ருஷ்டமாயிருக்கிறது. கட்டிப்பொன்போலே அவன்; பணிப்பொன்போலே திருநாமம். அவனை இல்லை செய்பவர்களும் திருநாமங்கொண்டு காரியங்கொள்ளுவர். நாஸ்திகர்களும் வியாதி முதலியவை நீங்குவதற்காகத் திருநாமத்தைச் சொல்லுவதுண்டன்றோ. தாயை அடிக்கும் தடியனும் கை நொந்தால் 'அம்மா' என்றல்லவோ சொல்லுவது. திருநாமம் சொல்ல ஒரு யோக்யதை ஸம்பாதிக்க வேண்டா. இதுவே எல்லா யோக்யதையையும் பண்ணிக்கொடுக்க வல்லது. (பேர் பாடி) திருநாமத்தை ஸ்வயம் ப்ரயோஜனமாகப் பாடி. சிலர் திருநாமத்தைக்கொண்டு க்ஷுத்ர புருஷார்த்தங்களைப் பெறுவர்; அவர்கள் முத்தைக் கொடுத்துப் பாக்கு வாங்குபவர்களை ஒப்பர்; சிலர் திருநாமத்தைக்கொண்டு மோக்ஷம் பெறுவர். அவர்கள் முத்தை விலைக்கு விற்கும் வியாபாரிகளைப் போன்றவர். சிலர் திருநாமத்தை ஸ்வயம் ப்ரயோஜனமாகப் பாடுவர். அவர்கள் முத்தை ஸ்வயம் ப்ரயோஜனமாக அணியும் அரசர்களைப் போன்றவர். (பேர் பாடி) 'இந்திரன் இழந்த பூமியை அடைந்தான்; மஹாபலி பூமியை இழந்தான்; இச்செய்கைக்குத் தோற்றுப் பல்லாண்டு பாடினார் யாருமில்லை. அக்குறை தீர இன்று பல்லாண்டு பாடுவோம்' என்கிறார்கள். (பேர் பாடி) திருநாமத்தை ஆர்வத்துடன் பாடி. "ஆர்வத்தால் பாடாதார் பாட்டென்றும் பாட்டல்ல" என்றல்லவோ திருமங்கையாழ்வார் பாட்டின் லக்ஷணத்தை அருளிச்செய்தார்.

(நாங்கள்) திருநாமத்தை வாயாலே சொல்லாவிடில் உயிர்தரிக்கமாட்டாத நாங்கள். 'நெஞ்சைக் காவலிடுகிற ஊரில் வாயாலே பாடப்பெற்ற நாமே பாக்யவதிகள்' என்று தங்களைக் கொண்டாடுகிறார்கள். (நாங்கள்) பாடி மடியேற்காத நாங்கள். "பாடி-நெய்யுண்ணோம்" என்றவர்களன்றோ. (நம் பாவைக்குச் சாற்றி...) ஊரிலுள்ளார்க்கு 'நோன்பு' என்று ஒரு வ்யாஜத்தையிட்டு க்ருஷ்ணனுடன் கூடினால்.

(நம் பாவைக்கு) ப்ராப்யமும், ப்ராபகமும் க்ருஷ்ணனே யான நம்முடைய நோன்புக்கு. (பேர் பாடி–நீராடினால்) அவனுக்கும் நமக்குமுள்ள ஸம்பந்தத்தையறிந்து அவனை அநுபவித்தால். (நீராடினால்) விரஹதாபம்போகக் குளித்தால்.

(தீங்கின்றி நாடெல்லாம்) இது முதல் நோன்பினால் ஊராருக்கு வரும் பலன்களைச் சொல்லுகிறது.

**"யத்ராஷ்டாக்ஷர ஸம்ஸித்$_3$தே$_4$ா மஹாபா$_4$கே$_3$ா மஹீயதே।**
**ந தத்ர ஸஞ்சரிஷ்யந்தி வ்யாதி$_4$து$_3$ர்ப்பி$_4$க்ஷதஸ்கரா:॥"**

[அஷ்டாக்ஷரஸித்தியடைந்த மஹான் எவ்விடத்திலிருக்கிறானோ அங்கு வ்யாதி, பஞ்சம், திருடர்கள் முதலியவை ஸஞ்சரிப்பதில்லை.] என்று சொல்லப்பட்டிருக்கும்போது அஷ்டாக்ஷரஸித்தியடைந்தவர்கள் இவ்வளவு பேரிருக்கும் அந்நாட்டில் தீங்கின்றியிருப்பதைச் சொல்லவும்வேண்டுமோ? 'நாராயணனே...' என்று முதற்பாட்டிலேயே திருமந்திரத்தின் அர்த்தத்தை அனுஸந்தித்தவர்களன்றோ இவர்கள். (திங்கள் மும்மாரி பெய்து) அதிக மழையும், வரட்சியுமில்லாமலிருக்கை. ஒன்பதுநாள் வெய்யிலும் ஒருநாள் மழையுமாயிருக்கை. **"நிகாமே நிகாமே ந: பர்ஜந்யோ வர்ஷதி"** [நாம்விரும்பியபோதெல்லாம் வருணன் மழைபொழிகிறான்.] என்று வேதத்தில் சொல்லியபடியேயிருக்கை. (ஓங்கு பெரும் செந்நெல்) கீழ்ச்சொன்ன திருவுலகளந்தருளிய ஸர்வேச்வரனோடு செந்நெற்பயிர்களும் ஒத்திருக்கின்றன. விடியற்காலையில் நட்டு ஸூர்யன் உச்சிப்பட்டவுடன் பார்த்தால் கைகவித்துப் பார்க்கவேண்டியிருக்கை. மாரீசன் பயத்தினாலே 'ஸ்ரீராமனை மரங்கள்தோறும் பார்க்கிறேன்' என்றான். இவர்கள் அன்பினாலே பார்ப்பவற்றையெல்லாம் திரிவிக்கிரமனாகப் பார்க்கிறார்கள். "நிற்கின்றதெல்லாம் நெடுமால்" என்பவர்களன்றோ. (பெருஞ் செந்நெல்) ஆகாசத்தை அளாவி நிற்பதுமட்டுமோ? ஒரு கதிரே ஒரு செய்முழுதும் அடைக்கும்படியன்றோ பெருத்திருக்கின்றன. "செய்கொள் செந்நெலுயர் திருவண் வண்டூர்" என்று நம்மாழ்வார் அருளியது

இங்கு அனுஸந்திக்கத்தக்கது. (ஊடு கயல் உகள) திருவுலகளந்தருளின எம்பெருமானைக்கண்டு ஜாம்பவான் முதலிய அனுகூலர்கள் ப்ரீதிக்குப் போக்குவிட்டு ஸஞ்சரித்தாப்போலே ஓங்கு பெருஞ்செந்நெல்லைக்கண்டு கயல்கள் திரிகிறபடி. "பள்ளச் செறுவில் கயலுகள" என்றும், "வண்பொழிலினூடே வலங்கொண்டு கயலோடி விளையாடு நாங்கூர்" என்றும் **திருமங்கைமன்னன்** அருளியதை அனுஸந்திப்பது. (ஊடு கயலுகள) வைரத்தூண்போலே நெற்பயிர்கள் நிற்கையாலே நேரே ஸஞ்சரிக்கப்பெறாதே ஓருக்கடித்து உலாவுகின்றன.

(பூங்குவளைப் போதில்) பூத்த குவளைப் புஷ்பத்திலே; அழகிய குவளைப் பூவிலே. 'குவளைப்பூ அலர்ந்த காலத்திலே' என்றும் பொருள் கொள்ளலாம். போது:— (1) புஷ்பம்; (2) காலம். (பொறி வண்டு கண் படுப்ப) அழகிய வண்டுகள் உறங்க. (ஊடு கயலுகள... பொறி வண்டு கண் படுப்ப) குவளைப்பூவில் மதுவுண்பதற்காக வண்டுகள் செல்ல, கயல் ஊடே உகள, அதனாலே செந்நெல்லும் குவளையும் அசைய, தூங்கு மெத்தையிலே உறங்கும் ராஜபுத்ரர்களைப்போலே வாயில் மதுவோடே வண்டுகள் கண் வளருகிறபடி.

இது வயலின் செழிப்பு; இனி ஊரின் செழிப்பைச் சொல்லுகிறது. (தேங்காதே புக்கிருந்து) கையிலே மிகவும் பலமுள்ளவர்களும் இந்தப் பசுக்களைக் கறக்கப்புகுவதற்குத் தயங்குவார்கள்; கறப்பதற்கென்று புகுந்துவிட்டால் பல நாட்களானாலும் பால் வற்றாதபடியன்றோ இருப்பது. இந்தப் பசுக்களின் பெருமையை அறிந்தவர்களாகையாலே கறக்கத் துணிவார் ஆருமில்லை. ஹனுமான் கடலைத்தாண்டுவதற்குத் துணிந்தாப்போலே துணிந்து கறக்கவேண்டும்படியாயிருக்கிறது. (தேங்காதே) முத்துக்கு முழுகுமவர்கள் கடலுக்கு பயந்துமுடியுமோ? (இருந்து) ஒருதடவை கறப்பதற்கென்று புகுந்துவிட்டால் பின் எழுந்திருக்க மார்க்கமில்லை. பால் வற்றினாலன்றோ எழுந்திருக்கலாவது. (சீர்த்த

(முலை) முலைகளை விரலாலே பிடிக்கவொண்ணாது; இரண்டு கையாலும் அணைத்துக் கறக்கவேண்டும்படி கனத்திருக்கை. (பற்றிவாங்க) வாங்க—வலிக்க; பற்றி இழுக்க என்று பொருள். 'வாங்க' என்பதைக் கைவாங்க என்றும் பொருள் கொள்ளலாம். அதாவது: ஒருதடவை பற்றிக் கைவிட்டால் பல குடங்களை நிறைக்கும் என்று தாத்பர்யம். (பற்றி வாங்கக் குடம் நிறைக்கும்) குடங்களை வாங்க வாங்க நிறைத்துக்கொண்டே இருக்கும் என்றும் பொருள் கொள்ளலாம். குடமிடாவிடில் பசுவின் குற்றமன்றே. இச்சையுடையவர்கள் ஸர்வேச்வரனைப்பற்றிப் பலம்பெறுவது போலே இப்பசுக்கள் விஷயத்திலும்.

(வள்ளல்) முன் பால் தரும் பெருமையைச்சொல்லிற்று. இங்கு சிறு பிள்ளைகளுக்கும் தன்னையே கொடுத்துக்கொண்டு நிற்கும் பெருமையைச் சொல்லுகிறது. க்ருஷ்ணனுடைய ஸ்வபாவம் இவற்றுக்கும் உண்டாயிருக்கிறது. யாரேனும் இவன் கழுத்திலே ஓலைகட்டி "தூது போ" என்றால் போமா போலே, இவையும் சிறுபிள்ளைகளுக்கும் கட்டவும் அடிக்கவுமாம்படி தம்மைக் கொடுத்துக்கொண்டு நிற்கின்றன. (பெரும் பசுக்கள்) புல்லும் தண்ணீரும் உணவாக வளர்ந்தவையன்றிக்கே கண்ணனுடைய குழலோசையையும் அவனுடைய ஸ்பர்சத்தையும் உணவாகக்கொண்டு வளர்ந்தவையாகையால் ஐராவதம்போலேயும், ஸ்ரீராமபிரானுடைய யானையாகிய சத்ருஞ்ஜயனைப்போலேயும் பெருத்திருக்கிறபடி.

(நீங்காத செல்வம் நிறைந்து) 'அழிவில்லாத செல்வம் நிறைந்திடும்படி குடம்நிறைக்கும்' என்று அந்வயம். 'வள்ளல் பெரும்பசுக்கள் குடம்நிறைக்கும்; இப்படி நீங்காத செல்வம் நிறைந்திடும்' என்றும் பொருள் கொள்ளலாம். 'நிறைந்திடும்' என்பது 'நிறைந்து' என்று குறைந்துகிடக்கிறது. (நீங்காத செல்வம்) ஓங்கியுலகளந்தவன் அளித்த செல்வமாகையாலே நீங்காதிருக்கிறபடி. (நீங்காத செல்வம்) புண்யத்தினால்வரும் செல்வமோ இது? ஸர்வேச்வரனுடைய க்ருபை

*யினுல்வரும் செல்வமோ இது? அவனுடைய செல்வத்துக்கும் காரணமான பிராட்டியின் கிருபையினுல் வந்ததன்றோ.*

**"பாபாநாம் வா ஶுபா₄நாம் வா வத₄ார்ஹாணும் ப்லவங்க₃ம |
கார்யம் கருணமார்யேண ந சச்சிந்நாபராத்₄யதி ||"**

*[வானர! பாபிகளாயிருந்தாலும், புண்யவான்களாயிருந்தாலும், கொல்லத்தக்கவர்களாயிருந்தாலும், அவர்கள் விஷயத்தில் குணவாஞயிருப்பவன் கிருபைசெய்யவேண்டும். குற்றம் செய்யாதவன் எவனுமில்லையே.] என்றவளுடைய கடாக்ஷத்தாலே' வந்ததாகையாலே 'நீங்காத செல்வ' மாயிருக்கிறது.*

## திருப்பாவை நான்காம்பாட்டு.

**4. ஆழி மழைக்கண்ணு! ஒன்று(ம்) நீ கை கரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொ(டு) ஆர்த்தேறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய் கறுத்துப்
பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரி போல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கமுதைத்த சரமழை போல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோரெம்பாவாய்.**

**பதவுரை:**—**ஆழி**—*கடல்போலே கம்பீரமான ஸ்வபாவத்தையுடைய,* **மழைக்கண்ணு!**—*மழைக்குத் தலைவனை வருண தேவனே!,* **நீ**—*நீ,* **ஒன்றும்**—*சிறிதும்,* **கை கரவேல்**—*ஒளிக்கக் கூடாது;* **ஆழியுள் புக்கு**—*ஸமுத்திரத்தினுள் புகுந்து,* **முகந்து கொடு**— *(அங்குள்ள நீரை) மொண்டுகொண்டு,* **ஆர்த்து**—*இடிஇடித்துக்கொண்டு,* **ஏறி**—*ஆகாசத்தில் ஏறி,* **ஊழி முதல்வன்**—*காலம் முதலிய ஸகலபதார்த்தங்களுக்கும் காரணபூதனை எம்பெருமானுடைய,* **உருவம் போல்**—*திருமேனிபோல்,* **மெய் கறுத்து**—*உடம்பு கறுத்து,* **பாழி அம் தோள் உடை**—*பெருமையையும் அழகையும் கொண்ட*

*தோளையுடையவனும்,* **பற்பநாபன் கையில்**—*நாபீகமலத்தை யுடையவனுமான எம்பிரானுடைய வலது கையிலுள்ள,* **ஆழி போல் மின்னி** *– திருவாழியாழ்வானைப்போலே மின்னி.* **வலம்புரிபோல்**—*(இடது கையிலுள்ள) பாஞ்சஜன்யாழ்வானைப்போலே,* **நின்று அதிர்ந்து**— *நிலைநின்று முழங்கி,* **தாழாதே**—*காலதாமதம் செய்யாதே.* **சார்ங்கம் உதைத்த சரமழை போல்**—*ஸ்ரீசார்ங்கத்தினுலே தள்ளப்பட்ட பாண வர்ஷம்போல்,* **வாழ**— *(உலகத்தாரனைவரும்) வாழும்படி யாகவும்,* **நாங்களும்**— *(நோன்பு நோற்கும்) நாங்களும்,* **மகிழ்ந்து**—*ஸந்தோஷத்துடன்,* **மார்கழி நீராட**—*மார்கழி நீராடும்படியாகவும்,* **பெய்திடாய்**—*மழை பெய்வாயாக.*

**அவதாரிகை:**–*உபயவிபூதிக்கும் நாயகனான நாராயணன் க்ருஷ்ணனாய்ப் பிறந்து இவர்களுக்குக் கையாளாய்க்கிடக் கிறபடியைக் கண்டான் வருணதேவன். 'இவர்களுக்குக் கைங்கர்யம்செய்து நாமும் நம் ஸ்வரூபத்தைப் பெறுவோம்' என்று நினைத்து 'நான் உங்களுக்குச் செய்யவேண்டிய தென்ன?' என்று கேட்டான். அவன் செய்யவேண்டிய காரி யத்தை இப்பாட்டில் சொல்லுகிறார்கள். பகவத்ஸம்பந்த முள்ளவர்களிடம் தேவதாந்தரங்களெல்லாம் கௌரவபுத்தி யுடனன்றோ நடந்துகொள்ளுவது.* **"ஸர்வேஸ்மை தே₃வா ப₃லிமாவஹந்தி"** *[இந்த ப்ரஹ்மஞானிக்கு எல்லா தேவர்களும் காணிக்கை செலுத்துகிறார்கள்.] என்றும்,* **"யஸ்த்வைவம் ப்₃ராம்ஹணோ வித்₃யாத் தஸ்ய தே₃வா அஸந் வஸே"** *[ப்ரம்ஹ ஜ்ஞானியான ஒருவன் இம்மாதிரி உன்னை அறிந்தானாகில் அவனுக்கு எல்லா தேவர்களும் வசத்திலிருக்கிறார்கள்.] என்றும் வேதம் உத்கோஷித்தது. தண்டதரனான* **யமனும்,**

**"ஸ்வபுருஷமபி₄வீக்ஷ்ய பாஸஹஸ்தம் வத₃தி யம: கில தஸ்ய கர்ணமூலே |**
**பரிஹர மது₄ஸூத₃நப்ரபந்நாந் ப்ரபு₃ரஹமந்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம் ||**

[யமன் பாசத்தைக்கையில்கொண்ட தன் தூதனைக்கண்ணாலே ஸம்ஜ்ஞைசெய்து அவனுடையகர்ணமூலத்தில் பின்வருமாறு சொல்லுகிறான்:- ''மதுஸூதனனைச் சரணமடைந்தவர்களை அணுகாதே. நான் மற்ற மனிதர்களுக்கே ப்ரபு; வைஷ்ணவர்களுக்கல்ல''] என்றான். இதையே திருமழிசைப்பிரானும்,

''திறம்பேன்மின் கண்டீர் திருவடிதன் நாமம்
மறந்தும் புறந்தொழா மாந்தர்—இறைஞ்சியும்
சாதுவராய்ப் போதுமின்களென்றான் நமனும் தன்
தூதுவரைக் கூவிச் செவிக்கு'' என்றருளினார்.

''தஸ்ய யஜ்ஞவராஹஸ்ய விஷ்ணோரமித தேஜஸ: |
ப்ரணாமம் யேऽபி குர்வந்தி தேஷாமபி நமோ நம: ||''

[யஜ்ஞவராஹஸ்வரூபியும், அளவற்ற தேஜஸ்ஸை உடையவனுமான விஷ்ணுவுக்கு எவர்கள் ஒரு நமஸ்காரம் செய்கிறார்களோ அவர்களுக்கு இடைவிடாமல் நமஸ்காரம்.] என்றான் யமன். ''எம்பெருமானுக்கு ஒருதடவை நமஸ்கரித்தால் போதுமானது; இவர்கள் பெருமையை அனுஸந்தித்தால் இடைவிடாமல் நமஸ்கரிக்கவேண்டும்'' என்று பாவம் ''த்₃ரவந்தி தைத்₃த்யா: ப்ரணமந்தி தே₃வதா:'' [அஸுரர்கள் ஓடுகிறார்கள்; தேவர்கள் நமஸ்கரிக்கிறார்கள்.] எனப்பட்டதன்றோ. ''நாவலிட்டுழிதருகின்றோம் நமன் தமர் தலைகள் மீதே'' என்றார் தொண்டரடிப்பொடியாழ்வார். ''வள்ளலே! உன் தமர்க்கென்றும் நமன்தமர் கள்ளர் போல்'' என்றார் திருமங்கையாழ்வார். பொய்கையாழ்வாரும்

''அவன் தமர் எவ்வினையராகிலும் 'எங்கோன்
அவன் தமரே' என்றொழிவதல்லால்—நமன் தமரால்
ஆராயப்பட்டறியார் கண்டீர்'' என்று கோஷித்தார்.

கூரத்தாழ்வானை ஒருவன் ''மற்ற தெய்வங்களைக் கண்டால் நீங்கள் எப்படி நடந்துகொள்ளுவீர்கள்?'' என்று கேட்க, ''சாஸ்த்ரவிருத்தமாகக் கேளாதே காண்! 'உங்களைக் கண்டால் மற்ற தெய்வங்கள் எப்படி நடந்துகொள்ளும்?' என்றல்லவோ நீ கேட்கவேண்டுவது'' என்று அருளினாராம்.

**வியாக்கியானம்:**—(*ஆழி மழைக்கண்ணா!*) '*ஆழி*' என்று ஸமுத்ரமாய், 'ஸமுத்ரம்போல் கம்பீரஸ்வபாவத்தையுடையவனும், மழைக்கு நிர்வாஹகனுமானவனே!' என்று பொருள். "ஸமுத்$_3$ர இவகா$_3$ம்பீ$_4$ர்யே" என்று காம்பீர்யத்துக்கு த்ருஷ்டாந்தமாகச் சொல்லப்பட்டதன்றோ ஸமுத்ரம். காம்பீர்யத்திலும் பெரிதாயிருக்கும் தன்மையிலும் கடலை ஒத்திருப்பதால் '*ஆழி மழை*' எனப்படுகிறான் வருணதேவன். '*ஆழி*' என்று வட்டமாய், "சிற்சிலவிடங்களிலன்றியே, மண்டலாகாரமாகச் சுழன்று எல்லாவிடங்களிலும் மழைபொழிபவன்" என்றும் பொருள் கொள்ளலாம். (*ஆழி மழைக் கண்ணா!*) மழைக்குக் கண்ணாயிருந்து நிர்வஹிக்குமவனாகையாலே "மழைக் கண்ணன்" என்று இவன் செய்யும் காரியத்தையிட்டுச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். க்ருஷ்ணனுடன் பழகிய வாஸனையாலே யாரையழைத்தாலும் 'கண்ணா' என்றல்லது அழைக்க அறியார்கள்போலும்! சிறு பெண்களாகையாலே இவனுடைய பெயர் தெரியாது; ஆகையால் அவன் செய்யும் காரியத்தையிட்டு அழைக்கிறார்கள். (*ஆழி மழைக்கண்ணா*)'ஸ்ருஷ்டிஸம்ஹாரங்களை ப்ரம்ஹருத்ரர்கள் தலையிலே போட்டுத்தான் தன் ஸ்வரூபத்துக்குத் தகுந்த ரக்ஷணத்தைச் செய்கிறாப்போலே, ஆத்மாக்களை தண்டிப்பது முதலியகாரியங்களை யமாதிகள் தலையிலே வைத்து உலகுக்கெல்லாம் உதவும் காரியத்திலே ஸர்வேஶ்வரன் உன்னை நியமித்திருக்கிறானன்றோ. இவ்வூராரின் சிறுமையைப் பாராதே உன் பெருமைக்குத் தகுந்தபடி நீ மழை பொழியவேண்டும்' என்கிறார்கள். (*ஆழி மழைக் கண்ணா*) புண்ணியம் செய்தோரிருந்தவிடத்தில் வர்ஷித்தும், புண்ணியம் செய்யாதவர்களிருக்குமிடத்தில் வர்ஷியாதும் போருகிற நீ எங்கள் விஷயத்தில் அப்படிப் பார்க்கக்கூடாது. **"பாபாநாம் வா ஶுப$_4$நாம் வா... கார்யம் கருணம்"** [பாபிகளாயிருந்தாலும், புண்யவான்களாயிருந்தாலும் கருணைகாட்டவேண்டும்.] என்பவர்களன்றோ நாங்கள். பிராட்டி திரு

வடியை 'ப்லவங்க₃ம!' [வானர!] என்று கூப்பிட்டு உப தேசித்தாப்போலே 'ஆழி மழைக் கண்ணா!' என்று கூப் பிட்டு உபதேசிக்கிறார்கள்.

(ஒன்றும் நீ கைகரவேல்) உன்னுடைய வண்மை சிறி தும் குறையாமல் நீ தோற்றவேண்டும். சேதனர்களுடைய நன்மை தீமைகளைக் கணக்கிட்டுப் பலன் கொடுக்கும்படி யான ஈச்வரகோஷ்டியைப்போலல்லாமல் "**ந கச்சிந்நாபராத்₄யதி**" [குற்றம் செய்யாதவன் ஒருவனுமில்லையே.] என்னும் எங்கள் ஸ்வபாவத்தைப் பார்த்து மழை பொழியவேணும் 'கை' என்று 'கொடை'. கைகரவேல்— வண்மையை மறைக் காதே. (கை கரவேல்) "புண்யபாபானுகுணமாகப் பல னளிக்கும் ஸர்வேச்வரனுடைய நியமனத்தாலேயோ நீ மழை பொழிகிறாய்? பாபத்தையே பச்சையாகக்கொண்டு ரக்ஷிக் கும் எங்கள் நியமனத்தாலே மழை பொழியும்போது புண்யபாபங்களைப் பார்க்கலாமோ?" என்கிறாள்.

'உங்களுக்கு மழை பொழிவதற்கு நான் எங்கிருந்து ஜலம் கொண்டுவருவது?' என்று கேட்டான். (ஆழியுள் புக்கு...) "ஏரி, குளம் முதலியவற்றிலுள்ள ஜலம் போராது; ஸகரபுத்ரர்கள் வெட்டின ஸாகர ஜலமும் போராது; பெரிய ஸமுத்ரத்திலிருந்து கொண்டுவரவேணும்; அதிலும் மேலாக மொண்டுகொண்டு வரலாகாது; உள்ளே புக்கு அங்குள்ள நீர் முழுவதையும் கொண்டுவரவேணும்" என் கிறார்கள். (ஆர்த்து) இராமடம் ஊட்டுவாரைப்போலே மறைந்து நின்று ரக்ஷிக்கும் ஈச்வரனைப்போலல்லாமல் உன் னுடைய த்வனியாலே எங்களை வாழ்வித்துக்கொண்டு வர வேணும். சீதா பிராட்டியைத் தேடிச்சென்ற ஹனுமான் திரும்பிவராததைக்கண்டு ஜாம்பவான் முதலியவர்கள் பட்டினி கிடந்து உயிரைவிட நிச்சயித்தார்கள்; அவர்கள் ஹனுமான் ஆரவாரத்துடன் வருவதைக்கேட்டு தரித்தார் கள். அம்மாதிரியே எங்களை உயிர்தரிக்கச்செய்வதற்காக முழங்கிக்கொண்டு வரவேணும் என்கிறார்கள். (ஏறி)

"விண்ணீலமேலாப்பு விரித்தாற்போல்" என்றும், "மதயானை போலெழுந்த மாமுகில்காள்" என்றும் சொல்லுகிறபடியே ஆகாசம் முழுவதும் நிறையும்படி வரவேணும்.

(ஊழி முதல்வன் உருவம்போல் மெய் கறுத்து) 'ஊழி' என்று காலம். இங்கு காலத்தைச் சொன்னது எல்லாப் பதார்த்தங்களுக்கும் உபலக்ஷணம். ஸகலபதார்த்தங்களுக்கும் காரணபூதனான ஸர்வேச்வரனுடைய உருவம்போல் வடிவு கறுத்து வரவேணும். "ஸ்ருஷ்டித்த பின்பன்றோ அவன் புண்யபாபங்களைக் கணக்கிடுவது; சேதனர்களுடைய துர்த்தசையைக்கண்டு 'ஐயோ' என்றிரங்கி அவைகளை ஸ்ருஷ்டிக்கும்போது அனுக்ரஹமேயன்றோ உள்ளது; நீயும் அம்மாதிரியே புண்யபாபங்களைப் பார்க்காமல் பொழிய வேணும்" என்று கருத்து. (ஊழி முதல்வன் உருவம்) "முந்நீர் ஞாலம் படைத்த எம்முகில் வண்ணனே!" என்று **நம்மாழ்வார்** ஜகத்காரணபூதன் முகில்வண்ணனாயிருப்பான் என்றாரன்றோ. (உருவம்போல் மெய்கறுத்து) "நீலதோய தமத்யஸ்தா வித்யுல்லேகேவ" என்று வேதமும் மின்னலுடன் கூடிய மேகத்தைப்போன்றது எம்பிரானின் திருவுருவம் என்றதன்றோ. (மெய் கறுத்து) உருவத்தில் அவனைப்போலாகலாம். குணத்தில் அவனைப்போலாக முடியுமோ? இதுவும் தன்னுள் குளிர்ந்த நீரைக்கொண்டிருந்தாலும், அவனுடைய நீர்மைக்கு ஒப்பிட்டால் இது நெருப்பாகும். "நாய்ச்சியார் விழிவிழிக்கவொண்ணாதாப்போலே அவனுடைய அகவாயில் நீர்மையை உங்களால் உண்டாக்கப் போகாதிறே" என்று நம் ஆசாரியர்கள் இவ்விடத்தில் அருளியிருக்கிறார்கள். அதாவது:— திருவத்யயனோத்ஸவத்தில் ஸ்ரீரங்கநாதன் நாய்ச்சியார் திருக்கோலம் பூண்டு ஸேவை ஸாதித்தருள, **ஸ்ரீபாரசர பட்டர்** "நாய்ச்சியாருடைய வேஷத்தை ஏறிட்டுக்கொண்டபோதிலும், பிராட்டியைப் போல் விழிவிழிக்க ஒண்ணாகாதே" என்று அருளினார் என்னும் ஐதிஹ்யத்தை இவ்விடத்தில் அனுஸந்திக்கவேணும்

என்று கருத்து. (ஊழி முதல்வன்...) எம்பெருமானைக்காண பாக்யம் பெறாவிடினும் அவனைப்போன்ற உருவையுடைய மேகத்தையாவது காணவேணுமென்று ஆசைப்படுகிறார்கள். "காட்டேல்மின் நும் உரு" என்றும், "காணும் தோறும் தொலைவன் நான்" என்றும் மேகங்களைக் கண்டு பயப்படும் தசைபோய் அவற்றைக் காணவேணுமென்று ஆசைப்படும் தசையாயிருக்கிறது இப்போது.

(பாழி அம்தோள்) பெருத்தும், அழகுபொருந்தியுமிருக்கும் தோள். (பாழி) பெருத்தும், பலமுள்ளதாயுமிருக்கை.

**"பா₃ஹூச்ச₂ாயாமவஷ்டப்₃தே₄ா யஸ்ய லோகோ மஹாத்மந:"**

[எந்த மஹாபுருஷனுடைய தோள் நிழலில் உலகெல்லாம் ஒதுங்குகிறதோ...] என்றல்லவோ சொல்லப்பட்டது. (அம் தோள்) பலமற்றதாயிருந்தாலும் விடவொண்ணாத அழகை உடைத்தாயிருக்கை. "சுந்தரத்தோளுடையான்" என்று இத்தோளழகிலேயன்றோ இவள் ஈடுபட்டது. (பாழி அம் தோள்) ரக்ஷகமாகவும், போக்யமாகவும் இருக்கை. (பற்ப நாபன்) "கொப்பூழில் எழுகமலப்பூ அழகர்" என்று இவள் ஈடுபட்ட துறை. "பற்பநாபா! ஓ!" என்று நம்மாழ்வாரைக் கூப்பிடப்பண்ணிற்றன்றோ. (பற்பநாபன் கையில் ஆழி போல் மின்னி) எம்பெருமானுடைய திருநாபீகமலத்திலே பிரமன் பிறந்ததைக்கண்ட ஸந்தோஷத்தாலே ஜ்வலிக்கும் திருவாழியாழ்வானைப்போல் மின்னி. 'உனக்குப் பிள்ளை பிறந்தான்' என்றால் பிதாவாயிருப்பவன் ஸந்தோஷத்தை வெளிக்காட்டிக்கொள்ளாமலிருப்பான். அவனைச் சேர்ந்தவர்களிடமே குதூஹலத்தைக் காணலாம். அம்மாதிரியே பத்மநாபனுக்குப் பிரமன் பிறந்தவுடன் திருவாழியாழ்வான் புகர்பெற்றபடி. (பற்பநாபன்) "பிள்ளைகளைத் தொட்டிலிலே வளர்த்திப் புறப்பாயிட்டுப் பூரித்து, ஆயுதங்கொண்டு நோக்கியிருப்பாரைப்போலே திருநாபீகமலத்திலே ப்ரம்ஹாவைப் பெற்றுவைத்துத் திருத்தோள்களாலே காத்துக்

கொண்டிருக்கிறவன்'' என்றார் **பெரியவாச்சான் பிள்ளை.** (பற்பநாபன் கையில் ஆழி) ''அங்கைத் தலத்திடை ஆழி கொண்டான்'' என்கிறபடியே வெறும்புறத்திலே ஆலத்தி வழிக்கவேண்டும்படியான அழகிய கையில் ஆழியும் சேர்ந்தால் சொல்லவேண்டுமோ? ''ஆழியொடும் பொன்னார் சார்ங்கமுடைய அடிகளை இன்னாரென்றறியேன்'' என்றல்லவோ **திருமங்கையாழ்வார்** ஈடுபட்டார்.

(வலம்புரி போல்) ''சுடராழியும் பல்லாண்டு'' என்றவுடன் ''அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே'' என்றவர் திருமகளன்றோ. ''பூங்கொள் திருமுகத்து மடுத்தூதிய சங்கொலியும் சார்ங்கவில்நாணொலியும் தலைப்பெய்வது எஞ்ஞான்றுகொலோ?'' என்று ஆசைப்பட்டவளாயிற்றே. (வலம்புரி போல் நின்றதிர்ந்து) பாரதயுத்தத்தில் ஸ்ரீபாஞ்சஜந்யத்வனிபோலே முழங்கவேணும். ''**ஸ கோ₄ஷோ தா₄ர்த்தராஷ்ட்ராணாம் ஹ்ருத₃யானி வ்யத₃ாரயத்**'' [அந்த கோஷம் திருதராஷ்ட்ரபுத்ரர்களுடைய ஹ்ருதயங்களைப் பிளந்தது.] என்றும், **யஸ்ய நாதே₃ந தை₃த்யாநாம் ப₃லஹாநிரஜாயத**'' [யாதொரு சங்கத்தின் ஒலியினால் அஸுரர்களுக்கு பலக் குறைவு ஏற்பட்டதோ...] என்றும் சொல்லுகிறபடியே எதிரிகள் நடுங்கும்படியும், அனுகூலர் ஆனந்தப்படும்படியும் முழங்கும் சங்கம்போல் சப்திக்கவேணும். (நின்று அதிர்ந்து) பாரத யுத்தத்தில் பாஞ்சஜன்யம்போல் ஒருதடவை முழங்கினால் போதாது; விடாமல் முழங்கவேணும். (ஆழி போல் ...வலம்புரி போல்) இவளுடைய ஸ்த்ரீத்வத்துக்கு ஸ்தனங்கள்போலே அவனுடைய புருஷோத்தமத்வத்துக்கு சங்கசக்ரங்கள்.

(தாழாதே) 'நோன்பினால் வாடியிருக்கும் எங்கள் வடிவைக் கண்டபின்பும் காலதாமதம் செய்யலாமோ?' என்கிறாள். ''தொழுங்காதல் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே'' என்கிறபடியே கஜேந்திராழ்வானை ரக்ஷிக்க அரைகுலையத் தலைகுலைய அவன் ஓடிவந்தாற்போலே வர

வேணும்; அவனுடைய வர்ணத்தைப் பெற்றிருக்கும் நீங்கள் அவனுடைய வண்ணத்தையும் (ஸ்வபாவத்தையும்) அடைய வேணும். "தாழாதே பெய்திடாய்" என்றும், "சார்ங்கம் தாழாதே உதைத்த" என்றும் கூட்டிப் பொருள்கொள்ள லாம். (சார்ங்கமுதைத்த சரமழை) இரை பெறாத பாம்பு போலே, முன்பு விஷயமில்லாமல் அடங்கியிருந்த ஸ்ரீ ஶார்ங்கம், ஸ்ரீராமபிரான் கடாக்ஷித்தவுடன் ஒன்று பத்து நூறாயிர மாகச் சரமழையைத்தானே பொழிந்தது. "எய்வண்ண வெஞ்சிலை" என்று திருமங்கையாழ்வார் அருளியபடியே அம் பெய்வதையே ஸ்வபாவமாகக்கொண்டதல்லவோ ஸ்ரீசார்ங் கம். "வாளி மழை பொழிந்த சிலை" என்று நம்மாழ்வார் அருளி னார். (சார்ங்கம் உதைத்த) அகம்படியர் கிளர்ந்தால் அரச னும் அடக்கமுடியாதாப்போலே எம்பெருமான் கடாக்ஷித்த பின்பு அவனாலும் விலக்கமுடியாதபடி சரமழைபொழிந்து கொண்டிருக்கை. "**அவஷ்டப்₄ய மஹத்₃ த₄நு:**" [பெரிய வில்லை அமுக்கிப் பிடித்துக்கொண்டு.] என்றும், "சார்ங்கமென் னும் வில்லாண்டான்" என்றும் சொல்லுகிறபடியே ஸர் வேச்வரனாலல்லது அடக்கவொண்ணாதிருக்கை. (சரமழை)

**"ததோ ராமோ மஹாதேஜா த₄நுராத₃ாய வீர்யவாந் |**
**ப்ரவிஶ்ய ராக்ஷஸம் ஸைந்யம் ஶரவர்ஷம் வவர்ஷ ஹ ||**

[அதற்குப்பிறகு மஹாதேஜஸ்வியும், வீர்யவானுமான ராமன் ராக்ஷஸ ஸைந்யத்தினுள் நுழைந்து சரமழை பொழிந் தான்.] என்று சொல்லப்பட்டதன்றோ. "**வாளி மழை**" என் றார் **நம்மாழ்வாரும்**. (வாழ...பெய்திடாய்) சரமழையைப் போல் அழிக்கக்கூடாது; அநுகூலரும் ப்ரதிகூலரும் வாழும் படியாகப் பெய்யவேணும்.

"மழை பெய்வதென்பது எனக்கு இயற்கையாகவுள்ள செயலன்றோ; அது உங்களுக்குக் கைங்கர்யம் செய்ததாகும் படியென்?" என்றான் **வருணன்**. (நாங்களும் மார்கழி நீராட) 'நாங்கள் மார்கழி நீராடக்கடவோம்; நீயும் எங்களுக்குக்

கைங்கர்யம்செய்து' உன் ஸ்வரூபம் பெறலாம்' என்கிருர்கள். (மகிழ்ந்து நீராட) நாங்களும் க்ருஷ்ணனும் மகிழ்ந்து நீராடக்கடவோம். நாங்கள் உன் வடிவைக்கண்டு த்வனியைக் கேட்டு மகிழ்ந்து நீராடி க்ருஷ்ணவிரஹத்தாலேற்பட்ட தாபத்தையாற்றிக்கொள்ளுகிறோம். க்ருஷ்ணனுடன்கூடி நீராடுகையாலே

**"கோட்டிய வில்லொடு மின்னும் மேகக் குழாங்கள்காள்!**
**காட்டேன்மின் நும் உரு என்னுயிர்க்(கு) அது காலனே"**

என்னவேண்டாதே 'மகிழ்ந்து—நீராட' என்கிருர்கள். (மகிழ்ந்து) பகவானும் பிராட்டியுமான சேர்த்தியிலே கைங்கர்யம்செய்து அவர்களை மகிழ்விக்கையன்றோ சேதனனுக்கு ஸ்வரூபம்.

**"ருசம் ப்$_3$ராம்ஹம் ஜநயந்த: தே$_3$வா அக்$_3$ரே தத$_3$ப்$_3$ருவந்"**

[பரப்ரம்ஹத்தின் ப்ரீதியை உண்டுபண்ணுவதற்காக நித்ய ஸூரிகள் முதலில் 'நம:' என்னும் அச்சொல்லைச் சொன்னுர்கள்.] என்று நித்யஸூரிகளும் அவனுடைய உகப்புக்காக வன்றோ கைங்கர்யம்செய்வது. **"அஹமந்நம் அந்நமத$_3$ந்தமத்$_3$மி"** [நான் பகவானுக்கு போக்யமாயிருப்பவன். என்னை புஜித்து உகக்கும் எம்பெருமானை நான் அனுபவிக்கிறேன்.] என்றல்லவோ வேதம் உத்கோஷித்தது.

**"கதா$_3$஽ஹமைகாந்திக நித்யகிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி ஸநாத$_2$ஜீவித:"**

[எம்பெருமானுக்கே எப்போதும் அடிமைசெய்து ஜன்ம ஸாபல்ய மடைந்தவனுய் அவனை நான். எப்போது உகப்பிக்கப்போகிறேன்?] என்றல்லவோ **ஆளவந்தாரும்** ஆசைப்பட்டார். "உன்தன் திருவுள்ளம் இடர் கெடும் தோறும் நாங்கள் வியக்க இன்புறுதும்" என்று **நம்மாழ்வாரும்** 'எம்பெருமானுடைய முகமலர்த்தியே தமக்குப் பரமானந்தஹேது' என்று அருளினுரன்றோ. **பெரியவாச்சான்பிள்ளையும்** "பதிவ்ரதையான ஸ்த்ரீக்கு பர்த்ருஸம்ச்லேஷஜநிதஸாரஸ்யாநு

பவம் உண்டாகாநிற்கச்செய்தேயும், பர்த்தாவினுடைய முக விகாஸமாய் ப்ரயோஜனம். ''அவ்விகாஸஹேது'' என்று ஸம்ஶ்லேஷாதிகளிலே ஸங்கம் பிறக்குமோபாதி. பகவத் குணாநுபவாதிகளில் 'நான் போக்தா' 'எனக்கு ரஸித்தது' என்று புருஷபோகத்தோபாதி ஸ்வதந்த்ரமாயிருத்தல், ஸாதாரணமாயிருத்தல் செய்கையன்றியிலே. 'ஈச்வரன் முக மலர்த்தி, எனக்கு ஹேது' என்று அவற்றிலே ஸங்கமாய், முகமலர்த்தியே தனக்கு போக்யமாக நினைத்திருக்கை. அத்தைப்பற்றவிறே முதலிலே 'அஹமந்நம்' என்று சொல்லி, பின்னே 'அஹமந்நாத:' என்றதும்.'' என்று நிர்ஹேதுக பகவத்ப்ரஸாதப்படியிலே அருளிச்செய்தார்.

## திருப்பாவை ஐந்தாம்பாட்டு

5. மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணி விளக்கைத்
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனைத்
தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோரெம்பாவாய்.

**பதவுரை:—மாயனை**—ஆச்சரியமான செயல்களை உடையவனும், **மன்னு வடமதுரை மைந்தனை**— (நித்யமான பகவத் ஸம்பந்தத்தாலே) விளங்காநின்றுள்ள வடமதுரைக்கு அரசனும், **தூய பெரு நீர்**—பரிசுத்தமானதும், ஆழம் மிக்கிருப்பதுமான நீரையுடைய, **யமுனைத்துறைவனை**—யமுனைக்கரையிலே விளையாடுபவனும், **ஆயர் குலத்தினில் தோன்றும்**—இடைக்குலத்தில் திருவவதரித்த, **அணிவிளக்கை** — மங்களதீபம் போன்றவனும், **தாயை குடல் விளக்கம் செய்த**—தாயாகிய யசோதைப்பிராட்டியின் திருவயிற்றை விளங்கச்செய்த, **தாமோதரனை**—(கண்ணிநுண்சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்

பண்ணிய) எம்பிரானை. **நாம்**—(அவனால் அனுஜ்ஞாத்தக்க) நாம். **தூயோம் ஆய் வந்து**—பரிசுத்தர்களாகக் கிட்டி, **தூ மலர் தூவி**—நல்ல மலர்களைத் தூவி. **தொழுது**—வணங்கி. **வாயினால் பாடி**-வாயாரப்பாடி. **மனத்தினால் சிந்திக்க**—மனத்தாலே தியானிக்க. **போய பிழையும்**— (பகவத் ஸம்பந்த முண்டாவதற்கு முன்) கழிந்த பாபங்களும். **புகுதருவான் நின்றனவும்**—பின்பு (நம்மையறியாமல்) வருபவையும். **தீயினில் தூசு ஆகும்**-நெருப்பிலிட்ட பஞ்சுபோலே உரு வழிந்துபோகும்; **செப்பு**-(ஆகையாலே) அவனைப்பாடு.

**அவதாரிகை:**— பெண்பிள்ளைகளிலே ஒருத்தி "நாம் இப்படி மனோரதித்துக்கொண்டு நோன்பு நோற்க ஆரம்பித்திருக்கிறோம். இக்காரியம் இடையூறில்லாமல் நிறைவேற வேணுமே. '**ச்ரேயாம்ஸி பஹூவிக்₄நாநி ப₄வந்தி மஹதாமபி**' [நற்காரியங்கள் பெரியோர்களுக்கும்கூட பல இடையூறுகளை உடையனவாக ஆகின்றன.] என்றல்லவோ சொல்லப்படுகிறது. ஸ்ரீராமனுக்கு முடிசூட்டவேண்டுமென்று ஸம்பராந்தகனான தசரதசக்ரவர்த்தி மநோரதித்தான்; ராஜரிஷியான விச்வாமித்ரனை ப்ரம்ஹரிஷியாக்கின வஸிஷ்டன் முஹூர்த்தம் வைத்தான்; முடிசூடப்போகிறவனோ தர்மஸ்வரூபியான ராமன்; அயோத்யாவாஸிகளெல்லாம் மங்களாசாஸனம் செய்தார்கள்; அப்படியிருந்தும் இதற்கும் விக்னம் வந்துவிட்டதன்றோ. நாமோ அநாதிகாலமாகப் பாவமே செய்துபோந்தவர்கள். நமக்கும் ஏதாவது இடையூறு வந்துவிட்டால் என்செய்வது?" என்று கேட்க, அவர்களிலே வேதாந்த ஜ்ஞானமுடைய ஒருத்தி "நாம் பாபங்களைப் போக்கிக் கொண்டு ஆரம்பிக்கவேணுமென்று நிர்ப்பந்தமில்லை; பாலைப் பருகுமவனுக்குப் பித்தமும் தன்னடையே விட்டுப்போமாப்போலே பரமபோக்யமான பகவதனுபவத்தைப் பண்ணினால் பாபங்கள் பறந்தோடிப்போம். ஆகையால் அயோக்யதையைப் பார்த்து அகலவேண்டியதில்லை" என்று ஸமா

தானம் சொல்லுகிருள் இப்பாட்டில். ஸர்வேச்வரன் தன் ஸங்கல்பம் பொய்யாளுலும் தன்னடியாரின் வார்த்தை பொய் யாகாமல் ரக்ஷிப்பவன். ஸுக்ரீவனுக்கும் விபீஷணனுக்கும் முடிசூட்டுவதற்காக முடி தவிர்ந்தான் ஸ்ரீராமபிரான். அர்ஜுனன் "ஜயத்ரதனை அஸ்தமிக்கைக்கு முன்னே கொல் லக்கடவேன்" என்று சபதம்செய்ததை நிறைவேற்றுவதற் காக "ஆயுதமெடேன்" என்ற கண்ணன் ஆயுதமெடுத்தும், பொய் சொல்லியும், பகலை இரவாக்கியும் அர்ஜுனனுடைய ஸங்கல்பத்தை முடித்துக்கொடுத்தான். பீஷ்மருடைய வாக்கைக் காப்பாற்றுவதற்காக ஆயுதமெடுத்துத் தன் வார்த்தையைப் பொய்யாக்கிக்கொண்டதும் பிரஸித்தம். முதற்பாட்டில் "நாராயணனே" என்று ஸ்ரீவைகுண்டத்தி லிருப்பைச் சொன்னுர்கள். இரண்டாம்பாட்டில் "பாற்கட லுள் பையத்துயின்ற பரமன்" என்று அவதாரம் செய்வதற் காகத் திருப்பாற்கடலிலே சாய்ந்தருளினபடியைப் பேசினுர் கள்; மூன்ரும்பாட்டில் திரிவிக்கிரமனுக அவதரித்து உலகை யெல்லாம் திருவடிகளாலே தடவிக்கொடுத்ததை அனுபவித் தார்கள்; நான்காம்பாட்டில் "சார்ங்கம் உதைத்த சரமழை" என்று ஸ்ரீராமனுய் அவதரித்து, எதிரிகள் அம்பு மார்பிலே தைக்கும்படி நின்று சண்டைசெய்ததை உணர்த்திஞர்கள். இப்பாட்டில் க்ருஷ்ணனுய்த் திருவவதரித்து இடைச்சி களுக்கும் கட்டவும், அடிக்கவுமாம்படி தன்னைக் கொடுத்துக் கொண்டிருப்பதைப் பாடுகிருர்கள்.

**வியாக்கியானம்:**—(மாயனை) பரமபதநாதனை அனுபவிக் கிருர்கள். அயர்வறும் அமரர்கள் அதிபதியாய், ஸமஸ்தகல் யாணகுணுத்மகனுய் ஸ்ரிய:பதியாய் ஸ்ரீவைகுண்டத்தில் எழுந் தருளியிருக்குமிருப்பு வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாத படியன்ருே இருப்பது. **"யதோ வாசோ நிவர்த்தந்தே அப் ராப்ய மநஸா ஸஹ"** [எந்தப் பரப்ரம்ஹத்தினிடமிருந்து மனத்துடன்கூடிய வாக்குகளும் அதை அடையாமல் திரும்பி வருகின்றனவோ...] என்றும்,

"யஸ்யா$^{2}$மதம் தஸ்ய மதம் மதம் யஸ்ய ந வேத$_{3}$ ஸ:।
அவிஜ்ஞாதம் விஜாநதாம் விஜ்ஞாதமவிஜாநதாம்॥

[எவனுக்குப் பரப்ரம்ஹம் (அளவிட்டு) அறியப்படவில்லையோ, அவனுக்கு அறியப்பட்டதாகிறது; எவனுக்கு அறியப்பட்டதோ, அவன் அப்பரவஸ்துவை அறியவில்லை; (அளவிட்டு) அறிந்தவர்களுக்கு அறியப்படாததாகவும், (அளவிட்டு) அறியாதவர்களுக்கு அறியப்பட்டதாகவுமாகிறது அது.] என்றும் வேதம் உத்கோஷித்தது. நம்மாழ்வாரும்,

"யானுமேத்தி ஏழுலகும் முற்றும் ஏத்திப் பின்னையும்
தானுமேத்திலும் தன்னை ஏத்த ஏத்த எங்கெய்தும்?" என்றார்.

திருமழிசைப்பிரானும் "பண் கடந்த தேசம்" என்று ஸ்ரீவைகுண்டத்தை அனுபவித்தார். இவர்களும் "மாயனை" என்கிறார்கள். "வைகுந்தன் என்பதோர் தோணி பெறாது உழல்கின்றேன்" என்று ஆசைப்பட்டவளன்றோ. க்ருஷ்ணாவதாரத்தில் நீர்மை அளவிடவொண்ணாதிருக்கிறபடியாலே பரமபதத்திலே அனுபவிப்போமென்று பார்த்து, அதுவும் அளவிடவொண்ணாமையாலே "மாயனை" என்கிறார்கள். ஒருவருக்குத் தன்னைக் கொடுத்துக்கொண்டிருக்கும் நீர்மை இங்கு; ஒரு நாட்டுக்குத் தன்னைக் கொடுத்துக்கொண்டிருக்கும் நீர்மையாகையாலே அது இதைக்காட்டிலும் அதிகமாயிருக்கும். "ஒருத்தி தாம்பாலே பந்தித்தபடியைச் சொல்ல நினையா, 'ஸதா பச்யந்தி' என்று ஒரு நாடாக த்ருஷ்டிகளாலே பந்திக்கும்படியைச் சொல்லுகிறது" என்று ஆறாயிரப்படி. (மாயனை) நித்யஸூரிகளுக்கு அதிபதியாயிருப்பவன் இடையர்களுக்கும், பசுக்களுக்கும் தன்னைக் கொடுத்துக்கொண்டிருக்கும்படியைக்கண்டு "இது ஒரு ஆச்சரியமிருந்தபடியென்?" என்பதாகவும் கொள்ளலாம். "இமையோர் தமக்கும் நெஞ்சால் நினைப்பரிதால் வெண்ணெயூணென்னும் ஈனச்சொல்லே" என்று நம்மாழ்வார் அருளினாரன்றோ.

(மன்னு வடமதுரை) எப்போதும் பகவத்ஸம்பந்தத்தால் பொலிகின்ற தேசம். முதலில் இவ்விடத்தில் வாமனுவ

தாரம்செய்த எம்பெருமான் நெடுங்காலம் தவம்செய்தான். சத்ருக்னன் லவணாஸுரனைக் கொன்று இம்மதுராபுரியில் அரசாண்டுவந்தான். இவ்வளவுக்கும் மேலாக க்ருஷ்ணனும் இங்கு அவதரித்தான். ஆகையால் 'மன்னு வடமதுரை' எனப்படுகிறது.

**"மது₄ரா நாம நக₃ரீ புண்யா பாபஹரீ ஶுப₄ா।**
**யஸ்யாம் ஜாதோ ஜக₃ந்நாத₂ஸ் ஸாக்ஷாத்₃ விஷ்ணுஸ் ஸநாதந:॥"**

[யாதொரு நகரத்திலே ஆதிதேவனும், ஜகந்நாதனுமான விஷ்ணு அவதரித்தருளினானே. அந்த மதுரை என்னும் நகரம் பாபத்தைப் போக்கடிப்பதாயும், அவனைப் பெறுகைக்கு உபாயமாகவும் இருக்கிறது.]என்னும் ப்ரமாணவசனம்இங்கு அநுஸந்திக்கத்தக்கது. (மன்னு வடமதுரை மைந்தனை) 'மன்னு' என்பதை 'மைந்தனை' என்ற பதத்துடன் கூட்டியும் பொருள்கொள்ளலாம். "வடமதுரையில் பிறந்தபின்பே ஸ்ரீவைகுண்டநாதன் ஒளிபெற்று விளங்கினான்" என்று தாத்பர்யம். **"ஸ உ ச்ரேயாந் ப₄வதி ஜாயமாந:"** [அவன் பிறந்தபின்பே மேன்மையை அடைகிறான்.] என்று வேதம் உத்கோஷித்தது. "நிலை வரம்பிலே பல பிறப்பாய் **ஒளி வரும்** முழுநலம்" என்றார் வேதம் தமிழ்செய்த மாறன். (மன்னு...மைந்தனை) ஸ்ரீவைகுண்டத்திலிருந்து, அடியார்களை ரக்ஷிப்பதற்காக இங்கு வந்த பின்பே தன் ஸத்தையைப் பெற்றான். (மைந்தனை) பலத்தையுடையவனை. "தந்தை காலில் பெருவிலங்கு தாளவிழ...வந்த எந்தை" என்று பிறக்கும்போதே தாய்தந்தையர்கள் காலிலுள்ள விலங்கை முறித்துக்கொண்டு வந்தபடி. (மைந்தனை) 'பிள்ளை' என்றும் பொருள்கொள்ளலாம். வடமதுரையிலுள்ளார்க்கெல்லாம் பிள்ளையாயிருந்தபடி. (மைந்தனை) 'அரசன்' என்றும் பொருள்கொள்ளலாம். தன் அழகினாலே எல்லாரையும் வசப்படுத்திக்கொண்டவன் என்று பாவம். "வடமதுரையார் மன்னன்" என்றவளன்றோ.

(தூய பெருநீர் யமுனைத் துறைவனை) அவதரித்தவிடத்திலும் விரஜையைப்போலே ஓர் ஆறு உண்டாயிருந்தது. (தூய) "வஸுதே₃வோ வஹந் க்ருஷ்ணம் ஜாநுமாத்ரோத₃கோ யயௌ" என்கிறபடியே க்ருஷ்ணனை ஸ்ரீவஸுதேவர் கொண்டுபோகும்போது பாங்காக வற்றிக்கொடுத்ததாகையால் "தூய...யமுனை" எனப்படுகிறது. கணவனை ஸமுத்ரராஜன் ஸ்ரீராமபிரானுக்கு வழிவிட மறுத்தான். மனைவியான இந்த யமுனை க்ருஷ்ணனுக்கு வழிவிட்டாள். இதை நினைத்தே "தூய...யமுனை" என்கிறார்கள். க்ருஷ்ணனும் பெண்களும் நீராடுகையாலும், மாறிமாறிக் கொப்பளிக்கையாலும் வந்த தூய்மையைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். "தூய" என்று நீரில் தெளிவைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். (தூய...யமுனை) பிராட்டி சரணம் புகுந்தபோது ராவணனுக்கு அஞ்சியிருந்த கோதாவரியைப்போலில்லாமல், கம்ஸனுக்கு அருகிலிருந்தும், எம்பெருமான் எழுந்தருளுவதற்குப் பாங்காக வற்றிக்கொடுத்ததன்றோ. (பெருநீர்) "யமுநாம் ச அதிக₃ம்பீ₄ராம்" என்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் சொல்லியபடியேயிருக்கை. மநோரம்யமாகவும், பரிசுத்தப்படுத்துவதாகவும் இருக்கும் மேன்மையைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். (யமுனைத் துறைவனை) கவிபாடுவார்க்கு ஊரும், பேரும், ஆறும் வேண்டுமன்றோ அம்மூன்றும் இவன் விஷயத்தில் ஸம்ருத்தமாயிருக்கிறபடி. "முத்துப் படும் துறை" என்னுமாப்போலே பெண்கள் படும் துறையை உடையவனை. (யமுனைத் துறைவனை) "கம்ஸபயத்துக்கு அஞ்சி ஒளிக்கவந்து சேர்ந்தாரைச் சொல்லுமாப்போலே சொன்னபடி பாரீர்" என்று **பட்டர்** அருளிச்செய்வாராம். அதாவது:–கம்ஸன் கண்ணனுக்கு ஏதாவது தீங்குசெய்துவிடுவானோ என்னும் பயத்தால் 'க்ருஷ்ணன்' என்று பெயரையிட்டுச் சொல்லாதே 'யமுனைத் துறைவன்' என்கிறார்கள்.

(ஆயர் குலத்தினில் தோன்றும் அணி விளக்கை) ஆயர் குலத்தில் பிறந்தவுடன் இருட்டிலே விளக்குப்போல்

விளங்கிநின்றான் என்கிறார்கள். (தோன்றும்) 'பிறக்கும்' என்னாதே 'தோன்றும்' என்கையாலே இவனுக்குக் கர்மத்தினாலேற்படும் பிறப்பில்லை; இச்சையினால் ஏற்படும் ஆவிர்ப்பாவமேயுள்ளது என்று உணர்த்தப்படுகிறது. மஹரிஷியும்,

"ததோऽகி₂ல ஜக₃த் பத்₃ம போ₃த₄யாऽச்யுத ப₄ாநுநா ।
தே₃வகீபூர்வஸந்த்₄யாயாமாவிர்ப்பூ₄தம் மஹாத்மநா ||"

[பிறகு, உலகங்களாகிற தாமரைகளை மலரச் செய்வதற்காக அச்யுதனாகிற பெரிய ஸூர்யன், தேவகியாகிய விடியற்கால வேளையில் **ஆவிர்ப்பவித்தான்.**] என்று அருளினாரன்றோ. கம்ப நாட்டாழ்வாரும் "நடையில் நின்றுயர் நாயகன் **தோற்றத்தின்**" என்றார். (அணிவிளக்கை) திருவாய்ப்பாடிக்கு மங்களதீபம்போல் விளங்குபவன். (ஆயர் குலத்தினில் தோன்றும் அணி விளக்கை) வடமதுரையில் அவதரித்திருந்தபோதிலும் திருவாய்ப்பாடிவரையிலும் அச்யுதபானுவினுடைய ஒளிசென்றது என்று பாவம். வடமதுரையில் பிறந்த கண்ணனை ஆயர்குலத்தில் தோன்றியவனாகக் கூறுவதற்குக் காரணம் "பிறவாத பரமபதத்தோபாதி ஸ்ரீமதுரையில் பிறப்பும்; முலைப்பால் குடித்து அழுதவிடமிறே பிறந்தவிடமாவது" என்று ஆறாயிரப்படியில் கூறப்பட்டது. (ஆயர் குலத்தினில்...அணிவிளக்கை) ஸ்ரீவைகுண்டத்திலும் திருமதுரையிலும் பிரகாசியாமலிருந்தவன் ஆயர்பாடிக்கு வந்தவுடன் பிரகாசித்தபடி. "ஆயர்பாடிக்கு அணிவிளக்கே!" என்றல்லவோ **பெரியாழ்வாரும்** அருளினார். "தோன்றும் மணி விளக்கை" என்றும் பாடங்கொள்ளலாம். "'மணி விளக்கு' என்றபோது, இங்கே புகுந்தபின்பு பரமபதத்தில் அழுக்கு அற்றபடி" என்று ஆறாயிரப்படி. 'ஸ்வாதந்த்ரியமாகிற அழுக்கு இங்கே கழிந்திருக்கிறது' என்று தாத்பர்யம். (அணி விளக்கு) புகையும் எண்ணையும் திரியுமில்லாத ஒரு விளக்குண்டாவதே!

(தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை) வயிற்றில் தழும்பாலே யசோதைப் பிராட்டியை விளங்கச்

செய்தவனை "கௌஸல்யா ஸுஸுப்⁴ப தேந புத்ரேணமித தேஜஸா" [அளவற்ற ஒளியையுடைய அந்தப் புத்திரனால் கௌஸல்யை சோபித்தாள்.] என்றும், "என்ன நோன்பு நோற்றாள் கொலோ இவனைப்பெற்ற வயிறுடையாள்" என்றும் சொல்லுகிறபடியே உலகத்தார் கொண்டாடுகையாலே பெற்ற வயிற்றுக்குப் பட்டம் கட்டினவனை. (தாமோதரனை) கண்ணிநுண் சிறுத்தாம்பினாலே கட்டுண்ணப் பண்ணியவனை. அவன் நம்மைக் கட்டும் கட்டு நம்மால் அவிழ்க்க வொண்ணாதாப்போலே அவனடியார் அவனைக் கட்டின கட்டை அவனாலும் அவிழ்க்கமுடியாது. அவன் கட்டுண்டதை நினைத்தால் நம்முடைய கட்டு கழன்றுவிடும். (தாமோதரனை) "சேஷியுடைய திருவிலச்சினை". என்று பட்டர் அருளிச்செய்வாராம். "நாம் அவனுக்கு அடியார் என்பதைக் காட்டுவதற்காகச் சங்கசக்ரங்களை தரிப்பதுபோல் அவனும் நமக்குப் பரதந்திரன் என்பதைக் காட்டுவதற்காக யசோதைப் பிராட்டி கயிற்றினால் கட்டிய அடையாளத்தை தரித்துக்கொண்டிருக்கிறான்" என்று பொருள்.

(தூயோமாய் வந்து நாம்) இங்கு தூய்மையாவது:— அயோக்யனென்று அநுஸந்தித்து அகலுகையாகிற அசுத்தியை விட்டு இருந்தபடியே வருகை. இருந்தபடியே வந்த விபீஷணாழ்வானை.

"மம சாப்யந்தராத்மாऽயம் ஶுத்₃த₄ம் வேத்தி விபீ₄ஷணம்"

[என்னுடைய இந்த மனமும் விபீஷணனை சுத்தனாக அறிகிறது.] என்றானன்றோ ஸுக்ரீவன். (தூயோமாய் வந்து) இடைச்சிகள் தூய்மையன்றோ. தலையிருக்க உடம்பு கழுவியும், உடம்பிருக்கத் தலை கழுவியும் போருவர்களன்றோ. பகவத்ஸம்பந்தத்துக்கு மேற்பட்ட ஒரு சுத்தி ஸம்பாதிக்க இழிவது அசுத்தனாய்விடுகைக்கு ஸமானம். **விபீஷணன்** சரணமடைய வந்தபோது ஒரு முழுக்கிட்டு வரவில்லை; **அர்ஜுனன்** யுத்தத்தின் நடுவில் ஒரு முழுக்கிட்டுச் சரம

ச்லோகம் கேட்கவில்லை. த்ரௌபதியும் முழுகின பிறகா சரணகதி செய்தாள்? ஆகையால் ப்ரபத்திக்கு ஒரு சுத்தியும் தேடவேண்டா; அசுத்தியும் தேடவேண்டா; இருந்தபடியே வர அதிகாரமுண்டு. (தூயோமாய் வந்து) "அநந்யப்ரயோஜனைகளாய் வந்து" என்றும் பொருள்கொள்ளலாம். "உபாய ஸ்வீகாரத்திலும், உபேயஸ்வீகாரத்திலும் குற்றமற்று வந்து" என்றும் பொருள்கொள்ளலாம். (வந்து நாம்) அவன் வரத்தக்க நாம் வந்து. தான் இருக்குமிடத்துக்கு வருவதையே பெரிதாக நினைப்பவனன்றோ அவன். தண்டகாரண்ய ரிஷிகளிடம்,

"ப்ரஸீத₃ந்து ப₄வந்தோ மே ஹ்ரீரேஷா ஹி மமாதுலா।
யதீ₃த்₃ருஶைரஹம் விப்ரை: உபஸ்தே₂யைருபஸ்தி₂த:"

[நீங்கள் உகந்தருளவேண்டும்; எனக்கு மிகவும் லஜ்ஜையாயிராநின்றது. பெரியோர்களும், போய் பார்க்கத்தக்கவர்களும் ப்ராம்ஹணர்களுமான உங்களால் வந்து அடையப்பட்டேனன்றோ.] என்றும் குஹனிடம்

"அர்ச்சிதாச்சைவ ஹ்ருஷ்டாச்ச ப₄வதா ஸர்வதா₃ வயம்।
பத்₃ப்₄யாமபி₄க₃மாச்சைவ ஸ்நேஹஸந்த₃ர்ஶநேந ச॥

[கால்களால் நடந்துவருகையாலும், அன்புகாட்டுகையாலும் உம்மாலே நாம் எல்லாவிதத்திலும் பூஜிக்கப்பட்டோம்; ஸந்தோஷமடைந்தோம்.] என்றும் அருளினன் ஸ்ரீராமபிரான். (வந்து நாம்) இவர்களுடைய ஆற்றாமையாலே அவன் வரும் வரையில் காத்திருக்கமுடியவில்லை. (தூமலர்) ஒரு ப்ரயோஜனத்தைக் கருதாமல் இடப்பட்ட மலர்கள். "மிக்க சீர்த் தொண்டரிட்ட பூந்துளவம்" என்றும், "சூட்டுநன் மாலைகள்" என்றும் சொல்லுகிறபடியே இருக்கை. (மலர்) 'இன்ன பூ' என்று விசேஷியாமையாலே இவனுக்கு ஆகாத பூவில்லை; பக்தியுடன் இட்ட எந்தப் பூவையும் ஏற்றுக்கொள்ளுவான் என்று தோற்றுகிறது. "பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி। ததஹம்......அச்நாமி" [இலையை

யாவது, பூவையாவது, பழத்தையாவது, நீரையாவது எனக்கு பக்தியுடன் இடுவானாகில், அதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.] என்றான் கீதாசார்யன். திருமங்கையாழ்வாரும் "கள்ளார் துழாயும் கணவலரும் கூவிளையும் முள்ளார் முளரியும் ஆம்பலும்...புள்ளாய் ஓர் ஏனமாய்ப் புக்கிடந்தான் பொன்னடிக்கு" என்று எம்பெருமானுக்கு ஆகாத பூவில்லை என்பதை அருளிச்செய்தார். நம்மாழ்வாரும் "புரிவதுவும் புகை பூவே" என்றார். "கூளத்தையிட்டுப் புகைத்தாலும் போதும்; கண்டகாலிப்பூவை இட்டாலும் ஏற்றுக்கொள்ளுவான்" என்று பட்டர் அருளிச்செய்தார்; இதைக்கேட்ட நஞ்ஜீயர் "'ந கண்டகாரிகாபுஷ்பம் தே₃வாய விநிவேத₃யேத்' [கண்டகாலிப்பூவை எம்பெருமானுக்கு இடலாகாது.] என்று சாஸ்திரம் சொல்லிற்றே" என்றார். "எம்பெருமானுக்கு ஆகாதது என்னும் நினைவாலே கண்டகாலிப்பூவை நிஷேதிக்கவில்லை. பறிக்கிற ஆச்ரிதன் கையில் முள்பாயும் என்பதற்காகத் தவிர்த்ததுகாணும்" என்று பட்டர் அருளினார்.

(தூமலர் தூவி) திருவடிகளிலே மலர்களை முறைகெடப் பரிமாறி. காதலி காதலனுக்குப் பூவிடும்போது நியமம் வேணுமோ? (தொழுது) அவனுக்குப் பொறுக்கவொண்ணாதபடி அஞ்சலியைப் பண்ணி.

**"கோ₃விந்தே₃தி யத₃ாக்ரந்த₃த் க்ருஷ்ணா மாம் தூ₃ரவாஸிநம் ।**
**ருணம் ப்ரவ்ருத்₃த₄மிவ மே ஹ்ருத₃யாந்நாபஸர்ப்பதி ॥**

[வெகுதூரத்திலிருந்த என்னைக் குறித்து த்ரௌபதி "கோவிந்தா"! என்று கூப்பிட்ட கூக்குரல் வ்ருத்தியடைந்த கடனைப்போல் என்னுடைய ஹ்ருதயத்திலிருந்து அகலவில்லை.] என்றவனன்றோ. "தொழுது மாமலர் நீர் சுடர் தூபங்கொண்டு எழுதும் என்னும் இது மிகையாதலின்" என்று நம்மாழ்வார் அருளிச்செய்தார். அவனைத் தொழுவித்துக்கொள்ளுமவர்கள் தொழுகிறார்கள். (தொழுது) தாய்

தந்தையர் முறைகேடாகக் காரியம் செய்கிறார்கள் என்று நினைக்காமைக்காக அஞ்சலிசெய்வதாகவும் கொள்ளலாம். (தொழுது) "கைபடைத்த ப்ரயோஜனம் பெறுவோம்" என்கிறார்கள். (வாயினால் பாடி) "வாய் படைத்ததின் பலனையும் அடைவோம்" என்கிறார்கள். "'நாமிருந்தவிடத்திற்கு வருகைக்கு மேலே நம்மை நோக்கி வார்த்தை சொல்லும்படி இருந்தோமே' என்று அவனை நினைக்கப்பண்ணுவோம்" என்கிறார்கள். (மனத்தினால் சிந்திக்க) மனம் படைத்த லாபத்தையும் பெறுவோம். **"யத் புருஷோ மநஸாऽபி$_4$க$_3$ச்ச$_2$தி। யத்$_3$தி$_4$ மநஸா த்$_3$யாயதி। தத்$_3$ வாசாவத$_3$தி। தத்கர்மணாகரோதி॥"** [மனிதன் எதை மனஸ்ஸினால் அறிகிறானோ அதை வாக்கினால் சொல்லுகிறான்; எதை மனஸ்ஸினால் தியானிக்கிறானோ அதைக்காரியத்தினால் செய்கிறான்.] என்றும், **"மந: பூர்வோ வாகு$_3$த்தர:"** [மனம் முதலில் ப்ரவர்த்திக்கிறது; வாக்கு அடுத்தபடியாக ப்ரவர்த்திக்கிறது.] என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க இங்கு "தொழுது", "வாயினால் பாடி", "மனத்தினால் சிந்திக்க" என்று க்ரமம் தப்பிச் சொல்லுவானென்? என்னில்: பகவத்விஷயத்தில் உள்ள அளவுகடந்த அன்பாலே ஒவ்வொரு இந்திரியமும் தனித்தனியே மேல் விழுந்தபடியைச் சொல்லுகிறது. "முடியானே" என்ற திருவாய்மொழியில் ஆழ்வாருடைய தசையை இங்கு அநுஸந்திப்பது.

(போய பிழையும்—தூசாகும்) இதற்கு முன் செய்த பாபங்களும், இனி அபுத்திபூர்வகமாகச் செய்யும் பாபங்களும் நெருப்பிலிட்ட பஞ்சுபோலேயாகும். தூசு—பஞ்சு. சர்க்கரை கலந்த பாலைக் குடித்தால் பித்தம் தானாகவே போகுமாப்போலே, பகவதநுபவம் செய்தால் பாபங்கள் பறந்தோடிப்போம்.

**"தத்$_3$ யத$_2$ா இஷீகதூலமக்$_3$நௌ ப்ரோதம் ப்ரதூ$_3$யேத।**
**ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூ$_3$யந்தே॥"**

[அக்னியில் இடப்பட்ட பஞ்சு எப்படிக் கொளுத்தப்படுகிறதோ அப்படியே இவனுடைய எல்லாப் பாபங்களும் கொளுத்தப்படுகின்றன.] என்றல்லவோ சாந்தோக்ய உபனிஷத்தில் போய பிழைகளின் நாசம் சொல்லப்பட்டது.

**"தத்$_3$ யத$_2$ா புஷ்கரபலாஶ ஆபோ ந ஶ்லிஷ்யந்தே।**
**ஏவம்விதி$_3$ பாபம் கர்ம ந ஶ்லிஷ்யதே॥**

[எப்படித் தாமரையிலையில் தண்ணீர் ஒட்டுவதில்லையோ அப்படியே இம்மாதிரி அறிபவனிடத்தில் பாபகர்மம் ஒட்டாது.] என்னும் வாக்யத்தினால் உத்தராகத்தின் (பின் வரும் பாபம்) விநாசம் சொல்லப்பட்டது. பூர்வாகமாவது:- எம்பெருமானை அடைவதற்கு முன் இவன் அறிந்தும், அறியாமலும் செய்த பாபங்கள்; உத்தராகமாவது:—பகவானை அடைந்ததற்குப்பின் ப்ரக்ருதிவாஸனையாலே அறியாமல் செய்த பாபங்கள். பாபமாவது:-சேதனன் செய்யும் துஷ்கர்மங்களைக்கண்டு ஸர்வேச்வரனுடைய திருவுள்ளத்தில் பிறக்கும் நிக்ரஹம். இவன் அநுகூலனானவுடன் முன்செய்த பாபங்களை மறந்துவிடுவான் மாதவன். பின்செய்யும் பாபங்களைக் காணக்கண்ணிட்டிருப்பான் கேசவன். ஆகையாலேயே "போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்" எனப்படுகிறது. இவ்விடத்தில் **"தத$_3$தி$_4$க$_3$ம உத்தர பூர்வாக$_4$யோ:அச்லேஷவிநாஶௌ தத்$_3$வ்யபதே$_3$ஶாத்"** [ப்ரஹ்ம வித்யையை அடைந்தவனுக்கு உத்தராகங்கள் ஒட்டமாட்டா; பூர்வாகங்கள் நசித்துவிடும். அப்படியன்றோ வேத வாக்யங்கள் சொல்லுகின்றன.] என்னும் வேதாந்தஸூத்ரமும் அவ்விடத்தில் ஸ்ரீபாஷ்யமும் அநுஸந்திக்கத்தக்கவை.

(செப்பு) "விரோதியான பாபம் போகைக்கு மநோ வாக்காயங்கள் மூன்றாலும் அநுபவிக்கவேண்டும் என்னும் நிர்ப்பந்தமில்லை; வாயாலே சொன்னாலே போதுமானது" என்று தாத்பர்யம். "தூயோமாய்வந்து... தூசாகும்; மாயனை... தாமோதரனைச் செப்பு" என்று அந்வயம் கொள்ளல் சிறந்தது.

## திருப்பாவை ஆறாம் பாட்டு

6. புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ
பிள்ளாய் எழுந்திராய் பேய் முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக்கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்(து) அரியென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோரெம்பாவாய்

**பதவுரை:—புள்ளும்**—*பறவைகளும்,* **சிலம்பின காண்**—*கூவிக்கொண்டு செல்லாநின்றன காண்;* **புள் அரையன் கோ இலில்**—*பட்சிகளுக்கு அரசனை கருடாழ்வானுக்கு ஸ்வாமியான ஸர்வேச்வரனுடைய ஸந்நிதியிலே,* **வெள்ளை விளி சங்கின்**—*வெண்மையானதும், (எல்லாரையும்) கூப்பிடுவதுமான சங்கத்தினுடைய,* **பேர் அரவம்**—*பெரிய ஒலியையும்,* **கேட்டிலையோ**—*கேட்கவில்லையோ?* **பிள்ளாய்!**—*(பகவத்விஷயத்தில் புதியவளான)பெண்ணே!,* **எழுந்திராய்**-*(சீக்கிரமாக) எழுந்திரு;* **பேய் முலை நஞ்சு**—*(தாய் வடிவுகொண்ட) பேயாகிய பூதனையின் முலையில் (தடவியிருந்த) விஷத்தை,* **உண்டு**—*(அவளுடைய ஆவியுடன்) அமுது செய்து,* **கள்ளச் சகடம்**-*வஞ்சனை பொருந்திய சகடாஸுரனை,* **கலக்கு அழிய**-*கட்டுக் குலையும்படி,* **கால் ஓச்சி**—*திருவடிகளை நிமிர்த்து,* **வெள்ளத்து**—*திருப்பாற்கடலில்,* **அரவில்**—*ஆதிசேஷன்மீது,* **துயில் அமர்ந்த**—*திருக்கண் வளர்ந்தருளிய,* **வித்தினை**-*ஜகத்காரணபூதனை எம்பெருமானை,* **முனிவர்களும்**-*(பகவானை) மனனம் செய்பவரும்,* **யோகிகளும்**—*யோகாப்யாஸம் செய்யும் கைங்கர்யபரர்களும்,* **உள்ளத்துக் கெண்டு**—*ஹ்ருதயத்திலே (எம்பெருமானை) தியானித்து,* **மெள்ள எழுந்து**—*(ஹ்ருதயத்திலிருக்கும் அப்பெருமான் அசையாதபடி) ஜாக்ரதையாக எழுந்திருந்து,* **அரி என்ற**—*"ஹரிர் ஹரி:" என்ற,*

**பேர் அரவம்**—பெரிய ஒலியானது. **உள்ளம் புகுந்து**—எங்களுடைய நெஞ்சிலே புகுந்து. **குளிர்ந்து**—குளிர்ந்தது;

அவதாரிகை:—முதல் ஐந்து பாட்டுகளாலே க்ருஷ்ணானுபவமாகிற ப்ராப்யத்துக்கு உபகரணங்களைச் சொல்லி, மேல் பத்து பாட்டுகளாலே பகவதநுபவத்துக்கு ஸஹகாரிகளை எழுப்புகிறார்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் பகவதநுபவத்துக்கு முக்கிய ஸாதனமான பக்தியும், மற்ற உபகரணங்களும், அநுபவிக்கப்படுபவனான க்ருஷ்ணனும், அநுபவிக்கத்தகுந்த காலமும், ஊராருடைய இசையும் உண்டாயிருக்கும்போது தனித்தனியே அநுபவிக்காமல் ஒருவரையொருவர் எழுப்பக் காரணமென்னென்னில்: பெருக்கெடுத்து வரும் ஆற்றில் நீராடப்புகுமவர்கள் துணைதேடுமாப்போலே, க்ருஷ்ணன்கிற தடாகத்திலே நீராடும் இவர்களும் ஸஹகாரிகளைத் தேடுகிறார்கள். "காலாழும் நெஞ்சழியும் கண் சுழலும்" என்றும், "உயிர் காத்து ஆட்செய்ம்மின்" என்றும், "ஆழியொடும் பொன்னார் சார்ங்கமுடைய அடிகளை இன்னார் என்றறியேன்" என்றும் சொல்லப்பட்ட விஷயமாகையாலே தனியே அநுபவிக்கவொண்ணாது. "அடியார்கள் குழாங்களை உடன் கூடுவதென்றுகொலோ" என்று நித்யஸூரிகளுக்கும் ஸ்ரீவைகுண்டநாதனை அநுபவிக்கும்போது துணை வேண்டியிருந்தது. "இமையோர் தமக்கும்–செவ்வே நெஞ்சால் நினைப்பரிதால் வெண்ணெய் ஊண் என்னும் ஈனச்சொல்" என்கிறபடியே அந்த நித்யஸூரிகளுக்கும் அளவிடவொண்ணாதபடியான நீர்மையையும், மேன்மையையும், அழகையும் உடையவனான க்ருஷ்ணனை அநுபவிக்கும்போது, இடக்கையும், வலக்கையும் அறியாத இடைச்சிகளுக்குத் துணைவேண்டுமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? மேலும், "ஏகஸ் ஸ்வாது₃ ந பு₄ஞ்ஜீத" [நல்ல வஸ்துவைத் தனியாகப் புசிக்கலாகாது.] என்று சொல்லப்பட்டிருக்கையாலும், க்ருஷ்ணனை அநுபவிக்கவேணும் என்னும் ருசியுடையவர்கள் இழக்கவொண்ணாது என்னும் க்ருபையாலும், பகவானை அநுபவிக்கும்போது அடியார்களை முன்னிட வேண்டியதே முறையாகையாலும் இவர்களையும் எழுப்புகிறார்கள். 'செய்யாதன செய்யோம்' என்று இரண்டாம் பாட்டில் சொன்னதை மேல் பத்துப் பாட்டுகளாலும் அநுஷ்டித்துக் காட்டுகிறார்கள்.

எல்லாருக்கும் க்ருஷ்ணனிடத்தில் ப்ரீதி ஸமானமாக இருக்கும்போது, சிலர் எழுப்பவும், சிலர் உறங்கவுமாகவிருப்பது எப்படி? என்னில், கண்ணனுடைய குணங்கள் சிலரை மயங்கப்பண்ணுகை

யாலும், சிலரை இருந்தவிடத்தில் இருக்கவொட்டாதே துடிக்கப் பண்ணுகையாலும், சிலரைச் சிலர் எழுப்பத்தட்டில்லை. இப்பாட்டில் புதிதாக பகவத்ஸம்பந்தம் பெற்ற ஒருத்தியை எழுப்புகிருர்கள்.

வியாக்கியானம்:—(புள்ளும் சிலம்பின காண்) முந்துற உணர்ந்த பெண்பிள்ளைகள் "விடியற்காலையில் எழுந்திருப்பதாகச் சொன்ன நீ இன்னும் உறங்கலாமோ?" என்ருர்கள்; "இன்னம் விடியவில்லையே" என்ருள் இவள்; "விடிந்துவிட்டதே" என்ருர்கள் அவர்கள். "விடிந்ததற்கு அடையாளம் வேண்டாவோ? நீங்கள் சொன்னதையே வேதவாக்காகக் கொள்ளமுடியுமோ?" என்று கேட்டாள் இவள். "நாங்கள் உணர்ந்து வந்ததே போதாதோ?" என்ருர்கள். "உங்களுக்கு உறக்கமே கிடையாதே. நீங்கள் உணர்ந்திருப்பது விடிந்தமைக்கு அடையாளமன்று" என்ருள். "புள்ளும் சிலம்பின காண்" என்று பதில் சொல்லுகிருர்கள். "அறிவற்றவையான பக்ஷிகளும் கிளம்பி இரை தேடிச் செல்கின்றன; இந்த அடையாளம் போதாதோ" என்று கேட்டார்கள். "பக்ஷிகளும் உங்களுடைய பேரொலியினல் விழித்துக் கொண்டு கிளம்பியிருக்கின்றன. நீங்கள் பிறந்த ஊரில் பக்ஷிகளுக்கு உறக்கமுண்டோ? 'காலை எழுந்திருந்து கரிய குருவிக் கணங்கள் மாலின் வரவு சொல்லி மருள்பாடுதல் மெய்ம்மை கொலோ' என்பதல்லவோ உங்கள் வார்த்தை. வேறு அடையாளமுண்டாகில் சொல்லுங்கள்" என்று கிடந்தாள்.

(புள்ளரையன் கோயிலில்...) "அது கிடக்கட்டும்; திருப்பள்ளியெழுச்சிக்குச் சங்கூதுவதும் உன் காதிலே கேட்கவில்லையோ?" என்கிருர்கள். 'புள்' என்று கருடாழ்வானைச் சொல்லுவதாகக் கொண்டு 'புள்ளரையன்' என்று கருடனுடைய ஸ்வாமியான நாராயணனைச் சொல்லுகிறது. 'புள்' என்று பக்ஷிகளைச் சொல்லுவதாகக்கொண்டு அவைகளுக்கு அரசனை கருடனுக்கு ஸ்வாமியான ஸர்வேச்வரனை 'புள்ளரையன் கோ' என்று குறிப்பதாகக்கொண்டு அவனுடைய இருப்பிடத்தில் என்றும் பொருள் கொள்ளலாம். ஸர்வேச்வரனே க்ருஷ்ணனுக அவதரித்திருக்கும்போது அங்கு நாராயணனுக்குத் தனியாகவும் ஒரு கோயிலுண்டோ? என்னில்: ஸ்ரீராமபிரான் அவதரித்திருந்தபோதும் ரங்கநாதன் அங்கு எழுந்தருளியிருந்ததைப்போல் இங்கும் ஒரு கோயிலுண்டாகக் குறையில்லை. "புள்ளரையன் கோயில்" என்று க்ருஷ்ணனுடைய க்ருஹத்தைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். (புள்ளரையன்) கருடாழ்

வானைக்கொண்டே ஸர்வேச்வரனை நிரூபிக்கவேண்டியிருக்கிறது. லக்ஷ்மணனை "ராமாநுஜன்" [ராமனுக்குத் தம்பி.] என்று சொல்லு வதுபோல் ராமனையும் "லக்ஷ்மணபூர்வஜன்" [லக்ஷ்மணனுக்குத் தமையன்.] என்று சொல்லவேண்டியிருக்கிறதன்றோ. "வேதம் வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து" என்று சொல்லப்பட்டதாகையாலே வேதாத்மாவான கருடனை முன்னிட்டுக்கொண்டு பகவத் விஷயத்திலிழிகிறார்கள். (வெள்ளை...சங்கின்) "சங்கு வெளுத்திருப்பது விடிந்தமைக்கு அடையாளமாகிவிடுமோ?" என்றாள். (விளி சங்கின்) "பொழுது விடிந்துவிட்டது எழுந்திருங்கள் என்று அழைக்கும் சங்காயிற்றே" என்றார்கள். "சாமங்கள் தோறும் கோயிலில் முறையுடை யாரை அழைக்கும் சங்கொலியாயிருக்கலாமே; அதைக்கொண்டு பொழுது விடிந்ததென்று எப்படி நிச்சயிப்பது?" என்றாள். (பேரரவம்) "விடிந்தபின் ஒலிக்கும் பேரொலியன்றோ இப்போது ஒலிப்பது; பாஞ்சஜன்ய த்வனியிலும் அதிகமாகவன்றோ இப்பெரு முழக்கமிருப்பது; உன்னுடைய தூக்கத்தையும் தவிர்க்கக்கூடியதா யன்றோ முழங்குகிறது" என்கிறார்கள். (வெள்ளை விளி சங்கின்) சங்கின் வெளுப்பைச் சொல்லுகையாலே சங்கத்தை ஊதும்போது முகமுத்ரையும் சங்கின் வெளுப்பும் இவர்களுக்கு உத்தேச்யமாயிருக் கிறது என்று தோற்றுகிறது. "வெள்ளை விளி சங்கிடங்கையில் கொண்ட விமலன்" என்றும், "பூங்கொள் திருமுகத்து மடுத்தூதிய சங்கொலியும்" என்றும் வெள்ளை விளிசங்கேந்திய விமலனைக் காண வும், அச்சங்கொலியைக் கேட்கவும் ஆசைப்படுபவளன்றோ இவள்.

இவர்கள் இப்படிச்சொல்ல, பதில் சொல்லாமல் கிடந்தாள். (பிள்ளாய்) "பகவத்விஷயத்திலே புதியையாகையாலே பகவதனு பவத்தின் எல்லை நிலமான பாகவத ஸம்ச்லேஷத்தின் இனிமையை அறியாமல் கிடக்கிறாய். நாங்கள் உன்னைக் காண ஆசைப்படுவது போல் நீயும் எங்களைக் காண ஆசைப்படவேண்டாவோ?" என் றார்கள். "க்ருஷ்ண ஸம்ச்லேஷத்தளவிலேயோ நான் நிற்கிறேன்? உங்களுடைய பேச்சே தாரகமாகக் கேட்டுக்கிடக்கிற என்னை 'பிள் ளாய்' என்கிற நீங்களன்றோ பிள்ளைகள்" என்றாள். "பிள்ளாய் எழுந்திராய்" என்று பதில் சொல்லுகிறார்கள். "'அடியார்கள் தம் ஈட்டம் கண்டிடக் கூடுமேல் அது காணும் கண் பயனாவதே' என் றும், 'அடியார்கள் குழாங்களை உடன் கூடுவதென்றுகொலோ?' என்றும், 'பேராளன் பேரோதும் பெரியோரை ஒருகாலும் பிரி கிலேனே' என்றுமன்றோ நம் பூர்வர்களுடைய வார்த்தை; அப்படியே

நாங்களும் உன் வடிவைக் காணவேணுமென்று ஆசைப்பட்டிருக்கும்போது நீ எங்களுடைய பேச்சைக்கேட்டு த்ருப்தியடைவது உன் பிள்ளைத்தனத்தையே காட்டுகிறது; ஆகையால் உன் பிள்ளைத்தனத்தைத் தவிர்ந்து எழுந்திராய்" என்கிறார்கள்.

'உணர்ந்திருக்கிற உங்களை யார் எழுப்பினார்கள்?' என்று கேட்டாள். (பேய் முலை...) "எங்களை ஒருவரும் எழுப்பவில்லை; விடியற்காலையில் பகவத்பக்தர்களுடைய ஹரிநாமஸங்கீர்த்தனத்வனியைக் கேட்டு எழுந்திருந்தோம்" என்கிறார்கள். (பேய் முலை நஞ்சுண்டு) "எம்பிரானுக்கு வந்த பேராபத்தைக் கேட்டிலையோ? பெரியாழ்வாரோடு ஸம்பந்தமுடையவளாயிருந்தும் இன்னும் உறங்கலாமோ?" என்கிறார்கள் இவள் சடக்கென எழுந்திருக்கைக்காக. (பேய் முலை நஞ்சுண்டு) "கா₃டம் கராப்₄யாம் ப₄க₃வாந் ப்ரபீட்₃ய தத் ப்ராணை: ஸமம் ரோஷஸமந்விதோபிப₃த்" [பகவானான க்ருஷ்ணன் அந்தப் பூதனையின் ஸ்தனத்தை இறுகப்பிடித்துக்கொண்டு கோபத்துடன் கூடியவனாய், உயிருடன் சேர்த்துக் குடித்தான்.] என்று ஸ்ரீபாகவதத்தில் சொல்லியபடியே பெற்ற தாயும் உதவாத தசையிலே நலியவந்த பூதனையைக்கொன்று. "பேய் முலை நஞ்சுண்டு" என்று இவள் பயப்படுகைக்காகச் சொன்னார்கள்; அது "விரோதி போகப்பெற்றதே!" என்று இவள் பயம் கெடுகைக்குக் காரணமாயிற்று. (கள்ளச் சகடம்) "பேயாவது ஆராய்ந்துகொல்லலாம்; தாயே ரக்ஷையாக வைத்த சகடமல்லவோ நலியவந்தது" என்கிறார்கள். அஸுராவேசம் பெற்ற வண்டியாகையாலே 'கள்ளச் சகடம்' என்கிறது. (கலக்கு அழியக் காலோச்சி) வண்டியானது கட்டழியும் படியாகத் திருவடிகளை உதைத்து. முலை வரவு தாழ்த்ததென்று சீறி நிமிர்ந்த திருவடிகள் பட்டு முறிந்தது. இதுவும் அவளுடைய பயம் கெடுகைக்கே காரணமாயிற்று.

(வெள்ளத்து அரவில் துயிலமர்ந்த வித்தினை) "இவ்வபாயங்கள் ஒன்றுமில்லாதவிடத்தில், பரிவனான திருவனந்தாழ்வான் மேலே கண்வளரப்பெற்றதே!" என்று ஸந்தோஷிக்கிறார்கள். (வெள்ளம்) திருமேனியின் மென்மைக்குத் தக்கபடி குளிர்ச்சியை உடைத்தாயிருக்கை. (அரவில்) அந்த நீர் உறுத்தாமைக்காக, மென்மை, குளிர்த்தி, வாஸனை முதலியவற்றை இயற்கையாக உடைய திருவனந்தாழ்வான் மேலே கண்வளர்ந்தருளுகிறபடி. (அரவு) "ஆங்காரவாரம் அது கேட்டு அழலுமிழும்...அரவு" என்கிறபடியே விரோதிகளைத் தன் மூச்சுக்காற்றாலே பொடிபடச்

செய்பவனுடையாலே பயப்படவேண்டியதில்லை என்று பாவம். (துயில் அமர்ந்த) ஜகத்ரக்ஷணசிந்தைசெய்துகொண்டு கிடக்கை. "ஓர் ஆச்ரிதனுடைய ஹ்ருதயத்தைக் கிடைக்கப்பெறுவோமோ?" என்று மநோரதித்துக் கிடக்கிறபடி. (அமர்ந்த) பிராட்டிமார்களின் போகத்தையும் நினையாமலிருக்கை. (வித்தினை) அவதாரங்களுக்கெல்லாம் விதையாயிருப்பவன். வேதமும் "அநந்தம்" என்று பகவானுடைய கணக்கற்ற அவதாரங்களை அனுபவித்து, "ஸமுத்₃ரே நந்தம்" என்று அவதாரங்களுக்கு மூலபூதனை க்ஷீராப்திநாதனிடம் ஈடுபட்டது; இவர்களும், "பேய்முலை நஞ்சுண்டு கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி" என்று அவதாரத்தை அனுபவித்து, "வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை" என்று அவதாரங்களுக்கு அடியான க்ஷீராப்திநாதனைப் பேசுகிறார்கள். (வெள்ளத்து...வித்தினை) "வித்தை விரைக்கைக்கு நீரிலே சேர்த்தாப்போலே இருக்கை" என்று நாலாயிரப்படி. (வித்தினை) ஜகத்காரணபூதனை என்றும் பொருள் கொள்ளலாம்.

(உள்ளத்துக் கொண்டு) "அரவத்தமளியினோடும் அழகிய பாற்கடலோடும் அரவிந்தப் பாவையும் தானும் அகம்படி வந்து புகுந்து" என்கிறபடியே திருப்பாற்கடலோடும், திருவநந்தாழ்வானோடும், பிராட்டியோடும் தங்கள் நெஞ்சிலே கொண்டு. (உள்ளத்துக் கொண்டு) "மது கைடபாதிகள் இல்லாத இடம்; பனிக்கடலிலே நீராடி உண்டான விடாய் தீர மனக்கடலிலே கொண்டு" என்று ஈராயிரப்படி. (முனிவர்களும் யோகிகளும்) பகவானுடைய குணங்களை மனனம் செய்துகொண்டே இருப்பவர்கள் முனிவர்கள்; எப்போதும் எம்பெருமானுடன் கூடவிருந்து அவனுக்கு அடிமை செய்பவர்கள் யோகிகள். இங்கு உறங்குபவர்கள் முனிவர்களைப்போலே இருப்பவர்கள்; எழுப்புகிறவர்கள் யோகிகள் போன்றவர்கள். "வைகுந்தத்தமரரும் முனிவரும்" என்கிறபடியே பரமபதத்திலுள்ளாரும் இரண்டு விதமாயன்றோ இருப்பது. எம்பெருமான் திருவாய்ப்பாடியில் அவதரித்தவுடன் வைகுந்தத்து அமரரும் முனிவரும் இங்கு வந்து அவதரித்திருக்கின்றனர்போலும். (மெள்ள எழுந்து) கர்ப்பிணிகள் குழந்தைகளுக்கு நோவு வாராமல் எழுந்திருக்குமாப்போலே, இவர்களும் அந்தர்யாமி பகவானுக்கு ஒரு தீங்கும் வாராதபடி மெள்ள எழுந்திருக்கிறார்கள்.

**"ததஸ் தம் சிக்ஷிபுஸ் ஸர்வே ப₃ாலம் தைத்₃தேயகிங்கரா: |**
**பபாத ஸோऽப்யத₄: க்ஷிப்தோ ஹ்ருத₃யேநோத்₃வஹந் ஹரிம் ||"**

[பிறகு, அஸுரனுகிய ஹிரண்யகசிபுவின் கிங்கரர்களெல்லாரும் பாலனுன அந்த ப்ரஹ்லாதனைக் கீழே தள்ளினுர்கள்; தள்ளப்பட்ட அவனும், ஹரியை நெஞ்சினுல் தரித்துக்கொண்டு கீழே விழுந்தான்.] என்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் சொல்லப்பட்டது. ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானைப் பெரிய கற்களோடே கட்டி மலையில் நின்றும் கீழே தள்ளினுர்கள்; அவன் தன்னுடைய நோவைப் பொருட்படுத்தாமல் 'எம்பெருமானுக்கு என் வருகிறதோ?' என்னும் பயத்தாலே தன் கைகளாலே மார்பைப் புதைத்துக்கொண்டு "எம்பிரானே! நோக்கியருளவேணும்" என்ருப்போலே இவர்களும் ஸர்வேச்வரனுடைய ஸௌகுமார்யத்தைக்கண்டு அஸ்தாநே பயசங்கை பண்ணிமெள்ள எழுந்திருக்கிருர்கள். (அரியென்ற) ஸர்வபாபங்களையும் போக்கடிப்பவன் என்பதை உணர்த்தும் அவனுடைய திருநாமத்தை அனுஸந்திக்கை.

"ஹரிர் ஹரதி பாபாநி து$_3$ஷ்டசித்தைரபி ஸ்ம்ருத: ।
அநிச்ச$_2$யாऽபி ஸம்ஸ்ப்ருஷ்டோ த$_3$ஹத்யேவ ஹி பாவக:॥"

[கெட்ட மனமுடையவர்களால் நினைக்கப்பட்டாலும், ஹரியானவன் அவர்களுடைய பாபங்களைப் போக்கடிக்கிருன்; விருப்பமில்லாமல் தொடப்பட்ட அக்னியும் கொளுத்துகிறதன்ருே?] என்றல்லவோ சொல்லப்பட்டது. இவர்களுக்குப் பாபமாவது:- க்ருஷ்ணனுக்கு அஸுரர்களாலே வரும் தீங்கு. அவ்வாபத்துக்களை அவனேபோக்கியருளவேணும் என்று மங்களாசாஸனம் செய்கிருர்கள் "ஹரிர் ஹரி:" என்னும் அனுஸந்தானத்தாலே. (பேரரவம்) ஆய்ப்பாடி முழுவதும் இந்த ஒலியேயாயிருக்கை. (உள்ளம் புகுந்து குளிர்ந்து) படுக்கையின் கீழே வெள்ளம் புகுந்தாற்போலே, திருநாமம் செவிவழியே புகுந்து நெஞ்சைக் குளிரச்செய்தது. அவன் அவர்கள் நெஞ்சிலே புகுந்து அவர்களை ஆனந்திப்பித்தாற்போலே க்ருஷ்ணனைப் பிரிந்து புண்பட்டுக் கிடக்கிற எங்களுடைய நெஞ்சை அவனுடைய திருநாம ஸங்கீர்த்தனத்வனி ஆனந்திப்பித்தது; ஆகையாலே நாங்களும் எழுந்திருந்தோம்; நீயும் எழுந்திருப்பாயாக என்கிருர்கள்.

## திருப்பாவை—ஏழாம் பாட்டு.

7. கீசு கீசென்(று) எங்கும் ஆனைச் சாத்தன் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ பேய்ப்பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக் கை பேர்த்து

வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினல்
ஓசை படுத்தத் தயிரரவம் கேட்டிலேயோ
நாயகப் பெண் பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ
தேசமுடையாய்! திறவேலோரெம்பாவாய்.

பதவுரை:— **பேய்ப் பெண்ணே!** *(பகவத்விஷய ரஸத்தை அறிந்தும் மறந்து கிடக்கிற) மதிகேடீ!* **எங்கும்**-*எல்லா திசைகளிலும்,* **ஆனைச் சாத்தன்**—*வலியன் என்னும் பரத்வாஜ பக்ஷிகள்,* **கீசு கீசு என்று**–*கீச்சு கீச்சு என்று,* **பேசின**–*பேசிய,* **பேச்சு அரவம்**–*பேச்சின் ஒலியை,* **கேட்டிலேயோ**–*(நீ)கேட்கவில்லேயோ?* **வாசம் நறும் குழல்**—*மிக்க பரிமளத்தையுடைய மயிர் முடியையுடைய,* **ஆய்ச்சியர்**—*இடைச்சிகளுடைய,* **காசும்**-*அச்சுத்தாலியும்,* **பிறப்பும்**-*முளைத்தாலியும்,* **கலகலப்ப**-*கலகலவென்று ஒலிக்கும்படியாக,* **கை பேர்த்து**—*கைகளை அசைத்து,* **மத்தினல்**—*மத்தினலே,* **ஓசை படுத்த**—*ஓசை படுத்திய,* **தயிர் அரவம்**–*தயிரோசையையும்,* **கேட்டிலேயோ**–*(நீ) கேட்கவில்லேயோ?* **நாயகப் பெண் பிள்ளாய்** — *பெண்களுக்கெல்லாம் தலைவியாயிருப்பவளே!* **நாராயணன் மூர்த்தி கேசவனை**—*நாராயணனுடைய அவதாரமான கண்ணனை,* **பாடவும்**—*(நாங்கள்) பாடச்செய்தேயும்.* **நீ**—*நீ,* **கேட்டே கிடத்தியோ**— *(அப்பாட்டைக்) கேட்டும் (இப்படிக்) கிடக்கலாமோ?* **தேசம் உடையாய்**—*மிகுந்த தேஜஸ்ஸை உடையவளே!* **திற**—*கதவைத் திறந்துவிடு.*

அவதாரிகை:—இப்பாட்டில் பகவத்விஷயத்தின் ரஸமறிந்திருந்தும், மறந்து கிடப்பாள் ஒருத்தியை அழைக்கிருர்கள். 'சிலரை எழுப்பிவிட்டோம்' என்று த்ருப்தியடைபவர்களல்லர் இவர்கள். பஞ்சலக்ஷம் குடியிலுள்ள பெண்களில் ஒருத்தி குறைந்தாலும் க்ருஷ்ணனிடம் போகார்கள். தன்வயிற்றில் பிறந்த குழந்தையின் ஸம்ருத்திக்கு ஸந்தோஷிக்குமாப்போலே எல்லா பாகவதர்களுடைய ஸம்ருத்திக்கும் ஸந்தோஷிக்குமன்றே பாகவதத்வபூர்த்தி உண்டாவது. இவ்விடத்தில் பின்வரும் ஐதிஹ்யங்கள் அனுஸந்திக்கத் தக்கவை:— எம்பெருமானருடைய சிஷ்யரான ஆட்கொண்டவில்லி

ஜீயர் எழுந்தருளும்போது நஞ்ஜீயர் அவரை ஸேவித்து நிற்க, "பகவத் விஷயத்தில் ருசி நமக்கு மெய்யாகப் பிறந்ததில்லைகாணும்" என்று ஆட்கொண்டவில்லி ஜீயர் அருளிச்செய்ய, "உம்மைப்போலே ஆசார்ய வான்கள் உண்டோ? இங்ஙனே அருளிச்செய்வானென்?" என்று நஞ்சீயர் கேட்க, "பகவத்விஷயத்திலே மெய்யே ருசியுண்டென்று இருக்கையாவது,- பாகவதர்களைக் கண்டால் உகக்குமன்று காணும்" என்று அருளிச்செய்தார். ஸ்ரீதேவிமங்கலம் என்னும் ஊரிலே நஞ் ஜீயருடைய சிஷ்யர்கள் சிலர் அவ்வூரிலுள்ளோருக்கெல்லாம் அமுது செய்வித்துக்கொண்டிருப்பதைக் கண்டு உகந்த பட்டர் "நம்முடைய கையிலே சில மெய்யுண்டாயன்று; அடியிலே மெய்யருண்டாய் அவர்களுடைய மெய் இவ்வளவும் வரப்பேசுகிறது" என்று அருளிச்செய்தாராம். "நமக்கு ஸ்ரீவைஷ்ணவத்வபூர்த்தியில்லாவிடினும், நம் சிஷ்யரான நஞ்ஜீயரின் சிஷ்யர்களுக்கு ஸ்ரீவைஷ்ணவத்வ பூர்த்தியிருக்கையாலே அவர்களுடைய ப்ரபாவம் நம்மளவும் வெள்ளமிடும்" என்று தாத்பர்யம்.

**வியாக்கியானம்:**—"போது விடிந்தது; எழுந்திராய்" என்றார்கள்; "விடிந்ததற்கு அடையாளம் என்ன?" என்று கேட்டாள்; "ஆனைச் சாத்தன் கீசு கீசு என்றதன்றோ?" என்றார்கள். "ஓர் ஆனைச் சாத்தன் கூவினதினால் போது விடிந்ததாகிவிடுமோ?" என்றாள்; "கீசு கீசென்றெங்கும் ஆனைச்சாத்தன் பேசின" என்றார்கள். "உங்களுடைய த்வனியாலே அவை உணர்ந்திருக்கலாகாதோ என்றாள்;(கலந்து பேசின பேச்சரவம் கேட்டிலையோ?)என்கிறார்கள். "பகலெல்லாம் பிரியப்போகிறோம் என்னும் ஏக்கத்தாலே பட்சிகள் ஒன்றுடனொன்று கலந்து பேசும் ஒலியன்றோ இது" என்கிறார்கள். (கீசு கீசென்று...கேட்டிலையோ?) முனிவர்களும் யோகிகளும் ஹரி நாமஸங்கீர்த்தனம் செய்யும் த்வனியைப்போலே ஆனைச்சாத்தன் களின் கீச்சொலியும் இவர்களுக்கு உத்தேச்யமாயிருக்கிறது. (கீசு...) "பட்சிகளுங்கூடத் தங்கள் நாயகர்களின் பிரிவாற்றாமை யால் கூவுவதைக் கேட்டும் நீ க்ருஷ்ணவிரஹத்தை ஸஹித்திருப் பதே!" என்கிறார்கள். (பேய்ப் பெண்ணே) "இவர்களுக்கு இதுவே தான் வேலை" என்று பேசாமலிருந்தாள்; "பாகவதஸம்ச்லேஷத் தின் ரஸத்தை அறிந்திருந்தும் உபேக்ஷித்திருக்கும் மதிகேடீ" என் கிறார்கள். இங்கு அறிவாவது:— பகவானை அனுபவிப்பதைக்காட் டிலும் பாகவதர்களை அனுபவிப்பது நன்றென்று அறிகை. "போது விடியாமலிருக்கும்போது 'விடிந்தது' என்று சொல்லுகிற நீங்க ளன்றோ பேய்ப்பெண்கள்; விடிந்தமைக்கு வேறு அடையாளமுண்

டாகில் சொல்லுங்கள்'' என்ருள். (காசும் பிறப்பும்...) ''இவ்வூரில் பெண்கள் தயிர் கடைவதுகூட உன் காதில் விழவில்லையா?'' என்கிருர்கள். (காசும் பிறப்பும்) அச்சுத்தாலியும், ஆமைத்தாலியும். (கல கலப்ப) கடைகிற வ்யாபாரத்தாலே ''அரவூறு சுலாய் மலை தேய்க்கு மொலி'' என்னுமாப்போலே த்வனிக்கை. ஆபரணத்வனியும் இவர்களுக்கு உத்தேச்யமாயிருக்கிறது. (கை பேர்த்து) தயிரின் பெருமையாலும், இவர்களுடைய மார்த்தவத்தாலும் மலை பேர்த்தாற் போலே கை பேர்க்கிறபடி. க்ருஷ்ணனைப் பிரிந்ததினுல் ஏற்பட்ட சோர்வைக் காட்டுவதாகவும் கொள்ளலாம். அன்றிக்கே, அவன் அருகிலிருந்து 'தயிரை மோராக்கவொட்டேன்' என்று கையைப் பிடித்து இழுக்கையாலே கடைகையில் உண்டான சிரமத்தைக் காட்டுவதாகவும் கொள்ளலாம். (வாச நறுங்குழலாய்ச்சியர்) மயிர் முடி அவிழ்ந்து அதிலுள்ள பரிமளம் எங்கும் வெள்ளமிடுகிறதை உணர்த்துகிருர்கள. ''தெருவெல்லாம் காவி கமழ் திருக்காட்கரை'' என்னுமாப்போலே. ''ஊரை உறங்கவொட்டாதபடி வாஸனை வெள்ளமிடுகையில் நீ எப்படித்தான் உறங்குகிருயோ?'' என்று பாவம். (ஆய்ச்சியர்) 'ஒருத்தியன்ரே' என்று சொல்லமுடியாதபடி திருவாய்ப்பாடியிலுள்ள இடைச்சிகளெல்லாம் தயிர் கடைவதில் ஈடுபட்டார்கள். (மத்தினுல்...கேட்டிலையோ) மந்தரமலையாலே திருப்பாற்கடலைக் கலக்கினுற்போலே முழங்கும் இந்த சப்தமும் உன் செவியில் புகவில்லையோ?

''உத்₃கா₃யதீநாமரவிந்த₃லோசநம்
வ்ரஜாங்க₃நாநாம் தி₃வமஸ்ப்ருஶத் த்₄வநி:।
த₃த்₄நச்ச நிர்மந்த₂நஶப்தமிச்ரிதோ
நிரஸ்யதே யேந தி₃ஶாமமங்க₃ளம்॥''

[தாமரைக்கண்ணனை நினைத்துப் பாடுகிற கோபஸ்த்ரீகளின் ஒலியானது, தயிர் கடையும் ஓசையுடன் கூடிக்கொண்டும், திசைகளின் அமங்களங்களைப் போக்கிக்கொண்டும் ஸ்ரீவைகுண்டத்தையும் எட்டியது.] என்று சொல்லப்பட்ட ஓசை உன் செவியில் படாதிருப்பதே! ''தி₃வமஸ்ப்ருசத் த்₄வநி:'' என்றவிடத்திற்குப் பொருளாக '''க்ருஷ்ணகுணங்கள் பூமியிலே நடையாடாநிற்க மலையிலே இருப்பாரைப்போலே உயர இருப்பதே!' என்று அவர்களை வசை பாடினுப்போலே இருந்தது'' என்று ஆருயிரப்படியில் அருளிச்செய்யப்பட்டது இங்கு அனுஸந்திக்கத்தக்கது. (கேட்டிலையோ) 'இதைக் கேட்கவொட்டாதபடி உள்ளேயும் ஒரு தயிருண்டோ?' என்கிருர்கள். 'ப்ரணயகலஹம் நடக்கின்றதோ?' என்று பாவம்.

"முன் போலேயோ? க்ருஷ்ணன் பிறந்த பின்பு வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்களாயன்றோ இருப்பது. 'முப் போதும் கடைந்தீண்டிய வெண்ணெய்' என்கிறபடியே இரவும் பகலும் இடைவிடாதே தயிர் கடைகையே பொழுதுபோக்காகவன்றோ இருப்பது; ஆகையால் இது விடிவுக்கு அடையாளமன்று" என்று பேசாமல் கிடந்தாள். "நாயகப் பெண்பிள்ளாய்" என்கிறார்கள்; "பெண்களுக்கெல்லாம் தலைவியாயிருப்பதற்கு இதுவா அடையாளம்?" என்று தாத்பர்யம். "நீ எங்களுக்கெல்லாம் தலைவியாயிருக்கும் செருக்கினாலேயன்றோ இப்படி சொன்ன வார்த்தைகளுக்கெல்லாம் பதில் சொல்லிக்கொண்டு கிடக்கிறாய்" என்கிறார்கள். (நாயகப் பெண் பிள்ளாய்) "தலைவியான நீ எங்களை உணர்த்த வேண்டியிருக்க நாங்கள் உன்னை உணர்த்தும்படியாக இருப்பதே!" என்கிறார்கள். உள்ளத்தில் அன்புடையவர்களாகையாலே "பேய்ப் பெண்ணே!" என்றதும், "நாயகப் பெண்பிள்ளாய்!" என்றதும் ஒன்றாயிருக்கிறது. "உங்களுக்கு அடிமையான என்னை 'நாயகப் பெண் பிள்ளாய்!' என்றழைக்கலாமோ? நீங்கள் அழைக்கும்போது நான் வாராமலிருந்துவிடுவேனோ?" என்றாள். இவள் சடக்கெனப் புறப்படுகைக்காகக் கண்ணன் கேசியைக் கொன்ற விருத்தாந்தத்தைப் பேசுகிறார்கள். (நாராயணன்...பாடவும் நீ கேட்டே கிடத்தியோ?) நாயகப் பெண் பிள்ளாய் என்றவிடத்திலும் வாய் திறவாமையாலே, "நீ எழுந்திருக்கவேண்டும் என்பதற்காக நாங்கள் பாடும்போது, அதையே தாலாட்டாகக்கொண்டு நீ தூங்கலாமோ?" என்பதாகவும் கொள்ளலாம்.

(நாராயணன்) முகம் தோற்றாமே அந்தர்யாமியாய் நின்று வாத்ஸல்யத்தாலே ரக்ஷிக்கும் ஸர்வேச்வரனுடைய. "நாரா: அயநம் யஸ்ய ஸ:" என்கிறபடியே தோஷங்களுக்கு ஓர் இருப்பிடமான வஸ்துக்களில் வியாபித்து நிற்கையாலே வாத்ஸல்ய குணத்துக்கு வாசகமாகிறது இத்திருநாமம். (மூர்த்தி) அவதாரம்; தன்னுடைய ஸௌசீல்யத்தாலே ஸர்வஸ்மாத் பரன் தன்னைத் தாழவிட்டுப் பிறந்தபடி. (கேசவனை) நம்முடைய கண்ணுக்குத் தோற்றும்படியாக வந்து, தன்னை நலிய வந்த கேசியைக் கொன்று தன்னை நமக்கு உதவிய உபகாரகனை.

**"யஸ்மாத் த்வயைவ து₃ஷ்டாத்மா ஹத: கேஶீ ஜநார்த்த₃ந।**
**தஸ்மாத் கேஶவநாமா த்வம் லோகே க்₂யாதிம் க₃மிஷ்யஸி॥"**

[ஜநார்த்தனனே! துஷ்டாத்மாவான கேசி உன்னுலேயே கொல்லப் பட்டானுகையாலே நீ உலகில் கேசவன் என்ற பெயரையுடையவனுய் கீர்த்தியடைவாய்.] என்னும் ப்ரமாணவசனம் இங்கு அனுஸந்திக்கத்தக்கது. (பாடவும்...) 'நாராயணன்' என்று அவனுடைய வாத்ஸல்யத்தையும், 'மூர்த்தி' என்று ஸௌசீல்யத்தையும், 'கேசவன்' என்று அடியார்களின் விரோதிகளைப் போக்கும் தன்மையையும் பாடியபோதிலும் நீ கேட்டுக்கொண்டே கிடக்கலாமோ? (பாடவும்...) பெரியாழ்வாருடன் ஸம்பந்தமுடையவளாயிருந்து, கேசிவ்ருத்தாந்தத்தைக் கேட்டுக் கிடக்கலாமோ?

"தம் த்₃ருஷ்ட்வா ஶத்ருஹந்தாரம் மஹர்ஷீணாம் ஸுகா₂வஹம் |
ப₃பூ₄வ ஹ்ருஷ்டா வைதே₃ஹீ ப₄ர்த்தாரம் பரிஷஸ்வஜே ||

[கரன் முதலிய எதிரிகளைக் கொன்றவரும், மஹரிஷிகளுக்கு ஸௌக்யத்தைக் கொடுப்பவருமான அந்த ராமபிரானைப் பார்த்து வைதேஹியானவள் பிரீதியடைந்தாள். கணவனை ராகவனை நன்ருகத் தழுவினுள்.] என்கிறபடியே கரனைக்கொன்ற சக்ரவர்த்திருமக மகனை காடாலிங்கனம் செய்துகொண்டபிராட்டியின் கோஷ்டியைச் சேர்ந்தவளாயிருந்தும் பேசமாலிருப்பதே! (நீ கேட்டே கிடத்தியோ?) "ஜனகராஜன் திருமகளைப்போலே நீயும் க்ருஷ்ணனை அணைக்கப் புறப்படுவாய் என்று கேசிவிஜயத்தைச் சொன்னேம். அதுவும் உனக்கு க்ருஷ்ணவிரோதிபயம் தீர்ந்து மார்பிலே கை வைத்து உறங்குகைக்கு ஹேதுவாய்விட்டதே" என்கிருர்கள்.

(தேசமுடையாய் திற) உன்னுடைய தேஜஸ் காட்டிலெரித்த நிலாவாகாமல், உன்னைக் காணுமே இருட்டடைந்து கிடக்கிற எங்களுடைய அந்தகாரத்தைப் போக்கிக்கொண்டு திறப்பாயாக. (தேசமுடையாய் திற) இவள் இவ்வளவுக்கும் பேசாமல் கிடக்கையாலே ஜாலக(சன்னல்)த்வாரத்தாலேபார்த்தார்கள்; க்ருஷ்ணன் கேசியைக் கொன்றதை அனுஸந்தித்ததிஞல் இவளுக்குத் திருமேனியில் ஏற்பட்ட புகரைக்கண்டு 'தேஜஃப்ரவாஹத்தை அணைசெய்யாதே வெட்டிவிடாய்' என்கிருர்கள்.

## திருப்பாவை—எட்டாம் பாட்டு.

8. **கீழ்வானம் வெள்ளென்(று) எருமை சிறு வீடு**
**மேய்வான் பரந்தன காண் மிக்குள்ள பிள்ளைகளும்**

போவான் போகின்றாரைப் போகாமல் காத்(து) உன்னை
கூவுவான் வந்து நின்றோம் கோதுகலமுடைய
பாவாய்! எழுந்திராய் பாடிப் பறை கொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால்
ஆவாவென்(று) ஆராய்ந்(து) அருளேலோரெம்பாவாய்.

**பதவுரை:—கோதுகலம் உடைய பாவாய்** — *(க்ருஷ்ணனுடைய) விருப்பத்தையுடைய பெண்ணே!* **கீழ் வானம்**— *கிழக்கு திக்கில் ஆகாசமானது,* **வெள்ளென்று**—*வெளுத்தது;* **எருமை**—*எருமைகள்,* **மேய்வான்**—*(பனிப்புல்) மேய்கைக்காக,* **சிறு வீடு**—*(விடியற்காலையில்) சிறிதுநேரம் அவிழ்த்து விடப்பட்டு,* **பரந்தன காண்**-*(வயல்களெங்கும்) பரவின;* **போவான் போகின்றார்** — *போவதையே ப்ரயோஜனமாகக்கொண்டு போகின்றவர்களான,* **மிக்குள்ள பிள்ளைகளையும்**—*மற்றுமுள்ள பெண் பிள்ளைகளையும்,* **போகாமல் காத்து**—*போகாதபடி தடுத்து,* **உன்னைக் கூவுவான்**—*உன்னைக் கூப்பிடுவதற்காக,* **வந்து நின்றோம்**–*(உன் வாசலில்) வந்து நிலையாக நின்றோம்;* **எழுந்திராய்**—*எழுந்திரு;* **பாடி**–*(கண்ணனுடைய குணங்களை) பாடி,* **பறை கொண்டு**—*(அவனிடம்) பறையைப்பெற்று,* **மா வாய் பிளந்தானை**—*குதிரை வடிவு கொண்ட கேசியின் வாயைப் பிளந்தவனும்,* **மல்லரை மாட்டிய**-*(சாணூரமுஷ்டிகர்கள் என்னும்) மல்லர்களை அழியச் செய்தவனும்,* **தேவாதி தேவனை**—*நித்யஸூரிகளுக்கெல்லாம் தலைவனுமான அவனை,* **நாம் சென்று சேவித்தால்**—*நாம் (அவனிடம்) சென்று பணிந்தால்,* **ஆராய்ந்து**—*(நம்முடைய குறைகளை) விசாரித்து,* **ஆ ஆ என்று அருள்**-*ஐயோ! என்று தயை பண்ணுவன்.*

அவதாரிகை:-எல்லாரும் வந்து அழைக்கும்படி க்ருஷ்ணனாலே விரும்பப்பட்டவளான ஒருத்தியை அழைக்கிறார்கள். "மிக்குள்ள பிள்ளைகளும்" என்றதினால் எல்லாரும் வந்து அழைக்கத்தக்கவள் என்பதும், "கோதுகலமுடைய பாவாய்" என்றதினால் க்ருஷ்ண வல்லபை என்பதும் தோற்றுகிறது.

*வியாக்கியானம்:*—ஸம்ஸாரிகளுக்கு ராத்திரிவேளையில், பரஹிம்ஸை முதலியவற்றைச் சிந்திப்பதும், நரகத்தைக் கொடுக்கும் விஷயங்களின் அனுபவமும், தமோகுணத்தின் மிகுதியினால் வந்த தூக்கமுமாய்ச் செல்லுகையாலே ராத்திரிவேளை அனிஷ்டமாகவும், புருஷார்த்த ஸாதனமான பகல்வேளை விரும்பத்தக்கதாகவுமிருக்கும்; இவர்களுக்கு க்ருஷ்ணனுபவத்துக்கு ஸஹகாரியாயிருக்கும் இராவேளை விரும்பத்தக்கதாகவும், க்ருஷ்ணனையும் இவர்களையும் சேரவொட்டாத ஆயர்கள் உணருங்காலமான பகல்வேளை அஸஹ்யமாகவுமிருக்கும். ஆகையாலே "க்ருஷ்ணனையும், நம்மையும் சேரவொட்டாதவர்கள் உணருங்காலம் உண்டானபின்பும் நீ உறங்கலாமோ?" என்றார்கள்; "அக்காலம் வந்ததென்று நீங்கள் எப்படி அறிந்தீர்கள்?" என்றாள். (கீழ் வானம் வெள்ளென்று) என்கிறார்கள். "இதற்கு முன்பு சொன்ன காரணங்கள் போலன்று இது; கிழக்கு வெளுத்துவிட்டது" என்கிறார்கள். "'அஞ்சுடர் வெய்யோன் அணிநெடுந்தேர் தோன்றாதால்' என்கிறபடியே க்ருஷ்ணவிரஹத்தாலே அஸஹ்யமாயிருக்கும் இரவைத் தொலைக்கும் ஸூர்யன் எப்போது வருவான் என்று நீங்கள் கிழக்கு திக்கையே நோக்கிக்கொண்டிருந்திருப்பீர்கள்; 'திங்கள் திருமுகத்துச் சேயிழையார்' ஆகையாலே உங்களுடைய முகத்தின் ஒளிபட்டுக் கீழ்த்திசை வெளுத்திருக்கக்கூடும்; மேலும், நீங்கள் எப்போதும் பாலையும், மோரையும், தயிரையும் பார்த்தே பழகினவர்களாகையாலே உங்களுக்குக் கண்டதெல்லாம் வெளுப்பாகத் தோன்றும். ஆகையால் இது சரியான அடையாளமன்று; வேறு அடையாளமுண்டாகில் சொல்லுங்கள்" என்றாள். (எருமை சிறு வீடு...பரந்தன காண்) என்கிறார்கள். "எருமைகள் பனிப்புல் மேய்கைக்காக வயல்களெங்கும் பரவின; இதுகூட விடிவுக்கு அடையாளமன்றோ?" என்கிறார்கள்; "மேட்டிள மேதிகள் தளைவிடும் ஆயர்கள்" [மேதிகள்—எருமைகள்.] என்று தொண்டரடிப்பொடியாழ்வார் எம்பெருமானை எழுப்பினார்; "எருமை சிறு வீடு... பரந்தன காண்" என்று இவள் அவனடியார்களை எழுப்புகிறாள். "இது ஆழ்வார்களுக்கும் இவளுக்கும் வாசி" என்று ஆறாயிரப்படி. (சிறு வீடு) சிறிது போது அவிழ்த்து விடுவது சிறு வீடென்றும், அதிகநேரம் மேயவிடுவது பெரு வீடு என்றும் ஆயர்களின் பரிபாஷை. கல்பஸூத்ரவ்யாக்யாதாவான பெரியாழ்வாரின் திருமகளான இவள் அக்னிஹோத்ரஹோமங்களின் வாசியறிகை தவிர்ந்து இடைச்சியாய், எருமைகளின் சிறு வீடு பெருவீடுகளின் வித்தியா

சத்தை அறியும்படியான மெய்ப்பாடு இருக்கிறபடி. (பரந்தன காண்) "காலிப்பின் போகும் பிள்ளையன்றோ க்ருஷ்ணன். அவற்றின் பின்னே அவனும் சென்றுவிட்டால் பின் யாரைக் காண்பது? நாம் உயிர் தரிக்க விரகேது? கெடுவாய்! எழுந்திராய்" என்றார்கள்.

"உங்களுடைய முகவொளியைக்கண்டு சிதறிப்போகிற இருளைக் கண்டு எருமைகளென்று பிரமிக்கிறீர்களேயொழிய எருமைகள் இன்னும் மேயப்போகவில்லை. உங்களுடைய முகவொளியைக் கீழ் திக்கின் வெளுப்பு நிறமாகக் கருதினீர்கள்; அது அந்யதாஜ்ஞானம்: இருளின் திரட்சியை எருமைகளென்று இப்போது நினைக்கிறீர்கள்; இது விபரீதஜ்ஞானம். ஆகையால் இவையெல்லாம் விடிவுக்கு அடையாளமன்று" என்றாள். "எங்களுடைய அறிவு அந்யதாஜ்ஞானமாகவும், விபரீதஜ்ஞானமாகவும் இருந்துவிட்டுப்போகிறது; அறிவில் சிறந்தவளான நீயாவது விடியவில்லை என்பதற்கு அடையாளம் சொல்லு" என்று கேட்டார்கள். "ஆய்ப்பாடியிலுள்ள அஞ்சு லக்ஷம் பெண்களில் இங்கு ஓராயிரம் பேர்கூட வந்திருக்க மாட்டார்கள் போலிருக்கிறதே; மற்றவர்கள் உணராததிலிருந்தே இன்னும் விடியவில்லையென்று தெரிகிறது" என்றாள். (மிக்குள்ள பிள்ளைகளும்...) என்று பதில் சொல்லுகிறார்கள். 'உன்னைத் தவிர மற்றெல்லாரும் போனார்கள்' என்றார்கள்; 'அவர்கள் என்னைக் கணிசிக்காமல் போய்விட்டனரே' என்றாள்; 'பெரிய திரளாகையாலே நீ போகவில்லையென்பதை அறியாமையால் போய்விட்டார்களே யொழிய உன்னை அலட்சியம் செய்து போனார்களல்லர்;' என்றனர். 'என்ன காரியத்துக்காகச் சென்றனர்?' என்று கேட்டாள்; (போவான் போகின்றாரை) 'அர்ச்சிராதி கதியாலே ஸ்ரீவைகுண்டத்துக்குச் செல்லுவாரைப்போலவும், அக்ரூரன் கண்ணனைப் பார்க்க வந்தாப்போலேயும், திருவேங்கட யாத்திரை செய்வாரைப்போலேயும் போவதையே ப்ரயோஜனமாகக்கொண்டு போனார்கள்' என்றார்கள். "என்னை விட்டு அவர்கள் சென்றுவிட்டார்களாகில் இனி நான் வந்து பிரயோஜனமென்ன?" என்றாள். "அவர்கள் போன அழகை நீ கேட்கவில்லையோ? போகின்ற அவர்களிடம் 'இன்னாள் வரவில்லை' என்றோம்; தடைகட்டின நாகம்போலே அசையாமல் நின்றுவிட்டார்கள்" என்கிறார்கள்; (போகாமல் காத்து) "அவர்கள் போகாதபடி காவலிடவில்லை; 'திருவாணை நின்னாணை' என்று ஆணையிடவில்லை; நீ வரவில்லை என்று ஒரு வார்த்தை காதில் பட்டவுடன் அவர்களுடைய திருவடிகள் விலங்கிட்டாப்போலே தானே நின்றுவிட்டன" என்கிறார்கள். (உன்னைக் கூவுவான் வந்து நின்றோம்) அவர்களை அங்கேயே

நிறுத்திவிட்டு உன்னை அழைப்பதற்காக நாங்கள் இங்கு வந்தோம்; அவர்கள் போவதையே ப்ரயோஜனமாகக்கொண்டு போளுப் போலே நாங்களும் உன்னைக் கூவுவதையே ப்ரயோஜனமாகக் கொண்டு இங்கு வந்தோம். (வந்து நின்றோம்)

"தேஷாம் ஸம்ப$_4$ாஷமாணாநாம் அந்யோந்யம் ஸ விபீ$_4$ஷண:।
உத்தரம் தீரமாஸாத்$_3$ய க$_2$ஸ்த$_2$ ஏவ வ்யதிஷ்ட$_2$த ॥"

[அந்த வானர வீரர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டிருக்கும் போது, அந்த விபீஷணாழ்வான் ஸமுத்திரத்தின் வடகரைக்கு வந்து ஆகாயத்திலே நின்றான்.] என்கிறபடியே ராவணனுடைய வீட்டி லிருந்து புறப்பட்டு ஸ்ரீராமபிரானருகில் வந்தவுடன் விபீஷணாழ் வான் நிலைநின்றாற்போலே நாங்களும் உன் வாசலிலே வந்து நிலைநின்றோம்.

"அப்பெண்களெல்லாருமிருக்கும்போது என் வாசலிலே வந்து கால் தரித்தோமென்று சொல்லுகைக்குக்காரணமென்ன? நான் உங்க ளுடன் கூடாமல் உறங்குவதைக் கண்டும் 'நீ இல்லாமல் நாங்கள் உயிர் தரியோம்' என்று நீங்கள் சொல்லும்படியாக எனக்கு என்ன ஏற்றமிருக்கிறது?" என்றாள். (கோதுகலமுடைய பாவாய்) என் கிறார்கள்; "உன் வாசல் வழியாகச் சென்றாலும் க்ருஷ்ணனாலே கொண்டாடப்படும்படியாயன்றோ நீ அவனுக்கு இனியையாயிருப் பது. உன் வாசலிலே வந்து உன் பேரைச் சொல்லி அழைக்கைக்கு மேற்பட ஏற்றமுண்டோ எங்களுக்கு? அவனாலும் தலையாலே தரிக் கப்படுபவளாய், எங்களுக்கும் இனியையாய், எங்களுக்கு க்ருஷ்ண னிடம் புருஷகாரபூதையாயிருப்பாளொருத்தியன்றோ நீ" என்கிறார் கள். (பாவாய்) "நீ பெண்பிள்ளையாயிற்றே; பெண்ணின் வருத்த மறியாத பெருமானைப்போலே நீயும் இருக்கலாமோ? 'நாரீணாம் உத்தமா வது$_4$:" எனப்பட்டவளன்றோ? எங்களாற்றாமையை நீயும் அறியமாட்டாயோ?" என்கிறார்கள். "முலையெழுந்தார் படி, மோவா யெழுந்தார்க்குத் தெரியாதிறே" என்று பட்டர் அருளிச்செய்வராம். (எழுந்திராய்) "நீ புறப்பட்டு எங்களுடன் கூடவேண்டியதுகூட வேண்டா; நீ எழுந்திருக்கும் அழகைப் பார்க்கவே நாங்கள் ஆசைப் படுவது" என்கிறார்கள். (எழுந்திராய்) "நாங்கள் உன் வாசலிலே வந்து எழுப்ப நீ எழுந்திருந்தாய் என்னும் ஏற்றத்தை எங்களுக்குத் தாராய்" என்கிறார்கள்.

"எழுந்திருந்து நாம் பெறப்போகிற பலனென்ன?" என்றாள். (பாடி) இதற்கு முன் பெற்ற செல்வத்தைப் போலேயோ நாம் இப்

போது பெறப்போகிற செல்வம்? முன்பு, நம்மையும் க்ருஷ்ணனை யும் பிரித்து வைத்திருந்ததினுல் ஊராருக்குத் தெரியாதபடி நெஞ்சாலே க்ருஷ்ணனை அனுபவித்து வந்தோம்; க்ருஷ்ணனுபவத் தினுலேற்பட்ட ஆனந்தத்தை வெளிக்காட்டாமலிருந்து வந்தோம். இப்போது ஊராரே அனுமதித்திருக்கையாலே நெஞ்சிலே கங்கு கரையற்றுப் பெருகுகிற க்ருஷ்ணகுணனுபவானந்தத்துக்குப் போக்கு விட்டுப் பாடுவோமாக. (பறை கொண்டு) பறையாவது:– ஊராருக்கு நோன்பு; இவர்களுக்குக் கைங்கர்யம். "இற்றைப் பறை கொள்வானன்று காண் கோவிந்தா! எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னேடுற்ரேமேயாவோம் உனக்கே நாமாட்செய் வோம்" என்று கடைசியில் சொன்னுர்களன்ரே. "அவன் நமக்குப் பறை தருவானே?" என்று கேட்டாள். (மா வாய் பிளந்தானை) "நம் விரோதிகளைப் போக்கித் தன்னை நமக்குத் தந்தவனன்ரே அவன்; அப்படிப்பட்டவன் நமக்குப்பறை தராமலிரான்" என்கிருர்கள். (மாவாய் பிளந்தானை) குதிரை வடிவங்கொண்டு வந்த கேசியென் னும் அஸுரனை வாயைப்பிளந்து போட்ட வீரனை. "அது முன் பன்ரே; இப்போது மதுரைக்குச் சென்று வந்த பின்பு அங்குள்ள நகர ஸ்த்ரீகளைக்கண்டு மயங்கி நம்மைமறந்து கிடப்பவனை இவன் நம்காரியம் செய்வனே?" என்ருள். (மல்லரை மாட்டிய) "அங்கு சென்றும் சாணூரமுஷ்டிகர்களைக் கொன்று, 'ஸக₂ய: பச்யத க்ருஷ் ணஸ்ய முக₂ம்' [ஸகிகளே! க்ருஷ்ணனுடைய முகத்தைப்பாருங்கள்.] என்று நம்மைப்போன்ற பெண்களுக்குத் தன்னை உதவியவனு யிற்றே" என்கிருர்கள். "அவனை தேவாதிதேவனென்றன்ரே சொல்லுகிருர்கள்; அப்படிப்பட்டவன் நம் காரியம் செய்வானே?" என்று கேட்டாள். (தேவாதிதேவனை)

"தமீச்வராணும் பரமம் மஹேச்வரம்
தம் தே₃வதாநாம் பரமஞ்ச தை₃வதம் ||"

[ஈச்வரர்களுக்கும் மேலான மஹேச்வரனும், தேவதைகளுக்கும் மேலான தேவதையுமான அவனை.] என்று ச்வேதாச்வதர உப னிஷத் உத்கோஷித்தது.

"ஸர்வே வேத₃ாஸ் ஸர்வவேத்₃யாஸ் ஸஶாஸ்த்ரா:
ஸர்வே யஜ்ஞாஸ் ஸர்வ இஜ்யாச்ச க்ருஷ்ண: |
விது₃: க்ருஷ்ணம் ப்₃ராம்ஹணாஸ் தத்த்வதோ யே
தேஷாம் ராஜந் ஸர்வயஜ்ஞாஸ் ஸமாப்தா: ||"

*[அரசனே! சாஸ்திரங்களுடன் கூடிய எல்லா வேதங்களும், அறியத்தகுந்த ஸர்வவஸ்துக்களும், ஸகல யஜ்ஞங்களும், யாகத்தில் ஆராதிக்கப்படும் எல்லா தேவதைகளும் க்ருஷ்ணனே. எந்த விப்ரர்கள் கிருஷ்ணனை உள்ளபடி அறிகிறார்களோ அவர்களுக்கு எல்லா யாகங்களும் முடிந்தவையாகின்றன.]* என்றும்,

**''க்ருஷ்ண ஏவ ஹி லோகாநாமுத்பத்திரபி சாப்யய:।**
**க்ருஷ்ணஸ்ய ஹி க்ருதே பூ₄தமிதம் விச்வம் சராசரம்॥''**

*[கிருஷ்ணனே உலகங்களுக்கெல்லாம் கர்த்தாவாகவும், ஸம்ஹாரகனாகவுமிருக்கிறான். சராசரமான இந்த எல்லா ப்ராணிகளும் க்ருஷ்ணனுக்காகவன்றோ இருக்கின்றன.]* என்றுமன்றோ சொல்லப்பட்டது. வஸுதேவரும், குழந்தையான க்ருஷ்ணனைப் பார்த்து,

**''ஜாதோऽஸி தே₃வதே₃வேஶ ஶங்க₂சக்ரக₃தா₃த₄ர।''**

*[சங்கசக்ரகதாதரனே! தேவர்களுக்கும் தேவர்களான நித்யஸூரிகளுக்கு நாதனே! நீயன்றோ பிறந்திருக்கிறாய்.]* என்றார். காளியனும்

**''ஸோऽஹம்தே தே₃வதே₃வேஶ! நார்ச்சநாதௌ₃ ஸ்துதௌ ந ச।**
**ஸாமர்த்₂யவாந் க்ருபாமாத்ரமநோவ்ருத்தி: ப்ரஸீத₃ மே॥''**

*[தேவதேவேசனே! இப்படிப்பட்ட நான் உன்னை அர்ச்சிப்பதிலும், துதிப்பதிலும் ஸாமர்த்தியமுடையவனல்லேன்; தேவரீர் அருள் கூர்ந்த மனமுடையவராக எனக்கு அனுக்ரஹிக்கவேண்டும்.]* என்றான். ஆழ்வாரும் **''அயர்வறுமமர்கள் அதிபதியவனவன்''** என்றும், **''மனிதர்க்குத் தேவர் போலத் தேவர்க்கும் தேவாவோ!''** என்றும் அருளிச் செய்தார். இவைகளையெல்லாம் உட்கொண்டு ''தேவாதி தேவனை'' என்கிறாள் ஆண்டாள்.

''இப்படி தேவதிதேவனாயிருப்பவன் நம் காரியம் செய்வனோ'' என்றாள். (மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய தேவாதிதேவனை) என்கிறார்கள். ''இப்படி தேவாதிதேவனாயிருந்தும் நம்முடைய விரோதிகளைப் போக்குவதற்காக இவ்வுலகிலவதரித்தவனன்றோ. நம் விரோதிகளைப் போக்கி நம்மை அனுபவிப்பதைத் தன் பேறாக வன்றோ நினைத்திருக்கிறானிவன்; அப்படிப்பட்டவன் நம் காரியம் செய்யாமலிரான்'' என்று ஸமாதானம் சொல்லுகிறார்கள். (மாவாய்... தேவாதி தேவனை) மஹாபலவான்களான அஸுரர்களைக் கொன்றதிலிருந்தே இவனுடைய தேவாதிதேவத்வம் வெளியாகிறது என்று பாவம்.

(சென்று நாம் சேவித்தால்) அவன் அணுகி ஸேவிக்கத்தக்க நாம் அவனைக்கிட்டி ஸேவித்தால். "அவன் வருகையும், ஸேவிக்கையும் தவிர்ந்தால் நாம் சென்று ஸேவிக்குமத்தனையன்றோ?" என்கிறார்கள். "ஸேவித்தாலும் நம் காரியம் செய்வனோ?" என்றாள். "'உபஸ்தே₂யைருபஸ்தி₂த:' என்றும், 'சரண்யச் சரணாகதம்' என்றும், 'பத்₃ப்₄யாமபி₄க₃மாச்சைவ என்றும், 'விபீ₄ஷணமுபஸ்தி₂தம்' என்றும் அடியார்கள் தானிருந்தவிடத்திற்கு வருகையையே பெரிதாகக்கொண்டு நெஞ்சு புண்படுபவனன்றோ அவன்" என்கிறார்கள். (சென்று நாம் சேவித்தால்)

**"ஏஹி பச்ய ஶரீராணி முநீநாம் ப₄ாவிதாத்மநாம் |**
**ஹதாநாம் ராக்ஷஸை ஸர் கே₄ாரை: ப₃ஹூநாம் ப₃ஹுதா₄ா வநே ||"**

[பரமாத்மஜ்ஞானிகளும், கோரமான ராக்ஷஸர்களால் வனத்தில் பலவிதமாக ஹிம்ஸிக்கப்பட்டவர்களுமான முனிவர்களின் சரீரத்தை வந்து பார்ப்பாயாக.] என்றும்,

**"உபவாஸக்ருஶாம் தீ₃நாம் நி:ச்வஸந்தீம் புந: புந: |**
**த₃த₃ர்ஶ ஶுக்லபக்ஷாதௌ₃ சந்த்₃ர்ரேகா₂மிவாமலாம் ||"**

[உபவாஸத்தினால் மெலிந்தவளும், வருந்தத்தக்கவளும், மறுபடியும் மறுபடியும் பெருமூச்சு விடுபவளுமான சீதாபிராட்டியை (ஹனுமான்) சுக்லபக்ஷத்தின் ஆரம்பத்தில் மலமற்று விளங்கும் சந்திர கலையைப்போல் பார்த்தான்.] என்றும், "மாசுடையுடம்பொடு தலையுலறி வாய் புறம் வெளுத்து" என்றும் சொல்லுகிறபடியே விரஹ தாபத்தினால் வாடின உடம்பை அவனிடம் காட்டக்கடவோம். (சேவித்தால்)

**"ஶிரஸா யாசதஸ்தஸ்ய வசநம் ந க்ருதம் மயா"**

[தலையினாலே வணங்கிய அந்த பரதனுடைய பிரார்த்தனை என்னால் நிறைவேற்றப்படவில்லை.] என்று அவன் மனம் புண்படும்படி பரதாழ்வான் வணங்கினாற்போலே நாமும் தலையாலே வணங்கக் கடவோம் என்கிறார்கள். (சேவித்தால் ஆவாவென்று...) "ஐயோ! நம் ப்ரணயித்வமும் போயிற்று; அடியார்களைக் காப்பவன் என்னும் ஏற்றமும் அழிந்தது; இவர்கள் நம்மை வந்து ஸேவிக்கும்படியாக நாம் இருந்தோமே" என்று நம்முடைய குறைகளை ஆராய்ந்தருளுவான். **"ஆந்ருசம்ஸ்யம் பரோ த₄ர்ம:"** [இரக்கமே மேலான தர்மம்.] என்னுமவன் நம் விஷயத்தில் பேசாமலிருப்பனோ? ஆகையால்

அவன் குறையல்ல; நாம் புறப்படாத குறையே; புறப்படுவாயாக என்கிருர்கள். (ஆவாவென்று) "ஆவாவென்று அருள்செய்து அடியேனெடும் ஆனனே" என்றும், "ஆவாவென்றருள் செய்தான்" என்றும், "அடியார்க்கு ஆவாவென்ருய்" என்றும், "ஆ! ஆ! அடியான் இவனென்று அருளாயே" என்றும், "அடியார்க்கு ஆவாவென்றிரங்கி" என்றும், "ஆவாவென்று அடியேற்கு இறை இறங்காய்" என்றும் ஆழ்வார்கள் பலகால் அருளிச்செய்தது இங்கு அனுஸந்திக்கத்தக்கது.

"ஆவாவென்று அருள்செய்து" என்றதினுல் பரமபுருஷன் தன்னடியாருடைய துக்கத்தைக்கண்டு பொறுக்காமல் துக்கிப்பவன் என்று ஏற்படுகிறது. பாஷ்யகாரர் ஸ்ரீபாஷ்யத்தில் "த₃யா ஹி நாம ஸ்வார்த்த₂நிரபேக்ஷா பரது₃:க்க₂ாஸஹிஷ்ணுதா" [தயையாவது:-தனக்கு ஒரு பிரயோஜனத்தைக் கருதாமல் பிறருடைய துக்கத்தைப் பொறுக்காமலிருக்கை.] என்று அருளிச்செய்தார். ஸ்ரீஸஹஸ்ரநாம பாஷ்யத்தில், "விகர்த்தா" என்னும் திருநாமத்தின் வியாக்கியானத்தில் "ஸ்வார்த்த₂ஹர்ஷசோகாத்₃யப₄ாவேபி பரார்த்த₂தத்ப்ரஸக்திரதோ₃ாஷ: அந்யத₂ா பரது₃:க்க₂ து₃:க்கி₂த்வாத₃யோ கு₃ண: கத₂மஸ்ய ஸ்யு:" [தனக்காக ஏற்படும்ஆனந்தமும்,துக்கமும்இப்பரமாத்மாவுக்கு இல்லாவிடினும், பிறர்க்காக ஏற்படும் ஆனந்தமும், துக்கமும் இருப்பது தோஷமன்று. இல்லாவிடில் பிறருடைய துக்கத்தைக் கண்டு துக்கிக்கை முதலிய குணங்கள் (இவனுக்கு) எப்படி இருக்கமுடியும்?] என்று பட்டரும் ஸ்பஷ்டமாக அருளிச்செய்தார். ச்ருதப்ரகாசிகா பட்டரும் "த₃யாஹி-ஸ்வார்த்த₂நிரபேக்ஷா பரது₃:க்க₂ாஸஹிஷ்ணுதா" என்று ஜிஜ்ஞாஸாதிகரண ச்ருதப்ரகாசிகையிலருளிச் செய்தார். இவ்வளவுக்கும் மூலமாக

"வ்யஸநேஷு மநுஷ்யாணும் ப்₄ருஶம் ப₄வதி து₃:க்கி₂த:"

[மனுஷ்யர்களுடைய துக்கங்களில், ஸ்ரீராமபிரான் அவர்களைக் காட்டிலும் அதிகமாக துக்கிக்கிருன்.] என்று ஸ்ரீராமனுடைய குணங்களைப் பேசுமிடத்தில் வால்மீகிபகவான் அருளிச்செய்தார். இவ்விடத்தில் ஈட்டில் எடுக்கப்பட்ட பின்வரும் ஐதிஹ்யம் அனுஸந்திக்கத்தக்கது:— 'பரமபதத்திலும் ஸம்ஸாரிகள் படுகிற க்லேசத்தை அநுஸந்தித்துத் திருவுள்ளத்தில் வெறுப்போடேயாயிற்று எழுந்தருளியிருப்பது' என்று பட்டர் அருளிச்செய்ய, 'ஆச்சானும் பிள்ளையாழ்வானும் இதைக்கேட்டு, பரமபதத்திலே ஆநந்தநிர்ப்பரனயிருக்கிற இருப்பிலே திருவுள்ளத்திலே ஒரு வ்யஸனத்தோடே இருந்தா

னென்கை உசிதமோவென்றார்கள்' என்று பண்டிதர் என்கிறவர் வந்து விண்ணப்பம் செய்ய, ''வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்₄ருசம் ப₄வதி து₃:க்கி₂த:' என்றது குணப்ரகரணத்திலேயோ? து:க்க ப்ரகரணத்திலேயோ? என்று கேட்கமாட்டிற்றிலீரோ? இது குணமாகில் குணமென்று பேர் பெற்றதில் அங்கில்லாததொன்றுண்டோ?' என்று அருளிச்செய்தார்

## திருப்பாவை—ஒன்பதாம் பாட்டு.

9. தூமணிமாடத்துச் சுற்றும் விளக்கெரியத்
தூபம் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான்மகளே! மணிக்கதவம் தாள் திறவாய்
மாமீர்! அவளை எழுப்பீரோ உன்மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?
ஏமப்பெருந்துயில் மந்திரப்பட்டாளோ
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோரெம்பாவாய்.

**பதவுரை:—தூ மணி மாடத்து**—*தூய்மையை இயற்கையாக உடைய ரத்னங்களினால் இழைக்கப்பெற்ற மாளிகையில்* **சுற்றும்**—*எல்லாவிடத்திலும்,* **விளக்கு எரிய**—*மங்களதீபங்கள் ஒளிவிடவும்,* **தூபம் கமழ**—*(அகில் முதலியவற்றின்) புகை மணம் வீசவும்,* **துயில் அணைமேல்**—*(படுத்தாரைத்) தூங்கச் செய்யும் படுக்கையின்மேல்,* **கண் வளரும்**—*கண்ணுறங்குகிறவளான,* **மாமான் மகளே**—*மாமன்மகளே!* **மணி கதவம் தாள்**—*மாணிக்கக் கதவுகளின் தாள்களை,* **திறவாய்**—*திறந்துவிடவேண்டும்;* **மாமீர்**—*மாமியே!,* **அவளை எழுப்பீரோ**—*உம்முடைய மகளைத் துயிலெழுப்பவேணும்;* **உன் மகள் தான்**—*உன்னுடைய மகள்,* **ஊமையோ**—*வாய் பேசமாட்டாத ஊமைப் பெண்ணோ?* **அன்றி**—*அல்லாவிடில்,* **செவிடோ**—*காதுகேளாத செவிடியோ?* **அனந்தலோ**—*(களைப்பினால்) உறங்குகிறாளோ?* **ஏமப்பட்டாளோ**—*காவலிடப்பட்டாளோ?* **பெருந் துயில் மந்திரப்பட்டாளோ**—*நெடுநேரம் தூங்கும்படி மந்திரத்தாற்*

*கட்டுண்டாளோ?* மாமாயன்–*நினைக்கவொண்ணாத ஆச்சரியச் செயல்களை உடையவன்.* மாதவன்—*லக்ஷ்மீநாதன்.* **வைகுந்தன் என்று என்று**—*ஸ்ரீவைகுண்டநாதன் என்று இம்மாதிரியாக,* **நாமம் பலவும் நவின்று**—*பல பல திருநாமங்களை நாங்கள் சொல்லிவிட்டோம். (அப்படியும் உன் மகள் எழுந்திருக்கவில்லையே!)*

**அவதாரிகை**:-"உடைமையைக் கொண்டுபோவது உடையவனுக்கே $பு_4$ரம்" என்று கிடக்கிறாளொருத்தியை எழுப்புகிறார்கள். "மாம் நயேத்$_3$ யதி$_3$ காகுத்ஸ்த$_2$ஸ் தத் தஸ்ய ஸத்$_3$ருசம் $ப_4$வேத்" [என்னை ஸ்ரீராமபிரான் அழைத்துச்செல்வானாகில், அது அவனுடைய ஸ்வரூபத்துக்கே தகுந்தது.] என்ற பிராட்டிபோன்றவள் இவள். வெளியிலிருந்து எழுப்புமவர்கள் இளையபெருமாளைப்போலே கைங்கர்யத்திலே ஊன்றிநிற்பவர்கள்; உள்ளே கிடக்கிறவள் பரதாழ்வானைப் போலே பகவானுக்கு அத்யந்த பரதந்த்ரையாயிருப்பவள். வெளியிலுள்ளார் உபேயத்தின் இனிமையை அறிந்தவர்கள்; உள்ளுள்ளவள் உபாயத்தின் சீர்மையைச் சிந்திப்பவள். வெளியிலுள்ளார் முமுக்ஷுக்களைப்போலே "எஞ்ஞான்று தலைப்பெய்வனே" "என்னாள் வந்து கூடுவன் யான்?" "உடன் கூடுவதென்றுகொலோ?" என்று துடிப்பவர்கள்; உள்ளே உறங்குபவள் ப்ராப்யம் கைவந்த நித்யஸித்தரைப்போலே நிர்ப்பரையாயிருப்பவள். "துயிலணைமேல் கண்வளரும்" என்கையாலும், "ஊமையோ அன்றிச் செவிடோ?" என்று பல பல சொல்லியும் எழுந்திருக்காமையாலும் இவள் உபாயாத்யவஸாய நிஷ்டை என்று தோற்றுகிறது. "கீழில் பாட்டில் முக்தர்போலே இருப்பாளொருத்தியை எழுப்பிற்று; இப்பாட்டில் நித்யர்படியையும் மைத்துன முறைமையையும் உடையாளொருத்தியை எழுப்புகிறது" என்று நாலாயிரப்படி.

**வியாக்கியானம்**:—(தூ மணி மாடத்து) இயற்கையாகவே தூய்மையான ரத்தினங்களாலே கட்டப்பட்ட மாளிகை. ஸ்ரீவைஷ்ணவர்களுடைய திருமாளிகையே தங்களுக்கு மிகவும் உத்தேச்யமாயிருப்பதால் முந்துறமுன்னம் அதை வர்ணிக்கிறார்கள். "ஹிதாம்சத்துக்கு ஒரு வைஷ்ணவனுடைய க்ருஹயாத்ரையை அநுஸந்திக்க அமையும்" என்று ஆழ்வான் அருளிச்செய்வர் என்று ஆறாயிரப்

படி. (தூமணி மாடம்) நம்மாழ்வார் எம்பெருமானுடைய மாளிகையை ''துவளில் மாமணி மாடமோங்கும் துலைவில்லி மங்கலம்'' என்று அருளிச்செய்தார். இவர்கள் அவனடியாருடைய மாளிகையை ''தூமணி மாடம்'' என்கிறார்கள். அவனுடைய மாளிகையைத் 'துவளில் மாமணி மாடம்' என்கையாலே அது ஒருகாலத்தில் அழுக்கடைந்திருந்து, பின்னர் அழுக்கு நீங்கிய மணிகளாலே சமைக்கப் பெற்றது என்று விளங்கும். இவளுடைய மாளிகையைத் 'தூமணி மாடம்' என்கையாலே எக்காலத்திலும் மலம் சிறிதுமற்ற மணிகளாலே கட்டப்பட்டதென்று விளங்கும். அம்மாளிகையின் பரிசுத்தி ஜீவாத்மாவின் தோஷமின்மையைப் போன்றது. இம்மாளிகையின் பரிசுத்தி பரமபுருஷனின் தோஷமின்மையைப் போன்றது. ''இவ்வூரில் கழித்த ரத்நங்கள் கொண்டு போலே காணும் திருத்துலைவில்லிமங்கலத்தில் மாளிகைகள் செய்தது; ராஜாக்கள் அந்த:புரத்தில் கழித்தவை கொண்டிறே தங்களுக்கு மாளிகைகள் செய்வது'' என்று ஆசாரியர்கள அருளிச்செய்வார்கள். (தூமணி மாடம்) திருவாய்ப்பாடியிலும் ஆண்டாளுக்கு ஒரு மாளிகையுண்டுபோலே காணும்! ''மாடமாளிகை சூழ் மதுரைப்பதி, நாடி நம் தெருவின் நடுவே வந்திட்டு'' என்று மதுரையிலும் தனக்கொரு மாளிகையுள்ளதாக அருளிச்செய்தாளன்றோ.(சுற்றும் விளக்கெரிய) மாணிக்கங்களின் ஒளியாலே மாளிகை முழுவதும் பிரகாசிக்கச் செய்தேயும், மங்களார்த்தமாக எங்கும் விளக்கெரிகிறபடி. ''வெளியிலே எங்கள் ஹ்ருதயங்களாகிற விளக்குகள் இருண்டு கிடக்க, உள்ளே கண்டவிடமெங்கும் விளக்கெரிவதே!'' என்கிறார்கள். க்ருஷ்ணன் நம்மைத் தேடிவருவான் என்று காத்துக்கிடக்கையாலே, அவனுடன் உலாவுமிடமெங்கும் படுக்கையும் விளக்குமாக்கி வைத்திருக்கிறாள். ''மணிக் கதவம் தாள் திறவாய்'' என்கிறபடியே தாள் திறக்க வழியறியாதவர்கள், உள்ளுள்ள விளக்குகளையும் மற்றவைகளையும் அறிந்தபடியென்னென்னில்: தூமணிமாடமாகையாலே உள்ளுள்ளவை வெளியே தோற்றக்குறையில்லை. (விளக்கெரிய) 'எங்களகங்கள் இருண்டுகிடக்க இங்கு கண்டவிடமெங்கும் விளக்கெரிவதே!' என்கிறார்கள். (எரிய) 'புறம்புள்ள விளக்குகள் புகையா நிற்க, உள்ளுள்ள விளக்கு எரிவதற்கு ஹேதுவென்?' என்கிறார்கள்.

(தூபம் கமழ) புகை காணவொண்ணாதே பரிமளம் வெள்ளமிட. ''சீருற்றவகிற்புகை......முகந்துசொண்டெறியுமாலோ'' என்கிறபடியே விரகதாபத்தால் வாடும் எங்களுக்கு அகிற்புகை அஸஹ்யமாயிருக்க, நீ அதுவே தாரகமாகக் கண்வளருவதே! (கமழ—கண்

வளரும்) பரிமளம் சிறிது குறையில் கண்ணுறங்காதோ? (துயிலணை மேல் கண்வளரும்) 'நம்முடைய நெருப்பு சிலர்க்குப் படுக்கை யாவதே!' என்கிறார்கள். 'மென்மலர்ப்பள்ளி வெம்பள்ளியாலோ' என்பவர்களன்றோ. (துயிலணை) படுத்தவர்களைத் துயிலப்பண்ணும் படுக்கை. (துயிலணைமேல் கண்வளரும்) 'இருவர்க்கான படுக்கையிலே நீ ஒருத்தியாய்க் கண்ணுறங்குவது எங்ஙனே?' என்கிறார்கள். இளையபெருமாளைப்போல் உறங்காமைக்கு நாங்களுண்டானாப் போலே உறங்குகைக்கு நீயொருத்தியும் உண்டாவதே! (கண்வளரும்) பாகவதர்களாகையாலே 'தூங்கும்' என்னாதே 'கண்வளரும்' என்று கௌரவமாக வார்த்தை சொல்லுகிறார்கள். "நீராடப்போதுவீர்" "பொற்றாமரைக்கயம் நீராடப்போனாள்" "மடக்கிளியைக் கை கூப்பி வணங்கினாளே" என்றன்றோ இவர்கள் பரிமாற்றமிருக்கும்படி. பட்டரிடம் சிலர் "தொண்டனூர் நம்பி திருவடி சார்ந்தார்' என்று சொல்ல, "ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அடிமை செய்து போந்தபடிக்குத் திருநாட்டுக்கு நடந்தார் என்று சொல்லவேண்டாவோ?" என்று பட்டர் அருளிச்செய்தாராம். நம்பி ஏறுதிருவுடையார்தாஸர் என்னும் பாகவதர் விஷயத்திலும் நஞ்சீயர் இவ்வாறே அருளிச்செய்தார் என்று ஆசார்யர்கள் அருளிச்செய்வார்கள். "படுத்த பைந்நாகணைப் பள்ளி கொண்டான்" என்று இவள் தகப்பனார் பகவான் பள்ளிகொண்ட அழகை அனுபவித்தாப்போலே, இவள் 'துயிலணைமேல் கண் வளரும்' என்று பாகவதர்கள் பள்ளிகொண்ட அழகை அனுபவிக்கிறாள். (கண்வளரும்) "அபிமதலாபம் அவனாலேயானபின்பு நாம் செல்லுகையாவதென்?" என்று நினைத்து மார்பிலே கைவைத்து உறங்குகிறாள் உள்ளிருப்பவள். "எல்லா உலகையும் ஈடுபடுத்தும் க்ருஷ்ணனைப் பெறவிருக்கும் இவள் கவலையற்று உறங்குவதே" என்கிறார்கள் அவர்கள். த்வயத்தின் பூர்வகண்டத்தின் பொருளை நினைத்திருப்பவள் இவள். உத்தரகண்டத்தின் பொருளிலே ஊன்றியிருப்பவர்கள் அவர்கள். (மாமான் மகளே) ஸ்வாமினியாகவும், தோழியாயும் அனுபவித்ததற்கு மேலே விடவொண்ணாத உறவைச் சொல்லியும் அநுபவிக்கிறார்கள். "திருவாய்ப்பாடியிலே ஒரு ப்ராக்ருத ஸம்பந்தம் தனக்கு உஜ்ஜீவனமென்றிருக்கிறாள்" என்று பெரிய வாச்சான்பிள்ளை அருளிச்செய்வர். (மாமான் மகளே).

**"பிதரம் மாதரம் த₃ாராந் புத்ராந் ப₃ந்தூ₄ந் ஸகீ₂ந் கு₃ரூந் |...**
**ஸர்வத₄ர்மாம்ச்ச ஸந்த்யஜ்ய ஸர்வகாமாம்ச்ச ஸாக்ஷராந் |**
**லோகவிக்ராந்தசரணௌ ஶரணம் தேऽவ்ரஜம் விபோ₄ ||"**

[தாய், தந்தை, மனைவி, மக்கள், உற்றார், உறவினர், ஆசாரியர்கள், மற்ற உபாயங்கள், மற்ற உபேயங்கள் ஆகிய எல்லாவற்றையும் நன்றாகவிட்டு, திருவுலகளந்தருளிய உன் திருவடிகளையே சரணமடைந்தேன்.] என்றும், "தாயே தந்தையென்றும் தாரமே கிளை மக்களென்றும் நோயே பட்டொழிந்தேன்" என்றும் விடத்தக்கவராகச் சொல்லப்படும் தேஹபந்துக்களே வைஷ்ணவராயிருக்கில் விரும்பத்தக்கவராகின்றனரென்று உணர்த்துகிறாள்.

"கொண்ட பெண்டிர் மக்களுற்றார் சுற்றத்தவர் பிறரும்
கண்டதோடு பட்டதல்லால் காதல் மற்றியாதுமில்லை"

என்றருளிச்செய்யப்புகுந்த ஆழ்வாரும், முந்தின பாட்டிலே "நல்ல பதத்தால் மனைவாழ்வர் கொண்ட பெண்டிர் மக்களே" என்றாரன்றோ. பெரியாழ்வாரும், அவர் திருமகளாரும் "நன்மக்களைப் பெற்று மகிழ்வரே" என்று அருளினார்களன்றோ. "மாமான்" என்று ஸ்ரீமாலாகாரரைக்குறிப்பதாக நம் ஆசாரியர்கள் நிர்வஹிப்பர்கள். "அங்குத்தைக்கு உறவு மாலாகாரர்; தானும் ஒரு மாலாகாரர் மகளிறே." என்று நாலாயிரப்படியில் ஆய் அருளிச்செய்தார்.

"க்ருஷ்ணராமௌ முதா₃ யுக்தௌ மாலாகாரக்₃ருஹம் க₃தௌ |"

[பலராமக்ருஷ்ணர்கள் மிகுந்த உகப்புடன் மாலாகாரருடைய திருமாளிகைக்கு எழுந்தருளினார்கள்.] என்று விஷ்ணுசித்தரிடம் போலவே இம்மாலாகாரரிடமும் மாதவன் அன்புபூண்டிருப்பதாலும்,

"ப்ரஸாத₃பரமௌ நாதௌ₂ மம கே₃ஹமுபாக₃தௌ |
த₄ந்யோऽஹமர்ச்சயிஷ்யாமீத்யாஹ மால்யோபஜீவந: ||"

['அன்பு மிகுந்தவர்களும், என்னுடைய ஸ்வாமிகளுமான இவர்கள் (அதிநிஹீநனை) என் குடிசைக்கு வந்துள்ளனர்; நான் தன்யனானேன்; இவர்களை ஆராதிப்பேன்' என்று மாலாகாரர் சொன்னார்.] என்கிறபடியே பெரியாழ்வாரைப்போலவே இம்மாலாகாரரும் கிருஷ்ணனிடம் பேரன்புடையவராகையாலும் இவரை "மாமான்" என்று ஆண்டாள் அழைக்கத்தட்டில்லையன்றோ.

இவர்கள் இம்மாதிரி அழைத்தவுடன், வெளியிலிருந்தும் திறக்கக்கூடிய இத்தாளை 'நீங்களே திறந்துகொண்டு புகுருங்கோள்' என்னும் கருத்துத்தோன்ற இவள் கிடக்க, (மணிக்கதவம் தாள் திறவாய்) என்கிறார்கள். 'அது மாணிக்கக்கதவாகையாலே அப்யாஸமில்லாத எங்களுக்குக் கதவுக்கும், சுவருக்கும், தாளுக்கும் வாசி

தெரியாது; ஆகையால் நீயே வந்து திறந்துவிடவேணும்' என்று கருத்து. கதவு திறந்திருந்தாலும் ஸ்ரீவைஷ்ணவர்களை முன்னிட்டுக் கொண்டல்லது இவர்கள் உட்புகார்களன்றோ. 'செய்யாதன செய் யோம்' என்றார்களன்றோ தொடக்கத்திலேயே. வேதம் வல்லார் களைக்கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிபவர்க ளன்றோ இவர்கள்.

"இவர்கள் இப்படி வாசலிலே துவளுவதைக் கண்டும் நெஞ் சிலே இரக்கமில்லாமலிருக்கை உன் ஸ்வபாவத்திற்குச் சேராது காண்!" என்னும் கருத்து தோன்ற இருந்தாள் இவள் தாயார். அதைக்கண்ட தோழிகள் (மாமீர் அவளை எழுப்பீரோ) என்கிறார்கள். அவள் மேலுள்ள அன்பு அவள் தாய் வரையிலும் வெள்ளமிடுகிற படி. "அடிகளடியே நினையுமடியவர்கள் தம் அடியான்" என்றும் "தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன்" என்றும், "அடியாரடியார் தம் அடியாரடியார் தமக்கு அடியாரடியார் தமடி யாரடியோங்களே" என்றும், "அடியார்தம் அடியாரடியாரடியார் எம் கோக்கள்" என்றும் சொல்லுமவர்களன்றோ. தாயாகிய இவளும் மகளுக்குத் தன்னை தாஸபூதையாக நினைத்திருப்பள். "அன்னையும் அத்தனுமென்று அடியோமுக்கு இரங்கிற்றிலள்" என் றார் திருமங்கையாழ்வார். "அடியோமாயிருக்கிற எங்களைத் தாய் தந்தையரென்று பழியிட்டுப்போனாள்" என்று கருத்து. இப்படி அருளிச்செய்த திருமங்கையாழ்வாரை "வெட்டிமையர்" என்றும், எம்பெருமானாரை "கோயிலண்ணன்" என்றும் (அர்ச்சாரூபிணி யான) ஆண்டாள் அருளிச்செய்வளென்றும், இதைக்கேட்ட எம் பெருமானார் "நானடியேனல்லேனோ? என்னை இப்படி அருளிச் செய்வதே!"என்று அளினாரென்றும் ஆய் அருளிச்செய்வர். இப்படி மகளுடைய புருவநெறிப்புக்குவசப்பட்டிருப்பவளாகையால் அவளும் எழுப்பாமல் கிடந்தாள். அதனால் கோபங்கொண்ட இவர்கள் "உன் மகள்" என்கிறார்கள். மகள்மேலுள்ள அன்பு 'மாமீர்' என்று அழைக் கும்படி தாய்வரையிலும் வெள்ளமிட்டாப்போலே அவள் மேலுள்ள கோபமும் "உன் மகள்" என்னும்படி இவள் வரையிலும் பாய்கிறது. "பிராட்டிக்கு ப்ரணய கோபம் சக்ரவர்த்தியளவும் மேலிட்டு "பிது:" என்றாப்போலே" என்று ஆறாயிரப்படி. ["ந மாதுர் ந பிதுஸ் தத்ர **ஸ்மரிஷ்யாமி ந வேச்மந:**" என்ற அயோத்யாகாண்டம் முப்பதாவது ஸர்க்கச்சுலோகமே இங்கு விவக்ஷிதமாயிருக்கத்தகும்.] (ஊமையோ) வாசலிலே வருந்துமவர்களைக் கண்டுவைத்தும், இவள் 'ஐயோ' என்னாமையாலே, ஊமையாய்விட்டனளா? (அன்றிச் செவிடோ)

ஊமையாயிருந்தாலும் கேட்டுவந்து திறக்கலாமே; செவிடாய்விட்டனளோ? (அனந்தலோ) இரவெல்லாம் க்ருஷ்ணனுக்கு உடல் கொடுத்து, இப்போதுதான் இப்பெரும் தூக்கத்திலே அமிழ்ந்தனளோ? (ஊமையோ...அனந்தலோ) வாகிந்திரியமும், ச்ரவணேந்திரியமும், மநஸ்ஸும் பகவானிடத்திலேயே ஈடுபட்டு எங்களை மறந்தனவோ? (ஏமப்பட்டாளோ) ஊரார் காவலிடாத இன்றும் இவள் மட்டும் காவலிடப்பட்டாளோ? (பெருந்துயில் மந்திரப்பட்டாளோ) பெருந்துயிலிலே ஆழும்படி மந்த்ரவாதம் பண்ணினருண்டோ? "மையலேற்றி மயக்க உன் முகம் மாயமந்திரம்தான் கொலோ?" என்ற மந்திரத்தால் கட்டுப்பட்டாளோ? என்று கருத்து.

இப்படி இவர்கள் கோபித்து வார்த்தை சொன்னவுடன், நாம் வாளாவிருப்பது தவறு என்று உணர்ந்த திருத்தாயார் "நீங்கள் இவளுடைய ஸ்வபாவத்தை அறியவில்லைபோலும்; மோஹித்துக் கிடப்பாரைத் தண்ணீர்தெளித்து விசிறித் தெளிவிப்பாரைப்போலே இவளுக்குத் தென்றலும், சிறுதுளியும்போன்ற திருநாமங்களைச் சொல்லுங்கோள்" என்றாள். "மாமாயன் மாதவன்......நவின்று" என்று 'நாங்கள் சொன்ன திருநாமங்களுக்கு ஓர் கணக்கில்லை' என்கிறார்கள். (மாமாயன்) ஆச்சரியகுணசேஷ்டிதங்களாலே அபலைகளான எங்களை எழுதிக்கொண்டவன்; (மாமாயன்......வைகுந்தன்) நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனாயிருந்தும் இடைச்சிகளான எங்களுக்குக் கட்டவும், அடிக்கவுமாயிருக்கும் மாயாவி.

"சூட்டு நன் மாலைகள் தூயனவேந்தி விண்ணோர்கள் நன்னீர்
ஆட்டியந்தூபம் தராநிற்கவே அங்கோர் மாயையினால்
ஈட்டிய வெண்ணெய் தொடுவுண்ணப்போந்(து)இமிலேற்று
வன்கூன்
கோட்டிடை ஆடினை கூத்(து) அடலாயர்தம் கொம்பினுக்கே"
—என்றும்,

"தன்சார்விலாத தனிப்பெரு மூர்த்திதன் மாயம் செவ்வே
நெஞ்சால் நினைப்பரிதால் வெண்ணெயூணென்னும்
ஈனச்சொல்லே"—என்றும்,

"மத்துறு கடைவெண்ணெய் களவினில் உறவிடையாப்புண்டு
எத்திறம்! உரலினோடிணைந்திருந்(து)ஏங்கிய எளிவே" என்றும்

''பிறந்தவாறும் வளர்ந்தவாறும் பெரிய பாரதம் கைசெய்தை வர்க்குத்
திறங்கள் காட்டியிட்டுச் செய்து போன மாயங்களும்
நிறந்தனூடுபுக்கென்னதாவியை நின்று நின்றுருக்கியுண்கின்ற இச்
சிறந்தவான் சுடரே! உன்னை என்றுகொல் சேர்வதுவே''

என்றும் மஹாஜ்ஞானிகளையும் நெஞ்சுருகப் பண்ணுமவையன்றோ இவனுடைய ஆச்சர்யகுணசேஷ்டிதங்கள். (மாமாயன்)

''மாயாம் து ப்ரக்ருதிம் வித்₃யாந்மாயிநம் து மஹேச்வரம்''

[ப்ரக்ருதியை மாயை என்று அறியவேண்டும்; இந்த மாயையை உடையவன் ஸர்வேச்வரனுகிறுன்.] என்று ச்வேதாச்வதரத்திலும்,

''தை₃வீ ஹ்யேஷோ கு₃ணமயீ மம மாயா து₃ரத்யயா |
மாமேவ யே ப்ரபத்₃யந்தே மாயாமேதாம் தரந்தி தே ||''

[தேவனுகிற என்னுல் நிர்மிக்கப்பட்டதும், முக்குணங்களை உடையதுமான இந்த என்னுடைய மாயையைத் தாண்டுதல் அரிது. என்னையே எவர்கள் சரணமடைகிறுர்களோ அவர்களே இந்த மாயையைத் தாண்டுகின்றனர்.] என்று கீதையிலும் சொல்லப்பட்டபடியே 'கடக்கவரிதான ப்ரக்ருதியாகிய மாயையை உடையவன்' என்னும் பொருளும் த்வனிக்கிறது.

''மாமாயன்'' என்று இவனுடைய ஸௌலப்யகுணம் பேசப்பட்டது. ''மாதவன்'' என்று இக்குணத்துக்கு குருகுலவாஸம் பண்ணினவிடத்தைச் சொல்லுகிறது. அத்வேஷமுடையவர்களான ஆயர்களுக்கு முகங்கொடுக்கும் இவனளவன்றியே, வித்வேஷிகளான ராக்ஷஸிகளிடமும் இரக்கங்காட்டுமவளன்றோ இவள்.

''மாதர் மைதி₂லி! ராக்ஷஸீஸ்த்வயி ததை₃வார்த்₃ராபராத₄ாஸ் த்வயா |
ரக்ஷந்த்யா பவநாத்மஜால்லகு₄தரா ராமஸ்ய கோ₃ஷ்டீ₂ க்ருதா||''

[சீதாபிராட்டியே! அப்போதுதான் அபராதம் செய்தவர்களான ராக்ஷஸிகளை திருவடியிடமிருந்து ரக்ஷித்த உன்னுல் ராமகோஷ்டியானது சிறிதாகச் செய்யப்பட்டது.] என்று பட்டரருளிச்செய்தாரன்றோ. (மாதவன் வைகுந்தன்)

''வைகுண்டே₂ து பரே, லோகே ஶ்ரியா ஸார்த்த₄ம் ஜகத்₃பதி: |
ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா ப₄க்தைர் பா₄க₃வதைஸ் ஸஹ||''

[வைகுண்டமாகிற மேலான உலகில் ஜகத்ஸ்வாமியும், நினைத்தற்கரியவனும் ஸ்ரீதேவியுடன் கூடியவனுமான பகவான் விஷ்ணு பக்தர்களுடனும், பாகவதர்களுடனும் எழுந்தருளியிருக்கிறான்.] என்ற ப்ரமாணப்ரஸித்தியை அநுஸந்திப்பது. (என்றென்று) இப்படி மேன்மைக்கும், நீர்மைக்கும், இரண்டுக்கும் ஹேதுவான ஸ்ரிய:பதித்வத்துக்கும் வாசகமான திருநாமங்கள் எல்லாவற்றையும் சொன்னோம். (நாமம் பலவும் நவின்று) ''பேருமோராயிரம் பிற பல உடைய எம்பெருமான்'' எனப்பட்ட நாமங்கள் எல்லாவற்றையும் சொல்லிவிட்டோம்; உன்மகள் எழுந்திராத குறையேயொழிய நாங்கள் சொல்லாத குறையில்லையென்கிறார்கள். ''நாமம் பலவும் நவின்று மாமீர் அவளையெழுப்பீரோ'' என்று கூட்டியும் பொருள்கொள்ளலாம்.

## திருப்பாவை—பத்தாம் பாட்டு.

10. **நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!**
**மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்**
**நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்மால்**
**போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்**
**கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும்**
**தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ**
**ஆற்ற அனந்த லுடையாய்! அருங்கலமே**
**தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய்.**

**பதவுரை:—நோற்று**—நோன்பு நோற்று. **சுவர்க்கம் புகுகின்ற**—ஸுகத்தை இடைவிடாமல் அனுபவிக்கின்ற. **அம்மனாய்**—அம்மா!. **வாசல் திறவாதார்**—வாசற்கதவைத் திறக்க மாட்டாதவர்கள், **மாற்றமும் தாராரோ**—ஒரு பதில் வார்த்தை யாவது பேசாரோ? **நாற்றத் துழாய் முடி**—வாசனை வீசுகின்ற திருத்துழாய்மாலையை முடியிலே சூடியுள்ளவனும், **நாராயணன்**—நாராயணன் என்னும் ஒப்பற்ற திருநாமத்தை உடையவனும், **நம்மால் போற்ற பறைதரும்**—நம்மால் பல்லாண்டு பாடப்பெற்று, நமக்கு ப்ராப்யமான கைங்கர்யத்தைக்கொடுப்பவனும், **புண்ணியனால்**-தர்மமே வடிவெடுத்தவனுமான எம்பெருமானால், **பண்டு ஒரு நாள்**—முன்னொரு

*காலத்தில்,* **கூற்றத்தின் வாய் வீழ்ந்த**—*யமன் வாயில் விழுந் தொழிந்த,* **கும்பகரணனும்** — *கும்பகர்ணனும்,* **உனக்கே தோற்று**—*உனக்குத் தோல்வியடைந்து,* **பெரும் துயில் தான்**—*(தன்) பெருந்தூக்கத்தை,* **தந்தானோ**—*உனக்குக் கொடுத்துப் போயினனோ?* **ஆற்ற அனந்தல் உடையாய்**—*அழகிய உறக் கத்தை உடையவளே!* **அரும் கலமே**—*அடையவரிய ஆபரணம் போன்றவளே!* **தேற்றமாய் வந்து திற** — *தெளிந்து* **வந்து** *(கதவைத்) திறப்பாயாக.*

*அவதாரிகை:*—பெண்கள் க்ருஷ்ணனைக்கண்டு மாலுறுமாப் போலே, அவன் தன்னைக்கண்டு மயங்கும்படியான மகிமையை உடையாளொருத்தியை எழுப்புகிறார்கள் இப்பாட்டில். "அருங் கலமே" என்று இவர்கள் இவளைக் கூப்பிடுவதிலிருந்து இவளுடைய இப்பெருமை தோற்றுகிறது. "நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்" என்கையாலே கிருஷ்ணனுக்கு அண்டைவிட்டிலிருப்பா ளொருத்தியென்றும், அவனை நினைத்தபோதெல்லாம் அனுபவிக்க லாம்படி அருகிலிருப்பவளென்றும் அருளிச்செய்வர்கள். 'ஆநந்த₃ம் ப்₃ரஹ்மணோ வித்₃வாந்' என்றதே, 'ஏஷ ஹ்யேவாநந்த₃யாதி' [இந்தப் பரமாத்மாவே இவனை ஆனந்திப்பிக்கிறான்.] என்றிருப்பா ளொருத்தி" என்றும் நிர்வஹிப்பர்கள். ஸாதநபக்தியைப் பற்றாதே, ஸாத்யபக்தியை அடைந்தவள் என்று தாத்பர்யம். இதுவும் 'சுவர்க் கம் புகுகின்ற' என்று சொல்லுகையாலே உணர்த்தப்படுகிறது.

*வியாக்கியானம்:*— (நோற்று.........அம்மனாய்) "எங்களுடன் சேர்ந்து நோன்பு நோற்பதாகச் சொல்லிவைத்து நீ அழகிதாக நோற்கிறாய்!" என்று ஏசுகிறார்கள். அன்றிக்கே, "நோற்கவேண்டிய தெல்லாம் நோற்றுவிட்டு க்ருஷ்ணாநுபவமாகிய ஸ்வர்க்கத்தை அநுபவிப்பவளே!" என்று கொண்டாடுவதாகவும் கொள்ளலாம். 'ஸ்வர்க்கம்' என்றால் பகவதநுபவத்தைச் சொல்லுமோ என்னில்:

**"யஸ் த்வயா ஸஹ ஸ ஸ்வர்க்கோ₃ நரகோ யஸ் த்வயா விநா"**

*[உன்னுடன் வாழ்வதே சுவர்க்கம்; உன்னைப் பிரிந்திருப்பதே நரகம்]* என்று பிராட்டி சொல்லுகையாலே இவர்களுக்கு இதுவே ஸ்வர்க்கமாகும்.

"தஸ்யாந்தராயோ மைத்ரேய தே₃வாந்த்ரத்வாதி₃கம் ப₂லம்" *[மைத்ரேயரே! அந்த ஞானிக்கு, தேவேந்திரனுயிருக்கை முதலான பலன்கள் இடையூறுகின்றன.] என்றும்,*

"ஸ்வர்க்கே₃ாऽபி யச்சிந்தநே விக்₄நோ
யத்ர நிவேஶிதாத்மமநஸோ ப்₃ராஹ்மோऽபி லோகோऽல்பக:"

*[ஸ்வர்க்கமும் எந்த பகவானை நினைக்கும்போது இடையூறுகிறதோ, எவனிடத்தில் ஈடுபட்ட மனஸ்ஸை உடையவனுக்கு ப்ரஹ்மலோகமும் மிகச்சிறிதாகின்றதோ......]* என்றும், "ஸ்வர்க்க₃ாப்திஸ் தஸ்ய **விக்₄நோநுமீயதே"** *[ப்ரஹ்மஜ்ஞானிக்கு ஸ்வர்க்கத்தை அடைவதும் இடையூருகிறது.]* என்றும் ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் சொல்லிய படியே பகவானிடத்தில் ஈடுபட்டவர்கள் ஸுவர்க்கலோகத்தை ஒரு பொருளாக மதிக்கமாட்டார்களாகையாலே இங்கு இதுவே அர்த்தம். (நோற்று) இவர்களுக்கு நோன்பாவது: க்ருஷ்ணனே நமக்கு உபாயமென்று அறிந்து மார்பிலே கைவைத்து உறங்குகை.

"விது₃: க்ருஷ்ணம் ப்₃ராஹ்மணாஸ் தத்வதோ யே
தேஷாம் ராஜந் ஸர்வயஜ்ஞாஸ் ஸமாப்தா:"

*[அரசரே! ப்ரஹ்மஜ்ஞானிகளான எவர்கள் கிருஷ்ணனை உண்மையாக அறிகிறார்களோ, அவர்களுக்கு எல்லா நோன்புகளும் முடிந்துவிட்டன.]* என்று பகவானைப் பற்றினவர்கள் எல்லா நோன்பையும் நோற்றவர்களாவர் என்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டது. **"செய்த வேள்வியர்"** என்று ஆழ்வாரும், **"செய்த செய்தவன்"** என்று கம்பரும் இவ்வர்த்தத்தை அநுஸந்தித்தார்கள். எழுப்புகிறவர்களுக்கும் இதுவே ஸ்வரூபமாயிருக்க அவர்கள் ஸ்வயத்னத்திலே இறங்குவானென்? என்றால்: க்ருஷ்ணனை அடையவேண்டுமென்னும் ஆசையாலே பதறுகிறார்களித்தனையல்லது இதை ஸாதனமாகக் கனவிலும் கருதுமவர்களல்லர் இவர்கள். ஸித்தோபாயமாகிற பகவானைப் பற்றினவர்களுக்கும் கர்ம ஜ்ஞாந பக்திகள் உண்டு. இவர்களுடைய கர்மம் பகவத்கைங்கர்யமாயிருக்கும். ஜ்ஞானம் ஸ்வரூபமாகிய சேஷத்வத்தை அறிகை; பகவானிடத்தில் ருசி இவர்களுடைய பக்தியாகும். *(அம்மனாய்) எங்களுக்கு ஸ்வாமினியானவளே! "நீ எங்களுக்குத் தலைவியானபடி அழகாயிருக்கிறது!" என்கிறார்கள். "ரக்ஷ்யரக்ஷகபாவத்தை மாறாட நினைக்கிறாயோ? நீ மாறாட நினைத்தாலும் நாங்கள் விடோம்"* என்கிறார்கள். இவர்கள் இப்படிக் கூப்பிடச்செய்தேயும் அவள் பேசாதேகிடந்தாள்; "ஸம்ச்ரவே **மது₄ரம்**

வாக்யம்'' [கேட்பதற்கு இனிய சொல்] என்றும், ''செவிக்கினிய செஞ்சொல்'' என்றும் சொல்லுகிறபடியே மிக இனிதாயிருக்கும் இவர்களுடைய சொல்லைக் கேட்டுக் கட்டுண்ட நாகம்போல் மயங்கிக்கிடந்தாள்;

''ப்ரஹர்ஷேணாவருத்$_3$த$_4$ா ஸா வ்யாஜஹார ந கிஞ்சந''

[ஆநந்தமிகுதியினால் அவள் ஒன்றும் சொல்லவில்லை.] என்கிற படியே திருவடியின் வார்த்தையைக்கேட்ட பிராட்டியைப்போலே பேச்சற்றிருந்தாள். அன்றிக்கே 'இவர்களுக்கு அடிச்சியான நம்மை அம்மனாய் என்பதே!' என்று பேசாதே கிடந்ததாகவும் கொள்ளலாம். இவள் இப்படிப் பேசாமல் கிடப்பதைக்கண்டு ''மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்'' என்கிறார்கள். இவள் வாசலைத் திறக்கா விட்டாலும் இவளுடைய பேச்சையாவது கேட்டு ஆநந்திப்போம் என்று ஆசைப்படுகிறார்கள்.

''மது$_4$ரா மது$_4$ராலாபா கிமாஹ மம ப$_4$ாமிநீ |
மத்$_3$விஹீநா வராரோஹா ஹநுமந் கத$_2$யஸ்வ மே ||''

[ஹநுமானே! இனியவளாகவும், இனிய பேச்சை உடையவளாகவும், என்னை விட்டுப் பிரிந்தவளாகவும், உத்தமஸ்த்ரீயாகவும், எனக்குப் பிரியையாகவுமுள்ள ஸீதை என்ன சொன்னாள்? அதை எனக்குச் சொல்லுவாயாக] என்று அவனும் ஆசைப்படும்படியான தன்றோ இவளுடைய வார்த்தை. (மாற்றமும்.........திறவாதார்) 'வாசலை மூடினால் வாயையும் மூடவேணுமோ? எங்கள் கண்ணைப் பட்டினி போட்டாற்போலே செவியையும் பட்டினி போடவேணுமோ? தான் ஸுகானுபவம் பண்ணினால் பிறரைப்பற்றிக் கவலைகொள்ள லாகாதோ? படுகுலையடித்தால் தண்ணீர் வார்த்தாலாகாதோ? போகத்தைத் தடுத்தால் எங்கள் ஸத்தையையும் அழிக்கவேணுமோ? உன் உடம்பை க்ருஷ்ணனுக்குக் கொடுத்தால் எங்களுக்குப் பேச் சாகிலும் தந்தாலாகாதோ? உன் சரக்கைத் தரப்பார்த்திலையாகில் எங்கள் சரக்கைத் தந்தாலாகாதோ? உன்னுடைய க்ருஷ்ணனைத் தாராவிட்டால் எங்களுடைய உன்னைத் தரலாகாதோ?' என்னும் பாவங்களை வர்ஷதாரைபோல் பொழிவர்கள் நம் ஆசாரியர்கள். (மாற்றமும் தாராரோ) 'வாருங்கள்' என்றே சொல்லவேண்டு மென்னும் நியதியில்லை; 'செல்லுங்கள்' என்று உபேக்ஷித்தாலும் அமையும்; கோபித்தாகிலும் எங்களுக்கு ஒரு வார்த்தை சொன்னால் போதுமானது என்கிறார்கள். ''பாவி நீ என்று ஒன்று சொல்லாய் பாவி

**யேன் காண வந்தே"** என்று ஆழ்வார் பகவத்விஷயத்திலே பட்ட பாட்டை இவர்கள் பாகவத விஷயத்தில் படுகிறார்கள்.

"சுவர்க்கம் புகுகின்ற" என்று, க்ருஷ்ணனுபவமாகிற ஸுகத்தை இவள் அனுபவித்துக் கொண்டிருக்கிறாள் என்று இவர்கள் சொல்லுகையாலே, "நீங்கள் பழி சொல்லுகிறதென்? அவன் இங்கு உண்டோ?" என்று சொன்னாள் உள்ளிருப்பவள்; (நாற்றத்துழாய் முடி) 'நீயும் அவனும் சேர்ந்து மறைக்கப்பார்த்தாலும் திருத்துழாய் மணத்தை மறைக்கப்போமோ?' என்றார்கள். "உன்னைப்போலே புறப்படாத தத்வமோ அவன் சூடின தத்வம்?" என்று நாலாயிரப் படி. இவர்கள் அவன் உள்ளேயிருக்கிறான் என்பதற்கு இப்படி அடையாளம் சொன்னவுடன், "நீங்கள் சொல்லும் அடையாளம் சரியன்று; அவன் ஒருகால் அணைத்தால் ஒன்பது குளிக்கு நிற்குமே; ஆகையால் அவன் முன்பொருநாள் என்னை அணைத்ததால் ஏற் பட்ட நறுநாற்றமே அது. அதைக்கொண்டு அவன் இங்கிருக்கிறானென்று சொல்லப்போகாது. மேலும், நீங்கள் தான் அஸ்தமன ஸமயத்திலிருந்து வாசலிலேயே காவலிட்டுக்கொண்டு நிற்கின்றீர்களே; அப்படியிருக்க, அவன் எப்படிப் புகுரமுடியும்? என்று கேட்டாள் அவள். (நாராயணன்) "அவனுக்கு எங்களைப்போலே கதவு திறக்கப் பார்த்திருக்கவேணுமோ? ஸர்வவ்யாபியான அவன் வேண்டியவிடத்திலே உடனே தோன்றவல்லவனல்லவோ? உகவாதாரையுள்ளிட்ட ஸகல நாரங்களையும் இருப்பிடமாகக் கொண்டிருப்பவன் உகந்த உன்னை விடுவனோ?' என்று பதில் சொல்லுகிறார்கள். (நாற்றத் துழாய்முடி நாராயணன்) ஆசைப்பட்டோரை அணைக்கைக்குத் தோள்மாலையிட்டிருப்பவனன்றோ? தன்னை அடைந்தவர்களைத் தலையாலே தாங்குமவனன்றோ? "பேசாதே கிடந்தால் 'மாற்றமும் தாராரோ' என்கிறார்கள்; பதிலுரைத்தால், 'நாம் சொன்னதற்கெல்லாம் பதிலுரைத்துக்கொண்டிருக்கிறாளே' என்று வருந்துகிறார்கள்;" என்று நினைத்து, பதில் சொல்லாமல் உறங்குவாரைப்போலே கிடந்தாள். (நம்மால்......தந்தானோ) கும்பகர்ணன் இறந்தபின்பு தன் தூக்கத்தை உன்னிடம் கொடுத்துவிட்டானோ? என்று ஏசுகிறார்கள். (நம்மால் போற்றப் பறை தரும் புண்ணியன்) கைம்முதலொன்றில்லாத நமக்கும் மேலான ஸுகத்தையளிக்கும் பரமதார்மிகன். நம் ஆழ்வார்கள் நாராயணசப்தத்திற்கு முன்னும் பின்னும், அதன் பொருளை அநுஸந்திப்பதொரு நியதியுண்டு. **"எண்பெருக்கந்நலத்தொண் பொருளீறில வண்புகழ் நாரணன்" "நாரணன் முழுவேழுலகுக்கும் நாதன்" "நானுன்னையன்றியிலேன் கண்டாய் நார**

ணனே நீ என்னையன்றியிலே'' ''காராயின காளநன் மேனியினன் நாரா யணன்'' முதலானவிடங்களில் இதைக்காணலாம். அவர்களை அடி யொற்றி ஆண்டாளும் நாராயணசப்தத்திற்கு முன்னும் பின்னும் அர்த்தம் அருளிச்செய்கிருள். ''நாற்றத்துழாய்முடி நாராயணன்'' என்று நித்யவிபூதி நிர்வாஹகத்வத்தை நாராயண சப்தத்துக்குப் பொருளாக உணர்த்தி, ''நாராயணன் நம்மால் போற்றப்பறை தரும் புண்ணியன்'' என்று லீலாவிபூதிக்கும் ஸ்வாமியாகவும், உபாயமாகவும், உபேயமாகவும் இருப்பவன் என்னும் நாராயண சப்தார்த்தத்தை அறிவிக்கிருள்.

''நாரசப்தே₃ந ஜீவாநாம் ஸமூஹ: ப்ரோச்யதே பு₃தை₄: |
க₃திராலம்ப₃நம் தஸ்ய தேந நாராயண: ஸ்ம்ருத: ||''

[நாரசப்தத்தினுல் ஜீவர்களுடைய ஸமூஹம் பெரியோர்களால் சொல்லப்படுகிறது; அந்த ஜீவஸமூஹத்திற்கு உபாயமாகவும், ப்ராப்யமாகவும் இருப்பதால் இவன் நாராயணனெனப்படுகிருன்.] என்று சொல்லப்பட்ட அர்த்தத்தை அநுஸந்திக்கிருள். (பறை தரும் புண்ணியன்) ''புமாம்ஸம் நயதீதி புண்ய:'' [மனிதனை நற்கதிக்கு அழைத்துச் செல்லும் தத்வம் புண்யமாகும்.] என்ற புண்ய சப் தார்த்தம் இவனிடமே பொருந்தியுள்ளதென்று உணர்த்தப்படுகிறது.

''யே ச வேத₃விதே₃ா விப்ரா: யே சாத்₄யாத்மவிதே₃ா ஜநா: |
தே வித₃ந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம் த₄ர்மம் ஸநாதநம் ||''

[வேதத்தை அறிந்தவர்களும், ஆத்மஜ்ஞானிகளுமான மஹான்கள் மஹாத்மாவான க்ருஷ்ணனையே பழைமையான தர்மம் (ஸித்தோ பாயம்) என்று சொல்லுகிருர்கள்.] என்றும்,

''பாவந: ஸர்வலோகாநாம் த்வமேவ ரகு₄நந்த₃ந''

[ரகுச்ரேஷ்டனே! நீயே எல்லா உலகையும் பரிசுத்தப்படுத்துபவன்] என்றும், ''ராமோ விக்₃ரஹவாந் த₄ர்ம:'' [ராமன் தர்மமே உருவெடுத்த வன்.] என்றும், ''புண்யாநாமபி புண்யோஸெள'' [புண்ய வஸ்துக் களைக்காட்டிலும் மிகச்சிறந்த புண்ணியனுயிருப்பவன் இவனே.] என்றும் சொல்லுகையாலே ''புண்ணியன்'' என்கிருர்கள். (போற்ற) ''பல்லாண்டு'' என்னுமவர் திருமகளாகையாலே ''போற்ற'' என் கிருள். இவர்களுடைய தேஹயாத்ரையிருக்கிறபடி. (நம்மால்) அவனுக்கு ஆகாதாருண்டோ இவன் முடிகைக்கு? (போற்ற)

மஹாயத்னத்தைச் செய்யவேண்டியிருக்கையாலே,செய்யமாட்டாமல் முடிந்தானல்லன். (புண்ணியனால்......வாய் வீழ்ந்த) தண்ணீர் குடிக்க வெட்டப்பட்ட ஏரியிலே தலைகீழாக விழுந்து சாவாரைப் போலே விழுந்து மடிந்தான். ''ரிபூணாமபி வத்ஸல:'' [எதிரிகளிடமும் அன்புடையவன்.] எனப்பட்ட சக்ரவர்த்தித் திருமகனை எதிரியாகப் பெற்றுவைத்து முடிவதே! என்கிறார்கள். (பண்டு ஒரு நாள்) முன்பும் உன்னைப்போலே உணராமல் படுத்தினார் உண்டுகாண்! முன்பு கேட்டிருந்ததை இன்று அனுபவிக்கிறோம். (கூற்றத்தின் வாய் வீழ்ந்த) தான் சிறையிட்டு வைத்திருந்த யமன் வாயிலே தானே விழுந்தான். (வாய்வீழ்ந்த) விளக்கின் வாயிலே விழுந்தாப் போலே விழுந்தான். (கும்பகரணனும்......) உறங்குபவர்களுக்குத் தலைவனான அவனும், உன்னுடன் உறக்கத்திலே போட்டி போட்டு உன்னை ஜயிக்கமாட்டாமல், தன்தோல்வியை ஒப்புக்கொண்டு, தன் உறக்கத்தையும் உனக்குத் தந்து போனானோ? (பெருந்துயில்) அவனளவோ உன் தூக்கம்! அவனுடையது துயில்; உன்னுடையது பெருந்துயில். அவனுககு ஆறு மாஸம் உறங்குவதும், பிறகு விழிப்பதும் என்னுமோர் வ்யவஸ்தையுண்டு. அதுவுமில்லையோ உனக்கு? இவள் அரைக்ஷணம் புறப்படாதொழிய, நெடுங்காலமாய்த் தோற்றுகிறது இவர்களுக்கு. 'அவன் ஒருத்தியைப் பிரிக்கத் துணைசெய்தான் நீ ஊர் முழுவதையும் பிரித்து உறங்காநின்றாய்' என்கிறார்கள்.

'அஸஹ்யாபசாரம் செய்த அஸுரப்பையலை நமக்கு ஒப்பாகச் சொல்வதே!' என்று துணுக்குற்றுத்தான் உணர்ந்தமை தோற்ற ''க்ருஷ்ண க்ருஷ்ண'' என்று சொல்லிச் சோம்பல் முறித்தாள். (ஆற்ற அநந்தல் உடையாய்) 'இதொரு உணர்த்தி இருந்தபடியென்! நாங்கள் பகவானைப்போய்த் துயிலெழப்பாடவும் வேண்டியதில்லை; நீ விழிப்பதைக் காண்பதே போதும்' என்கிறார்கள். ஜன்னலாலே இவள் உணரும்போதிருந்த அழகைக் கண்டு ''அருங்கலமே'' என்கிறார்கள். எங்களுக்கு சிரோமணியாய் விளங்குபவளன்றோ நீ? எங்கள் திரளில் புகுந்து எங்களை அலங்கரிப்பாயாக என்கிறார்கள். (அரும் கலமே) க்ருஷ்ணனால் தலையிலே தரிக்கத்தக்கவளாயிருக்கும்படி அவனுக்கு வல்லபையாயுள்ளவள் என்றும் கொள்ளலாம். இவர்கள் கூப்பிடும் குரலைக்கேட்டுச் சடக்கென வரப்புக்காள். (தேற்றமாய் வந்து திற) பின்கட்டிலே கிடக்கிறவளாகையாலே 'தடுமாறாதே நிதானமாக வந்து திற' என்கிறார்கள். அன்றிக்கே, க்ருஷ்ணனுடன் கூடிய ஸம்போகசிந்றங்களைச் சீர்திருத்திக்கொண்டு வந்து திற என்கிறார்களாகவுமாம்.

''ஸா ப்ரஸ்க₂லந்தீ மத₃விஹ்வலாக்ஷீ
ப்ரலம்ப₃ காஞ்சீகு₃ணஹேமஸூத்ரா''

*[மதுவாலே மயங்கின கண்களையுடையவளாகவும், தொங்குகின்ற ஆபரணங்களையுடையவளாகவும், தடுமாறுபவளாகவும் தோன்றினாள்] எனப்பட்ட தாரையைப்போலே வாராதேகொள் என்றபடி.*

## திருப்பாவை—பதினோராம் பாட்டு.

11. கற்றுக் கறவை கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே
புற்றர வல்குற் புனமயிலே போதராய்
சுற்றத்துத் தோழிமா ரெல்லாரும் வந்துநின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாடச்
சிற்றாதே பேசாதே செல்வப்பெண் டாட்டிநீ
எற்றுக் குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய்.

**பதவுரை:—கற்றுக் கறவை**-*கன்றுபோலேயிருக்கும் பசுக்களுடைய,* **பல கணங்கள்**—*பல கூட்டங்களையும்,* **கறந்து**-*கறப்பவர்களாய்,* **செற்றார்**-*எதிரிகளினுடைய,* **திறல் அழிய**-*பலம் அழிந்து போகும்படி,* **சென்று**—*(படையெடுத்துப்) போய்,* **செருச் செய்யும்**-*போர் புரியுமவர்களாய்,* **குற்றம் ஒன்று இல்லாத**-*ஒருவிதமான குற்றமற்றவர்களான,* **கோவலர்தம்**-*ஆயர்களுடைய (குலத்தில் பிறந்த),* **பொன் கொடியே**-*பொன் கொடிபோன்றவளே!* **புற்று அரவு அல்குல்**-*புற்றிலிருக்கும் பாம்பின் படம்போலேயுள்ள நிதம்ப ப்ரதேசத்தையுடையவளாய்,* **புன மயிலே**—*தன் நிலத்திலேயுள்ள மயில் போன்று இருப்பவளே!* **போதராய்**-*புறப்பட்டு வருவாயாக;* **சுற்றத்துத் தோழிமார் எல்லாரும்**— *(உனக்கு) உறவினரான தோழிகள் அனைவரும்,* **வந்து**—*(சேர்ந்து) வந்து,* **நின் முற்றம் புகுந்து**—*உன்னுடைய மாளிகை முற்றத்திலே புகுந்து,* **முகில் வண்ணன் பேர்பாட**—*நீலமேக வண்ணனை கண்ணபிரானுடைய திருநாமங்களைப் பாடியும்,* **செல்வப் பெண்டாட்டி நீ**—*(எங்க*

ளுக்கு) எல்லாச் செல்வமுமாயிருக்கும் நீ. **சிற்றுதே பேசாதே**– அசையாமலும், பேசாமலும். **உறங்கும் பொருள் எற்றுக்கு**— உறங்கும் காரியம் எதற்காகவோ?

**அவதாரிகை:**—கிருஷ்ணன் ஊருக்கு ஒரு பிள்ளையானுப் போலே ஊருக்கு ஒரு பெண்பிள்ளையாயிருப்பாளொருத்தியை எழுப்புகிறுர்கள். அவனைப்போலே உயர்ந்த குடிப்பிறப்பையுடைய வளாய், ஊராரால் கொண்டாடப்படுமவளாய், ஒரு கொள்கொம் பிலே சேர்த்துவிடவேண்டும் கொடிபோன்றிருப்பவளாய், 'அவனைப் பெறுகைக்கு நானே நோற்பது? வேண்டுமாகில் அவன் நோன்பு நோற்று வந்து நம்மைப் பெறட்டும்' என்று கிடப்பவளான ஒரு பெண்பிள்ளையிவள். "கோவலர்தம் பொற்கொடியே", "புற்றர வல்குல்புனமயிலே". "செல்வப் பெண்டாட்டி" என்பவற்றிலிருந்து இவை தோற்றுகின்றன.

**வியாக்கியானம்:**—(கற்றுக் கறவை) கன்றுக்கு ஆகும் வயதே ஆகியிருந்தபோதிலும், கிருஷ்ணனுடைய கைபட்டவுடன் கறவை மாடுகளாகின்றன. நித்யஸூரிகள் பகவானுடைய ஸ்பர்சத்தாலே எப்போதும் இருபத்தைந்து வயதானவர்கள் போலவே விளங்கு கின்றுப்போலே, கறவைமாடுகளும் கன்றுகளாகவே விளங்குகிறபடி.

> "அஹம் புநர் தே₃வகுமாரரூபம்
> அலங்க்ருதம் தம் ஸுதமாவ்ரஜந்தம் ।
> நந்தா₃மி பச்யந்நபி த₃ர்ஶநேந
> ப₄வாமி த்₃ருஷ்ட்வா ச புநர்யுவேவ ॥"

[தேவகுமாரனைப்போன்ற உருவமுள்ளவனும், (ஆபரணம் முதலிய வைகளால்)அலங்கரிக்கப்பட்டவனும், கம்பீரமாக நடந்து வருகின்ற வனுமான என் பிள்ளையாகிய ராமனை நெஞ்சிலுல் நினைக்கும் போதும் ஆநந்திக்கிறேன். கண்ணால் கண்டால் மறுபடியும் வாலி பனுகவே ஆகிவிடுகிறேன்.] என்று அறுபதினுயிரம் ஆண்டுகள் வாழ்ந்த தசரதசக்ரவர்த்தியையே பகவத் தர்சனம் யுவாவாகப் பண்ணிற்றெனில் கரஸ்பர்சத்தாலே கறவைகள் கன்றுகளாவதற்குக் கேட்கவேண்டுமோ? (நந்தா₃மி பச்யந்நபி த₃ர்சநேந) நெஞ்சால் நினைத்தால் ஆனந்திக்கச்செய்யும்; (த்₃ருஷ்ட்வாச புநர் யுவேவ) கண்ணால் கண்டால் வாலிபனுக்கும்; (கற்றுக் கறவை......கறந்து) கையால் தொடில் சிசுப்பருவத்தை அடையச்செய்யும். (கற்றுக்

கறவை) கண்ணன் பசுக்களைக் கண்டால் ஸ்வயத்நபரரான மனிதர்களைக் கணிசியாமலிருப்பான். ஸ்வயத்நலேசமுமற்ற கன்றுகளைக் கண்டாலோவெனில் அப்பசுக்களையும் பாரான். "திவத்திலும் பசு நிறை மேய்ப்புவத்தி செங்கனி வாயெங்கள் ஆயர்தேவே!" என்று நம்மாழ்வார் இவன் பசுநிறைமேய்க்கும்போது உகக்கும்படியை அருளிச்செய்தார். "கன்று மேய்த்தினிதுகந்த காளாய்!" என்று திருமங்கையாழ்வார் இவன் கன்றுமேய்த்து இனிதுகக்கும்படியை அறிவித்தார். அது உகப்பு; இது இனிதுகப்பு. பகவான் ஸ்வாதந்த்ர்யம் மிக்கவர்களான ஆயர்களைக்காட்டிலும்,ஸ்வாதந்த்ர்யமற்ற ஆய்ச்சிகளிடம் மிகவும் அன்புடையவனுயிருப்பன். அவர்களைக் காட்டிலும், ஆயர் சிறுமிகளிடம் அதிகமான அன்பு பூண்டிருப்பன்; அவர்களைக் காட்டிலும், தன்னை அண்டியிருக்கும் பசுக்களிடம் பிரியங்கொண்டிருப்பன்; பசுக்களைக் காட்டிலும், தன்னையல்லதறியாத கன்றுகளிடம் காதல் விஞ்சியிருக்கும்.

(கணங்கள் பல) இவை ஒன்றிரண்டாயிருக்கையன்றிக்கே ஸமூஹமாயிருக்கும்; அப்படிப்பட்ட ஸமூஹங்களும் 'பல' என்று சொல்லும்படி கணக்கற்றவையாயிருக்கும். திருவஷ்டாக்ஷரத்திலே நாரசப்தார்த்தமிருக்கும்படி. நரஸமூஹம் நாரமாகிறது. அப்படிப்பட்ட நாரங்களும் பலவாகையால் "நாரா:" எனப்படுகின்றன. அவைகளை இருப்பிடமாக உடையவன் நாராயணனுகிருன் என்று சாஸ்திரங்களில் விவரிக்கப்படுகிறதன்றே. (கணங்கள் பல) "'ப$_3$ஹுஸ்யாம்' என்றும், 'பற்பல்லாயிரமுயிர்' என்றும் ஆத்மாக்களுக்கு ஸங்க்யையுண்டாகிலும், 'ப$_3$ஹவோ ந்ருப கல்யாண கு$_3$ணு;' 'ப$_3$ஹவோ துர்லப$_4$ாச்சைவ' 'எண்ணில் பல்குணங்கள்' என்று சொல்லுகிற பகவத்குணங்களுக்கு எல்லையுண்டாகிலும் இப்பசுக்களுக்கு எல்லையில்லை." என்று ஆருயிரப்படி. "ராஜா த$_3$சரதே$_2$ா நாம ரத$_2$குஞ்ஜரவாஜிமாந்" [தேர்கள், யானைகள், குதிரைகள் ஆகியவற்றை மிக அதிகமாக உடையவரான தசரதர் என்னும் அரசரொருவர் இருந்தார்.] என்று அதிகம் என்னும் அர்த்தத்தையுடைய 'மதுப்' ப்ரத்யயத்தை ப்ரயோகித்தாற்போலே 'பல' எனப்படுகிறது.

"பல பலவே ஆபரணம் பேரும் பலபலவே
பல பலவே சோதிவடிவு பண்பெண்ணில்
பலபல கண்டுண்டு கேட்டுற்று மோந்தின்பம்
பலபலவே ஞானமும் பாம்பணை மேலார்க்கேயோ"

என்று நம்மாழ்வார் அருளிச்செய்தபடியே பகவத்ரூபகுண நாம விபூதிகள் ஒவ்வொன்றும் 'பல' என்று சொல்லும்படி கணக் கற்றவையாயன்றோ இருப்பது. (பல கறந்து) அநேகருத்விக்குகள் செய்யக்கடவ சடங்கை அதில் கூர்மையுடையவன் ஒருவனே செய்யுமாபோலேயும், ப்ராஹ்மணர் வேதத்தையடைய அதிகரிக்குமா போலேயும், க்ஷத்ரியன் பருவம் நிரம்புவதற்கு முன்னே யுத்தத் திலே நிலவனுமாபோலேயும், ஈச்வரன் ஒருவனுமே ஸர்வாத்மாக் களினுடையவும் கர்மாநுகுணமாக நாமரூபங்களைப்பண்ணி நியம நாதிகளைப்பண்ணுமாபோலேயும், பசுக்கள் அநேகமாகிலும், ஜாதி யில் மெய்ப்பாட்டாலும், ஜாத்யுசிதவ்ருத்தியாகையாலும், ஒருத்தனே அடங்கக் கறக்கவல்ல ஸாமர்த்தியம். (கணங்கள் பல கறந்து) "அரிய காரியங்களைச் செய்யவல்ல குலத்திலே பிறந்தால், உன்னை யல்லதறியாத எங்களடமோ அவ்வருங்காரியங்களைக் காட்டுவது? உன்னைப் பிரியில் தரியாத எங்களிடம் பிரிந்து தரிக்கும் பெருங் காரியத்தைச் செய்துகாட்டாதே காண்!"என்கிறார்கள். 'என்னுடைய அருங்காரியங்களை யாரிடம் காட்டுவது?'.என்று கேட்க, (செற்றார்... செருச் செய்யும்) என்கிறார்கள். (செற்றார்) இவர்களுக்கு எதிரிகள் க்ருஷ்ணனுடைய பெருமையைப் பொறாதவர்கள். "சத்ரோ: ஸகாசாத் ஸம்ப்ராப்த:" [சத்துருவினிடமிருந்து வந்தவன்] என்று அங்கதன் ராவணனை சத்ருஎன்றே நிரூபித்தாப்போலே இவர்கள் கம்ஸன் முதலியோரைத் தங்களுக்கு சத்துருக்களாய் நினைத்திருக்கின்றனர். தன்னுடைய உயிர்நிலையான பாகவதர்களை நலிபவர்களை பகவான் தனக்கு விரோதிகளாக நினைத்திருப்பன். தமக்கு தாரகனை பக வானின் பெருமையைப் பொறாதவர்களை பாகவதர்கள் தங்கள் விரோதிகளாக நினைத்திருப்பர்கள். "தீய புந்திக் கஞ்சன்" என்றும் "சாதுசனத்தை நலியும் கஞ்சன்" என்றும், கம்ஸனுக்கு இவ்விரு வகையான அபசாரமும்உண்டாகையாலே அவனும்அவனைச்சேர்ந்த வர்களும் 'செற்றார்' எனப்படுகின்றனர். (செற்றார் திறல் அழிய) "ப்ராஹ்மணரைப்போலே வேதமோதித்திரியும் பிரமனும், பஸ்மம், கபாலம் முதலியவற்றைப்பூண்டு சுடுகாட்டிலே சுற்றும் சிவனும், அப்ஸரஸ்ஸுகளுடன் ரமிப்பதிலேயே போதுபோக்கும் இந்திரனும் பாற்கடலிலே ஒளிந்துகொண்டு தூங்கும் திருமாலும் எனக்கு எதிராவர்களோ" என்று கர்வங்கொண்ட கம்ஸனின் வலி முழுவதும் ஒழிந்து போகும்படியாக.

(சென்று செருச் செய்யும்) எதிரிகள் தம் ஊருக்குப் படை யெடுத்துவந்தாலும் அவர்களை எதிர்த்துப்போரிட வல்லமையற்று

அவர்களிடம் அடைக்கலம் புகுவது அதமவீரலக்ஷணம். எதிரிகள் வந்தால் அவர்களுடன் போர்புரிவோம் என்றிருப்பது மத்யம வீரலக்ஷணம். எதிரிகள் வரப்பார்த்திராதே, தாமே அவர்களிருந்த விடத்தே சென்று போரிடுவது உத்தமவீரலக்ஷணம். இவ்வூரிலுள்ளார் சென்று செருச் செய்யும்படியான உத்தமவீரலக்ஷணத்தை உடைத்தாயிருந்தார்கள் என்றபடி.

**"அபி₄யாதா ப்ரஹர்த்தா ச ஸேநாநயவிஶாரத₃:"**

[ஸ்ரீராமன் சத்துருக்களைத் தானே படையெடுத்துச் சென்று போர்புரிபவராகவும்,ஸேனைகளை அணிவகுப்பதில் ஸமர்த்தராகவும் விளங்குகிறார்.] என்று வால்மீகிமஹர்ஷியாலும், "சென்று கொன்று வென்றி கொண்ட" என்று ஆழ்வாராலும் பகவான் விஷயத்தில் பேசப்பட்டதன்றோ. (குற்றம் ஒன்றில்லாத) வீரர்களுக்குப் பல குற்றங்கள் உண்டு. அவையாவன:— எதிரிகள் படையெடுத்துவரப் பார்த்திருக்கை; போரிலே புறமுதுகிட்டு ஓடுகை; ஆயுதமில்லாதவனுடன் போர்புரிகை முதலியன; இக்குற்றங்களில் ஒன்றுமில்லாதவர்கள் இவ்வூரிலாயர்கள். அன்றிக்கே, எம்பெருமானுடைய பிரீதிக்கு மிகவும் பாத்திரமானவர்களாகையாலே அவனுடைய த்ருஷ்டியாலே ஒரு குற்றமற்றவர்கள் என்றும் கொள்ளலாம்.

**"து₃ராசாரோऽபி ஸர்வாஶீ க்ருதக்₄னோ நாஸ்திக: புரா।**
**ஸமாச்ரயேத₃ாதி₃தே₃வம் ச்ரத்₃த₄யா ஶரணம் யதி₃ ||**
**நிர்த்தோ₃ஷம் வித்₃தி₄ தம் ஜந்தும் ப்ரப₄ாவாத் பரமாத்மந:||"**

[அநாதிகாலமாகக்கெட்ட ஆசாரங்களை உடையவனாயிருந்தாலும், கண்டதையெல்லாம் உண்பவனாயிருந்தாலும், செய்ந்நன்றி மறந்தவனாயினும், நாஸ்திகனாயிருந்தாலும், ஆதிதேவனான பகவானை ச்ரத்தையுடன் சரணமடைந்தானாகில் அந்தப் பரமாத்மாவினுடைய ப்ரபாவத்தாலேயே அவன் தோஷமற்றவனாகிறான் என்று அறிவாயாக.] என்றல்லவோ சாஸ்திரங்களில் சொல்லப்பட்டது.

**"தோ₃ஷோ யத்₃யபி தஸ்ய ஸ்யாத் ஸதாமேதத₃க₃ர்ஹிதம்"**

[தோஷம் அவனுக்கு இருந்தாலும் நல்லோர்கள் அதைக்கண்டு வெறுக்கமாட்டார்கள்.]என்று சக்ரவர்த்தித்திருமகனும் ஸித்தாந்தம் செய்தான்.

**"அபி சேத் ஸுது₃ராசாரோ ப₄ஜதே மாமநந்யப₄ாக்।**
**ஸாது₄ரேவ ஸ மந்தவ்ய: ஸம்யக்₃ வ்யவஸிதோ ஹி ஸ:||"**

[மிகவும் துராசாரத்தையுடையவனுயினும், என்னையே ப்ராப்ய ப்ராபகங்களாகக்கொண்டு என்னை அடைந்தானுகில் அவன் ஸாது வென்றே நினைக்கத்தக்கவன்; நல்விஷயத்தில் திடமான புத்தி யுடையவனுயிருக்கிருனன்றே அவன்.] என்று ஆயர்கொழுந்தாகிய இவ்வச்சுதனும் அருளிச்செய்தானன்றே. இப்படி அடியவரிடம் குற்றமொன்றின்மையைக் காண்பதாலேயன்றே அவன் ''அவிஜ் ஞாதா ஸஹஸ்ராம்சு:'' [அடியார்களின் குற்றங்களைக் காணுதவன்; அவர்களுடைய நன்மைகளை ஆயிரம் மடங்கு அதிகமாகக் காண்பவன்.] என்னும் பெயர்களை உடையவனுகிருன். அதனுலேயே சாஸ்திரங்களிலும்

**''அவிஜ்ஞாதா ஹி பக்தாநாமாகஸ்ஸ்ய கமலேக்ஷண:''**
[பக்தர்களுடைய குற்றங்களைக் காணுதவனன்றே கமலக்கண்ணன்.] என்று கோஷிக்கப்பட்டது.

**''தன்னடியார் திறத்தகத்துத்**
**தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல்**
**என்னடியார் அது செய்யார்**
**செய்தாரேல் நன்று செய்தார் என்பர்போலும்''**

என்று பெரியாழ்வார் அருளிச்செய்தபடியே, நித்யாநபாயினியான பிராட்டியும் பக்தர்களிடம் தோஷம் கூறினுல் அதை மறுத்து 'நன்று செய்தார்' என்பவனன்றே நாராயணன்.

**''குன்றனைய குற்றம் செயினும் குணம் கொள்ளும்'' என்றும், ''செய்த குற்றம் நற்றமாகவே கொள் ஞாலநாதனே''** என்றும் அருளிச் செய்தனரன்றே ஆழ்வார்கள். ''ஆச்ரிதருடைய தோஷத்தை, கடலுக்குத்தொடுத்த அம்பை மருகாந்தாரத்திலே விட்டாப்போலே அசல் பிளந்தேற்றல்; பகதத்தனுடைய அம்பை மார்பிலே ஏற்றுப் போலே தான் அநுபவித்தல்; தன்னையே புண்யமாகக் கொள்ளுதல் செய்யுமவன்'' என்று நாலாயிரப்படியில் அருளிச்செய்யப்பட்டது அநுஸந்திக்கத்தக்கது.

(கோவலர் தம் பொற்கொடியே) ''ஜநகாநாம் குலே கீர்த்திம் ஆஹரிஷ்யதி மே ஸுதா'' [ஜனகவம்சத்திற்கே என்னுடைய பெண் கீர்த்தியைக் கொடுக்கப்போகிருள்.]என்று சொன்னுப்போலே ஆயர் குலத்திற்கே ஒரு அலங்காரமாய் விளங்கும் கொடிபோன்றிருப்பவ ளிவள். அவன் ஆயர்குலத்தில் தோன்றுமணிவிளக்காணுப்போலே

இவள் கோவலர்தம் பொற்கொடியாயிருக்கிறபடி. (பொற்கொடியே) பொன் போன்று அழகியவளாய், கொடிபோன்ற துவட்சியை உடையவளாயிருக்கை. "பதிஸம்யோக₃ஸுலப₄ம் வய:" என்கிறபடியே யிருக்கையாலே ஒரு கொள் கொம்பைத்தேடியோடும் கொடியெனப் படுகிருள். (பொற்கொடியே) "கொடி தரையிலே கிடக்கலாமோ? ஒரு பற்றுக் கொம்பைப் பற்ற வேண்டாவோ?" என்கிருர்கள். "ஆவிக் கோர் பற்றுக் கொம்பு நின்னலால் அறிகின்றிலேன்யான்" என்ருரன்ரே நம்மாழ்வாரும். "கோல்தேடியோடும் கொழுந்ததே போன்றதே மால்தேடியோடும் மனம்" என்றும் சொல்லப்பட்டதன்ரே. (பொற்கொடியே) "அவனையொழிந்தாலும் உங்களை விட்டு நிற்க மாட்டேன் நான் என்று சொல்லிவைப்பாயே; அதுவும் பொய்த்ததோ" (புற்றரவல்குல்) வெளிப்புறப்பட்டதால் புழுதி படிந்தும், பிறரால் பிடியுண்டதால் சோபையிழந்தும் காணப்படும் ஸர்ப்பம் போலிராமல், புற்றிலேயே உள்ள நாகம் போலும், அதன் படத்தைப்போலும் ஓசிவையும் அகலத்தையுமுடைய நிதம்ப ப்ரதேசத்தையுடையவள். பெண்களான இவர்கள், பெண்ணான இவளுடைய இந்த அவயவத்தை வர்ணிப்பானேன்? என்னில்:

"பாஞ்சால்யா: பத்₃மபத்ராக்ஷ்யா: ஸ்நாயந்த்யா ஜக₄நம் க₄நம்।
யா: ஸ்த்ரியோ த்₃ருஷ்டவத்யஸ் தா:பும்ப₄ாவம் மநஸா யயு:॥"

[தாமரையிதழ்போன்ற கண்களையுடையவளும், ஸ்நாநம் செய்பவளுமான த்ரௌபதியின் பெரிய அல்குலைக் கண்ட ஸ்த்ரீகளும் ஆண்மையை மனஸ்ஸாலே விரும்பினர்கள்.] என்று சொல்லப் பட்டபடியே த்ரௌபதியிடம் அந்த ஸ்த்ரீகள் பட்ட பாட்டை இவளிடம் இவர்கள் படுகிருர்கள். "பும்ஸாம் த்₃ருஷ்டிசித்தாபஹாரிணம்" [ஆண்களுடைய கண்ணையும் நெஞ்சையும் அபஹரிப்பவன்.] என்றும், "ஆடவர் பெண்மையை அவாவும் தன்மையான்" என்றும் சொல்லப்பட்ட அவனுக்கு நிகராயிருக்கிறபடி. "பொற்கொடி" என்று ஸமுதாயசோபையும், "புற்றரவல்குல்..." என்று அவயவ சோபையும் அறிவிக்கப்படுகிறது. (புனமயிலே) தன்னிலத்திலேயுள்ள மயிலின் தோகையைப்போன்ற அளகபாரத்தையும், மயிலைப் போன்ற அழகையும் உடையவளே! "தோகைமாமயிலார்கள் நின்னருள் சூடுவார்" எனப்பட்டதன்ரே. (போதராய்) "உன்னுடைய நடையழகைக் காட்டி எங்களை உயிர்தரிக்கப் பண்ணவேணும்" என்று யாசிக்கிருர்கள். (போதராய்) "சோப₄யந் த₃ண்ட₃காரண்யம் தீ₃ப்தேந ஸ்வேந தேஜஸா" [ஒளிவிடாநிற்கும் தன் தேஜஸ்ஸாலே

தண்டகவனத்தை சோபிக்கச் செய்துகொண்டு விளங்கினன். என்றுப்போலே உன் ஒளியாலே எங்களை சோபிக்கச் செய்வாயாக.

"மற்றெல்லாரும் வந்தார்களோ?" என்று கேட்க, (சுற்றத்து ........) என்கிறுர்கள். (சுற்றத்துத் தோழிமார்) 'இவ்வூரிலுள்ளா ரெல்லாரும் இவளுக்குத் தோழிகளாயிருப்பதோடன்றியில் உறவின ராகவும் உள்ளனர். (எல்லாரும் வந்து) உன்னையொழிய வேருெரு ப்ரயோஜனத்தைக் கருதியிருந்தாலன்ருே இவர்கள் உன்னைப்போல் கண்ணுறங்குவது? (எல்லாரும்.........நின் முற்றம் புகுந்து) எல்லாரும் புகுந்தாலும், ஸ்ரீவைகுண்டம்போலே இடமே விஞ்சியிருக்கும்படி. "ஸர்வாத்மஸாதாரணநாதகோஷ்டீபூரேபி துஷ்பூரமஹாவகாசம்" [ஸர்வாத்மாக்களுக்கும் உரியதான பாவத்கோஷ்டியெல்லாம் கூடினுலும் நிரம்பாதபடி பேரிடத்தை உடையதாயிருப்பது] என்று சொல்லப்பட்டதன்ருே. (நின் முற்றம்) எங்களுக்கு ப்ராப்ய பூதையான உன்னுடைய முற்றம். "முற்றம் புகுந்து முறுவல் செய்து நின்றீர்" என்றும், "முற்றத்தூடு புகுந்து நின் முகங் காட்டிப் புன் முறுவல் செய்து" என்றும் அவன் விரும்புகிற முற்றமாகையாலே நாங்கள் விரும்பச் சொல்லவேணுமோ? 'புகுந்து செய்யவேண்டிய காரியமென்ன?' என்றுல் (முகில்வண்ணன் பேர் பாட) 'மேகத்தைப்போன்ற நிறத்தையும், அபேக்ஷையை எதிர்பாராமல் அருளும் வண்மையையும் உடைய எம்பெருமானுடைய திருநாமங்களைப் பாடுவோம்' என்கிருர்கள்.

(சிற்ருதே பேசாதே) இப்படிப் பாடியும், சிறிதும் அசையாமலும் வாய் பேசாமலும் கிடப்பதே! எங்களுக்குத் தாரகமான உன் சேஷ்டைகளையும், வார்த்தைகளையும் எங்களுக்குக் கொடுத்தாலாகாதோ? க்ருஷ்ண குணங்களை நாங்கள் பாடியவுடன் மயங்கிக் கிடக்கிருயோ? (செல்வப் பெண்டாட்டி நீ) 'உன்னை நீ பிரிந்தறியாயே; நீ உன் அபிமதனை க்ருஷ்ணனைப் பெற்ருய்; நாங்கள் எங்களுக்கு இஷ்டையான உன்னைப் பெறவில்லை' என்று வெறுக்கிருர்கள். (செல்வப் பெண்டாட்டி) 'எங்களுக்கும் க்ருஷ்ணனுக்கும் எல்லாச் செல்வமுமாயிருக்கிற பெண்பிள்ளை' என்றும் 'க்ருஷ்ணனுபவமாகிற செல்வத்தையுடைய பெண்பிள்ளை' என்றும் பொருள் கொள்ளலாம். 'இங்கே க்ருஷ்ணனுபவமாகிற செல்வம் நிறைந்து கிடக்கிறதோ?' என்ருள்; (எற்றுக்குறங்கும் பொருள்) 'பின் எதற்காக உறங்கிக்கிடக்கிருய்' என்கிருர்கள். எங்கள் கூக்குரலைக் கேட்ட பின்பும் உறங்குவதற்கு ஒரு காரணம் வேண்டாவோ?" அடியார்கள்

குழாங்களை உடன் கூடுவதென்றுகொலோ'', 'தொண்டீரெல்லீரும் வாரீர்' என்றெல்லாம் நீ பண்டு அநுஸந்தித்துப் போந்தவற்றை அழகிதாக அநுஷ்டித்துக் காட்டுகிறாய்! என்கிறார்கள். 'தனியனுபவிக்கும் கைவல்ய மோக்ஷமோ உனக்கு ப்ரயோஜனம்?' என்கிறார்கள். (எற்றுகுறங்கும் பொருள்) 'உன்னுடைய ப்ராப்யத்தையும் பாராதே, எங்களுடைய ஆற்றாமையையும் பாராதே, பகவானுடைய போக்யதையையும் பாராதே நீ உறங்குவதற்கு என்ன ப்ரயோஜனம்?' என்கிறார்கள்.

## திருப்பாவை—பனிரண்டாம் பாட்டு.

12. கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லஞ் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்
பனித்தலை வீழநின் வாசற் கடைபற்றிச்
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும் நீ வாய்திறவாய்
இனித்தா னெழுந்திரா யீதென்ன பேருறக்கம்
அனைத்தில்லத் தாரு மறிந்தேலோ ரெம்பாவாய்.

**பதவுரை:—இளம் கன்று எருமை**—*இளங் கன்றுகளையுடைய எருமைகளானவை,* **கனைத்து**—*(கறப்பாரில்லாமையாலே) கதறிக்கொண்டு,* **கன்றுக்கு இறங்கி**–*(தம்) கன்றுகளிடம் இரக்கங்கொண்டு,* **நினைத்து**-*அக்கன்றுகளை நினைத்து,* **முலைவழியே நின்று பால் சோர**-*(அந்நினைவின் முதிர்ச்சியாலே) முலைகளின் வழியாகப் பால் இடைவிடாமல் பெருக,* **இல்லம் நனைத்து**–*(அதனால்) வீடு முழுவதும் ஈரமாக்கி,* **சேறு ஆக்கும்**–*(துகைத்துச்) சேறாக்கும்படியிருப்பவனாய்,* **நல் செல்வன்**—*க்ருஷ்ணகைங்கர்யமாகிற மேலான செல்வத்தை உடையவனானவனுடைய,* **தங்காய்**—*தங்கையே!* **தலை பனி வீழ**—*(எங்கள்) தலையிலே பனி பெய்யும்படியாக,* **நின் வாசல் கடை பற்றி**—*உன் வாசற்கடையைப் பிடித்துக்கொண்டு,* **தென் இலங்கை கோமானை**–*செல்வத்தையுடைத்தான இலங்கைக்கு*

அரசனான ராவணனை, **சினத்தினால் செற்ற**—(பிராட்டியைப் பிரித்தான்) என்னும் கோபத்தாலே கொன்றவனாய், **மனத்துக்கு இனியானை**—மநஸ்ஸுக்கு இனிமையைத் தருமவனான, இராமபிரானை, **பாடவும்**-(நாங்கள்) பாடியபோதிலும், **நீ வாய் திறவாய்**—நீ வாய் திறந்து பேசுகிறாயல்லை; **இனித்தான்**-இனியாவது, **எழுந்திராய்**-எழுந்திருப்பாயாக; **ஈது என்ன பேருறக்கம்**—இது என்ன பெருந்தூக்கம்? **அனைத்து இல்லத்தாரும்**—(ஆய்ப்பாடியிலுள்ள) எல்லா வீட்டினராலும், **அறிந்து**-(உன்னுடைய பெருந்தூக்கம்) அறியப்பட்டுவிட்டது.

அவதாரிகை:— ஸ்ரீராமபிரானைப் பிரியாதே தொடர்ந்தடிமை செய்யும் இளையபெருமானைப்போலே கிருஷ்ண கைங்கர்யத்தில் ஈடுபட்டிருப்பானொருவனுடைய தங்கையை எழுப்புகிறார்கள். "கற்றுக் கறவைக் கணங்கள் பல கறந்து...செருச்செய்யும்...கோவலர்தம் பொற்கொடியே" என்கையாலே, சென்ற பாசுரத்தில் ஸ்வதர்மத்திலே ஊன்றி நிற்பவர்களுடைய பெண்பிள்ளையை எழுப்பினார்களென்று தோற்றுகிறது. "கனைத்து...நின்று பால் சோர நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்" என்கையாலே பால் கறக்கையாகிய ஸ்வதர்மத்தை மறந்து, கண்ணனோடே திரியும் ஒருவனுடைய தங்கையை எழுப்புகிறது இப்பாட்டில். இத்தால், க்ஷண காலமும் இடைவிடாதே பகவத் விஷயத்தில் ஈடுபடும் சில விசிஷ்டாதிகாரிகள் நித்யநைமித்திகாதி கர்மங்களை அநுஷ்டியாமலிருந்தாலும் அதனால் தோஷமில்லை என்று காட்டப்படுகிறது. நம் ஆசார்யர்களிலும், திருக்கண்ணமங்கையாண்டானைப்போலே சில மஹான்கள் ஸ்வவ்யாபாரத்தை விட்டிருந்தனரென்பது ரஹஸ்ய கிரந்தங்களில் பிரஸித்தம். "அவர்களுடைய அநுஷ்டானமும், இவனுடைய அநநுஷ்டானமும்உபாயமன்று;யாதொன்றுஉபேயத்தைத்தரவற்று அதிறே உபாயம்; விடச்சொன்னவையும் பற்றச்சொன்னவையுமன்றிறே உபாயம்; விடுவித்துப் பற்றுவித்தவனிறே உபாயம்." என்று ஆறாயிரப்படியில் அழகியமணவாளப்பெருமாள் நாயனார் அருளிச்செய்தார்.

வியாக்கியானம்:—(கனைத்து) கறப்பாரில்லாமையாலே முலை கடுத்துக் கதறி. (இளங்கற்றெருமை) 'இளங்கன்றுயிருக்கும் எருமை' என்றும், 'இளங்கன்றுகளையுடைய எருமை' என்றும் இருவகையாகப் பொருள்கொள்ளலாம். இரண்டாலும் பாடாற்றமாட்டாமை

சொல்லப்படுகிறது. (கன்றுக்கு இரங்கி) தங்கள் முலைக்கடுப்பை ஸஹித்துக்கொண்டாலும், 'நம் கன்றுகள் பால் பெறுமல் என்ன பாடுபடுகின்றனவோ' என்று வருந்தி. "கறவா மடநாகு தன் கன்றுள்ளினுற்போல்" என்கிறபடியே கறக்காமல் விட்டால் கன்றை நினைக்கையன்றே இவற்றுக்கு இயற்கை. (கன்றுக்கு இரங்கி) "ஏழையேதலன் கீழ்மகனென்னுதிரங்கி" என்கிறபடியே ஸர்வேச்வரன் ஆச்ரிதன் விஷயத்தில் படும்பாட்டுக்கு நிதர்சனமாய் விளங்குகின்றன இவ்வெருமைகள். (கன்றுக்கிரங்கி) "உன் வீட்டில் எருமைகளுக்குக் கன்றுகளிடமுள்ள அன்பும் உனக்கு எங்களிடம் கிடையாதோ?' என்கிருர்கள். "அவன் எருமைகள் கறவாவிட்டால் அவை படும் பாட்டை உன்னுலே நாங்கள் படாநின்ருேம்" என்கிருர்கள். (நினைத்து...பால் சோர) தூரத்தில் கட்டிவைத்திருக்கும் கன்றை நினைத்து அந்நினைவின் முதிர்ச்சியாலே கன்று வாய்வழியுமன்றிக்கே கறப்பார் கைவழியுமன்றிக்கே முலைவழியே பால் பொழியாநிற்கும்.

(நின்று பால் சோர) மேகங்களைப்போலே விட்டுவிட்டு வர்ஷிக்காமல் விடாமல் சொரிகை. மேகங்களுக்கோவெனில் 'ஆழியுட்புக்கு முகந்துகொடு ஆர்த்தேறிப்' பெய்யவேணும். நினைத்தவாறே பொழியும் இவைகளுக்கு அவ்வருத்தமில்லை. நினைவு மாருமையாலே பாலும் இடைவிடாமல் பொழிகிறது. (பால் சோர) 'பகவத் விஷயத்தைச் சொல்லவேணும்' என்று பிறர் கேளாமேயிருக்கவும் தங்கள் செல்லாமையாலே பகவத்குணம்ருத வர்ஷதாரைகளைப் பொழியும் க்ருபாமாத்ரப்ரஸந்நாசாரியர்களுக்கும், அர்ஜுனன் கேளாதேயிருக்க,

"பூ₄ய ஏவ மஹாபா₃ஹோ ச்ருணு மே பரமம் வச:"

[நீண்ட கைகளையுடையவனே! என்னுடைய சிறந்த வார்த்தையை மறுபடியும் கேட்பாயாக.] என்று மேல்விழுந்து சொன்ன பகவானுக்கும் ஸ்மாரகமாயிருக்கிறபடி. (நின்று பால் சோர) "உன் அகத்திலுள்ள எருமைகள் கன்றை நினைத்து இடைவிடாமல் பால் சொரியா நிற்க, நீ எங்களுக்கு ஒரு காலாகிலும் உன் முகங்காட்டாதொழிகிறது எங்ஙனே?" என்கிருர்கள். (நனைத்தில்லம் சேருக்கும்) பாலின் மிகுதியாலே வீடு முழுவதும் வெள்ளம்போல் பெருக்கெடுத்து, துகையுண்டு சேருகும். இப்படிச் சேருயிருக்கையாலே எங்களாலே உள்ளே வரமுடியவில்லை என்று தாத்பர்யம்.

இவன் எருமைகளை இப்படிக் கறக்காமலிருக்கைக்குக் காரணமென்னென்னில்: ராம கைங்கர்யத்தில் இடைவிடாமல் ஈடுபட்டிருக்.

கையாலே, அக்நி கார்யம் முதலானவற்றையும் மறந்திருந்த இளைய பெருமாளைப்போலே க்ருஷ்ண கைங்கர்யத்தில் ஈடுபட்டிருக்கை யாலே இவன் ஸ்வதர்மமான பால் கறக்கையை நினையான். இப்படி பகவானிடத்தில் அன்பாலும், பிரியமாட்டாமையாலும் ஸ்வதர்மத்தை விடுகை தோஷமன்று. சோம்பலாலும், நாஸ்திக்யத்தாலும் விடுகை தோஷமேயாகும். "தொழிலெனக்குத் தொல்லை மால் தன் நாம மேத்தப்பொழுதெனக்கு மற்றதுவே போதும்" என்ற ஆழ்வாரைப் போன்றவர்களே இந்த த்யாகத்திற்கு அதிகாரிகள்.

**"ந தே₃வலோகாக்ரமணம் நாமரத்வமஹம் வ்ருணே।**
**ஐச்வர்யம் வாऽபி லோகாநாம் காமயே ந த்வயா விநா।"**

[நீர் இல்லாவிடில் ஸ்ரீவைகுண்டத்திலின்பத்தையும். கைவல்யாநு பவத்தையும், இவ்வுலகங்களிலுள்ள செல்வங்களையும் நான் விரும் பேன்.] என்ற இளையபெருமாளைப்போன்ற ஆற்றாமையுடையவர் களே இங்கு சொல்லப்படும் அதிகாரிகள். நிற்க; இவன் மாடுகளைக் கறவாதொழிகைக்கு மற்றொரு காரணமும் சொல்லலாம். க்ருஹ க்ஷேத்ர பசு மித்ர களத்ராதிகளெல்லாம் இவனுடைய பகவதனுப வத்திற்குத் தடையாயிருக்கின்றனவாகையால் அவை இவனுக்கு ப்ராப்ய விரோதியாகின்றன. அவைகளில் ஆசையற்றிருக்கையாலே இவன் பசுக்களைக் கறக்கை முதலிய காரியங்களில் ஈடுபடமாட்டான் என்றபடி.

**"பரித்யக்தா மயா லங்கா மித்ராணி ச த₄நாநி ச।**
**ப₄வத்₃க₃தம் மே ராஜ்யம் ச ஜீவிதம் ச ஸுகா₂நி ச॥"**

[லங்கா ராஜ்யமும், நண்பர்களும், செல்வமும் என்னால் விடப் பட்டன. என்னுடைய ராஜ்யமும், உயிரும், ஸுகங்களும் உம் மிடத்திலேயே அடங்கியுள்ளன.] என்பதல்லவோ விபீஷணாழ்வான் வார்த்தை.

**"பிதரம் மாதரம் தா₃ராந் புத்ராந் ப₃ந்தூ₄ந் ஸகீ₂ந் கு₃ரூந்।**
**ரத்நாநி த₄நதா₄ந்யாநி க்ஷேத்ராணி ச க்₃ருஹாணி ச॥**
**ஸர்வத₄ர்மாம்ஶ்ச ஸந்த்யஜ்ய ஸர்வகாமாம்ஶ்ச ஸாக்ஷராந்।**
**லோகவிக்ராந்தசரணௌ ஶரணம் தேऽவ்ரஜம் விபே₄॥"**

[எம்பிரானே! தந்தையையும், தாயையும், மனைவியையும், மக்களை யும், உறவினரையும், நண்பரையும், ஆசாரியர்களையும், ரத்னங்

களையும் தநதான்யங்களையும், வயல்களையும், வீடுகளையும், ஸகல ஸாதந தர்மங்களையும், கைவல்யமுள்ளிட்ட ஸகலப்ராப்யங்களையும் கைவிட்டு, திருவுலகளந்தருளிய உன் திருவடிகளை சரணமடைந் தேன்] என்றல்லவோ சாஸ்திரம் விதித்தது. (நற்செல்வன்) செல் வத்திற்கு நன்மையாவது நிலை நின்றதாயிருக்கை. அதாவது:- க்ருஷ்ண கைங்கர்யம். "லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:" என்றும், "ஸது நாக₃வர: ஸ்ரீமாந்" என்றும், "அந்தரிக்ஷக₃த: ஸ்ரீமாந்" என்றும் பகவத் ஸம்பந்தத்தையே நிலை நின்ற செல்வமாக அறுதி யிட்டார்களன்றோ பெரியோர்கள்.(நற்செல்வன்)'செல்வம்' என்னும் சொல்லாலேயே பகவத் ஸம்பந்தத்தைக் குறிப்பதாகவும் கொள்ள லாம். அதற்கு நன்மையாவது:—" ஊரும் நாடும் உலகமும் தன் னைப்போல்" என்று, ஆழ்வாரைப்போலே தம்முடையகைங்கர்யச் செல்வமானது ஊரெங்கும் வெள்ளமிட்டு எல்லாரையும் பகவத் பரர்களாகச் செய்யவற்றாயிருக்கை. (தங்காய்) "அவன் எருமைகளை நோக்கினாலன்றோ அவனுடைய தங்கையான நீ எங்களை நோக்கப் போகிறாய்;ரக்ஷ்ய வஸ்துவைக் காற்கடைக்கொள்ளுகை உங்களுக்குப் பிறப்பிலேயே உள்ளதொன்றுபோலும்" என்று ஏசுகிறார்கள். (நற்செல்வன் -தங்காய்) "ராவணஸ்யாநுஜோ ப்₄ராதாவிபீ₄ஷண:" என்ற விபீஷணாழ்வானைப்போலே, தமையனுடைய தாழ்மை சொல்ல வேண்டாத சிறப்பையுடையவள். தன்னுடைய குணஹானியை, அவன் தமையனையிட்டுச் சொன்னாப்போலே, இவளுடைய குணச் சிறப்பை இவளுடைய தமையனையிட்டுச்சொல்லுகிறார்கள். (நற்செல் வன் தங்காய்) விபீஷணாழ்வான் ஸ்ரீராமபிரானுக்கு அடிமை செய்த போது அவனுடைய மகள் த்ரிஜடை பிராட்டிக்குக் கைங்கர்யம் செய் தாற்போலே, உன்னுடைய தமையன் க்ருஷ்ணனை நோக்கினால் நீ எங்களை நோக்கவேண்டாவோ?

(பனித்தலை வீழ நின் வாசல் கடைபற்றி) 'ஆழிமழைக்கண்ணா' என்னும் பாட்டில் ஆஜ்ஞையிடப்பெற்ற வருணதேவன் மேலே வர்ஷிக்கிறான்; நடுவேஎங்கள் மால்(அன்பு) வெள்ளமிடா நிற்கிறது. கீழே பால்வெள்ளமிடுகிறது. இவ்வெள்ளங்களில் கிடந்து தத்தளிக் கும் நாங்கள் உன் வாசல் தண்டியத்தைப் பற்றித்தரித்து நிற்கிறோம்; கெடுவாய்! இந்நிலையை அறிகின்றிலையே என்கிறார்கள். இவர்கள் இப்படிச்சொன்னபோதிலும், இவர்கள் தனக்காகப்படும் பாட்டை இன்னும்சிறிது நேரம் காணவேணுமென்று பேசாமல் கிடந்தாள். பெண்களைப் படுத்துகையே போக்யமாயிருக்கும் க்ருஷ்ணனுடன் சேர்ந்த வாஸனையாலே இவள் இப்படிச் செய்கிறாள். பெண் பிறந்

தார்க்குத் தஞ்சமாயிருக்கும் ஸ்ரீராமபிரானுடைய திருக்குணங்களைச் சொல்லுவோம் இவள் எழுந்திருக்கைக்காக, என்று ராமவ்ருத்தாந்தத்தைச் சொல்லுகிறார்கள்: அன்றிக்கே க்ருஷ்ணனால் அவதிப்பட்டிருக்கும் இவள் நெஞ்சு குளிரும்படியாக ராமகதையைச் சொல்லுகிறார்களாகவுமாம். "உண்ணாதுறங்காது ஒலிகடலையூடறுத்துப் பெண்ணுக்கையாப்புண்டு" என்றும், "அநித்₃ரஸ் ஸததம்ராம:" [பிராட்டியைப்பிரிந்த பெருமாள் எப்போதும் தூக்கமற்றிருந்தார்.] என்றும் சொல்லுகிறபடியே பிராட்டிக்காகப்படாதனபட்டவனன்றே சக்ரவர்த்தித்திருமகன். (சினத்தினால்) "ந க்ருத்₄யத்யபி₄சப்தோபி க்ரோத₄நீயாநி வர்ஜயந்" [நிந்திக்கப்பட்டபோதிலும் (ராமபிரான்) கோபமடைவதில்லை; கோபத்திற்கு விஷயமானவைகளை விலக்கியிருக்கையாலே.] என்றும், "க்ஷமயா ப்ருதி₂வீஸம:" [பொறுமையில் பூதேவிக்கு ஸமானமானவர்.] என்றும் சொல்லப்பட்டவரான ஸ்ரீராமபிரானுக்குக் கோபமுண்டோ? என்னில்; தன்னிடத்திலே அபசாரம் செய்தார் பக்கல் கோபமில்லையேயாகிலும், தன்னடியார் திறத்தில் அபராதப்பட்டாரிடம் கோபம் விஞ்சியிருக்கும். தன் திருமேனியிலே அம்பு பட்டபோது ஆறியிருந்தான். திருவடியின் திருமேனியிலே அம்புபட்டபோது

"ததோ ராமோ மஹாதேஜா ராவணேந க்ருதவ்ரணம் |
த்₃ருஷ்ட்வா ப்லவகசா₃ர்தூ₃லம் கோபஸ்ய வஶமேயிவாந்||"

[மஹாதேஜஸ்வியான ராமபிரான் ராவணனால் காயமுற்ற ஹனுமானைக் கண்டதும் கோப பரவசனானான்.] என்று கோபாவிஷ்டனானானிறே. தன்னளவிலே அபசாரமானபோது "க்ரோத₄ மாஹாரயத்" என்று கோபத்தை சிரமப்பட்டு வரவழைத்துக்கொள்ள வேண்டியிருக்கும். பாகவதர்கள் பக்கல் அபசாரப்படில் கோப பரதந்திரனாவன். தண்டகாரண்ய ருஷிகள், பிராட்டி, பெரியவுடையார் (ஜடாயு) விபீஷணாழ்வான், திருவடி முதலான பல பாகவதோத்தமர்களிடம் அபசாரப்பட்டவனன்றே ராவணன். (தென்னிலங்கைக் கோமானை)

"யத்₃யதர்₄மோ ந ப₃லவாந் ஸ்யாத₃யம் ராக்ஷஸேச்வர: |
ஸ்யாத₃யம் ஸுரலோகஸ்ய ஸஶக்ரஸ்யாபி ரக்ஷிதா ||"

[இவனால் செய்யப்பட்ட அதர்ம காரியமானது பெரிதாயிராவிடில், இந்த ராக்ஷஸாதிபதியான ராவணன், இந்திரனோடு கூடிய ஸுவர்க்கலோகத்திற்கும் ரக்ஷகனாக இருக்கத்தகுந்தவனே.] என்றும்,

''அஹோ வீர்யமஹோ தை₄ர்யம் அஹோ ஸத்த்வமஹோ த்₃யுதி:।
அஹோ ராக்ஷஸராஜஸ்ய ஸர்வலக்ஷணயுக்ததா ॥''

என்றும், திருவடியாலும் மதிக்கப்பட்ட செல்வத்தையுடையவனுகை யாலே 'கோமான்' எனப்படுகிறது. (கோமானைச் செற்ற)ஓரம்பாலே அவனுயிரை மாய்த்துவிடாமல், படையை அழித்து,புத்ர பௌத்ராதி களைக்கொன்று, தேரைச்சாய்த்து, ஆயுதங்களை முறித்து'அதுகண்டு தரித்திருப்பான் அரக்கர் தங்கள் கோன் போலும்' என்றும்,

''த்₃விதா₄ ப₄ஜ்யேயமப்யேவம் ந நமேயம் து கஸ்யசித்''

[இருபிளவாகப் பிளக்கப்பட்ட போதிலும் ஒருவனுக்கும் நான் வணங்கமாட்டேன்] என்றும் சொல்லும்படியான அபிமானத்தை யழித்துக் கொன்றபடி.

(மனத்துக்கினியானை) ''வெற்ற வெறிதே பெற்றதாய் வேம்பே யாக வளர்த்தாளே'' என்றும், ''அஞ்சவுரப்பாளசோதை ஆணை விட்டிட்டிருக்கும் வஞ்சகப் பேய்ச்சிபாலுண்ட மசுமையிலீ'' என்றும், ''யசோதைநங்காய் உன்மகனைக் கூவாய்''என்றும் கதறும்படி பெண் பிறந்தாரைப் படுகுலையடிக்கும் க்ருஷ்ணனைப் போலன்றிக்கே, பெண் பிறந்தார்க்காகப் படாதனபட்டவனுகையாலே, நம் நெஞ்சுக் குத்தென்றலும், நிலவும், சந்தனமும்போலேஇனியவனுயிருப்பவனை. பெண்களைத் துடிக்கவைத்துப் பின் பச்சாத்தாபமுமின்றிக்கே யிருக் கும் அவனைப்போலன்றிக்கே, ''ஸஞ்ஜாதபா₃ஷ்ப; பரவீரஹந்தா'' என்று சத்துருக்களுக்கும் கண்ணீர் விடும்படியான மஹாகுண சாலியை. (மனத்துக்கினியானைப் பாடவும்) ''கண்ணன் நாமமே குழறிக்கொன்றீர்''எனப்படுபவனுடைய நாமத்தையோ நாங்கள்பாடி னேம்? இறந்தவரையும் உயிர்ப்பிக்கும் ராமவ்ருத்தாந்தத்தையன்றே சொன்னேம். தன் காரியத்தை முடித்து நமக்கு உபகரித்ததாக நினைத்திருக்குமவனையோ நாங்கள் சொன்னேம்? நம் காரியத்தைத் தன்பேருகச் செய்யுமவனையன்றே பாடினேம். ''பெற்றதாய் வேம்பே யாக வளர்த்தாளே'' என்று பெற்ற வயிற்றுக்குப் பழிவாங்கிவைக் குமவனையோ சொல்லிற்று? ''கௌஸல்யாஸுப்ரஜா ராம'' என்று பெற்ற வயிற்றுக்குப் பட்டங்கட்டினவனையன்றே சொன்னேம். இன்னமும் நீ உறங்குகை தகுமோ? (பாடவும் நீ வாய்திறவாய்) எங்களுடைய அநர்த்தத்தைக் காணுவிடிலும், உன் ப்ரீதிக்குப் போக்குவிட்டுப் பாடவேண்டாமோ? இவள் பேச்சைக்கேட்டாவது தரிக்கலாமென்று பார்க்கிருர்கள். (இனித்தானெழுந்திராய்) எங்கள்

ஆர்த்திக்கு உணராவிட்டாலும் உன்பேற்றுக்கு உணரவேண் டாவோ? எங்கள் செல்லாமையை அறிந்தபின்பும் எழுந்திரா தொழிவதே! (ஈதென்ன பேருறக்கம்) எம்பெருமான் பிறர்க்காக உணர்வன்; ஸம்ஸாரிகள் தங்கள் காரியத்திற்காக உணர்வார்கள். உன் உறக்கம் இரண்டிலும் சேராததாயிருக்கிறதே! பிறருடைய கூக்குரல் செவிப்பட்டவுடன், "ப₄க₃வதஸ் த்வராயை நம:" [பகவா னுடைய வேகத்திற்கு நமஸ்காரம்] என்று பக்தர்கள் ஈடுபடும்படி யாக, அரைகுலையத் தலைகுலைய ஓடிவருமவனோடே பழகிவைத்தும் இங்ஙனே ஓர் பேருறக்கமுண்டாவதே!(அனைத்தில்லத்தாருமறிந்து) இவ்வூரிலுள்ளாரெல்லாரும் அறிந்துவிட்டார்கள். பெண்களெல் லாரும் திரண்டுவந்து உன்னை அழைக்கிறதை ஊரிலுள்ளோர் அறியவேண்டுமென்றிருந்தாயாகில், அதுவும் ஆயிற்று. பகவத் விஷயத்தை அநுபவிக்கைக்குப் புறம்பு ஆளுண்டோ என்று நினைத்துக் கிடக்கிறாயாகில், உன்னுடைய ப்ரபாவத்தாலே ஊரா ரெல்லாம் பகவத்ப்ரவணரானார்கள், ஆகையால் நீ எழுந்திருக்கத் தட்டில்லை என்கிறார்கள். 'எம்பெருமானார் அவதரித்த பின்பு எல்லாரும் பகவத் விஷயமறிந்தாப்போலே காணும் இப்பெண் பிள்ளை பிறந்த பின்பும்' என்று அருளிச்செய்வர்கள்.

## திருப்பாவை—பதின்மூன்றும் பாட்டு.

**13. புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லாவரக்கனைக்**
**கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்ப்**
**பிள்ளைக ளெல்லாரும் பாவைக் களம்புக்கார்**
**வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்று**
**புள்ளுஞ் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்!**
**குள்ளக் குளிரக் குடைந்துநீ ராடாதே**
**பள்ளிக் கிடத்தியோ பாவாய்நீ நன்னாளால்**
**கள்ளந் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய்.**

**பதவுரை:—புள்ளின் வாய் கீண்டானை**—*பறவையுருவங் கொண்டு வந்த பகாஸுரனுடைய வாயைக் கிழித்தெறிந்த வனும்,* **பொல்லா அரக்கனை கிள்ளி களைந்தானை**—*பொல்லாங்கு களுக்கு உறைவிடமான இராவணனை விளையாட்டாக அழித் துப் போட்டவனுமான எம்பிரானுடைய,* **கீர்த்திமை பாடி**

போய்-வீரச்செயல்களைப் பாடிக்கொண்டு சென்று, **பிள்ளைகள் எல்லாரும்**—எல்லாப் பெண்பிள்ளைகளும், **பாவைக்களம்**—(க்ருஷ்ணனும் தாங்களும்)நோன்பு நோற்கைக்காகக் குறித்த விடத்திற்கு, **புக்கார்**—புகுந்தனர்; **வெள்ளிஎழுந்து**–சுக்கிரன் மேலெழுந்து, **வியாழம் உறங்கிற்று** — குரு அஸ்தமித்தது; (மேலும்,) **புள்ளும் சிலம்பின காண்**-பறவைகளும் (இறை தேடக்) கூவிச்செல்கின்றன; **போது அரி கண்ணினுய்**–பூவையும், மானையும் ஒத்துள்ள கண்ணையுடையவளே! **பாவாய்**—இயற்கையாகவே ஸ்த்ரீத்வத்தைப் பெற்றவளே! **நீ**–நீ, **நல் நாள்**—கிருஷ்ணனும் நாமும் கூடப்போகும் இந்த நல்ல நாளில், **கள்ளம் தவிர்ந்து**— (கிருஷ்ண குணங்களைத் தனியிருந்து அநுபவிக்கையாகிற) கபடத்தை விட்டு, **கலந்து**—(எங்களோடு) சேர்ந்து, **குள்ளக் குளிர குடைந்து நீராடாதே**–மிகக் குளிர்ச்சியாயிருக்கும் நீரில் நன்றாக நீராடாமல், **பள்ளி கிடத்தியோ**–படுக்கையில் கிடந்து உறங்குகின்றாயோ? **ஆல்**–ஆச்சரியம்!

*அவதாரிகை*:— 'நம் கண்ணழகிருக்கும்போது, கிருஷ்ணன் நம்மைத் தேடி வரவேண்டுமேயொழிய, நாம் அவனிருந்தவிடம் செல்லவேண்டியதில்லை' என்று செருக்கிக் கிடக்கிறாளொருத்தியை எழுப்புகிறார்கள். 'போதரிக்கண்ணினாய்!' என்று இவளைக் கூப்பிடுவதிலிருந்து கண்ணழகாலே கர்வங்கொண்டவளவளென்று தோற்றுநின்றது. நாலாயிரப்படி முதலானவற்றில் மற்றோர் படியாகவும் அவதாரிகை அருளிச்செய்வர்கள்: " மனத்துக்கினியானைப் பாடவும் நீ வாய் திறவாய்" என்று பாடிக்கொண்டு வருவதைக் கேட்ட இவள், தன் அபராதத்தை உணர்ந்து "பெண்காள்! ராம வ்ருத்தாந்தம் சொன்னீர்களோ?" என்று கேட்க, "ராமவ்ருத்தாந்தமும் சொன்னோம்; க்ருஷ்ண வ்ருத்தாந்தமும் சொன்னோம்; ஸ்ரீராமாயணமும், பாரதமும், பாஞ்சராத்ரமுமுட்படச் சொன்னோம்" என்கிறார்கள். "புள்ளின் வாய் கீண்டானை" என்று "கீழ்வானம் வெள்ளென்று" முதலான பாசுரங்களிற் பேசப்பெற்ற கிருஷ்ண விருத்தாந்தமும், "பொல்லாவரக்கனைக் கிள்ளிக் களைந்தானை" என்று, "புண்ணியனால் பண்டொருநாள் கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்பகரணனும்" என்றும், "தென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக்கினியானை" என்றும் சொல்லப்பட்ட ராமவ்ருத்தாந்தமும், "கீர்த்

திமை பாடிப்போய்'' என்று, ''பாற்கடலில் பையத்துயின்ற பரமன்'' என்றும், ''வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை'' என்றும் சொல்லப்பட்டதும், பாஞ்சராத்ரப்ரதிபாத்யமுமான வியூஹ வ்ருத்தாந்தமும் அநுவதிக்கப்படுகின்றன என்று தோற்றுகிறது.

**வியாக்கியானம்:—** (புள்ளின் வாய் கீண்டானை) எம்பெருமானுக்குத் தீங்கு செய்வதற்காகக் கம்ஸனால் ஏவப்பட்ட ஒரு அஸுரன் ஒரு கொக்குருக்கொண்டுவந்தான். அவனுடைய வாயை விளையாட்டாகக் கிழித்துப் பொகட்டபடியைப் பேசுகிறார்கள்.

**''பள்ளத்தில் மேயும் பறவையுருக்கொண்டு**
**கள்ள அசுரன் வருவானைத் தான் கண்டு**
**புள்ளிதுவென்று பொதுக்கோ வாய் கீண்டிட்ட''**

என்றார் பெரியாழ்வாரும். ''பொதுக்கோ'' என்று கீண்ட சடக்கைச் சொல்லுகிறது. இத்தால் நம்முடைய இசைவு மாத்ரத்தையே கொண்டு நம் விரோதிகளைப் போக்கித்தருமவன் இவன் என்று உணர்த்தப்படுகிறது. ''இத்தலைக்கு இசைவேயிறே வேண்டுவது; விரோதி போக்குகை அவன் பணி யென்றிருக்கை. நம்முடைய அநுமதிகளுக்கு ஈச்வரன் பண்ணும் அநுமதி வைஷம்யநைர்க்ருண்யத்தில் புகாதாப்போலே, இவ்வநுமதி உபாயத்தில் புகாது; இருவர்க்கும் இரண்டு அநுமதிகளும் ஸ்வரூபத்திலே கிடக்குமத்தனை'' என்று நாலாயிரப்படியில் அருளிச்செய்யப்பட்ட ஆழ்ந்த கருத்தையுடைய ஸ்ரீ ஸூக்திகள் இங்கு அறியத்தக்கன. (பொல்லாவரக்கனை) உயிரையும் உடலையும் பிரிப்பாரைப்போலேயும், தாயையும் தமப்பனையும் பிரிப்பாரைப்போலேயும், எம்பெருமானையும் பிராட்டியையும் பிரித்த கொடியோனான ராவணனை. ''சுரிகுழல் கனிவாய்த் திரு பிரித்த கொடுமையில் கடுவிசையரக்கன்'' என்றும் ''முன் பொலா விராவணன்'' என்றும் பொல்லாங்குகளுக்கெல்லாம் ஓர் இருப்பிடமாயுள்ளவன் என்று அருளிச்செய்தாரன்றே திருமங்கையாழ்வார். ''ராவணோ நாம துர்வ்ருத்தோ ராக்ஷஸ:'' என்றான் விபீஷணனும்.

**''யதா த்ருப்தஸ்ச மாதங்க: சசஸ்ச ஸஹிதோ வநே |**
**ததா த்விரதவத்ராமஸ் த்வம் நீசசசவத்ஸ்ம்ருத: ||''**

[காட்டில் மதங்கொண்ட யானையும், முயலும் (சண்டை செய்வதற்காகச்) சேர்ந்திருப்பதுபோல், யானைபோன்ற ராமபிரானும், அற்ப முயல்போல் எண்ணப்படும் நீயும் சேர்ந்திருக்கிறீர்கள்.] என்றன்றே

பிராட்டியும் அருளிச்செய்தாள். (பொல்லாவரக்கனை) இத்தால் நல்ல அரக்கனும் ஒருவனுண்டென்று உணர்த்தப்படுகிறது. சூர்ப்பணகையும்,

"விபீ$_4$ஷணஸ்து த$_4$ர்மாத்மா ந து ராக்ஷஸசேஷ்டித:"

[(என் ஸஹோதரனை) விபீஷணனோவெனில், தர்மவழிப்படி நடப்பவன்; ராக்ஷஸச் செயல்கள் சிறிதுமற்றவன்.] என்று சொன்னாள். "பொல்லாவரக்கரை" என்ற பாடமும் ஆறாயிரப்படியில் ஆதரிக்கப் பட்டது. அப்போது மாரீசன், இந்திரஜித் முதலானோரையும் கூட்டிச் சொல்லுவதாகக் கொள்ளவேண்டும். (கிள்ளிக் களைந்தானை) அநாயாஸமாக அழித்துப்போட்டவனை. வீரபத்னிகள் தங்கள் நாயகர்கள் பெருஞ்செயல்களையும் விளையாட்டாகச் செய்ததாகவே பாசுரமிடுவார்கள். "கல்லெடுத்துக் கல்மாரிகாத்தாய்" என்று ளன்றோ பரகால நாயகியும். (கீர்த்திமை பாடி) அவனுடைய வீரசரிதங்களைப் பாடி.

"ஶத்ரோ: ப்ரக்$_2$யாதவீர்யஸ்ய ரஞ்ஜநீயஸ்ய விக்ரமை:"

[பிரசித்திபெற்ற வீர்யத்தையுடையவனும், பராக்ரமங்களைக்கண்டு எல்லாராலும் கொண்டாடத்தக்கவனும், சத்ருவுமான ராமன்] என்றும்,

"தம் மந்யே ராக$_4$வம் வீரம் நாராயணமநாமயம்"

[வீரனை ராகவனை, அழிவற்ற நாராயணனென்றே நினைக்கிறேன்.] என்றும் எதிரியான ராவணனும் கொண்டாடிய வீரத்தை அன்புடையாரான அபலைகள் கொண்டாடச் சொல்லவேணுமோ? விரஹதாபத்தினால் வாடியிருக்கும் இவர்களால் எப்படி நடந்து செல்லமுடிந்தது என்னில்: (பாடிப் போய்) பாட்டே தாரகமாகப் போனார்கள். "தானுகந்த ஊரெல்லாம் தன் தாள் பாடி...பூங்கோவலூர் தொழுதும் போது நெஞ்சே" என்று திருமங்கைமன்னனாலும்,

"க$_3$ச்ச$_2$தாம் தூ$_3$ரமத்$_4$வாநம் த்ருஷ்ணமூர்ச்சி$_2$த சேதஸாம் ।
பாதே$_2$யம் புண்ட$_3$ரீகாக்ஷ நாமஸங்கீர்த்தநாம்ருதம் ॥"

[வெகுதூரம் நடந்து, பசியினால் வாடிய மனத்தையுடையவர்களுக்கு, புண்டரீகாக்ஷனுடைய திருநாம ஸங்கீர்த்தனமாகிய அம்ருதம் கட்டுச்சோறாகிறது.] என்று காருட புராணத்திலும் சொல்லப் பட்டதன்றோ.

''லோகாம்ஶ்ச லோகாநுக₃தாந் பஶூம்ஶ்ச
ஹித்வா ஶ்ரிதாஸ் த்வச்சரணாதபத்ரம் |
பரஸ்பரம் தத்₃கு₃ணவாத₃ஶீது₄
பர்யூஷநிர்யாபித தே₃ஹயாத்ரா: ||''

[இவ்வுலகங்களையும், உலகிலுள்ள ஜந்துக்களையும் விட்டு உன் திருவடி நிழலின்கீழ் ஒதுங்கினோம். அத்திருவடிகளின் திருக்குணங்களை ஒருவருக்கொருவர் சொல்லுகையாகிற அம்ருதத்தினால் தேஹ யாத்ரையை நடத்திப்போரா நிற்கிறோம்.]என்றார்களன்றோ.(பிள்ளைகள் எல்லாரும்...) நீ சென்று எழுப்பவேண்டும் சிறு பிள்ளைகளும் உனக்கு முன் எழுந்திருந்து புறப்பட்டார்கள். (பாவைக் களம் புக்கார்) க்ருஷ்ணனும் பெண்களும் வழக்கமாகக் கூடுமிடத்திற்குச் சென்றார்கள். 'நெற்களம்' என்னுமாப்போலே 'பாவைக்களம்' என்று பெண்கள் கூடியிருக்குமிடத்தைச் சொல்லுகிறது. 'பாவை' என்று நோன்பாகையாலே 'பாவைக்களம்' என்று நோன்பு நோற்குமிடத்தைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். ''அவர்கள் சிறு பிள்ளைகளாகையாலே போது விடிந்தமை தெரியாமல், அகாலத்தில் சென்றிருக்கலாம்; நாம் அப்படிச் செல்லக்கடவோம்லோம், சுக்ரோதயமானதும் வாருங்கள்'' என்றாள்: (வெள்ளியெழுந்து வியாழமுறங்கிற்று) என்கிறார்கள். 'சுக்கிரன் உதித்து, உச்சிப்பட்டும் விட்டது; வியாழன் அஸ்தமித்தும்விட்டது.' என்றார்கள்; 'கண்ட நக்ஷத்திரமெல்லாம் வெள்ளியும் வியாழமுமாயன்றோ உங்களுக்கிருப்பது: நின்ற குன்றத்தினை நோக்கி நெடுமாலே வாவென்று கூவுமவர்களன்றோ நீங்கள்; அவை புநர்பூசமும் பூசமுமாகக் கொள்ளீர்;வேறு அடையாளமுண்டோ?' என்றாள்; 'நாங்கள் இத்தனை பேர்திரண்டு வந்ததே போதாதோ?' என்றார்கள்; ''நீங்கள் என்றுவது பிரிந்தாலன்றோ அதை அடையாளமாகச் சொல்லலாவது. 'பேராளன் பேரோதும் பெரியாரை ஒருகாலும் பிரிகிலேனே' என்னும் உங்களுக்குப் பிரிவுண்டோ? வேறு அடையாளமுண்டாகில் சொல்லுங்கோள்'' என்றாள்; (புள்ளும் சிலம்பினகாண்) என்கிறார்கள். பட்சிகள் எழுந்ததோடன்றியும், இரைதேடிக் கூவிப்போகாநின்றன என்றபடி. முன் ''புள்ளும் சிலம்பினகாண்'' என்றது உணர்ந்தவுடன் கூட்டிலிருந்து கூவுகையைச் சொல்லுகிறது. இங்கு கூட்டிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வழியில் கூவுகையைச் சொல்லுகிறது.

அறிவற்றவையான பக்ஷிகளின் நடத்தையைக்கொண்டோ காலத்தை நிர்ணயிப்பது? என்று பேசாமல் கிடந்தாள். 'நாங்கள்

சொன்னதற்கெல்லாம் பதில்சொல்லிக்கொண்டு கிடப்பது நீ கண்ணழகியென்னும் கர்வத்தினுலேயன்றே' என்கிருர்கள்; (போதரிக் கண்ணினுய்) 'போது' என்று பூவையும், 'அரி' என்று மானையும் சொல்லி, பூவையும் மான் கண்ணையும் ஒத்த கண்ணையுடையவள் என்னுதல்; 'அரி' என்று வண்டைச்சொல்லி, பூவிலே வண்டிருந்தாற்போன்ற கண்ணையுடையவள்' என்னுதல்; புஷ்பத்தை ஹரிக்கிற (வெல்லுகிற) கண் என்னுதல்; 'அரி' என்று சத்துருவாய், புஷ்பத்துக்கு (அழகு விஷயமான போட்டியிலே) என்றும் எதிரியாயிருக்கும் கண்ணையுடையவள் என்னுதல்; 'போது' என்று உலாவுகையைச் சொல்லுகையாலே, 'உலாவுகின்ற மான் கண் போலேயுள்ள கண்ணையுடையவள்' என்னுதல்.

(போதரிக் கண்ணினுய்) உபாஸ்ய தேவதையிருந்தவிடத்திலே உபாஸகனன்றே தேடிவரவேண்டும்? அஸிதேக்ஷணையான நீ புண்டரீகாக்ஷனைத் தேடிப்போகக் கடவையோ? 'அனைத்துலகுமுடைய அரவிந்தலோசனன்' அவன். 'நெடுங்கண் இளமான்' இவள்; அவனுடைய விபூதியெல்லாம் இவள் கண்ணின் பரப்பிலே ஒரு மூலைக்கும் போராதென்னும்படியிருக்கை. (போதரிக்கண்ணினுய்) 'உன் கண்ணுகிற வலையாலே அவனைப் பிடித்து எங்களுக்கு அளிப்பாய் என்றிருந்தோம். இக்கண்ணழகே எங்கள் வருத்தத்துக்கு ஹேதுவாகப்புகுகிறதோ?' என்கிருர்கள். (போதரிக்கண்ணினுய்) 'இக்கண்ணழகையுடைய நாம் ஓரிடத்திற்குப் போகவேணுமோ? வேணுமாகில் நம் காலில்வந்து விழுகிருர்கள்' என்று கிடக்கிருயோ? (குள்ளக்குளிர) ஸூர்யன் உதித்து நீர் கொதிப்பதற்கு முன்னே. மற்ற பெண்களுடைய விரஹாக்னிதக்தமான உடம்புபட்டுச்சுடுவதற்குமுன்னே என்றும் கொள்ளலாம். (குடைந்து நீராடாதே) "ஸரயூமவகா₃ஹதே" என்று சொல்லப்பட்ட பரதாழ்வானைப்போலே பகவானைப் பிரிந்த விரஹதாபம் ஆறுவதற்காக நன்ருக உட்புகுந்து 'நீராடாமல். இங்கு நீராடுகையாவது: க்ருஷ்ணனுடைய குணங்களை அநுபவிக்கை.

(பள்ளிக்கிடத்தியோ) நாமும் அவனும் கூடி ஜலக்ரீடை செய்து அவன் மடியிலே சாய்ந்திருக்கக்கடவ நீ, அவன் ஒருகால் கிடந்த படுக்கையென்று அத்தை மோந்துகொண்டு கிடக்கிருயே! இது என்ன அறிவுகேடு!! கண்டவிடமெங்கும் நெல் விளைந்து கிடக்க உதிர் நெல் பொறுக்குகிருயோ?

(பாவாய் நீ) கருஷ்ணனும் கூடக்கொண்டாடும்படி பெண்களுக்குள்ள ஸகல லக்ஷணங்களும் பொருந்தி விளங்குபவளன்றே நீ.

பதுமை போன்ற அழகையுடைய நீ என்றும் பொருள் கொள்ள லாம். (நன்னாளால்) நம்மையும், கண்ணனையும் பிரித்துவைக்கும் ஊராரும் இசைந்திருக்கும் நாளல்லவோ இது. இச்சமயம் தப்பினால் மறுசமயம் வாய்ப்பதரிதாயிற்றே! சென்ற நாட்களும் வருகிற நாட்களும் ராவணாதிகளைப்போல் பிரிக்கிற நாட்களென்றிருக்கிறார்கள். (நன்னாளால்) காலக்ருத பரிணாமமில்லாத தேசத்திலுள்ளாரும் ஆறியிருப்பதில்லையே. காலம் ஸாம்ராஜ்யம் செலுத்தும் தேசத்திலே ஆறியிருக்கிறதென்?

(கள்ளம் தவிர்ந்து கலந்து) கள்ளமாவது:— க்ருஷ்ணகுண சேஷ்டிதங்களைத் தனியே நினைத்துக்கிடக்கை. அதை விட்டு எங்களுடன் கலந்து க்ருஷ்ணகுணசேஷ்டிதங்களை அநுபவிப்பாயாக. (கள்ளம் தவிர்ந்து) அவனோடே கலந்த உடம்பைக்காண ஆசைப்பட்டிருக்கிற எங்களுக்கு அதனை மறைக்கையாகிற கள்ளத்தைவிட்டு எங்களுடன் கூடுவாயாக. இதுவும் ஒரு ஆத்மாபஹாரமன்றோ. ஆத்ம சப்தம் தேஹத்தையும் சொல்லுமன்றோ. பகவச்சேஷத்வத்தை அபஹரிக்கையாகிற அவ்வாத்மாபஹாரத்தைச் செய்தவர்கள் பகவானிடம் மன்னிப்புக் கேட்கலாம். எங்களுக்கு சேஷியாயிருக்கும் நீ, எங்களுக்கு உடம்பு கொடாமல், சேஷித்வத்தை அபஹரிக்கையாகிற இவ்வாத்மாபஹாரத்தைச் செய்தால் யாரிடம்போய் மன்னிப்புக் கேட்பது? பொறுத்தோமென்பார் யார்? குற்றம் நின்றே போமத்தனையன்றோ; ஆனபின்பு, சேஷத்வாபஹாரமாகிய எங்களுடைய குற்றம்போலன்றுகாண், அவனோடே கலந்த உடம்பைக் காட்டாதே சேஷித்வத்தை அபஹரிக்கும் உன்னுடைய குற்றம் என்கிறார்கள்.

"கள்ளம் தவிர்ந்து கலந்து குள்ளக்குளிரக் குடைந்து நீராடாதே பள்ளிக்கிடத்தியோ" என்று அந்வயம்.

## திருப்பாவை—பதினான்காம் பாட்டு.

14. உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினகாண்
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்

நங்காய்! எழுந்திராய் நாணாதாய்! நாவுடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணனைப் பாடேலோரெம் பாவாய்.

**பதவுரை:**—**எங்களை**—*(உன் தோழியராகிய) எங்களை,* **முன்னம் எழுப்புவான்**—*முதன் முதலில் எழுப்புவதாக,* **வாய் பேசும்**—*வாயாலே சொல்லிவைத்த,* **நங்காய்**—*பரிபூர்ணையே!* **நாணாதாய்**—*('சொன்னபடி செய்யாதொழிந்தோமே' என்னும்) வெட்கமுமற்றவளே!* **நா உடையாய்**—*(இன் சொற்களைப் பொழியும்) நாவை உடையவளே!* **உங்கள் புழைக்கடை தோட்டத்து வாவியுள்**—*உங்களுடைய புழைக்கடையிலுள்ள தோட்டத்தில் விளங்கும் குளத்தினுள்,* **செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து**—*செங்கழுநீர் மலர்கள் மலர்ந்து,* **ஆம்பல்வாய் கூம்பினகாண்**—*கருநெய்தல் மலர்கள் குவிந்துகொண்டன காண்! (மேலும்),* **செங்கல் பொடி கூறை**—*காஷாயம் படிந்த உடையை அணிந்தவரும்,* **வெண்பல்,**—*வெளுத்த பற்களையுடையவரும்,* **தவத்தவர்**—*தபோவேஷத்தை உடையவருமான சைவஸந்யாஸிகளும்,* **தங்கள் திருக்கோயில்**—*தங்களுடைய தெய்வஸந்நிதிகளில்,* **சங்கு இடுவான்**—*சங்கு ஊதுகைக்காக,* **போகின்றார்**-*செல்கின்றனர்;* **சங்கொடு சக்கரம்**—*சங்கத்தையும் சக்கரத்தையும்,* **ஏந்தும்**—*(இருகைகளிலும்) லாகவமாக தரிக்கும்,* **தட கையன்**—*பெரிய கைகளை உடையவனாய்,* **பங்கய கண்ணனை**-*செந்தாமரை போன்ற கண்களை உடையவனான ஸர்வேச்வரனை,* **பாட**—*(ப்ரீதிக்குப் போக்குவிட்டுப்) பாடுவதற்காக,* **எழுந்திராய்**—*எழுந்திருப்பாயாக.*

**அவதாரிகை:**—இவர்கள் காரியங்களுக்கெல்லாம் முன் நிற்பவளாய், எல்லாரையும் தானே எழுப்புவதாகச் சொல்லிவைத்து, அத்தை மறந்து கிடப்பவளான ஒருத்தியை எழுப்புகிறார்கள். "எங்களை... நங்காய்...... நாணாதாய்! நாவுடையாய்" என்றது காண்க.

**வியாக்கியானம்:**—(உங்கள் புழைக்கடை...... காண்) 'நாங்கள் உன் வாசலிலே பழிகிடக்க நீ புறப்படாதொழிவதே' என்றார்கள். 'பொழுது விடிந்ததோ?' என்றாள். 'எங்கு பார்த்தாலும் செங்கழுநீர்

மலர்ந்தும், ஆம்பல் குவிந்தும் கிடக்கிறது கண்டிலையோ' என்றூர்கள். 'நீங்கள் என் மாளிகைக்கு வந்த ஆநந்தத்தாலே உங்கள் கண்கள் மலர்ந்துள்ளன; நான் வாய்பேசாமையால் வந்த வெறுப்பாலே உங்கள் வாய்கள் மூடியுள்ளன; இவற்றையே செங்கழுநீர் மலர்ந்ததாகவும், ஆம்பல் குவிந்ததாகவும் பிரமிக்கிறீர்கள் போலும் என்று பதிலுரைத்தாள். 'இதுவன்று நாங்கள் சொல்லுவது; வயலிலுள்ள மலர்களும் மலர்ந்தும் குவிந்துமுள்ளன' என்றனர். 'வயலெல்லாம் உலாவி அலருவன அலர்த்தி, குவிவன குவிக்கையன்றோ இரவெல்லாம் உங்களுக்கு வேலை' என்றாள். 'எங்களால் இறங்கி அலர்த்தவும் குவிக்கவும் முடியாதபடி ஆழ்ந்து அகன்றிருக்கும் தோட்டக்குளத்திலுள்ளவையும் மலர்ந்தும் குவிந்துமுள்ளனவே' என்றூர்கள்; 'உங்கள்கண்களும் வாய்களும்பிரதிபலிக்கின்றவித்தனை யொழிய அவை உண்மையான மலர்களல்ல; நெல்லில் குவளை கண் காட்ட நீரில் குமுதம் வாய் காட்ட அல்லிக்கமலம் முகங்காட்டுமவர்களன்றோ நீங்கள்' என்றாள். 'நீயே சென்று காண்' என்றூர்கள். 'அவைகளையும் நீங்கள் அலர்த்தியும் குவித்தும் விட்டிருப்பீர்கள்' அகடிதகடநாஸமர்த்தனுடன் ஸம்பந்தம் பெற்ற உங்களால் செய்யலாகாததொன்றுண்டோ? என்றாள்: 'காவல் நிறைந்த புழைக்கடைத் தோட்டத்து வாவியிலுள்ள மலர்களும் மாறுபாட்டையடைந்தன' என்றனர். 'அவைகள் உங்களுக்கு வெகு அருகிலுள்ளவையன்றோ: அவைகளுடைய மாறுபாடும்உங்களால்செய்யப்பட்டதாகவேஇருக்க வேண்டும்' என்றாள். இப்படிச்சொன்னதற்கெல்லாம் மறுமொழி சொல்லும் இவள் வாயடைக்கவேண்டும் என்று (உங்கள் புழைக்கடைத்தோட்டத்து வாவியுள்செங்கழுநீர்...) 'ஸூர்யனும் நுழையவொண்ணுதபடியான உன்னுடைய புழைக்கடைத் தோட்டத்துக் குளத்திலுள்ளவையுமன்றோ மலர்ந்தும் குவிந்தும் கிடக்கின்றன; அசேதனமான அவையும்தங்கள் காரியங்களைச்செய்யும்போது நீஉன் காரியத்தைச் செய்யவேண்டாவோ?' என்கிறூர்கள். வெளியில் நிற்கும் இவர்கள் இவளுடைய புழைக்கடைத் தோட்டத்து வாவியிலுள்ள மலர்களின் மாறுபாட்டை எப்படி உணர்ந்தனர்? என்னில்; வெளியிலுள்ளவை அலர்ந்தும் குவிந்து மிருக்கக்கண்டு, உள்ளிருப்பவையும் அப்படியே யிருக்கவேண்டும் என்று ஊஹித்துச் சொல்லுகிறூர்கள். (உங்கள்புழைக்கடை) இவள்எழுந்திராமையால் ஏற்பட்ட வெறுப்பாலே 'உங்கள்புழைக்கடை' என்று வேறுபடுத்திச் சொல்லுகிறூர்கள். 'த்₃வ்யக்ஷரஸ்து ப₄வேந்ம்ருத்யு:' ['மம' (என்னுடையது) என்னும் இரண்டுஅக்ஷரங்களும் ஸம்ஸாரஹேது] என்றும், ''நீர் நுமதென்றிவை வேர் முதல்மாய்த்து'' என்றும் இருக்கவேண்டிய இவர்கள்

'உங்கள்,எங்கள்' என்கையும், கோபித்து வார்த்தை சொல்லுகையும் விருத்தமன்றோ? என்னில்: தேஹாத்மாபிமானத்தால் வரும் அஹங்காரமமகாரங்கள் த்யாஜ்யம்; பகவத்பாகவத ஸம்பந்தத்தால் வருமவை மிகவும் உபாதேயங்களே. ''அபிமாந துங்கன்'' ''அமைக்கவல்லேற்கு இனியாவர் நிகர் அகல் வானத்தே'' ''இல்லை எனக்கெதிரில்லை எனக்கெதிர் இல்லை எனக்கெதிரே'' முதலானவிடங்கள் இங்கு ப்ரமாணம். பகவத் பாகவதர்கள் மேலுள்ள ப்ரீத்யதிசயத்தாலே கோபித்து வார்த்தை சொல்லுகையும் ஸதாசார ஸித்தம். "என்னுடைய பந்தும் கழலும் தந்து போகு நம்பீ'' ''வாசிவல்லீர் இந்தளூரீர்! வாழ்ந்தே போம்நீரே'' ''அம்மனே இலங்கைக் குழாநெடுமாடம் இடித்த பிரானார் கொடுமைகளே''முதலான ஆழ்வார்கள் அருளிச்செயல்களை நோக்குக.

நிற்க; (உங்கள் புழைக்கடை....காண்) என்று இவர்கள் அடையாளம் சொன்னதும், 'செங்கழுநீர்கள் இப்போதே மலர ஆரம்பித்திருக்கின்றன; ஆம்பல்களும் இப்போதே குவியத்தொடங்கியிருக்கின்றன. கிருஷ்ணனைக் காணச் செல்லவேண்டுமென்னுமாசையால் அவை அலர்ந்தும், குவிந்தும் முடிந்ததாகச் சொல்லுகிறீர்கள். வேறு அடையாளமுண்டாகில் சொல்லுங்கள்' என்றாள் உள்ளிருப்பவள். (செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர் தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்) என்கிறார்கள். தமோகுணம் நிறைந்தவர்களும் விழித்தபின்பு நீ கண்ணுறங்கலாமோ என்றபடி. (செங்கல் பொடிக்கூறை) காவிவஸ்த்ரத்தை தரித்தவர்கள். (வெண்பல் தவத்தவர்) பல்லை வெளுப்பாக வைத்துக் கொண்டிருப்பவர்கள். தபோவேஷத்தை உடையவர்கள். இப்படி தேஹலக்ஷணங்களை மட்டும் சொல்லுகையாலேயும், 'தங்கள் திருக்கோயில்' என்று வேறுபடுத்திச் சொல்லுகையாலும் இது வேஷதாரிகளான சைவஸந்யாஸிகளைச் சொல்லுகிறதென்று எம்பார் நிர்வஹிப்பர்; 'திருக்கோயில்' என்றது அவர்கள் சொல்லும் பாசுரத்தை அநுவதித்தபடி. 'சங்கிடுவான்' என்று சங்கூதுவதைச் சொன்னது மற்ற காரியங்களுக்கும் உபலக்ஷணம்.

''சிறு பதத்தூற்றத் துறையிலே ஒரு தபசி பரிசிலேறி ஆற்றினுள்ளே புக்கு காவேரிதேவிக்குச் சங்கூதுகிறேனென்றுஅங்கே ஊத, பரிசிலிலே போகிறகுதிரைமிதித்து, அதிலேறின மனிச்சரடைய செத்துப்போச்சுது'' என்னுமோர் விநோதமான விருத்தாந்தத்தை இவ்விடத்தில் எம்பார் அருளிச்செய்வரென்று நாலாயிரப்படி. (தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்) வேஷதாரிகளான ஸந்

யாஸிகள் ராஜதண்டனைக்கும் லோகாபவாதத்துக்கும் பயந்து தங்கள் கோயிலில் சங்கூதச் செல்கின்றனர். இது விடிவுக்கு அடையாளமன்றோ? 'போதந்தார்' என்றும் பாடம். 'வெகுநேரத்திற்கு முன்னேயே சென்றுவிட்டனர்' என்று பொருள். 'போகின்றார்'-நிகழ்காலம்; 'போதந்தார்'-இறந்தகாலம்.

(செங்கல் பொடிக்கூறை .....) இவ்வாக்யத்திற்குத் திருமலை நம்பி மற்றொரு வகையாகப் பொருள் கூறுவர். தமோகுணம் நிறைந்தவர்களுடைய அநுஷ்டானத்தைச் சொல்லி ஸாத்விகரை எழுப்புகை உசிதமல்ல என்பது அவருடைய திருவுள்ளம்.

''யத₃ஹரேவ விரஜேத் தத₃ஹரேவ ப்ரவ்ரஜேத்''

[எத்தினத்தில் வைராக்யமடைகிறானோ அத்தினத்திலேயே ஸந்யாஸாச்ரமத்தை ஏற்றுக்கொள்ளக்கடவன்.] என்றும்,

''பரமாத்மநி யோ ரக்தோ விரக்தோऽபரமாத்மநி''

[எவனொருவன் பரமாத்மாவினிடம் அன்புள்ளவனாகவும், மற்ற விஷயங்களில் பற்றற்றவனாயுமுள்ளானோ......] என்றும்

''மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர்தோள்கைவிட்டு''

என்றும் சொல்லப்பட்டபடியே பகவத்விஷயத்தில் ஈடுபட்டவராய், இதரவிஷயங்களில் விரக்தியடைந்தவராய், காஷாயவஸ்த்ரத்தை தரித்தவராய், வெற்றிலை முதலிய போக்யத்ரவ்யங்களை வெறுத்திருக்கையாலே வெளுத்த பற்களையுடையராயுள்ள ஸாத்விக ஸந்யாஸிகள் தங்கள் காலைக்கடன்களை முடித்து, தங்கள் அகங்களிலேயும், ஆச்ரமங்களிலேயும் திருவாராதனம் செய்யப்போகின்றனர்; இது விடிவுக்கு அடையாளமன்றோ? என்றபடி.

இவ்விரண்டு நிர்வாஹங்களுக்கும் சேர இவளுடைய உத்தரமும் (பதிலும்) வேறுபடும். முதல் நிர்வாஹத்தில், ''தம: ப்ரசுரருடைய அநுஷ்டானம் ஸாத்விகர்களான நமக்கு ப்ரமாணமாகாது; 'த₄ர்மஜ்ஞஸமய: ப்ரமாணம்' [தர்மத்தை அறிந்த ஞானிகளின் ஆசாரம் ப்ரமாணம்] [ஆ-ஸூ] என்றன்றோ இருப்பது. ஆகையாலே வேறு அடையாளமுண்டாகில் சொல்லுங்கள்'' என்பது இவளுடைய பதில்.

இரண்டாவது நிர்வாஹத்தில் '''ஸததம் கீர்த்தயந்தோ மாம்' [என்னை எப்போதும் ஸங்கீர்த்தனம் செய்பவர்கள்] 'நமஸ்யந்தச்ச

மாம் ப₄க்த்யா நித்யயுக்தா உபாஸதே'[என்னை பக்தியுடன் வணங்கு பவர்களாய், ஸர்வகாலங்களிலும் (என்னுடன்) சேர்ந்திருப்பவர் களாய் உபாஸிக்கிறார்கள்] 'இவளிராப்பகல் வாய் வெரீஇத் தன குவளையொண் கண்ண நீர் கொண்டாள்' 'தெரித்தெழுதி வாசித் தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது' என்கிறபடியே மாலைக்கண்டு மாலுற்றவர்கள் இருக்கும்படியை அறிந்துவைத்தும் இதை ஓரடையாளமாகச் சொல்லுவதோ? இவர் கள் எப்போதாவது பகவத்வ்யதிரிக்த விஷயங்களில் ஈடுபட்டிருக்கி லன்றோ இச்செயலைக்கொண்டு காலத்தை அறுதியிடுவது'' என்பது இவளுடைய உத்தரம்.

இப்படி இவள் ஒவ்வொன்றுக்கும் பதில் சொல்லிவருவதைக் கண்டு இவளை க்ஷேபிக்கிறார்கள் மேல்: (எங்களை முன்னம் எழுப்பு வான் வாய் பேசும் நங்காய்) "'நான் முதன் முதலில் எழுந்து எல் லாரையும் எழுப்புகிறேன்' என்றுசொல்லி வைத்த நீ, நாங்கள் எழுந்து வந்து உன்னை எழுப்பும் போதும் மறுத்துப் பேசுவது வெகுஅழகாயிருக்கிறது! 'த₄ர்மஜ்ஞஸமய: ப்ரமாணம்'என்று சற்று முன் சொன்னாயே.தர்மஜ்ஞையான உன் ஸமயமும் அப்ரமாணமாக வன்றோ போயிற்று'' என்று ஏசுகிறார்கள்.

(வாய் பேசும்) வாயால் சொல்லுவதொன்றும், காரியத்தில் அநுஷ்டிப்பதொன்றுமாகவோ ஸாத்விகரிருப்பது?

'மநஸ்யந்யத் வசஸ்யந்யத் கர்மண்யந்யத் து₃ராத்மநாம்।
மநஸ்யேகம் வசஸ்யேகம் கர்மண்யேகம் மஹாத்மநாம்॥"

[துராத்மாக்களுக்கு மனத்தில் ஒன்று, வாக்கில் மற்றொன்று, காரி யத்தில் வேறொன்றாயிருக்கும்; மஹாத்மாக்களுக்கு மனத்திலொன்று, வாக்கிலும் ஒன்று, காரியத்திலும் ஒன்றேயாயிருக்கும்.] என்னும் லக்ஷணங்களை மறந்தாயோ? (நங்காய்) உன் பூர்த்தி அழகிதா யிருந்தது! சொல்லும், செயலும் ஒருபடிப்பட்டிருப்பார்க்கன்றோ பூர்த்தியுள்ளது. அதில்லாத உனக்குப் பூர்த்தி ஏது? 'பேராளன் பேரோதும் பெரியாரை ஒருகாலும் பிரிகிலேனே' என்று நீ அநுஸந் தித்துப் போந்ததற்கெல்லாம் பொருள் இதுவோ? 'நங்காய்' என் னும் விளி விபரீத லக்ஷணையாலே பூர்த்தியற்றவளே!என்றுபொருள் படுகிறது. அன்றிக்கே, 'பூர்த்தியற்றவளே!'என்று கூப்பிடுவதாகவும் கொள்ளலாம். (நங்காய்) நீ பகவானைப் பெற்றுப் பூர்ணையாயிருக்

கிறபடியாலேயன்றே எங்களை உபேக்ஷித்திருக்கிறாய். 'எனக்கு உங்களையொழியச் செல்லாது' என்று நீ முன்பு சொல்லிப்போருவது எவ்வளவு தூரம் உண்மையானது என்பதைக் கண்டோம் என்கிற படி. (எழுந்திராய்) எங்களை உஜ்ஜீவிப்பிக்கைக்காக எழுந்திருப்பாயாக. (நங்காய் எழுந்திராய்) உன்னைப்போல நாங்களும் பூர்ணைகளாகைக்காக எழுந்திருப்பாயாக.

(நாணாதாய்) எழுந்திருக்காவிடிலும், 'இவர்கள் அழைத்தும் எழுந்திராமலிருந்தோமே' என்னும் வெட்கமும் அற்றவளாயிருக்கின்றனையே! நீ இருந்த ஊரில் பூசினியும் காயாதோ? சுணையுள்ள செடி கொடிகளும் நீ உள்ளவிடத்தில் கிடையாவோ?' என்கிறார்கள். (நாணாதாய்) "ஹ்ரீரேஷா! ஹி மமாதுலா" [(நீங்கள் என்னைத் தேடி வந்தது குறித்து) எனக்கு மிகவும் லஜ்ஜையாயிராநின்றது.] என்ற சக்கரவர்த்தித்திருமகனுடன் ஸம்பந்தம் பெற்றவளன்றே நீ. சுணை கேடனை க்ருஷ்ணனுடன் பழகியவளான உனக்கு லஜ்ஜையேது? (நாவுடையாய்) நாங்கள் சொல்லும் சொற்களுக்கெல்லாம் ஏறுமாறாக பதில் சொல்லும் நாவொன்றே உனக்கு தனமாக உள்ளது. அன்றிக்கே, 'என்னை இப்படி ஏசிக்கொண்டாகிலும், ஏதுக்கு என்னிடம் வருகிறீர்கள்?' என்று இவள் கேட்க, 'நாவுடையாய்' என்கிறார்களாகவுமாம். (நாவுடையாய்) உன்னுடைய நாவீறுடைமையன்றோ எங்களை உன் பக்கல் இழுக்கிறது.

"நாந்ருக்₃வேத₃விநீதஸ்ய நாயஜுர்வேத₃தா₄ரிண: ।
நாஸாமவேத₃விது₃ஷ: ஶக்யமேவம் ப்ரபா₄ஷிதும் ॥"

[ருக், யஜுஸ், ஸாமம் என்னும் மூன்று வேதங்களையும் அறியாதவனால் இப்படிப்பேசவொண்ணாது.] என்றும், 'ஸம்ஸ்க்ருதே மது₄ரம் வாக்யம்' என்றும் 'செவிக்கினிய செஞ்சொல்' என்றும்சொல்லத் தக்க உன் சொற்கள், நீ என்ன பாடு படுத்தினாலும் எங்களை உன்னிடம்ப்ரவணராக்குகிறது என்கிறார்கள். எல்லா அநீதிகளும் செய்யிலும், நாவீறுடையாரை உலகம் கொண்டாடுவதை ப்ரத்யக்ஷமாக நாம் காணாநிற்கிறோமன்றோ.

நான் உங்களுக்குச் செய்யவேண்டுவதென்னென்னச் சொல்லுகிறார்கள். (சங்கொடுசக்கரம்.........) க்ருஷ்ணனுடைய திருநாமங்களைப்பாடவேண்டுமென்பதே எங்களுடைய கோரிக்கை. பால் குடிக்கக் கால் பிடிக்கவேணுமோ? சடக்கென எழுந்திராய். "சங்கொடு சக்கரம்...பங்கயக்கண்ணனைப் பாடஎழுந்திராய்" என்று அந்வயம்.

அன்றிக்கே, "நங்காய் எழுந்திராய்......பங்கயக்கண்ணனைப்பாடு" என்றும் அந்வயிக்கலாம். (சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்) ஆச்ரிதசத்ரு நிரஸனத்திற்காகவும், அடியாரை ஆழங்காற் படுத்துகைக்காவும் வலக்கை யாழி யிடங்கைச்சங்கம் தரித்து, அத்தாலுண்டான ஆநந்தத்தாலே பூரித்துப் பருத்திருககும் விசாலமான திருக்கைகளை உடையவன்.

"கூராராழி வெண் சங்கேந்திக் கொடியேன் பால்
வாராய்ஒருநாள் மண்ணும் விண்ணும் மகிழவே" என்றும்;

"வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு
படைபோர் புக்கு முழங்குமப்பாஞ்சன்னியமும்பல்லாண்டே"

"சங்குசக்கரங்க ளென்று கைகூப்பும்"

என்றும் நம் தமப்பனர்கள் ஈடுபட்டும், மங்களாசாஸனம் செய்தும் போருகிற சங்கசக்கரங்களைக் கண்டுவைத்தும் ஆறி யிருக்கலாமோ?

"ஜாதோऽஸி தே₃வதே₃வேஶ ஶங்க₂சக்ர க₃தா₃த₄ர।
தி₃வ்யம் ரூபமித₃ம் தே₃வப்ராஸாதே₃நோபஸம்ஹர ॥"

[தேவர்க்கும் தேவர்களான நித்யஸூரிகளுக்கும்ஸ்வாமியே! சங்க சக்ர கதாதரனே! நீர் திருவவதரித்துள்ளீர்; (சங்கசக்ராதிதரமான) இந்த திவ்யரூபத்தை அருள் கூர்ந்து மறைத்துக் கொள்வீராக.] என்று வஸுதேவராலும்,

"உபஸம்ஹர ஸர்வாத்மந் ரூபமேதத் சதுர்பு₄ஜம்।
ஜாநாது மாவதாரம் தே கம்ஸோயம் தி₃திஜந்மஜ:॥"

[ஸர்வாத்மாவே! நான்கு கைகளையுடைய இவ்வுருவை மறைத்துக்கொள்வீராக. அஸுரனான கம்ஸன் உம்முடைய அவதாரத்தை அறியக்கூடாது.] என்று தேவகியாலும் பிரார்த்திக்கப்பட்ட பிறகு கிருஷ்ணன் சங்கசக்ரங்களை மறைத்துக் கொண்டதாகச் சொல்லப் பட்டிருக்க இவர்கள் "சங்கொடு சக்கரமேந்தும் தடக்கையன்" என்று கருஷ்ணனைச் சொல்லுவது எங்ஙனே பொருந்தும்படி யெனில்: கண்ணன் உகவாதார்க்கு இரு கைகளோடும், உகந்தவர்களுக்கு நான்கு கைகளோடுமே எப்போதும் காட்சியளிப்பான் என்பதற்கு ப்ரமாணங்கள் உளவாகையால் பொருந்தும்.

"நெய்த்தலைநேமியும் சங்கும் நிலாவிய
கைத்தலங்கள் வந்து காணீரே" என்கிறபடியே யசோதைப்

பிராட்டிக்கு சங்கசக்ரதரனுகவன்றே காட்சியளித்தது. அர்ஜுன னும் கீதையில்

"தேனைவ ரூபேண சதுர்ப்பு$_4$ஜேந
ஸஹஸ்ரபா$_3$ஹோ ப$_4$வ விச்வமூர்த்தே"

[ஆயிரங் கைகளையுடையவனே! உலகையெல்லாம் உருவாகக் கொண்டவனே! முன்னிருந்த படியே நான்கு கைகளை உடையவனு வாயாக.] என்றுனன்றே.

(பங்கயக்கண்ணனை) ஸூர்யன்போலும், சந்திரன் போலும் விளங்கும் சங்கசக்ரங்களுக்கு அருகிலே, ஒரு காலத்தில் மலர்ந்தும், மற்றொரு ஸமயத்தில் குவிந்தும் விளங்குகையாலே தாமரையை ஒத் திருந்துள்ள திருக்கண்களை உடையவனை.

"வெள்ளைச் சுரிசங்கொடாழியேந்தித் தாமரைக்கண்ணன்"

"சங்கு சக்கரங்களென்று கைகூப்பும்
தாமரைக் கண்ணென்றே தளரும்"

"சங்கொடு சக்கரம் கண்டுகந்தும்
தாமரைக் கண்களுக்கற்றுத் தீர்ந்தும்" என்ற நம்மாழ் வாரைப்போலே "சங்கொடு சக்கரமேந்தும் தடக்கையன் பங்கயக் கண்ணனை" என்கிருர்கள்.

"ஆங்கு மலரும் குவியுமாலுந்திவாய்
ஓங்கு கமலத்தினொண்போது—ஆங்கைத்
திகிரி சுடரென்றும் வெண் சங்கம் வானில்
பகருமதியென்றும் பார்த்து" என்று சொல்லப்பட்ட உந்தித் தாமரையைத் தாமரைக்கண்ணும் ஒத்திருக்கையாலே சங்குசக்கரங்க ளோடு சேர்த்துப் படிக்கிருர்கள். (பங்கயக்கண்ணனை) "தூது செய் கண்கள் கொண்டொன்று பேசி' என்றும் "இளவாய்ச்சியர் கண்ணி னுள் விடவே செய்து விழிக்கும் பிரான்" என்றும் "தாமரைக் கண் ணனை விண்ணோர் பரவும் தலைமகனை" என்றும் "ஜிதந்தே புண்ட$_3$ரீ காக்ஷ" என்றும்,இடக்கையும், வலக்கையுமறியாத இடைச்சிகளான நம்மோடு, நித்யஸூரிகளோடு வாசியற ஸர்வரையும் தோற்பித் துக்கொள்ளும் தாமரைக் கண்களைக் கண்டுவைத்தும் கண்ணுறங்கு வதோ? என்கிருர்கள். (பாட) 'உன்ப்ரீதிக்குப்போக்குவிட்டுப் பாடி, ஒரு நீர்ச்சாவி போலே கிடக்கிற இத்திரள் உஜ்ஜீவிக்கும்படி வர்ஷி யாய்' என்று ஆருயிரப்படி. (பங்கயக் கண்ணனைப் பாட) ரிஷியும்

"உத்₃க₃ாயதீநாமரவிந்த₃லோசநம்
வ்ரஜாங்க₃நாநாம் தி₃வமஸ்ப்ருஶத் த்₄வநி:" [பாகவதம்]
*[தாமரைக்கண்ணனைப் பாடும் ஆய்ப்பாடிப் பெண்களின் குரல் ஸ்ரீவைகுண்டத்தையும் எட்டிற்று.] என்று எம்பெருமானுடைய தாமரைக்கண்களுக்குத் தோற்று இடைப்பெண்கள் பாடுவதில் ஈடுபட்டாரன்றோ.*

15. எல்லே இளங்கிளியே இன்னம் முறங்குதியோ
சில்லென் றழையேன்மின் நங்கைமீர் போதர்கின்றேன்
வல்லையுன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதா னாயிடுக
ஒல்லைநீ போதா யுனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ போந்தார்போந் தெண்ணிக்கொள்
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோ ரெம்பாவாய்

**பதவுரை:-இளம் கிளியே**-*(பேச்சிலும் அழகிலும்)இளமை தங்கிய கிளிபோலிருப்பவளே!* **எல்லே**— *(உன் பேச்சின் இனிமை) என்னே!* **இன்னம்**—*எல்லோரும் வந்து நின்ற பிறகும்,* **உறங்குதியோ** — *தூங்குகிறாயோ? (என்று எழுப்ப),* **நங்கைமீர்**—*பெண்பிள்ளைகளே!* **சில் என்று அழையேன்மின்**—*சிலுகு சிலுகு என்று அழைக்காதீர்கள்,* **போதர்கின்றேன்**—*(இப்போதே) புறப்பட்டு வருகிறேன் (என்று உள்ளிருப்பவள் விடைகூற,)* **வல்லை**-*(வாய்ப்பேச்சில் நீ) ஸமர்த்தையாயிராநின்றாய்;* **உன் கட்டுரைகள்**—*உன்னுடைய கடுஞ்சொற்களையும்,* **உன் வாய்**—*உன்னுடைய வாயையும்,* **பண்டே அறிதும்**–*நெடுங்காலமாகவே நாங்கள் அறிவோம் (என்று எழுப்புகிறவர்கள் சொல்ல)* **நீங்களே வல்லீர்கள்**—*(இப்படி எதிர்வாதம் செய்யும்) நீங்களே வாய் வன்மையுடையவர்கள்,* **நானே தான் ஆயிடுக**—*(அன்றிக்கே) நானேவாய்வன்மையுடையவளாய் இருக்கட்டும் (உங்களுக்கு நான் செய்ய வேண்டுவதென்? என்று உள்ளிருப்பவள் கேட்க)* **நீ**—*நீ,* **ஒல்லை போதாய்**—*சீக்கிரம் எழுந்திருப்பாயாக,* **உனக்கு என்னவேறு**

**உடையை**—உனக்கு என்று வேறு என்ன பலனை நீ உடைய வளாயிருக்கிருய்? (என்று உணர்ந்தவர்கள் வினவ). **எல்லா ரும் போந்தாரோ**—(வரவேண்டியவர்) யாவரும் வந்தனரோ? (என்று உள்ளிருப்பவள்கேட்க). **போந்தார்**(எல்லோரும்) வந் தனர். **போந்துஎண்ணிக்கொள்**—(நீயும்) வந்து எண்ணிப் பார்த்துக்கொள் (என்று உணர்ந்தவர்கள்சொல்ல.'நான்வெளி வந்துசெய்யவேண்டுவதென்' என்று உள்ளிருப்பவள் உசாவ) **வல்லானை**-(குவலயாபீடமென்னும்)வலிய யானையை. **கொன் ருனை**—அழித்தவனும், **மாற்ருரை**—சத்துருக்களை. **மாற்று அழிக்கவல்லானை**—வலியற்றவர்களாகச் செய்யவல்லவனும். **மாயனை** — ஆச்சரியமான செய்கைகளை உடையவனுமான கண்ணனை. **பாட**—பாடுவதற்காக (எழுந்திராய் என்று அழைக்கிருர்கள்.)

*அவதாரிகை*:-எல்லாப் பெண்களுடைய கூட்டத்தையும் காண ஆசைப்பட்டிருப்பாளொருத்தியை எழுப்புகிருர்கள். "எல்லாரும் போந்தாரோ" என்று இவள் கேட்பதிலிருந்து, "ஈட்டங்கண்டிடக் கூடுமேல் அது காணும் கண் பயனாவதே" என்று வைஷ்ணவ கோஷ்டியைக் காண்பதே கண்படைத்த ப்ரயோஜனம் என்றிருப்பா ளொருத்தியென்று தோற்றுகிறது. கீழ்ப்பாட்டுக்களில் கேள்விகளை சொல்தொடைகளிலிருந்து ஊகித்தறியவேண்டியிருக்கிறது. இப் பாட்டில் கேள்விகளும் பதில்களும் தெளிவாகச் சொல்லப் பட்டிருக்கின்றன.

*வியாக்கியானம்*:—அசல் வீட்டிலுள்ளவளைச் சென்ற பாட்டில் "சங்கொடு சக்கரமேந்தும் தடக்கையன் பங்கயக்கண்ணனைப்பாட" என்று இவர்கள் எழுப்புவதைக் கேட்ட இவள், அப்பாட்டிலே மயங்கித்தன் இனிய குரலாலே அவ்வடியைப் பாடத்தொடங்கினள். அதைக்கேட்ட இவர்கள் (எல்லே இளங்கிளியே) என்கிருர்கள். (எல்லே) என்ன ஆச்சரியம்! உன்னை எழுப்பவந்த எங்களையும் எழுப்பவொண்ணுதபடி செய்யுமதாயன்ருே இருக்கிறது உன் குர லினிமை. 'எல்லே' என்று இவளைக் கூப்பிடுவதாகவும் கொள்ளலாம். (எல்லே இளங்கிளியே)கிளியானது, பேச்சிலினிமைக்கும், நிறத்துக் கும் ஒரு புடை ஒப்பாகலாமேயன்றி, பருவத்துக்கு ஒருகாலும் ஒப் பாகமாட்டாது. (இளங்கிளியே) நாங்கள் கிளிகள்; நீ இளங்கிளி.

"தளிர் நிறத்தால் குறைவில்லாத் தனிச்சிறையில் விளப்புற்ற
கிளிமொழியாள்......" என்கிறபடியே சீதாபிராட்டி

தளிர் நிறத்தாலும், பந்தனத்தாலும், மென்மொழியாலும் ஓர் கிளியை ஒப்புச்சொல்லலாம்படி விளங்கினுள். நீயோவெனில் பருவத்தில் அவளேயும் விஞ்சியிருக்கையாலே 'இளங்கிளி' என்னலாம்படியிருக் கிருய். (இளங்கிளியே) "மென்கிளிபோல் மிழற்றும்" என்றும், "அணிமழலேக்கிளிமொழியாள்" என்றும் அருளிய ஆழ்வார்கள் கிளிகள்; அஞ்சுகுடிக்கொரு சந்ததியான இவள் இளங்கிளி.

அவர்கள் 'இளங்கிளியே' என்று அழைப்பதைக் கேட்ட இவள் "அசல்வீட்டுப் பெண்பிள்ளேயையும் 'நாணுதாய்! நாவுடையாய்' என்று கடிந்துகொண்ட இவர்கள் அவளிலும் பிற்பட்ட நம்மை மெச்சி 'இளங்கிளியே' என்று கூறியிருக்கமாட்டார்கள்! 'மாசுடை யுடம்பொடு தலேயுலறி வாய்புறம் வெளுத்து' என்கிறபடியே கிருஷ்ணனே அடையாத உடம்பும் வாயும் வெளுத்திருக்கவேண்டிய நீ இளங்கிளியைப்போலே பசுகு பசுகென்றிருக்கும் உடம்பையும், சிவந்த வாயையும் உடையவளாயிருப்பதே! என்று ஏசுகிருர்கள். இந்த சமயத்தில் இவர்களுடன் பேசுவது உசிதமல்ல" என்று பேசாமே கிடந்தாள். (இன்னம் உறங்குதியோ) என்கிருர்கள் வெளி யிலுள்ளவர்கள். (இன்னம் உறங்குதியோ) நாங்கள் எல்லாரும் வந்தபின்பும் உறங்கக்கடவையோ? "க்ருஷ்ணவிரஹத்தாலும், உன் கடாக்ஷம் படாமையாலும் துவண்ட எங்கள் ஆர்த்தத்வனி கேட்டும் கண்ணுறங்குவதே உனக்கு! உத்தேச்யம் கைபுகுந்தால் உறங்கு வாருண்டோ?" என்கிருர்கள்.

'பங்கயக்கண்ணனே' என்று தான் அநுஸந்திப்பதற்கு இடை யூருக இவர்கள் வார்த்தை சொல்லுகையைப் பொருமல் 'சில்லென் றழையேன்மின்' என்கிருள் உள்ளிருப்பவள். 'இவர்கள் பேச்சைப் பொருமல் இப்படி வார்த்தை சொல்லலாமோ?' எனில், பகவதநு ஸந்தானத்துக்கு இடையூருயிருக்கையாலே சொல்லக்குறையில்லே. திருக்கோஷ்டியூர் நம்பிகள், பெரியநம்பிகள் முதலானேர் திருவரங் கத்தில் திருப்புன்னேக்கீழே திருவாய்மொழிபாடாநிற்க, அச்சமயம் செல்வரெழுந்தருளுகையும் அவர்களுக்கு அஸஹ்யமாயிருந்தது என்னும் ஐதிஹ்யத்தை இவ்விடத்தில் அநுஸந்திப்பர்கள். இவள் இப்படிச் சிவிட்கென்று சீறியதைப்பொருமல், உணர்த்துமவர்கள் 'எங்களேக் காண்கையும், எங்கள் பேச்சைக்கேட்கையும் உனக்கு அஸஹ்யமாயிருப்பது உன்னுடைய பூர்த்தியாலேயன்றே என்றனர்.

(நங்கைமீர் போதர்கின்றேன்.)என்றுபதில் சொல்லுகிருள்; ''பூர்ணை களே! நீங்களேயன்ரே குறைவற்றவர்கள்;உங்களுக்கொரு கும்பிடு. உங்கள் திருவாயைச் சற்று மூடுங்கள்; என்னைப் படுத்தாதே கொள்ளுங்கள். நான் இதோ வருகின்றேன்'' என்று உரைக்கிருள். இதைக்கேட்ட இவர்கள் சொல்லுகிருர்கள் :(வல்லை உன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்) 'சில்லென்றழையேன்மின்' என்றும், 'நங்கைமீர்' என்றும் எங்களை வெறுத்துரைத்ததோடன்றியில், எங்கள்மேலே குற்றமாம்படி நீ பேசவல்லை என்பதை நாங்கள் வெகுநாளாக அறிவோமன்ரே என்கிருர்கள்.

(வல்லீர்கள் நீங்களே) 'இன்னம் உறங்குதியோ' என்றும் ''வல்லையுன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்' என்றும் கடுஞ்சொற்கள் பேசும் நீங்களன்ரே வல்லவர்கள் என்று உள்ளிருப்பவள் சொல்ல, 'சில்லென்றழையேன்மின்' என்று முதலில் நீயன்ரே சீறிஞய் என்று உணர்த்துமவர்கள் உரைக்க, 'அதுவும் உங்கள் குற்றமே;. நம் வார்த்தையும் அஸஹ்யமாம்படி இவள் க்ருஷ்ண குணங்களில் அவகாஹித்தபடியென்! என்று உகக்கவேண்டியிருக்க அதில் தோஷத்தை ஏறிடலாமோ? என்கிருள். (வல்லீர்கள் நீங்களே) 'நான் உங்களை எழுப்பவந்திருந்தேனுகில் நீங்கள் என்னைப்பலபாடுகளும் படுத்தவல்லீர்களன்ரே' என்கிருளாகவுமாம். 'நாங்கள் உன் வாசலிலே துவளுகிறது ப்ரத்யக்ஷம்; அது கிடக்க அநுமானத்தைக்கொண்டு பேசுவதில் பயனென்?' என்று உணர்த்துமவர்கள் உரைக்க, பாகவதர்களுடன் வாதம் செய்வது ஸ்வரூபவிருத்தமானது என்று உணர்ந்து (நானேதானுயிடுக) என்கிருள். (நானேதானுயிடுக) இல்லாத குற்றத்தையும் சிலர் உண்டென்ருலும், அதை இல்லை செய்ய முற்படாதே இசைகையன்ரே வைஷ்ணவலக்ஷணம். ''நித்யாபி₄வாஞ்சி₂தபரஸ்பர நீசபா₄வை:'' [எப்போதும் ஒருவர்க்கொருவர் தாஸ்யத்துடனிருப்பதையே விரும்புமவர்களோடு......] என்றிருக்கவேண்டிய ஸ்ரீவைஷ்ணவர்கள் விஷயத்தில் வேறுவிதமாக இருக்கப்போமோ? ''மத்பாபமேவாத்ர நிமித்த மாஸீத்'' [என்னுடைய பாபமே இதற்குக் காரணம்] என்று பரதாழ்வானும் பிறர் குற்றத்தைத் தன் பாபபலமென்ருனன்ரே. ''திருப்பாவையாகிறது இப்பாட்டிறே; பகவத்விஷயத்திலிருக்கும்படியெல்லாம் சிற்றம் சிறு காலையிலேசொல்லுகிறது. பாகவதவிஷயத்திலிருக்கும்படி யெல்லாம் இப்பாட்டிலே சொல்லுகிறது'' என்று ஆருயிரப்படியில் அருளிச்செய்வர். (ஒல்லை நீ போதாய்) உன் குற்றத்தை இசைந்தபின்பு சடக்கென வந்து க்ஷமைகொள்ளு

மித்தனையன்றோ என்கிறார்கள். (ஒல்லை) பாகவதர்களுடன் கூடுகை பரமபோக்யமாகையால், ஆறியிருக்கவொண்ணாமல், 'சடக்கென வாராய்' என்கிறாள். "வந்தொல்லைக் கூடுமினோ" என்றாரன்றோ பெரியாழ்வாரும். (ஒல்லை நீ போதாய்) 'உன் படுக்கையில் கிடக்கிற கருஷ்ணனையிட்டு வைத்து நீ கடுகப்போராய்'என்று நாலாயிரப்படி. (ஒல்லைநீபோதாய்) முன்பொரு சமயம் வைஷ்ணவர்களுக்கும் மற்றும் சிலருக்கும் ஓர் விவாதம் விளைய அவ்விவாதத்திற்கு மத்யஸ்தராயிருக்கும்படி ஸுப்ரஹ்மண்யபட்டர் என்னுமோர் பாகவதரைக்கேட்க "அரைக்ஷணம் வைஷ்ணவகோஷ்டியைப் பிரியநின்று வரும் மாத்யஸ்த்யம் எனக்கென் செய்ய?" என்று கூறி மறுத்து விட்டார் என்னும் ஐதிஹ்யத்தை இங்கு ஆய் அருளிச்செய்வர்.

'ஒல்லை நீ போதாய்' என்றபின்பும் துடித்துக்கொண்டு வராமையாலே (உனக்கென்ன வேறுடையை) அஞ்சுலக்ஷம் குடியில் பெண்களுக்குள்ளது தவிர உனக்கு வேறு சில உண்டோ? என்கிறார்கள். எங்கள் பெரும்பானை கண்டபின்பும் உன் ஸ்வயம்பாகம் தவிர்ந்திலையோஎன்கிறார்கள். (உனக்கென்னவேறுடையை) "சாதுகோட்டியுள் கொள்ளப்படுவார்" என்று புருஷார்த்தமான இக்கோஷ்டிக்குப் புறம்பாயிருக்கைக்கு மேற்பட்ட அநர்த்தமுண்டோ? "விஷயங்களைப் பற்றிப்புறம்பாயிருக்கவுமாம்; ஈச்வரனைப்பற்றிப் புறம்பாயிருக்கவுமாம். ஆத்மாவைப்பற்றிப் புறம்பாயிருக்கவுமாம்" என்று நாலாயிரப்படி. ஈச்வரனைப்பற்றிப் புறம்பாயிருக்கையாவது:- பகவத் கைங்கர்யமும், பகவதநுபவமும் பகவானுக்கும், பாகவதர்களுக்கும் ஆநந்தஹேது என்று அவற்றில் ப்ரவர்த்திக்கையன்றிக்கே, தனக்கு ஆநந்தஹேது என்று நினைக்கை. "வைஷ்ணவ விஷயத்தை பஹிஷ்கரித்துப் பற்றும் பகவத் விஷயத்தோடு தேவதாந்தரத்தோடு வாசியில்லை" என்று ஆச்சான்பிள்ளை அருளிச்செய்வர். பின்வரும் ஐதிஹ்யத்தையும் இங்கு எடுத்தருளுவர்:-பகவத்பாகவத விரோதிகளில் தலைசிறந்தவனான க்ருமிகண்டசோழனுடைய உபத்ரவத்தாலேஎம்பெருமானார் மேல்நாட்டுக்கு எழுந்தருளின பின்பு, அச்சோழன் எம்பெருமானார் ஸம்பந்தம் பெற்றவர்களைத் திருவரங்கம் பெரியகோயிலுக்குள் விடலாகாது என்று ஆஜ்ஞையிட்டு வைத்தான். இதற்குப்பின் கூரத்தாழ்வான் கோயிலுக்குள் செல்லப் புக, அங்குள்ளார் இந்த ராஜாஜ்ஞையைச் சொல்லி 'ஆயினும், நீ ஒருவருக்கும் விரோதியல்லை; நீ புக்குத் திருவடிதொழு'

*என்ன, ''ஆத்மகுணங்கள் மோக்ஷஹேதுவாகவும், அநாத்மகுணங்கள் பந்தஹேதுவாகவும் நினைத்தோம்; ஆத்மகுணங்களே பந்தஹேதுவாய்த்து; எம்பெருமானுருடன் ஸம்பந்தத்தை அறுத்துக் கொண்டு உட்புகவேண்டியதில்லை'' என்றுகூறி வெளிச்சென்றுர். இத்தால், பாகவதவிஷயத்துக்குப் புறம்பான பகவத்விஷயமும் உத்தேச்யமன்று என்றதாயிற்று. நிற்க; இவர்கள் 'உனக்கென்ன வேறுடையை' என்றதும், ஸ்ரீராமபிரானைத் திரும்பியழைத்துச் செல்ல வனத்திற்குவரும் பரதாழ்வானைக்கண்டு ஸந்தேஹம் கொண்ட இளையபெருமாள் 'அவனைக் கொன்றொழித்துவிடுகிறேன்' என்று சொல்ல, இதை ஸஹியாத ஸ்ரீராமன் 'உனக்கு ராஜ்யத்தில் ஆசையிருந்ததாகில் பரதனை உன்னிடம் ராஜ்யத்தைக் கொடுக்கும்படி செய்கிறேன்' என்று சொன்னவுடன் மிகவும் வெட்கமடைந்த இளையபெருமாளைப்போலே லஜ்ஜையடைந்தாள் உள்ளிருப்பவள். தார்மிகர்களுக்கு, அதர்மகார்யம் செய்கை லஜ்ஜாஹேதுவாயிருக்குமாபோலே பரமைகாந்திகளுக்கும், பகவத்விஷயாநுபவம் தனக்கென்றிருக்கை லஜ்ஜாஹேதுவாயிருக்குமன்றே.

இவர்கள் ''உனக்கென்ன வேறுடையை'' என்றவுடன் தன் ஸ்வரூபத்தை உணர்ந்து ''உங்களையொழிய எனக்கொரு ஸுகமுண்டோ? பகவத் விஷயத்திலீடுபட்டார் எல்லாருடைய திருமுகங்களையும் ஒருங்கே காண ஆசைப்பட்டிருந்தேன்; நீங்கள் எல்லாரும் வந்தீர்களோ''என்று கேட்கிறுள்: (எல்லாரும் போந்தாரோ)என்று. (போந்தார்) என்று இதற்கு பதிலளிக்கிறுர்கள். 'போந்தாராகில் புகுரவிடுங்கள்' என்ன (போந்து எண்ணிக்கொள்) என்கிறுர்கள். (போந்தெண்ணிக்கொள்) எண்ணிக்கொள்ளுகைக்கு ப்ரயோஜனம், தனித்தனியே பார்க்கையும், பேர்சொல்லுகையும், தொட்டு அநுபவிக்கையும். (போந்தெண்ணிக்கொள்) திருவாய்ப்பாடியில் பெண்களுக்குத் தொகையில்லாமையாலே இவள் எண்ணிமுடிக்கும் வரையிலாவது இவளைப் பிரியாமல் அநுபவிப்போமென்று பார்க்கிறுர்கள். 'நாம் கூடிச் செய்யவேண்டியதென்?' என்ன, 'க்ருஷ்ணனுடைய வீரச்செயல்களுக்குத் தோற்றுப் பாடுகையைத் தவிர நமக்குச் செய்யலாவது வேறுண்டோ? எல்லேயிளங்கிளியே என்று எங்களால் புகழப்பெற்ற உன்அழகிய மிடற்றுலே ஒருகால் வல்லானை கொன்றுனை என்று பாடாய்' என்கிறுர்கள் கடைசி இரண்டடிகளால்:

---

* மூவாயிரப்படி அச்சுப்ரதிகளில் 'என்ற' என்றிருப்பதைத் திருத்திக்கொள்ளவும்.

(வல்லானை கொன்றானை) வலியதான குவலயாபீடமென்னும் யானையைக்கொன்று தன்னை நமக்கு அளித்தவனை- "ஸக்₂ய: பச்யத க்ருஷ்ணஸ்யமுக₂ம்" [ஸகிகளே! க்ருஷ்ணனின் முகத்தைப் பாருங்கள்.] என்றும், "கவளயானை கொம்பொசித்தகண்ணன்' என்றும்,

"வெஞ்சினவேழ மருப்பொசித்த வேந்தர்கொல் ஏந்திழையார் மனத்தைத் தஞ்சுடையாளர்கொல்" என்றும் பெண்கள் தம்மை எழுதிக்கொடுத்திருக்கும் செயலைக்கேட்டும் ஆறியிருப்பதே! 'கவளமால் யானை கொன்ற கண்ணனை அரங்கமாலை' என்று ஆண்களும் இச்செயலிலேயன்றோ ஈடுபட்டிருப்பது. "வாரணத்தை மருப்பொசித்த பிரான் என் மாதவனே" என்றும், "நாரணனெம்மான் பாரணங்காளன் வாரணம் தொலைத்த காரணன்" என்றும், "பின்னை மணாளனாகிக் கருந்தாள் களிறொன்றொசித்தான்" என்றும், என்றும் பிராட்டிமார்களும் இச்செயலிலேயன்றோ தோற்றிருப்பது என்கிறார்கள். (வல்லானை கொன்றானை) "ஓரானை காத்தோரானை கொன்று" என்று திருமழிசைப்பிரானும் கஜேந்த்ரரக்ஷணத்துக்கும் மேலாகவன்றோ இச்செயலை அருளிச்செய்தார். (மாற்றாரை மாற்றழிக்க வல்லானை)

"வார்கடாவருவி யானைமாமலையின்
மறுப்பிணைக் குவடிறுத்துருட்டி
ஊர்கொள் திண்பாகன் உயிர்செகுத்தரங்கில்
மல்லரைக்கொன்று சூழ்பரண்மேல்
போர்கடாவரசர் புறக்கிட மாட
மீமிசைக் கஞ்சனைத் தகர்த்த
சீர்கொள் சிற்றாயன் திருச்செங்குன்றூரில்
திருச்சிற்றாறெங்கள் செல்சார்வே" என்று ஆழ்வார்

அருளியபடியே மல்லரைக் கொன்றது, கம்ஸனை அழித்தது முதலான அருஞ்செயல்களைச் செய்ததை நினைக்கிறார்கள். (மாயனை) தன் கையில் எதிரிகள் படுமவற்றைத்தான் நம் கையில் படுகையாலே ஆச்சர்யபூதனானவனை. (வல் ஆனை கொன்றானை) குவலயாபீடத்தைக் கொன்றாப்போலே நம்முடைய ஸ்த்ரீத்வாபிமானத்தைப்போக்கினவனை. (மாற்றாரை மாற்றழிக்க வல்லானை) எதிரிகளை அழித்தாப்போலே, நம்மைத் தன்னோடு சேரவொட்டாத இடையருடைய எண்ணத்தைப் போக்கினவனை. (மாயனை) தோல்வியால் வெற்றி கண்டவனை; நமக்குத் தான் தோற்றுநிற்கையாலே நம்மை எழுதிக்

கொண்டிருப்பவனை. (பாட) நம்முடைய வெற்றியையும், அவன் தோல்வியையும், அத்தாலே ஏற்படும் அவன் வெற்றியையும் நம் தோல்வியையும் மாறி மாறிப் பாட.

''வாயினுல்பாடி'' என்று ஐந்தாம் பாட்டில் அவதாரத்தில் தோற்றுப் பாடினபடியைச் சொல்லிற்று. ''கேசவனைப்பாட'' என்றும், ''பாடிப்பறைகொண்டு'' என்றும், ''கீர்த்திமைபாடிப்போய்'' என்றும் விரோதி நிரஸனத்தில் ஈடுப்பட்டுப் பாடினபடியைச் சொல்லிற்று. ''முகில்வண்ணன் பேர்பாட'' என்று வடிவழகுக்குத் தோற்றுப் பாடினபடி. ''சங்கொடு சக்கரம்.........பங்கயக்கண்ணனைப் பாட'' என்று திவ்யாயுதங்களுக்கும், அவயவசோபைக்கும் தோற்றுப் பாடினபடியைச் சொன்னுர்கள். ''மாயனைப்பாட'' என்று, இப்படிப்பட்ட பெருமைகளையுடைய அவன் தங்களுக்குத் தோற்றிருக்கும்படியைக்கண்டு பாடினபடியைச் சொல்லுகிருர்கள்.

இப்பாட்டின் ஒவ்வொரு வாக்கியமும் பாகவதபாரதந்த்ரியத்தின் பெருமையை விளக்குபவை என்றும் விவரிப்பார்கள். ''எல்லே இளங்கிளியே'' என்றதால் பாகவதர்களைக் காண்பதும், அவர்கள் குரலைக் கேட்பதும் பரமோத்தேச்யங்கள் என்கிறது. ''இன்னம் உறங்குதியோ'' என்றதால் பாகவதர்களுடன் கலவாமலிருக்கை தவறென்கிறது. ''சில்லென்றழையேன்மின்'' என்றதால் வைஷ்ணவர்கள் விஷயத்தில் கடுமையாக வார்த்தைசொல்லலாகாது என்கிறது. ''நங்கைமீர் போதர்கின்றேன்'' என்றதால் அவர்களிடம் கௌரவமாகவே வார்த்தைசொல்லவேண்டும் என்று உணர்த்துகிறது. ''வல்லையுன் கட்டுரைகள்...'' என்றதால் அவனடியார்கள் கடிந்துபேசுவதும் உத்தேச்யம் என்று உணர்த்தப்படுகிறது. ''வல்லீர்கள் நீங்களே நானே தானுயிடுக'' என்றதால் பிறர் குற்றத்தையும் தம்முடையதாக இசைவதே வைஷ்ணவலக்ஷணம் என்று அறிவிக்கப்படுகிறது. ''ஒல்லை நீ போதாய்'' என்றதால் வைஷ்ணவர்களை க்ஷணகாலம் பிரிந்திருப்பதும் அஸஹ்யம் என்கிறது. ''உனக்கென்ன வேறுடையை'' என்கையால் பகவதனுபவமும் பாகவதப்ரீதிக்குறுப்பு என்கிறது. ''எல்லாரும் போந்தாரோ'' என்றதால் ஸ்ரீவைஷ்ணவர்கள் எல்லாரும் உத்தேச்யரென்கிறது. ''போந்து எண்ணிக்கொள்'' என்றதால் ஒருவர் குறைந்தாலும் அநுபவத்துக்குக் குறையென்கிறது. ''வல்லானை......'' என்று தங்களுக்கு உஜ்ஜீவனமான பகவத்விஷயத்தைப் பாடி ஸ்ரீவைஷ்ணவர்களை உகப்பிக்கையே பாகவதக்ருத்யம் எனப்படுகிறது.

## திருப்பாவை—பதினாறாம் பாட்டு.

16. நாயக னாய்நின்ற நந்தகோப(ன்) னுடைய
கோயில் காப்பானே கொடித்தோன்றும் தோரண
வாசல் காப்பானே மணிக்கதவம் தாள்திறவாய்
ஆயர் சிறுமிய ரோமுக் கறை பறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்
வாயால் முன்னமுன்னம் மாற்றாதே யம்மாநீ
நேச நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய்.

**பதவுரை:—நாயகன் ஆய் நின்ற**–*(எங்களுக்கு) ஸ்வாமியாயிருக்கிற*, **நந்தகோபனுடைய**-*நந்தகோபருடைய*, **கோயில்**–*திருமாளிகையை*, **காப்பானே**—*காக்குமவனே!* **கொடி தோன்றும்**–*த்வஜங்கள் விளங்காநிற்கும்*, **தோரண வாசல்**–*தோரண வாசலை*, **காப்பானே**—*காக்குமவனே!*, **மணி**—*ரத்தினங்கள் பதிக்கப்பெற்ற*, **கதவம்**–*கதவினுடைய*, **தாள்**—*தாழ்ப்பாளை*, **திறவாய்**–*திறக்கவேணும்;* **ஆயர் சிறுமியரோமுக்கு**–*இடைச்சிறுமிகளான எங்களுக்கு*, **மாயன்**—*ஆச்சரியச்செயல்களையுடையவனும்*, **மணிவண்ணன்**—*நீலரத்தினம்போன்ற திருநிறத்தையுடையவனுமான கண்ணபிரான்*, **நென்னலே**—*நேற்றே*, **அறை பறை வாய் நேர்ந்தான்**—*சப்திக்கும் பறையைக் கொடுப்பதாக வாக்களித்தான்;* **துயில் எழ**–*(அவன்) தூக்கத்திலிருந்து எழுந்திருக்கும்படி*, **பாடுவான்**—*பாடுவதற்காக*, **தூயோமாய் வந்தோம்**–*பரிசுத்தைகளாக வந்திருக்கின்றோம்*. **அம்மா**—*ஸ்வாமி!* **முன்னம் முன்னம்**–*முதன்முதலில்*, **வாயால்**—*(உம்முடைய) வாயினாலே*, **மாற்றாதே**–*மறுக்காமல்*, **நேசம் நிலை கதவம்**—*(கண்ணனிடம்) பேரன்புபூண்ட நிலைமையையுடைய கதவை*, **நீ**–*நீயே*, **நீக்கு**–*நீக்கவேணும்*.

*அவதாரிகை:*—கீழ், பத்து பாட்டுகளிலும் பத்து பெண்களை எழுப்பினதாகச் சொன்னது ஆய்ப்பாடிச் சிறுமிகள் அனைவரையும் எழுப்பியதைக் காட்டுகிறது. இனி, எல்லாப் பெண்களும் வந்து

வாசல்காக்கும் முதலிகளேயும், நந்தகோபர், யசோதை, பலராமன் நப்பின்னைப்பிராட்டி முதலானுரையும் முன்னிட்டு, கண்ணனை எழுப் பினபடியைச் சொல்லுகிருர்கள் பின்வரும் ஏழு பாட்டுக்களால். அதில், திருக்கோயில் காப்பானையும், திருவாசல் காப்பானையும் முன்னிட்டபடியைச் சொல்லுகிறது இப்பாட்டு. "செய்யாதன செய் யோம்" என்று பாகவதர்களை முன்னிடாமல் பகவத்விஷயத்தைப் பற்றமாட்டோம் என்று ப்ரதிஜ்ஞைபண்ணின இவர்கள் அதை இப்பாட்டுக்களில் அநுஷ்டித்துக் காட்டுகிருர்கள். "வேதம் வல் லார்களைக்கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து" என்ருரன்ரே நம்மாழ்வாரும். பாஞ்சராத்ர சாஸ்திரத்திலும், எம் பெருமானுடைய கோயிலுக்குச் செல்லும்போது திருவாசல் காக்கும் முதலிகளிடம் அனுமதிபெற்றுப் போகவேண்டுமென்று சொல்லப் பட்டிருக்கிறது. அத்தை இவர்கள் அறியார்களாகிலும், வைஷ்ண வர்களுடைய குடியிலே வந்தவர்களாகையாலே, இந்த அனுஷ் டானம் இயற்கையாகவே காணப்படுகிறது.

"யேஷாம் த்ரீண்யபத₃ாநாநி யோநிர் வித்₃யா ச கர்ம ச।
தே ஸேவ்யாஸ் தைஸ் ஸமாயுக்த: ஶாஸ்த்ரிப்₄யோऽபி
விஶிஷ்யதே ॥"

["தச்ச்₂ரேஷ்ட₂ம் ஜந்ம" (அதுவே மேலான பிறப்பு) எனப்படும் பக வத்ஸம்பந்தத்தாலுண்டான ஜன்மம், "ஸா வித்₃யா யா விமுக்தயே" (முக்திக்குக் காரணமாவதே வித்யை) எனப்படும் ப்ரஹ்மஜ்ஞான மாகிற வித்யை, "தத் கர்ம யந்ந ப₃ந்த₄ாய"(எது பந்தத்திற்குக் காரண மல்லவோ, அதுவே கர்மம்) எனப்படும் பகவத்கைங்கர்யரூபமான கர்மம் ஆகிய இம்மூன்று பெருமைகளும் எவர்களிடம் காணப்படு கிறதோ அவர்களே ஸேவிக்கத்தகுந்தவர்கள். அவர்களுடன் கூடி யிருப்பவன் கேவலசாஸ்த்ரஜ்ஞானத்தையுடையவர்களைக் காட்டிலும் உயர்ந்தவனுகிருன்.] என்று சொல்லப்பட்டதன்ரே.

"வித₄ பச்ச வைதி₃காஸ் த்வதீ₃யக₃ம்பீ₄ரமநோநுஸாரிண:"

[வைதிகவிதிகளும் உன்னடியார்களுடைய கம்பீரமான திருவுள் ளத்தைப் பின்செல்லும்.] என்று ஆளவந்தாரும் அருளிச்செய்தா ரன்ரே. "ரஸவாதம் கைப்பட்டவன் இருந்தவிடமெல்லாம் பொன்னு மாப்போலே, ப்ரமேயம் கைப்பட்டவனுக்குச் சொல்லிற்றெல்லாம் வார்த்தையாம்" என்று நஞ்சீயர் நம்பிள்ளைக்கு அருளிய வார்த்தையையும் இவ்விடத்தில் எடுப்பர்கள். இப்படி பாகவதர்

களை முன்னிட்டுப் பற்றுதவர்கள் சூர்ப்பணகை பட்டது படுவார்கள். பிராட்டி அருகிலிருந்தும், 'சீதைக்கு நேராவன்' என்று வந்தாளன்றே அவள். "முமுக்ஷுர்வை சரணமஹம் ப்ரபத்₃யே" [மோக்ஷமடைய விரும்பிய நான் பகவானைச் சரணமடைகிறேன்.] என்ற உபநிஷத்து, மறையாகையாலே, பாகவதர்களை முன்னிட்டுப் பற்ற வேணும் என்ற மஹார்த்தத்தை மறைத்துப் பேசிற்று. இந்த வேதவாக்கியத்தை விவரித்த வால்மீகிமஹர்ஷி "நிவேத₃யத மாம் க்ஷிப்ரம்" [நான் வந்திருப்பதை ஸ்ரீராமனிடம் நீங்கள் தெரிவியுங்கள்.] என்று விபீஷணன் வாயிலாக இவ்வர்த்தத்தை வெளியிட்டருளினுர். அதை இவர்கள் அநுஷ்டித்துக் காட்டுகிருர்கள். "வில்லி புதுவை விட்டுசித்தர் தங்கள் தேவரை வல்ல பரிசு வருவிப்பரேல் அது காண்டுமே" என்னும் பெரியாழ்வார் திருமகளன்றே இவள்.

வியாக்கியானம்:— (நாயகனுய் நின்ற நந்தகோபனுடைய கோயில் காப்பானே) ஸ்ரீநந்தகோபர் திருமாளிகைக்குக் காவலாய், எங்களுக்கு ஸ்வாமியாயிருப்பவனே! "நாயகனுய் நின்ற" என்பது நந்தகோபனுக்கு விசேஷணம் என்றும் கொள்ளலாம். "நாயகன் முழுவேழுலகுக்கும் நாதன்" என்கிறபடியே ஸர்வலோகத்திற்கும் ஸ்வாமியாக எம்பெருமானிருக்க, வாசல் காக்குமவர்களை நாயகன் என்னலாமோ எனில்:

"பாபிஷ்ட₂: க்ஷத்ரப₃ந்து₄ச்ச புண்ட₃ரீகச்ச புண்யக்ருத் |
ஆசார்யவத்தயா முக்தௌ தஸ்மாத₃ாசார்யவாந் ப₄வேத் ||"

[பாபிஷ்டனுன க்ஷத்ரபந்துவும், புண்ணியம் செய்தவனுன புண்டரீகனும், ஆசாரியனை உடைத்தாயிருக்கையால் முக்தியடைந்தனர். ஆகையால் ஆசாரியனை ஆச்ரயிக்கக்கடவன்.] என்றும்,

"யஸ்மாத் தது₃பதே₃ஷ்டாஸௌ தஸ்மாத் கு₃ருதரோ கு₃ரு:"

[அந்த பகவானையே இவனுக்கு உபதேசிப்பவனுகையால், குருவானவன் பகவானைக்காட்டிலும் இவனுக்குப் பெரியவன்.] என்றும் பகவானை நமக்கு அளிப்பவர்களே நம் ஸ்வாமிகள் என்று சாஸ்திரங்கள் சொல்லியிருப்பதனுல் இவர்களை 'நாயகன்' என்னக் குறையில்லை. ஓர் உயர்ந்த ரத்தினத்தைக் கொண்டாடுவதைக்காட்டிலும் அதிகமாக அதைக் கொடுத்தவனைக் கொண்டாடுவது இயற்கையன்றே. இதனுலேயே, பகவானை ஸ்தோத்ரம் பண்ணப்புகுந்த ஆளவந்தாரும், முதன்முதலில் நாதமுனிகள் முதலிய பாகவதோத்தமர்களைத் துதித்து, கடைசியிலும், 'நாதமுனிகளுடைய ஸம்

பந்தத்தையே பார்த்து என்னைக் காத்தருளவேணும்' என்று முடித்தார். "வேறாக ஏத்தியிருப்பாரை வெல்லுமே மற்றவரைச் சாத்தியிருப்பார் தவம்" "தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன்" "அடிகளடியே நினையும் அடியவர்கள் தம் அடியான்" "ஆர் தொழுவார் பாதம் அவை தொழுவதன்றே என் சீர்கெழுதோள் செய்யும் சிறப்பு" "உன்னடியார்க்காட்படுத்தாய்" "அடியார்க்கென்னை ஆட்படுத்த விமலன்" என்று ஆழ்வார்களும் அவனடியாரிடத்திலே ஆழங்காற்பட்டிருப்பார்கள். பட்டர் நஞ்சீயரிடம் "பெருமாளே உமக்குத் தஞ்சமென்றிரும்; பெருமாள் தஞ்சமென்று சொல்லுகையாலே நானும் உமக்குத் தஞ்சம்" என்று அருளிச்செய்ததும் இங்கு அநுஸந்திக்கத்தக்கது.

(நாயகனாய் நின்ற நந்தகோபன்) "உந்தம் அடிகள் முனிவர்" என்னும்படியே ஸர்வலோக நாதனுக்கும் நாயகனாயிருக்கையாலே "நாயகனாய் நின்றநந்தகோபன்" என்கிறார்கள். பகவான் இங்கு வந்து பிறப்பதும் தனக்கோர் நாயகனுண்டாகவேணும் என்னும் ஆசையாலேயன்றோ. "பிதா புத்ரேண பித்ருமாந்" [ஸர்வலோக பிதாவானவன் தன் புத்திரனைப் பிதாவாக அபிமானிக்கிறான்] என்றதன்றோ வேதமும்.

(நந்தகோபனுடைய கோயில்) "தத்$_3$ விஷ்ணோ: பரமம் பத$_3$ம்" என்று மறைகள் முறையிடும் பரமபதமாகிற தன் கோயிலிலிருந்து அரசு செலுத்துவதில் அலுத்துப்போன ஸர்வேச்வரன், நந்தகோபனுடைய கோவிலிலே வந்து பரதந்திரனாய் ப்ரீதியடைகிறபடி. உண்மையை ஆராயப்புகில், "வானவர் நாடு" என்றும், "மரீசீநாம் பத$_3$ம்" என்றும் சொல்லுகிறபடியே அவ்வுலகத்தையும் அவன் தன்னடியாருடைய உலகமாகவன்றோ நினைத்திருப்பது. "வானிளவரசு" என்ற பெரியாழ்வார் "நந்தகோனிளவரசு" என்றருளிச் செய்தார். "யுவராஜமமந்யத' என்கிறபடியே தசரதசக்ரவர்த்தி முடிசூட்டப் பாரித்தான். நந்தனோ இளவரசாகக் காணப்பெற்றான். "வாசுதேவன் மதுரைமன்னன்' என்று பெரியாழ்வார் அருளியபடியே வசுதேவனும், க்ருஷ்ணனுக்கு ஸ்வாமியாயிருந்து அவனை நியமிக்கப்பெறவில்லை. "நந்தன் பெற்றனன், வசுதேவன் பெற்றிலனே" என்று ராஜகுலங்களிலே ப்ரஸித்தமன்றோ. "பரமபதத்திலும் வானிளவரசிறே; அதுவும் வானவர் நாடாய், கடவர்கள் முடியுடை வானவராய், அவர்கள் தான் மூதுவராய், இவன் அவர்கள் மடியிலே கிடப்பது, சிறகிலே ஒதுங்குவது, பிரம்புக்கு அஞ்சி, சொன்னதுக்கெல்லாம் 'அப்படியே அப்படியே' என்னும் இளவரசாயிறே வளருவது" என்று ஆறாயிரப்படி.

(கோயில்காப்பானே) சிறுமிகளாகையாலும், அவன் உகக்கும் பெயராகையாலும், அவன் தொழிலையிட்டுக் கூப்பிடுகிறுர்கள். இத்தால் பகவத் ஸம்பந்தம் பொலியும்படியான பெயரே சேதனனுக்குத் தகுந்தது என்னும் சாஸ்த்ரார்த்தம் உணர்த்தப்படுகிறது.

**''ஏகாந்தீ வ்யபதே₃ஷ்டவ்யோ நைவ க்₃ராமகுலாதி₃பி₄:।**
**விஷ்ணுநா வ்யபதே₃ஷ்டவ்யஸ் தஸ்ய ஸர்வம் ஸஏவஹி ॥''**

[பரமைகாந்தியானவன், கிராமம், குலம் முதலியவைகளையிட்டு நிருபிக்கத்தக்கவனல்லன். விஷ்ணுவையிட்டே சொல்லத்தகுந்தவன். அவனுக்கு எல்லாம் அந்த பகவானேயன்றே.] என்றும், ''யதோ₂சிதம் சேஷ இதீரீதே ஜநை:'' [உசிதமாக சேஷன் என்று ஜனங்களால் சொல்லப்படுமவனை ஆதிசேஷனிடம்] என்றும் சேஷவ்ருத்திக்கு அநுகுணமான பெயரின் பெருமை பேசப்பட்டதன்றே. (கோயில் காப்பானே) ''காக்குமியல்வினன் கண்ணபெருமான்'' என்னும் அவனையும் காப்பவனன்றே நீ. ''போய்ப்பாடுடைய நின் தந்தையும் தாழ்த்தான்பொருதிறல் கஞ்சன் கடியன் காப்பாருமில்லை கடல் வண்ணு உன்னை'' என்று நாங்கள் வயிறெரியாநிற்க, எங்களுடைய வயிற்றெரிச்சலைப் போக்குமவனன்றே நீ–(கோயில் காப்பானே) ''யஏஷு ஸுப்தேஷு ஜாக₃ர்த்தி'' [இச் சேதனர்கள் தூங்குகையில் எவனொருவன் விழித்திருக்கிறுனே] என்கிறபடியே இவன் உறங்குகையில் தான் விழித்திருந்து,இவன் ஸ்வரூபத்தை உணர்ந்தபின்பு ''நிஸ்ருஷ்டாத்மா ஸுஹ்ருத்ஸு ச'' [தன் நண்பர்களிடம் தன்னையே கொடுத்து வைத்திருப்பவன்.] ''த்வயா நிஸ்ருஷ்டாத்மப₄ரேண'' [உன்னுல் வைக்கப்பட்ட உன்னுடைய பாரத்தையுடைய விஷ்வக்ஸேனரால்] என்று சொல்லுகிறபடியே இவனிடம் ஸர்வபாரத்தையும் வைத்துத்தான் மார்பிலே கை வைத்து உறங்குகிறபடி.(கோயில் காப்பானே)''தத்₃ விப்ராஸோ விபந்யவோ ஜாக்₃ருவாம்ஸஸ் ஸமிந்த₄தே'' [அப்பரமபதத்தில், துதிப்பவர்களும், மேதாவிகளும் எப்போதும் விழித்திருப்பவர்களுமான நித்யஸூரிகள் எப்போதும் காவல் புரிந்து கொண்டு விளங்குகிறுர்கள்.] என்றும்,

**கோலார்ந்த நெடுஞ்சார்ங்கம் கூனற்சங்கம்**
**கொலையாழி கொடுந்தண்டு கொற்றவொள்வாள்**
**காலார்ந்த கதிக்கருடனென்னும் வென்றிக்**
**கடும்பறவை இவையனைத்தும் புறஞ்சூழ் காப்ப''** என்றும்

சொல்லுகிறபடியே நித்யஸூரிகள் அனைவரும் புரிகிறகாவலே ஒருவனுயிருந்து செய்யப்பெற்ற நீ என்ன புண்ணியம் செய்தனையோ என்கிருர்கள். (கோயில் காப்பானே) உன்னைக் காவலாகவைத்தது உகவாதார் உள் நுழையாமைக்கும், உகப்பார் உட்புகுந்து அநுபவிக்கச் செய்கைக்குமன்ருே? ஆகையால் எங்களை உள்ளே விடவேணும் என்று யாசிக்கிருர்கள்.

இவர்கள் இப்படி யாசித்தவுடன், அவனும் இவர்களை உள்ளே செல்லும்படி கண்ணுலே ஸம்ஜ்ஞைசெய்ய, திருவாசல் காக்கும் முதலியை எழுப்புகிருர்கள்: (கொடித்தோன்றும் தோரண வாசல் காப்பானே) என்று. ''கோயில் காப்பானே'' என்று க்ஷேத்ரபாலனைச்சொல்லி, ''வாசல் காப்பானே'' என்று த்வாரபாலனைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம்; இரண்டு பதங்களும் ஒருவனையே குறிப்பதாகவும் கொள்ளலாம். ஆராலே இடையூறு ஏற்படுமோ என்று பயந்து எல்லார் காலிலும் விழுகிருர்கள். **''ஸர்வாந் தே₃வாந் நமஸ்யந்தி ராமஸ்யார்த்தே₂''** [ராமனுக்காக எல்லா தேவதைகளையும் நமஸ்கரிக்கிருர்கள்.] என்கிறபடியே தேவதாந்தரங்களின் காலிலும் விழுமவர்கள் பகவானுக்குப் பரியுமவர்கள் காலிலே விழச்சொல்லவேணுமோ? (கொடித் தோன்றும் தோரண வாசல்) ஆய்ப்பாடியிலுள்ள மாளிகைகளெல்லாம் நந்தகோபனுடைய மாளிகையைப்போலேயே சிறந்து விளங்குகையால்நடுநிசியில் வரும் பெண்கள் தடுமாறவொண்ணுது என்று பார்த்து அடையாளம் தெரிவற்காகக் கொடியையும் தோரணத்தையும் நாட்டிவைத்திருக்கிருன் போலும். ராமனைத்தேடிவரும் பரதாழ்வான், ராமாச்ரமத்தைத் தெரிவிக்கும் மரவுரி, புகை முதலியவற்றைக்கண்டு தரித்தாப்போலே, கொடி, தோரணம் முதலானவற்றைக்கண்டுதரித்து நிற்கிருர்கள். தண்ணீர்ப்பந்தல் வைப்பார் தூரத்திலிருந்து வருபவர்களுக்கும் தெரிவதற்காகக் கொடியையும் தோரணத்தையும் கட்டிவைக்குமாபோலே நந்தகோபரும் செய்து வைத்தனர் போலும். ''வாசத்தடம்'' என்றும், ''மரதகமணித்தடம்'' என்றும், **''க்₃ரீஷ்மே சீதமிவ ஹ்ரத₃ம்''** [கோடைகாலத்தில் குளிர்ந்த தண்ணீர் போலுள்ளவன்] என்றும் சொல்லப்படுமவனன்ருே உள்ளே கிடப்பது.

**''கொடியணிநெடுமதிள்''** என்றும், **''வாசலில் வானவர்''** என்றும் பரமபதத்திலும், **''பதாகாபி₄ரலங்க்ருதாம்''** என்றும்,**''தத்ர காஷாயிணோ வ்ருத்₃த₄ாந்''**என்றும் திருவயோத்யையிலும் கொடிகளும் ரக்ஷகர்களும் காணப்படுகிருப்போலே இங்கும் காணப்படுகிறது. (வாசல் காப்

பானே) கொடிகளும் தோரணமும் வாசலும் அறிவற்றவையாகை யாலே அழைக்கமாட்டா. நீ சேதனனாகையாலே எங்களுடைய ஆர்த்தியைக்கண்டு அழைத்து உட்புகவிடவேண்டாவோ என்கிறார்கள். க்ருஷ்ணனுடைய அநுமதி பெற்று ஸுபத்ரையை அர்ஜுனன் கொண்டு செல்ல உதவினாப்போலே எங்களுக்கும் உதவவேணும் என்கிறார்கள். (மணிக்கதவம்) "மாமான்மகளே மணிக்கதவம்" என்று அவளுடைய கதவும் மணியினாலானது. இவனுடையதும் மணியினாலானது. தன்னையே ஒக்க அருள்செய்பவனன்றோ இவன். (மணிக்கதவம்) அவன் தன்னைக் கண்டார் மற்றொன்றினைக் காணா நெஞ்சுடையராம்படி பண்ணும் மணிவண்ணனாயிருக்குமாப்போலே இதுவும், தன்னைக்காண்பார் அவனையும் நினையாதபடி செய்யும் மணிக்கதவமாயிருக்கிறது.

(மணிக்கதவம் தாள் திறவாய்) "ஸ தத₃ந்த: புரத்₃வாரம் ஸமதீத்ய" [அந்த அந்தப்புரவாசலை அவன் (ஒருவாறு) கடந்து.] "பொன்னியலுமாடக்கவாடம் கடந்து புக்கு"என்றாப்போலே கதவின் அழகிலே நெஞ்சும் கண்ணும் பிணிப்புண்ணாமல், திறந்து உள்ளே விடக்கடவாய் என்கிறார்கள்.

"மணிக்கதவம் தாள் திறவாய்" என்று இப்பெண்கள் கூப்பிட்டவுடன், "பயம் நிறைந்த இந்நாட்டிலே நடுநிசியில் வந்து திறக்க அழைக்கும் நீங்கள் யார்" என்று கேட்டான்;"'ப₄யாநாம்அபஹாரி' எனப்படுமவன் கிடக்குமிடத்திலே பயமுண்டோ" என்று கேட்டார்கள்; "த்ரேதாயுகமாகையாலே காலமும் நல்லடிக் காலமாய், தமப்பனார் சம்பராந்தகனுமாய், பிள்ளைகள் தாங்களும் ஆண்புலிகளாய், அவர்கள்தான் வழியே போய் வழியே வருமவர்களுமாய், ஊரும் திருவயோத்யையாய், அஞ்சாதே பாலிலேயுண்டு பனியிலே கிடக்கிறதோ? காலம் கலிக்குத் தோள்தீண்டியான த்வாபராந்தமாய், தமப்பனார் ஸாது ஸ்ரீநந்தகோபராய், இவர்கள் சிறுபிள்ளைகளாய், அதிலும் தீம்பராய், ஊர் இடைச்சேரியாய், அதுதான் கம்ஸன் ராஜ்யம் பண்ணுமிடத்துக்கு அருகிலுள்ளதாய், அவனுக்குக் கப்பங்கட்டுவதாய்,கம்ஸன் சத்துருவாய், எழும் பூண்டுகளெல்லாம் அசுரர்களாயிருக்கும்போது பயம் கெட்டிருக்கமுடியுமோ?" என்றான். "நாங்கள் பெண்களாகையாலே எங்களுக்கு அஞ்சவேண்டா" என்றனர் பெண்கள். "சூர்ப்பணகி பெண்ணல்லவோ" என்றான்; "நாங்கள்ராக்ஷஸிகளல்லவே,இடைப்பெண்களாயிற்றே"என்றனர்; "பூதனையும்இடைப்பெண்ணாகவேயன்றோ வேடம் பூண்டு வந்தாள்.

பூதனைக்குப்பிறகு இடைப்பெண்களுக்கே மிகவும் அஞ்சவேண்டி யிருக்கிறது" என்ருன். (ஆயர்சிறுமியரோம்) என்கிருர்கள். "எங்க ளுடைய பருவத்தைக் கண்டாலே க்ருத்ரிமமறியாதவர்கள் என்னு மிடம் தோற்றவில்லையோ? மேலும் பூதனையைப்போலே தனியாகவோ வந்தது? அஞ்சுலக்ஷம் குடியில் பெண்களெல்லாரும் வந்திருக்கிறோம் காண். இவனுக்கு என்வருகிறதோ என்றுவயிறுபிடிக்கும் ஆயர்க்குப் பிறந்தவர்கள் நாங்கள் என்பது எங்கள் வடிவிலேயே தோற்றுகிற தல்லவோ" என்றனர்.

"சிறுபருவத்தைக்கொண்டு மட்டும் உங்களை நம்பமுடியாது. வத்ஸாஸுரன் இளங்கன்ருயன்ரே கண்ணனை நலிய வந்தான்; ஆகையால் நீங்கள் வந்த காரியத்தைச் சொல்லுங்கள்" என்று அவன் வினவ, (அறை பறை.........) என்கின்றனர். (அறைபறை) சப்திக்கும் பறையொன்றைஎங்கள்நோன்புக்காக வேண்டிவந்தோம் என்கிருர்கள். "அதுவாகில் கண்ணன் பள்ளியுணர்ந்தபிறகு கொள்ளலாகாதோ" என்ன: (நென்னலே வாய் நேர்ந்தான்) நேற்றே இன்று இந்நேரத்தில் வருவதாக வாக்களித்திருக்கிருன் கண்ணன் என்கிருர்கள். (மாயன்) ஸர்வோத்க்ருஷ்டனுயிருந்தும், பெண்களிடம் தாழநின்றுகையைக்காலைப் பிடித்துப் பரிமாறுமவன்; எங்களுக்கு அவனே விதேயனுயிருக்க, அவனுக்கு தாஸபூதனுன நீ எங்கள் காரியம் செய்ய வேண்டாவோ? என்று பாவம். (மணி வண்ணன்)இப்படித் தாழநில்லாமல் கொடுஞ்செயல்களைச் செய் பவனேயானுலும் விடவொண்ணுத வடிவழகையுடையவன். (மணி வண்ணன்) எங்களை இருந்தவிடத்தில் இருக்கவொண்ணுதபடி செய்யும் வடிவழகை அணைபோடாதே வெட்டிவிடாய் என்கிருர் கள். (நென்னலே) தடுப்பாரில்லாமலிருந்த நேற்றும் ஒரு நாளே! நாங்கள் உன் காலைப்பிடிக்க வேண்டியிருக்கிற இன்று போலன் றிக்கே, அவன் எங்கள் காலைப்பிடிக்கவிருந்த நேற்றைக்கு ஒப்பான நாளொன்று உண்டோ? என்கிருர்கள். (வாய்நேர்ந்தான்) வாக் களித்தான். **'அந்ருதம் நோக்தபூர்வம் மே'** [என்னுல் பொய் சொல்லப் பட்டதில்லை] **"ராமோ த்$_3$விர் நாபி$_4$ப$_4$ாஷதே"** [ராமன் இருவிதமாகப் பேசான்] **"ந மே மோக$_4$ம் வசோ ப$_4$வேத்"** [என் வார்த்தை வீணுகாது.] என்னுமவன் வார்த்தையன்ரே என்கிருர்கள். (மாயன் வாய் நேர்ந்தான்) அவன் பேசின பேச்சுத்தான் என்ன ஆச்சர்யமா யிருந்தது! (மணிவண்ணன் வாய்நேர்ந்தான்) பேசும் போதை அழகைத்தான் ஒருவரால் பேசவொண்ணுமோ? **"வாக்$_3$மீ ஸ்ரீமாந்"** [அழகாகப்பேசுமவன்; (அப்படிப்பேசும்போது) அழகாயிருப்பவன்]

என்று வால்மீகிமஹர்ஷியும் "சோதிவாய் திறந்து" என்று ஆழ்வாரும் இவ்வழகிலே ஈடுபட்டார்களன்றோ. (நென்னலே வாய் நேர்ந்தான்) இன்றும் வாய் திறவாத உன்னைப்போலன்றிக்கே நேற்றேயன்றோ அவன் சோதிவாய்திறந்தது.

இப்படி இவர்கள் சொல்லியும், "அவன் வாக்களித்தானாகிலும், அவனை ரக்ஷிக்கக் கடமைப்பட்டுள்ள நான் உங்களுடைய பாவத்தை அறிந்தல்லது விடேன்; நீங்கள் 'அறைபறை' என்று ஒரு ப்ரயோஜனத்தைக் குறித்து வந்திருப்பதாகச் சொல்லுகிறீர்கள்; ஆகையால் உங்களை நம்புவதற்கில்லை" என்றான். (தூயோமாய் வந்தோம்) நாங்கள் அப்படி ஒரு ப்ரயோஜனத்தைக்கொண்டு அகல வந்தோமல்லோம். பறை என்கிற வியாஜத்தையிட்டு அவனுக்கு மங்களாசாஸனம் பண்ணவந்தவர்கள் நாங்கள் என்கிறார்கள். (தூயோமாய் வந்தோம்) பரிசுத்தர்களாய் வந்தோம்; உபாயத்திலும் உபேயத்திலும் பரிசுத்தி உடையவர்களாய் வந்தோம். உபாயத்தில் பரிசுத்தியாவது:—தங்கள் முயற்சியால் அவனை அடைவதாக நினைத்திருக்கையன்றிக்கே அவனையே பற்றி அவனைப் பெறுவதாயிருக்கை. உபேயத்தில் பரிசுத்தியாவது:— அந்யப்ரயோஜனங்களைக் கொண்டு அகலுவதும், பகவதநுபவம் நமக்கு ஆநந்தாவஹம் என்னும் நினைவும் அற்று "உனக்கே நாம் ஆட்செய்வோம்" என்று இருக்கை. இங்கு "தூயோம்" என்று பாவசுத்தியைச் சொல்லுகிறதேயொழிய தேஹசுத்தியைச் சொல்லுகிறதன்று. பரமபுருஷனைப் பெறுவதற்கு பாவசுத்தியே ப்ரதானமேயொழிய, தேஹசுத்தி அவசியமன்று. ராவணக்ருஹத்திலிருந்து ராமனைச்சரணமடைய வந்த விபீஷணன் நடுவிலே ஒரு முழுக்கிட்டு வந்தானென்றில்லை. அர்ஜுனனும் தூர்த்தர் நடுவிலேயே சரமச்லோகம் கேட்டான். த்ரௌபதியும் ரஜஸ்வலையாகவே சரணமடைந்தாள். இல்லாத தேஹசுத்தியை ஸம்பாதிக்கவும் வேண்டா. இருக்கும் சுத்தியைக் குலைத்துக் கொள்ளவும் வேண்டா. (தூயோமாய் வந்தோம்) திருவடி, தன் மிடற்றோசையாலே பிராட்டியை விச்வஸிப்பித்தாப்போலேயும், விபீஷணாழ்வான் தன் ஆர்த்த நாதத்தாலே பெருமாளை வசீகரித்தாப்போலேயும் இவர்களும் தங்கள் ஆர்த்த த்வனியாலே இவனை நம்பச்செய்கிறார்கள். (வந்தோம்) அவன் வரவிருக்கக்கடவ நாங்கள் அவனைத்தேடி வந்ததிலிருந்தே எங்கள் பாவசுத்தியை அறியலாமே என்கிறார்கள். "**ஹ்ரீரேஷா ஹி மமாதுலா உபஸ்தே₂யைருபஸ்தி₂த:**" [நான் சென்றடைய வேண்டியவர்கள் என்னை அடைந்ததினால் எனக்கு ஒப்பற்ற வெட்கம் உண்டாகா நின்றது.] என்று அவ

ணலும் பொறுக்கவொண்ணுத காரியத்தை நாங்கள் செய்திருக்க நீ ஆறியிருப்பதென்? என்கிருர்கள்.

"நீங்கள் அநந்யப்ரயோஜனைகள் என்கைக்கு அடையாளம் சொல்லுங்கள்" என்று இவன் கேட்க, (துயிலெழப்பாடுவான்) என்கிருர்கள். நாங்கள் வந்திருக்கும் காலத்தையும், காரியத்தையும் கண்டாயே; விடியற்காலையிலே அவனுக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடவன்ரே நாங்கள் வந்திருப்பது; ப்ரயோஜநாந்தரபரர்களாகில் பகலில் அவன் சபைகூட்டியிருக்கும் போதன்ரே தங்கள் ப்ரயோஜனத்தைப் பெற்றுப்போக வருவார்கள் என்கிருர்கள்.

"ஸ மயா போ₄தி₃த: ஸ்ரீமாந் ஸுக₂ஸுப்த: பரந்தப:"

[நன்ருகத்தூங்குபவரும், (அத்தாலே) அழகாயிருப்பவரும், எதிரிகளைத் தபிப்பவருமான ராமபிரான் என்னலே எழுப்பப்பட்டார்.] என்று பிராட்டி பள்ளிகொண்டிருக்கும் அழகிலே ஈடுபட்டாள். இவர்கள் பள்ளியுணரும் அழகைக்காண ஆசைப்படுகிருர்கள். (துயிலெழப்பாடுவான்) "உத்திஷ்ட₂ புருஷ ஹரீ லோஹிதபிங்க₃ளாக்ஷி" [செந்தாமரைக்கண்ணனே,ஸர்வ ஸம்ஹார்த்தாவாயுள்ள புருஷனே! எழுந்திராய்.] என்று வேதபுருஷனும், "உத்திஷ்ட₂ நரசார்தூ₃ல" [நரச்ரேஷ்டனே! எழுந்திராய்] என்று விச்வாமித்ரமஹர்ஷியும், "அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே" என்றும்,

"கொடியார் மாடக்கோளூரகத்தும் புளிங்குடியும்
மடியாதின்றே நீ துயில்மேவி மகிழ்ந்ததுதான்
அடியாரல்லல் தவிர்த்த அசைவோ அன்றேல், இப்
படிதான் நீண்டு தாவிய அசைவோ பணியாயே"

என்றும் ஆழ்வாரும் எம்பெருமானைத் திருப்பள்ளியெழுச்சி பாடினப் போலே இவர்களும் திருப்பள்ளியெழுச்சிபாட ஆசைப்படுகிருர்கள்.

இவர்களுடைய பாவசுத்தியை அறிந்திருந்தும், இவர்களுடைய இனிய பேச்சை இன்னம் சற்றுநேரம் கேட்கவேணுமென்று இவர்களை மேலும் தடுக்க நினைத்தான்; பாவஜ்ஞைகளாகையாலே அதை முகக்குறியாலே அறிந்து (வாயால் முன்னம் முன்னம் மாற்றுதே) என்கிருர்கள். "நெஞ்சாலே சில நினைத்தாயாகிலும் வாயாலே நெருப்பைச் சொரிந்தாற்போலே நிஷேதியாதொழியவேணும்; இவர்களுக்கு இவன் வாயதிறே வாணள்; 'வாசா த₄ர்மமவாப்நுஹி' என்று ஒரு வாய்ச்சொல்லாலே தண்ணீர்ப்பந்தல் வைக்கலாயிருக்க

என்றிய இழக்கிருய்'' என்று ஆருயிரப்படி. (மாற்ருதே) உன்னுடைய சேஷபூதரை நீ மிகவும் நலியாதேகொள் என்கிருர்கள். (அம்மா) நீ எங்களுக்கு ஸ்வாமியல்லேயோ? அவனையும் எங்களுக்குக் காட்டித் தருமவனுகையாலே அவனைக்காட்டிலும் எங்களுக்கு மேலாயிருப் பவனன்ருே நீ.

''யஸ்மாத் தது₃பதே₃ஷ்டாऽஸௌ தஸ்மாத்₃ கு₃ருதரோ கு₃ரு:''

[பரமாத்மாவையே உபதேசிப்பவனுகையால் குரு அவனையும்விட மேலானவர்.] (அம்மா) ''த₃ாரா: பித்ருக்ருதா இதி'' [தகப்பனுரால் மணம் செய்விக்கப்பட்ட பத்னி என்னும் காரணத்தாலே (ஸீதை ராமனுக்கு ப்ரியையாயிருந்தாள்)] என்கிறபடியே அவனும் நீ புக விட்டாலன்ருே எங்களை உகந்தருளுவான்.

இப்படி இவர்களுடைய ஆற்ருமையைக் கண்டவுடன் இனி இவர்களைத் தடுத்தால் ப்ராணஹானியாம் என்று பார்த்து, ''நான் உங்களைத் தடுக்கவில்லை; நீங்களே கதவைத் தள்ளிக்கொண்டு புகுருங்கோள்'' என்ருன். (நீ நேய நிலைக்கதவம் நீக்கு) இக்கதவும் உன்னைக்காட்டிலும் பரிவுடையதாயிற்றே. நாங்கள் எல்லாரும்கூடித் தள்ளினுலும் அது திறவாது; நீயே அதைத் திறக்கவேணும் என்று பிரார்த்திக்கிருர்கள். பரிவர்களாகையாலே அசேதனங்களைப் பரி வுள்ளவையாகக் காண்கிருர்கள். கம்ஸனைச் சேர்ந்தவரெல்லாம் ப்ரதிகூலராயிருக்கிறுப்போலே திருவாய்ப்பாடியிலுள்ள சேதநா சேதநங்களெல்லாம் அச்சுதனுக்கு அநுகூலராயிருக்கிறபடி. ''அகாலப₂லினோ வ்ருக்ஷா:'' [மரங்கள் காலமல்லாக் காலத்தில் பழுத் தன.] ''அபி வ்ருக்ஷா: பரிம்லாநா:'' [மரங்களும் வாடின.] என்று இவனுடன் கூடியும் பிரிந்தும் இருக்கும்போது மரங்களும் விகார மடைவதைக் கண்டோமன்ருே. (நேச நிலைக் கதவம்) நிலையும் கதவும் நெருங்கிப் பொருந்தியிருப்பதைக் குறிப்பதாகவும்கொள்ள லாம். (நீக்கு) நீயே கதவைத்திறந்து எங்களை உட்புகவிடவேணும்.

## திருப்பாவை—பதினேழாம் பாட்டு.

17. அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்
எம்பெருமான் நந்தகோ பாலா எழுந்திராய்
கொம்பனுர்க் கெல்லாம் கொழுந்தே குலவிளக்கே
எம்பெரு மாட்டி யசோதா யறிவுருய்

அம்பர மூடறுத் தோங்கி யுலகளந்த
உம்பர்கோமானே உறங்கா தெழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா
உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய்.

**பதவுரை:—அம்பரமே**—*வஸ்திரங்களையும்,* **தண்ணீரே**—*ஜலத்தையும்,* **சோறே** — *சோற்றையுமே,* **அறம் செய்யும்**—*தர்மம் செய்யும்,* **எம்பெருமான் நந்தகோபாலா**—*எம் ஸ்வாமியான நந்தகோபரே!* **எழுந்திராய்** — *எழுந்திருக்கவேணும்;* **கொம்பு அனார்க்கெல்லாம்**—*வஞ்சிக்கொம்புபோன்ற பெண்களுக்கெல்லாம்,* **கொழுந்தே** — *மேலாயிருப்பவளே!* **குலம் விளக்கே**—*ஆயர்குலத்துக்கு மங்களதீபமாயுள்ளவளே!* **எம் பெருமாட்டி**—*எமக்குத் தலைவியாயிருப்பவளே!* **அசோதாய்**—*யசோதைப்பிராட்டியே!* **அறிவுறாய்**—*உணர்ந்தெழுவாயாக;* **அம்பரம் ஊடு அறுத்து** — *ஆகாசவெளியைத் துளைத்துக் கொண்டு,* **ஓங்கி**—*உயர்ந்து,* **உலகு அளந்த**—*ஸகலலோகங்களையும் அளந்தருளிய,* **உம்பர் கோமானே**—*தேவதேவனே!* **உறங்காது**—*கண்வளர்ந்தருளாமல்,* **எழுந்திராய்** — *எழுந்திருக்கவேணும்;* **செம் பொன் கழல் அடி**—*சிவந்த பொன்னால் செய்த வீரக்கழல்களை அணிந்த திருவடிகளையுடைய,* **செல்வா**—*ஸ்ரீமானே!* **பலதேவா** — *பலதேவனே!* **உம்பியும் நீயும்**—*உன் தம்பியாகிய கண்ணனும் நீயும்,* **உறங்கேல்** — *தூங்காதொழியவேணும்.*

*அவதாரிகை:*— "நேச நிலைக்கதவம் நீக்கு' என்றவுடன் திருவாசல் காக்கும் முதலி கதவைத்திறந்து இவர்களை உள்ளேவிட்டான். உள்ளேபோய், நந்தகோபர் முதலானவரை எழுப்புகிறார்கள். நந்தகோபர் முதற்கட்டிலும், யசோதை இரண்டாம்கட்டிலும், கிருஷ்ணன் மூன்றும் கடிட்லும் பலராமன் நான்காம் கட்டிலும் கிடக்கிறார்களாகையாலே அதே வரிசையாக எழுப்புகிறார்கள். ஒருவரையொருவர் எழுப்பிப் பட்டபாட்டையெல்லாம் எல்லாரும் கூடிப்படுகிறார்கள். வேதம் வல்லார்களைக்கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணியவேணுமென்னும் சிறந்த அர்த்தத்தை இங்கும் அநுஷ்டித்துக் காட்டுகிறார்கள். க்ருஷ்ணனுக்கு முன்னால் யசோதையும் நந்த

கோபரும், பின்னுல் பலராமனுமிருந்து அவனை ஆய்ப்பாடிப் பெண்கள் களவுகாணுமல் காவலிடுகிருர்கள். அநிருத்தனையும் களவுசெய்து கொண்டுசென்ற பெண்கள் அவனுக்கும் காரணனுய், "ஸாக்ஷாந்மந்மதமந்மத:" [மன்மதனுக்கும் மன்மதனுயிருப்பவன்.] எனப்பட்ட கண்ணனையும் களவுசெய்து விடுவார்கள் என்னும் பயமே இதற்குக் காரணம். "உள்ளுக்கிடக்கிறது வைத்தமா நிதியுமாய், தாம் எடுத்த பேராளனுமாய், நிதியெடுத்தவருமாலுல் நோக்காதிராரிறே" என்று ஆருயிரப்படி.

**வியாக்கியானம்:**—(அம்பரமே...) முதன் முதலில் யசோதையை எழுப்பவேண்டியது முறையாயிருக்க, நந்தகோபரை எழுப்புவானென்? என்னில்: அவரே முதல் கட்டில் கிடக்கிருராகையாலே முதலில் எழுப்புகிருர்கள். ப்ரஜையை ஒருபுறமும்,பதியை ஒருபுறமும் அணைத்துக்கொண்டு கிடக்க வேண்டியவளாகையாலே யசோதை நந்தகோபருக்கும் கிருஷ்ணனுக்கும் நடுவே கிடப்பது பொருத்தமுடையது. (அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்.........) நாங்கள் ஒன்றும்வழங்காத லுப்தர்(கருமிகள்)வாசலிலேயோ கிடந்து கூப்பிடுவது? ஸர்வர்க்கும் தாரகபோஷக போக்யங்களையெல்லாம் அளிக்கும் உம்முடைய திருமுன்பேயன்ரே விண்ணப்பம் செய்வது. யாசகர்கள் யாசித்துப் பெற்ருலல்லது உயிர்வாழ மாட்டாதாப் போலே எல்லாருக்கும் கொடுத்தாலல்லது தரிக்கமாட்டாத உம்மிடமன்ரே வந்தது. உம்முடைய குறை தீர்க்கைக்கு நாங்கள் வந்து நிற்க நீர் உறங்கலாமோ?தன்னிடம்யாசிப்பவர்களையும் "உதாரா:" என்று கண்ணன் சொல்லக்கற்றதும் உம்மிடம் பயின்றதாலேயன்ரே. (அம்பரமே)'அம்பரம்' என்னும்வடசொல், வஸ்த்ரம் ஆகாசம் என்னும் இருபொருள்களைஉடையது. வஸ்த்ரம் என்னும் பொருளில் முதலடியிலும், ஆகாசம் என்னும் பொருளில் ஐந்தாமடியிலும் இங்கு பிரயோகிக்கப்படுகிறது. அம்பரம் என்று இங்கு வஸ்திரத்தைச் சொன்னது போக்யபதார்த்தங்கள் எல்லாவற்றுக்கும் உபலக்ஷணம். (தண்ணீரே) இது தாரகப்பொருள்கள் யாவற்றுக்கும் உபலக்ஷணம். (சோறே) இதுபோஷகப்பொருள்கள் அனைத்தையும் காட்டுகிறது. (அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்) எல்லாருக்கும் தாரகபோஷகபோக்யபதார்த்தங்களை அளிக்கும் நீ "உண்ணும் சோறுபருகு நீர்தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்" என்றும் "வாஸுதேவஸ்ஸர்வம்" என்றும் எங்களுக்கு தாரக

போஷக போக்யங்கள் எல்லாமாயிருக்கும் கண்ணனை வழங்காயோ என்கிறபடி. அம்பரமே, தண்ணீரே, சோறே என்று ஒவ்வொரு பதத்துடனும்ஏகாரத்தைச்சேர்த்துப்படிப்பது அவன் ஒவ்வொன்றை வழங்கும்போதும் 'இதைவழங்கவேஇவன் கற்றனன் போலும்'என்று கண்டார் நினைக்கும்படி அதிகமாக அளிக்கிறபடியைக் காட்டுகிறது. (அறஞ்செய்யும்) 'வள்ளல்' என்னும் கீர்த்தியைப்பெறுவதற்காகக் கொடுக்கையன்றிக்கே ஸ்வயம் ப்ரயோஜனமாகக் கொடுக்கை;

**"த₃ாதவ்யமிதியத்த₃ாநம் தீ₃யதேऽநுபகாரிணே|**
**தேஶே₃ காலே ச பாத்ரேச தத்₃த₃ாநம் ஸாத்விகம் ஸ்ம்ருதம்||"**

[உபகாரம் செய்யாத ஒருவனுக்கு, 'கொடுப்பது நம் கடமை' என்னும் எண்ணத்துடன், தகுந்த தேசகாலபாத்திரங்களில் யாதொரு தானம்வழங்கப்படுகிறதோஅதுவேஸாத்விகதானம்எனப்படுகிறது] என்று கீதையில் சொல்லப்பட்ட ஸாத்விகதானம் என்றபடி. (அம்பரமே...அறஞ்செய்யும்) "பலகூடி தாரகமானவையோ தரலாவது.? எல்லாம் ஒன்றேயான வஸ்துவைத்தரலாகாதோ?"என்று ஆறுயிரப்படி. (எம்பெருமான்) க்ருஷ்ணனைப் பெற்றுத் தந்ததினால் எங்களுக்கு ஸ்வாமியாயிருப்பவனே! (எம்பெருமான்) மற்றையோர், பெண்களுக்கு தானம் வாங்க அதிகாரமில்லையென்று எங்களுக்கு ஒன்றையும் வழங்கார்கள். எங்களுக்கும் தாரகாதிகள் எல்லாமான கண்ணனைக் கொடுப்பவர் நீரேயாகையால் நீரே எங்கட்கு ஸ்வாமியாகிறீர் என்கிறார்கள். (நந்தகோபாலா) "நந்தகோபன் குமரன்" என்று உம்முடைய ஸம்பந்தத்தையிட்டன்றோ நாங்கள் அவனை ஆசைப்பட்டிருப்பது. பெற்றுத்தந்த நீர் குறையும் தலைக்கட்ட வேண்டாவோ? நாங்கள் "நந்த கோபன் குமரன்" என்று அவனைச் சொல்லுமாப்போலே,அவனும் எங்களை "த₃ாரா: பித்ருக்ருதா:" என்று சொல்லும்படி செய்வீராக. (எழுந்திராய்) உதாரராயிருந்து வைத்து உறங்கலாமோ? எழுந்திருப்பீராக. (அம்பரமே......அறஞ்செய்யும்) கேட்பார்க்கு எல்லாவற்றையும் கொடுப்பவராகப் பிரஸித்தியடைந்த பின்பு நீர் இப்படி உறங்குகை அழகிதாயிருக்கிறது! (எம்பெருமான் எழுந்திராய்) எமக்கு ஸ்வாமியாயிருக்கைக்கு அடையாளம் இதுவோ? உடைமை தன்னைத்தேடி வரவிருப்பதோ உடையவனுக்கு அழகு? (நந்தகோபாலா எழுந்திராய்) உம்முடைய பெயரைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவாவது நீர் எழுந்திருக்க வேண்டாவோ? கோகோபகோபிகளைப் பாலனம் செய்பவன் என்னும் பெயரைச் சுமந்துகொண்டு எழுந்திராதிருக்கையாவதென்?

பெண்கள் இப்படி ஸ்ரீநந்தகோபரை எழுப்பியவுடன் அவரும் உணர்ந்து உள்ளே புக அநுமதித்தமை தோற்றக்கிடந்தார். உள்ளே சென்று இரண்டாம் கட்டிலுள்ள யசோதைப்பிராட்டியை எழுப்புகிறார்கள் அடுத்த இரண்டடிகளில். (கொம்பனார்க்கெல்லாம் கொழுந்தே) வஞ்சிக்கொம்புபோலேயிருக்கும் ஸ்த்ரீகளுக்குத் தலைவியாயிருப்பவளே! கொம்புக்கு ஒருகுறை நேர்ந்தால் கொழுந்து வாடுமாப்போலே ஸ்திரீகளுக்கு ஓர் துன்பம் ஏற்பட்டால் இவள் முகம் வாடும் என்று பாவம். (கொம்பனார்க்கெல்லாம் கொழுந்தே) ஆண்பிள்ளையான நந்தகோபரே உணர்ந்தபின்பு பெண்ணின் வருத்தம் அறியுமவளான நீயுறங்கலாமோ? (கொழுந்தே) "நாரீணாம் உத்தமா வதூ$_4$:" [பெண்பிள்ளைகளுக்குள் மேலானவள்.] என்று சொல்லப்படும் பிராட்டியைப் போன்றவளான நீ குணத்தில் அவளை ஒத்திருக்க வேண்டாவோ? தன்னை நலிகிறவர்களையும் "ப$_4$வேயம் சரணம் ஹி வ:" [உங்களுக்கு நான் சரணமாகிறேன்] என்று அவள் தேற்றியிருக்க, உன்னையல்லது அறியாத எங்களை உபேக்ஷிப்பதே! (குலவிளக்கே) எங்களுக்கும் உன்னுடைய குலத்துக்கும் மங்கள தீபம் போன்றவளே! தன்னையும் பிறவற்றையும் பிரகாசிப்பிக்கும் விளக்கை ஒத்திருந்தும், நீயும் முகங்காட்டாமல், கிருஷ்ணனையும் எங்களுக்குக் காட்டாமல் ஒளித்து வைக்கலாமோ? நீயோ குல விளக்கு; அவனோ ஆயர்குலத்தினில் தோன்றுமணிவிளக்கு; அப்படியிருக்க எங்கள் நெஞ்சிலே இருள் கவிந்திருக்கக்காரணமென்? (கொழுந்தே குலவிளக்கே) இவளுடைய பிள்ளையாகிய அவனும் "அமரர்க்கமுதீந்த ஆயர் கொழுந்தை" என்றும் "ஆயர்பாடிக்கணி விளக்கே" என்றும் சொல்லப்பட்டானன்றோ. (எம்பெருமாட்டி) எங்களுக்குக் கண்ணனைப் பெற்றுக்கொடுத்து ஸ்வாமிநியானவளே! இவர்களுடைய எம்பெருமான் நந்தகோபாலனாகவும், எம்பெருமாட்டி யசோதையாகவுமிருக்கிறபடி. "கண்ணனெம்பெருமான்" "ஈச்வரீம் ஸர்வபூ$_4$தாநாம்" என்கை தவிர்ந்து "எம்பெருமான் நந்த கோபாலா எம்பெருமாட்டி யசோதாய்" என்னும்படியானார்கள். இதுவன்றோ பாரதந்த்ரியத்தின் எல்லை நிலம். (எம்பெருமாட்டி) ஸ்ரீபூமிநீளாதேவிகளும் உன்கை பார்த்திருக்கும்படியன்றோ உன் பெருமையிருப்பது. (அசோதாய்)பெண்பிள்ளையாகையாலே பிரிந்து படும் நோவு அறிவாயே. ஹிதகாமரான நந்தகோபரும் மனமிளகிய பின்பு ப்ரியபரையான நீ கடினசித்தையாயிருக்கலாமோ? "அஞ்ச வுரப்பாளசோதை" என்பதை நினைத்தல்லவோ உன்னிடம் வந்தோம். (யசோதாய்) யசஸ்ஸைத் தருமவள் என்னும் பெயர்

கொண்ட நீ "யசஸைகபாஜநம்" [யசஸ்ஸுக்கு ஒரே இருப்பிடம்] என்னுமவனைத்தரவேண்டாவோ? "நந்தகோபாலா" என்றும், "யசோதாய்' என்றும் இவர்கள் கூப்பிடுவதிலிருந்து, இச்சிறுமிகளின் மௌக்த்யமும் யசோதாநந்தகோபர்களின் ஸௌலப்யமும் வெளியாகிறது. (அறிவுறாய்) நந்தகோபரைப்போலே நீ எழுந்திருக்கவும் வேண்டியதில்லை; நீ உணர்ந்தாலே எங்கள் குறையெல்லாம் தீர்ந்துவிடும்.

இப்படி எழுப்பினவுடன் யசோதையும் உணர்ந்தமை தோற்ற இருக்க, உள்ளே சென்று கண்ணனை எழுப்புகிறார்கள் அடுத்த இரண்டடிகளால். (அம்பரமூடறுத்து......) "கரே நிபதிதே தோயே வாமநோபூதவாமந:" [கையில் நீர் விழுந்தவுடன் வாமனன் உயர வளர்ந்தான்.] என்கிறபடியே ஆகாசவெளிமுழுவதையும் வியாபித்துக்கொண்டு வளர்ந்து எல்லார் தலைகளிலும் தலையை வைத்த தேவதேவனே! (அம்பரமூடறுத்தோங்கி) நிருபாதிக ரக்ஷகனுகையாலே ரக்ஷகத்வமே விளைநீராக வளர்ந்தபடி. (உலகளந்த) உறங்குகிற குழந்தையைத் தழுவிக்கொண்டிருக்கும் தாயைப்போலே இருந்ததே குடியாக எல்லார் தலையிலும் திருவடிகளை வைத்தபடி. (உம்பர்கோமானே) குடியிருப்பைக் கொடுத்து தேவஜாதியை எழுதிக் கொண்டிருப்பவனே! (அம்பரமூடறுத்தோங்கி) எங்களுக்கு உதவும்போது திரிவிக்கிரமனுக ஓங்கவேண்டிய ஆயாஸமும் வேண்டாவே. (உலகளந்த) விமுகர் தலையிலும் காலை வைத்தவன் "அடிச்சியோம் தலைமிசை நீயணியாய் ஆழியங்கண்ணு உன் கோலப்பாதம்" என்று ஆசைப்படுமவர்தலையிலே காலைவைக்கலாகாதோ? (உலகளந்த) உலகம்முழுவதற்குமே உதவினவனுயிற்றே நீ. நாங்கள் உன் விபூதிக்கு வெளிப்பட்டவர்கள் என்று நினைத்திருக்கிருயோ? "இவற்றின் புறத்தாள் என்றெண்ணே?" (உம்பர் கோமானே) அந்யப்ரயோஜநர்களான தேவர்களுக்கேயோ உதவலாவது? அநந்யப்ரயோஜனர்களாய் அபலைகளான எங்களுக்கு உதவலாகாதோ? (உலகளந்த உம்பர்கோமானே) உலகளந்த விருத்தாந்தத்திலிருந்தே நீ ப்ரஹ்மருத்ரேந்த்ராதிகளுக்கும் மேலானவன் என்பது தோற்றுகிறதன்றே. ஒருவன் குடியிருப்பை யாசித்தான்; ஒருவன் திருவடிகளாலே உலகளந்தான்; ஒருவன் அத்திருவடியை விளக்கினுன்; ஒருவன் அந்த நீரைத் தலையாலே தரித்தான். இவர்களில் யார் ஸ்வாமி யார் தாஸபூதர்கள் என்பதைச் சொல்லவும்வேணுமோ?

"ஏக: ப்ராஸீஸரத் பாதம் ஏக: ப்ராசிக்ஷளந்முதா |
அபரோऽப்யதரந் மூர்த்நா கோதிகஸ் தேஷு கண்யதாம் ||"

[ஒருவன் திருவடியை நீட்டினன்; ஒருவன் அத்திருவடியை உகந்து விளக்கினன்; மற்றொருவன் அந்நீரைத் தலையாலே தரித்தான்; இவர்களுள் எவன் மேலானவன் என்பதை அறியலாகாதோ.]

(உறங்காதெழுந்திராய்) ரக்ஷகராயிருப்பார் உறங்கலாமோ? (உலகளந்த உம்பர்கோமானே...........எழுந்திராய்) யாசகனுய்ச் சென்று உதவக்கடவ நீ நாங்கள் யாசித்தபின்பும் உதவாமலிருப்ப தென்? நிபுணரான இந்த்ராதிகளுக்கேயோ கார்யம் செய்யலாவது? அநிபுணரான எங்கள் கார்யம் செய்யலாகாதோ? உறங்குவாரையும் தழுவும் உனக்கு உணர்ந்துவந்தாரைத் தழுவுகை கடினமோ? அறிவற்ற காடுமேடுகளையும் தடவின திருவடிகளால் அறிவுள்ள எங்களைத் தடவலாகாதோ? மண்ணை ஆசைப்பட்டார்க்குத்தான் கார்யம் செய்வாயோ? உன்னை ஆசைப்பட்டார் இழந்துபோக வேண்டியதுதானே?

(உம்பர்கோமானே) நித்யஸூரிகளுக்குத் தன்னைக் கொடுத்துக் கொண்டு பரமபதத்திலிருக்கும் இருப்பைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். "நமக்குத் தலையலங்காரமாய்,தேவிகள் தொட்டாலும் சிவந்து காட்டுவதான திருவடிகளைக்கொண்டு காடுமேடெல்லாம் அளப்பதே!" என்று அவர்களும் இச்செயலுக்குத் தோற்றிருக்கும் படியைச் சொல்லுகிறது. (உம்பர்கோமானே உறங்காதெழுந்திராய்) "சூட்டுநன் மாலைகள் தூயனவேந்தி விண்ணோர்கள் நன்னீராட்டியந்தூபம் தராநிற்கவே அங்கோர் மாயையினல் ஈட்டிய வெண்ணெய் தொடுவுண்ணப் போந்து" என்கிறபடியே நித்யஸூரிகளைத் தவிக்கவிட்டு இங்கே வந்து, எங்களுக்கும் முகங்காட்டாதே உறங்குவதை விட்டு எழுந்திராய். (உறங்கா தெழுந்திராய்) இங்கு வடிவைச் சுருக்கவும், இரக்கவும், பெருக்கவும், அளக்கவும் வேண்டா; எழுந்திருக்கும் போதுள்ள அழகைக்காட்டினல் போதும். (உலகளந்த......எழுந்திராய்)உலகளந்த களைப்பினலேயே இவன் உறங்குகிறான் போலும் என்று நினைத்துத் திருப்பள்ளியெழுச்சி பாடுகிறார்கள். "நடந்த கால்கள் நொந்தவோ?" "இப்படிதான் நீண்டு தாவிய அசைவோ?" "அன்றிவ்வுலகமளந்த அசைவேகொல்?" "தாளாலுலகம் அளந்த அசைவேகொல்?" என்று ஆழ்வார்களும் பூவையொத்த பொன்னடிகளாலே பாரளந்த செயலைக்கண்டு வயிறெரியாநிற்பர்களன்றே. "விஷ்ணுக்ராந்தே வஸுந்த₄ரே","சம்நோ விஷ்ணுருருக்ரம:" "த்ரிர் தே₃வ: ப்ருதி₂வீமிதி ப்ரவிஷ்ணு:" "விசக்ரமே ப்ருதி₂வீமேஷ ஏதாம் க்ஷேத்ராய விஷ்ணு:" "த்ரீணி பத₃ா விசக்ரமே" "இத₃ம் விஷ்ணுர் விசக்ரமே" என்று

வேதமும் இந்நீர்மையிலே ஈடுபட்டுப் பலகால் வாய்வெருவா நிற்கும். இவர்களும் "ஓங்கி உலகளந்த உத்தமன்" என்று முதலிலும், "உலகளந்த உம்பர்கோமானே" என்று நடுவிலும், "அன்றிவ்வுலகமளந்தாய்" என்று கடைசியிலும் இச்செயலிலே ஈடுபடுகிறூர்கள். (எழுந்திராய்) "அநித்₃ரஸ் ஸததம் ராம:" [எப்போதும் தூக்கமற்றவனுயிருந்தான் ராமன்.] என்றும், "எல்லி பகலென்னுது எப்போதும் காத்தானை" [எல்லி–இரவு] என்றும், கேட்டிருந்ததெல்லாம் அழகிதாயிருந்தது!

"கோ₃விந்தே₃தி யத₃ாக்ரந்த₃த் க்ருஷ்ணு மாம் தூ₃ரவாஸிநம்।
ருணம் ப்ரவ்ருத்₃த₄மிவ மே ஹ்ருத₃யாந் நாऽபஸர்ப்பதி ||"

['கோவிந்தா' என்று வெகு தூரத்திலிருந்த என்னை த்ரௌபதி கூப்பிட்டதானது, விருத்தியடைந்த கடனைப்போல் என் மனத்தை விட்டு அகலுகிறதில்லை.] என்று சொன்னதெல்லாம் காற்றோடு போயிற்றே. (ஓங்கி உலகளந்த உம்பர்கோமானே எழுந்திராய்) உபயவிபூதியுடன் கூடியிருப்பவன் என்னும் கர்வத்தை ப்ரணயினிகளான எங்களிடமோ காட்டுவது?

இப்படி இவர்கள் சொல்லியும், "அண்ணனை பலராமனை எழுப்பாமல் நம்மை எழுப்பினது முறையல்ல" என்று நினைத்துப் பேசாமே கிடந்தான். "ஆக்₂யாதி ஹ்ருத₃யம் ஹ்ருத₃ா" [நெஞ்சு நெஞ்சுடன் பேசுகிறது.] என்றும் "ப்ரேக்ஷிதஜ்ஞாஸ்து கோஸலா:" [கோஸல தேசத்தவர்கள் பார்வையிலிருந்தே ப₄ாவத்தை அறிவார்கள்] என்றும் சொன்னுப்போலே இவனுடைய பாவத்தை அறிபவர்களாகையாலே பலராமனை எழுப்புகிறூர்கள், கடைசி இரண்டடிகளால். (செம்பொற் கழலடிச் செல்வா) 'கிருஷ்ணன் பிறந்தது, அவனுக்கு முன்னே பிறந்த உன் கால் நலத்தாலேயன்றோ' என்று அவன் திருவடிகளைக் கொண்டாடுகிறூர்கள். (செல்வா) "லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந:" என்று இளையபெருமாள் பின்பிறந்து படைத்த கைங்கர்யச் செல்வத்தை நீ முன் பிறந்து படைத்தவனன்றோ? அவரைப்போலே கைங்கர்யஸ்ரீயைப் பெற்றவனுல், அவரைப் போலே உறங்காதிருக்கவும் வேண்டாவோ? பெருமாளும் பிராட்டியும் கண்வளரும்போது அருகில் வில்லும் கையுமாய் நின்று நோக்குமத்தனையிறே அவர் செய்வது.

"ஸந்தே₃ஶைஸ் ஸாமமது₄ரை: ப்ரேமகர்ப்பை₄ரக₃ர்விதை:।
ராமேணுச்வாஸிதா கோ₃ப்யோ ஹரிணு ஹ்ருதசேதஸ:||"

]கண்ணனிடம் நெஞ்சைப் பறிகொடுத்த கோபிகள் இனிதாயிருப் பவையாய், அன்பு நிரம்பியவையாய், கர்வமற்றவையான பல ராமனுடைய பேச்சுக்களால் ஆச்வாஸப்படுத்தப்பட்டார்கள்.]என்று எங்களைக் கண்ணனிடம் சேரவிடும் ஏற்றமும் உண்டே உனக்கு. (பலதேவா) "ப₃லைகத₄ாமநி" [பலத்திற்கு ஒரே இருப்பிடம்] எனப் படும் ஆதிசேஷனே இவன் என்பதை உணர்த்தும் திருநாமத்தைச் சொல்லுகிறார்கள். படுக்கையிலே சாய்ந்தவன் உறங்குவதொழிய, படுக்கைக்கு உறக்கமென்பதுண்டோ? (உம்பியும் நீயும் உறங்கேல்) உனக்கு பவ்யனான அவனும், அவனுக்குப் பின்போகும் நீயும் உறங்காதொழியவேணும். அவன் பிறப்பால் பாரதந்த்ர்யம் கொண் டாடி உன்னை முன்னே எழுப்பச் சொல்லுகிறான். நீ ஸ்வரூபத்தால் பாரதந்த்ர்யம் கொண்டாடி அவனை எழுப்பச் சொல்லாதே, நீயும் உணர்ந்து அவனையும் உணர்த்துவாயாக. (உம்பியும் நீயும்) உன் னுடைய ஸ்பர்சத்தால் உறங்குகிற அவனும், அவனுடைய ஸ்பர்சத் தால் தூங்குகிற நீயும். "ந ச தேந விநா நித்₃ராம் லப₄தே புருஷோத்தம:" [இளையபெருமாளை விட்டுப் பெருமாள் தூங்கமாட்டார்.] எனப்பட்ட தன்றோ. படுக்கையில்லாமலும் தூக்கமுண்டோ? புல்கும் அணையா யிருப்பவனன்றோ இவன். (உம்பியும் நீயும்) "அகலகில்லேன்" என்னும் பிராட்டியைப் பிரிந்து நெடுநாளிருந்த பெருமாள், லக்ஷ் மணன் சென்ற பிறகு அயோத்தியில் வாழ ஸஹியாமல் "லக்ஷ் மணேந க₃தாம்க₃திம்" என்கிறபடியே இளையபெருமாளுடைய அடிச் சுவட்டைத் தொடர்ந்து போய்த் திருநாட்டுக்கு எழுந்தருளினா ரன்றோ. (உம்பியும் நீயும் உறங்கேல்) காற்றுள்ளபோதே தூற்றிக் கொள். உங்களைத் தேடி நாங்கள் வந்திருக்கும் இச்சமயத்தைக் கை விட்டால், பிறகு நாங்கள் பட்டதெல்லாம் எங்கள் வாசலிலே நீங்கள் படநேரும். (செம்பொற்கழலடி......) நாங்கள் உன் திருவடி யிலே விழும் இத்தருணத்தை விட்டால், நீ எங்கள் காலிலே தனித் தனியே விழவேண்டிவரும் என்பதை நினைத்துப்பார்.

"இழவில் 'நடலைகளெல்லாம் நாகணைக்கே சென்றுரைத்தி' என்பார்கள்; ஊடினபோது, 'தீமுகத்துநாகணை' என்பார்கள்; உகந்தபோது 'நாகணைமிசை நம்பிரான்'என்பார்கள். ஸ்ரீகுஹப் பெருமாள், மஹாராஜர், திருவடி, விபீஷணாழ்வான் ஆகிய எல் லார்க்கும் இளையபெருமாளிறே புருஷகாரம்" என்னும் ஆறாயிரப்படி அருளிச்செயல் இங்கு அநுஸந்திக்கத் தக்கது.

## திருப்பாவை—பதினெட்டாம் பாட்டு.

18. உந்து மதகளிற்ற னோடாத தோள்வலியன்
நந்தகோ பாலன் மருமகளே நப்பின்னாய்
கந்தங் கமழும் குழலீ கடைதிறவாய்
வந்தெங்குங் கோழி யழைத்தனகாண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார் விரலியுன் மைத்துனன் பேர்பாடச்
செந்தா மரைக்கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

**பதவுரை:—மதம் உந்து களிற்றன்**—*மதஜலத்தைப் பெருக விடுகின்ற யானை போலே பலமுள்ளவராய்,* **ஓடாத தோள் வலியன்**—*(யுத்த பூமியில்) பின் வாங்கவேண்டாத தோள் வலியை உடையவரான,* **நந்த கோபாலன்** — *ஸ்ரீநந்தகோப ருடைய,* **மருமகளே** — *மருமகளே!* **நப்பின்னாய்**—*நப் பின்னை என்னும் பெயரை உடையவளே!* **கந்தம் கமழும் குழலீ**—*பரிமளம் வீசும்படியான கூந்தலை உடையவளே!* **கடை திறவாய்**—*வாயிலைத் திறப்பாயாக;* **கோழி**—*கோழிகள்,* **எங்கும் வந்து**—*நாற்புறங்களிலும் பரவி,* **அழைத்தன காண்**—*கூவினகாண்! (மேலும்),* **மாதவி பந்தல் மேல்**—*குருக்கத்திக் கொடிகளாலான பந்தல்மேல் (உறங்கும்)* **குயில் இனங்கள்**—*குயில் கூட்டங்கள்,* **பல் கால்**—*பலதடவைகள்,* **கூவினகாண்**—*கூவாநின்றனகாண்;* **பந்து ஆர் விரலி** — *(கண்ணனை விளை யாட்டில் தோற்பிக்கைக்கு உபகரணமாயிருந்த) பந்து விளங்கும் விரல்களையுடையவளே!* **உன் மைத்துனன் பேர் பாட**—*உன் நாதனாகிய கண்ணபிரானுடைய நாமங்களை (நாங் கள்) பாடும்படியாக,* **சீர் ஆர் வளை ஒலிப்ப**—*சீர்மைபொருந்திய (உன்) கைவளைகள் ஒலிக்கும்படி,* **வந்து**—*நடந்துவந்து,* **செம் தாமரை கையால்**—*சிவந்த தாமரைபோன்ற உன் திருக் கையால்,* **மகிழ்ந்து திறவாய்**—*மகிழ்ச்சியுடன் கதவைத் திறப்பாயாக.*

அவதாரிகை:—கீழ்ப்பாட்டில் நந்தகோபர் முதலானுரை எழுப்பி நம்பி மூத்தபிரானை முன்னிட்டு க்ருஷ்ணனை எழுப்பியும் அவன் எழுந்திராதிருப்பதைக்கண்டு, ப்ரதானமான புருஷகாரபூதையான நப்பின்னைப்பிராட்டியை முன்னிடாமையாலே பேசாமலிருக்கிருன் என்று அறிந்து, இப்பாட்டில் நப்பின்னைப்பிராட்டியை எழுப்புகிருர்கள். பெரியபிராட்டியாரே ப்ரதான புருஷகாரபூதையானுலும், க்ருஷ்ணுவதாரத்தில் நப்பின்னைக்கே ப்ராதான்யமுண்டாகையாலே, அவளே புருஷகாரபூதையாயிருப்பள். எம்பெருமானைப் பெறுகைக்குப் பிராட்டி புருஷகாரமாயிருக்கிருப்போலே இவளுக்கு ஒரு புருஷகாரம் வேண்டியதில்லை. இவளுடைய நிர்ஹேதுக நிரவதிக க்ருபையே அமையும். "நமோஸ்து ராமாய ஸலக்ஷ்மணய தேவ்யை ச தஸ்யை ஜநகாத்மஜாயை" [லக்ஷ்மணனுடன் கூடிய ராமனுக்கு நமஸ்காரம்; ஜநகபுத்திரியான அந்த தேவிக்கும் நமஸ்காரம்] என்று திருவடி ராமனைப்பற்றி, லக்ஷ்மணனைப்பற்றி, அதற்குப்பின் பிராட்டியைப் பற்றினுப்போலே இவர்களும், "உம்பர்கோமானே உறங்காதெழுந்திராய்" என்று எம்பெருமானையும், "செல்வா பலதேவா" என்று பலராமனையும், இப்பாட்டில் நப்பின்னைப் பிராட்டியையும் பற்றுகிருர்கள். "ஜநகாத்மஜாயை" என்று ஹனுமான் சொன்னது "ஜநகராஜனுக்கு நீயே உன்னைக் காட்டினுப்போலே அடியேனுக்கும் நீயே வந்து உன்னைக் காட்டியருளவேணும்" என்னும் கருத்தைக் காட்டுகிறது. பிராட்டியைப் புருஷகாரமாகப் பற்றினுலேயே பலம் ஸித்திக்குமென்பதும், இல்லாவிடில் பலஸித்தி உண்டாகாது என்பதும் ஸ்ரீராமாயணுதி சாஸ்திரங்களில் பலவிடங்களில் காட்டப்பட்டிருக்கிறது. "காட்டிற்குக் கூடவர வேண்டா" என்று தடுக்கப்பெற்ற இளையபெருமாள் "ஸீதாமுவாசாதியசா ராகவஞ்ச மஹாவ்ரதம்" [மிகுந்த கீர்த்தியையுடைய லக்ஷ்மணன், ஸீதையையும், மஹாவ்ரதரான ராகவரையும் குறித்துப் பின் வரும் வார்த்தையைச் சொன்னுன்.] என்று பிராட்டியை முன்னிட்டுப் பற்றினவுடன் தம் இஷ்டத்தை அடைந்தார். அபராதத்தின் எல்லையிலே நின்ற காகாஸுரன் இவள் ஸந்நிதியிலே சரணமடைந்து உயிரைப் பெற்ருன். பிராட்டி விழவிட்ட திருவாபரணங்களை முன்னிட்டுக்கொண்டு வருகையாலேயே ஸுக்ரீவனும் ராமனுக்கு நண்பனுகித் தன் விருப்பத்தை அடைந்தான். பிராட்டி ராவணனுக்கு உபதேசித்த நல்வார்த்தைகளை மரத்திலிருந்து கேட்ட ஹனுமான், "ஸீதாமாச்ரித்ய தேஜஸ்வீ" என்று தேஜஸ்ஸை அடைந்து

"தூ₃தோ ராமஸ்ய" என்ற வாயாலே "த₃ாஸோஹம் கோஸலேந்த்₃ரஸ்ய" என்றான். பிராட்டியை அழியச்செய்து ராமனை அனுபவிக்க ஆசைப்பட்ட சூர்ப்பணகி மூக்கையும், காதையும் இழந்தாள். பிராட்டியை முறைகெடப்பற்றின ராவணன் தலையறுப்புண்டான், பிராட்டி ஸந்நிதியில்லாமையாலே தாடகை, ஸுபாஹு மாரீசர்கள், வாலி முதலானோர் உயிரை இழந்தனர். இப்படிப் பிராட்டியின் ஸம்பந்தம் இஷ்டஸித்திக்கு அவச்யாபேக்ஷிதம் என்பதை நம்மாழ்வார், "கடிவார் தீயவினைகள்...... வடிவார் மாதவனாரே" முதலான பலவிடங்களில் அருளிச்செய்தார். பேயாழ்வாரும் "திருக்கண்டேன்" என்று தொடங்கி, "சார்வு நமக்கென்றும்......தேனமரும் பூமேல் திரு" என்று முடித்தார். எம்பெருமானாரும் இவைகளைப் பின்பற்றி கத்யத்திலே முதலில் பிராட்டியை முன்னிட்டார். இப்படி சிஷ்டாசாரம் இருக்கையாலே இவர்களும்நப்பின்னைப் பிராட்டியைப் புருஷகாரமாகப் பற்றுகிறார்கள்.

"பே₄ாக்₃யா வாமபி" என்ற ஸ்ரீகுணரத்நகோச சுலோகத்திலே பட்டர் அருளிச்செய்த கணக்கிலே நீளாதேவியின் அவதாரபூதையான நப்பின்னைப் பிராட்டி, பெரியபிராட்டியாருக்கு மாலை, சந்தனம் முதலியவற்றைப்போலே பகவதநுபவத்துக்கு உபகரணமாயிருக்குமவளாகையாலும், பெரிய பிராட்டியாருக்குத் தன்னைத் திருவடியாக நினைத்திருக்குமவளாகையாலும் இவளைப் பற்றுகிறார்கள். காலைப் பற்றிக் காரியம் கொள்ளுவதே சிறந்ததன்றோ.

"கூந்தல் மலர்மங்கைக்கும் மண்மடந்தைக்கும்
குலவாயர் கொழுந்துக்கும் கேள்வன்தன்னை" என்றும்

"குழல் கோவலர் மடப்பாவையும் மண்மகளும் திருவும்
நிழல் போல்வனர்"

என்றும் நம்மாழ்வாரும், "ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பதந்யௌ அஹோராத்ரே பார்ச்வே" என்று வேதபுருஷனும் உணர்த்தியபடியே, பரமபதத்தில்பிராட்டிமார் மூவரையும் முன்னிடவேண்டியிருக்கும். "அமரர் தொழப் பணங்கொள் பாம்பில் சந்தணிமென் முலைமலராள் தரணி மங்கை தாமிருவர் அடிவருடும் தன்மையானை" என்று திருமங்கையாழ்வார் அருளியபடியே க்ஷீராப்தி முதலான வ்யூஹாவஸ்தைகளில் ஸ்ரீபூமிதேவிகள் இருவரையும் புருஷகாரமாகப்பற்றவேணும். ஏகதாரவ்ரதனாய்ப் பிறந்த ராமாவதாரத்தில் பெரியபிராட்டியின் அவதாரமான சீதாபிராட்டியையே முன்னிடவேணும். வராஹாவதாரத்தில் பூமிப்

பிராட்டி ஒருத்தியே புருஷகாரபூதையாயிருப்பவள். க்ருஷ்ணனும் அவதரித்து ஆய்ப்பாடியில் வளரும்போது இவளே ப்ரதான மஹிஷியாயிருக்கையாலே இவளை முன்னிடுகிறார்கள். முதலில் போக வேளையென்று கலங்கி, க்ருஷ்ணனை அநுபவிக்க இழிந்தார்கள்; இப்போது ஆச்ரயணவேளையென்று தெளிந்து நப்பின்னைப் பிராட்டியைப் பற்றுகிறார்கள்.

வியாக்கியானம்:—''நந்தகோபன் குமரன்'' என்றால் கண்ணன் உகக்குமாப்போலே, இவளும் நந்தகோபனுடன் ஸம்பந்தத்தை யிட்டுச் சொன்னாலேயே உகக்குமவளாகையாலே முதலில் அவருடைய பெருமையைச் சொல்லி அவருக்கும் இவளுக்குமுள்ள ஸம்பந்தத்தைக் கூறுகிறார்கள் முதலிரண்டடிகளாலே. (உந்து மதகளிற்றன்) மதங்கொண்ட யானைகளை உந்துமவர்,-தள்ளுமவர் என்றபடி. பல யானைகளின் பலத்தைத் தாம் ஒருவரே பெற்றிருக்கையாலே மத்தகஜங்களை விளையாட்டாகத் தள்ளுமவர். கண்ணன் ஆனைகொன்றதும் ஸர்வசக்தித்வத்தாலன்று; இவர் மகனாயிருக்கையாலே என்கை. (உந்து மதகளிற்றன்) மதஜலத்தை வெளிவிடும் யானைகளை உடையவன் என்றும் பொருள்கொள்ளலாம். பசுமேய்க்கும் ஆயராகிய இவர்க்கு யானைகளுண்டோ எனில்; வஸுதேவருக்கு இவர் ப்ராணஸ்நேஹிதராகையாலே அவரிடமுள்ள யானைகள் இவரிட்ட வழக்காயிருக்கும். ''தத்த புத்ரனுக்கு இரண்டிடத்திலும் கூறுண்டாகக்கடவதன்றோ'' என்று ஆய் அருளிச்செய்வர். ''வாரணமாயிரம் சூழ'' என்றன்றோ ஆண்டாளும் அருளிச்செய்தாள்.(உந்து மதகளிற்றன்) மதமுந்து களிறு போலே இருப்பவன் என்றும் பொருள் கொள்ளலாம். (உந்து மதகளிற்றன்) நாங்கள் வந்து எழுப்பும்படி இவன் செருக்கித் திரிவது இவர் வயிற்றில் பிறப்பாலேயன்றோ என்கிறார்கள். (உந்துமதகளிற்றன்)

''தொடர் சங்கிலிகை சலார் பிலாரென்னத் தூங்குபொன் மணியொலிப்பப்
படுமும்மதப்புனல்சோர வாரணம் பையநின் றூர்வதுபோல்''

என்றும், ''மத்தமாதங்ககாமிநம்'' [மதங்கொண்ட யானையைப்போல் நடப்பவன்] என்றும், ''கைம்மாவின் நடையன்ன மென்னடையும்'' என்றும் சொல்லப்படும் கண்ணனாகிற மத்தகஜத்தை நியமிப்பவன் என்று உணர்த்துவதாகவும் கொள்ளலாம்.

''தென்னனாய்! வடவானாய்! குடபாலானாய்!
குணபாலமதயானாய்!'' என்று திருமங்கையாழ்வாரும்,

"ஸ்ரீரங்க₃கம்ர: கலப₄ம்" என்று பட்டரும் ஸர்வேச்வரனை யானையாகவே பேசினார்களன்றோ. (ஓடாத தோள்வலியன்) "யுத்₃தே₄ சாப்ய பலாயநம்" என்று கீதாசார்யன் அருளிய க்ஷத்ரியலக்ஷணத்தை உடையவன். இவனுடைய தோள்வலிக்கு பயந்தன்றோ கம்ஸனும் தான் நேர் வரமாட்டாதே பூதநாதிகளை அனுப்பி வஞ்சனையால் கொல்லநினைத்தது. (தோள்வலியன்) "ந பி₃பே₄தி குதச்சந" "அத₂ ஸோப₄யங்க₃தோ ப₄வதி" என்று சேதனன் ஸர்வேச்வரனை நினைத்துப் பாபபயம் கெட்டு வாழ்கிறாப்போலே, இப்பெண்களும் இவனுடைய தோள்வலியை நினைத்துக் கண்ணனுக்குத் தீங்கு நேரிடுமோ என்னும் பயமற்று வாழ்கிறபடி.

(தோள்வலியன்) "நாஹாரயதி ஸந்த்ராஸம் பா₃ஹூ ராமஸ்ய ஸம்ச்ரிதா" [ராமனுடைய தோள்களைப் பற்றியிருக்கும் பிராட்டி (துஷ்டமிருகங்களைக் கண்டு) அஞ்சவில்லை.] என்றும், "பா₃ஹுச் சா₂யாமவஷ்டப்₃தோ₄ யஸ்ய லோகோ மஹாத்மந:" [எந்த மஹாபுருஷனுடைய தோள் நிழலின் கீழே உலகெல்லாம் ஒதுங்கியிருக்கின்றதோ......] என்றும் புகழப்பட்டவனுக்கும் தந்தையன்றோ இவன். (தோள்வலியன்) "பின்னை நெடும்பணைத் தோள் மகிழ் பீடுடை முன்னையமரர் முழுமுதலானே" என்கிறபடியே கண்ணன் நப்பின்னையின் தோள்களிலே ஈடுபடாநிற்பன்; "பின்னைதன் காதலன்றன் பெருந்தோள் நலம் பேணினளால்" "தோள்கண்டார் தோளே கண்டார்" என்கிறபடியே மற்றுமுள்ள பெண்கள் அவனுடைய தோளைக்கண்டு காமுற்றுநிற்பர். பகவானுக்குப் பல்லாண்டு பாடும் பெரியாழ்வார் பெற்ற பெண்பிள்ளையாகையாலே இவள் அம்மிதுனத்திற்குத் தீங்கு வாராமல் காக்கும் நந்தகோபனுடைய தோள்வலிக்குப் பல்லாண்டு பாடுகிறாள். (ஓடாத தோள்வலியன்) கண்ணன் தோளிலணிந்த சந்தனமும் அழியாமல், மாலையும் வாடாமல் மல்லரைத் தகர்த்தெறிந்தது இவர் வயிற்றில் பிறப்பாலேயன்றோ. (ஓடாத) நாட்டில் நடையாடாத தோள்வலியை உடையவர் என்றும் பொருள்கொள்ளலாம்.

(நந்தகோபாலன்) 'உந்துமதகளிற்றன் ஓடாததோள்வலியன்' என்றுமேன்மையைச்சொன்னார்கள்; 'நந்தகோபாலன்' என்றுபெண்களும்பெயர்சொல்லி எழுப்பலாம்படியான நீர்மை சொல்லுகிறார்கள். (கோபாலன்) அவன் தாழ்ந்தாரை ரக்ஷிப்பதையே நிரூபகமாகக் கொண்டிருக்க, நீ எங்களுக்கு முகங்காட்டா தொழியலாமோ? (நந்தகோபாலன் மருமகளே) இவளுடைய தகப்பனாரான கும்பரைக்காட்டி

லும் நந்தகோபரிடத்திலேயே இவளுக்கு அபிமானம் அதிகமாயிருப்பதால் அவருடைய ஸம்பந்தத்தையிட்டுச் சொல்லுகிறார்கள். "கும்பர் மகளே" என்று கூப்பிட்டால் இவள் ஏனென்றும் கேட்க மாட்டாள்போலும்! "ஸ்நுஷா த₃சரத₂ஸ்யாஹம்" [நான் தசரதருடைய மருமகள்.] என்று சீதாபிராட்டியும் அவருடைய ஸம்பந்தத்தையிட்டே தன்னைச் சொல்லிக்கொண்டாளன்றோ. "த₃ாரா: பித்ரு க்ருதா இதி" என்று அவருகந்திருப்பதும் தகப்பனாரால் மணம்செய்விக்கப் பட்டவள் என்னும் காரணத்தாலேயன்றோ. பெரியபிராட்டியார் எம்பெருமானுடைய மார்பை அடைந்தபிறகு தான் பிறந்தவிடமான தாமரையை நெஞ்சாலும் நினையாள். சீதாபிராட்டியும், ராமக்ருஹத்திற்கு வந்தபிறகு ஜநகராஜனுடைய அரண்மனையை மிதித்தாள் என்னும் வார்த்தை ஏழுகாண்டத்திலுமில்லை. அம்மாதிரியே இவளும் கண்ணனை அடைந்தபிறகு கும்பரை மனத்தாலும் நினையாமலிருக்கையாலே நந்தகோபரையிட்டுச் சொல்லுகிறார்கள்.

"நந்தகோபாலன் மருமகளே" என்று இவர்கள் கூப்பிட்டவுடன் "திருவாய்ப்பாடியில் கண்ணன் பிறந்தபின்பு நந்தகோபாலனுக்கு மருமக்களல்லாத யுவதிகள் உண்டோ? ஆகையால் இது நம்மையே குறிக்கிறதென்று கொள்ளமுடியாது" என்று இவள் பேசாமே கிடக்க, (நப்பின்னாய்) என்கிறார்கள். (நப்பின்னாய்) தங்களுடைய ஆர்த்தியை இவள் அறிகைக்கும், அறிந்து தங்கள் துன்பத்தைப் போக்கடிக்கைக்கும் இவளுடைய பெயரைச் சொல்லிக் கூப்பிடுகிறார்கள். "ஹே க்ருஷ்ண ஹே யாத₃வ" என்று அர்ஜுனன் க்ருஷ்ணனைக் கூப்பிடுமாபோலே இவர்களும் தங்கள் விருப்பம் பெருமையால் வந்த ரோஷத்தாலே "நப்பின்னாய்" என்று பேரைச் சொல்லிக் கூப்பிடுகிறார்கள்.

"இவர்கள் சிறிதுநேரம் கத்திவிட்டுப் பிறகு நாம் இல்லை என்று நினைத்துக்கொண்டு போய்விடட்டும்" என்று பேசாமே கிடந்தாள். இவள் நினைவை அநுமானத்தாலே அறிந்து, (கந்தம் கமழும் குழலீ) என்கிறார்கள். "நீ வாய்திறவாயாகிலும் உன் குழலின் வாஸனை உன்னைக் காட்டிக்கொடுத்துவிட்டது" என்கிறார்கள். (கந்தம் கமழும்) "ஆப₄ரணஸ்யாப₄ரணம்" என்றாப்போலே கந்தங்களுக்கும் பரிமளத்தையூட்டும் உன் திருக்குழலின் வாசனையை நாங்கள் அறியோமோ? "ஸர்வக₃ந்த₄:" எனப்படும் அவனுக்கும் வாசஞ்செய்பூங் குழலாளன்றோ நீ. (கந்தம் கமழும் குழலீ) கந்தங்கள் பரிமளிப்பது உன் கேசங்களில் வந்தபின்பன்றோ. "வாசப்பூங்குழல் பின்னை தோள்கள் மணந்ததும்" என்றாரன்றோ நம்மாழ்வாரும்.

''நாங்கள் 'மலரிட்டு நாம் முடியோம்' என்று மலரை வெறுத் திருக்க நீ மட்டும் மலர் மணம் வீசும்படியிருப்பதே' என்று ஏசுவ தாக நினைத்துப்பேசாமே கிடந்தாள். (கடைதிறவாய்) என்கிறார்கள். நாங்களும் எங்களுக்குப் பூவாகிய கண்ணன் திருவடிகளை அணியும் படி வாசலைத்திறவாய். (கந்தம்கமழும்குழலீகடைதிறவாய்) உள்ளே வெள்ளமிடும் திருக்குழல் கந்தப்ரவாஹத்தை அணைபோடாதே, நாங்களும் அதிலே குடைந்தாடும்படி வெட்டிவிடாய். நல்லவஸ்து வானால் நாலுபேர் அநுபவிக்கவேண்டாவோ? நீயும் அவனும் அநு பவித்தால் போதுமோ? (கடைதிறவாய்) இது தனியனுபவிக்கும் விஷயமல்லவே. நீ அநுபவிக்கும்போது, மாலை, சந்தனம் முதலான உபகரணங்களைப்போலேயிருந்து உதவும் நாங்களும் கூடியிருக்க வேண்டாவோ? ''உன்றன் திருவுள்ளம் இடர் கெடுந்தோறும் நாங்கள் வியக்க இன்புறுதும்'' என்று இங்கும் ''அடியார்கள் குழாங் களை—உடன் கூடுவதென்றுகொலோ'' என்று அங்கும் பலர் கூடி அநுபவித்தாலல்லது தரிக்கவொண்ணாத விஷயமாயிற்றே இது.

''நடுநிசியில் வந்து எழுப்பினால் நாங்கள் கதவு திறக்க முடியுமோ? போது விடிந்தாலன்றோ திறக்கலாவது'' என்று நப் பின்னை அருளிச்செய்ய, ''கோழியழைத்ததே; அது விடிவுக்கு அடை யாளமன்றோ'' என்று உணர்த்துமவர்கள் உரைக்க, ''ஒரு கோழி கூவினதால் விடிந்ததாகிவிடுமோ'' என்ன, ''கூட்டமாகக் கோழி அழைத்தன'' என்றுசொல்ல, ''ஒன்றினுடைய குரலைக்கேட்டுச் சில கோழிகள் கூவியிருக்கும்; அது அடையாளமாகாது'' என்ன, ''எங் கும் கோழி அழைத்தனகாண்'' என்ன, ''எங்குமுள்ள சாமக்கோழி கள் கூவியிருக்கும்; சிறிதுநேரத்தில் உறங்கிப்போகும்'' என்ன, (வந்து எங்கும் கோழி அழைத்தனகாண்) என்கிறார்கள். உன் வாசலைப் பற்றிநிற்கும் எங்களைப்போலேயன்றோ இங்கே வந்து எங்குமுள்ள கோழிகளெல்லாம்அழைக்கின்றனஎன்கிறார்கள்.(கோழி அழைத்தனகாண்) ''கோழிகூவென்னுமால், தோழீ நானென் செய் கேன்? ஆழிவண்ணர் வரும் பொழுதாயிற்று கோழி கூவென்னு மால்'' என்று க்ருஷ்ணனுடைய பிரிவைப் பொறுக்கமுடியாத எங்க ளுக்கு அவன் பிரிவை உணர்த்தும் கோழி கூவுவது கேட்கிறது. நீ அவனை எப்போதும் பிரியாதவளாகையாலே உனக்குக் கேட்கவில்லை போலும். (கோழி அழைத்தன காண்) கோழியழைப்பதன் முன்னம் குடைந்து நீராடப்போகும் எங்களைப்போலல்லாவிடிலும், கோழி யழைத்த பிறகாவது எழுந்திருக்கவேண்டாவோ?

''எங்கும் சாமக்கோழிகள் கூவிக்கூவி அடங்குகிற கணக்கிலே இவையும் அடங்கிவிடும்; வேறு அடையாளமுண்டாகில் சொல்லுங்கள்'' என்ருள். (மாதவிப் பந்தல் மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்) ''குயில் கூவினதும் அடையாளமன்ருே'' என்ன, ''ஒரு குயில் கூவினது அடையாளமாகுமோ?'' என்ன, ''குயில் கூட்டங்கள் கூவினகாண்'' என்ன, ''குயிலினங்கள் ஒருதடவை கூப்பிட்டதுகொண்டு விடிந்ததாக நிச்சயிக்கவொண்ணுது'' என்ன, ''பல்கால் குயிலினங்கள் கூவினகாண்'' என்ன, ''இராப்போதிலும் உறக்கமில்லாமையாலே கூவியிருக்கக்கூடும்; ஆகவே இதுவும் அடையாளமன்று'' என்ன, (மாதவிப் பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்) என்கிருர்கள். ''குருக்கத்திப் பந்தலின் மேலே படுத்திருக்கும்போது குயில்களுக்கு உறக்கமில்லாமலிருக்க முடியுமோ? தங்களுக்கு மிகப்பிரியமான மாதவிப்பந்தல் மேலுறங்கும் குயில்களும் உணர்ந்தனவென்ருல் போது நன்ருக விடிந்ததென்பது தெரியவில்லையோ?'' என்கின்றனர். ''நோபஜநம் ஸ்மரந் இதம் சரீரம்'' என்று முக்தர் ஸம்ஸாரத்தை நினைக்கவும்மாட்டாமல் ப்ரஹ்மானுபவபரர்களாயிருக்குமாப்போலே, இவையும் படுக்கை வாய்ப்பாலே இரவுமுழுவதும் வேறென்றை நினையாமல் உறங்குகிறபடி. (பல்கால்) உன் பேச்சும் நோக்குமே தாரகமாக வளரும் இவை உன்னைக் காணுமே வாய்வெருவுகின்றன; எங்களுக்காக வன்ருகிலும் இவைகளை ஜீவிக்கச் செய்வதற்காகவாவது வரவேண்டாவோ? (குயிலினங்கள்) ''குயில்பைதல்காள்! கண்ணன் நாமமே குழறிக்கொன்றீர்'' என்கிறபடியே பிரிந்துபடும் எங்களுக்கு இவைகளின் கூச்சல் அஸஹ்யமாயிருக்க, நீ இதுவே தாலாட்டாக உறங்குகிருயோ? (இனங்கள் கூவின) மேலே ஒரு திரள் கூவுகிறது; கீழே ஒரு திரள் கூப்பிடுகிறது; இவைகளுக்கு நடுவே நீ உறங்கிக் கிடப்பது எப்படி?

''பைங்கிளி வண்ணன் சிரீதரன்
என்பதோர் பாசத்தகப்பட்டிருந்தேன்
பொங்கொளி வண்டிரைக்கும் பொழில்
வாழ்குயிலே குறிக்கொண்டிது நீ கேள்
சங்கொடு சக்கரத்தான் வரக்கூவுதல்
பொன்வளைகொண்டு தருதல்
இங்குள்ள காவினில் வாழக்கருதில்
இரண்டத்தொன்றேல் திண்ணம் வேண்டும்'' என்றும்,

"என்றுமிக்காவிலிருந்திருந்தென்னைத்
ததர்த்தாதே நீயும் குயிலே
இன்று நாராயணனை வரக் கூவாயேல்
இங்குத்தை நின்றும் துரப்பன்" என்றும்,

அவைகளை பயமுறுத்தி நீங்கள் கூவச்செய்திருக்கக்கூடும்; ஆகை யால் இது விடிவுக்கு அடையாளமன்று என்று கூறிப் பேசாதே கிடந்தாள். (பந்தார் விரலி) நாங்கள் சொன்னதுக்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டு கிடப்பது நீ குறைவற்றவளாயிருக்கை யாலேயன்றோ என்கிறார்கள். கண்ணனை ஒருகையாலும் பந்தை ஒரு கையாலும் அணைத்துக்கொண்டு கிடக்கும் செருக்காலேயன்றோ நீ வாய் திறவாமலிருக்கிறாய். "விபூதி ஒரு கையிலே; விபூதிமான் ஒரு கையிலே. நாரம் ஒரு கையிலே; நாராயணன் ஒரு கையிலே. சேஷி ஒரு கையிலே; சேஷம் ஒரு கையிலே. போக்யம் ஒரு கையிலே; போக ஸ்தானம் ஒரு கையிலே; போகோபகரணம் ஒரு கையிலே; லீலோப கரணம் ஒரு கையிலே" என்று அருளிச்செய்வர்கள். "அஸ்யேசாநா ஜகதோ விஷ்ணு பத்நீ" என்கிறபடியே, பிராட்டியானவள் சேதனரை யும், ஈச்வரனையும் சேரவிடுமவளாகையாலே இரண்டு பேரையும் இரண்டு கைகளாலும் பிடித்திருக்கிறாள் என்று ஸ்வாபதேசார்த்தம். "ச்ரயதே இதி ஸ்ரீ:" "ஸ்ரீயதே இதி ஸ்ரீ:" என்று ஸ்ரீசப்தத்திற்குண் டான இரண்டு வ்யுத்பத்திகளும் இவ்வர்த்தத்தையே காட்டுகின்றன வன்றோ. (பந்தார் விரலி) அப்பந்துதான் என்னபாக்யம் செய்ததோ உன் கையிலிருக்க? நாங்களும் அப்பந்தாய்ப் பிறவி யெடுக்காமல் போனோமே. (பந்தார் விரலி) க்ருஷ்ணனும் இவளும் பந்தடிக்கையிலே அவன் தோல்வியுற, அவ்வெற்றிதோற்ற அவனை ஒரு கையாலும் பந்தை ஒரு கையாலும் அணைத்துக்கொண்டிருக்கிறா ளென்று விளங்குகிறது.

"நீங்கள் வந்த காரியம் என்ன" என்று நப்பின்னை இவர்களைக் கேட்க, (உன் மைத்துனன் பேர்பாட) நீயும் அவனும் உறவு கொண்டாடி ஒருவர்க்கொருவர் ப்ரணயகலஹரீதியில் வார்த்தை சொல்லும்போது, உன் பக்ஷத்திலே நாங்கள் நின்று அவன் தோல் விக்கு வசைபாடவே நாங்கள் வந்தது என்கிறார்கள். பிரிந்தால் குழந்தைகள் தாய்பக்ஷத்திலேயே நிற்பதைக் காணநின்றோமன்றோ. (உன் மைத்துனன்) "ஸ்ரீமந்நாராயண" "செல்வநாரணன்" "திரு நாரணன்" என்றாப்போலே சொல்லுகிறார்கள். (பேர் பாட) அவன் பெருமைக்கு ஓராயிரநாமமிருக்கிறாப்போலே, உன்னிடம் அவன்

தோற்றதோல்விக்கு ஒரு ஸஹஸ்ரநாமம் பாடுகிறோம். "நீங்களே திறந்து புகுருங்கோள்" என்று பிராட்டி சொல்ல, "எங்களாலே பெறவிருக்குமவர்களோ நாங்கள்? உன்னாலே பெறவிருப்பவர்களன்றோ; நீயேதிற" என்கிறார்கள். (செந்தாமரைக்கையால்) "மாசுச:" என்னும் ஈச்வரன் கைபார்த்திருப்பவர்களோ நாங்கள்; "ப₄வேயம் சரணம்ஹிவ:" என்னும் உன்கைபார்த்திருப்பவர்களன்றோ நாங்கள். பரம புருஷனுடைய அபயஹஸ்தம் பாபத்துக்கு அஞ்ச வேண்டாவென்னும்; பிராட்டியின்கை ஈச்வரஸ்வாதந்திரியத்திற்கும் அஞ்சவேண்டா என்னும். "கைமேல் என்கைவைத்து" என்னும் மேலான கையையன்றோ நாங்கள் தஞ்சமாகக்கொண்டிருக்கிறோம். (செந்தாமரைக்கை) பந்து பிடித்ததால் சிவந்திருக்கும் கை.

இப்படிச் சொன்னதும், வளையோசை செவிப்படக்கூடாது என்று வளையை ஒதுக்கிக்கொண்டு வரலுற்றாள்; (சீரார் வளையொலிப்ப) என்றார்கள். வளையொலியைக் கேட்கவேணுமென்னும் ஆசையாலே வளையை வர்ணிக்கிறார்கள். வளைக்குச் சீர்மையாவது:—நாயகனை விட்டுப் பிரிவில்லாமையாலே கழலாதிருக்கை. "சங்குதங்கு முன்கை நங்கை" "ஒண்தொடியாள் திருமகள்" எனப்பட்டதன்றோ. "இருகையில் சங்கிவை நில்லா" "கழல்வளையே ஆக்கினரே" என்னும் எங்கள்வளையையும் சீர்மையுடையதாகச்செய்வாயாக என்று பாவம். கண்ணனைக்கட்டிக்கொண்டு கிடந்தபடியே திறக்கலுற்றாள்; (வந்து திறவாய்) எங்களுக்காக நாலடி நடந்து வந்தாய் என்னும் ஏற்றத்தை எங்களுககுத் தாராய். அவனும் நாங்களும் உன் நடையழகைக் கண்டுகளிக்கும்படி வந்து திறப்பாயாக.

(மகிழ்ந்து) துக்கப்பட்டவர்களுக்கு உதவினோம் என்னும் எண்ணத்துடனல்லாமல், உன்காரியம் செய்வதாக நினைத்துச் செய்வாயாக.

"அபி₄ஷிச்ய ச லங்காயாம் ராக்ஷஸேந்த்₃ரம் விபீ₄ஷணம் |
க்ருதக்ருத்யஸ் தத₃ா ராமோ விஜ்வர: ப்ரமுமோத₃ ஹ ||"

[ராக்ஷஸராஜாவான விபீஷணனை லங்கையில் அபிஷேகம் செய்வித்து, தன் காரியத்தைச் செய்தவனைப்போல் கலக்கம் நீங்கப்பெற்று ராமபிரான் மகிழ்ந்தான்.] என்னும் அவனைப்போலேயாகிலும் ஆக வேண்டாவோ? (மகிழ்ந்து) "மார்கழி நீராட மகிழ்ந்து"என்று நாங்கள் நோன்பு நோற்பதும் உன் மகிழ்ச்சி காணவேயன்றோ. 'யதே₂ாபாஸநம் ப₂லமாகவேண்டாவோ" என்று ஆறாயிரப்படி.

(வந்து திறவாய்) கண்களுக்கு இரையிடவேணும்; (வளை யொலிப்ப) செவியும் பட்டினி தீரவேணும்; (பேர் பாட) நாக்கும் பட்டினி விடவேணும்; (செந்தாமரைக்கையால்) ஸ்பர்சநேந்திரிய மும் வயிறு நிறையவேணும்; (கந்தம் கமழும் குழலீ) க்ராணேந் திரியத்திற்கும் உணவிடவேண்டும். (மகிழ்ந்து) இப்படி எல்லா இந்திரியங்களும் • விடாய் தீர்வதைப் பார்ந்து உன்மனம் குளிர் வதைக்கண்டு எங்கள் உள்ளமும் உகக்கவேண்டும்.

இப்பாட்டை எம்பெருமானுர் உகந்திருப்பர் என்று வ்யாக் யாதாக்கள் அனைவரும் அருளிச்செய்வர்கள். இந்த ஐதிஹ்யம் ராமாநுஜார்ய திவ்யசரிதை முதலான கிரந்தங்களில் விவரிக்கப் பட்டுள்ளது.

''உடையவரும் அதைக்கேட்டு, அதிப்ரீதராய், ஆநந்தாச்ரு வோடே 'பயின்றதரங்கம் திருக்கோட்டி' என்கிறபடியே பெரிய த்வரையுடனே புறப்பட்டுத் திருக்கோட்டியூரேற எழுந்தருளி நம்பி திருமாளிகை வாசலிலே திருப்பாவையனுஸந்தானத்துடனே தண் டன் ஸமர்ப்பித்து 'சீரார் வளையொலிப்ப வந்து திறவாய் மகிழ்ந்து' என்றவநந்தரத்திலே நம்பி குமாரத்தியான தேவகிப்பிராட்டியார் திருக்காப்பை நீக்க, விஸ்மிதராய், அவரை விழுந்து ஸேவித்து, தேவகீ புத்ரரத்நத்தைப் பெறுகைக்கு அந்த தேவகிப்பிராட்டி புருஷ காரமாக ஸந்நிதியில்சென்று நம்பியை ஸேவித்து'' என்று இவ்விருத் தாந்தம் ராமாநுஜார்ய திவ்யசரிதையில் சொல்லப்பட்டது.

''மாதுகரத்துக் கெழுந்தருளி வரும்போதன்றிப் போம்போதும்
ஓதும்கோதை திருப்பாவை உரையோடுலாவித் திரிபவரும்
வேதம் வல்ல திருக்கோட்டி நம்பிமனையில் மெய்ஞ்ஞானப்
போதமுடையார் ஆங்கொருநாள் புக்கார் உந்துமதகளிற்றில்''

[மாதுகரம்-உஞ்சவ்ருத்தி; மெய்ஞானப்போதம்-மெய்ஞான அறிவு.]

பந்தார் விரலியுன் மைத்துனன் பேர்பாடச்
செந்தா மரைக்கையால் சீரார் வளையொலிப்ப
வந்தா ரணங்கே திறவென்ன வாசலின்முன்
எந்தாதை நின்றுர் அவ்வெல்லையினில் நம்பிதரும்

அன்ன மென் னடையாள் தேவகி யென்னும்
அரும்பெயருடைய ஆரணங்கு
தன்னொரு கரத்தால் கந்துகமொன்று
தாங்கியோர் தாமரைக் கையால்
இன்னிசை எதிகட் கிறைவனுர் திறவென்
றிசைத்தசொல் இறுமுனம் திறந்தாள்
மின்னுமா மணிசேர்ந் திலங்கிய கபாடம்
விண்டுவின் தொண்டர் மெல்லியலே.

கண்டனர் பின்னைப் பிராட்டி மற்றிவளும்
கள்வனேன் பொருட்டினலலர்ந்த
புண்டரீகச்சீர்த் திருவடி வருந்தப்
போந்திவை திறந்தனளென்னப்
பண்தரும் பனுவல் மறந்தனர் மண்ணில்
பதைப்பறவொடுங்கினர் விழுந்தார்
ஒண்டொடி கண்டு வெகுளியோ டேகி
உற்றதைப் பெற்றவர்க் குரைப்பாள்.

என்றிவை மகளார் இயம்பிட நம்பி
இன்பமுற் றிருந்(து) இளை யாழ்வீர்!
ஒன்று சீர் உந்து மதகளிறென்ன
ஓதிய பாடலோ சந்தை
இன்று நம் வாசல் தலையுறு மளவில்
என்றனர் ஆம்என எழுந்து
சென்றுமா மாது கரம்பரி மாறத்
தேசிகக் குன்றையும் வணங்கி''

என்று xவடிவழகிய நம்பிதாஸராலும் இந்த விருத்தாந்தம் மிக அழகாக வர்ணிக்கப்பட்டது. பன்னீராயிரப்படி குருபரம்பரா ப்ரபாவத்திலும் இப்படியே காணப்படுகிறது. இப்படிப்பல கிரந்தங்களில் விவரிக்கப்பட்டிருக்க, அரும்பதவுரைகாரரொருவர் இவ்விருத்தாந்தம் பெரியநம்பிகள் திருமாளிகையில் அத்துழாய் கதவைத் திறக்கும்போது நடந்தது என்று எழுதியிருப்பது ஆதரிக்கத் தக்கதல்ல வென்றே தோன்றுகிறது.

---

x வடிவழகியநம்பிதாஸர் என்பவர் நடாதூரம்மாளின் சிஷ்யர் என்பது அவருடைய நூலிலிருந்தே தெரிகிறது. வார்த்தாமாலையில் 206ம் வார்த்தையிலும் இப்படியே காணப்படுகிறது.

## திருப்பாவை—பத்தொன்பதாம் பாட்டு.

◇◇◇◇◇◇

19. குத்து விளக்கெரியக் கோட்டுக்காற் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா வாய்திறவாய்
மைத்தடங் கண்ணினாய் நீயுன் மணாளனை
எத்தனை போதுந் துயிலெழ வொட்டாய்காண்
எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால்
தத்துவ மன்று தகவேலோ ரெம்பாவாய்.

பதவுரை:—**குத்து விளக்கு**—*நிலைவிளக்கானது*, **எரிய**—*எரியா நிற்க*, **கோடு கால் கட்டில் மேல்**—*யானைத்தந்தங்களால் செய்த கால்களையுடைய கட்டிலிலே*, **மெத்தென்ற**—*மெத்தென்றிருக்கும்*, **பஞ்ச சயனத்தின் மேல் ஏறி**—*பஞ்சினாலான படுக்கையின் மீது ஏறி*, **கொத்து அலர் பூ குழல்**—*கொத்துக் கொத்தாக மலரும் பூக்களை அணிந்த குழலையுடைய*, **நப்பின்னை**—*நப்பின்னைப் பிராட்டியுடைய*, **கொங்கைமேல்**—*திருமுலைத்தடங்களின்மேலே*, **வைத்து கிடந்த மலர் மார்பா**—*(தன்னுடைய) அகன்ற மார்பை வைத்துக் கிடப்பவனே!* **வாய் திறவாய்**—*வாய் திறந்து வார்த்தை சொல்லுவாயாக;* **மைதடம் கண்ணினாய்**—*மையிட்டலங்கரித்த பரந்த கண்களை உடையவளே!* **நீ**—*நீ*, **உன் மணாளனை**—*உனக்குக் கணவனான கண்ணனை*, **எத்தனை போதும்**—*ஒரு கணநேரமும்*, **துயில் எழ**—*திருப்பளியெழ*, **ஒட்டாய்காண்**—*சம்மதிக்கிறாயல்லை;* **எத்தனையேலும்**—*சிறிதுபோதும்*, **பிரிவு ஆற்றகில்லாய் ஆல்**—*(அவனை விட்டுப்) பிரிந்திருப்பதைப் பொறுக்கிறாயல்லை அன்றோ;* **தத்துவம் அன்று**—*(இது) உன் ஸ்வரூபத்துக்கும் தகுந்ததன்று;* **தகவு அன்று**—*உன் ஸ்வபாவத்துக்கும் தகுந்ததன்று*.

**அவதாரிகை:**—*"செந்தாமரைக்கையால் சீரார் வளையொலிப்ப வந்து திறவாய்" என்று இவர்கள் கூப்பிட்டவுடன், நப்பின்னைப் பிராட்டி, வந்து திறக்க எழுந்திருந்தாள்; நம்மைப்பற்றினவர்களைத்*

தன்னடியாராகக்கொண்டு இவள் திறக்கப் புகுந்தாள்; இவளைப் பற்றினதாலே நமக்கு மிகவும் பிரியராயன்றோ அவர்களிருப்பது; இனி, கதவு திறக்கும் ஏற்றத்தை இவளுக்குத் தரக்கூடாது; நாமே பெறவேணும் என்று பார்த்து, திறக்கவொண்ணாதபடி இவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருந்தான் கண்ணன்; அதைக்கண்ட இவர்கள் "நப்பின்னை கொங்கைமேல் வைத்துக் கிடந்த மலர் மார்பா வாய் திறவாய்" என்று அவனை எழுப்பினார்கள்; "நம்மைச் சேர்ந்தவர்களுக்கு இவர் முற்படவொண்ணாது" என்ற எண்ணங் கொண்ட பிராட்டி, அவனைச்சிறிதும் அசையமுடியாதபடி கட்டிப் பிடித்துக் கொண்டிருப்பதைக் கண்டு, "மைத்தடங்கண்ணினாய்" என்று தொடங்கி மறுபடியும் அவளையே எழுப்புகிறார்கள். இத்தால், "ந கச்சிந் நாபராத்₄யதி" [குற்றம் செய்யாதவன் ஒருவனுமில்லையே.] என்றும்.

**"பிதேவ த்வத்ப்ரேயாந் ஜநநி பரிபூர்ணாகஸி ஜநே**
**ஹிதஸ்ரோதோவ்ருத்யா ப₄வதி ச கதா₃சித் கலுஷதீ₄:।**
**கிமேதந் நிர்தோ₃ஷ: க இஹ ஜகதீ₃தி த்வமுசிதை:**
**உபாயைர் விஸ்மார்ய ஸ்வஜநயஸி மாதா தத₃ஸி ந:॥**

[தாயே! பாபம் நிறைந்த ஜந்துவுக்கு நன்மை செய்யவேண்டும் என்னும் கருத்தினால் உன் நாதன், சிலசமயம் தகப்பனாரைப்போல் கோபங்கொள்ளுகிறார். "இது என்ன? இவ்வுலகில் தோஷமற்றவன் எவனிருக்கிறான்?" என்று இது முதலான உசிதமான நல்வார்த்தைகளைச் .சொல்லுவது முதலான உபாயங்களால் பாபத்தை மறக்கடித்து எங்களை எம்பெருமானிடம் சேர்ப்பிக்கிறீர். அதனாலேயே எங்களுக்கு மாதாவாகிறீர்.] என்றும் சொல்லுகிறபடியேயிருக்கும் அவளுடைய தன்மையும்,

**"தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாளாகிலும்**
**சிதகுரைக்குமேல்**
**என்னடியார் அது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார"**

என்று சொல்லும் அவனுடைய ஸ்வபாவமும் உணர்த்தப்படுகின்றன. அதாவது:— சேதனரை ரக்ஷிக்கும் விஷயத்தில் எம்பெருமானும் பிராட்டியும் ஒருவருக்கொருவர் போட்டி போடுவர் என்றபடி.

**"வாள் கெண்டையொண்கண் மடப்பின்னை தன்கேள்வன்**
**தாள்கண்டு கொண்டென் தலைமேல் புனைந்தேனே"** என்று

நம்மாழ்வார் பெற்றதை ஆசைப்படுகிறார்கள்.

*வியாக்கியானம்:*—(குத்துவிளக்கெரிய) நாங்களோ "எம்மனைமார் காணிலொட்டார்" என்று ஊராருக்கு பயப்படுகையாலே, "கீழ் வானம் வெள்ளென்று" என்று ஒளிக்கு பயப்பட்டு "நள்ளிருட்கண் என்னை உய்த்திடுமின்" என்று இருள் தேடியலைகிறோம். நீயோ வெனில், எல்லாரும் அறியும்படியாக, பகலையும் இரவாக்கிக் கொண்டு, விளக்கொளியிலே கண்ணன் முகத்தைப் பார்த்துக் கொண்டு கிடக்கிறாய். எங்கள் வீட்டிலும் விளக்கேற்றி வைத்தாலன்றோ உன் அநுபவம் பூர்ணமாவது என்கிறார்கள். வெளியேயுள்ள எங்கள் மனம் அவிந்துகிடக்க, உள்ளே நிலை விளக்கு எரிவதே! (குத்துவிளக்கெரிய)

"அதீவ ராம: ஶுஶுபே$_4$ऽதிகாமயா
விபு$_4$: ஶ்ரியா விஷ்ணுரிவாऽமரேஶ்வர:"

[ஸர்வவ்யாபியாய், தேவதேவனாயிருக்கும் விஷ்ணு ஸ்ரீதேவியினால் சோபிப்பதுபோல், மிகவும் பிரியமுள்ளவளான அந்த ஸீதாதேவியினால் ராமபிரான் மிகவும் சோபித்தார்.] என்றும், "திகழ்கின்றதிரு மார்வில் திருமங்கைதன்னோடும் திகழ்கின்ற திருமாலார்" என்றும் சொல்லுகிறபடியே இவள் அவனையும் பிரகாசிப்பிக்கும் விளக்காயிருக்க ஓர் நிலைவிளக்கு உண்டாவதே! (கோட்டுக்கால் கட்டில் மேல்) இருளை அபேக்ஷியாமல் குத்து விளக்கை எரித்துக்கொண்டு கிடப்பதுக்கு மேலே, இதுஒரு ஐச்வர்யமிருந்தபடியென்! எங்களைப் போலே பிருந்தாவனத்தையும், மணற்குன்றையும் தேடிப்போக வேண்டாதே, உள்ளே கூச்சமற்றுப்படுத்துக்கிடப்பதே! (கோட்டுக் கால்கட்டில்மேல்) குவலயாபீடத்தின் கொம்பைப் பறித்துக்கொண்டு வந்து அதைக் காலாக வைத்துக் கண்ணன் பண்ணிக்கொடுத்த கட்டிலின் மேல்; வீரபத்னியாகையாலே இவளுக்கு இதிலல்லது கண்ணுறங்காது.

"க$_3$ஜம் வா வீக்ஷ்ய ஸிம்ஹம் வா வ்யாக்$_4$ரம் வாऽபி வராநநா।
நாऽऽஹாரயதி ஸந்த்ராஸம் பா$_3$ஹூ ராமஸ்ய ஸம்ஶ்ரிதா॥"

[ராமனுடைய தோள்களைப் பற்றியிருக்கும் பிராட்டி, யானையையாவது, சிங்கத்தையாவது, புலியையாவது கண்டு பயப்படவில்லை; (நேர்மாறாக) முகமலர்ந்தவளானாள்.] என்றும்,

"*கருப்பேந்திர முதலாயின கண்டாள் இடர் காணாள்"

என்றும் சொன்னபடியே காட்டுமிருகங்களைக் கண்டால், அபூர்வ

---

* க$_3$ர்ப்பே$_4$ந்த்$_3$ரம் என்பது சிங்கத்தையும் கொன்று தின்னும் ஓர் மிருகம்.

பதார்த்தங்களைக் கண்டாப்போலே இவளுக்கு முகமலர்த்தியே யன்றோ ஏற்படுவது.

(கோட்டுக்கால் கட்டில் மேல்) "இமிலேற்றுவன் கூன் கோட்டிடை யாடினை கூத்தடலாயர்தம் கொம்பினுக்கே" என்கிறபடியே இவளை மணம்புரிவதற்காக அடக்கின ஏழு எருதுகளின் கொம்புகளையும் கால்களாகஅமைத்த கட்டில்மேலே என்றும்பொருள் கொள்ளலாம். (கோட்டுக்கால்) "பின்னைதன் கேள்வன் தாள் கண்டு கொண்டு" என்று அம்மிதுநத்தின் காலிலே விழுவதற்குமுன் அவர்களைச் சுமக்கும் காலிலே விழுகிறார்கள். "க்ருஷ்ணன் படுக்கையில் காலைப்பற்றினவர்களிறே பர்யங்கவித்யையில் சொல்லுகிற படுக்கையில் காலிட்டேறுவார்." என்று ஆறாயிரப்படி. "(கட்டில்) விலையுயர்ந்த பொன்னாலும் மணியாலும் செய்ததாலும், இடையராகையாலே "கட்டில்" என்றே சொல்லுகிறார்கள். (கட்டில் மேல்)

"மாணிக்கங்கட்டி வயிரமிடைக் கட்டி
ஆணிப்பொன்னால் செய்த வண்ணச்சிறு தொட்டில்
பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்"

என்று பிரமனால் அனுப்பப்பட்ட தொட்டிலையும் "கிடக்கில் தொட்டில் கிழிய உதைத்திடும்" என்றபடியே அநாதரித்திருக்குமவன், நப்பின்னையுகந்த கட்டிலாகையாலே மிகவுகந்திருக்கிறபடி. (மெத்தென்ற பஞ்சசயனம்) மெத்தென்ற பஞ்சாலே செய்த கட்டில். (மெத்தென்ற) நாங்கள் வருந்திக்கிடக்கும்போது நீ படுக்கையின் மென்மையை அனுபவித்துக்கொண்டு கிடப்பதே! (மெத்தென்ற) எங்களைப் பிரிந்தபின்பு உனக்குப் படுக்கை கடினமாகவேண்டாவோ? (பஞ்சசயனம்) ஐந்துவிதமான குணங்களையுடைய படுக்கை என்றும் பொருள் கொள்ளலாம். உயர்ந்த படுக்கைக்கு இருக்கவேண்டிய மென்மை, குளிர்த்தி, பரிமளம், அழகு, வெண்மை என்னும் 'பஞ்ச' குணங்களும்கூடிய படுக்கை என்றபடி. "மெத்தென்ற" என்று மென்மையைச் சொல்லிவிட்டு "பஞ்சசயனம்" என்று மறுபடியும் மென்மையைச் சொன்னதால் மென்மை மிகுந்திருக்குமென்றபடி. அன்றிக்கே பஞ்சகுணங்களில் மென்மைக்குப் பதிலாகப் பரப்பைக் கொள்ளலாம். அன்றிக்கே, மென்மை, குளிர்த்தி என்னும் குணங்களுக்குப் பதிலாக சீதபரிஹாரமாயும், உஷ்ணபரிஹாரமாயுமிருக்கும் தன்மைகளைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். "நாதிசீதா ந கர்மதா" [மிகக்குளிர்ச்சியற்றதாகவும்,

உஷ்ணமற்றதாகவுமிருப்பது (வாஸுதேவனுகிற மரத்தின் நிழல்.)] என்னும் அவனுக்கு ஏற்றதாயிருக்கை. (பஞ்சசயனம்) ஐந்துநிற நூல்களைக்கொண்டுசெய்த படுக்கை என்றும் பொருள் கொள்ள லாம். (சயனத்தின் மேலேறி) பிள்ளைகள் ஏறித்துகைக்காத படுகை தாய்க்கு அஸஹ்யமாயிருக்க வேண்டாவோ? எங்களுக்கு மென் மலர்ப்பள்ளி வெம்பள்ளியாயிருக்க, உனக்கு மட்டும் தண்பள்ளியா யிருப்பதெப்படி? நெருப்பைநீராக்கும் மருந்துண்டோ உன்னிடம்? (மேலேறி) "பாதே₃நாத்₄யாரோஹதி" என்று நாங்கள் மிதித்து ஏறினு லன்றோ நீ படுக்கையில் ஏறினதின் ப்ரயோஜனம் பெறுவது. "நாக₃ பர்யங்கமுத்ஸ்ருஜ்ய" என்று அப்படுக்கையைவிட்டு இப்படுக்கைக்கு வந்ததும் எங்களைப் பெறுகைக்காகவன்றோ.

இப்படுக்கையிலே படுக்கைக்குக் காரணம் சொல்லுகிறுர்கள். (கொத்தலர் பூங்குழல்) இவள் தலையிலே வந்தவுடன் பூக்களும் கொத்துக் கொத்தாக மலர்கிறபடி. பூக்களுக்கும் மலர்ச்சியைக் கொடுக்கும் நீ எங்கள் முகம் மலரச்செய்யவேண்டாவோ என்று பாவம். (கொத்தலர் பூங்குழல்) கொம்பிலிருந்து பறிக்கப்பட்ட மொட்டு இவள் குழலிலே வந்து மலர்கிறது; காலஸம்பந்தந்தாலே மலரும் பூ, "கால: கலயதாமஹம்" என்றும், "காலோஸ்மி லோக க்ஷயக்ருத்" என்றும் சொல்லப்படுமவன் ஸம்பந்தத்தாலே மலரச் சொல்லவும் வேண்டுமோ? (கொத்தலர்) எங்கள் தலைப்பட்ட பூ சரகாக வாடுகிறது; உன் தலைப்பட்ட பூ உடனே மலர்கிறது. இதை நீ கண்டிருக்கலாமோ? (பூங்குழல்) "மலரிட்டு நாம் முடியோம்" என்று நாங்கள் ப்ரதிஜ்ஞை செய்திருக்க,நீ பூங்குழலியாயிருக்க லாமோ? (பூங்குழல் நப்பின்னை) "கேசவ: க்லேசசநாசந:" "குழல ழகர்" என்று எல்லாருடைய துன்பங்களையும் துடைக்கும் மயிரழகை யுடைய அவனையும் மயக்கவல்ல குழலழகை உடையவளாயிருக்கை.

(கொங்கை மேல் வைத்துக்கிடந்த) நப்பின்னைப்பிராட்டியுடைய ஸ்தனத்தைத் தன் மேல் வைத்துக்கிடப்பவன் என்றும், ஸ்தனத்தின் மேலே தன் மார்பை வைத்துக் கிடப்பவன் என்றும் இருவகையாக வும் பொருள் கொள்ளலாம்.

**"அத்யந்த ப₄க்தியுக்தஸ்ய ந ஶாஸ்த்ரம் நைவ ச க்ரம:"**

[மிகவும் அன்புடையவனுக்கு சாஸ்த்ரமுமில்லை; க்ரமமுமில்லை·] என்று சொல்லப்படுகிறதன்றோ.

**"பரிச்ரமாத் ப்ரஸுப்தா ச ராக₄வாங்கேऽப்யஹம் சிரம்।**
**பர்யாயேண ப்ரஸுப்தச்ச மமாங்கே ப₄ரதாக்₃ரஜ:॥"**

[நான் களைப்பினால் ராகவருடைய மடியில் வெகுநேரம் தூங்கினேன்; அவரும் அப்படியே என் மடியில் திருக்கண்வளர்ந்தருளினார்.] என்று பிராட்டியாலும் பேசப்பட்டதன்றோ. "மலராள் தனத்துள்ளான்" என்றும், "சங்கு தங்குமுன்கை நங்கை கொங்கை தங்கலுற்றவன்' என்றும் ஆழ்வார்களும் இவ்வர்த்தத்தை அருளினார்கள். "ஸ்தநஸ்தபகசஞ்சல: ஸ்ரீரங்க₃ராஜப்₄ருங்க:' என்றார் பட்டரும்.

(மலர் மார்பா) அவனுக்கு அரண் இவள் ஸ்தனமாகிறுப்போலே இவளுக்கு இருப்பிடம் இவன் மார்பு. இவள் கொங்கைப்பரப்பெல்லாம் ஏகதேசத்திலே அடங்கிவிடும்படியான மலர்ந்த மார்பை உடையவனே! "முற்றாராவனமுலையாள் பாவை மாயன் மொய்யகலத்துள்ளிருப்பாள்" என்றாரன்றோ திருமங்கையாழ்வாரும். (மலர் மார்பா) இவளுடைய ஸ்தநஸ்பர்சத்தாலே பூரித்துப் பணைக்கும் திருமார்பையுடையவனே! "ஸதைக₃ரூபரூபாய" [எப்போதும் ஒரே மாதிரியிருக்கும் ரூபத்தையுடையவன்.] "மலராது குவியாது" எனப்படுமவன் மார்வுகிடீர் மலர்கிறது. அங்கு கர்மத்தால் வரும் விகாரம் இல்லையென்றதேயொழிய, ஆச்ரிதஸம்ச்லேஷத்தால் வரும் விகாரம் இல்லையென்கிறதன்றே. ஆச்ரிதஸம்ச்லேஷத்தில் விகாரமற்றிருந்தால் அது தோஷத்திலேயன்றோ பர்யவஸிக்கும். "வெண்ணெய்க் கன்றுய்ச்சிவன் தாம்புகளால் புடைக்கலர்ந்தானை" என்று யசோதையால் அடியுண்டு மலருமவன் இவளால் அணைப்புண்டு மலராதிருப்பனோ? 'உத்₃த்₄ருதாஸி வராஹேண க்ருஷ்ணேந சதபா₃ஹுநா' என்றும், "தடம்பெரும் தோளாரத்தழுவும்" என்றும், "ப்ரஹர்ஷயந்தம் மஹஷீம் மஹாபு₄ஜம்" என்றும் பிராட்டியை அணைப்பதால் பணைக்கும் கைகளையுடையவன் இவன் என்னுமர்த்தம் அறிவிக்கப்பட்டதன்றோ.

(வாய் திறவாய்) கிடந்தவிடத்திலே கிடந்து உன் கம்பீரமான ஒலி செவிப்படும்படி ஒரு வார்த்தை சொல்லாய், "அநந்யா ஹி மயா ஸீதா" "அநந்டா ராக₄வேணஹம்" என்று ஏகத்ரவ்யம் என்னலாம்படி ஒருவர்க்கொருவர் பிணைப்புண்டு கிடக்கிறார்களாகையாலே இவர்களைப் பிரிக்கை கொடுஞ்செயல் என்று பார்த்து, "எழுந்திராய்" என்னாதே "வாய்திறவாய்" என்கிறார்கள். (வாய்திறவாய்) "ஆர்த்தோ வா யதி₃ வா த்₃ருப்த:" என்றும், "மித்ரபா₄வேந ஸம்ப்ராப்தம்" என்றும் சொல்லிவைத்து, ஆர்த்தைகளாய் உன்னையல்லது அறியாத எங்களைக் கணிசியாதிருப்பதென்? அவளால் நெருக்குண்டு எழுந்திருக்க முடியாவிடிலும் "மாசுச:" என்று ஒரு வார்த்தை சொல்லுகையும்

அரிதோ?(மலர் மார்பா வாய் திறவாய்) மார்பை அவர்களுக்குக் கொடுத்தால் பேச்சை எங்களுக்குத் தரலாகாதோ?

இவர்கள் இப்படி ''மலர்மார்பா வாய்திறவாய்'' என்றதைக் கேட்ட கண்ணன், ''நமக்காக இவர்கள் என்ன பாடுபடுகிருர்கள்'' என்று வருந்தி வாய்திறக்கப்புக, ''நம்மைச் சேர்ந்தவர்களுக்கு நாம் முற்படுவதொழிய நம் மணுளன் முற்படுவது தகாது''என்று நினைத்த நப்பின்னைப்பிராட்டி தன் மைத்தடங்கண்களாலே வாயைத் திறவாமலிருக்கும்படி சைகைசெய்ய, அவள் கண்ணிட்ட வழக்காயிருக்குமவனுகையாலே பேசாமலிருந்தான். மறுபடியும் அவள் காலிலே விழுகிருர்கள்.

(மைத்தடங்கண்ணிணய்) கறுத்ததாய், பெரிதான கண்களை உடையவளே! உன் கண்ணழகு எங்களுக்கு நன்மையை விளைவிப்பது என்றிருந்தோம். அதுவே எங்களுக்கு பாதகமாகின்றதே! என்று வருந்துகிருர்கள். (மைக்கண்ணிணய்) மையிடப்பெற்ற கண்களை உடையவளே! ''மையிட்டெழுதோம்'' என்று நாங்கள் விரதம் பூண்டிருக்க, நீ மட்டும் மையிடுவது தகுதியோ? (மைக்கண்ணிணய்) அவனை நீ மையிட்டு வசீகரித்தபின், எங்களை அவனுல் எப்படி நோக்கமுடியும்? (மைக்கண்ணிணய்) கறுத்த கண்களை உடையவளே என்றும் பொருள் கொள்ளலாம்.

''ந ஜீவேயம் க்ஷணமபி விநா தாமஸிதேக்ஷணும்''

[கறுத்த கண்களையுடைய அப்பிராட்டியைப் பிரிந்து நான் கணப் பொழுதும் ஜீவியேன்.] என்று அவனும் இக்கண்ணழகிலேயன்றோ ஈடுபட்டிருப்பது.

''ராக₄வோऽர்ஹதி வைதேஹீம் தம் சேயமஸிதேக்ஷணு''

[ராகவன் வைதேகிக்குத் தகுந்தவர். கறுத்த கண்களையுடையவளான அவளும் இவனுக்குத் தகுந்தவள்.] என்ருர் வால்மீகிபகவான். பெருமாளும் பிராட்டியும் ஒருவருக்கொருவர் ரூபகுணுதிகளில் தகுந்தவர்கள் என்று சொல்லமுற்பட்டவர், ''அஸிதேக்ஷணு'' [கறுத்த கண்களை உடையவள்.] என்று பிராட்டிக்கு அதிகப்படியாக ஒரு விசேஷணமிட்டார். பெருமாளைக்காட்டிலும் பிராட்டி கண்ணழகிலே விஞ்சியிருப்பவள் என்று உணர்த்துவதே இதன் கருத்து என்று ஆசார்யர்கள் அருளிச்செய்வர்கள். அப்படிப்பட்ட அக்கண்ணழகை ''மைக்கண்ணிணய்'' என்று உணர்த்துகிருர்கள் இவர்கள்.

(தடங்கண்ணினாய்) பரந்த கண்களை உடையவளே! அளவிட வொண்ணாத இக்கடலைத் தாண்டினாலன்றோ அவன் எங்களைக் காணமுடியும்; அது என்று சொல் கூடுவது? என்று பாவம். "எங்களையும் மையிடப்பண்ணினாலன்றோ நீ கண்ணுக்கு மையிடு வது. இரண்டு கண்ணுக்கும் ஒரு மையிறே இடுவது. மைப்படி மேனி (திருவிருத்தம்-94) இறே" என்று ஆறாயிரப்படி. இதன் கருத்தை விளக்குகிறோம். "மைக்கண்ணினாய்" எனப்பட்ட இவள் கண்ணிலிருப்பது உண்மையில் மையல்ல; அருகிலிருக்கும் மைப் படிமேனியினனான கண்ணனின் சாயலே இவளுக்கு மையாகிறது. இவர்கள் விரும்பும் மையும் அதுவேயாகும் என்றபடி. ஆக இத் தால், "உன் கண்ணுக்கு மையாய் விளங்கும் அம்மேனியை எங்கள் கண்ணிலும் இடுவாயாக" என்றதாயிற்று.

(நீ) அவன் நினைவே நினைவாயிருக்கும் நீ. (உன் மணாளனை) உன் நினைவொழிய வேறு அறியாதவனான அவனை. (உன் மணாளனை) "பதிம் விச்வஸ்ய" "லோகப₄ர்த்தாரம்" [ரா-ஸு 99-10] [உலகுக் கெல்லாம் நாயகனை] "நாயகன் முழுவேழுலகுக்கும்" என்ற நிலையும் அழிந்தது; "கோபீ ஜநவல்லப₄:" என்கிற நிலையும் அழிந்தது; "உன் மணாளன்" என்னும்படியான தசையாயிற்று. (உன் மணாளனை) "பின்னை மணாளனை" என்றன்றோ இவளுடைய தமப்பனார்களும் இவனை நிரூபிப்பது. "கோட்டிடையாடினை கூத்து அடலாயர்தம் கொம்பினுக்கே" என்றபடியே நித்யஸூரிகளுக்கு நாதனாயிருக்கும் இருப்பையும் இகழ்ந்து அவன் இங்கு வந்தது பின்னை மணாளன் ஆகைக்கேயன்றோ. (உன் மணாளனை) நம் எல்லோருக்கும் நாயகனா யிருப்பவனை நீ ஒருத்தியே அனுபவிக்கை தகுமோ?

"பொதுவாக உண்பதனைப் புக்கு நீ உண்டக்கால்
சிதையாரோ உன்னோடு" என்கிறார்கள்.

(எத்தனைபோதும் துயிலெழ ஒட்டாய்காண்) அவனை ஒரு கண நேரமும் படுக்கையைவிட்டு எழவிட மறுக்கிறாய். கூடுவதற்குடலாகப் பிரிவதையும் பொறுக்கவல்லையல்லை. (எத்தனையேலும் பிரிவாற்ற கில்லாயால்) அவனைத் துயிலெழ விடாமைக்குக் காரணம் நீ அவனைக் கணப்பொழுதும் பிரியமுடியாதவளாயிருப்பதுதான். "அகலகில் லேன் இறையும் என்று அலர்மேல் மங்கையுறை மார்பா" என்று ஆழ்வாரும்,

''ந ச ஸீதா த்வ'யா ஹீநா ந சாஹமபி ராக₄வ|
முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாந் மத்ஸ்யாவிவோத்₃த்₄ருதௌ||''

[ராகவரே! உம்மைப் பிரிந்த ஸீதையும் ஸத்தையை இழப்பாள். (அப்படியே) உம்மைப் பிரிந்த நானும் ஜீவனற்றவனுவேன். அப்படி ஜீவித்தாலும், ஜலத்திலிருந்து பிரிக்கப்பட்ட மீன் போல் ஒரு முஹூர்த்தகாலம் ஜீவிப்போம்.] என்று இளையபெருமாளும் அருளிச் செய்த அர்த்தத்தை அநுஸந்திக்கிறுர்கள்.

(எத்தனையேலும் பிரிவாற்றகில்லாயால்) நாங்கள் வெளியி லிருந்து படும்பாட்டையெல்லாம் நீ அவன் அருகிலிருந்தே படு கிருய். சிறிது கைவாங்கி அணைக்கில் பத்துமாஸம் பிரிந்தவள் பட்டது படாநின்ருய். இப்படிப்பட்ட உன் ஸ்வபாவத்தை அறிந் தன்ரே அவனும் உன்னைப் பிரியவொட்டாமலிருக்கிருன்.

(தத்துவம்) நாங்கள் சொல்வது உண்மையே. (தகவு அன்று) ஆனல் இது உன் ஸ்வபாவத்திற்குத் தகாது. அன்றிக்கே, (தத்துவம் தகவன்று) உண்மையாக இது உன் ஸ்வபாவத்திற்குப் பொருந் தாது. இங்கு 'தகவு' என்று சொல்லப்படுவது தயை என்னும் குணமேயாகும். உன்னுடைய கருணைக்குப் பொருந்தியிருக்கிறதல்ல நீ செய்யும் காரியம் என்றபடி. (தகவு தத்துவமன்று) உன்னுடைய க்ருபை உண்மையானதல்ல. ''க்ஷிபாமி'' [அவர்களை ஆஸுரயோனி களில் எறிகிறேன்.] ''நக்ஷமாமி'' [அவர்களைப் பொறுக்கமாட்டேன்.] என்னும் அவனுக்கும் ''நகச்சிந்நாபராத்₄யதி'' [குற்றம் செய்யாதவன் ஒருவனுமில்லையே.] என்ற உனக்கும் வாசியில்லையாய்விட்டது. இவளுக்குக் குறைசொல்லுகையாவது-இவளை எம்பெருமானுக்கு ஒப் பிடுகை. நீர்மையால்விஞ்சினவர்களை நீர்மையில்குறைந்தவர்களுடன் ஒப்பிடுகை குற்றமேயன்ரே. பிராட்டி பெருமானைவிட குணங்களில் உயர்ந்தவள் என்பதை, ''ஶ்ரீயம் த்வத்தோப்யுச்சைர் வயமிஹ ப₂ணாம:'' [ஸ்ரீதேவியை உன்னைக்காட்டிலும் உயர்ந்தவளாகவே நாங்கள் இங்குகூறுகிரேம.]''லகு₄தரா ராமஸ்ய கோ₃ஷ்டீ₂க்ருதா''[பிராட்டியால் ராமகோஷ்டி சிறிதாக்கப்பட்டது.] என்று பட்டர் அருளிச்செய்தார்.

''தத்துவம் அன்று; தகவு அன்று'' என்றும் அந்வயிக்கலாம். ''இது உன் ஸ்வரூபத்திற்கும் பொருந்தாது; உன் ஸ்வபாவத்திற்கும் பொருந்தாது'' என்று பொருள். ''உன்னுடைய புருஷகாரபாவத் துக்கும் போராது; க்ருபைக்கும் போராது'' என்று பெரியவாச் சான்பிள்ளை விவரித்தருளுவர். தத்துவம்:—ஸ்வரூபம்; அதாவது

ஸ்வரூபநிரூபகதர்மம். ''உபாயோபேயத்வே ததிஹ தவ தத்வம் ந து குணௌ'' [உபாயமும், உபேயத்வமும் உனக்கு ஸ்வரூபங்கள் (ஸ்வரூபநிரூபகதர்மங்கள்.) நிரூபிக்கப்பட்ட ஸ்வரூபத்திலுள்ள குணங்கள் மட்டுமல்ல] என்று பட்டர் பகவானுடைய ஸ்வரூபத்தை நிரூபித்தருளினர். பிராட்டியின் ஸ்வரூபம் புருஷகாரத்வமே என்பதை,

''லக்ஷ்மீ: புருஷகாரத்வே நிர்திஷ்டா பரமர்ஷிபி:।
மமாபி ச மதம் ஹ்யேதத் நாந்யதா லக்ஷணம் பவேத்॥''

[லக்ஷ்மியானவள் புருஷகாரத்வத்திலே நிலைநிற்பவள் என்று மஹரிஷிகள் அறுதியிட்டார்கள். எனக்கும் அதுவே இஷ்டமானது. ஸ்ரீதேவிக்குப் புருஷகாரத்வத்தைத் தவிர வேறு லக்ஷணமில்லை.] என்று பகவானே பாஞ்சராத்ரசாஸ்திரத்தில் உத்கோஷித்தான். ஆக, ''தத்துவமன்று'' என்றதால் ''உன் ஸ்வரூபமான புருஷகாரத்வமும் அழிந்தது'' என்கிருர்கள். ''தகவன்று'' என்கையால், ''உனக்கு அஸாதாரணமாக ஏற்றத்தைத்தரும் குணமானதயையும் அழிந்தது'' என்கிருர்கள். (தத்துவமன்று தகவன்று) உன் ஸ்வரூப ஸ்வபாவங்களைப்பெற்று ஸத்தை பெற வேண்டில் எங்களை அவனேடு சேரவிடுவாயாக என்கிருர்கள்.

(தத்துவமன்று, தகவன்று) ''அகிலஜகந்மாதரம்'' என்கிறதுக்கும் சேராது; ''அசரண்யசரண்யாம்'' என்கிறதுக்குஞ்சேராது; ''தேவதேவதிவ்யமஹிஷீம்'' என்று கட்டினபட்டத்துக்குச் சேருமித்தனை'' என்று ஆருயிரப்படி.

## திருப்பாவை—இருபதாம் பாட்டு.

20. முப்பத்து மூவ ரமரர்க்கு முன் சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்
செப்ப முடையாய்! திறலுடையாய்! செற்ருர்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்
செப்பன்ன மென்முலைச் செவ்வாய் சிறு மருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்
உக்கமும் தட்டொளியும் தந்துன் மணாளனை
இப்போதே எம்மைநீ ராட்டேலோ ரெம்பாவாய்.

**பதவுரை:—முப்பத்து மூவர் அமரர்க்கு**—முப்பத்து முக் கோடி தேவர்கட்கு, **முன்சென்று**— (இடர் வருவதற்கு) முன்னமே எழுந்தருளி, **கப்பம்**-(அவர்களுடைய)நடுக்கத்தை, **தவிர்க்கும்**—போக்கியருளவல்ல, **கலியே**—பலத்தையுடைய கண்ணபிரானே, **துயில் எழாய்**—படுக்கையினின்றும் எழுந்திராய்; **செப்பம் உடையாய்**— (ஆச்ரிதர்களை ரக்ஷிக்கும் விஷயத்தில்) நேர்மை உடையவனே; **திறல் உடையாய்**— (ஆச்ரித விரோதிகளை அழியச்செய்யவல்ல)பலத்தை உடையவனே! **செற்றார்க்கு**—எதிரிகளுக்கு, **வெப்பம்**—துக்கத்தை, **கொடுக்கும்**—தரும்படியான, **விமலா**—பரிசுத்தனே! **துயில எழாய்**..; **செப்பு அன்ன**-பொற்கலசம் போன்ற, **மென்முலை**-மிருதுவான முலைகளையும், **செவ்வாய்**—சிவந்த வாயையும், **சிறு மருங்குல்**—நுண்ணிய இடையையுமுடைய, **நப்பின்னை நங்காய்**-நப்பின்னை பிராட்டியே!**திருவே**-பெரிய பிராட்டியை ஒத்தவளே! **துயில் எழாய்**-; **உக்கமும்**-(நோன்புக்கு உபகரணமான) ஆலவட்டத்தையும் (விசிறியையும்) **தட்டொளியும்**—கண்ணாடியையும், **தந்து**—கொடுத்து, **உன் மணாளனை**—உனக்கு நாதனை அவனையும், **எம்மை**—எங்களையும், **இப்போதே நீராட்டு**—இக்கணத்திலேயே நீராட்டக்கடவாய்.

*அவதாரிகை:*— "தத்துவமன்று தகவு" என்று நப்பின்னைப் பிராட்டியைக் கோபித்துக் கொண்டவுடன், அவள் "தக்கசமயம் வந்தவுடன் எம்பெருமானிடம் விண்ணப்பிக்கலாம்" என்று நினைத்துச் சிறிதுநேரம் பேசாமலிருந்தாள். "கோபித்துக்கொண்டதினால் பேசாமலிருக்கிறாள்" என்று நினைத்து, இப்பாட்டில் முற்பாதியால் அவனை எழுப்ப, அவனும் வாய்திறவாமையாலே, "இவளைப்பேசின பேச்சைக் கேட்டுத் திருவுள்ளம் கலங்கினான்" என்று அறிந்து இவளுடைய பெருமைகளைப் பாட்டின் பிற்பாதியால் பேசி, அவளிடம் தங்கள் விருப்பத்தை விண்ணப்பிக்கிறார்கள்.

*வியாக்கியானம்:*— (முப்பத்து மூவர்) த்வாதசாதித்யர்கள், ஏகாதசருத்ரர்கள், அஷ்டவஸுக்கள், அச்வினிகள் இருவர் ஆக முப்பத்து மூன்று தேவர்களைக் கூறுவது முப்பத்து முக்கோடி தேவதைகளுக்கும் உபலக்ஷணம். "தேவாஸ்த்ரிரேகாதசா: த்ரிஸ்த்ர

யஸ்த்ரிம்சா:' முதலானவிடங்களில் வேதமும் முப்பத்துமூவர் என்றே நிர்த்தேசித்ததை நினைப்பது. (முப்பத்து மூவர்) நீ ரக்ஷிக்கவேண்டு மென்றால் முப்பத்து மூவராகவேண்டுமோ? அஞ்சு லக்ஷம் குடியாகாதோ? ஆண்களுமாய், அதிகருமாயிருப்பார்க்கு உதவின வன் பெண்களுமாய்ச் சிலருமாயிருப்பார்க்கு உதவலாகாதோ? தங்களை ரக்ஷிக்கத் தாங்களே முயற்சி செய்வார்க்குத்தான் உதவு வாயோ? தங்கள் ரக்ஷணத்திற்கு உன்னையே நம்பியிருப்பவர்க்கு உதவுவதில்லையோ? "நாங்கள் தேவர்" என்று அபிமானித்திருப்ப வர்க்குத்தான் உபகரிப்பாயோ? "அடிச்சியோம்" என்று அடி வணங்கியிருப்பார்க்கு அளிப்பதில்லையோ? அந்யப்ரயோஜனங் களைப்பெற்று அகல விரும்புவாரைத்தான் ஆதரிப்பாயோ? அநந்ய ப்ரயோஜனராய் அணுக்க விரும்புவாரை ஆதரிக்கலாகாதோ? ரக்ஷித்தவுடன் எதிரம்பு கோக்குமவர்களுக்குத்தான் உதவுவாயோ? ரக்ஷிக்காவிடிலும் உன்னை நேசிப்பார்க்கு உதவுவதில்லையோ? "அரக்கர்...நீணகர்நீளெரி வைத்தருளாய்" என்று உன்னை எழுப்பி அரக்கரின் அம்புக்கு இலக்காக்குவார்க்கோ காரியம் செய்வது? உன்மேல் பசும்புல் விழுந்தாலும் சகியாதவர்களாய், உன் அழகைக் காண ஆசைப்பட்ட எங்களுக்குக் காரியம் செய்யலாகாதோ?

(அமரர்க்கு) அமரர்—மரணமற்றவர். கொன்றாலும் சாகா தார்க்குத்தான் உதவுவாயோ? உன்னைக் கணம் பிரிந்தால் மரண மடையும் எங்களை நோக்குவதில்லையோ? உப்புச்சாறு போன்ற அம்ருதத்தை விரும்பியிருப்பார்க்குத் தான் உதவுவதென்று உன் விரதமோ? தெவிட்டாவமுதாகிய உன்னை விரும்புவாரை உபேக்ஷிப் பதே உன் கொள்கையோ? சக்தியுள்ளவர்க்குத்தான் காரியம் செய் வாயோ? அபலைகளை அளிக்கலாகாதோ? நோவுபட்டாலும் பொறுக்கவல்லவர்க்கு உதவுமவன் நோவுபடப்பொறுக்காத எங் களுக்கு உதவலாகாதோ?

(முன் சென்று) துன்பம் வருவதற்கு முன் சென்று. "மழைக் கன்று வரை முன் ஏந்தும் மைந்தனே" என்று தொண்டரடிப் பொடியாழ்வார் அருளியபடியே யார்க்குதவினாலும் இடர் வருவ தற்கு முன் உதவுவதன்றோ இவன் ஸ்வபாவம். (முன்) துன்பம் வருமுன்பே துடைக்கும் நீ துன்பமுற்ற எம்மைத் தேற்றாதிருப்ப தென்? (முன்) அவர்கள் உன்னைப் பற்றவேண்டும் என்று நினைப்ப தற்கு முன்னமே, உன்னைச் சேர்ந்தவர்களென்னும் இத்தையே நினைத்து மேல்விழுந்து உதவுமவன் உன்னை நினைந்து நினைந்து

உருகுமெங்களை உபேக்ஷிக்கக் காரணமென்? (சென்று) அடியார் இருக்குமிடம் சென்று உதவும் நீ, நீயிருக்குமிடம்தேடி வந்துள்ள எங்களை உபேக்ஷிக்கலாமோ? "ஸ்மராமி" [நான் என் பக்தனை நினைக்கிறேன்.]என்றும், "பத்₃ப்₄யாமபி₄கமாச்சைவ"[காலால் நடந்து எதிர்கொண்டழைத்ததினாலேயே நான் குகனாகிய உன்னால் கௌரவ விக்கப்பட்டேன்.] என்றும், "ஹ்ரீரேஷாஹி மமாதுலா...உபஸ்தே₂யை-ருபஸ்தித:" [நான் சென்று காணத்தக்கவர்களான உங்களால் வந்து அடையப்பட்டேன் என்பதை நினைக்கும்போது எனக்கு மிகவும் வெட்கமாயிராநின்றது.] என்றும், "எழுதுமென்னுமிது மிகை" என்றும் உன்னை நினைப்பதையும், நீயிருந்தவிடத்திற்கு வருவதை யும் பொறுக்காத நீ இப்போது பொறுத்திருக்கக் காரணமென்?

(கப்பம் தவிர்க்கும்) 'கம்பம்' [நடுக்கம்] என்னும் வடமொழிச் சொல் 'கப்பம்' என்று திரிந்திருக்கிறது. "தே₃வாஸ் ஸ்வர்க்க₃ம் பரித்யஜ்ய தத்த்ராஸாத்" [தேவர்கள் ஹிரண்யனிடத்தில் பயத்தால் ஸ்வர்க்கத்தை விட்டொழித்து...] என்கிறபடியே இருப்பிடம் முத லானவற்றை இழந்ததனாலுண்டான நடுக்கத்தைப் போக்குகின்ற வனே என்கிறார்கள். அநந்யப்ரயோஜநர்களின் நடுக்கத்தைத் தீர்க்கும் நீ எங்களை நடுங்கப்பண்ணுவது நியாயமோ என்கிறார் கள். அவர்கள் எதிரிகளுக்காக நடுங்குவர். நாங்கள் நீ எழுந் திருக்கும்போதுள்ள அழகைக் காணாமல் நடுங்குகிறோம். துஸ்ஸஹ மான எங்களுடைய நடுக்கத்தையன்றோ முதலில் தீர்க்கவேண்டும். (கப்பம் தவிர்க்கும்) ராவணன் முதலானார்க்கு தேவர்கள் செலுத்தி வந்த கப்பத்தைத் தவிர்க்கும் என்றும் பொருள் கொள்ளலாம்.

(கலியே) 'கலி' என்னும் சொல் 'பலம்' என்னும் பொருளுடை யது. பலமே ஒரு வடிவெடுத்ததுபோலிருப்பவனே! என்கிறார்கள். "ப₃லம் ப₃லவதாம் சாஹம்" [பலவான்களுடைய பலம் நானே] என்று னன்றோ அவனும். (கலியே) உனக்கு பலமிருப்பது எங்களை ரக்ஷிப் பதற்காகவன்றோ என்கிறார்கள்.(கலியே)'கலி' என்பது மிகுதியையும் சொல்லும். இங்கு ஸகல தேவதைகளையும் ரக்ஷிக்கையாலே அவர் களுக்கு மேலாயிருப்பவனே என்று பொருள்படுகிறது. "தம்தே₃வதா நாம் பரமஞ்ச தை₃வதம்"[தேவதைகட்கெல்லாம் மேலான தெய்வமான அவனை] என்னும் உபனிஷதர்த்தத்தை உணர்த்துகிறார்கள்.

(துயிலெழாய்) "(எங்களை) நீ உகக்குமவர்களான முப்பத்து மூவராக நினை; ஆண்களாக நினை; ப்ரயோஜநாந்தரபரராக நினை;

மருந்து தின்றுசாவாதவராக நினை; உன்னை ரக்ஷ்யமாக நினையாதே ரக்ஷகனாக நினைக்கும்பேராக நினை; எங்களுக்கு நீ உணரும்படியும், நீ நோக்கும்படியும், நீ வார்த்தை சொல்லும்படியும் தொடக்கமான வற்றைக் காண்கையே வேண்டுவது'' என்று ஆருயிரப்படி. இதன் கருத்து: முப்பத்துமூவரான அமரர்க்கும் அவர்களை ஒத்தவர்களுக்குமே உதவுவது என்று நீ விரதம் பூண்டிருந்தாயாகில் எங்களையும் அவர்களாக நினைத்து எங்களிஷ்டத்தைத் தாராய் என்கிறார்கள் என்று தாத்பர்யம்.

(முப்பத்துமூவர்...) இடக்கை வலக்கையறியாத ஆய்ச்சிகளான இவர்கள் முப்பத்துமுக்கோடி தேவதைகளை அறிந்தபடியென்? என்னில்: கண்ணன் திருவவதரித்தபோதே ''தொட்டில் பேணியுனக்குப் பிரமன் விடுதந்தான்'' முதலான பாசுரங்களிற் சொன்னபடியே தேவர்கள் அவனுக்குக் கிஞ்சித்காரம் செய்தனர். அந்திப் போதிலே அவனைக்காண இமையவரெல்லாம் மந்திரமாமலர் கொண்டு மறைந்துவராய் நிற்பதுமுண்டு. கோவிந்தன் குழல் கொடுஊதினபோது, அவியுணுமறந்துவானவரெல்லாம் ஆயர்பாடி நிறையப் புகுந்தீண்டி செவியுள் நாவின் சுவைகொண்டு மகிழ்ந்து கோவிந்தனைத் தொடர்ந்து என்றும் விடாமலிருப்பாராகையாலும், அமரர்க்கதிபதியானவன் கோவிந்த பட்டாபிஷேகம் செய்யக்காண்கையாலும் கண்ணனும் அவர்களுக்குப் பல பெருங்காரியங்களையும் செய்து கொடுப்பதைக் கண்டிருப்பார்களாகையாலும் முப்பத்து மூவரை அறிந்திருப்பார்கள்.

(செப்பமுடையாய்) அடியார் விஷயத்தில் ஆர்ஜவம் எனப்படும் செவ்வியை உடையவனே. செப்பம் அல்லது ஆர்ஜவமாவது:- ஆச்ரித விஷயத்தில் மநோவாக்காயங்களால் ஏகரூபனாகை; அதாவது: அவர்களோடு பொருந்தும்போது, அவர்கள் ருசிக்குத் தக்கபடி தான் தன்னை அமைத்துக்கொண்டு, அவர்கள் செவ்வைக் கேடே செவ்வையாம்படி செவ்வியனாகை. இம் மஹாகுணத்தை ''கு₃ணவாந் ருஜு:'' என்று ஆளவந்தாரும்,

**''தத்₃வை தத₂ாऽஸ்து கதமோऽயமஹோ ஸ்வப₄ாவோ**
**யாவாந் யதா₂வித₄கு₃ணோ ப₄ஜதே ப₄வந்தம்।**
**தாவாம்ஸ் தத₂ாவித₄கு₃ணஸ் தத₃தீ₄நவ்ருத்தி:**
**ஸம்ஶ்லிஷ்யஸி த்வமிஹ தேந ஸமாநத₄ர்மா ||''**

[முன்சொன்னது அப்படியே இருக்கட்டும். இந்த ஸ்வபாவம் எவ்வளவு ஆச்சர்யமானது! (அதாவது:-) எவனொருவன் எம்மாதிரியான ஸ்வரூபத்தையும், குணத்தையும் உடையவனாய் உம்மிடம் பக்தி செய்கிறானோ, அவனோடு அம்மாதிரியான ஸ்வரூபத்தையும், குணங்களையும் உடையவனாயும், அவனுக்கு வசப்பட்ட எல்லா வ்யாபாரங்களையும் உடையவனாகவும், அவனோடொத்த ஆசாரத்தை உடையவனாகவும் இங்கேயே நீ கலக்கிறாய்.]என்று ஶ்ரீவைகுண்டஸ்தவத்திலும்,

"யஜ்ஜாதீயோ யாத்₃ருஶோ யத்ஸ்வபா₄வ:
பாத₃ச்ச₂ாயாம் ஸம்ஶ்ரிதோ யோऽபி கோऽபி।
தஜ்ஜாதீயஸ் தாத்₃ருஶஸ் தத்ஸ்வபா₄வ:
ஶ்லிஷ்யத்யேநம் ஸுந்த₃ரோ வத்ஸலத்வாத்॥"

[உன் திருவடி நிழலிலே ஒதுங்கினவன் எவனாயிருந்தாலும், அவன் எந்த ஜாதியை உடையவனாயிருக்கிறானோ, எந்த ஆசாரத்தை உடையவனோ, எந்த குணங்களை உடையவனோ, அந்த ஜாதியையும், அந்த ஆசாரத்தையும், அந்த குணங்களையும் உடையவனாய், அவனிடமுள்ள வாத்ஸல்யத்தினால் அவனுடன் சேருகிறார் ஸுந்தரராஜனாகிய பகவான்.] என்று ஸுந்தரபாஹுஸ்தவத்திலும் ஆழ்வானும் அநுபவித்தனர்.

"நாஹம் தே₃வோ ந க₃ந்த₄ர்வோ ந யக்ஷோ ந ச தா₃நவ:।
அஹம் வோ பா₃ந்த₄வோ ஜாதோ நைதச்சிந்த்யமிதோऽந்யதா₂॥"

[நான் தேவனல்லன்; கந்தருவனல்லன்; யக்ஷனல்லன்; அஸுரனுமல்லன்; நான் உங்களுக்கு உறவினனாகப் பிறந்துள்ளேன்; என் பிறப்பு இதைத் தவிர வேறுவிதமாக (உங்களால்) நினைக்கத்தக்கதல்ல.] என்ற க்ருஷ்ணனிடம் இக்குணம் பரிபூர்ணமாயிருக்கையாலே "செப்பமுடையாய்" என்கிறார்கள். (செப்பமுடையாய்) உன் செவ்வி அழகிதாயிருக்கிறது. எங்களை வரும்படி சொல்லிவைத்துப் பேசாமே கிடப்பதோ ஆர்ஜவம்? மநோவாக்காயங்களில் ஏகரூபனாயிருக்கிறபடி இதுவோ? என்று க்ஷேபிக்கிறார்கள் என்றும் கொள்ளலாம். (செப்பமுடையாய்) உன் ஆர்ஜவகுணத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டில் எங்களை நோக்காய். (செப்பமுடையாய்) ரக்ஷையை உடையவனே! என்றும் பொருள் கொள்ளலாம். செப்பம்-ரக்ஷை. சங்கசக்ராதி திவ்யாயுதங்களையும், பல்லாண்டு பாடும் பக்தவர்க்கத்தையும் பரம புருஷனுக்கு ரக்ஷையாக மதிக்கிறார்கள் பெரியாழ்வார் வயிற்றில் பிறப்பாலே. "கப்பம் தவிர்க்கும் கலியே"

என்று தேவர்க்காகச் செய்யும் ஆணைத் தொழில்களை அனுஸந்தித் தவுடன் ''செப்பமுடையாய்' என்று இவனுக்கு ரக்ஷையுண்டென்று தேறுகிறார்கள்.

மேலே சொன்ன ஆர்ஜவகுணம் அநாச்ரித விஷயத்தில் கிடையாது; இவனுடைய எதிரிகள் இவன் திறலுக்கே விஷய மாவார்கள் என்கிறார்கள் அடுத்தபடியாக. பாண்டவர்களுக்குச் செவ்வியனாக இருந்த கண்ணன் துர்யோதனாதிகளை ஆயுதமெடே னென்று ஆயுதமெடுத்தும், பகலை இரவாக்கியும் வஞ்சித்து ''மயைவைதே நிஹதா: பூர்வமேவ'' [என்னாலேயே இந்த துர்யோத னாதியர் முன்பே அழிக்கப்பட்டுவிட்டனர்.] என்று தானே சொன்ன படியே தன் திறலுக்கு விஷயமாக்கினானன்றோ வாசுதேவன். (திறலுடையாய்) பலத்தையுடையவனே! ''ப₃லம் ப₃லவதாம் சாஹம்'' [பலவான்களுடைய பலமாயிருப்பவனும் நானே.] என்றானன்றோ அவனும். ''ப₃லமஸி' என்றன்றோ வேதமும் விளம்பிற்று. (திற லுடையாய்) நீ பலமுடையவனாயிருப்பது அபலைகளான எங்களுக்கு உதவுவதற்கன்றோ.(செப்பமுடையாய் திறலுடையாய்)அனுகூலரான எங்கள் பக்கலிலே காட்டவேண்டிய ஆர்ஜவகுணத்தை மறைத்து, ப்ரதிகூலர் பக்கல் காட்டவேண்டிய திறலையோ காட்டுவது?

அவன் திறலை யாரிடம் காட்டவேண்டும் என்பதைத் தெளி வாகச் சொல்லுகிறார்கள் அடுத்தபடியாக: (செற்றார்க்கு வெப்பம் கொடுக்கும் விமலா) எங்களுக்கு விரோதியாயிருப்பவர்க்கன்றோ நீ பயாக்னியை விளைக்கவேண்டும். எங்களை விரஹாக்னியில் தவிக்க விடலாமோ? (செற்றார்க்கு) ''ஸுஹ்ருத₃ம் ஸர்வபூ₄தாநாம்'' [எல்லா பூதங்கட்கும் நண்பனாகிற என்னை] ''பூ₄தாநாம் யோவ்யய: பிதா'' ''தே₃வாநாம் தா₃நவாநாஞ்ச ஸாமாந்யமதி₄தை₃வதம்'' [தேவர்க்கும், அஸுரர்க்கும் ஒரே அதிதேவதை] எனப்படுமவனுக்கு விரோதிக ளில்லையாகையால், ஆச்ரித விரோதிகள் இவனுக்கு விரோதிகளா கிறார்கள். ''த்₃விஷத₃ந்நம் ந போ₄க்தவ்யம்-பாண்ட₃வாந் த்₃விஷஸே ராஜந்'' [எதிரியின் அன்னத்தை உண்ணலாகாது; அரசனே! நீ பாண்டவர்களை த்வேஷிக்கிறாய் (ஆகையால் நீ எனக்கு விரோதி)] என்றானன்றோ.

(வெப்பம் கொடுக்கும்) பயமாகிற ஜ்வரத்தை விளைக்கும். ''அசுரர்க்குத் தீமைகள்செய்குந்தா'' என்றது இப்போது எங்கள் பக்கலிலே ஆயிற்றோ? (செற்றார்க்கு வெப்பம் கொடுக்கும்) ஆச்ரிதர்,

தங்கள் விரோதிகளிடம்பட்ட கஷ்டத்தை, அவ்விரோதிகள் படும்படி செய்பவன்.

''பாண்டவர் தம்முடைய பாஞ்சாலி மறுக்கமெல்லாம்
ஆண்டங்கு நூற்றுவர்தம் பெண்டிர் மேல் வைத்த அப்பன்''
''சந்தமல் குழலாள் அலக்கண் நூற்றுவர்தம் பெண்டிரும் எய்தி
நூலிழப்ப'' என்று ஆழ்வார்கள் அருளிச்செய்தனரன்றே.

(விமலா) பரிசுத்தனே! ஸம்பந்தம் ஒத்திருக்கச்செய்தேயும், தன் அடியார்க்காக அவர்கள் விரோதிகளை இரக்கமற்று அழிக்கையால் வந்த சுத்தியைச் சொல்லுகிறது. அறியாதார், இவன் சிலரை அணைப்பதும், சிலரை அழிப்பதும் செய்வதை இவனுடைய சுத்திக்குக் குறைவாக நினைப்பர்கள். ஞானிகள் இதுவே இவனுடைய சுத்தியைப் பெருக்குவது என்று அறுதியிட்டிருப்பார்கள். ''அங்கண் ஞாலமஞ்ச அங்கோர் ஆளரியாய் அவுணன் பொங்க ஆகம் வள்ளுகிரால் போழ்ந்த புனிதன்'' என்றுரன்றே திருமங்கையாழ்வார். (விமலா) இப்படி ஆச்ரித விரோதிகளைப் போக்கினாலும், அவர்களுக்கு ஒருகாரியம் செய்தானாயிராமல், தன் காரியம் செய்ததாக நினைத்திருக்கும் பாவசுத்தியைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். ''அபி₄ஷிச்ய ச லங்காயாம்...க்ருதக்ருத்யஸ் தத₃ா ராம:'' [லங்கையில் விபீஷணனை அபிஷேகம் செய்தவுடன் ராமன் தன் காரியத்தைச் செய்து முடித்தவனானான்;] எனப்படுமவனன்றே.

(துயிலெழாய்) ''முப்பத்து மூவர்...கலியே'' என்று அநந்யப்ரயோஜனர்களுக்கு அளித்ததால் வந்த புகழையும், ''செப்பமுடையாய்...விமலா'' என்று அநந்யப்ரயோஜனர்களை ரக்ஷித்ததாலுண்டான பெருமையையும் அழித்துக்கொள்ளாதேகிடாய்; நீ துயிலெழும் காட்சியைக்காட்டி எங்களுக்கும் உனக்கும் ஸத்தையை உண்டாக்கிக்கொள் என்கிறார்கள். எங்களுக்காக எதிரிகள் மேல் அம்பெய்கை முதலான அருஞ்செயல்களைச் செய்யவேண்டா; எழுந்து நோக்கினால் போதும் என்கிறார்கள்.

இப்படிக் கூப்பிட்டபோதும் கண்ணபிரான் எழுந்திராமையாலே, மறுபடியும் நப்பின்னைப்பிராட்டியையெழுப்புகிறார்கள். அவன் அகப்படும் சுழிகளைச்சொல்லுகிறது மேலே. (செப்பன்ன) நிதியை இட்டுவைக்கும் கலசம்போலே அவனை உள்ளடக்கிக்கொண்டிருக்கிறபடி. கலசம்போன்ற உருவத்தை உடைத்தாயிருக்கையாலே

'செப்பன்ன மென்முலை' என்கிறதாகவும் கொள்ளலாம். பஞ்ச காலத்துக்கு அஞ்சினார் கடலையும் மலையையும் பற்றி ஜீவிக்குமா போலே, அன்புடையாரை அடையாதபோது இவனும் கடலையும் மலையையும் பற்றிக்கிடப்பன். ''திருமாலிருஞ்சோலைமலையே திருப் பாற்கடலே'' என்றாரன்றோ ஆழ்வார். ''கடலும் மலையும்...துழாய் எம்போல்'' என்று இவனைக் காணாதபோது தேடுவதும் கடலிலும் மலையிலுமேயன்றோ. அந்த ரீதியிலே இங்கேயும் செப்பன்ன மென் முலையாகிற மலையைப் பற்றிக்கிடக்கிறான். ''மாகடல் நீருள்ளான் மலராள் தனத்துள்ளான்'' என்று பேயாழ்வாரும் இவன் பற்றிக் கிடக்கும் கடலையும் மலையையும் காட்டினாரன்றோ.

(செப்பன்ன) ''சுடர்வான் கலன் பெய்ததோர் செப்பினைத் திரு மங்கை மணாளனை'' என்கிறபடியே அரிய பொருள்களைத் தன்னுள் கொண்ட செப்புப்போலிருப்பவன் அவன்; அவனையும் தன்னுள் அடக்கிவைத்திருக்கும் செப்பு இவளுடைய ஸ்தனங்கள். (மென் முலை) மிருதுவான முலை. ஸ்தனங்களுக்குக் காடிந்யமே லக்ஷண மாகச் சொல்லியிருக்க இங்கு 'மென்முலை' என்பானென்? என்னில்: அவனைச் சிறிது பிரியிலும் பொறாதபடியிருக்கையாலே சொல்லு கிறது. (செப்பன்ன) செப்பிலே பதித்துவைத்திருக்கப்படும் ரத்னம் தானாக வெளிவருமோ? (மென் முலை) விரஹத்தை ஸஹிக்கத்தக்க முலையாயிருந்ததாகிலன்றோ வெளிவருவது என்கிறார்கள். (முலை) ''மாரி மலை முழஞ்சில் மன்னிக்கிடந்துறங்கும் சீரிய சிங்கம்'' என்று ஸிம்ஹமாகச் சொல்லப்பட்ட அவனுறங்கும் மலையிருக்கிறபடி. (செவ்வாய்) அம்மலையிலே இருந்து இவன் உண்ணும் கனியும் தேனும். ''தொண்டையஞ் செங்கனிவாய் நுகர்ந்தான்'' என்றா ரன்றோ திருமங்கைமன்னன். ''கோவை வாயாள் பொருட்டு'' ''தாள வேழ் முறுவல் பின்னைக்காய்'' என்று இவள் அதரத்தையும் முறுவலை யும் அநுபவிக்கைக்காகவே அவனும் அருஞ்செயல்களைச் செய்தது. (சிறுமருங்குல்) மலையிலிருந்து கனியுண்பார் கீழே பார்த்தால் தரைகாணவொண்ணாமல் பயம் விளைவிக்குமாபோலே இங்கும் இடையிருக்கிறபடி. ஸ்வரூபத்தைப் பார்த்தால் இல்லையென்று சொல்லலாம்படியாய், மேலும் கீழுமுள்ளதாகையாலே இருக்கிறது என்றும் சொல்லும்படியாய் விளங்குகையாலே ஸந்தேஹஸ்தானம் என்று சொல்லப்படுவதன்றோ இது. (செவ்வாய்) மலையிலேயிருந்து கனியுண்பவனுக்கு நம் கூக்குரல் செவிப்படுமோ என்கிறார்கள். (சிறுமருங்குல்) தரைகாணவொண்ணாத இம்மலையிலிருந்து அவன் எப்படி இறங்கி வருவான் என்று சோகிக்கிறார்கள்.

(நப்பின்னை நங்காய்) பூர்ணையான நப்பின்னைப்பிராட்டியே! நீ பூர்ணையாயிருப்பது எங்களையும் பூர்ணைகளாக்குகைக்கன்றோ என்கிறார்கள். 'நங்காய்' என்றத்தாலே மேலே சொல்லப்படாத மற்ற அவயவங்களின் ஸௌந்தர்யபூர்த்தியைச் சொல்லுகிறது. (நங்காய்) அவனுடைய பூர்த்திக்கும் காரணமானதன்றோ உன்னுடைய பூர்த்தி. "ச்ரத்₃த₄யா தே₃வோ தே₃வத்வமச்நுதே" [ச்ரத்தை என்னும் பெயர்கொண்ட பிராட்டியாலேயே தேவனாகிற நாராயணன் தேவனாயிருக்கும் தன்மையை அடைகிறான்.] என்றதன்றோ வேதம். "அழகு அவளாலே; குணங்கள் அவளாலே; மேன்மை அவளாலே; நீர்மை அவளாலே; நிரூபித்தால் அடங்கலும் அவளாலேயாயிருக்கும்" என்று ஆறாயிரப்படி. மேலே சொன்ன பூர்த்தியுள்ளது பெரிய பிராட்டியார்க்கேயன்றோ என்னும் ஸந்தேஹமெழ, க்ருஷ்ணாவதாரத்தில் நீயே பெரிய பிராட்டியார் ஸ்தானத்தில் விளங்குபவள் என்கிறார்கள்: (திருவே) அவள் ஸ்தானத்திலே விளங்குபவளானால் அவளைப்போலே நடக்கவேண்டாவோ? அவள் ஆச்ரிதர்க்காகப் பத்துமாஸம் உறங்காதிருக்க நீ எங்களைக் கண்டும் துயிலெழாதிருப்பதென்? அவயவியைக் குறிக்கும் சொல்லை அவயவத்தைக் குறித்தும் சொல்லுவதுண்டாகையாலே, பெரிய பிராட்டியாரைக் குறிக்கும் சொல்லால் அவளுக்கு அவயவ பூதையான இவளைக் கூப்பிடுகிறார்கள். (திருவே) அன்றிக்கே, ஸர்வோத்க்ருஷ்டை என்னும் பொருளிலே சொல்லுவதாகவும் கொள்ளலாம். அவள் திரு; அவன் "திருவுக்குந் திரு" என்றும், "ஶ்ரிய: ஶ்ரீ:" என்றும் சொல்லப்படுமவன்; நீ அவனுக்கும் திருவாய் விளங்குபவள் என்றபடி. (திருவே) ஸம்போகஶ்ரீயை உடையவளே என்றும் பொருள்கொள்வர்; "ஓசிந்த ஒண் மலராள்" என்னுமாபோலே ஸம்ச்லேஷத்தால் வந்த துவட்சியைச் சொல்லுகிறது. (திருவே துயிலெழாய்) பெண்ணின் வருத்தமறியாத அவனைப்போலே இருப்பதோ நீயும்? நீ உணர்ந்தெழுந்து எங்கள் ஸத்தையை உண்டாக்குவாயாக.

இப்படி இவர்கள் எழுப்பியவுடன் "நான் உறங்கவில்லை; எழுந்திருந்து உங்களுக்கு என் செய்வதென்று நினைத்துக்கிடக்கிறேன்; நீங்கள் வேண்டியதைக் கேளுங்கள்" என்று, நப்பின்னைப்பிராட்டி பதிலுரைக்க, தங்கள் விருப்பத்தை விண்ணப்பிக்கிறார்கள் அடுத்தபடியாக: (உக்கமும் தட்டொளியும்) உக்கம்-ஆலவட்டம்(விசிறி). தட்டொளி-கண்ணாடி; பறை என்றும் பொருள் கொள்ளலாம். இவை இரண்டும் நோன்புக்கு வேண்டுமவற்றுக்கெல்லாம் உபலக்ஷணம். (உக்கமும் தட்டொளியும் தந்து) நோன்புக்கு உபகரணமான

பொருள்களைக் கொடுத்து. (உன் மணாளனைத் தந்து) இவற்றைப் போலவே நம் நோன்புக்கு உபகரணமாயிருப்பவனாய், உனக்குப் பரதந்திரனாயிருக்கும் கண்ணனையும் தந்து. "உன் மணாளனை எம்மை நீராட்டு" என்று கூட்டியும் பொருள் கொள்ளலாம். (இப்போதே) இனி ஒரு கணநேரமும் பொறுக்கமுடியாது. ஊராரிசைந் திருக்கும் இச்சமயத்தை விட்டால் மறு சமயம் வாய்ப்பதும் அரிது.

(எம்மை) கணந்தப்பினாலும் மரணமாயிருக்கும் எங்களை. "ஏஹி பச்ய சரீராணி" [இங்கு வந்து எங்கள் சரீரங்களைக் காண்பாயாக.] என்று தங்கள் சரீரங்களை ராமனுக்குக் காட்டின ரிஷிகளைப்போலே விரஹம் தின்ற தங்களுடம்பைக் காட்டுகிறார்கள். (எம்மை) ஒருவரையொருவர் கூப்பிடும்போது, "பேய்ப்பெண்ணே" என்றும், "பிள்ளாய்" என்றும், "அநந்தலுடையாய்" என்றும் வார்த்தை சொல்லிக்கொண்டபோதிலும் பலதசையில் எல்லாரும் ஒத்திருக்கிற படியைக் காட்டுகிறது "எம்மை" என்பதிலுள்ள பன்மை. "நாராயணனே நமக்கே பறை தருவான்" என்று எல்லார்க்கும் உபாயம் ஒன்றானாப்போலே உபேயமும் ஒன்றாயிருக்கிறது. பக்தர்கள், ப்ரபந்நர்களென்றும், ப்ரபந்நர்களுக்குள்ளே த்₃ருப்தரென்றும் ஆர்த்தரென்றும் பகவானை ஆச்ரயித்திருப்பார் பலருண்டு; அவர்கள் பகவானை அடையும் காலத்திலும் ஏற்றத்தாழ்வுண்டு. ஆனால் பகவானை அடைந்தபின் பகவதனுபவத்தில் அவர்களுக்குள் வாசியில்லை என்னும் அர்த்தத்தை அறிவுறுத்துகிறது.

(உன் மணாளனை எம்மை நீராட்டு) உன் மணாளனை உன் அமுத மொழிகளால் நீராட்டி எங்கள்மேல் அவனுக்குள்ள கோபதாபத்தைப் போக்கடி. எங்களை உங்களிருவருடைய கருணை வெள்ளத்தாலே நீராட்டு. "திருவே" என்று ஸ்ரீசப்தத்தால் இவளைக் கூப்பிட்டு, "ஸ்ரீயதே சாகி₂லை: நித்யம் ச்ரயதே ச பரம் பத₃ம்" [எல்லாராலும் எப்போதும் ஆச்ரயிக்கப்படுகிறாள்; பரமப்ராப்யனான பகவானைத் தான் ஆச்ரயித்திருக்கிறாள்.] என்று அந்த ஸ்ரீசப்தத்துக்குள்ள வ்யுத்பத்தித்வயங்களும் இவளிடம்பொருந்தியிருக்கிறபடியை அநுஸந்திக்கிறார்கள். (திருவே எம்மை நீராட்டு) "ஸ்ரீ:" என்னும் உன் பெயரை நிலைநிறுத்திக்கொள்ளவேணுமாகில் எங்களை அவனுடன் சேரவிடு என்று திருவாணையிடுகிறார்கள். (உன் மணாளனை எம்மை) உனக்குத் தன்னை எழுதிக்கொடுத்து அச் செயலாலே எங்களை எழுதிக்கொண்டிருக்கும் அவனையும் எங்களையும். (நீராட்டு) "ஏஷ ப்₃ரஹ்ம பரவிஷ்டோஸ்மி க்₃ரீஷ்மே சீதமிவ ஹ்ரத₃ம்" [கோடை

காலத்தில் குளிர்ந்த குளத்தில் குடைந்தாடுவதுபோல் இந்த ப்ரஹ்மத்தினுள் நுழைந்தேன்.] "அப்பன் திருவருள் மூழ்கினள்" என்கிறபடியே, 'மரதகமணித்தடம்' என்றும், 'வாசத்தடம்' என்றும் சொல்லப்படும் வாசுதேவனுகிற குளத்திலே நீராட்டு.

## திருப்பாவை—இருபத்தொன்றும் பாட்டு.

21. **ஏற்றகலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப**
**மாற்ருதே பால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள்**
**ஆற்றப்படைத்தான் மகனே! அறிவுருய்!**
**ஊற்றமுடையாய்! பெரியாய்! உலகினில்**
**தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்**
**மாற்ருர் உனக்கு வலிதொலைந்துன் வாசற்கண்**
**ஆற்ருது வந்துன் அடிபணியு மாபோலே**
**போற்றி யாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய்.**

**பதவுரை:—ஏற்ற கலங்கள்**—*(தாஞகச் சுரக்கும்) பாலை ஏற்றுக்கொள்ள இடப்பட்ட பாத்திரங்களெல்லாம்.* **எதிர் பொங்கி**-*எதிரே பொங்கி,* **மீது அளிப்ப**-*மேலே வழியும்படியாக,* **மாற்ருதே**—*இடைவிடாமல்,* **பால் சொரியும்**—*பாலைப் பொழியும்படியான,* **வள்ளல்**-*வண்மையையுடைய,* **பெரும் பசுக்கள்**—*பெரிய பசுக்களை,* **ஆற்ற படைத்தான் மகனே**—*விசேஷமாக உடையவரான நந்தகோபருக்குப் பிள்ளையானவனே!* **அறிவுருய்**-*திருப்பள்ளியுணரவேணும்;* **ஊற்றம் உடையாய்**-*(மேலான ப்ரமாணமாகிற வேதத்தில் சொல்லப்படுகையாகிற) திண்மையை உடையவனே!* **பெரியாய்**-*(அந்தவேதத்தாலும் அறியப்படாத) பெருமையை உடையவனே!* **உலகினில்**-*இவ்வுலகத்தில்,* **தோற்றம் ஆய் நின்ற**-*(ஸகல சேதனருடைய கண்ணுக்கும்) தோன்றி நின்ற,* **சுடரே**-*தேஜோரூபியானவனே!* **துயில்எழாய்**-*துயிலுணர்வாயாக;* **மாற்ருர்**-*உன்னுடைய எதிரிகள்,* **உனக்கு வலி தொலைந்து**-*உன்னிடத்தில் (தங்கள்) வலிமாண்டுபோய்,* **உன் வாசல் கண்**—*உன் திருமாளிகை வாசலிலே,* **ஆற்ருது வந்து**-*கதியற்று வந்து,* **உன் அடி**

பணியும் ஆ போலே—உன் திருவடிகளை வணங்கிக்கிடப்பது போல், யாம்-நாங்கள், புகழ்ந்து-(உன்னைத்) துதித்து, போற்றி-(உனக்கு)மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டு, வந்தோம்—(உன் திருமாளிகை வாசலில்) வந்து அடைந்தோம்.

அவதாரிகை:—கீழ்ப்பாட்டில் எழுப்பப்பட்ட நப்பின்னைப் பிராட்டி ''என்னைப் பற்றினபின்பு உங்களுக்கு ஒரு குறையுண்டாகக் கூடுமோ? மேலும் அனுபவத்தில் வந்தால் நானும் உங்களைப்போல் ஒருத்தியன்றோ. ஆகையால் நாம் எல்லாரும் கூடிக்கண்ணனை எழுப்புவோம்'' என்றாள். அப்படியே எல்லாரும் கூடி அவனுக்குத் தாங்கள் தோற்றிருக்கும்படியைச் சொல்லி எழுப்புகிறார்கள் இப் பாட்டில். ''கீழே கண்டாரையெல்லாம் எழுப்பிப்பட்டவ்யஸனம் தீர அவன்தன்னையேஎழுப்புகிறார்கள்''என்றுநாலாயிரப்படியவதாரிகை.

வியாக்கியானம்:—(ஏற்ற கலங்கள் எதிர் பொங்கி மீதளிப்ப) தானாகச் சுரக்கும் பாலை ஏந்துவதற்கு இட்ட கலங்களெல்லாம் எதிரே பொங்கி வழியும்படி. கலங்களுக்கு ஒரு எண்ணிக்கையில்லை. எவ்வளவு கலங்களிட்டாலும் நிறைந்து கொண்டே இருக்கும்; கலத்திலே சிறிது பெரிது என்னும் நியமமில்லை; கடலை இட்டாலும் நிறைக்கும்; கலமிடாதார் குறையேயொழியப் பாலில்லையென்னும் குறையில்லை. க்ருஷ்ணனுடைய கரஸ்பர்சம் பெற்று வளரும் இவையும் அவன் ஸ்வபாவத்தை உடையனவாயிருக்கும். 'ரக்ஷ்யா பேக்ஷாம் ப்ரதீக்ஷதே''[தன்னால் ரக்ஷிக்கப்படுமவர்களின் அபேக்ஷையை இவன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான்] என்கிறபடியே தன்னைக் கொள்வாருமுண்டோ என்று எதிர்பார்த்துக் கிடப்பவனன்றோ அவன். ''உதாராஸ் ஸர்வ ஏவைதே'' [இவர்கள் அனைவரும் மிகவும் உதாரர்கள்.] என்று தன்னிடம் ஏதேனும் ஒன்றைப்பெற்று அகல நினைப்பவர்களையும் உதாரர்கள் என்பவனன்றோ இவன்; ''ருணம் ப்ரவ்ருத்$_3$த$_4$மிவ மே'' [(துரௌபதியின் கூக்குரல்) விருத்தியடைந்த கடன்போல் என் மனத்தை வருத்துகிறது.] ''நாதிஸ்வஸ்த$_2$மநாயயௌ'' [(தன்னுடைச்சோதிக் கெழுந்தருளும்போதும்) கண்ணன் கலங்கின மனத்துடனேயே சென்றான்.] என்கிறபடியே எல்லாம் செய்தாலும் ஒன்றும் செய்திலனாக நினைப்பவனன்றோ இவன். இவன் கைப்பட்ட பசுக்களும் இப்படியேயிருக்கின்றன.

(எதிர் பொங்கி மீதளிப்ப) முலைக்கண்ணின் பெருமையாலே ஒரு பீறிலே பெருங்கலமும் நிறைந்து வழியும்படியாயிருக்கும்.(மாற்றாதே

தி—26

பால் சொரியும்) கலமிடுவாரில்லாவிடிலும் முலைக்கடுப்பாலே இடைவிடாமல் பாலைப் பொழிந்து கொண்டே இருக்கும்; ''பூ₄ய ஏவ மஹாபா₃ஹோ ச்ருணு'' [அர்ஜுன! மறுபடியும் (நான் சொல்லும் வாக்கியத்தைக்)கேள்] என்று அவனும் தன் வாகம்ருதத்தை மாற்றாதே சொரிவானன்றே. (வள்ளல்) சிலருக்குத்தான் உபகரித்ததாக நினைத்திருக்கையன்றிக்கே தன் காரியம் செய்ததாக உபகரிக்கும். ''அபி₄ஷிச்ய ச லங்காயம் ராக்ஷஸேந்த்₃ரம் விபீ₄ஷணம் க்ருதக்ருத்யஸ் ததா₃ராமோ விஜ்வர:ப்ரமுமோத₃ ஹ''[லங்கையில் ராக்ஷஸச்ரேஷ்டனை விபீஷணனை அபிஷேகம் செய்வித்து, ராமபிரான் தன் காரியம் முடிந்தவராய், துக்கம் நீங்கப்பெற்று ஆநந்தித்தார்] என்னும் தன்மையையுடையவனன்றே அவனும். (வள்ளல்) கண்ணனைப் போலே பெண்ணுக்கும் பேதைக்கும் அணைக்கலாம்படியிருக்கும் நீர்மையைச்சொல்லுவதாகவும் கொள்ளலாம். ''ய ஆத்மதா₃ ப₃லதா₃:'' [எவன் தன்னையும் கொடுத்துத் (தன்னை அனுபவிக்க வேண்டிய) பலத்தையும் கொடுக்கிறானோ] ''வேண்டிற்றெல்லாம் தரும் கோதில் என் வள்ளல் மணிவண்ணன்'' என்று சொல்லும்படியன்றே அவனிருப்பது. (பெரும் பசுக்கள்)அவன் கைதொட்டு வளர்க்கையாலே, ''பெருங்கண்ணன்'' என்றும் ''மஹாத்மா'' என்றும் சொல்லப்படும் அவனைப்போலே பெருத்திருக்கை. (ஆற்றப்படைத்தான்) விசேஷமாகப் படைத்தவனான நந்தகோபன். ''ஈறிலவண் புகழ்'' என்று சொல்லப்பட்ட பகவானுடைய குணங்களைப் போலேயும், கண்ணன் தீம்புகளைப்போலேயும் இவற்றுக்கு எல்லையில்லை என்றபடி. ''வழியார முத்தீன்று வளங்கொடுக்கும் திருநறையூர்'' என்றுரைக்கப்பட்ட திருநறையூரில் முத்துக்களை எண்ணவொண்ணாதாப்போலே நந்தகோபனுடைய பசுக்களையும் எண்ணமுடியாது.

(ஆற்றப் படைத்தான் மகனே) நந்தகோபருடைய செல்வம் சிரமப்பட்டு ஸம்பாதித்ததாகையாலே அவருக்கு அதிகமான ஸுகத்தையளிக்காது. இவன் பிறந்து படைத்ததாகையாலே இவனுக்கே மிகவும் ஸுககரமாயிருக்கும் என்று பாவம். ''பதிம் விச்வஸ்ய'' என்று வேதாந்தங்களில் ஓதும் செல்வம் தான்தோன்றியாயிருப்பது. இது பிறந்து படைத்ததாகையாலே அதிலும் ஏற்றத்தையுடையது. (மகனே அறிவுறாய்) நீ உன்னை ஆராக நினைத்து உறங்குகிறாய்? ஒருவரும் பார்த்தறியாத பரமபதநாதனிடமோ நாங்கள் துவளுகிறோம்? ஸநகாதிகளுக்கேயான க்ஷீராப்திநாதனையோ நாங்கள் யாசிக்கிறோம்? வஸிஷ்டாதிகள் நியமிக்கும் வாசலிலேயோ நாங்கள் விழுந்து கிடக்கிறோம்? எங்களுக்கே இட்டுப்பிறந்திருக்கும்

நந்தகோபன் மகனை உன்னை வேண்டியும் நீ துயிலெழாதிருப்ப தென்? நந்தகோபர் மகன் என்னும் பெருமையை நிலைநிறுத்திக் கொள்ளப்பார்க்கில் எங்களை நோக்காய் என்கிறார்கள். (மகனே அறிவுறாய்) உன் ஐச்வர்யமன்றோ எங்களை நினைக்கவொட்டாமல் செய்கிறது. செல்வச் செருக்காலே எங்கள் கூக்குரல் செவிப்படா விடிலும் உன் பிறவியை நினைத்து எழுந்தருளாய் என்கிறார்கள். (அறிவுறாய்) ஸர்வஜ்ஞனானவனையும் உணர்த்தவேண்டும்படியா யன்றோ உள்ளேயிருக்கும் அவன் நிலைமை. நம் கைப்படாத சிறுமி களைக் கைப்படுத்துவதெப்படி என்னும் நினைவிலேயே ஊன்றிக் கிடக்கிறானாகையாலே எழுப்பவேண்டியிருக்கிறது.

இவர்களிப்படி எழுப்பியும் "வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்" என்கிறபடியே இப்பசுச்செல்வம் திருவாய்ப்பாடி யிலுள்ளார் அனைவர்க்கும் உள்ளதொன்று. ஆகையால் இது நம்மையே குறிக்கிறதென்று நாமேன் கொள்ளவேண்டும் என்று பேசாமலிருந்தான். அவனையல்லது வேறொருவர்க்கும் பொருந்தாத விசேஷணங்களையிட்டு விளிக்கிறார்கள் அடுத்தபடியாக. (ஊற்ற முடையாய்) அபௌருஷேயமான வேதத்தில் ப்ரதிபாதிக்கப்படுகை யால் வந்த ஸ்திரத்தன்மையை உடையவனே! "ஸர்வே வேத₃ா யத் பத₃மாமநந்தி' [எல்லா வேதங்களும் யாதொரு பதத்தைச் சொல்லு கின்றனவோ...] "ஸர்வே வேத₃ா யத்ரைகம் ப₄வந்தி" [எல்லா வேதங் களும் எவனிடத்தில் ஒன்று சேருகின்றனவோ...] "ஸர்வவசஸாம் ப்ரதிஷ்ட₂ா யத்ர சாச்வதீ" [எல்லா வாக்குகளும் எப்போதும் எங்கு சென்று சேருகின்றனவோ...] "வசஸாம் வாச்யமுத்தமம்" [வாக்கு களால் சொல்லத்தக்க விஷயங்களுள் மேலானதாயிருப்பது] "நாராயணபரா வேத₃ா:" [வேதங்கள் நாராயணனையே ப்ரதிபாதிப் பவை] "உளன் சுடர்மிகு சுருதியுள்" "மறையாய நால்வேதத்துள் நின்ற மலர்ச்சுடரே!" "வேதமுதல்வன்"என்று ஓதப்பட்டவனன்றோ இவன். ஆயினும், வேதங்கள் கண்ணனை நேரே சொல்லிற் றுண்டோ? எனில் "தே₃வகீ புத்ராய க்ருஷ்ணாய" "ப்₃ரஹ்மண்யோ தே₃வகீ புத்ர:" முதலானவிடங்களில் சொன்னதுண்டன்றோ. "வேதை₃ச்ச ஸர்வைரஹமேவ வேத்₃ய:" [எல்லா வேதங்களாலும் அறி யப்படுமவன் நானே.] என்று அவனும், "ஸர்வே வேத₃ா: க்ருஷ்ண:" [எல்லா வேதங்களும் க்ருஷ்ணனையே சொல்லுபவை] என்று அவனைக் காணும் பெரியோர்களும், "நம்முடை நாயகனே! நான் மறையின் பொருளே" என்று யசோதைப்பிராட்டியும் சொல்லு

வதைக் கேட்டிருப்பாராகையாலே ஆய்ச்சியரான இவர்களுக்கும் தெரியும்படியிருக்கிறது இவன் வேத முதல்வனுயிருக்கும் தன்மை.

(பெரியாய்) அந்த வேதங்களும் எல்லேகாணவொண்ணுதபடி பெரியவனுயிருப்பவனே! "யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ" [எவனே அடையமுடியாமல் மனத்துடன்கூடிய வாக்குகள் திரும்புகின்றனவோ] "யஸ்யாமதம் தஸ்ய மதம்" [எவனுக்கு (அளவிட்டு) அறியப்படவில்லேயோ அவனுக்கு அறியப்பட்டதாகிறது.] என்று அவ்வேதங்களும், "நான்மறைகள் தேடியோடும் செல்வன்" என்று ஆழ்வாரும் இவ்வர்த்தத்தை அறிவித்தனர். வேதங்களும் இவனேச் சொல்லப்புக்கால் "மஹதோ மஹீயாந்" [பெரிய வஸ்துக்களேக்காட்டிலும் பெரியவன்.]

"ஏஷ ம ஆத்மா அந்தர்ஹ்ருத$_3$யே ஜ்யாயாந் ப்ருதி$_2$வ்யா: ஜ்யாயாந் அந்தரிக்ஷாத் ஜ்யாயாந் தி$_3$வோ ஜ்யாயாநேப்$_4$யோ லோகேப்$_4$ய:"

[என்னுடைய ஹ்ருதயத்தினுள்ளிருக்கும் இந்தப் பரமாத்மா, பூமியைக்காட்டிலும், அந்தரிக்ஷத்தைககாட்டிலும், தேவலோகத்தைக் காட்டிலும், இவ்வுலகங்கள் எல்லாவற்றைக்காட்டிலும் பெரியவனுயிருப்பவன்.] என்றன்றே பாசுரமிடுவது.

இவ்வளவுபெரியவனுயிருந்தால், இங்குள்ளார் இவனே இழக்க வேண்டியதுதான்றே என்னும் ஐயமெழச்சொல்லுகிருர்கள்: (உலகினில் தோற்றமாய் நின்ற சுடரே) இவ்வுலகில் வஸிஷ்ட சண்டாள விபாகமற அனேவர்க்கும் தோன்றி நின்று பரஞ்சுடரானவனே! (இவ்வுலகினில்) மிகவும் தாழ்ந்தவரான ஸம்ஸாரிகளும் வெறுக்கும் இவ்வுலகிலே. (தோற்றமாய் நின்ற) இதுவே இவன் உகக்குமிடங்களில் மேலானது என்னும்படி பிரகாசித்துக்கொண்டு நின்ற. (தோற்றமாய் நின்ற) தோன்றிநின்ற என்றும் பொருள்கொள்ளலாம். "ஆயர் குலத்தினில் தோன்றும்" என்ருப்போலே. 'பிறந்து' என்னுமே 'தோன்றி' என்றதால் இவனுக்கு கர்ப்பவாஸத்தாலுண்டாகும் தாழ்மையில்லேயென்று தெரியப்படுத்தப்படுகிறது. கிழக்கு திக்கிலே தோன்றும் ஸூர்யனுக்கும் அத்திக்குக்கும் உள்ள ஸம்பந்தம்போன்றது இவனுக்கு கர்ப்ப ஸம்பந்தம்.

'ததோऽகி$_2$லஜகத்$_3$பத்$_3$ம போ$_3$த$_4$யாச்யுத ப$_4$ாநுநா |
தே$_3$வகீபூர்வ ஸந்த்$_4$யாயாமாவிர்பூ$_4$தம் மஹாத்மநா ||"

[அதன்பிறகு உலகங்களாகிற தாமரை மலருவதற்காக மஹாபுருஷனுன அச்யுதஸூர்யன்,தேவகியாகிய கிழக்கு திக்கில் ஆவிர்ப்ப

வித்தான்.] என்றுரன்றே பராசர பகவான். (சுடரே) மற்றவர்கள் சர்மத்தினுல் பிறக்கையாலே பிறக்கப் பிறக்க ஒளி மழுங்குவார்கள். இவன் கிருபையினுலே பிறக்கையாலே பிறக்கப் பிறக்க ஒளி விஞ்சி நிற்பான். "ஸ உ ச்ரேயாந் ப$_4$வதி ஜாயமாந:" என்றது வேதமும். "அவன் பிறக்கப்பிறக்க மேன்மையுடையவனுகவேயாகிறுன்" என்றும், "அவனே பிறக்கப் பிறக்க மேன்மையை அடைகிறுன்" என்றும், "அவன் பிறந்தபின்பே மேன்மையை அடைகிறுன்" என்றும் (அவத$_4$ாரணத்தை)ஏகாரத்தைப் பொருளாகக்கொண்ட உகாரத்தை ஒவ்வொரு பதத்துடனும் சேர்த்து மூன்று வகையாகப் பொருள் கொள்ளலாம். இவைகளில் கடைசிப்பொருளே சுவைமிக்கது. இவ் வர்த்தத்தை, "மாநுஷீம் தநுமாச்ரிதம்-பரம் ப$_4$ாவம்" [மனிததேஹத்தை எடுத்துக் கொண்டிருக்கும் மேலான நிலையை] என்று அவனும், "மாநுஷேலோகே ஜஜ்ஞே விஷ்ணுஸ் ஸநாதந:-ப$_3$பூ$_4$வ கு$_3$ணவத்தர:" [மனிதர்களுடைய லோகத்தில் ஸநாதனனுன விஷ்ணு (ராமனுகப்) பிறந்தார். அவர் பிறந்த பின்பே குணம் மிக்கவரானுர்.] என்று வால்மீகி மஹர்ஷியும், "நிலைவரம்பில பல பிறப்பாய் ஒளிவரும் முழுநலம்" என்றும், "பாவுதொல் சீர்க்கண்ண என் பரஞ்சுடரே" என்றும் நம்மாழ்வாரும் அருளிச்செய்தனர். இவ்வரும் பொருளை 'சுடரே'என்னுமத்தால்இவர்கள்அநுஸந்திக்கிறுர்கள் "தோற்றமாய் நின்ற சுடரே" என்ற இறந்த காலத்தாலே "நீ ஒளி விஞ்சியிருந்தது நாங்கள் வருவதற்கு முன்பே; இப்போது எங்களை நோக்காமை யாலே உன் ஒளி குன்றிவிட்டது" என்று உணர்த்துகிறுர்கள்.

அன்றிக்கே, "ஊற்றமுடையாய்" முதலான மூன்று பதங்களுக் கும் வேறுவிதமாகவும் பொருள்கொள்வர். (ஊற்றமுடையாய்) அடி யாரை ரக்ஷிக்கும் விஷயத்தில் அசைக்கமுடியாத உறுதியை உடை யவனே! ஸுக்ரீவன் முதலானுர் 'விபீஷணன் கொல்லப்படட்டும்' என்றபோதிலும், "மித்ரப$_4$ாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கத$_2$ஞ்சந" [மித்திரன் என்னும் வேஷத்துடன் வந்திருந்தபோதிலும் நான் அவனைக் கைவிடமாட்டேன்.] என்று உறுதியாக நின்று ரக்ஷித் தான் ராமபிரான். பிராட்டி மறுத்துப் பேசினபோதிலும்,

**"அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம் த்வாம் வா ஸீதே ஸலக்ஷ்மணும் |**
**ந து ப்ரதிஜ்ஞாம் ஸம்ஶ்ருத்ய ப்$_3$ராஹ்மணேப்$_4$யோ விஶேஷத: ||"**

[ஸீதே! நான் என் உயிரையும், (அதிலும் மேலான) உன்னையும், (உன்னிலும் உயர்ந்தவனுன) லக்ஷ்மணனையும் கைவிட்டாலும் விடு

வேன்; ப்ரதிஜ்ஞை செய்துவிட்டு, அதிலும் ப்ராஹ்மணர்களுக்கு ப்ரதிஜ்ஞை செய்துவிட்டு அந்த ப்ரதிஜ்ஞையைக் கைவிடமாட்டேன்.] என்று தன்னடியாரைக் காப்பதிலே நிலையாக நின்றான். இத்தை நினைத்தே பெரியாழ்வாரும்,

**''தன்னடியார் திறத்தகத்துத்**
**தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல்**
**என்னடியார் அது செய்யார் செய்தாரேல்**
**நன்று செய்தார் என்பர் போலும்''**

என்று அருளிச்செய்தார். (பெரியாய்) அடியார்க்கு எல்லாம் செய்தாலும் ஒன்றும் செய்திலோம் என்றிருக்கை, அவர்களுக்குச் செய்தது தன் பேறாக நினைத்திருக்கை, கொடுக்கும்போது தன் பெருமைக்குத் தக்கபடி கொடுக்கை முதலான பெருங்குணங்களை உடையவனே! (உலகினில் தோற்றமாய் நின்ற சுடரே) கீழ்ச் சொன்ன ஆச்ரிதபக்ஷபாதம் உலகிலுள்ளார்க்கெல்லாம் நன்கு விளங்கும்படி நின்றவனே! அடியார்க்கு மட்டுமன்றி, துர்யோதன சிசுபாலாதிகளான விரோதிகளுக்கும் தன் ஆச்ரிதபக்ஷபாதம் விளங்கும்படி நிற்கை. (சுடரே) ஆச்ரிதரிடத்திலுள்ள வாத்ஸல் யத்தாலேற்பட்ட ஒளியை உடையவனே! ''ஐவர்க்கருள் செய்து நின்று பார்மல்கு சேனையவித்த பரஞ்சுடர்'' ''என்கண் பாசம் வைத்த பரஞ்சுடர்ச்சோதி'' என்றார் ஆழ்வார். ''பரஞ்ஜ்யோதிருப ஸம்பத்₃ய'' என்று சேதனலாபத்தாலே ஒளிபெறுகிறான் என்றது வேதமும். (துயிலெழாய்)இப்போது எழுந்திராமையாலே நீ பிறந்து படைத்த செல்வமும், படாதனபட்டுப் பெற்ற குணங்களும் மழுங்கு கின்றன. உணர்ந்து அவைகளை ஒளிவிடச்செய் என்கிறார்கள்.

''நாம் எழுந்திருக்கிறோம்; நீங்கள் வந்தபடியை ஒரு பாசுர மிட்டுச் சொல்லுங்கள்'' என்று கண்ணன் நியமிக்கச் சொல்லு கிறார்கள்: (மாற்றார் உனக்கு...) உனக்கு சத்துருக்கள் உன் பலத் தாலே தங்கள் பலமழிந்து, கதியற்று உன் வாசலிலே வந்திருக் கிறப்போலே நாங்களும் வந்திருக்கிறோம். சத்துருக்களைத் தங்க ளுக்கு த்ருஷ்டாந்தமாகச் சொல்லலாமோ?எனில்: ஸம்ஸாரி சேதனர் அனைவரும் அநாதிகாலமாக பகவானுடன் எதிரம்பு கோத்துத் திரிந்தவர்களாகையாலே சொல்லலாம். ஸர்வலோகபிதாவான இவனுக்கு எதிரிகள் உண்டோ? எனில்: தன்னுடைய ஆஜ்ஞையை மீறுபவர்களை **''ஆஜ்ஞாச்சே₂தீ₃ மம த்₃ரோஹீ''** என்றும், தன்னை த்வே

ஷிப்பவர்களை "தாநஹம் த்3விஷத:க்ரூராந்-க்ஷிபாமி" என்றும், தன்னடியாரை த்வேஷிப்பவர்களை "த்3விஷதந்நம்" என்று தன்னை த்வேஷிப்பவர்களாகவும், பாகவதநிந்தை செய்வாரை "ந க்ஷமாமி" [பொறுக்கமாட்டேன்] என்றும் இவனே சொல்லுகையாலே இவனுக்கும் எதிரிகள் உண்டு. (மாற்றார்) எங்களை அறியாயோ? நேற்று வரையில் ஹிரண்ய ராவணாதிகளைப்போலே எதிரம்பு கோத்து நின்ற நாங்களன்றோ இன்று கதியற்று வந்திருக்கிறோம். இனி எங்களைக் கைவிடலாமோ? (வலி தொலைந்து) "த்3விதா4 ப4ஜ்யேயம்—ந நமேயம்" [இரண்டாகப் பிளக்கப்பட்டாலும் படுவேன்; ஒருவர்க்கும் வணங்க மாட்டேன்.] "கோயம் விஷ்ணு:" என்று சொல்லச்செய்த தங்கள் மிடுக்கு ஒழிந்து. (உன் வாசற்கண்) "த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ சரணம் க3த:" [மூன்றுலகங்களையும் சுற்றி (வேறு கதியற்று) ராமனையே சரணமடைந்தான் காகாஸுரன்] என்ற காகாஸுரனைப்போலே கதியற்று உன் வாசலிலே விழுந்து கிடக்கிறோம். (ஆற்றாது வந்து) எதிரிகள் உன் பலத்துக்குத்தோற்று வருகிறார்கள். நாங்கள் உன் குணங்களுக்குத் தோற்று வந்திருக்கிறோம். அம்பாவது உடனே கொன்றுவிடும். உன் குணங்களோ எங்களைச் சித்ரவதை செய்கின்றன. "வல்வினையேனை ஈர்கின்ற குணங்களையுடையாய்" என்றாரன்றோ.

(யாம் வந்தோம்)'தத் தஸ்ய ஸத்3ருசம்ப4வேத்'[என்னை அழைத்துப் போவது அவனுக்கே தகுந்தது.] என்று நீ வரவிருக்கவேண்டிய நாங்கள் இங்கு வந்தோம். ஆசை முடியவொட்டாது; ஸ்வரூப ஜ்ஞானம் வரவொட்டாது; ஆற்றாமை இருந்தவிடத்தில் இருக்கவொட்டாது. (போற்றி) பெரியாழ்வாரைப்போல் பல்லாண்டு பாடி வந்தோம். (புகழ்ந்து) சத்ருக்களைப்போலே புகழ்ந்தும் வந்தோம். நாங்கள் செய்யவேண்டியதெல்லாம் செய்தோம். நீ எங்களை அடைந்தாலும் அடை; இழந்தாலும் இழ.

## திருப்பாவை—இருபத்திரண்டாம் பாட்டு.

22. அங்கண்மா ஞாலத் தரச ரபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட்டிற் கீழே
சங்க மிருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்
கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போலே

**செங்கண் சிறுச்சிறிதே யெம்மேல் விழியாவோ**
**திங்களு மாதித்தியனு மெழுந்தாற்போல்**
**அங்க ணிரண்டுங்கொண் டெங்கள்மேல் நோக்குதியேல்**
**எங்கள்மேற் சாப மிழிந்தேலோ ரெம்பாவாய்.**

**பதவுரை:—அம் கண் மா ஞாலத்து அரசர்**—*அழகியதாய், இடமுடையதாய், பெரிதாயுள்ள பூமியில்* (ஆண்டுவரும்) *அரசர்கள்,* **அபிமான பங்கமாய் வந்து**-(*தங்களுடைய*) *அஹங்காரம் குலைந்து வந்து,* **நின் பள்ளிக் கட்டில் கீழே**-*உன் சிங்காசனத்தின் கீழே,* **சங்கம் இருப்பார்போல்**—*திரளாகக் கூடி இருப்பதைப்போல்,* **வந்து**-(*நாங்களும் நீயிருக்குமிடம்*)*வந்து,* **தலைப்பெய்தோம்**—*அணுகினோம்;* **கிங்கிணி வாய்ச்செய்த**-*கிங்கிணியின் வாய்போலே பாதிமலர்ந்த,* **தாமரை பூ போலே**-*தாமரைப் பூவைப்போலே,* **செம் கண்** — *சிவந்திருக்கும் திருக்கண்கள்,* **சிறுச்சிறிதே** — *சிறிது சிறிதாக,* **எம்மேல் விழியாவோ** — (*அடியாரான*) *எங்கள்மேல் விழிக்கமாட்டாவோ?* **திங்களும் ஆதித்தியனும்**—*சந்திரனும் ஸூர்யனும்,* **எழுந்தால் போல்**-*உதித்தாற்போல்,* **அம் கண் இரண்டும் கொண்டு**—*அழகிய கண்கள் இரண்டாலும்,* **எங்கள் மேல் நோக்குதியேல்**-*எங்களைக் கடாக்ஷித்தருள்வாயாகில்,* **எங்கள் மேல் சாபம்**-*எங்களிடமுள்ள துக்கம்,* **இழிந்து**-*அழிந்துவிடும்.*

அவதாரிகை:—சென்ற பாட்டில் "மாற்றாருனக்கு வலிதொலைந்துன் வாசற்கண் ஆற்றாது வந்து" என்று தாங்கள் அபிமான மற்றிருக்கிறபடியைச் சொன்னார்கள். இப்பாட்டில் "நின் பள்ளிக் கட்டிற் கீழே சங்கமிருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்" என்று அநந்யார்ஹசேஷபூதராய்த் தாங்கள் வந்திருக்கும்படியைப் பேசுகிறார்கள்.

வியாக்கியானம்:— (அங்கண்மாஞாலத்து) 'அம்' என்று அழகைச் சொல்லுகிறது; 'கண்' என்று பரப்பைச் சொல்லுகிறது. 'அம்' என்றதால் போக்யங்களும், 'கண்' என்றதால் போகஸ்தானங்களும், "மா" என்றதால் போகோபகரணங்களும் மிகுந்திருக்கிறபடியைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். (ஞாலத்து அரசர்)

அந்த பூமியின் ஒவ்வொரு மூலைகளிலே ஆட்சி செலுத்தும் அரசர். (அரசர் அபிமான) ஒரு மூலைக்கு அதிபதியாயிருந்தபோதிலும், பூமி முழுவதற்கும் அதிபதிகளாயன்றோ இவர்கள் தங்களை நினைத்திருப்பது. ''க்ஷோணீ கோண சதாம்ச பாலந கலா து₃ர்வார க₃ர்வாநல க்ஷுப்₄யத் க்ஷுத்₃ர நரேந்த்₃ர...'' [பூமியின் ஒரு கோணத்தில் நூற்றில் ஒருபாகத்தை ரக்ஷிப்பதாலுண்டான அடக்கமுடியாத கர்வத் தீயினால் கலங்கிக்கொண்டிருக்கும் க்ஷுத்ர நரபதிகள்...] என்றன்றோ ஸ்ரீவேதாந்ததேசிகர் அருளிச்செய்தார். (அரசர் அபிமானம்) பதவி உயரவுயர அஹங்காரம் அதிகமாயிருக்கையாலே இவ்வுலகப் பதவிகளில் தலைசிறந்ததான அரசபதவியைச் சொல்லுகிறார்கள். பதவி உயரவுயர அபிமானம் அதிகம் என்பதை அறிவிக்க ஆறாயிரப்படியில் ஐதிஹ்யமொன்று அறிவிக்கப்படுகிறது. அதாவது:—''பிரமன் முதலானவர்களும் பல ஜன்மங்கள் அரிய ஸாதனங்களை அனுஷ்டித்த பின்பே மோக்ஷமடைந்தனர் என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன; அப்படியிருக்க, ''இந்த ஜன்மத்தின் முடிவிலேயே மோக்ஷம்' என்று சொல்லிக்கொண்டு, சிலர் கட்டுச்சோறு கட்டிக்கொண்டு திரிவதெப்படி?'' என்று பட்டரை ஒருவன்கேட்க. 'அதில் அநுபபத்தியொன்றுமில்லை; ப்ரஹ்மாதிகளுக்கு அவர்கள் பதவிக்குத்தக்கவாறு அஹங்காரமிருக்குமாகையாலே, அது அழியப் பல ஜன்மங்களும் வேண்டும்; இவர்கள் இயற்கையிலேயே தாழ்ச்சியை உடையவர்களாய் அதிகமான அஹங்காரமற்றிருப்பவர்களாய் அவன் கை பார்த்திருப்பவர்களாகையாலே ஒரு ஜன்மமே போதுமானது'' என்று அருளிச்செய்தார் என்பது. இத்தை நினைத்தன்றோ ஆசார்ய ச்ரேஷ்டர்கள் ''ப்ரஹ்மாவாயிழந்து விடுதல் இடைச்சியாய்ப்பெற்று விடுதல் செய்யும்படியிறே இவ்விஷயமிருப்பது'' என்று அருளிச்செய்கிறார்கள். (மாஞாலத்து அரசர்அபிமானம்) ''பதிம் விச்வஸ்ய'' என்று வேதங்கள் அவனுக்குப்படித்திருக்கும் மேன்மையைத் தங்களுக்குள்ளதாக நினைத்திருக்கிறார்கள் இவர்கள்.

(அபிமான பங்கமாய்) அந்த அஹங்காரம் அழியப்பெற்று, ''ராஜ்யம் நாம மஹாவ்யாதி₄: அசிகித்ஸ்யோவிநாசந:'' [சிகித்சை செய்ய முடியாததாய், தீராததாயிருக்கும் வியாதியே ராஜ்யமென்பது] ''த₃சவேச்யாஸமோ ந்ருப:'' [பத்து வேசிகளுடைய பாபத்தை ஒரு அரசன் சுமக்கிறான்.] ''ஒருநாயகமாய் ஓட உலகுடன் ஆண்டவர் கருநாய் கவர்ந்தகாலர் சிதைகிய பானையர்'' என்று ஞானிகளால் அறிவிக்கப்பட்டபடியே தங்கள் பதவியின்

தாழ்மையை அறிந்து அதில் அபிமானம் அற்று. (வந்து) ராஜ்ய பாரத்தில் வெறுப்புண்டானவுடன் காட்டுக்குப்போவது என்றொரு வழக்கமுண்டே; அப்படிக் காடுபாய்ந்து திரியாமல், உய்யுமிடமான உன்னிடத்தில் வந்து.

(நின் பள்ளிக்கட்டிற் கீழே) ஒவ்வொரு அரசர்களும் சிற்சில அரசர்களிடம் தோற்பதுண்டாயினும், அங்கண்மாஞாலத்தரசர் அனைவரையும் தோற்பிக்கக்கூடியவன் இவனையல்லது வேறொருவரில்லாமையாலே 'நின் பள்ளிக்கட்டிற் கீழே' என்கிறார்கள். (நின்) எங்கேனும் வழிபறியுண்டால் ராஜாவின் வாசலிலேயன்றோ கூப்பிடுவது. "தமீச்வராணம் பரமம் மஹேச்வரம்" "ராஜாதி ராஜஸ்ஸர்வேஷாம்" என்கிறபடியே அரசர்க்கரசனாயிருப்பவன் இவனேயன்றோ. (நின் பள்ளிக்கட்டிற் கீழே) வெளியிலே எங்கேயாவது திரியில் எவராவது தலையிலே முடியைச்சூட்டி நம்மை மறுபடியும் அஹங்காரிகளாக்கிவிடப்போகிறார்களென்று பார்த்து, இவன் திருப்பள்ளியின் கீழேயே குடியிருக்கிறார்கள்.

(சங்கமிருப்பார்) ராஜ்யங்களைத் திருப்பிக்கொடுத்து "மறுபடியும் போய் அரசாளுங்கள்" என்று சொன்னாலும், வேண்டாவென்று மறுத்து இவன் திருவடியின் கீழே திரள் திரளாக இருக்கிறார்கள். (போல் வந்து தலைப்பெய்தோம்) இவ்வரசர்கள் தங்கள் ராஜ்யங்களையும் அபிமானங்களையும்விட்டு வந்து கிடக்கிறாப்போலே, நாங்களும் எங்களுடைய ஸ்த்ரீத்வாபிமானத்தையும், பந்துக்களுடைய வார்த்தைகளையும், மற்றுமுள்ள போகங்களையும் விட்டு வந்தடைந்திருக்கிறோம். அவர்கள் உன் அம்புக்குத் தோற்றவர்கள்; நாங்கள் உன் அழகுக்குத் தோற்றவர்கள்; இவ்வளவே வாசி (வித்தியாசம்). முன்னிருந்த அபிமானத்தைப்பார்த்தால் எங்களுக்குள் ஒரு வாசியில்லை. (வந்து தலைப்பெய்தோம்) இவ்வளவு அபிமானத்தை உடையராய்ப்போந்த நாங்கள் யாத்ருச்சிகமாக வந்து சேர்ந்தோம். இதற்கு அடியாக நாங்கள் பண்ணிய ஸுக்ருதம் ஒன்றையும் காண்கிறிலோம். (வந்து தலைப்பெய்தோம்) நாங்கள் வரக்கூடியவர்களோ? நாட்டிற் பிறந்து படாதன பட்ட உன்னாலும் இதுவரையில் அடையப்பெறாத நாங்களன்றோ இன்று வந்திருக்கிறோம். இத்தருணத்தை நழுவவிடாதேகிடாய் என்கிறார்கள். (வந்து தலைப்பெய்தோம்) "வந்தெங்குத் தலைப்பெய்வனே' என்று ஞானிகளும் பெறமுடியாமல் பரிதவிக்கும் விஷயத்தை அஞ்ஞானிகளில் தலைசிறந்த நாங்கள் அடைந்துவிட்டோம் என்று தங்களைத் தாங்களே கொண்டாடிக்கொள்வதாகவும் கொள்ளலாம்.

"பெண்காள்! உங்கள் காரியம் முடிந்துவிட்டது போலிருக்கிறதே; ஆகையால் இனிக் குறையில்லையே' என்று கண்ணன் சொல்ல, "நாங்கள் உன்னை அடைந்தோமேயொழிய, அடைந்து அனுபவிக்கும் பலனைப் பெறவில்லையே; அதைத் தாராய்" என்கிறார்கள் அடுத்தபடியாக: (கிங்கிணிவாய்...விழியாவோ) "கண்ணும் செந்தாமரை கையும் அவை அடியோ அவையே" "செந்தாமரைத் தடங்கண் செங்கனிவாய் செங்கமலம் செந்தாமரையடிகள்" என்கிறபடியே உன்னை அடைந்தவுடன் உன்னடியார் அனுபவிப்பது உன் தாமரைக் கண்களையேயன்றோ; அக்கண்ணழகை எங்களுக்குக் காட்டுவாயாக என்கிறார்கள். (கிங்கிணி வாய்ச்செய்த தாமரை) கிங்கிணிபோலே பாதிமலர்ந்திருக்கும் தாமரை. முழுவதும் மூடாமலும் முழுவதும் மலராமலும் இருக்கிறதாகையாலே, இவனுடைய கண்ணுக்கு என்றும் ஒப்பற்ற உபமானமாயிருக்கும் தாமரைக்கு "கிங்கிணிவாய்ச் செய்த" என்று ஒரு விசேஷணமிடுகிறார்கள். இவனுடைய ஸ்வாதந்த்ரியம் இவன் கண்ணைத் திறக்கவொட்டாமல் செய்கிறது; புருஷகார பூதையான நப்பின்னைப் பிராட்டியின் ஸம்பந்தம் கண்ணை மூடவொட்டாமல் செய்கிறது. இவர்களுடைய அபராதம் கண்ணை மூடச்செய்கிறது; அவனுடைய கிருபை மலரச் செய்கிறது. அவனுடைய கர்மபாரதந்த்ரியம் மூடச்செய்கிறது; ஆச்ரிதபாரதந்த்ரியம் அலரச்செய்கிறது. காலத்தின் இளமை இத் தாமரையை மொட்டிக்கச் செய்கிறது; இவர்களுடைய ஆர்த்தத்வனியாகிற ஆதித்யன் அலரச்செய்கிறது. இக் காரணங்களாலே கிங்கிணிவாய்ச்செய்த தாமரைப் பூவையே உபமானமாகச் சொல்ல வேண்டியிருக்கிறது.

(செங்கண்) ஆச்ரித வாத்ஸல்யத்தாலே சிவந்திருக்கும் கண்கள். எப்படியெல்லாம் விசேஷித்து உபமானமிட்டாலும் இவனுடைய கண்களுக்கு நேராகமாட்டாமையாலே அக்கண்களையே சொல்லுகிறார்கள். தாமரைக்கு இவன் கண்ணுக்குள்ள சிவப்பு சிறிதிருந்த போதிலும், இவன் கண்ணிலே வெள்ளமிடும் வாத்ஸல்யம் முதலான குணங்களை அதில் காணமுடியாதன்றோ. "கட்டுரைக்கில் தாமரை நின் கண்பாதம் கையொவ்வா" என்றாரன்றோ ஆழ்வாரும். (சிறுச்சிறிதே) குளம்படியிலே கடலை அடக்கமுடியாதாப்போலே உன் கண்ணழகு வெள்ளத்தை முழுவதும் எங்கள்மேல் பாயவிட்டால் எங்களால் தாங்கமுடியாது. ஆகையால் சிறுகச் சிறுக எங்களை நோக்காய் என்கிறார்கள். கண் விழிக்க ஆரம்பிக்கும் தசையிலிருந்து முழுவதும் விழிக்கும் தசை வரையில் பல தசைகளிருக்குமே; அவை ஒவ்வொன்

றின் அழகையும் காண ஆசைப்பட்டுச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். (எம்மேல் விழியாவோ) கோடையில் காய்ந்துபோன பயிர் போலேயிருக்கும் எங்கள்மேல் உன் கண்ணுகிற கார்மேகம் கருணைமழையைப் பொழியாதோ? (எம்மேல்) மேகஜலத்தை எதிர்பார்த்திருக்கும் சாதகபக்ஷிபோல், உன் கடாக்ஷவர்ஷத்தை நோக்கியிருக்கும் எங்கள்மேல். (விழியாவோ) "இளவாய்ச்சியர் கண்ணினுள் விடவே செய்து விழிக்கும் பிரான்" என்றதெல்லாம் பொய்யாயிற்றோ இப்போது?

"என் கண் உங்கள்மேல் விழித்தால் உங்களுக்கென்ன பலன்" என்று கண்ணன் கேட்கச் சொல்லுகிறார்கள்:(திங்களும்...அங்கண்) "கதிர் மதியம்போல் முகத்தான்" என்று முகத்துக்குச் சொன்ன தன்மைகள் முகத்தில் முக்கியமானதான கண்ணுக்கும் பொருந்தியிருக்கிறபடி: எதிரிகளுக்கு ஆதித்யனைப்போலே அணுகவொண்ணுதிருக்கையையும், அடியார்க்குச் சந்திரன்போல் ஆநந்தகரமாயிருக்கையையும் சொல்லுகிறது. "விருபாக்ஷம்" என்று நாராயண வல்லியும் நவின்றதன்றோ. ஸூர்யனுடைய ஒளியையும், சந்திரனுடைய குளிர்ச்சியையும் உடைய கண்கள் என்றும் கொள்ளலாம். "சக்ஷுஷீ சந்த்₃ரஸூர்யௌ" என்று முண்டகோபனிஷத்திலும், "சந்த்₃ர ஸூர்யௌ ச சக்ஷுஷீ" என்று ஸ்ரீராமாயணத்திலும். "சந்த்₃ர ஸூர்யௌ ச நேத்ரே" "சந்த்₃ராதி₃த்யௌ ச சக்ஷுஷீ" என்று மஹாபாரதத்திலும் சொல்லப்பட்டிருக்கும் அர்த்தத்தை அறிவிக்கிறார்கள் என்றும் கொள்ளலாம்.

"தஸ்ய சிந்தயதோ நேத்ராத் தேஜஸ் ஸமப₄வந்மஹத் |
த₃க்ஷிணம் வஹ்நிஸங்காஶம் வாமம் துஹிநஸந்நிப₄ம் ||"

[அப்படி நினைத்துக்கொண்டிருந்த (பகவானுடைய) கண்களிலிருந்து ஒரு பெரிய தேஜஸ் உண்டாயிற்று. வலதுகண் நெருப்பைப்போல் விளங்கிற்று. இடதுகண் பனியைப்போலிருந்தது.] என்று வராஹபுராணத்தில் சொல்லியதை அடியொற்றிச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். "வேதமனைத்துக்கும் வித்தாகும் கோதை தமிழ்" என்கிறபடியே வேதார்த்தங்கள் எல்லாவற்றையும் தன்னுட் பொதிந்து கொண்டிருப்பதன்றோ கோதை தமிழ். (திங்களும் ஆதித்தியனும்) தங்களுடைய விரஹதாபத்தைப் போக்கடிக்கையாலே சந்திரனுக்கும், அஞ்ஞானமாகிற இருளை அகற்றுகையாலே ஆதித்யனுக்கும் ஒப்பாயிருக்கிறபடி.

(அங்கண்) அழகிய கண்கள். திருக்கண்களுக்கு அச்சந்திர ஸூர்யர்களும் உபமானமாகப் போராதிருக்கையாலே "அழகிய கண்" என்கிறார்கள். "சந்த்ரகாந்தாநநம் ராமம்" [சந்திரன்போன்று அழகிய முகத்தையுடைய ராமனை] என்ற வால்மீகி பகவானும், "ஐயோ! தப்பச்சொன்னோம்" என்று நினைத்து, "அதீவ ப்ரியதர்சநம்" [(அச்சந்திரனைக்காட்டிலும்) மிகவும் காணவினியவனாயிருப்பவன்]என்றாரன்றோ.அம்மாதிரியே இவர்களும் சந்திரஸூர்யர்களை உபமானமாகச் சொன்னவுடன் "அம் கண்" என்கிறார்கள். "சந்த்ரமா மநஸோ ஜாத: சக்ஷோஸ் ஸூர்யோ அஜாயத" [சந்திரன் அவன் மனத்திலிருந்து பிறந்தான்; ஸூர்யன் கண்களிலிருந்து பிறந்தான்] என்று அவனிடமிருந்து பிறக்கையாலேயன்றோ இவைகளுக்கும் சில பெருமைகளுள்ளன. "ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ர தாரகம்" என்று அவனுக்கெதிரில் இவை அஸத்ஸமமாகவன்றோ கிடப்பது. மேலும், ராஹு கேதுக்களால் மறைக்கப்படுகை, குறைந்து வளர்ந்து வருகை, களங்கத்தை உடைத்தாயிருக்கை, காணக்கண் கூசும்படியாயிருக்கை முதலிய தோஷங்களுண்டு அவைகளுக்கு. இத்தோஷங்களற்றவையாகையாலே இவன் கண்களை "அம் கண்" என்கிறார்கள். (இரண்டும்) இரண்டாயிருக்கையால் வந்தசேர்த்தியழகைச் சொல்லுகிறது. (இரண்டும் கொண்டு) "சிறுச் சிறிதே" என்ற தசைபோய் முழு நோக்கும் பொறுக்கும்படியான தசையாயிருக்கையாலே சொல்லுகிறார்கள்.

"திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல் கிங்கிணிவாய்ச் செய்த தாமரைப்பூப்போலே செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ" என்று கூட்டியும் பொருள்கொள்ளலாம். சந்திரனும், ஸூர்யனும் (ஒரே காலத்தில்) எழுந்ததுபோல் (பாதி மூடியும் பாதி திறந்துமுள்ள) கிங்கிணிபோல் மலர்ந்துள்ள தாமரைப்பூப்போலே சிவந்திருந்துள்ள கண் சிறிது சிறிதாக எங்கள்மேல் விழிக்காதோ? என்று பொருள். சந்திரனைக் கண்டால் மலரவும், சூரியனைக் கண்டால் குவியவும் கடவதான தாமரை இருவரும் சேர்ந்து ஒரே காலத்தில் உதித்தால் பாதி மலர்ந்தும் பாதி குவிந்துமிருக்குமன்றோ. அம்மாதிரியேயுள்ளது திருக்கண்களாகிற தாமரையின் நிலை என்றபடி. இங்கு சந்திர ஸூர்யர்கள் உண்டோ எனில்: சங்கசக்ரங்களே சந்திர ஸூர்யர்கள் ஆகக்கடவன.

**"ஆங்கு மலரும் குவியுமால் உந்திவாய்**
**ஓங்கு கமலத்தின் ஒண்போது — ஆங்கைத்**

திகிரி சுடரென்றும் வெண்சங்கம் வானில்
பகரு(ம்) மதியென்றும் பார்த்து"

என்ற பேயாழ்வார் பாசுரத்தை அடியொற்றுகிருர்கள். (எங்கள் மேல்) நீர்ச்சாவிபோலே நொந்து கிடக்கும் எங்கள்மேல். (திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல்...எங்கள்மேல்)

''எரிகொள் செந்நாயிறு இரண்டுடனே உதயம்மலைவாய்
விரிகின்ற வண்ணத்த எம்பெருமான் கண்கள் மீண்டவற்றுள்
எரிகொள் செந்தீவீழசுரரைப்போல எம்போலியர்க்கும் விரிவ''

என்று நம்மாழ்வார் அருளியதுபோல் இரு கண்களும் இரண்டு ஆதித்யராக நின்று எங்களைக் கொளுத்தலாகாது. எங்களைச் சேர வொட்டாதார்க்கு சூரியன் போலவும், எங்களுக்குச் சந்திரன் போலேயும் ஆகவேண்டும். ஒரே கண் இரண்டுவிதமாக ஆகுமோ வெனில்: அகடிதகடநாஸாமார்த்தியமுள்ள இவனுக்காகும். நரஸிம்ஹாவதாரகாலத்தில் ''சீற்றத்தோடு அருள் பெற்றவன்'' அன்றே இவன். ''ஸிம்ஹம் ஆனையோடே பொராநின்ருலும் குட்டிக்கு முலை கொடுக்குமாபோலே'' என்று பட்டர் அருளிச்செய்வர்.

''இழவு தரியாததோரீற்றுப் பிடி இளஞ்சீயம் தொடர்ந்து
முடுகுதலும்
குழவியிடைக் காலிட்டு எதிர்ந்து பொரும்''

என்ருரன்றே பெரியாழ்வாரும். (நோக்குதியேல்) நீ நோக்கினல் உண்டு; எங்களால் ஆவதொன்றுமில்லை. (எங்கள்மேல் சாபம் இழிந்து) நீ இப்படி எங்களை நோக்கினல் நாங்கள் உன்னைப் பிரிந்து படும் துக்கம் நீங்கும். அநுபவித்தேதீரவேண்டியிருக்கையாலும், சாபம்போலே கொடிதாயிருக்கையாலும், இத்துன்பத்தைச் சாப மென்கிருர்கள்.

## திருப்பாவை—இருபத்துமூன்ரும் பாட்டு.

23. மாரி மலைமுழஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்க மறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர் பொங்க வெப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்

போதருமா போலேநீ பூவைப்பூ வண்ணாவுன்
கோயில்நின் றிங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
சீரிய சிங்கா சனத்திருந்து யாம்வந்த
காரிய மாராய்ந் தருளேலோ ரெம்பாவாய்.

**பதவுரை:—மாரி** *மழைகாலத்தில்,* **மலைமுழஞ்சில்—** *மலைக்குகையொன்றில்,* **மன்னிகிடந்து** — *(பேடையோடு ஒன்றாகப்) பொருந்திக்கிடந்து,* **உறங்கும்**–*தூங்குகின்ற,* **சீரிய— சிங்கம்**–*(வீர்யமாகிய) சீர்மையை உடைய சிங்கம்,* **அறிவுற்று—** *உணர்ந்தெழுந்து,* **தீ விழித்து**–*நெருப்புப் பொறி பறக்கும்படி கண்களை விழித்து,* **வேரி மயிர்—** *பரிமளம் நிரம்பிய பிடரி மயிர்கள்,* **பொங்க**–*எழும்படி,* **எப்பாடும்—** *எல்லாப் பக்கங் களிலும்,* **பேர்ந்து** —*அசைந்து,* **உதறி**—*(தேஹத்தை) உதறி,* **மூரி நிமிர்ந்து**—*உடல் ஒன்றாகும்படி நிமிர்ந்து,* **முழங்கி**—*கர்ஜனை செய்து,* **புறப்பட்டு**—*வெளிப்புறப்பட்டு,* **போதரும் ஆ போலே**–*வருகிறது போல்,* **பூவை பூ வண்ணா**—*காயாம்பூ போல் நிறத்தையுடையவனே!* **நீ**–*நீ,* **உன் கோயில் நின்று—** *உன்னுடைய திருக்கோயிலிலிருந்து,* **இங்ஙனே போந்தருளி—** *இவ்விடத்திலே எழுந்தருளி,* **கோப்பு உடைய** — *அழகிய அமைப்பையுடைய,* **சீரிய**—*மேன்மைபெற்ற,* **சிங்காசனத்து—** *ஸிம்ஹாஸனத்தின்மீது,* **இருந்து**–*எழுந்தருளியிருந்து,* **யாம் வந்த காரியம்** — *நாங்கள் (மநோரதித்துக்கொண்டு) வந்த காரியத்தை,* **ஆராய்ந்து அருள்**–*விசாரித்தருளவேணும்.*

*அவதாரிகை:—*இவர்கள் மேலே கண்டவாறு விண்ணப்பம் செய்தவுடன் "ஐயோ! நப்பின்னைப் பிராட்டியைச்சேர்ந்தவர்களான இவர்களை இப்பாடு படும்படி கண்டிருந்தோமே" என்று தன்னைத் தானே வெறுத்து, இவர்களுக்கு நல்வார்த்தைகளை அருளிச்செய்ய, இவர்களும் இவன் நடையழகைக் காண நினைத்து, "இங்கு நின் றும் புறப்பட்டு எழுந்தருளி, சீரிய சிங்காசனத்திலிருந்து எங்கள் குறையை விசாரித்தருளவேணும்" என்கிறார்கள். பிராட்டியின் ஸம்பந்தம் பெற்றவர்கள் "ஆற்றாது வந்து" என்றும், "சங்க மிருப்பார்போல் வந்து" என்றும் சொன்னால் பொறுக்கக்கூடிய வனோ இவன். ஸ்ரீ ராமானுஜருடைய சிஷ்யர்களில் ஒருவரான

கிடாம்பியாச்சான், திருமாலிருஞ்சோலை அழகர் திருமுன்பே நின்று, "அபராத₄ ஸஹஸ்ர–ப₄ாஜநம் பதிதம் பீ₄மப₄வார்ணவோத₃ரே அக₃திம்" [ஆயிரக்கணக்கான அபராதங்களுக்கு இருப்பிடமானவனாய், பயங்கரமான ஸம்ஸாரஸாகரத்தின் நடுவில் விழுந்துகிடப்பவனாய், கதியற்றவனை என்னை] என்று ஆளவந்தார் ஸ்தோத்ரரத்நத்தில் அருளிச்செய்த சுலோகரத்நத்தை அநுஸந்திக்க, "நம் இராமானுசனையுடையையாயிருந்துவைத்து அகதி (கதியற்றவன்) என்று என்முன்னே சொல்லாதேகிடாய்" என்று அழகர் அருளிச்செய்தார் என்னும் ஐதிஹ்யத்தை இவ்விடத்தில் அநுஸந்திப்பார்கள். நிற்க; இவன் நடையழகுக்கு ஒரு உபமானமிட முற்பட்டு,

"பர்வதாதி₃வ நிஷ்க்ரம்ய ஸிம்ஹோ கி₃ரிகு₃ஹாஶய:"

[கிரிகுகையிலே இருக்கும் சிங்கம் அம் மலையைவிட்டுப் புறப்பட்டாப் போலே] என்று வால்மீகி பகவான் அருளிச்செய்த ரீதியிலே பேசுகிறார்கள்.

வியாக்கியானம்:—(மாரி) வெளியெங்கும் ஜலப்ரளயமாயிருக்கையாலே ஸர்வஜந்துக்களும், தங்களிருப்பிடத்திலே இருந்து அபிமத விஷயங்களோடே கூடியிருக்கும் காலம். அரசர்களும் அரண்மனையைவிட்டுப் புறப்படாத காலமாகையாலே ம்ருகராஜனை இதுவும் மலைமுழஞ்சை விட்டுப்புறப்படாமலிருக்கிறது. ஸுக்ரீவனையும், தன் காரியத்தை மறந்து உள்ளே உறங்கிக்கிடக்கும்படி செய்த காலமன்றோஇது. பெருமாளும் இக்காலத்திலே மால்யவானுகிற மலையைப் பற்றியன்றோ கிடந்தது. "பிரிந்தார் கூடும் காலம்; கூடினூர் போகரஸம் அனுபவிக்குங்காலம்; இப்படிப்பட்ட காலத்திலே நாங்கள் மட்டும் உன் வாசலிலேயேயிருந்து துவளுவதோ?" என்று பாவம். (மாரி) "கண்ணன் மண்ணும் விண்ணும் கடல்கொண்டெழுந்த அக்காலங்கொலோ புயற்காலங்கொலோ" [திருவிரு–18] என்று கலங்கவைக்கும் காலம்; "காரிகையார் நிறை காப்பவரார் என்று கார்கொண்டின்னே மாரி கை ஏறி அறையிடும் காலம்" [திருவிரு-19] "பிரிந்தார் கொடுமை குழறு தண் பூம் காலம்" [திருவிரு-7] "கலந்தார் வரவெதிர் கொள்ளுங்காலம்" [திருவிரு-68] "பெண்ணீர்மை ஈடழிக்கும் காலம்" [நாச்–திரு 8–1]. (மாரி) இசையேன் என்றிருந்த இடையர்கள் இசைந்திருக்கும் காலம்; கண்ணனும் நப்பின்னைப் பிராட்டியும் சேர்ந்து ஒரு கட்டிலிலே இருக்கும் காலம். (மலைமுழஞ்சில்)ஸிம்ஹம் ஒரு மலைக் குகையையே பற்றிக்கிடக்குமன்றோ; இந்த யசோதை இளஞ்சிங்கமும் "நப்பின்னை

கொங்கைமேல் வைத்துக்கிடந்த மலர்மார்பா'' என்கிறபடியே நீளா தேவியின் துங்கஸ்தநகிரியைப் பற்றிக்கிடப்பதொன்று. ''மலராள் தனத்துள்ளான்'' ''சங்கு தங்கு முன்கை நங்கை கொங்கை தங்க லுற்றவன்'' ஸ்ரீஸ்தநாபரணம் தேஜ:'' 'ஸ்தந ஸ்தபகசஞ்சல: ஸ்ரீரங்க ராஜப்ருங்க:'' என்றன்றே இச்சிங்கம் தங்குமிடத்தைப் பேசுகிறார்கள். (மன்னிக்கிடந்து) மலையிலுள்ள ஒரு பாறையோ இது என்னும்படி அம்மலையுடன் பொருந்திக்கிடந்து. ஒருவர்க்கும் அஞ்சவேண்டாதபடி யிருக்கையாலே இப்படிப்பொருந்திக்கிடக்கிறது. ''தன் பேடையோடே ஒன்றாகப் பொருந்திக் கிடந்து'' என்றும் பொருள் கொள்ளலாம். இவனும் ''வைத்துக்கிடந்த மலர்மார்பா'' என்னும்படி கிடக்கிறானன்றே. (கிடந்து உறங்கும்) ஸ்பர்ச ஸுகத்தாலே தன்னை மறந்து உறங்குகிறது. இவனும் ''ஸுகஸுப்த:'' என்றும், ''கிடந்த தோர் கிடக்கை'' என்றும், ''உறங்குவான் போல் யோகுசெய்த பெருமானை'' என்றும் கண்டார் ஈடுபடும்படியன்றே கிடந்துறங்குவது.

(உறங்கும் சீரிய சிங்கம்) உறங்கும்போதே ஒருவரும் அணுக வொண்ணாமலிருக்கும்படியான வீர்ய ஸ்ரீயையுடைய சிங்கம். ''ஸுக ஸுப்த: பரந்தப:'' [ஸுகமாகத் தூங்குமவன்: (இப்படித்தூங்கும் போதும்) எதிரிகளைத் தவிக்கச்செய்பவன்.] என்று சொல்லப்பட்டவனன்றே இவன். சீரிய—வீர்யமாகிற சீர்மையை உடைய. (சிங்கம்) ''ம்ருகேந்த்ரன்'' என்றும், 'ம்ருகராஜன்'' என்றும், ஸர்வ ஜந்துக்களாலும் கொண்டாடப்படும்படி பிறப்பினாலேயே பெருமையை உடைத்தாயிருப்பது. ''யசோதை இளஞ்சிங்கம்'' ''சிற்றாயர் சிங்கம்'' என்று புகழப்படுமவனன்றே இவனும். (சீரிய சிங்கம்) ''நரஸிம்ஹம்போலே கலந்தகட்டியாய்ச் சீர்மைகெட்டிராதே சிற்றாயர் சிங்கத்துக்கு'' என்று ஆறாயிரப்படி.

(அறிவுற்று) தன்னை எழுப்புவதொன்றுமில்லாமையாலே தானாகக் காலம் உணர்த்த உணர்ந்து. இவன் ஆச்ரிதருடைய ஆர்த்த த்வனியாலே உணருமவன். ''போதித: ஸ்ரீமாந்'' என்கிறபடியே எழுந்திருக்கும்போதுள்ள அழகைக் காண ஆசைப்படுகிறார்கள். (அறிவுற்று) அறிவற்ற ஒரு பொருள் இப்போதுதான் அறிவுபெற்றது என்றாப்போலேயிருக்கிறது. தன்னடியார்க்காக உணரும் போதே இவன் அறிவுபெற்றவனாகிறான்போலும். (தீவிழித்து) விழித்தவுடன் தன் பேடைக்கும் குட்டிகளுக்கும் அருகே நிற்கவொண்ணாதபடி நெருப்புப்பொறி கக்க விழித்து. ''பூங்கோதை

யாள் வெருவப் பொன்பெயரோன் மார்பிடந்த'' என்றும், ''எரிந்த பைங்கண் இலங்குபேழ்வாய் வயிற்றெடுதெய்வுருவென்று, இரிந்து வானோர் கலங்கியோட'' என்றும் சொல்லுகிறபடியே விழிக்கும் விழியைக்கண்டு பிராட்டியும் தேவர்களும் பயப்படும்படியன்றோ விழிக்கிறான் இச்சிங்கப்பிரானும். இப்படி பயங்கரமான விழியைக் காண ஆசைப்படுகிறதென்? எனில்: ''கொண்ட சீற்றமொன்று உண்டு'' என்கிறபடியே அடியார்க்காக அவர்கள் விரோதிகள் மேல் கொண்ட கோபமாகையாலும், இப்படிக் கோபங்கொண்ட காலத்திலும், '' நாரஸிம்ஹவபு: ஸ்ரீமாந் '' ''நரங்கலந்த சிங்கமாய்க் கீண்ட திருவன்'' '' அழகியான்தானே அரிபுநவன்தானே '' என்று அழகில் மிக்கவனாய் விளங்குகையாலும், இவர்கள்தான் அநந்ய ப்ரயோஜநர்களாகையாலும், ''உன் செய்கை நைவிக்கும்'' என் கிறபடியே இவனுடைய எச்சைய்கையும் இவர்களை உருக்குகையா லும், இவனுடைய கோபமும் இவர்களுக்கு மேலான உத்தேச்ய மாயிருக்கிறது.

> ''இவையா பிலவாய் திறந்தெரிகான்ற
> இவையா எரிவட்டக்கண்கள் -- இவையா
> எரிபொங்கிக் காட்டும் இமையோர் பெருமான்
> அரிபொங்கிக் காட்டும் அழகு''

என்று ஆழ்வார் நினைத்து நினைத்து ஆநந்தப்படும்படியானதன்றோ இவன் கோபங்கொண்டகாலத்திலுள்ள அழகு. (வேரிமயிர் பொங்க) ஸிம்ஹஜாதிக்குரியதான கந்தம் நிறைந்த பிடரி மயிர்கள் சிலம்பும் படியாக. (வேரிமயிர்) ''ஸர்வக$_3$ந்த$_4$:'' [எல்லா கந்தங்களையும் தன் னுட்கொண்டவன்.] என்றும், ''ஹிரண்யகேச: ஹிரண்யச்மச்ரு:'' [பொன்மயமான தலைமயிரையும் மீசையையுமுடையவன்.] என்றும் சொல்லப்படுமவனன்றோ இக்கேசவனும். (எப்பாடும் பேர்ந்து) பாதிவிழிப்பும், பாதி உறக்கமுமாயிருக்கிறதாகையாலே நாலு பக்கங்களிலும் அசைகிறபடி. (உதறி) உறக்கத்தில் அவயவங்களைச் சேரவிட்டுக்கிடந்த அலுப்புத்தீர அவயவங்களைத் தனித்தனியே உதறுகிறது. (மூரி நிமிர்ந்து) அவயவியான உடலையும் ஒன்றாக நிமிர்த்துகிறது. (முழங்கி) மற்ற துஷ்டப்பிராணிகள் கிடந்த விடத்திலேயே அழிந்து போகும்படி கர்ஜனை செய்கிறது. மேக முழக்கத்தைப்போன்றதான இவனுடைய குரலும் எதிரிகளைக் கேட்டமாத்திரத்தில் மண்ணுண்ணப்பண்ணி, பெண்களை எதிர் கொள்ளக்கடவதாயிருக்கும். (முழங்கி) ''பெண்காள்! வந்திர்

களோ!" என்று இவன் முழங்குவதைக்கேட்க ஆசைப்படுகிறார்கள். (அறிவுற்று...முழங்கி) "எங்கள் கண்ணுக்கும் காதுக்கும் விருந் தளிப்பாயாக" என்று வேண்டுகிறார்கள். (புறப்பட்டுப் போதருமா போலே) கிரிகுகையிலிருந்து இப்படிப்பட்டதொருஸிம்ஹம் புறப் படுமாப்போலே நீ புறப்படவேணும்.

"பெண்காள்! ஸிம்ஹமோ நமக்கு த்ருஷ்டாந்தமாவது" என்று இவன் முழங்கச்சொல்லுகிறார்கள்: (பூவைப்பூ வண்ணா) பூவைப் பூவைப்போன்ற நிறத்தையுடையவனே! இயற்கையான காம்பீர்ய வீர்யங்களுக்கும் கர்ஜனைக்கும் ஸிம்ஹத்தை ஒரு உபமானமாகச் சொன்னோமித்தனை. உன் வடிவழகும், நிறமும், ஸௌகுமார்யமும், குளிர்த்தியும் அதற்குண்டோ? இவைகளுக்குப்போலியாக பூவைப் பூவைச் சொல்லுகிறோம் இப்போது. உண்மையை ஆராய்ந்தால் அந்த ஸிம்ஹமும் உனக்கொப்பாகாது. இப்பூவைப்பூவும் உனக் கிணையாகாது என்கிறார்கள். (பூவைப்பூ வண்ணா) "அதஸீபுஷ்ப ஸங்காசம்" "இந்தீவரச்யாம:" "காயாம்பூ மலர்ப்பிறங்கல் அன்னமால்" என்று ஞானிகள் ஈடுபடும்படியன்றோ இவன் வடிவிருப்பது.

"கொண்டல்தான் மால்வரைதான் மாகடல்தான் கூரிருள்தான்
வண்டருப் பூவைதான் மற்றுத்தான்—கண்டநாள்
காருருவம் காண்தோறும் நெஞ்சோடும், கண்ணனார்
பேருருவென் றெம்மைப் பிரிந்து"

என்று இவனுடைய உருவிற்குப் போலியாயிருக்கும் பல வஸ்துக் களில் பூவைப்பூவையும் ஒன்றாக அருளிச்செய்தார் நம்மாழ்வார். ஆண்டாள்தானும்,

"பைம்பொழில் வாழ் குயில்காள் மயில்காள் ஒண்கரு விளைகாள்
வம்பக்களங்கனிகாள் வண்ணப்பூவை நறுமலர்காள்....
எம்பெருமானுடைய நிறம் உங்களுக்கென் செய்வதே"

என்று இவ்வர்த்தத்தை அருளிச்செய்தாள். இவனுக்கு நேர் நிற்ப தொரு உபமானமுமில்லாமையாலே உபமானங்களைச் சேர்த்துச் சொல்லுகிறார்கள். "இப்படியாகில் உள்ளே புகுருங்கள்" என்றான். "உன் நடையழகைக்காணவன்றோ நாங்கள் வந்திருப்பது. ஆகை யால் வெளியே புறப்பட்டருளாய் என்கிறார்கள்: (உன் கோயில் நின்று....) படுக்கையிலேஎழுந்தருளியிருக்கும்அழகை அநுபவித்து

விட்டோம். இனி, நடையழகையும், சீரிய சிங்காசனத்திலே வீற்றிருக்கும் அழகையும் காணவேணும். (பூவைப்பூ வண்ண உன் கோயில் நின்று) இவ்வழகு வெள்ளத்தையெல்லாம் திருமாளிகைக்குள்ளே தேக்கிவைக்காதே அணைவெட்டிவிடாய். (உன் கோயில்) ''நந்தகோபனுடைய கோயில்''என்றார்கள் கீழே பதினாறும் பாட்டில். இங்கு ''உன் கோயில்'' என்கிறார்கள். இருவருக்கும் பொதுவாயிருப்பதொன்று என்பது தெளிவாகிறது. ''தே₃வாநாம் பூ:'' ''மரீசீநாம் பத₃ம்'' ''வானவர் நாடு'' என்று பெயர்பெற்று விளங்கும் பரமபதமே''தத்₃விஷ்ணோ:பரமம் பத₃ம்'' ''வேத₄ஸ:பத₃ம்'' ''கண்ணன் விண்'' என்றும் பெயர்பெற்று விளங்குகிறாப்போலே இதுவும் விளங்குகிறது. ப்ரணவம்போலே ஜீவாத்மபரமாத்மாக்கள் இருவர்க்கும் ஒரே உறைவிடமாயிருக்கிறபடி. (இங்ஙனே போந்தருளி) பிராட்டி மங்களாசாஸனம் பண்ண, ''பர்வதாதி₃வ நிஷ்க்ரம்ய ஸிம்ஹோ கி₃ரி கு₃ஹாசய:'' என்று வால்மீகிபகவான் பாசுரமிடும்படி புறப்பட்டாப்போலே நப்பின்னைப்பிராட்டியுடன் புறப்படவேணும். (இங்ஙனே) எங்களுக்கு முன்னே நடையிடவேண்டும். (போந்தருளி)

**''கானகம்படி உலாவி உலாவிக்**
**கருஞ்சிறுக்கன் குழலூதினபோது**
**மேனகையோடு திலோத்தமை அரம்பை**
**உருப்பசியர் அவர் வெள்கி மயங்கி**
**வானகம்படியில் வாய்திறப்பின்றி**
**ஆடல்பாடலவை மாறினர்தாமே''**

என்று அப்ஸரஸ்ஸுக்களும் ஆழங்காற்படும் உன் நடையழகைக் காட்டவேணும். ''காவிமலர் நெடுங்கண்ணார் கைதொழ வீதி வருவான்'' என்று இவன் நடையழகைக் கண்டு கையெடுத்துக் கும்பிடுபவர்களன்றோ பெண்கள். (போந்தருளி) நாலுவகை நடையையும் காட்டிக்கொண்டு எழுந்தருளவேணும். ரிஷபத்தினுடைய செருக்கும், மத்தகஜத்தினுடைய மதிப்பும், புலியினுடைய சிவிட்கும், சிங்கத்தின் பிறரையடக்கும் பெருமையும் தோற்ற நடக்கிறபடி. இப்படி நாலுவிதமான நடையழகுமுடையவன் என்பதை ''சதுர்க₃தி:'' என்று ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் படிக்கப்படும் திருநாமம் உணர்த்திற்று. ''ஆயர்பாடி கவர்ந்துண்ணும் காரேறு'' ''மயாஸௌ புருஷர்ஷப₄:'' ''வாரணம் பையநின்றூர்வதுபோல்'' ''கைம்மாவின் நடையன்ன மென்னடை'' ''மத்தமாதங்க₃க₃ாமிநம்'' ''நரசார்த்தூ₃ல'' ''ராமசார்த்தூ₃லம்'' ''சிற்றாயர் சிங்கம்'' ''ஸிம்ஹ-விக்

ராந்தக₃ாமிநம்'' ''க₃ஜஸிம்ஹக₃தீ வீரௌ சார்த்தூ₃ல வ்ருஷபே₄ாபமௌ'' [வீரரான ராமலக்ஷ்மணர்கள் யானை, சிங்கம், புலி, ரிஷபம் ஆகிய இவைபோன்ற நடையுடையவர்கள்.] என்ற விடங்களிலே இவனுடைய இந்நடையழகுகள் அனைத்தும் அறிவிக்கப்பட்டன. ''இவையெல்லாம் நமக்கு நம்பெருமாள் நடையழகிலே காணலாம்'' என்று அருளிச்செய்வர்கள்.

''வெளியிலே வந்து உங்கள் குறைகளைத் தீர்க்கவேண்டுமித்தனையன்றோ வேண்டுவது'' என்று கண்ணன் கேட்க, ''நீ கிடக்கும் அழகையும், நடக்குமழகையும் காட்டினுல் மட்டும் போராது. நீ வீற்றிருக்குமழகையும் காட்டவேண்டும்'' என்கிறுர்கள்:(கோப்புடைய ......) படுக்கையில் வார்த்தையாக வொண்ணுது; வழி நடை வார்த்தையும் அமையாது; சீரிய சிங்காசனத்திலிருந்து வார்த்தைசொல்ல வேணும். (கோப்புடைய) உபயவிபூதி நிர்வாஹத்திற்கு இருப்பிடமாயிருக்கும் பெருமையைச் சொல்லுகிறது. அன்றிக்கே, பாஞ்சராத்ர சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட படியே, ''தர்மம், அதர்மம், ஜ்ஞானம் அஜ்ஞானம், வைராக்யம், அவைராக்யம், ஐச்வர்யம், அனைச்வர்யம் என்னும் எட்டு கால்களை உடைத்தாயிருக்கையாகிற பெருமையைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். தர்மம் முதலான பதங்கள் அவற்றுக்கு அபிமானிகளாயிருக்கும் நித்யஸூரிகளைச் சொல்லுகிறது. (சீரிய சிங்காசனத்து) சீரிய சிங்கத்திற்குத் தகுந்தது சீரிய சிங்காசனமேயன்றோ. (சீரிய) பெண்களுக்குப் பொய்குறிக்கும் 'பொய் நம்பி'யாகிய க்ருஷ்ணனேயாகிலும், இவ்வாஸனத்திலிருக்கும்போது பொய் சொல்லவொண்ணுது. இதுவே ஆஸனத்துக்குச் சீர்மை. கடற்கரையில் வார்த்தை, தேர்த்தட்டில் வார்த்தை என்னுமாபோலே. அணுவான ஜீவன் சென்று அடியிட்டாலும் பரமபுருஷனோடு ஸாம்யத்தைக் கொடுக்கும் பெருமையைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். ''இருந்தால் சிங்காசனமாம்'' என்னும் சிங்காசனத்தில் ''பாதே₃நாத்₄யாரோஹதி'' என்கிறபடியே ஏறினவுடனேயன்றோ இச்சேதனன் பரமசேதனனுடன் ஸாத₄ர்ம்யத்தை அடைவது.(இருந்து) ''பிரான் இருந்தமை'' ''நிற்பதும் இருப்பதும்'' ''இருந்திடாய் எங்கள் கண்முகப்பே'' என்று இவர்களை நெஞ்சுருகப்பண்ணுவதன்றோ இவனுடைய இருப்பு. (விழித்து...போந்தருளி...சிங்காசனத்திருந்து) ''தடங்கொள் தாமரைக்கண் விழித்து நீ யெழுந்துன் தாமரைமங்கையும் நீயும் இடங்கொள் மூவுலகும் தொழ இருந்தருளாய்'' என்ற நம்மாழ்வாரைப்போலே ஆசைப்படுகிறுர்கள்.

(யாம் வந்த) நீ வரவிருக்கும் நாங்கள் ஆற்ருமையாலே உன்னைத் தேடி வரும்படியான. (காரியம்) காரியம் இன்னதென்பதைச் 'சிற்றஞ்சிறுகாலே' என்னும் பாட்டில் சொல்லுகிருர்கள். (ஆராய்ந்தருள்) "நாம் நாட்டில் பிறந்து படாதன பட்டதுக்குமேலே இவர்கள் பாடுபட்டார்களே; ஒருவரையொருவர் எழுப்புவது, வாசல் காப்பானையும், கோயில் காப்பானையும் எழுப்புவது, ஐயரை எழுப்புவது, ஆய்ச்சியை எழுப்புவது, நம்மையெழுப்பி, அண்ணரை எழுப்பி, நப்பின்னையை எழுப்பி, மறுபடியும் நம்மை எழுப்புவது இப்படிப் படாதன படும்படி நாமிருந்தோமே" என்று நினைத்து "பெண்காள் என்ன செய்தீர்கள்? என்ன பாடுபட்டீர்கள்?" என்று விசாரித்தருளவேணும்.

## திருப்பாவை—இருபத்துநான்காம் பாட்டு.

24. அன்றிவ் வுலக மளந்தா யடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்ருய் திறல்போற்றி
பொன்றச் சகட முதைத்தாய் புகழ்போற்றி
கன்று குணிலா வெறிந்தாய் கழல்போற்றி
குன்று குடையா வெடுத்தாய் குணம்போற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி
என்றென்றுன் சேவகமே யேத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம் இரங்கேலோ ரெம்பாவாய்.

பதவுரை:—**அன்று**—(*இந்திரன் முதலானவர்கள் மஹாபலியினுல் வருந்திய*) *அக்காலத்தில்.* **இ உலகம்**—*இந்த உலகங்களை,* **அளந்தாய்**—(*இரண்டடிகளால்*) *அளந்தருளியவனே!* **அடி**—(*உன்னுடைய அந்தத்*) *திருவடிகள்,* **போற்றி**—*பல்லாண்டு பல்லாண்டு வாழ்க;* **அங்கு**—*இராவணன் இருக்குமிடத்தில்.* **சென்று**—*எழுந்தருளி,* **தென் இலங்கை**—(*அவன் நகராகிய*) *அழகிய இலங்கையை,* **செற்ருய்**—*அழித்தவனே!* **திறல்**—(*உன்னுடைய*) *பலம்,* **போற்றி**-*பல்லாண்டு வாழ்க;* **சகடம்**—*சகடாசுரனைவன்.* **பொன்ற**—*அழிந்துபோகும்படி,* **உதைத்தாய்**—(*அச்சகடத்தை*) *உதைத்தவனே!* **புகழ்**—(*உன்னுடைய*) *கீர்த்தியானது.* **போற்றி**—*நீடூழி வாழ்க;* **கன்று**–

கன்றாய் நின்ற வத்ஸாஸுரனை, **குணிலா**—எறிதடியாகக் கொண்டு. **எறிந்தாய்**-(விளங்கனியாய்நின்ற அஸுரன்மீது) எறிந்தருளியவனே! **கழல்**-(அப்போது மடக்கிநின்ற) உன் திருவடிகள். **போற்றி**-நீடூழி வாழ்க; **குன்று**—கோவர்த்தந மலையை. **குடையா**—குடையாக. **எடுத்தாய்**—தூக்கினவனே! **குணம்**-(ஸௌசீல்யம் முதலான உன்) குணங்கள். **போற்றி**-பல்லாண்டு விளங்கவேணும். **வென்று**-(எதிரிகளை) ஜயித்து, **பகை கெடுக்கும்**—அப்பகைவர்களை அழியச்செய்யும். **நின் கையில் வேல்**-உன் கையிலுள்ள வேல். **போற்றி**-நீண்டநாள் வாழவேணும்; **என்று என்று**—என்று இப்படிப் பலதடவை மங்களாசாஸனம் பண்ணிக்கொண்டு. **உன் சேவகமே**—உன்னுடைய வீர்யங்களையே. **ஏத்தி**-புகழ்ந்து, **பறைகொள்வான்**—பறைகொள்வதற்காக. **யாம்**-நாங்கள். **இங்கு**-இவ்விடத்திற்கு **வந்தோம்**-வந்துசேர்ந்தோம்; **இரங்கு**—கிருபைபுரியவேண்டும்.

**அவதாரிகை:**— "இரண்டு ஸேனைகளுக்கும் நடுவே ரதத்தை நிறுத்து" என்று அர்ஜுனன் ஒருவன் சொல்ல, அப்படியே செய்தவன், அவனிலும் அன்புமிக்க ஆயிரக்கணக்கான ஆய்ச்சிகள் "இங்ஙனே போந்தருளி...அருள்" என்றால் அதைத் தட்டுவனோ? திருப்பள்ளியிலிருந்து புறப்பட்டு, சீரிய சிங்காசனத்தளவும் நடையிட ஆரம்பித்தான். அதைக்கண்ட இவர்கள், பெரியாழ்வாரைப் போலே தம்மை மறந்து, அப்படி நடக்கும் அவன் திருவடிகளுக்கும் தங்களை ரக்ஷிக்கும் அவனுடைய பலத்திற்கும், குணத்திற்கும், வேலுக்கும் மங்களாசாஸனம் செய்கிறார்கள். அவனுடைய கழலும் திறலும் கொண்டு அவன் முன்செய்த செயல்களை நினைந்து "ஐயோ! இவனுக்கு என் வருகிறதோ" என்று வயிறெரிந்து பல்லாண்டு பாடுகிறாள் பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளையாகையாலே. "க₃தே ஜலே ஸேதுப₃ந்த₄ம் தமப்பனுக்கும் மகளுக்கும் பணி" என்று நஞ்சீயர் அருளிச்செய்வர் என்னும் ஐதிஹ்யத்தை இப்பாட்டு வியாக்கியானங்களில் அனுஸந்திப்பர்கள். இதன் கருத்தாவது: நதியில் தண்ணீர் சென்றபிறகு அணைகட்டுவதுபோல் முன் நடந்து போன விருத்தாந்தங்களை நினைத்து வயிறெரிந்து அச்செயல்களைச் செய்த எம்பெருமானுக்குப் பல்லாண்டு பாடுவதே பெரியாழ்வாருக்கும் ஆண்டாளுக்கும் தொழில் என்கை. இது இவர்களுடைய அன்பு மிகுதியாலுண்டாகும் கலக்கத்தினால் ஏற்படுவது. இக்கலக்கம் மிக

வும் உத்தேச்யமே என்பதை ஆசாரியர்கள் நிரூபித்துள்ளார்கள். மங்களாசாஸனத்தைப்பற்றிய பூர்வபக்ஷ ஸித்தாந்தங்களையும், ப்ரமாணங்களையும் நம்முடைய திருப்பல்லாண்டு வியாக்கியானத்திலே கண்டுகொள்வது.

**வியாக்கியானம்:—** (அன்றிவ்வுலகம் அளந்தாய்...இன்று யாம் வந்தோம்) பிராட்டிமார் தொட்டாலும் சிவக்கும்படியான திருவடிகளைக்கொண்டு காடு மேட்டையெல்லாம் அளந்த அக்காலத்திலே இருந்து பல்லாண்டு பாடப்பெறாத பாவியோம் இன்றிருந்து அத் திருவடிகளுக்கு மங்களாசாஸனம் செய்யவந்தோம். (அன்று... இன்று) மஹாபலியால் அபஹரிக்கப்பட்ட உலகம் நோவுபட்டுக் கிடந்த அன்று; உன்னைப் பிரிந்த வருத்தத்தாலே நாங்கள் நோவுபட்டுக் கிடக்கும் இன்று. ஜகத்தை மஹாபலியின் அபிமானத்திலிருந்து மீட்ட அன்று; எங்களை எங்களுடைய ஸ்த்ரீத்வாபிமானத்திலிருந்து மீட்ட இன்று. நாட்டுக்கெல்லாம் தன் திருவடிகளை தூளிதானம் பண்ணின அன்று; உன்னுடைய அழகையும் சீலத்தையும் எங்களுக்கு தூளிதானம் பண்ணின இன்று. (அன்று) அன்று யார் நோன்பு நோற்க இச்செயல் செய்தாய்? உலகிலுள்ளார் அபேக்ஷித்தோ அவர்கள் தலையிலே பூப்போன்ற உன் திருவடிகளை வைத்தாய்? "தலைசாய்க்கமாட்டோம்" என்றிருந்தவர்கள் தலையிலே யன்றோ பலாத்காரமாகத் திருவடிகளை வைத்தருளினது. அத் திருவடிகளை உன்னையடைய நோன்பு நோற்கும் எங்கள் தலையிலே இட்டாலாகாதோ?

(இவ்வுலகம்) "வன்மாவையமளந்த எம் வாமனா" என்று ஆழ்வார் அருளிச்செய்த வன்மையையுடைய இந்த உலகம். இதன் வன்மையையும் அடியின் மென்மையையும் நோக்கினால் வயிறெரியாதிருக்கமுடியுமோ? (இவ்வுலகம் அளந்தாய்) "படிக்களவாக நிமிர்த்த நின்பாத பங்கயமே தலைக்கணியாய்" "அடிச்சியோம் தலைமிசை நீ யணியாய் ஆழியங்கண்ணா உன் கோலப்பாதம்" என்று அன்புடையார் அணியவேண்டுமென்று ஆசைப்பட்டுக் கிடக்கும் அடிகளை, ஆசாலேசமற்றவர்மேல், தன்னுடன் ஸம்பந்தத்தையே நினைத்துவைத்தவனே! குழந்தையின் அபேக்ஷையை எதிர்பார்த்தோ தாய் அதை அணைக்கிறாள்?

"கண்டாயே நெஞ்சே! கருமங்கள் வாய்க்கின்றோர்
எண்தானுமின்றியே வந்தியலுமாறு

உண்டான் உலகேழும் ஓர் மூவடி
கொண்டானைக் கண்டுகொண்டனை நீயுமே''

என்று நம்மாழ்வார் இவனுடைய இச்செயல் ஒரு வியாஜத்தையும் எதிர்பாராமல் பிறர்க்குத் தன்னையளிக்கும் தன்மையைக் காட்டுவதாக அருளிச்செய்தார். (அடிபோற்றி) ''சுக்கிரன் கண்ணைத் துரும்பால் கிளறிய'' என்கிறபடியே அக்காலத்திலே கண்ணையிழந்து கதறிச்சென்ருன் ஒருவன்; ''என்னிது மாயம் என் அப்பன் அறிந்திலன்'' என்று ஆணையிட்டுக் காலைக்கட்டித் திரிந்தான் மற்றொருவன். இந்திரன் முதலான தேவர்களோ தங்கள் பிரயோஜனத்தைப் பெற்றுத்திரும்பினர்கள். ஜாம்பவானைப்போன்ற சிலரும் உன்னைப் பிரதக்ஷிணம் செய்து பெருமை பெறுவதிலும், மாயக் கூத்தைக் கண்டு மகிழ்வதிலும் ஈடுபட்டிருந்தனர். வடிவிணையில்லா மலர்மகள் மற்றை நிலமகள் பிடிக்கும் மெல்லடியைக்கொண்டு கல்லும் முள்ளும் நிறைந்த காட்டையும் மேட்டையும் அளப்பதைக் கண்டு கண்கலங்குவார் ஒருவருமில்லை. பாவியோமான நாங்கள் அன்றிருக்கப்பெற்றிலோம். அக்குறைதீர இன்றிருந்து பல்லாண்டு பாடுகிறோம். (அடிபோற்றி) ''செவ்வடி செவ்வி திருக்காப்பு'' என்ருரன்றோ இவள் தகப்பனரும். (அடிபோற்றி) திருவுலகளந்தருளின போது இரண்டடியன்றோ இட்டது; இப்போது எங்களுக்காகப் பத்தெட்டடியிடுவதே! என்று கலங்குகிறார்கள். (அடிபோற்றி) கைக்குழந்தைக்குத் தாய்முலைபோலே சேஷபூதர்க்குத் திருவடிவிளங்குகையால் முதன்முதலில் அதற்கு மங்களாசாஸனம் செய்கிறார்கள்.

திருவுலகளந்தருளினபோது ப்ரஹ்மருத்ராதிகளுக்கும் மேலாயிருக்கும்படியான இவனுடைய பரத்வம் தோற்றியிருக்கையாலே ஒருவாறு மநஸ்ஸமாதானமடையலாம். அப்படியில்லாமல் ''ஆத்மாநம் மாநுஷம் மந்யே'' என்று மனிதனாகவே நினைத்து வந்துபடாதன பட்டகாலத்திலும் பக்கத்திலிருந்து பல்லாண்டுபாடாத குறைதீறப் பாடுகிறார்கள் அடுத்தபடியாக: (சென்றங்கு) அங்கேயாவது நின்றவிடத்திலே நின்று இரண்டடியாலே உலகளந்தான். இங்குகொடிய காட்டிலே'பரல்பாய மெல்லடிகள் குருதி சோர' வன்றோ நடந்தருளினன். ''எவ்வாறு நடந்தனை எம்மிராமாவோ?'' என்று வயிறெரிகிறார்கள். (சென்றங்கு) புலிகிடந்த குகையிலேசென்று அதைத் தட்டியெழுப்புவாரைப்போலே, அவனிருக்குமிடத்திலே சென்று அவனுடன் சண்டை செய்தானன்றோ என்று கலங்குகிறார்கள்.

(அங்கு சென்று)லங்கைக்கு அரணாகவைத்த கரதூஷணாதிகள், கடக்க வொண்ணாத கடல்இவையெல்லாவற்றையும் கடந்துசென்று.(தென்னிலங்கை) இவ்வரண்களைக்காட்டிலும் பலமுள்ள அரண்களையுடைய இலங்கையை. (செற்றாய்) அழித்தவனே!(தென்னிலங்கை செற்றாய்) ''உண்ணாதுறங்காதுஒலிகடலை ஊடறுத்துப்'' பண்ணிய இச்செயல்களையெல்லாம் எம்மைப்போன்ற ஒரு பெண்ணின் பொருட்டன்றோ செய்தது என்று தேறுகிறார்கள்.

(திறல் போற்றி) பிராட்டிக்காக இப்பாடுபட்ட உன் பலத்திற்கு ஒரு தீங்கு வாராதிருக்கவேண்டும். ''இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் பல்லாண்டு கூறுதுமே'' என்று பரிவது இவர்களுக்கு ஜந்மஸித்தம். பல்லாயிரத்தாண்டு என்றவுடன் பகவான் அவர் பயங்கெடுகைக்குத் தன் மல்லாண்ட திண்டோளைக் காட்ட அதுவே அவருக்கு பயவர்த்தகமானாப்போலே, ''அடிபோற்றி'' என்ற இவர்களுக்குத் தன் திறலையறிவிக்க, ''இதுக்கு என் வருகிறதோ?'' என்று இதற்கும் பல்லாண்டு பாடுகிறார்கள். (திறல் போற்றி) ''கல்லாதவரிலங்கை கட்டழித்த காகுத்தனல்லால் ஒரு தெய்வம் யானிலேன்'' என்று திருமழிசைப்பிரானும், ''சிலையினால் இலங்கை செற்ற தேவனே தேவனாவான்'' என்று தொண்டரடிப் பொடிகளும் ''வ்யக்தமேஷ மஹாயோகீ₃'' என்று மண்டோதரியும் இத் திறலைக்கண்டு இவனே பரனென்று நிர்ணயித்தனர். ''நுடங்கிடையை முன்னிலங்கை வைத்தான் முரணழிய முன்னொருநாள் தன் விலங்கை வைத்தான் சரண்'' என்று பொய்கையாரும், ''இலங்கை மன்னன் முடியொருபதும் தோளிருபதும் போயுதிரத் தாள் நெடுந் திண் சிலைவளைத்த தயரதன்சேய் என்றன் தனிச்சரண்'' என்று மங்கையர்கோனும், ''ஈரைந்தலையானிலங்கையை ஈடழித்த கூரம்பனல்லால்...இலைதுணை'' என்று மழிசையர்கோனும், ''தயரதற்கு மகன்தன்னையன்றி மற்றிலேன் தஞ்சமாகவே'' என்று மாறனும் இத் திறலையுடையவனே ரக்ஷகன் என்று அறுதியிட்டார்கள். ''கற்பார் இராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ'' ''என்னுடைய இன்னமுதே இராகவனே'' என்று இவனுடைய போக்யதையிலே ஈடுபட்டவர்களுமுண்டு. ஆண்டாள் இப்படியெல்லாம் செய்யாதே இவனுடைய திறலுக்கும் பல்லாண்டு பாடுகிறாள் பெரியாழ்வார் பெற்றெடுத்த வளாகையாலே.

அடுத்தபடியாக மேலே எடுத்த செயலைக்காட்டிலும் மிகவும் கலக்கத்தை விளைக்கக்கூடிய மற்றொரு செயலுக்குப் பல்லாண்டு

பாடுகிறுர்கள். ''ஆழ்வார்கள் ராமாவதாரத்தைக்காட்டிலும் க்ருஷ்ணுவதாரத்திலேயே மிகவும் மண்டியிருப்பதற்கும், மங்களாசாஸனம் செய்வதற்கும் காரணமென்ன?'' என்று நஞ்சீயர் பட்டரைக்கேட்க, ''ராமாவதாரத்தில் பிதா சம்பராந்தகன்; ஊர் திருவயோத்யை; புரோஹிதர் மந்த்ரவாதிகளான வஸிஷ்டாதிகள். பிள்ளைகள் ஆண் திறல் மீளிமொய்ம்பில் அரக்கன் குலத்தைத் தடிந்தவர்கள்; ''இச்சாமः'' [(ராமனை அரசனுகக்காண) விரும்புகிறேும்.] என்று குடிகளும் சொல்லும்படி தாங்கள் குணவான்கள்; இங்கு மாதா பிதாக்கள் ஸாது இடையர்கள்; ஊர் இடைச்சேரி; கம்ஸாதிகள் எதிரிகள்; ஸ்ரீப்ருந்தாவனத்தில் முளைத்தெழும் பூண்டுகளடைய ராக்ஷஸர்கள்; தமையன் ஒரு க்ஷணம் தப்பில், பாம்பின்வாயில் விழும் தீம்பன்; பூதனுதிகளாலே பிறந்த அபாயங்களுக்கு ஓரவதியில்லை; ஆனபின்பு க்ருஷ்ணுவதாரத்தில் மங்களாசாஸனமொழியக் காவலில்லையாகையாலே ஆழ்வார்கள் அங்கேயே மங்களாசாஸனத்தை மிகவும் செய்வார்கள்'' என்று பட்டர் அருளிச்செய்தார் என்னும் ஐதிஹ்யத்தை அநுஸந்திப்பது. இப்படி அபாயங்கள் மிக்கிருக்கையாலே இவனுக்குப் பின்வரும் நாலு அடிகளால் மங்களாசாஸனம் செய்கிறுர்கள். அதிலே முதன்முதலில் ''பிறந்த எழுதிங்களில்'' [பெரியதிரு(10-7-9)] என்னும்படியே அதிபால்ய தசையில் உண்டான பேராபத்துக்குப் பல்லாண்டு பாடுகிறுர்கள்.

(பொன்றச் சகடம்) சகடாஸுரன் அழிந்துபோகும்படி. ராவணன் எதிரியென்று நேரே வந்தான்; அதுவும் ராமபிரான் யுவாவாயிருக்கும்போது. இங்கோவெனில் கைக்குழந்தையாயிருக்கும் போது வண்டியொன்றிலே ஆவேசித்து மறைந்து நின்றுன் இக் கள்ளச்சகடாசுரன். இதொரு பேராபத்து இருந்தபடியென் என்று வயிறெரிகிறுர்கள். (சகடம் பொன்ற) சூர்ப்பணகியையும், மாரீசனையும் குற்றுயிரோடேவிட்டுப் பிறகு அனர்த்தப்பட்ட ராமபிரானைப் போலேயல்லாமல் அவனை அநாயாஸமாக அழித்தபடி. (உதைத்தாய்) முலைவரவு தாழ்த்ததென்று உதைத்த உதை இவனை முடித்தது என்று கண்டார் நினைக்கும்படியிருக்கை. (உதைத்தாய்) ''தழும்பிருந்த சார்ங்கநாண்...தழும்பிருந்த தாள்சகடம்'' என்கிறபடியே ராமாவதாரத்துக்கு வில் பிடித்த தழும்புபோலே இவன் திருவடிகளுக்குச் சகடமுதைத்த தழும்பு.

(புகழ்) பெற்றதாயுங் கூட உதவாத தசையிலே விளையாட்டாக ஒரு அஸுரனைக் கொன்றுன் என்னும் புகழ். (புகழ் போற்றி) இப்புகழ் நித்யமாகச் செல்லவேணும். இச்செயலைக்கண்டு ''உருளும்

சகடம் உதைத்த பெருமானுர் அருளின் பெருநசை'' என்று ஆசைப் படுவார் சிலரும், "ஊர்ந்தசகடம் உதைத்த பாதத்தன் என்னை நிறைகொண்டான்'' , என்று அடக்கம்கெட்டு மடலெடுப்பார் சிலரும், ''உருளச் சகடமதுறக்கில் நிமிர்த்தீர்'' என்று ஊடுவார் சிலருமாய்ச் செல்லாநிற்க, இச்செயலுக்கு மங்களாசாஸனம் பண்ணுகிருர்கள் இவர்கள்.

மேலே சொன்ன செயலாவது ஒன்று மறியாத குழந்தையா யிருக்கும்போதுசெய்தது; பருவம்நிரம்பின பின்புதான் சும்மாயிருந் தானே? பல ஆபத்துக்களில் தானேபோய் விழுந்துகொண்டன்றோ விருந்தான் என்று வயிறெரிகிருர்கள் அடுத்தபடியாக. (கன்று குணிலா எறிந்தாய்) அச்செயலாவது ஒருவருமறியாதபோது செய் தது; இது பார்விளங்கச் செய்த செயலன்றோ என்கிருர்கள்.

**''வழக்கன்று கண்டாய் வலி சகடம் செற்றுய்**
**வழக்கென்று நீ மதிக்கவேண்டா—குழக்கன்று**
**தீவிளவின் காய்க்கெரிந்த தீமை திருமாலே**
**பார்விளங்கச் செய்தாய் பழி''**

என்று வயிறெரிந்தாரன்றோ பூதத்தாழ்வார். "திருமாலே! பார் விளங்கச் செய்தாய் பழி'' என்றதின் கருத்தை ''மார்விலிருக்கிறவ ளோடு மண்ணில் கிடக்கிறவர்களோடு வாசியற ''பழிகேடன்'' என்று சொல்லும்படியிறே செய்த தீம்பு'' என்று அழகாக அருளிச் செய்வர் அழகியமணவாளப்பெருமாள்நாயனுர். (கன்று குணிலா...) அங்கு வந்தது ஓரசுரன்; இங்கு வந்தது இரண்டசுரர்களன்றோ என்று கலங்குகிருர்க்ள். ஒருவன் விளவாய் நின்ருன்; ஒருவன் கன்ருய் நின்ருன். இருவருமாகச் சேர்ந்து இவனை முடித்து விடலா மென்று மநோரதித்திருந்தார்கள். இதையறிந்த இவன் கன்ருய் நின்றவனையெடுத்து விளவாய் நின்றவன் மீதெறிந்து இருவரையும் ஒன்ருக முடித்தருளினுன். ''ஒருவனையெடுத்து மற்றொருவன் மேலே எறிந்தால், இருவருமொன்ருக இவன்மேல் விழுந்தார்களாகில் என்செய்வது'' என்று இவர்கள் பயப்படுகிருர்கள்.

**''கன்றினுருவாகி மேய்புலத்தே வந்த கள்ளவசுரர் தம்மைச்**
**சென்று பிடித்துச்சிறுகைகளாலே விளங்காயெறிந்தாய்போலும்**
**என்றுமென் பிள்ளைக்குத் தீமைகள் செய்வார்கள்**
**அங்ஙனமாவர்களே''**

என்று இச்செயலுக்கு வயிறுபிடித்தாரன்றோ தமப்பனுரும்.

(கழல் போற்றி) கன்றை எறிதடியாகக்கொண்டு விளவின்மேல் எறிந்தபோது மடக்கி நின்ற திருவடிகளுக்குப் பல்லாண்டு. 'அடி போற்றி' என்று நீட்டின திருவடிகளுக்குப் பல்லாண்டு பாடினுர் கள். 'கழல் போற்றி' என்று மடக்கின திருவடிகளுக்கு மங்களா சாஸனம் செய்கிருர்கள். ஆகையால் புனருக்தியில்லே. அன்றிக்கே, கழல் என்று காலிலணிந்திருக்கும் ஆபரணத்தைச் சொல்லுவ துண்டாகையாலே, அதற்குப் பல்லாண்டு பாடுவதாகவும் கொள்ள லாம். (கழல் போற்றி)

**''விளவின்காய் கன்றிஞல் வீழ்த்தவனே என்றன்**

**அளவன்ருல் யானுடைய அன்பு''** என்று இச்செயலுக்குத் தோற்று பக்திபண்ணிஞர் பூதத்தாழ்வார்.

**''வாஞே மறிகடலோ மாருதமோ தீயகமோ**

**காஞே ஒருங்கிற்று கண்டிலமால்—ஆனீன்ற**

**கன்றுயரத்தாமெறிந்து காயுதிர்த்தார் தாள்பணிந்தோம்**

**வன்துயரை ஆவா மருங்கு''** என்று இதையனுஸந்தித்துப் பாபம் போகப்பற்றிஞர் நம்மாழ்வார்.

**''இனியார் புகுவார் எழுநரக வாசல்**

**முனியாது மூரித்தாள் கோமின்—கனிசாயக்**

**கன்றெறிந்த தோளான் கனைகழலே காண்பதற்கு''**

என்று நரகவாசலில் புகாமலிருக்கைக்கு இச்செயலே அனுஸந்தித் தார் பொய்கையாழ்வார். பெரியாழ்வார் திருமகளாராகையாலே இச்செயலேச் செய்த இவனுக்குக் காப்பிடுகிருள் கோதை.

(குன்று குடையா எடுத்தாய்) விரோதியை அழிக்க விளையாட் டாகக் கன்றெடுத்தாப்போலே, கன்றுகளே நோக்கக் குன்றெடுத்த படி. கீழே நான்கு அடிகளாலும் இந்திரனுக்குண்டான துன்பங் களேப் போக்குகைக்காக அவதரித்துப்பட்ட கஷ்டங்களேயெல்லாம் அனுஸந்தித்து வயிறெரிந்து பல்லாண்டு பாடிஞர்கள். காரியம் முடியும்வரையில் அனுகூல வேஷத்துடனிருந்த அவ்விந்திரனே எதிரிட்டுச் செய்த செய்கையை நினைத்துப் பல்லாண்டு பாடுகிருர் கள் இப்போது. தன்னுடைய ஸர்வாத்மபாவத்தைக் காண்பிக்கைக் காக, ஆயர்கள் இந்திரனுக்கிடும் சோற்றைக் கோவர்த்தன மலேக் கிடச்செய்து, தான் அதனுள் மறைந்திருந்து எல்லாவற்றையும்

உண்டான் உலகமுண்டபெருவாயன். ''அவனுடைய பொருளை அவனுண்டான்'' என்று ஆறியிருக்கவேண்டிய இந்திரன் தன்னுடைய பொருளைப் பறித்துவிட்டதாக பிரமித்து ஆயர்பாடிமீது கல்மழை பொழியத்தொடங்க, அருகே நின்ற கோவர்த்தனமலையை யெடுத்துப் பசுக்கூட்டங்களைக் கண்ணன் காப்பாற்றின விருத்தாந்தத்தை அனுஸந்திக்கிறார்கள்.

(குணம் போற்றி) உன்னுடைய குணம் காலதத்வமுள்ளவரையிலும் நித்யமாய்ச் செல்லவேணும். 'பசிவந்திடப் பத்தும் பறந்துபோம்' என்கிறபடியே பசியினாலேற்பட்ட கோபத்தாலே அநுகூலனாயிருந்த இவன் இச்செய்கை செய்கிறானாகையாலே, இவனை தண்டிக்கக்கூடாது என்று நினைத்து, அவன் கைசலித்துத் தானாகவே கல்மழையை நிறுத்தும்வரையில் மலையைப் பந்துபோல் பிடித்து நின்ற பெருங்குணத்தைக்கண்டு உருகுகிறார்கள். ''குன்றெடுத்துப் பாயும் பனிமறைத்த பண்பாளா'' என்றும்,

> ''வெற்பொன்றெடுத்து ஒற்கமின்றியே
> நிற்கும் அம்மான்சீர் கற்பன் வைகலே''

என்றும் பக்தர்கள் ஈடுபடும்படியானதன்றோ கோவிந்தனுடைய இக்குணம். (குணம் போற்றி) ''மென்முலைகள் பொன்னரும்ப நைவேற்கு ...வரையெடுத்த தோளாளா என்றனக்கோர் துணையாளனாகாயே'' என்ற திருமங்கையாழ்வாரைப்போலே, ஒரு மலையைப் போடச் செய்து, அதிலும் கனத்த இரண்டு மலையைக் கையிலே கொடுக்க ஆசைப்படாதே அவனுக்குப் பல்லாண்டு பாடுகிறார்கள்.

மழை விட்டவுடன், மலையையெறிந்து கையிலே வேலைப்பிடிக்கு மத்தனையன்றோ; அவ்வேலுக்குப் பல்லாண்டு பாடுகிறார்கள் அடுத்தபடியாக. எல்லாப் பெருமைகளையும் இவனுக்கே சொன்னால் கண்ணெச்சில் படப்போகிறது என்று பார்த்து இவன் வெற்றியை வேலின்மேல் ஏறிட்டுச் சொல்லுகிறார்கள். (வென்று பகைகெடுக்கும்) சத்துருக்களை வென்று அவர்களை அழியச் செய்வதாயிருக்கும். (நின்கையில் வேல்) ராஜாக்களுக்கு வில் ஆயுதமாயிருக்கிறப்போலே, இடையர்களுக்கு வேலே ஆயுதமாயிருக்கிறது. ''கூர்வேல் கொடுந்தொழிலன்'' என்று தமப்பனாருக்கும், ''வேலைப்பிடித்தென் ஐமார்கள்'' என்று மற்றுள்ள இடையர்களுக்கும் சொன்னதை நினைப்பது. (நின் கையில் வேல்) வெறும்புறத்திலே ஆலத்தி வழிக்கவேண்டியிருக்கும் வடிவழகையுடைய கையிலே வேலையும்

பிடித்துவிட்டால் இவர்களால் மங்களாசாஸனம் செய்யாதிருக்க முடியுமோ? (நின் கையில் வேல்) ''ஆலிச$_2$ந்தமிவாகாசம் அவஷ்டப்$_4$ய மஹத்$_3$த$_4$நு:'' [ஆகாசத்தை அளாவிநிற்பதுபோலுள்ள பெரிய வில்லைத் தாங்கி] என்றாப்போலே, வேலைப்பிடித்து நிற்கும் நிலையைக் கண்டவுடன் எதிரிகள் முடியும்படியிருக்கை. (நின் கையில் வேல்) ''தன்னையுணராதே அஸத்யப்ரதிஜ்ஞனாய்ச் சீறினபோது காணும் ஐந்மாந்தரம் மேற்பட்டுத் திருவாழியை எடுப்பது'' என்று ஆறாயிரப்படி. தன் வார்த்தையைப் பொய்யாக்கிக்கொண்டு திருவாழியை எடுத்து பீஷ்மரைநோக்கிச் சென்ற விருத்தாந்தத்தை நினைக்கிறார்.

(வேல் போற்றி) ஸர்வேச்வரனைக் கண்ட தமப்பனார் ''சுடராழியும் பல்லாண்டு'' என்று போற்றினார், ''அஹம் வோ பா$_3$ந்த$_4$வோஜாத:'' [நான் உங்களுக்கு பந்துவாய்ப் பிறந்திருப்பவன்] என்னும் கண்ணனைக் கண்டவர்களாகையாலே ''வேல் போற்றி'' என்கிறார்கள். (வேல் போற்றி) ''வெற்புடைய நெடுங்கடலுள் தனிவேலுய்த்த வேள்முதலா வென்றான்'' [வேள்-முருகன்] என்கிறபடியே வேலனையும் வென்றவன் கையிலிருக்கும் வேலுக்கும் பரியும்படியுள்ளது இவர்கள் தசை.

(என்றென்று) இப்படி மங்களாசாஸனம் செய்வதே பரம ப்ரயோஜனமாய் விளங்குகையாலே இதுவே யாத்ரையாய்ச் செல்லுகிறது. ஸாதனமாயிருந்தாலன்றோ ஸாத்யம் கிடைத்தவுடன் நிற்கலாவது. ''பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு'' என்று தொடங்கி ''சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே'' என்று முடித்தாரன்றோ தமப்பனாரும். (என்றென்று) ''அடிபோற்றி, திறல்போற்றி, புகழ்போற்றி, கழல்போற்றி, குணம்போற்றி, வேல்போற்றி'' என்னுமிதுவே இவர்கள் தினந்தோறுமுண்ணும் அறுசுவையுண்டியாயிருக்கிறது. (உன் சேவகமே) உன் வீர குணங்களையே. ''உன்னுடைய விக்கிரமம் ஒன்றொழியாமலெல்லாம் என்னுடைய நெஞ்சகம் பால் சுவர்வழியெழுதிக்கொண்டேன்'' என்றாரன்றோ பெரியாழ்வாரும். (உன் சேவகமே ஏத்தி) வேறொருவருக்கு வீர்யமுண்டாகிலன்றோ அதை ஏத்தலாவது. வீர்யமுடையவன் நீயொருவனேயாகையால் எங்கள் விரோதிகளை நீக்கும் உன் வீர்யகுணத்தையே புகழ்கிறோம் என்கிறார்கள். (ஏத்திப் பறைகொள்வான்) ஏத்துகை எங்களுக்குப் பலன். பறைகொள்வது ஊராருக்குப் பலன். இவ்விரண்டு பலன்களையும் பெறுவதற்காக.

(இன்று) ஊரார் இசைந்திருக்கும் இன்று. நேற்று வரமுடிந்ததோ? நானோ வரவிடுவார்களோ? (இன்று) நீ உறங்க நாங்கள் உறங்காத இன்று. அநாதிகாலமாக 'இசையோம்' என்றிருந்த நிலை போய் இசைவு பிறந்திருக்கும் இன்று. (யாம்) பந்துக்களாலே நெடுங்காலம் நலிவுபட்டு இப்போதும் குளிராலும், விரஹத்தாலும் வருந்திக்கொண்டிருக்கும் நாங்கள். (வந்தோம்) நீ வரவிருக்க வேண்டிய நாங்கள் ஆற்றாமை பிடித்திழுக்கையாலே நீயிருக்குமிடம் வந்தோம். (வந்தோம் இரங்கு) நாங்கள் செய்யத் தகாதன செய்தோம். "ஹ்ரீரேஷா ஹி மமாதுலா......உபஸ்தே₂யைருபஸ்தி₂த:" [நான் சென்றடையத்தக்கவர்களால் வந்து அடையப்பட்டேன்; இது எனக்கு மிகவும் வெட்கமாயிருக்கிறது.] என்று சொல்லும் உன் மனத்தைப் புண்படுத்தினோம். ஆயினும் நீ இரங்கவேணும் என்கிறார்கள். (இரங்கு) கீழே தாங்கள் பட்ட கஷ்டமெல்லாம் பேற்றுக்கு ஸாதனமன்று. அவன் கிருபையே உபாயம் என்றிருக்கிறார்கள்

(அன்றிவ்வுலகமளந்தாய் இன்று யாம் வந்தோம்) அன்று நீ எங்களைத் தேடி எல்லாவுலகும் தடவினாய். இன்று உன்னைத்தேடி நாங்கள் இங்கு வந்தோம். (அளந்தாய், தென்னிலங்கை செற்றாய், சகடமுதைத்தாய்—இரங்கு) "மண்ணளந்த கண்பெரிய செவ்வாய் என் காரேறு வாரானால்" "காகுத்தன் வாரானால்" "கண்ணனும் வாரானால்" என்றவரைப்போலே எங்களையும் தவிக்கவிடாதே கொள் என்கிறார்கள். (அளந்தாய் இரங்கு) "நீரேற்றளந்த நெடிய பிரான் அருளாவிடுமே" என்று தேறுகிறார்கள். (தென்னிலங்கை செற்றாய் இரங்கு) "இரக்கமேல் ஒன்றுமிலாதாய் இலங்கையெரித்த பிரானே" என்னும் பழிச்சொல்லை சுமக்காதே இரங்குவாயாக. (சகடமுதைத்தாய்-இரங்கு) "உருளும் சகடம் உதைத்த பெருமானார் அருளின் பெருநசையால்" வந்த எங்களுக்கு இரங்கு. (குன்று குடையா எடுத்தாய்-இரங்கு) "குன்று குடையாக ஆகாத்த கோவலனார் ஒன்று மிரங்கார்" என்னும் பழியைப் பெறாதே இரங்குவாயாக.

## திருப்பாவை—இருபத்தைந்தாம் பாட்டு.

25. ஒருத்தி மகனாய்ப் பிறந்தோ ரிரவில்
ஒருத்தி மகனா யொளித்து வளரத்
தரிக்கிலா னாகித்தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்

நெருப்பென்ன நின்ற நெடுமாலே யுன்னை
அருத்தித்து வந்தோம் பறைதருதி யாகில்
திருத்தக்க செல்வமுஞ் சேவகமும் யாம்பாடி
வருத்தமுந் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

**பதவுரை:**—**ஒருத்தி**-*தேவகிப்பிராட்டியாகிற ஒருத்திக்கு,* **மகன் ஆய்**—*பிள்ளையாய்,* **பிறந்து**—*தோன்றி,* **ஓர் இரவில்**—*(அவதரித்த அந்த) ஒப்பற்ற இரவிலேயே,* **ஒருத்தி**—*யசோதைப்பிராட்டியாகிய ஒருத்தியுடைய,* **மகன் ஆய்**—*பிள்ளையாகஆகி,* **ஒளித்துவளர**—*ஒளிந்திருந்து வளரும் காலத்தில்,* **தான்**--*கம்ஸனுகிறவன்,* **தரிக்கிலான் ஆகி**—*(ஒளிந்து வளருவதையும்) பொறுக்கமாட்டாதவனுய்,* **தீங்கு நினைந்த**—*(இவனைக் கொல்லவேணும் என்னும்) தீச்செயலை நினைத்த,* **கஞ்சன்**—*கம்ஸனுடைய,* **கருத்தை** *- எண்ணத்தை,* **பிழைப்பித்து**—*வீணுக்கி,* **(கஞ்சன்) வயிற்றில்** — *அக்கம்ஸனுடைய வயிற்றில்,* **நெருப்பு என்ன நின்ற**—*'நெருப்பு' என்னும்படி நின்ற,* **நெடுமாலே**—*ஸர்வாதிகனே!* **உன்னை**—*உன்னிடத்தில்,* **அருத்தித்து வந்தோம்**-*(எங்களுக்கு வேண்டியவற்றை)யாசித்துக்கொண்டு வந்தோம்;* **பறை தருதி ஆகில்**—*எங்களுடைய விருப்பத்தை நிறைவேற்றுவாயாகில்,* **திரு தக்க செல்வமும்**—*பிராட்டியும் ஆசைப்படத்தக்க (உன்) செல்வத்தையும்,* **சேவகமும்**—*வீர்ய குணத்தையும்,* **யாம் பாடி**—*நாங்கள் பாடி,* **வருத்தமும் தீர்ந்து**—*(உன்னைப்பிரிந்து படும்) துக்கமும் நீங்கி,* **மகிழ்ந்து**—*மகிழ்ந்திடுவோம்.*

*அவதாரிகை:*— "மங்களாசாஸனம் செய்யும் நீங்கள் 'பறை கொள்வான் இன்று யாம் வந்தோம்' என்றீர்கள். இது சேராச் சேர்த்தியாயிருந்ததே" என்று கண்ணன் சொல்ல, "பறை என்பது வியாஜமே; உண்மையில் உன்னிடம் உன்னையே யாசித்துவந்தவர்களே நாங்கள்" என்றுஇவர்கள்உரைக்க, "நீங்கள் விரும்பியதைக் கொடுக்கப்ரதி பந்தங்களிருக்கக்கூடுமே" என்று அவன் ஆக்ஷேபிக்க, "ப்ரபலமான ப்ரதிபந்தங்களையும் போக்கியருளிய உனக்கு

இனியுள்ள சிறுநடைகளைப் போக்குவது கடினமோ? ஆகவே, அவற்றையும் நீயே போக்கியருளி எங்களை நோக்கவேணும்'' என்று பிரார்த்திக்கிறார்கள் இப்பாட்டில்.

*வியாக்கியானம்:*—(ஒருத்தி மகன்) ஒருவன் தவம் செய்து நாலு பிள்ளைகளைப் பெற்றாற்போலே, இங்கு நாலு பேரும் தவம் செய்து ஒருவனைப்பெற்றபோதிலும், பெற்றெடுத்தவள் தேவகிப் பிராட்டியே யாகையாலே "ஒருத்தி மகன்" என்கிறது. (ஒருத்தி) "தி₃வ்யோ தே₃வ ஏகோ நாராயண:" [பரமபதத்திலுள்ள தேவனாகிற நாராயணன் ஒருவனே...] "ஈசதே தே₃வ ஏக:" "ஏகமேவாத்₃விதீயம்" "ஏகோ ஹ வை நாராயணஆஸீத்" [நாராயணன் ஒருவனே முதலில் இருந்தான்.] "ஊழி முதல்வன் ஒருவனே" என்று வேதங்களிலே ஒப்பற்றவனாகக் கீர்த்திபெற்றவனைப் பெற்றெடுத்தவளானபடியாலே 'ஒருத்தி' [ஒப்பற்றவள்] என்கிறார்கள். (ஒருத்தி மகனாய்) "பிதா புத்ரேண பித்ருமாந் யோநியோநௌ" [ஸர்வலோகபிதாவானவன் தன்னுடைய புத்ரனைப்பிதாவாகக் கொண்டு அவதாரங்கள் தோறும் பிறக்கிறான்.] "மகனொருவர்க்கல்லாத மாமேனி மாயன் மகனாம்" என்று சொல்லு கிறபடியே உலகிற்கெல்லாம் முந்தைத்தாய்தந்தையாயிருப்பவன் இவள் மகனாகப்பிறந்தானன்றோ என்று ஈடுபடுகிறார்கள். (ஒருத்தி மகனாய்) "தே₃வகீபுத்ராய க்ருஷ்ணாய" என்று வேதமும் இப்படி ஈடுபட்டதன்றோ.

(பிறந்து) தூணிலே தோற்றுவது, ஆனைக்கு உதவினாற்போலே ஆவிர்ப்பவிப்பது முதலியன செய்யாமல் கர்ப்பவாஸம் பண்ணிப் பிறந்தான், மகனாய்ப் பிறக்கவேண்டி இவள் நோன்பு நோற்கை யாலே. (பிறந்து) கர்மவச்யர் பிறந்து படுவதையெல்லாம் இவன் க்ருபாவச்யனாய்ப் பட்டான். இந்த மஹாகுணத்தை நினைத்து "ப₃ஹுதா₄ விஜாயதே" என்று வேதமும், "ஸம்ப₄வாமி" என்று அவன் தானும், "எத்திறம்" என்றும், "பல் பிறவிப் பெருமான்" என்றும், "பிறந்தவாறும்" என்றும் ஆழ்வாரும் ஆழங்காற்பட்டனர். கர்ப்ப தோஷஸ்பர்சம் இல்லையாதென்பதை அறிவிக்க, "ஆவிர்ப்பவித் தான்" என்று அறிவித்த ரிஷியைப்போலே "ஆயர்குலத்தினில் தோன்றும்" என்றும் "தோற்றமாய் நின்ற" என்றும் சொன்னதில் திருப்தியுறாமல், பிறப்பில் மெய்ப்பாட்டை அறிவிக்கைக்காக "பிறந்து" என்கிறார்கள். (மகனாய்ப் பிறந்து) மாதாபிதாக்கள் சொல்லும் வார்த்தையைக் கேட்பவன் மகனாகிறான், இவன் பிறந்த போதே "சங்க சக்கரங்கள் பொருந்திய திருக்கைகளை மறைத்துக்

கொள்'' என்று அவர்கள் சொல்ல, அப்படியே செய்தவனாகை யாலே இவனே மகனாய்ப் பிறந்தவனாவான்.

(ஓரிரவில்) நாய்க்குடலிலே நறுநெய் தங்கமாட்டாதாப்போலே, ஸம்ஸாரிகளின் தன்மையாலே எம்பிரான் பிறந்தவிடத்திலே ஒரு ராத்திரிகூடத் தங்கமுடியாதபடி ஆகிவிட்டது. காலக்ருத பரிணாமமில்லாத தேசத்திலேயுள்ளவன் காலாதீனமான இவ்வுலகிலே பிறந்து, பிறந்த ராத்திரியிலேயே என்ன பாடுபட்டான் என்று கலங்குகிறார்கள். (ஓரிரவில்) இவ்விரவுக்கொப்பான இரவு முன்னுமில்லை, பின்னுமில்லை; மாதாபிதாக்களும் உதவாத தசையிலே உதவின ராத்திரியன்றோ இது என்று கொண்டாடுவதாகவும் கொள்ளலாம்.

(ஒருத்திமகனாய்) அங்கே பிறந்து இங்கே வளர்ந்தானாயிருக்கை யன்றிக்கே, இங்கேயே யசோதைப்பிராட்டியாலேயே பெற்றெடுக்கப் பட்டமகன் என்று சொல்லும்படியிருக்கை. இருவரும் இவனைப் பிள்ளையாகப்பெறத்தவம் செய்திருக்கையாலே, ஒருத்திக்கு அவதார ரஸத்தைக்கொடுத்து, ஒருத்திக்கு லீலாரஸத்தை அநுபவிப்பித்தான். (ஒருத்தி) அவள் கோதைப்பெற்றாள்: ரஸத்தைஇவளே பெற்றாள் என்னும்படியிருக்கையாலே அவளைக்காட்டிலும் பாக்யசாலியாயிருப் பவள் இவள். ''திருவிலேன் ஒன்றும் பெற்றிலேன் எல்லாம் தெய்வ நங்கை யசோதைபெற்றாளே'' என்று அவளும் புலம்பும்படியான தன்றோ இவள்பெருமை. (ஒருத்திமகனாய்) அவளிடத்தில் முலைப்பால் குடிக்கவும் காலமில்லாமல் இங்கு வந்து, இவளிடத்திலேயே முலை யுண்டானாகையாலே இவளுடைய பிள்ளையாகவே வளர்த்தபடி. ''யது குலோத்பவன்' என்ற ரிஷியே ''கோபாலன்' என்றாரன்றோ. ''ஒருத் திக்கு மகனாய்ப் பிறந்த குழந்தை மற்றொருத்தியிடம் முலைப்பால் குடிக்குமோ? இவளுக்கும் பால்சுரக்குமோ?'' என்று ஒருவன் கேட்க ''அவளுக்கு முலை சுரவாநின்றதாகில், இவன் அழுது முலையுண்டா னாகில், உமக்குச் சேதமென்'' என்று பட்டர் அருளிச்செய்தார் என்னும் ஐதிஹ்யத்தை ஆறாயிரப்படியில் அநுஸந்திப்பர். ''மக னைக்கொண்டெடுத்தாள்'' என்கிறபடியே பூதனைக்கும் இவனைக் கண்டவுடன் தன்னையறியாமல் அன்பு பெருகப்பெற்று முலை சுரந்த தன்றோ. (ஒருத்தி) எல்லாவுலகுக்கும் ஈசனாயிருப்பவனைக் கட்டவும் அடிக்கவுமாம்படியான இவளும் ஒருத்தியே! என்று வியப்படைகிறார் கள். (ஒருத்தி)அவள்தான் பிறந்தவன்றே பிள்ளையைக் கைவிட்டாள் என்றால், இவள் செய்ததென்? பிள்ளையைப் பிறந்தநாள் தொடங்கிப் பூதனை, சகடாஸுரன் முதலானோர் வாயில் விழப்பார்த்துக்கொண்

டிருந்தாள் ஒருத்தியன்றோ இவள் என்று வயிறெரிகிறார்கள். (ஒருத்தி மகனாய்)கம்ஸன் இறந்து பலநாளானபோதிலும், ஏதேனும் தீங்கு வரப்போகிறது என்று பயந்து பேரைச்சொல்லாமல் ஒருத்தி, ஒருத்தி என்கிறார்கள். நக்ஷத்திரத்தைச் சொல்ல பயப்பட்டு "அத்தத்தின் பத்தாநாள் தோன்றிய அச்சுதன்" என்றவருடன் ஸம்பந்தம் இப்படிப் பேசச்செய்கிறது. (ஒருத்தி) "என்ன நோன்பு நோற்றாள்கொலோ இவனைப்பெற்ற வயிறுடையாள்" என்று பிறரும் "ஞாலத்தில் புத்திரனைப் பெற்றார் நங்கைமீர்! நானே மற்றாருமில்லை" என்று தானும் தன்னைச் சொல்லும்படியான பெருமைபெற்றவள்.

(ஒளித்து வளர)பிறந்தவிடத்திலே தான் தங்கவில்லையென்றால், புகுந்தவிடத்திலேயாவது வெளியில் வரப்பெற்றானோ? கணந்தோறும் தோன்றும் அஸுரப்பூண்டுகளுக்குப் பயந்துஒளித்தன்றோ வளர்த்து வந்தார்கள் என்கிறார்கள். "நாட்டார் செய்வன செய்யப் பெறாதே கள்ளர் பட்டது படுவதே! திருவவதரித்திருக்கும்போதும் அந்தர்யாமி பட்டது படுவதே" என்று வயிறெரிகிறார்கள். (ஒளித்து வளரத் தரிக்கிலானாகி) இப்படி ஒளித்து வளர்வதையும் பொறுக்க முடியாதபடியிருக்கிறான் கஞ்சனென்பவன். 'ஒளித்து வளருகிறான்' என்று நாரதர் மூலமாகக்கேட்ட கணந்தொடங்கி இவனை ஒழிக்க வழிதேட ஆரம்பித்தான். (தரிக்கிலானாகி) அவன் நேரே வந்தபிறகு பார்த்துக் கொள்ளலாம் என்றிருந்தானோ; அவனுடைய இருப்பையும் பொறாதபடியன்றோ இவன் தன்மை. (தான் தீங்கு நினைந்த) பயந்து பரியவேண்டிய விஷயத்திலே தீங்கு நினைப்பதே! (தான்) சிறிது காலத்தில் படப்போகிற பாடு அறியாததான். (தீங்கு) தங்கள் வாயாலே சொல்ல அஞ்சித் தீங்கு என்கிறார்கள். பூதனை முதலான அஸுரர்களாலுண்டான அளவற்ற தீங்குகளை நினைக்கிறார்கள். (நினைந்த) இவன் விஷயத்திலே தீங்கு நினைக்கக்கூடிய ஓர் மனம் உண்டாவதே! என்கிறார்கள். இவனும் தன் விஷயத்தில் மனப்பூர்வமாக அபசாரம் செய்பவர்களையே தண்டிப்பான். "உன்னைச் சிந்தையினால் இகழ்ந்த இரணியன் அகல் மார்வம் கீண்ட என் முன்னைக் கோளரியே!' என்றாரன்றோ நம்மாழ்வாரும். கைக்கொள்ளும்போது உக்திமாத்ரமும் போதும். கைவிடும்போது நெஞ்சாற த்வேஷித்தாலொழிய விடான். (தீங்கு நினைந்த) "தீயபுந்திக்கஞ்சன் என்றார் பெரியாழ்வாரும். (கருத்தைப் பிழைப்பித்து)இவனை ஏதேனுமோர் உபாயத்தாலே கொன்று, தான் ஒன்றுமறியாதவன் போலிருக்க நினைத்த அவன் எண்ணத்தை அவனோடே போம்படி செய்து. அவன் ஏவிய பூதனை, சகடாஸுரன், வத்ஸாஸுரன்,

கபித்தாஸுரன், குவலயாபீடம், சாணூரமுஷ்டிகர்கள் ஆகிய ஒவ்வொருவரையும் அழித்து.

(கஞ்சன் வயிற்றில் நெருப்பென்ன நின்ற) இப்படி அவன் எண்ணத்தையெல்லாம் வீணுக்கி, கம்ஸனுடைய வயிற்றிலே நெருப்பாக நின்றபடி. இவனிடத்தில் அன்புடையார், இவனுக்கு வரும் தீங்குகளைக்கண்டு படும் பாட்டையெல்லாம் அவன் படும்படி செய்தான். (நெருப்பென்ன நின்ற) ''கஞ்சனைக் காய்ந்த காளமேகத் திருவுருவன்'' என்கிறபடியே, அன்புடையாருக்கு நீரைச் சொரியும் காளமேகம் இவனுக்கு நெருப்பைச் சொரிகிறதுகிடீர்! (நெருப்பென்ன நின்ற) ''வெந்நரகம் சேராவகையே சிலைகுனித்தான்'' என்கிறதுபோல் நின்ற நிலையைக் காண்பதைக்காட்டிலும் வேறு நரகானுபவம் இல்லை என்னும்படி கம்ஸன் முன்னே நின்றபடியைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். (நெடுமாலே) இப்படிப் படாதன பட்டதெல்லாம் அடியார்பக்கலுள்ள தீர்க்கவ்யாமோஹத்தாலன்றே என்று தேறுகிருர்கள். (நெடுமாலே) ''ஒன்றும் கண்டிடப்பெற்றிலேன்'' என்றும் ''வசுதேவன் பெற்றிலன்'' என்றும் தேவகியும், வசுதேவரும் பட்ட துன்பமெல்லாம் தீரும்படியாக அவர்களிடத்திலேயுண்டான பேரன்பைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். (நெடுமாலே) இச்செயல்களைச் செய்கையாலே இவனே ஸர்வாதிகன் என்று நிச்சயிக்கலாயிருக்கை. 'மால்' என்னும் பதம் 'அன்புடையவன்' 'பெரியவன்' என்னும் இரு பொருள்களையுடையது.

(உன்னை அருத்தித்து) உன்னிடத்தில் உன்னையே வேண்டி வந்தோம் நாங்கள். எங்களுக்குப் பிறந்துகாட்டவும் வேண்டா; ஒளித்து வளர்ந்துகாட்டவும் வேண்டா; கொன்று காட்டவும் வேண்டா; இருந்தபடியே உன்னைக்காட்ட அமையும். (உன்னை அருத்தித்து) உன்னிடத்தில் வேறென்றை வேண்டி வந்தோமல்லோம்; உன்னையே வேண்டிவந்தோம். (உன்னை அருத்தித்து) ''ய ஆத்மதா₃ பலதா₃:'' [எவனெருவன் தன்னையும் அளித்து, தன்னையனுபவிக்கத் தக்க பலத்தையும் அளிக்கிருனே...] ''என்னையாக்கிக்கொண்டு எனக்கே தன்னைத்தந்த கற்பகம்'' என்கிறபடியே அர்த்திகளையும் உண்டாக்கி, அவர்களுக்குத் தன்னையும் கொடுத்துத் தன்னையனுபவிக்கத்தக்க பலத்தையும் கொடுப்பவனல்லவோ இவன். (நெடுமாலே உன்னை அருத்தித்து) முன்னமே மாலாயிருந்த உன்னை, அருத்தித்ததன்மூலம் நெடுமாலாக்கினேம். (உன்னை அருந்தித்து வந்தோம்) ஸ்ரீவைகுண்டத்தில் நின்றும் இவ்வளவுதூரம் நீ

வந்ததை அஸத்ஸமமாக்கிக்கொண்டு நீயிருக்குமிடம் நாங்கள் வந்தோம். "எதிர் சூழல்புக்கு ஆள்பார்த்து உழிதந்து ஆயர்குலத்தினில் வந்து தோன்றின வ்யாமோஹமெல்லாம் நாலடியிட்டு அஸத்கல்பமாகினேம்" [ஆறுயிரப்படி].

"பறைகொள்வான் இன்று யாம் வந்தோம்" என்றும், "உன்னை யருத்தித்து வந்தோம்" என்றும் இரண்டுபடியாகப்பேசுகிறீர்கள். இவற்றில் எது உங்கள் உள்ளத்தில் ஓடுகிறது என்று கேட்க, (பறை தருதியாகில்) எங்களுக்குப் பறையொன்றுண்டு; நாங்கள் விரும்பிய பறையை எங்களுக்குத் தந்தாயாகில்; தங்களுக்கு உத்தேச்யமான பறை இன்னதென்பதை மேலே சொல்லுகிறார்கள். (தருதியாகில்) தங்களுடைய அர்த்தித்வமும் ஸாதனமன்று; அவன் நினைவே ஸாதனம் என்றிருக்கிறார்கள். இவன் எல்லாம் செய்தாலும், அவன் ஸங்கல்பிக்காவிடில் பலம் ஸித்தியாதாகையாலும், அவன் ஒருவரால் நியமிக்கமுடியாத ஸ்வதந்த்ரனாகையாலும், "தருதி ஆகில்" என்கிறார்கள். (தருதியாகில்) மிகவும் மேலானவர்களை, மிகவும் கீழானவர்கள் "திருவுள்ளமாகில்" என்றன்றோ சொல்லுவது. (பறை தருதியாகில்) "உன் அழகாலே எங்களை மயக்கி, வந்த காரியத்தை மறக்கச்செய்யாமல், நாங்கள் விரும்பியதைச் செய்யப் பார்த்தாயாகில்" என்றும் பொருள்கொள்ளலாம்.

இப்படிச் செய்தால் தங்களுக்குண்டாகும் பலனைச் சொல்லுகிறார்கள் மேலே: (திருத்தக்க செல்வமும்) பிராட்டியும் ஆசைப்படும் செல்வத்தையும். இவனுடைய ஐச்வர்யாதிகளிலே துவக்குண்டு "அகலகில்லேன் இறையும்" என்றிருப்பவளன்றோ பிராட்டி. இதனாலேயன்றோ இவன் "ஶ்ரிய:ஶ்ரீ:" என்றும், "திருவுக்கும் திருவாகிய செல்வா" என்றும் புகழப்படுகிறான். (திருத்தக்க செல்வமும்) "ஶ்ரிய: பதித்வத்தாலே உண்டான செல்வத்தையும்" என்றும் பொருள்கொள்ளலாம். "ச்ரத்₃த₄யா தே₃வோ தே₃வத்வமச்நுதே" [ச்ரத்தா சப்தத்தினால் சொல்லப்படும் பெரிய பிராட்டியாலேயே பகவான் தேவனாயிருக்கும் தன்மையை அடைகிறான்] என்று வேதத்திலும், "அப்ரமேயம் ஹி தத் தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா" பிராட்டியைத் தனக்கென்று உடைய அந்த ராமனுடைய தேஜஸ் அளவிடவொண்ணாதது.] என்று ஶ்ரீராமாயணத்தில் மாரீசனாலும் "அபாங்கா₃ பூ₄யாம்ஸோ யது₃பரி பரம் ப்₃ரஹ்ம தத₃பூ₄த்" [பிராட்டியின் கடைக்கண்ணோக்குகள் எந்த வஸ்துவின்மீது அதிகமாக விழுந்ததோ அது பரப்ரஹ்மமாயிற்று.] "வேதா₃ந்தாஸ் தத்வசிந்தாம் முரபி₄து₃ரஸி யத்பாத₃

சிங்ஹைஹஸ் கரந்தி" [வேதாந்தங்கள் எவனுடைய திருவடியடையாளங்களை முராரியின் மார்பிலே கண்டு பரதத்வ விசாரத்தை முடிக்கின்றனவோ...] என்று ஆசார்யர்களாலும் இவ்வர்த்தம் அறிவிக்கப்பட்டது.

(சேவகமும்) மேலே சொன்ன செல்வத்தைக் காத்தூட்டவல்ல வீர்யகுணத்தையும். (திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்படி) "அன்றிவ்வுலகமளந்தாய்...என்றென்றுன் சேவகமே" என்ற பாட்டில் சொன்ன ஐச்வர்ய வீர்யங்களைப்பாடி; "ஆற்றப்படைத்தான் மகனே" என்றுரைத்த செல்வத்தையும், "கப்பம் தவிர்க்கும் கலியே" என்று சொன்ன வீர்யத்தையும் பாடி. (யாம் பாடி) நேற்றுவரையில் உன் பெயரைச்சொல்லவும் பாக்கியம் செய்யாத நாங்கள், இன்று உன் குணங்களையும் பாடப்பெறுவோம் என்று ப்ரீதராகிருர்கள். (வருத்தமும் தீர்ந்து) உன்னைப் பிரிந்து பலகாலமும் பட்ட துன்பமெல்லாம் தீர்ந்து. (யாம் பாடி மகிழ்ந்து வருத்தமும் தீர்ந்து) உன் குணங்களைப்பாடி மகிழவும் பெறுவோம்; விச்லேஷ துக்கம் தீரவும் பெறுவோம் நீ பறைதந்தாயாகில் என்கிருர்கள். "ஜராமரண மோக்ஷாய யதந்தி" "பிறவித்துயரற" என்று சொல்லப்படும் கைவல்ய நிஷ்டரைப்போலே வருத்தம் நீங்குகைமட்டும் இவர்களுக்குப் பலனன்று; ப்ரீதிக்குப் போக்குவிட்டுப் பாடி மகிழவும் வேணும். "நினைந்திருந்தே சிரமம் தீர்ந்தேன்" "உகந்தே உன்னை உள்ளும் என் உள்ளம்" என்ற இரண்டுமாகவேண்டும். (செல்வமும் சேவகமும் யாம் பாடி வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்து) செல்வத்தைப் பாடுவதால் மகிழ்ச்சியுண்டாகும்; சௌர்யவீர்யாதிகுணங்களாகிற சேவகம் பாடுவதால் விரோதிகளால் உண்டாகும் வருத்தமும் தீரும். 'மகிழ்ந்து' என்ற வினையெச்சத்துக்கு "மகிழ்ந்திடுவோம்" என்று பொருள்கொள்ளவேணும். அன்றிக்கே, "...சேவகமும் யாம் பாடி வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்து உன்னை அருத்தித்து வந்தோம்" என்று அந்வயித்தும் பொருள் கொள்ளலாம்.

## திருப்பாவை—இருபத்தாரும் பாட்டு.

26. மாலே மணிவண்ணு மார்கழி நீராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்துன் பாஞ்சசன்னியமே

போல்வன சங்கங்கள் போய்ப்பா டுடையனவே
சாலப் பெரும்பறையே பல்லாண் டிசைப்பாரே
கோல விளக்கே கொடியே விதானமே
ஆலி னிலையா யருளேலோ ரெம்பாவாய்.

**பதவுரை:**—**மாலே**–*(அடியாரிடத்தில்) அன்புடையவனே!* **மணி வண்ணா**—*நீலரத்னம்போன்ற வடிவையுடையவனே!* **ஆலின் இலையாய்**–*(ப்ரளயகாலத்தில்) ஆலந்தளிரில் கண் வளர்ந்தவனே!* **மார்கழி நீராடுவான்**—*மார்கழி நீராட்டத்திற்காக,* **மேலையார்**–*முன்னோர்கள்,* **செய்வனகள்**–*செய்யும் கிரியைகளுக்கு,* **வேண்டுவன**-*வேண்டும்உபகரணங்களை.* **கேட்டியேல்**-*கேட்டாயாகில், (அவற்றைச் சொல்லுகிறோம்;)* **ஞாலத்தை எல்லாம்**–*பூமிமுழுவதும்,* **நடுங்க**—*நடுங்கும்படி,* **முரல்வன**–*ஒலிக்கக்கூடிய,* **பால் அன்ன வண்ணத்து உன் பாஞ்சசன்னியமே**–*பால்போன்ற நிறமுடையதான உன்னுடைய ஸ்ரீபாஞ்சஜந்யம்போன்ற,* **சங்கங்கள்** — *சங்கங்களையும்,* **போய் பாடு உடையன**—*மிகவும் இடமுடையனவாய்,* **சால பெரு**-*மிகவும் பெரியனவான,* **பறை**–*பறைகளையும்,* **பல்லாண்டு இசைப்பார்**–*திருப்பல்லாண்டு பாடுமவர்களையும,* **கோலம் விளக்கு**–*மங்கள தீபங்களையும்,* **கொடி**—*த்வஜங்களையும்,* **விதானம்**—*மேற்கட்டிகளையும்,* **அருள்**—*அளித்தருள வேண்டும்.*

**அவதாரிகை:**—பெண்காள்! "பறை தருதியாகில்" என்றும், "ஏத்திப் பறைகொள்வான்" என்றும், பறையொன்றைக் கொள்ள வந்ததாகச் சொன்னீர்கள். "உன்னை அருத்தித்து வந்தோம்" என்றும் சொன்னீர்கள். என்னை வேண்டுமவர்களான நீங்கள் பறையை வேண்டுவதெப்படி? அப்பறைதான் யாது? அதை வேண்டுவதற்கு மூலகாரணம் யாது? அதுக்கு வேண்டுவன யாவை? அவற்றுக்கு எண்ணிக்கை எத்தனை? இவற்றைச் சொல்லுங்கள் என்று கண்ணன் கேட்க, "உன்னைக் காண்பதற்கு ஹேதுவாயிருப்பதொரு நோன்பை இடையர்கள் மழைபெய்கைக்காக அனுஷ்டிக்கச் சொனனார்கள். உன்னையும் எங்களையும் நோன்பென்னும் வியாஜத்தாலே சேரவிட்ட இடையரிடம் நன்றியாலே, உன்னை அநுபவிக்கைக்கு அவிருத்தமாயுள்ள அந்நோன்பையும் அநுஷ்

டிக்க இருக்கிறோம்; அந்நோன்புக்கு மார்கழி நீராட்டம் என்னும் கிரியையை முன்னோர்கள் செய்திருக்கிறார்கள். நீராட்டமாகிற அக் கருமத்தை முடிக்கச் சங்கங்கள், பறைகள், பல்லாண்டு பாடுவார், மங்களதீபங்கள், கொடிகள், பனிபெய்வதைத் தடுக்கும் மேற்கட்டிகள் முதலியன வேண்டும். அவற்றைத் தந்தருளவேண்டும்'' என்று வேண்டிக்கொள்கிறார்கள் இப்பாட்டில்.

வியாக்கியானம்:— (மாலே) பேரன்புடையவனே! தாங்கள் இவனை ஆசைப்பட்டதாகச் சொல்லிக்கொண்டு வந்தவர்கள் இவனைக்கண்டவுடன், இவன் அன்பே வடிவெடுத்தவனாய் விளங்குவதைக்கண்டு ''அன்பனே! கடல்போலே கொந்தளிக்கும் இப் பேரன்பை இவ்வளவு காலம் அடக்கிக்கொண்டு எப்படிப் பள்ளி கொண்டிருந்தது?'' என்று வினவுகிறார்கள். (மாலே) எங்களுடைய அன்பு தெளிந்து நோன்பு நோற்கவும் இடம் கொடுத்தது! உன்னுடைய அன்பு உன்னை எழுந்திருக்கவும் ஒட்டாமல் மயங்கச்செய்த தன்றோ என்று ஈடுபடுகிறார். (மாலே) ''நாராயணன்'' ''பையத் துயின்ற பரமன்'' ''தேவாதி தேவன்'' என்று மேன்மையை உன் ஸ்வரூபமாக நினைத்தோம் உன்னைக் காணாதபோது.. உன்னைக் கண்ட இன்றே ''அன்பே உன் உருவம்'' என்பதை அறிந்தோம் என்று உருகுகிறார்கள். ஸ்ரீராமாயணத்திலே ப்ரதானமான குணத்தை ''சரணாகதவத்ஸல:' என்று அறுதியிட்டாள் பிராட்டி. ''மம ப்ராணா ஹி பாண்டவா:'' ''ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்'' என்று அவனாலேயே நிலையிடப்பட்டதாய் மஹாபாரதத்துக்கு ப்ரதானமான ஆச்ரிதவ்யாமோஹம் என்னும் மஹாகுணத்தை ''மாலே'' என்னும் ஒரு சொல்லால் காட்டுகிறார்கள். (மாலே) அன்புடையார் அனைவரும் இவனைக் கண்டதும் தங்கள் அன்பைக்காட்டிலும் பல்லாயிரம் மடங்கு விஞ்சிய அன்பையுடையவன் இவனே என்று முடிவு கட்டினார்களன்றோ. ''காதல் கடலின் மிகப்பெரிதால்'' என்ற நம்மாழ்வார், இவனை அணுகியதும்,

''வாரிக்கொண்டுன்னை விழுங்குவன் காணில் என்று
ஆர்வுற்ற என்னையொழிய என்னில் முன்னம்
பாரித்துத் தான் என்னை முற்றப் பருகினான்'' என்றும்,

''சூழ்ந்ததனில் பெரிய என் அவாவறச் சூழ்ந்தாயே''

என்றும் அருளிச்செய்தாரன்றோ. (மாலே) இவர்களுடைய அன்பும் இவனன்பைக்கண்டு பிறந்ததன்றோ. ''மாலைக்கண்டு மாலுறுகின்

ருளே'' ''மாலாய்ப் பிறந்த நம்பியை மாலே செய்யும் மணாளனை'' ''மன்றில் குரவை பிணைந்த மால் என்னை மால் செய்தான்'' என்றன்றோ அருளிச்செய்தார்கள். (மாலே) ஸர்வாதிகனே! என்றும் பொருள் கொள்ளலாம். முந்தின பொருளே சிறந்தது.

''நம்முடைய பேரன்பை நீங்கள் அறிந்தது எப்படி'' என்று அவன் கேட்கச் சொல்லுகிறார்கள்: (மணிவண்ணா) உன் அன்பு உன் வடிவிலே நிழலிடுகிறதன்றோ என்கிறார்கள். (மணிவண்ணா) நீ அன்புருவனாயில்லாமல் ஹிம்ஸகனாயிருந்தாலும் உன்னை விடமுடியாமல் செய்வதன்றோ உன் வடிவழகு என்கிறார்கள். (மணிவண்ணா) ''பனிமலராள் வந்திருக்கும் மார்வன் நீலமேனி மணிவண்ணன்'' என்றுபெரியபிராட்டியையும் மயக்குவதொன்றன்றோ உன் வடிவழகு. (மாலே மணிவண்ணா) இப்படிப்பட்ட வடிவையுடையவன் பிறரை ஆசைப்படுவதே! (மாலே மணிவண்ணா) மயக்கங்கொண்டவன் கையிலே மாணிக்கமிருந்தால் அது அவனுக்காகுமோ? (மணிவண்ணா) விலைமதிப்பற்றதாயிருந்தபோதிலும் முந்தானையிலே முடிந்து ஆளலாம்படியிருக்கும் மணியைப்போலே ஸௌலப்யத்தையுடையவனே என்றும் பொருள் கொள்ளலாம். வடிவழகைத் தவிர நீலமணிக்கும் இவனுக்கும் மற்றும் பல ஸாம்யங்களுண்டு. '''உண்டு' என்ன உயிர் நிற்கையும், உடையவன் காலிலே ஸர்வரும் விழுகையும், இழந்தார் பிழையாதொழிகையும், கைப்பட்டார்க்குப் பூணலாயிருக்கையும், பூணாதார்க்கு அழித்து உண்ணலாயிருக்கையும், பிறர்க்கேயாயிருக்கையும், அளவுபடாமல் உபகரிக்கையும், 'கொடுத்தோம்' என்று நினைத்திராதொழிகையும், வேறொன்றில் கண்வைக்கவொட்டாதொழிகையும் தொடக்கமான ஸ்வபாவங்கள்'' என்று அவற்றை ஆறாயிரப்படியிலே அருளிச்செய்வர்.

''என்றுமெனக்கினியானை என் மணிவண்ணனை'' என்று ஆய்ச்சியான யசோதைப் பிராட்டி என்னைப் பலகாலும் சொல்லுவதுண்டு. தாய்க்கு நான் மணிவண்ணனானதில் ஆச்சரியமில்லை; மணிமாமை குறைவில்லாதே, ''அழகியார் இவ்வுலகு மூன்றுக்கும் தேவிமை தகுவார்'' என்று புகழப்பட்ட உங்களுடைய வடிவழகுக்கு நேர்நிற்க முடியுமோ என்னழகு? வந்த காரியத்தைச் சொல்லுங்கள்'' என்று கண்ணன் கேட்கச் சொல்லுகிறார்கள்: (மார்கழி நீராடுவான்) ''மார்கழித் திங்கள்...நீராடப் போதுவீர்'' என்று முதலிலேயே ஊர் முழுவதும் ஸங்கல்பித்துச் செய்ய முற்பட்ட காரியத்தைச் செய்கைக்காகவே நாங்கள் இங்குவந்தது என்கிறார்கள். கண்ணனை

யடைந்தபிறகு தங்களுக்காகச் செய்யவேண்டியதொன்றில்லையாயி னும், ஊராரின் நன்மைக்காக இந்நோன்பை அனுஷ்டிக்கிருர்கள். அவனையே உபாயமாகப் பற்றினவர்களும், ஆந்ருசம்ஸ்யத்தாலும், ஆஸ்திக்யாதிசயத்தாலும், ஸந்த்யாவந்தநாதிகளான கருமங்களை அனுஷ்டிக்கவேண்டும் என்னும் அர்த்தத்தைக் காட்டுகிறது இது.

இவர்கள சொல்லும் வார்த்தையைச் சிறிதுநேரம் கேட்கவேணு மென்று, "நீங்கள் சொல்லும் மார்கழி நீராட்டத்திற்கு ப்ரமாண மேது? 'ஸ்வர்க்க₃காமோ யஜேத' [சுவர்க்கத்தை விரும்புமவன் ஜ்யோ திஷ்டோமயாகம் செய்யக்கடவன்] 'நிதி₃த்₄யாஸிதவ்ய:' [பரமாத்மா தியானம் செய்யத்தக்கவன்] என்ருப்போலே வேதங்களில் இதற்கேதேனும் விதிவாக்யமுண்டோ?" என்று ஆக்ஷேபித்தான் அவன்; "நீ சொன்ன ப்ரமாணங்களைக்காட்டிலும் மேலான ப்ர மாணத்தாலே ஸித்திப்பதுகாண் இந்த மார்கழி நீராட்டம் என்கிருர் கள் மேலே: (மேலையார் செய்வனகள்) "த₄ர்மஜ்ஞஸமய: ப்ரமாணம் வேத₃ாச்ச" [தர்மமறிந்தவர்களின் ஆசாரமே முக்ய ப்ரமாணம்; வேதங்களும் ப்ரமாணமாகின்றன.] என்று ரிஷிகளாலும்,

"யத்₃ யத₃ாசரதி ச்ரேஷ்ட₂ஸ் தத் ததே₃வேதரே ஜநா: |
ஸ யத் ப்ரமாணம் குருதே லோகஸ் தத₃நுவர்த்ததே ||

[ச்ரேஷ்டனுனவொருவன் எப்படியெப்படி அனுஷ்டிக்கிருனே, அப்படியப்படியே மற்ற ஜனங்கள் அனுஷ்டிக்கின்றனர். அவன் எவ்வளவு செய்கின்ருனே உலகமும், அதை அனுஸரிக்கின்றது] என்று உன்னுலும்,

"யதா₂ தே தத்ர வர்த்தேரந் ததா₂ தத்ர வர்த்தேதா₂:"

[(ஸந்தேஹம் வருமிடங்களில்) ஞானிகள் எப்படி அனுஷ்டிக்கிருர் களோ அப்படியே நீயும் அனுஷ்டிப்பாயாக] என்று வேதங்களிலும் சொல்லப்பட்ட சிஷ்டாசாரமான ப்ரமாணத்தைப்பற்றியவர்க ளன்ருே நாங்கள் என்கிருர்கள். (மேலையார் செய்வனகள்) ஒரு விதியைக்கொண்டு அனுஷ்டிக்கும்போது பலனடையும்வரையில் ஸந்தேஹமிருந்துகொண்டேயிருக்கும். சிஷ்டாசாரத்தைக்கண்டு அனுஷ்டிக்கும்போது பிறர் பலனடைவதைக் கண்டிருக்கையாலே ஐயமெழாது. இதனுலேயன்ருே அவ்வேதமும் தன்னிடம் பிறர் விச்வ ஸிக்கைக்காக, "மநு சொன்னது மருந்தாகும்" என்றும், "பராசர புத்திரரான வியாஸர் 'சொன்னர்" என்றும், "ப்ரஹ்மவாதிகள் சொல்லுகிருர்கள்" என்றும் சிஷ்ட வசனத்தை ப்ரமாணமாக

எடுத்தது. அஷ்டகையில் பசுவதம் செய்வது, வேதத்தில் விதித்திருந்தபோதிலும், சிஷ்டபரிக்ரஹம் இல்லாமையாலே அநுஷ்டிக்கத் தக்கதன்று என்று நிர்ணயித்தார்கள் ஆசார்யர்கள். (மேலையார் செய்வனகள்) ''விட்டுசித்தர் தங்கள் தேவரை வல்ல பரிசுவருவிப்பரேல் அதுகாண்டுமே'' என்றிருப்பவளன்றோ ஆண்டாள்.

(மேலையார் செய்வனகள் வேண்டுவன) முன்னோர்கள் மார்கழி நோன்புக்காகச் செய்யவேண்டிய கிரியைகளுக்கு வேணடும் உபகரணங்களை. (செய்வனகள் வேண்டுவன) 'அவர்கள் செய்யும் காரியங்களில் நமக்கு வேண்டியவைகளை' என்றும் பொருள்கொள்ளலாம். முன்னோர்கள் லோகஸங்க்ரஹத்திற்காகத் தமக்கு வேண்டாத காரியங்களையும் செய்வார்கள். அவற்றைத் தள்ளி, நாம் ஆரம்பித்த காரியத்துக்கு அபேக்ஷிதமாய், நம் ஸ்வரூபத்துக்கு விரோதம் வராதவையான காரியங்களையும் அவற்றுக்கு வேண்டியவைகளையும். (கேட்டியேல்) உபகரணங்கள் யாவையென்று காது கொடுத்துக் கேட்டாயாகில்; 'அவற்றைச் சொல்லுகிறோம்' என்று கூட்டிக்கொள்வது. இவன் முன்னே நிற்க, 'காதுகொடுத்துக் கேட்டாயாகில்' என்பானென்? என்னில்: 'மணிவண்ணா' என்று இவர்கள் இவனுடைய வடிவழகிலே ஈடுபட்டிருக்கிறாப்போலே, இவனும் இவர்களுடைய ஸௌந்தர்யஸாகரத்திலே மூழ்கியிருக்கையாலே 'கேட்டியேல்' என்று உணர்த்துகிறார்கள். (கேட்டியேல்) 'நாங்கள் விரும்பியது பெறுமல் பட்டினிகிடக்க நீ விருந்துண்ணலாமோ? என்கிறார்கள்.

''மது₄ரா மது₄ராலாபா'' [இனியவள்; இன்சொற்களை ப்பேசுமவள்] என்று புகழப்பெற்ற உங்களுடைய தேன்மொழிகளைப் பருகக் கால் பிடிக்கவேண்டுமோ? சொல்லுங்கள் என்று கண்ணனால் நியமிக்கப் பெற்றுத் தங்களுக்கு வேண்டியவைகளைச் சொல்லுகிறார்கள். (ஞாலத்தையெல்லாம்......போய்ப்பாடுடையனவே) உலகமெல்லாம் அதிரும்படியான முழக்கத்தையுடையனவாய், பால்போன்ற நிறத்தையுடைய உன் பாஞ்சஜந்யமென்னும் சங்கம்போன்றனவாய், இடமுடையனவான பல சங்கங்கள் வேணும். (ஞாலத்தையெல்லாம் நடுங்க முரல்வன) ''ஸ கோ₄ஷா தா₄ர்த்தராஷ்ட்ராணும் ஹ்ருத₃யாநி வ்யதா₃ரயத்'' [அந்தச் சங்கின் முழக்கம் (யுத்தகளத்திலிருந்த) துரியோதனுதியர் மனங்களைப் பிளந்தது.] என்ற அளவு போதாது. ''தஸ்ய நாதே₃ந தை₃த்யாநாம் ப₃லஹாநிரஜாயத'' [அச்சங்கொலியாலே (உலகிலுள்ள) அஸுரர்கள் அனைவர்க்கும் பலஹானி பிறந்தது.]

''பற்றார் நடுங்க முன் பாஞ்சசன்னியத்தை வாய்வைத்த போரேறே'' என்றாப்போலே உலகிலுள்ள உகவாதாரெல்லாம் நடுங்கும்படியாக முழங்கவேணும். ''பூங்கொள் திருமுகத்து மடுத்தூதிய சங்கொலி யும் சார்ங்கவில் நாணொலியும் தலைப்பெய்வதெஞ்ஞான்று கொலோ'' என்று அடியார் இவ்வொலியை ஆசைப்பட்டிருப்பாராகையாலே, இங்கு 'ஞாலம்' என்னும் பதம் உலகிலுள்ள பகவத் பாகவத விரோதிகளைச் சொல்லுகிறது. அன்றிக்கே,

''யஸ்மிந் ஆபூர்யமாணே பததி காதலாத் சங்கரஸ்யாபி சூலம்
த்ராஸாத் உத்$_3$ப்$_4$ராந்தசித்தா ரவிரத$_2$துரக$_3$ா ப்$_4$ரஷ்டமார்க்க$_3$ா: ப்ரயாந்தி
ப்$_3$ரஹ்மா ப்$_3$ரஹ்மாண்ட$_3$ப$_4$ாண்ட$_3$ஸ்பு$_2$டநபரிப$_4$யாத்ஸ்தௌதி நாராயணு க்$_2$யம்
ஸோஸ்மாந் பாயாத் ஸு நாதே$_3$ா வத$_3$நவிநிஹித: பாஞ்சஜந்யோ முராரே:''

[எந்தச் சங்கமானது முழங்கும்போது, சங்கரனுடைய சூலமும் கையிலிருந்து விழுகிறதோ, ஸூர்யனின் ரதத்தில் கட்டப்பட்ட குதிரைகள், பயத்தினால் மனங்கலங்கி வழிதவறிச் செல்கின்றனவோ, பிரமதேவன் ப்ரஹ்மாண்டமாகிற பாத்திரம் வெடித்துவிடுமோ என்னும் பயத்தினால் நாராயணனென்னும் பெயரையுடைய பரமாத் மாவைத் துதிக்கிறானோ, அழகிய நாதத்தையுடையதும், முராரியின் வாயில் வைக்கப்பட்டதுமான அந்தப் பாஞ்சஜந்யம் நம்மைக் காப் பாற்றட்டும்.] என்கிறபடியே, உத்க்ருஷ்டரோடு அபக்ருஷ்டரோடு வாசியற எல்லாரும் 'என் வருகிறதோ' என்று பயந்திருக்கிறபடியைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். (பாலன்ன வண்ணத்து) பால் போன்ற நிறத்தையுடைய. 'மணிவண்ணா' என்று இவனுடைய நிறம் உத்தேச்யமானாப்போலே இவனுடன் ஸம்பந்தம்பெற்ற இதின் நிறமும் உத்தேச்யமாகிறது. நீலமேனியின் நடுவேயுள்ள செம் பவளவாயிலே பாலன்ன வண்ணத்தையுடைய சங்கத்தை வைத்ததாலுண்டான பரபாகரஸத்தை (வர்ணச்சேர்த்தியழகை) அநுபவிக்கிறார்கள்.

(உன் பாஞ்சசன்னியமே)''கடலில் பிறந்து கருதாது பஞ்சசனன் உடலில் வளர்ந்து போய் ஊழியான் கைத்தலத்திடரில் குடியேறி'' என்கிறபடியே பிறந்தவிடமான கடலையும், வளர்ந்தவிடமான பாஞ்சசனனுடலையும் விட்டு உன்னை ஒருகணமும் பிரியாதிருக்கும் பாஞ்சசன்னியம். (போல்வன சங்கங்கள்) அப்பாஞ்சசன்னியத்தைப் போன்ற பல சங்குகளைத் தரவேணும். இப்பாஞ்சசன்னியத்தைப் போன்ற சங்கமொன்றும் இல்லாமையாலே பாஞ்சசன்னியத்தைக்

கொடுத்துவிட்டு, அத்தைப்பிரியமாட்டாமல் தானும் கூடவருவான் என்று நினைத்துச் சொல்லுகிருர்கள். (போய்ப்பாடுடையன) பெரிதான இடத்தை உடைத்தாயிருக்கை. ஞாலத்தையெல்லாம் நடுங்கமுரல்வதற்குப் பேரிடத்தை உடையதாயிருக்கவேண்டுமன்றே. (போய்ப்பாடுடையன) புகழுடையவை என்றும் பொருள் கொள்ளலாம். கண்ணனை எதிர்பார்த்திருந்த ருக்மிணிப்பிராட்டியைத் தன் ஒலியாலே தரிக்கச்செய்து அச்செயலாலே "பூங்கொள் திருமுகத்து மடுத்தூதிய சங்கொலி' என்று அன்புடையாராலே போற்றப்படும் புகழையும், "சங்கரையா உன் செல்வம் சால அழகியதே" என்றும் "பொதுவாக வுண்பதனைப்புக்கு நீ உண்டக்கால் சிதையாரோ உன்னோடு செல்வப் பெருஞ்சங்கே" என்றும் மஹிஷிகளாலேயும் சொல்லப்பட்ட புகழையும் உடையது என்றபடி. 'போய்ப்பாடுடையன' என்பதைப் பறைக்கும் விசேஷணமாக்கலாம். வாஸுதேவன் உகந்ததாகையாலும், ப்ரணவாகாரமாய், மங்களகரமான வடிவையும் சப்தத்தையும் உடையதாகையாலும் சங்கை முதலில் வேண்டுகிருர்கள்.

"உன்னோடுடனே ஒரு கடலில் வாழ்வாரை இன்னார் இனையாரென்று எண்ணுவார் இல்லைகாண்" என்று நீங்களும் அறிந்திருக்கும்போது, பாஞ்சசன்னியத்தைப்போலே பல சங்கங்களைக் கேட்கிறீர்களே; என்னல் எப்படித் தரமுடியும்? மேலும் என்ன வேண்டுமென்கிறீர்கள்?" என்று அவன் கேட்கச் சொல்லுகிருர்கள்: (சாலப் பெரும்பறையே) மிகப்பெரிய பறைகள் வேண்டும்; இவர்கள் புறப்பட்டு வருவதைத் தெரிவிக்கச் சங்கை வேண்டினர்கள். போகும்போது முழங்கிக்கொண்டுபோகப் பறை என்னும் வாத்ய விசேஷத்தைக் கேட்கிருர்கள். இப்பறையே "ஏத்திப்பறை கொள்வான்" முதலான விடங்களிலே ஊராருக்காகத் தாங்கள் பெறவிரும்பிய பறை என்பதைக் காட்டுகிருர்கள். அவ்விடங்களில் பறை என்றது இப்பாட்டில் சொல்லும் சங்கங்கள், கொடிகள் முதலிய மற்ற உபகரணங்களுக்கும் உபலக்ஷணம். தங்களுக்கு ப்ரயோஜனம் இப்பறையல்ல என்பதை "இற்றைப் பறைகொள்வானன்று காண்" என்று மேலே சொல்லப்போகிருர்கள்.

"மேலும், என்ன வேண்டும்" என்றுன்; (பல்லாண்டிசைப்பாரே) சங்கும் பறையும் முழங்கப்போகும்போது எதிரே நின்று 'இத்திரளுக்கு என் வருகிறதோ' என்று பல்லாண்டு பாடுவாரையும் தரவேணும். (கோலவிளக்கே) மங்களகரமாயிருப்பதாய், நாங்கள்

ஒருவரையொருவர் கண்டு வாழ்வதற்கும் உதவுவதான அழகிய விளக்கும் வேணும். (கொடியே) அருகிலிருப்பார் தானே விளக்கைக் கொண்டு எங்களைக் காணமுடியும்; வெகுதூரத்திலிருப்பவர்களும் நாங்கள் வருவதையறிந்து வாழும்படி நாங்கள் முன்னே பிடித்துச் செல்லக் கொடியும் வேணும். (விதானமே) பனி எங்கள்மேலே விழாதபடி தடுக்கவல்ல மேற்கட்டியும் வேண்டும். இவையே நாங்கள் விரும்பும் உபகரணங்கள் என்கிறார்கள்.

பாஞ்சசன்னியமே போல்வன சங்கங்கள் பல கிடையாவாகை யாலே, அப்பாஞ்சசன்னியமொன்றை மட்டும் கொடுத்தான்; 'பாரோர்களெல்லாம் மகிழப் பறைகறங்கக்' குடக்கூத்தாடினபோது திருவரையிலே கட்டின பறையைக் கொடுத்தான்; திருப்பல்லாண்டு பாடுகைக்குப் பெரியாழ்வாரைக் கொடுத்தான்; 'குலவிளக்கே' என்று இவர்களாலேயே கொண்டாடப்பட்ட நப்பின்னைப் பிராட்டியைக் கோலவிளக்காகக் கொடுத்தான். "கருடக்கொடியொன்றுடையீர்" என்று புகழ் பெற்றவனுகையாலே கருடக்கொடியைக் கொடியாகக் கொடுத்தான். விதானமாக எதைக்கொடுக்கலாம் என்றுயோசித்தான்; திருவவதரித்தவன்று பணங்களாலே மழைத்துளிகள் தன்மேல் விழாமல் காத்துவந்த திருவநந்தாழ்வானைக் கொடுக்க மனமில்லை; தன்னைவிட்டு அவன் ஒருநிமிஷமும் பிரியமாட்டானுகையாலும், தானும் இவனைவிட்டால் தரிக்கமாட்டாமையாலும். ஆகையாலே "பெருமானரையில் பீதகவண்ண வாடை கொண்டென்னை வாட்டம் தணிய வீசீரே" "உடுத்துக்களைந்த நின் பீதகவாடையுடுத்து" என்று இவர்கள் ஆசைப்பட்டிருப்பதாய், அத்தவாளமென்று பெயர் பெற்ற தான மேற்போர்வையை இவர்களுக்கு மேற்கட்டியாகக்கொடுத்தான். ஊராரிசைந்திருக்கும்போது பொன்னுைத்த வாடைகுக்கூடலிட்டுப் போகவேண்டிய அவசியமும் இவனுக்கில்லையாகையாலே அதைக் கொடுப்பதால் ஒரு ஹானியுமில்லை இப்போது. இவற்றைக்கொடுத்த பின்பும், "இவை ஒவ்வொன்று போராது. ஒவ்வொரு வகையிலும் பலவேணும்" என்று கேட்டார்கள். "இல்லாததை நான் எங்கிருந்து தேடுவது?" என்று வினவினுன் கண்ணன்; "உனக்கு அரியது உண்டோ? ஆதாரமற்ற ஆலந்தளிரிலே சிறு குழந்தையாய்ப் பள்ளிகொண்டு உலகமனைத்தையும் உண்டவனன்றோ நீ; அகடித கடநாஸாமர்த்தியமுடைய உன்னால் ஆகாததெது" என்கிறார்கள் (ஆலினிலையாய்) என்னுமத்தாலே.

"பாலன் தனதுருவாய் ஏழுலகுண்(டு) ஆலிலையின்
மேலன்று நீவளர்ந்த மெய்யென்பர்—ஆலன்று

வேலைநீருள்ளதோ விண்ணதோ மண்ணதோ
சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்லு''

என்று சிறுவனயிருக்கையிலே குன்று குடையாயெடுத்த செயலைப் போன்றதே ஆலிலையில் கண்வளர்ந்ததும் என்று அருளிச்செய்தார் பொய்கையாழ்வார். (ஆலினிலையாய்) ''பண்டொரு நாள் ஆலினிலை வளர்ந்த சிறுக்கன் அவனிவன்'' என்றும், ''வையமேழும் கண்டாள் பிள்ளைவாயுளே'' என்றும், ''என்னை நான் மண்ணுண்டேனை அன்புற்று நோக்கி அடித்தும், பிடித்தும் அனைவர்க்கும் காட்டிற்றிலையே'' என்றும் சொல்லுகிறபடியே இவனே உலகமுண்ட பெருவாயனை ஆலினிலைப்பெருமான் என்னும் விஷயம் ஆய்ப்பாடியிலுள்ள சிறுமியரும் அறியும்படியன்றோயிருப்பது. சரமச்லோகத்திலே ''மாம்'' என்றவிடத்திலே சொன்ன ஸௌலப்யத்தை ''மாலே மணிவண்ணா'' என்னுமத்தால் உணர்த்தினர்கள். ''அஹம்'' என்றவிடத்திலே சொன்ன ஸர்வசக்தியோகத்தை ''ஆலினிலையாய்'' என்னுமிடத்திலே சொல்லுகிறார்கள். (அருள்) உனக்கு சக்தியில்லையோ நாங்கள் இழக்கைக்கு? இவ்வுபகரணங்கள் எங்களுக்கு அபேக்ஷிதமன்றென்னத்தான் முடியுமோ? நீயாக மனமுவந்து அருளாவிடில் எங்களால் என் செய்யமுடியும்? ஆகையால் நீயே அருளவேணும் என்கிறார்கள். (ஆலினிலையாயருள்)

''அருளா தொழியுமே ஆலிலை மேலன்று
தெருளாத பிள்ளையாய்ச் சேர்ந்தான்'' என்னும் உன் அருள் ப்ரஸித்தமன்றோ என்கிறார்கள்.

## திருப்பாவை—இருபத்தேழாம் பாட்டு.

27. கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா உன்றன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்
நாடு புகழும் பரிசினல் நன்றாகச்
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே என்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடை யுடுப்போ மதன்பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடி யிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.

பதவுரை:—**கூடாரை**—*தன் அடிபணியாதாரை*, **வெல்லும் சீர்**-*ஜயிக்கின்ற குணங்களையுடைய*, **கோவிந்தா**-*கோவிந்தனே!* **உன் தன்னை**—*உன்னை*, **பாடி**-*வாயாரப்பாடி*, **பறை கொண்டு**-*பறையைப் பெற்று*, **யாம் பெறு சம்மானம்**—*(மேலும்) நாங்கள் அடையவிருக்கும் பரிசாவது:-*, **நாடு புகழும் பரிசினால்**-*ஊரார் புகழும்படியாக*, **சூடகம்**—*(கைக்கு ஆபரணமான) சூடகங்களும்*, **தோள்வளை** — *தோள்வளைகளும்*, **தோடு**—*(காதுக்கு ஆபரணமான) தோடுகளும்*, **செவிப்பூ** — *கர்ண புஷ்பமும்*, **பாடகம்**-*(காலுக்கு ஆபரணமான) பாதகடகமும்*, **என்று அனைய பல கலனும்**—*என்று சொல்லப்படும் இவ்வாபரணங்கள்போன்ற மற்றும் பல ஆபரணங்களையும்*, **யாம் நன்றாக அணிவோம்**—*(உன்னாலும் நப்பின்னையாலும் அணிவிக்கப்பட்ட) நாங்கள் நன்றாக அணிந்துகொள்வோம்;* **ஆடை**-*(உங்களால் அணிவிக்கப்பட்ட) ஆடைகளை*, **உடுப்போம்**-*உடுத்திக்கொள்வோம்;* **அதன் பின்னே**-*அதற்குப் பிறகு*, **பால் சோறு**—*பாலாலே சமைக்கப்பட்ட சோறு*, **மூட**—*மறையும்படியாக*, **நெய் பெய்து**-*நெய்யை இட்டு*, **முழங்கை வழி வார**-*முழங்கையால் வழியும்படியாக*, **கூடி இருந்து**-*(நாம்) ஒன்றாக இருந்து (உண்டு)*, **குளிர்ந்து**—*குளிரவேணும்.*

*அவதாரிகை:*— பாஞ்சசன்னியம் போன்ற பல சங்குகளையும், பலபறைகள் முதலானவற்றையும் கொடுக்கை ஆலினிலை மீது உலகமுண்ட பெருவாயனாய் உறங்கின உனக்கு அரிதன்று என்று சொல்லி முடித்தார்கள் சென்ற பாட்டில். ''இனி இவர்களுக்கு இன்னம் சில வாகிலும் கொடுத்தாலொழிய விடார்கள்'' என்று அறிந்து எதைக் கொடுக்கலாமென்று ஆலோசித்தான். கோலவிளக்கான நப்பின்னைப் பிராட்டிக்கும், கருடக்கொடிக்கும் ஒப்பான வஸ்துக்களொன்றும் இல்லாமையாலே, அவை ஒவ்வொன்றே போருமென்று விடுத்து, மற்ற உபகரணங்களில் மேலும் சிலவற்றைக்கொடுத்தான். பாஞ்சசன்னியத்துக்குத் 'துணையாக, புள்ளரையன் கோயிலில் வெள்ளை விளிசங்கையும், ஆனிரையினம் மீளப்பசு மேய்க்கும்போது குறித்தசங்கையும் கொடுத்தான்; பாரோர்களெல்லாம்மகிழக்கறங்கின பறைக்குத்துணையாக, ஜாம்பவான் திரிவிக்ரமாவதாரத்தில்

அடித்துக்கொண்டு சுற்றிவந்த பறையையும், லங்கையை ஜயித்த போது அடிக்கப்பட்டதொரு பறையையும் அளித்தான். பகவானுக்குப் பல்லாண்டுபாடும் பெரியாழ்வாருக்குக் கூட்டாக பாகவத ஸமூஹத்திற்குப் "பொலிக பொலிக பொலிக" என்று பல்லாண்டிசைக்கும் பராங்குசரான ஆழ்வாரையும் அளித்தான். ஆய்ச்சிகள் மிகவும் வேண்டிக்கொள்கையாலும், அவ்வனந்தனும் இவர்களுக்குக் கிஞ்சித்கரிக்க ஆசைப்படுகையாலும், தானும் இவர்களுக்குத் தலைவனாகக் கூடப்போகிறபடியாலும், குழந்தையாயிருக்கும்போதே தனக்குக் குடையாய் நின்று நோக்கிய ஆதிசேஷனையும், அத்தவாளத்தோடு கூட மேற்கட்டியாகக்கொள்ள அளித்தான். இவ்வளவையும் கொடுத்து "இவ்வளவு தானே உங்களுக்கு வேண்டியது?" என்ன, மார்கழி நீராடப்போகுமுன் வேண்டியவை இவை. நோன்புநோற்ற பிறகு உன்னிடம் சில பரிசுகள் பெறவிருக்கிறோம். அவையாவன: நீயும் நப்பின்னைப்பிராட்டியும் பூட்டிய ஆபரணங்களையும் ஆடைகளையும் அணிகையும், உங்களுடன் ஒன்றாகக் கலந்து இன்னமுது அருந்துகையுமாகும்" என்கிறார்கள் இப்பாட்டில்.

**வியாக்கியானம்**:-பெண்காள்! நீங்கள் வேண்டியது தருகிறோம் என்று நான் வாக்குக்கொடுத்ததைக் கொண்டு என்னையும், என்னுடைமைகள் எல்லாவற்றையும் உங்களுடையன வாக்கிக்கொண்டீர்கள். "ஆற்றாது வந்துன் அடிபணியுமாபோலே போற்றி யாம் வந்தோம்" என்று சொல்லிகொண்டு வந்து என்னைத் தோற்கச் செய்துவிட்டீர்கள். இது எங்ஙனே?" என்று கிருஷ்ணன் கேட்கச் சொல்லுகிறார்கள்: (கூடாரை வெல்லும்சீர்) எவ்வளவு முயற்சி செய்தும், "கூடோம்" என்றிருப்பவர்களையன்றோ நீ வெல்லுவது; "கூடுவோம்" என்றிருப்பவர்களிடம் தோற்பதன்றோ உன் ஸ்வபாவம்; ஆகையால் நீ எங்களிடம் தோற்று உன் ஸர்வஸ்வத்தையும் கொடுத்ததில் ஆச்சரியமென்ன என்கிறார்கள். (கூடாரை வெல்லும் சீர்) திருவடி, அங்கதன் முதலானோரைத் தூதுவிட்டும், 'இன்று போய் நாளை வா' என்று கூறியும், இப்படிப் பலசெய்தும் வணங்காதிருக்கையாலேயன்றோ ராவணனை வென்றான் இவன். "யதி₃ வா **ராவண: ஸ்வயம்**" என்று இவன் நமக்கு அனுகூலனாய் வந்து நம்மைத் தோற்பிப்பானோ என்று கிடந்தான். இவன் காலுக்கருகில் உட்காரவும் கூடாதென்றிருந்த துரியோதனனைத் தொலைத்தான்; "**கரிஷ்யே வசநம் தவ**" [நீ சொல்லிற்றுச்செய்வேன்] என்றிருந்த பாண்டவர்களுக்குத் தன்னை எழுதிக்கொடுத்து தூத்யஸாரத்யங்களைப் பண்ணி, அவர்களை எல்லிபகலென்னாது எப்போதும் காத்தான்.

(வெல்லும் சீர்) கூடுவாரோடு, கூடாதாரோடு வாசியற அனை வரையும் தன் குணங்களாலேயே வெல்லுவன்; கூடுவாரை ஸௌசீல்ய ஸௌலப்யாதி குணங்களாலே ஜயிப்பான்; கூடாதாரை சௌர்யகுணத்தாலே வெல்லுவன். சௌர்யம் அம்புக்கு இலக் காக்கும். ஸௌசீல்ய ஸௌலப்யாதி குணங்கள் அழகுக்கு இலக் காக்கும். அம்புக்கு விஷயமானுருக்கு மருந்திட்டு ஆற்றலாம். சீலமும் அழகும் நின்று ஈராநிற்கும். "நின்றெனதாவியை ஈர்கின்ற சீலமே" "வல்வினையேனை ஈர்கின்றகுணங்கள்" "தாமரைக் கண்கள் கொண்டு ஈர்தியாலோ" என்கிறபடியே. (கூடாரை வெல்லும் சீர்) ஸ்த்ரீத்வாபிமானத்தாலே "வாசலைவிட்டுப் புறப்படோம்" என்றிருந்த தங்களைவெல்லும் குணங்களைச் சொல்லுவதாகவும் கொள்ள லாம். (வெல்லும் சீர்) "ஸத்யேந லோகாந் ஜயதி தீ₃நாந் தா₃நேந ராக₄வ: கு₃ரூந் சுச்ரூஷயாவீரோ த₄நுஷா யுதி₄ சாத்ரவாந்' [லோகங்களை ஸத்யத்தினாலும், தீனர்களை தானத்தினாலும், ஆசார்யர்களை சுச்ரூஷை யினாலும் யுத்தத்தில் சத்துருக்களை தநுஸ்ஸினாலும் ஜயிக்கிருன் ராமன்] என்றதை நினைப்பது.

(கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா) இவன் கூடாதவரையே வெல்லும்; கூடினுரிடம் தோற்றிருக்கும் என்னும் விஷயத்தை கோவிந்தனுயிருக்கும் இருப்பிலே காணலாம் என்கிருர்கள். (கோவிந்தா) "கூடமாட்டோம்" என்னும் நினைவில்லையென்பதைப் பெரிதாக்கிக்கொண்டு, 'கூடுவோம்' என்று சொல்ல அறியாதனவாய் உபகாரஸ்ம்ருதியுமற்றவையான பசுக்களையும் ரக்ஷிப்பவனன்றோ நீ? (கோவிந்தா) தன் காரியத்தைத் தான் செய்ய சக்தியற்று இவன் கைபார்த்திருக்கும் வஸ்துக்களிடத்திலே இவனுடைய அன்பு கரை புரண்டிருக்கும். "திவத்திலும் பசுநிறை மேய்ப்புவத்தி செங்கனி வாய் எங்கள் ஆயர்தேவே" என்கிறபடியே தன்னேடொத்தவர் களுக்கு உதவுமிடமான பரமபதத்தைக்காட்டிலும் பசுக்கூட்டத்தை மேய்க்கும்போது உகப்பு விஞ்சியிருக்கும். தாஞகவே புல் மேயவல்ல பசுக்களை ரக்ஷிப்பதைக்காட்டிலும், புல் மேயவுமறியாத கன்றுகளை ரக்ஷிப்பதில் உகப்பு மேலாயிருக்கும். "பசு நிறை மேய்ப்புவத்தி" "கன்று மேய்த்து இனிதுகந்தகாளாய்" என்றும், "காலிமேய்க்க வல்லாய்" "கன்று மேய்த்து விளையாட வல்லானை" என்றும் இவ் வர்த்தம் ஆழ்வார்களாலே அறிவிக்கப்பட்டது.

(உன்றன்னைப்பாடி)முன் உன்னைப் பாடப்பெருமலிருந்த வ்யஸன மெல்லாம் தீரும்படி உன்னைப்பாடி. நாப்படைத்த ப்ரயோஜனம் பெற

சேஷியான உன்னைப்பாடி. ''வாயினுல் பாடி'' என்ருர்கள் முதலில்; ''கேசவனைப்பாட'' ''முகில்வண்ணன் பேர்பாட'' ''மனத்துக்கினி யானைப் பாட'' ''மாயனைப் பாட'' ''மைத்துனன் பேர்பாட'' என்ருர்கள் நடுவில். ''உன்றன்னைப் பாடி' என்று முடிவிலும் அப்படியே சொல்லுகிருர்கள். பாடுகையே இவர்களுக்கு ப்ராணதாரகமாயிருக்கிறபடி. (உன்றன்னைப் பாடி) ''உன்னைப்பாடி'' என்னுதே ''உன் தன்னைப் பாடி'' என்கைக்குக் கருத்து: எங்களை நீ பாடவேண்டியிருக்க, உன்னை நாங்கள் பாடுவதே என்கை. (உன்றன்னைப்பாடி) ''அத்தலை இத்தலையாவதே! உன் பணியை நாங்கள் ஏறிட்டுக் கொள்வதே!'' என்கிருர்கள். (பறைகொண்டு) ஊரார் விரும்பிய பறையைக்கொண்டு. முந்தியபாட்டிற் சொன்னபடியே பறை முதலானவற்றைக் கொண்ட பின்பு.

(யாம்) சேஷியான உன்னைப்பற்றி, உன்னையடைந்தார்க்குப் பேறு தப்பாது என்னும் நிச்சயத்தையுடைய நாம். (யாம் பெறு சம்மானம்) ஊராருக்காகப் பறைகொண்டதுக்குமேலே, நாங்கள் பெறவிருக்கும் பஹுமானம் சில உள. இப்பாட்டில் இவ்வடியைப் பற்றிய உபந்யாஸத்தை பட்டர் வெள்ளைத்திருமுற்றத்திலேயிருந்து செய்துவரும்போது, பெருமாள் ப்ரஸாதம் வர ''யாம்பெறு சம்மானம் வந்தது'' என்று அருளிச்செய்தார் என்னும் ஐதிஹ்யத்தை அநுஸந்திப்பது. (சம்மானம்) ''பதிஸம்மாநிதா ஸீதா'' என்று, ராம பிரானைப்பின்தொடர்ந்து மங்களாசாஸனம் செய்துவந்த பிராட்டிக்கு ஒரு ஸம்மானமளித்துச்சென்ருர் பெருமாள் என்ருர் வால்மீகி பகவான். இவ்விடத்தில் ஸம்மானம் யாது என்று விசாரம் ஏற்பட, ''தன் தோளில் மாலையையெடுத்துப் பிராட்டியின்மீது இட்டார்'' என்று நிர்வஹித்தார் ஆழ்வான்; ''ப்ரணயித்வத்தாலே காலைப் பிடித்து நில் என்ருர்'' என்று நிர்வஹித்தார் பட்டர். இம்மாதிரியான ஸம்மானங்களைப்பெற விரும்புகிருர்கள் இவர்கள். (யாம் பெறு சம்மானம்) அநாதிகாலம் பட்ட பரிபவங்களெல்லாம் பட்டுப்போகும்படி அவன் கொண்டாடும்படியைச் சொல்லுகிருர்கள்.

(நாடு புகழும் பரிசினுல்) ''ஒருவன் கொடுத்தபடியென்! சிலர் பெறும்படியென்!'' என்று ஊரார் கொண்டாடும்படியாக. ''வாழ்வர் வாழ்வெய்தி ஞாலம் புகழவே'' என்றும், ''நாடும் நகரமும் நன்குடன் காண நலனிடையூர்திபண்ணி வீடும் பெறுத்தித் தன் மூவுலகுக்கும் தரும் ஒரு நாயகமே'' என்றும் இவன் தரும் பரிசுகள் நாடு நகரமுமடங்கிய உலகமெல்லாம் புகழும்படியிருப்பவையன்ரே. 'நாடு

புகழும்' என்று தங்களுக்குப் புகழ்வருகைக்குச் சொல்லுகிறுர்களன்று; நாட்டாரும் இதைப்புகழ்ந்து வாய்படைத்த பலனைப்பெற்று உஜ்ஜீவிக்கவேண்டுமென்று சொல்லுகிறுர்கள். (நாடு புகழும்) ஒரு க்ஷுத்ரனை அண்டிப்பெற்ற ஒரு பொருளாகில் லோகம் இகழும்; ஸர்வஸமாச்ரயணீயனையண்டிப் பெற்றதாகையாலே உலகமெல்லாம் புகழ்கிறது.

(நன்ருக) யாம் அணிவோம் என்றதோடே கூட்டவேணும். (நன்ருக யாம் அணிவோம்) "ப்ரதேஹி ஸுப₄கே₃ ஹாரம் யஸ்ய துஷ்டாஸி ப₄ாமிநி" [ஸீதே! எவன் உனக்கு ப்ரீதிவிஷயமாயிருக்கிருனே அவனுக்கு இந்த ஹாரத்தைக் கொடுப்பாயாக.] என்று பெருமாளும் பிராட்டியும் சேர்ந்து, இந்திரனுல் கொடுக்கப்பட்ட ஹாரத்தைத் திருவடிக்குப் பூட்டினுப்போலே நப்பின்னையும் நீயும் சேர்ந்து எங்களுக்கு அணிவிக்க, நாங்கள் அணிவோம். இவன் மட்டும் அணிவித்தால் அது அணிகையாகிறது; அவளும் சேர்ந்து அணிவிக்கையாலே 'நன்ருக அணிவோம்' என்கிறுர்கள். (நன்ருக அணிவோம்) அணிந்து எங்கள் ஸ்வரூபத்தையும் பெற்று, உங்களையும் மகிழ்விப்போம். (நன்ருக அணிவோம்) "தம் ப்₃ரஹ்மாலங்காரேண அலங்குர்வந்தி" [அந்த முக்தபுருஷனை ப்ரஹ்மத்தின் அலங்காரத்திலே அலங்கரிக்கிறுர்கள்.] என்று வேதத்தில் சொல்லிய படியே சிலரையிடுவித்து அலங்கரிக்கையின்றிக்கே தானே நேரேயிருந்து அலங்கரிக்கை. தாங்களாக அணிந்திராமல் இவர்கள் அணிவிக்க அணிகை நன்ருக அணிகையாகவுமாம்.

(சூடகமே) முதன் முதலிலே பிடிக்கும் கைக்கு இடும் ஆபரணம்; "வெள்ளிவளை கைப்பற்ற" என்று அநந்யார்ஹைகளாகைக்கு முதலிலே கையிலே ஆபரணமிடுகிருன். (தோள்வளையே) கையைப் பிடித்தவுடன் அணைக்கும் தோளுக்கு ஆபரணம். சுந்தரத் தோளுடையானும் ஆசைப்படுவதன்ருே இவர்களுடைய வேயிருந் தடந்தோள். "வேய்மரு தோளிணை மெலியுமாலோ" என்ற விச்லேஷதசை நீங்கியிருக்கையாலே தோள்வளை தங்கி நிற்கிறபடி. (தோடே செவிப்பூவே) அணைத்தவுடன் அவனுடைய தோளுக்கும் இவர்களுடைய காதுக்கும் ஆபரணங்களிருக்கிறபடி.

"சகாஸதம் ஜ்யாகிணகர்க்கசை: ஶுபை₄:
சதுர்ப்பி₄ராஜாநுவிலம்பி₃பி₄ர் பு₄ஜை: ।
ப்ரியாவதம்ஸோத்பல கர்ணபூ₄ஷண
ஶ்லதா₂லகாப₃ந்த₄ விமர்த்த₃ ஶம்ஸிபி: ॥"

[நாண் உரசுவதாலுண்டான தழும்பினுல் கடினமாயும், மங்களகரமாயும் விளங்குவதாய், முழங்காலளவும் தொங்குவதாய், பிராட்டியின் செவிப்பூ, தோடு, அவிழ்ந்திருக்கும் முன்னெற்றி மயிர்கள் ஆகிய இவை உரசியிருப்பதைத் தெரிவிப்பதான நான்கு திருக்கைகளால் பிரகாசிப்பவனே.] என்று ஆளவந்தார் அருளியபடியே அவனுடைய தோள்களுக்கும் பெருமையைத் தருபவையன்றோ இவை.

(தோடே) "பொற்றோடு பெய்து" என்று முன்பே தோடிட்டிருந்தபோதிலும் இவனிட்டாலொழிய இட்டதாக இராது இவர்களுக்கு. (செவிப்பூவே) அணைத்தவுடன் நுகரத்தக்க கந்தத்தையுடைய கர்ணபுஷ்பம். (பாடகமே) அணைத்துத் தோற்று இவன் கீழே விழுந்து பிடிக்கும் திருவடிகளுக்கு ஆபரணம். (சூடகம் பாடகம்) "கைத்தலம் பற்ற" "திருக்கையால் தாள் பற்ற" என்கிறபடியே கையையும் காலையும் வாசியறப் பிடிக்கும்படியன்றோ இவனுடைய ப்ரணயித்வம் இருக்கிறது.

(என்றனைய பல்கலனும்) இப்படிப்பட்ட பல ஆபரணங்களையும் நாங்கள் அணிவோம். இவனுக்கு இருக்கும் கரைபுரண்ட காதல் இந்த நாலைந்து ஆபரணங்களை அணிவிப்பதோடு இவனைத் திருப்தியடையச்செய்யுமோ? ஆகையாலே கணக்கற்ற ஆபரணம் பூட்டுகிறபடி. (பல்கலனும்) "பலபலவே ஆபரணம்" "அபரிமித தி$_3$வ்யபூ$_4$ஷண" என்று சொல்லப்படும் அவனுடைய ஆபரணங்களை எண்ணிக்கையிலே ஒத்திருக்கின்றன. (யாம் அணிவோம்) "**ஆப$_4$ரணஸ்யாப$_4$ரணம் ப்ரஸாத$_4$நவிதே$_4$: ப்ரஸாத$_4$நவிசேஷ: உபமாநஸ்யாபி ஸகே$_2$ ப்ரத்யுபமாநம் வபுஸ்தஸ்யா:**" [நண்பனே! அவளுடைய உடம்பு ஆபரணத்திற்கும் ஆபரணமாகவும், அலங்காரவகைகளுக்கும் அலங்காரமாகவும், உபமானப்பொருளுக்கும் எதிருபமானப் பொருளாகவும் விளங்குகிறது.] என்று புகழத்தக்க வடிவுடைய நாங்கள் அணிவோம். அழகுக்காக அணிவதெனில் இவை அநபேக்ஷிதம். நீயும் நப்பின்னைப்பிராட்டியும் அணிவிக்கையாலே ஸ்வரூபம் நிறம் பெறுகைக்கு அணிவோம். பூட்டவேண்டிய அவன் கூடியிராமையாலே "மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்" என்றார்கள் ஆரம்பத்திலே. இப்போது அவன் கூடியிருக்கையாலே "யாமணிவோம்" என்கிறார்கள். (யாமணிவோம்) "நீ அணிவிக்கவேண்டும்" என்னுமல், "யாமணிவோம்" என்பானென்? என்னில்: "மலரிட்டு நாம் முடியோம்" என்னும் ஸங்கல்பத்தைவிட்டு, ஆபரணாதிகளை அணிய இசைவார்களோ என்று இவன் ஆசைப்பட்டுக்கிடப்

பதை அறியும் பாவஜ்ஞைகளாகையாலே தங்கள் இசைவை அறிவிக்கிறார்கள்.

(பல்கலனும்...ஆடையுடுப்போம்) "புனையிழைகளணிவும் ஆடையுடையும்" "எண்ணில் பல்கலன்களும் ஏலுமாடையும்" "படிச்சோதியாடையொடும் பல்கலனாய்" என்று இவர்கள் இவனை அனுபவிக்கும் போது ஆபரணங்களையும், ஆடையையும் சேர்த்தே அநுபவிப்பது போல், இவனும், ஆபரணங்களை அணிவித்தவுடன் ஆடையுடுக்கச் செய்து, அச்சேர்த்தியழகை அநுபவிக்கிறபடி. "காறைபூணும் கண்ணாடிகாணும் தன்கையில் வளைகுலுக்கும் கூறையுடுக்கும்" என றன்றோ தமப்பனாரும் இவர்களுடைய செயல்களை அநுஸந்தித்தார். (நாடு புகழும் பரிசினால்...ஆடையுடுப்போம்)"கூறையுடுக்கும் அயர்க்கும்" "கலையோவரையில்லை" என்று உலகோர் பழிசொல்லாதே புகழும்படியாக ஆடையுடுப்போம். (கோவிந்தா உன்றன்னைப் பாடி ஆடையுடுப்போம்) "கோவிந்த₃ புண்ட₃ரீகாக்ஷ" என்று வெகுதூரத்திலிருந்து 'கோவிந்தா' என்றவளுக்குப் புடவை சுரந்த நீ அருகிலிருந்து கோவிந்தாவென்றழைக்கும்எங்களுக்கு ஆடைஅளியாயோ? (ஆடையுடுப்போம்) இதற்கு முன்னும் ஆடையுடுத்திருந்தபோதிலும் இவனுடுத்த உடுக்காததாகையாலே அது ஆடையாகத் தோன்றவில்லை இவர்களுக்கு. (நன்றாக ஆடையுடுப்போம்) "இவர்கள் உடுக்க உபக்ரமிக்க, 'உடுத்தபடி பொல்லாது' என்று அவன் அழிக்கையிறே நன்றாக உடுக்கையாவது" என்று ஆறாயிரப்படி. (நன்றாக ஆடையுடுப்போம்) "பெருமான் அரையில் பீதகவண்ண வாடை" "உடுத்துக்களைந்தநின் பீதகவாடையுடுத்து"என்கிறபடியே அவனுடுத்துக் களைந்து, அவனுடைய வேர்ப்புமணத்தோடேகூடிய ஆடையை உடுக்கையே நன்றாக உடுக்கை என்றும் கொள்ளலாம்.

(ஆடையுடுப்போம் அதன்பின்னே பாற்சோறு) "பீதகவாடையுடுத்துக் கலத்ததுண்டு" என்ற பெரியாழ்வாரைப்போலே ஆசைப்படுகிறார்கள். (அதன்பின்னே) க்ஷுத்ர மனுஷ்யர்களையும், தெய்வங்களையும் பற்றினால், அவர்களிடமிருந்து ஒரு க்ஷுத்ர வஸ்துவைப் பெறுவதும் சிரமஸாத்₄யமாயிருக்கும். ஸர்வேச்வரனைப் பற்றுகையாலே, பெறும் வஸ்துக்களுக்குக் கணக்கில்லாமல் பெருகுகிறது. (பாற்சோறு மூட நெய்பெய்து) இதுவரையில் அவனைப் பிரிந்து "நெய்யுண்ணோம் பாலுண்ணோம்" என்றிருந்தார்கள் இவர்கள். இவர்களுண்ணாமையாலே அவனும் நெய்யுண்ணாவிரதம் கொண்டிருந்தான். ஆகையாலே ஆய்ப்பாடியில் நெய்யும் பாலும் மிதமிஞ்சிக்

கிடந்தது. அதனால் பாலிலேயே சோறாக்கி, அதில் சோறு மறையும்படி நெய்யையிட்டு அவனோடே கூடியுண்ண விரும்புகிறார்கள். (சோறுமூட நெய் பெய்து) ''நெய்யிடை நல்லதோர் சோறு'' என்று தமப்பனார் அருளியபடியே நெய்யின் நடுவே சோற்றைத் தேடிக் கண்டுபிடிக்கவேண்டியிருக்கை.

(முழங்கை வழிவார) முழங்கை வழியாக நெய்யானது வழியும்படியாக. நம்பிதிருவழுதி வளநாடு தாஸர் ''இவர்கள் வாயிலே நெய் படாதோ?'' என்று பட்டரைக்கேட்க, ''கண்ணனிடத்திலே கண்ணையும் நெஞ்சையும் பறிகொடுத்திருக்கும் இவர்களுக்குச் சோறு வாயில் பட்டாலன்றோ நெய் வாயில் படப்போகிறது'' என்று பட்டர் அருளிச்செய்த விருத்தாந்தத்தை அநுஸந்திப்பர்கள். (கூடியிருந்து) பசி தீருகை உத்தேச்யமன்று; சோற்றைத் தொட்டுக்கொண்டாவது எல்லாரும் கூடியிருக்கையே பலன். (கூடி) ''எந்நாள் வந்து கூடுவன்'' என்று பிரிந்திருந்து பட்ட சிரமமெல்லாம் போம்படி கூடி. (இருந்து) பல வாசல்களில் திரிந்து பட்ட வருத்தம்தீர இருந்து. (குளிர்ந்து) பிரிவாலே காய்ந்துபோன நெஞ்சம் குளிரவேணும். ''குளிர்ந்து ஆடையுடுப்போம்'' என்று கூட்டியும் பொருள்கொள்ளலாம். (கோவிந்தா உன்றன்னைப்பாடி...கூடியிருந்து குளிர்ந்து) ''கோவிந்தன் குணம்பாடி ஆவிகாத்திருப்பேனே'' என்னுமவர்களன்றோ. (கூடியிருந்து குளிர்ந்து) ''அஹமந்நம்—அஹமந்நாத$_3$:'' [நான் எம்பெருமானுக்கு அந்நம்போல் போக்யமாயிருப்பவன்; (என்னை புஜித்து உகக்கும் எம்பெருமானை) உண்பவன் நான்] என்று வேதத்திற் சொன்னபடியே சேதனனும், பரமசேதனனும் ஒருவர்க்கொருவர் போக்யமாயன்றோ இருப்பது. (நன்றாகக் கூடியிருந்து குளிர்ந்து) ''மதிநிறைந்த நன்னாளிலே'' கூடியிருக்கையாலே நன்றாகக் கூடியிருக்கிறபடி. (உன்றன்னைப்பாடி—கூடி—குளிர்ந்து) வாய் உன்னைப் பாடவேணும்;உடம்பு கூடவேணும்;நெஞ்சு குளிரவேணும். (கூடிக் குளிர்ந்து)தாங்கள் குள்ளக் குளிரக் குடைந்து நீராடுவதாகச் சொன்னது இந்தநீர்வண்ணனாகிற வாசத்தடத்திலே மூழ்குவதையே என்று உணர்த்துகிறார்கள்.

சென்ற பாட்டிலே அவனுடைய சங்கம் முதலான பரிகரங்களைப் பெற்றதைச் சொல்லுகையாலே ''நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி'' [தோஷமற்றவனாய் மேலான ஸாம்யத்தை அடைகிறான்.] என்னும் வேதார்த்தத்தை உணர்த்தினார்கள். இப்பாட்டிலே அவனோடே கூடியிருந்து குளிர்ந்து போகங்களை அநுபவிக்கையைப் பேசுகை

யாலே ''ஸோச்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்₃ரஹ்மணு விபச்சிதா'' [அந்த முக்தாத்மா ஸர்வஜ்ஞனை பரமாத்மாவுடன் கூட ஸகலகல் யாண குணங்களையும் அநுபவிக்கிருன்] என்னும் வேதவாக்கியப் பொருளைப் பேசுகிருர்கள்.

## திருப்பாவை—இருபத்தெட்டாம் பாட்டு.

28. கறவைகள் பின்சென்று கானம்சேர்ந் துண்போம்
அறிவொன்று மில்லாத ஆய்க்குலத் துன்றன்னைப்
பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்று மில்லாத கோவிந்தா வுன்றன்னோ
டுறவேல் நமக்கிங் கொழிக்க வொழியா(து)
அறியாத பிள்ளைகளோ மன்பினுலுன் றன்னைச்
சிறுபே ரழைத்தனவுஞ் சீறியருளாதே
இறைவாநீ தாராய் பறைபேலோ ரெம்பாவாய்.

பதவுரை:—**குறை ஒன்றும் இல்லாத கோவிந்தா**—*ஒரு குறையும் இல்லாதவனை கோவிந்தனே!* **யாம்**—*நாங்கள்,* **கறவைகள் பின் சென்று**—*பசுக்களின் பின்னே போய்,* **கானம் சேர்ந்து**—*காடு சேர்ந்து,* **உண்போம்**—*உண்டு திரிவோம்;* **அறிவு ஒன்றும் இல்லாத**—*சிறிதும் அறிவற்ற,* **ஆய்க் குலத்து**—*இடைக் குலத்தில்,* **உன் தன்னை**—*உன்னை,* **பிறவி பெறும் தனை புண்ணியம் உடையோம்**—*பிறக்கப் பெறுவதற்குத்தக்க புண்ணியமுடைய யவர்களாய் இராநின்றோம்;* **இறைவா**—*எம்பிரானே!* **உன் தன்னோடு உறவு**—*உன்னோடு (எங்களுக்குள்ள) உறவானது,* **இங்கு நமக்கு ஒழிக்க ஒழியாது**—*இங்கு உன்னாலும் எங்களாலும் ஒழிக்க ஒழியமாட்டாது;* **அறியாத பிள்ளைகளோம்**—*(உலகவழக் கொன்றும்) அறியாத சிறுபெண்களானநாங்கள்,* **உன்தன்னை**—*உன்னை,* **அன்பினுல்**—*பிரீதியினுலே,* **சிறு பேர் அழைத்தனவும்**—*சிறிய பேராலே அழைத்ததைக் குறித்தும்,* **நீ**—*(ஆச்ரித வத்ஸலனை) நீ,* **சீறி அருளாதே**—*கோபித்தருளாமல்,* **பறை தாராய்**—*(நாங்கள் விரும்பும்) ப்ரயோஜனத்தைத் தரவேணும்.*

அவதாரிகை:-நோன்புக்கு உபகரணங்களான சங்கங்கள் முத லானவற்றையும், மற்றும் சில ஸம்மானங்களையும் பெற விரும்பி யதைச் சொன்னார்கள் கீழிரண்டு பாட்டாலே. "இவர்களும் ஊராருக் காக ஒரு பறையையும், தங்களுக்காக ஒரு பறையையும் விரும்புவ தாகச் சொல்லியிருக்கிறார்கள்; ஊராருக்கு வேண்டிய பறையை நம்மிடமிருந்து பெற்றும்விட்டார்கள். இனி தங்களுக்கான பறையைக் கேட்கப்போகிறார்கள்" என்பதை அறிந்த அவன், "நீங் கள் விரும்பும் பறையைப்பெற நீங்கள் ஏதாவது ஸாதநாநுஷ்டானம் செய்ததுண்டோ? ஸாதநத்தை அநுஷ்டிக்காமல் ஸாத்யத்தைப் பெற முடியாது என்னும் அர்த்தம் உங்களுக்குத் தெரிந்திருக்குமே" என்று இவர்களைக் கேட்க, "ஒரு ஸாதனத்தை அநுஷ்டிக்கக்கூடிய ப்ரக்ருதிகளோ நாங்கள்; எங்களுடைய ஆசாரத்தையும் அறிவை யும் பார்த்தாலே உபாயாநுஷ்டானத்துக்கு அயோக்யர்கள் நாங்கள் என்பதை அறியலாமே. மேலும், எங்களுடைய குறைவுகளையும் நிரப்பவல்ல நிறைவாளனன்றோ நீ; உன்னுடைய பூர்த்தியில் குறை விருந்தாலன்றோ நாங்கள் ஸாதநாநுஷ்டானம் செய்யாமல் இழக்க லாவது. உன்னை ஸஜாதீயனாகப் பெற்றிருக்கும் இதொன்றே எங்கள் பக்கல் உள்ள கைம்முதல். இத்தையே கொண்டு நாங்கள் விரும்பும் பறையை எங்களுக்கு அளித்தருளவேணும்" என்கிறார்கள் இப்பாட்டில்.

"அஹமஸ்ம்யபராத$_4$ாநாமாலயோऽகிஞ்சநோऽக$_3$தி: |
த்வமேவோபாயபூ$_4$தோ மே ப$_4$வேதி ப்ரார்த்த$_2$நாமதி: ||
ஶரணாக$_3$திரித்யுக்தா ஸா தே$_3$வேऽஸ்மிந் ப்ரயுஜ்யதாம் ||"

["நான் அபராதங்களுக்கு ஓர் இருப்பிடம்; கர்மஜ்ஞாநபக்தியோகங் களில் அந்வயமில்லாதவன்; வேறு கதியற்றவன்; (குறையற்றவ னை) நீயே எனக்கு உபாயபூதனாகவேண்டும்" என்று பிரார்த்திக் கும் புத்தியே சரணாகதியென்று சொல்லப்படுகிறது. அது இந்த தேவனிடத்தில் பிரயோகிக்கப்படட்டும்.] என்று பாஞ்சராத்ரத்தில் சொன்ன அர்த்தத்தை அநுஷ்டிக்கிறார்கள் இங்கு.

"குளித்து மூன்றனலை ஓம்பும் குறிகொள் அந்தணமைதன்னை
ஒளித்திட்டேன் என்கணில்லை நின்கணும் பத்தனல்லேன்"
என்று தொண்டரடிப்பொடிகளும்,

"நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்"
என்று நம்மாழ்வாரும்,

"குலங்களாய ஈரிரண்டில் ஒன்றிலும் பிறந்திலேன்
நலங்களாய நற்கலைகள் நாலிலும் நவின்றிலேன்
புலன்களைந்தும் வென்றிலேன் பொறியிலேன் புனிதநின்
இலங்கு பாதமன்றி மற்றோர் பற்றிலேன் எம் ஈசனே"

என்று திருமழிசைப்பிரானும்,

"நலந்தான் ஒன்றுமிலேன் நல்லதோரறம் செய்துமிலேன்"

என்று கலியனும்,

"ந த₄ர்மநிஷ்டோ₂ऽஸ்மி ந சாத்மவேதீ₃
ந ப₄க்திமாம்ஸ்த்வச் சரணாரவிந்தே₃।
அகிஞ்சநோऽநந்யக₃தி: ஶரண்ய
த்வத்பாத₃மூலம் ஶரணம் ப்ரபத்₃யே"

[நான் கர்மயோகத்திலும் நிலைநின்றவனல்லேன்; (ஞானயோகத்தை அனுஷ்டிக்கத்தகுந்த) ஆத்மஜ்ஞானியுமல்லேன். உன் திருவடித் தாமரைகளில் பக்தியுடையேனுமல்லேன். ஒரு கைம்முதலுமற்றவனாய், வேறு கதியற்றவனான நான் சரண்யனான உன் திருவடியடிவாரத்தை உபாயமாகப் பற்றுகிறேன்.] என்று ஆளவந்தாரும் அருளிச்செய்த அர்த்தங்களை, இவர்கள் "கறவைகள் பின்சென்று" என்று தொடங்கும் இப்பாட்டிலே அநுஸந்திக்கிறார்கள். இப்பாட்டில் உபாயம் அவனேயென்னும் அர்த்தம் அறிவிக்கப்படுகிறது. அடுத்த பாட்டில் உபேயம் அவனே என்னுமர்த்தம் உணர்த்தப் படுகிறது. த்வயசரமச்லோகங்களின் முற்பாதிகளை விளக்குவது இப்பாட்டு. பிற்பாதிகளை விளக்குவது அடுத்தபாட்டு.

உபாயாந்தரங்களைக் கைவிட்டு பகவானையே பற்றுவதற்கு மூன்று காரணங்களுண்டு. அவற்றில் காரணங்களுக்குச் சேர, அதிகாரிகளும் மூன்றுவகைப்படுவர். ஆழ்வார்களைப்போன்ற பக்தி பரவசர்கள், அந்த பக்தி பாரவச்யமாகிற காரணத்தாலே உபாயாந்தரங்களை அடைவுபட அனுஷ்டிக்கமாட்டார்கள். ஆசார்யர்களைப் போன்ற ஸர்வஜ்ஞர்கள் உபாயாந்தரங்கள் அத்யந்த பரதந்திரமான நம் ஸ்வரூபத்திற்குத் தகாதவை என்றுஉணர்ந்திருக்கையாலே உபாயாந்தரங்களில் கைவையார்கள். நம்மைப்போன்ற அஜ்ஞர்கள், உபாயாந்தரங்களை அநுஷ்டிக்கத்தக்க ஜ்ஞானசக்திகளே இல்லாமையாலே, அக்காரணத்தாலே உபாயாந்தரங்களின் அருகேயும் செல்லமாட்டார்கள். இம்மூன்று காரணங்களையும், மூன்றுவகை

யான அதிகாரிகளையும் "அவித்₃யாதோ தே₃வே" என்னும் ச்லோகத்திலே பட்டர் விவரித்தருளினர். ஸ்ரீவசநபூஷணாதிகளிலும் இவ்வர்த்தம் அறிவிக்கப்பட்டது. இப்பாட்டில், "அறிவொன்றுமில்லாத ஆய்க்குலத்து" என்கையால் தாங்கள் அஜ்ஞகோடியிலே சேர்ந்தவர்கள் என்பதை இவர்கள் அறிவிக்கிறார்கள். காரணம் எதுவாயினும், அவனையே உபாயமாகப் பற்றுவோர், மற்ற உபாயங்களை ஸவாஸனமாக விடவேண்டும் என்னும் அர்த்தம் ஸர்வசாஸ்திரங்களிலும் பிரஸித்தமானது. "ஸர்வத₄ர்மாந் பரித்யஜ்ய" என்று கீதாசார்யனும் அருளினன். மிகவும் உயர்ந்ததான இவ்வர்த்தத்தை விளக்குகையாலே, ஸ்ரீராமாயண மஹாபாரத வராஹ புராணங்களிலுள்ள சரமச்லோகங்கள்போலே, திருப்பாவையிலேயுள்ள இப்பாட்டு விளங்குகிறது. சரணாகதியானது சணற்கயிறு கண்டப்ரஹ்மாஸ்த்ரம்போலேயுள்ளது என்னும் சாஸ்த்ரார்த்தத்தை,

"சரணாகதி மற்றோர் சாதனத்தைப் பற்றில்
அரணாகா(து) அஞ்சனைதன் சேயை—முரணழியக்
கட்டியது வேறோர் கயிறு கொண்டார்ப்பதன் முன்
விட்ட படை போல விடும்" என்று அருளாளப்பெருமாள்

எம்பெருமானார் ஞானஸாரத்திலே அருளிய பாசுரம் இப்பாட்டுக்குத் தாத்பர்யார்த்தமாக அநுஸந்திக்கவுரியது.

வியாக்கியானம்:— "ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோஜ்ஞாந ஸமாதி₄பி₄: நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே ப₄க்தி: ப்ரஜாயதே" [பல்லாயிரக்கணக்கான ஜந்மாந்தரங்களில் செய்யப்பட்ட கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகாநுஷ்டானமாகிற ஸமாதி ஆகிய இவற்றால் கிருஷ்ணனிடத்தில் பக்தி பிறக்கிறது.] என்று சாஸ்திரங்களில் சொன்னபடியே என் விஷயமான பக்தியைப் பெறுவதற்கும் பல்லாயிரக்கணக்கான ஜந்மங்களில் கர்மஜ்ஞாநபக்தியோகங்களை அநுஷ்டித்திருக்கவேண்டுமே; அவற்றில் ஏதாவது உங்களிடம் உண்டோ என்று கண்ணன் கேட்க, "எங்களுடைய ஆசாரத்தையும், அறிவையும் கண்டால் இவை உண்டென்று ஸந்தேஹிக்கவும் இடமுண்டோ" என்கிறார்கள் முதலிரண்டடிகளாலே. (கறவைகள் பின் சென்று கானம் சேர்ந்துண்போம்) எங்களுடைய கர்மயோகாநுஷ்டானம் இருந்தபடி கண்டாயே என்கிறார்கள். (கறவைகள் பின் சென்று) கர்மயோகத்தை அநுஷ்டிக்க விரும்புவார் முதன்முதலாக அங்கங்களுடன் கூடிய வேதத்தை அத்யயனம் செய்வதற்காக வேதங்களைக் கரைகண்ட வித்வானாய் ஸதாசாரநிஷ்டனான ஆசாரியனை

அடைந்து அநுவர்த்திப்பார்கள். இவர்களோவெனில் அறிவு கேட்டுக்கு எல்லை நிலமாய், துராசாரத்திற்கு எடுத்துக்காட்டாயிருக்கும் பசுக்களுக்குப் பின் செல்லுகையையே குருகுலவாஸமாகக் கொண்டார்கள். "ஜ்ஞாநேந ஹீந: பசுபி₄ஸ் ஸமாந:' [ஞானமற்றவன் பசுக்களுக்கு ஸமானமானவன்] என்றும், "ந்ருபசு:" [நரபசு] என்றும், ஜ்ஞாநவ்ருத்தமில்லாதார்க்கு உபமானப்பொருளாயிருப்பதொன்றன்றோ பசு. (கறவைகள் பின்சென்று) எங்களுக்கு ஒப்பிட்டால் பசுக்களையும் வஸிஷ்டபராசராதிகளின் வரிசையிலே எண்ணலாம்படியன்றோ எங்களுடைய அறிவுகேடும், ஆசாரசூந்யதையும் இருப்பது. பசுக்களும் பரிஹஸிக்கும்படியானதன்றோ எங்களுடைய ஜ்ஞாநவ்ருத்தங்கள்.

"க₃தாந் பஸூநாம் ஸஹஜந்மப₃ந்து₄தாம்
க்₃ருஹாச்ரயம் ப்ரேம வநேஷு பி₃ப்₄ரத:।
த₃த₃ர்ஸ கோ₃பாநுபதே₄நு பாண்ட₃வ:
க்ருதாநுகாராநிவ் கோ₃பி₄ரார்ஜவே ||"

[பசுக்களுக்குப் பிறந்தநாள் தொடங்கி பந்துவாயிருக்கும் தன்மையை அடைந்தவர்களாய், வீட்டிலிருக்கவேண்டிய அன்பைக் காட்டிலே உடையவர்களாய், தங்களுடைய செயல்களைக்கண்டு பசுக்களும் பரிஹாஸம் பண்ணுவதுபோலிருப்பவர்களான இடையர்களை, அர்ஜுனன் பசுக்கூட்டங்களின் பின்னே பார்த்தான்.]என்னும் கிராதார்ஜுநீய ச்லோகம் இவ்விடத்திலே அநுஸந்திக்கத்தக்கது. (கறவைகள் பின் சென்று) "காலிகள் பின்சென்று" என்னுமல், "கறவைகள் பின் சென்று" என்கைக்குக் கருத்து என்? என்னில்: கறவைப் பசுக்கள், கறவாத பசுக்கள், எருதுகள் முதலிய எல்லாக் காலிகளையும் இவர்கள் மேய்த்தார்களாகில், அது வைச்யர்களான இவர்களுடைய ஸ்வதர்மாநுஷ்டானமாகப் பர்யவஸித்து, கர்மயோக கோடியிலே புகும். அப்படியல்லாமல், தாங்கள் கறந்து பாலுண்கைக்காகவே மாடு மேய்த்தது என்பதைக் காட்டுவதற்காகக் "கறவகைள் பின் சென்று" என்கிறார்கள். (கறவைகள் பின் சென்று) "யதா₂ தருணவத்ஸா வத்ஸம் வத்ஸோ வா மாதரம்... அநுக₃ச்சே₂த் தத₂ா ப்ரகாரம் யேந யேந தா₄தா க₃ச்ச₂தி தேநதேந ஸஹ க₃ச்ச₂தி" [எப்படி இளங்கன்றையுடைய பசு தன் கன்றையும், கன்று பசுவையும் பின் தொடர்கிறதோ, அப்படியே எப்படியெப்படியெல்லாம் பரமபுருஷன் செல்கின்றானோ, அப்படியப்படியெல்லாம் இந்த முக்தாத்மாவும் பின் செல்கிறான்] என்றும், "ப்ருஷ்ட₂தஸ்து த₄நுஷ்பாணி:" [லக்ஷ்மணன்

வில்லேந்திப் பின்சென்றான்.] என்றும், ''வாளும் வில்லுங்கொண்டு பின் செல்வார்'' என்றும் சொல்லுகிறபடியே உன்னிடத்திலே அன்புடையார் உன்னைப் பின்தொடர்ந்து செல்லுமாப்போலே, நாங்கள் கறவைகள் பின்னே சென்று காலத்தை வீணாக்கிறோம் என்கிறார்கள்.

''கறவைகள் பின்சென்றாகிலும், ஏதாவது புண்யக்ஷேத்ராதிகளை அடைந்து வஸித்ததுண்டாகில், அத்தைக்கொண்டு உங்கள் காரியம் செய்கிறேன்'' என்று கண்ணன் திருவுள்ளமாகச் சொல்லுகிறார்கள்; (கானம் சேர்ந்து) பசுக்களுக்குப் புல்மேய ஸௌகர்யமுள்ள காட்டில் வசித்துவந்ததே எங்களுடைய புண்யக்ஷேத்ரவாஸம் என்கிறார்கள். (கானம் சேர்ந்து) நாட்டிலிருந்தாலாவது, கர்மயோகாதிகளை அநுஷ்டிப்பதற்குத் தகுந்த ஸௌகர்யங்களிருக்கும். நாங்கள் பொருந்தியிருந்த இடம் காடாகையாலே கர்மயோகத்திற்கு ப்ரஸக்தியேயில்லை என்கிறார்கள். (கானம் சேர்ந்து) வீட்டைவிடக் காட்டிலேயே பொருந்தியிருக்கிறார்கள். ''க்₃ருஹாச்ரயம் ப்ரேம வநேஷு பி₃ப்₄ரத:'' [வீட்டிலே இருக்கவேண்டிய அன்பைக் காட்டிலே கொண்டிருந்த இடையர்களை.] என்று சொல்லப்பட்டதன்றோ.

''காட்டிலே சேர்ந்து வசித்தீர்களாகில், வாநப்ரஸ்தாச்ரமதர்மத்தை அநுஷ்டிப்பதற்காக இருக்கக்கூடுமே; ஆகவே, ஆச்ரமதர்மத்தை அநுஷ்டிப்பதாகிற கர்மயோகம் உங்களிடம் காணப்படுவதாகத் தோன்றுகிறது'' என்று கண்ணன் உரைக்கச் சொல்லுகிறார்கள்: (உண்போம்) காயிலை தின்று காயக்லேசம் செய்வதற்காக நாங்கள்காட்டை அடையவில்லை; அங்கேயும் தேஹபோஷணபரராய் உண்டு களித்து உழல்வதற்கே சென்றோம்; ஆகையால் வானப்ரஸ்த தர்மத்தின் வாஸனையும் எங்களிடமில்லை என்கிறார்கள். (கானம் சேர்ந்து உண்போம்) காட்டையடைந்து குளிககாமலும் உண்போம். ''ஸ்நாத்வா பு₄ஞ்ஜீத'' என்னும் விதியையும் அநுஷ்டியோம். (உண்போம்) அதிதிகளுக்குக் கொடுத்து உண்பது என்னும் நியமமும் இல்லை என்று உணர்த்துகிறார்கள். (பின் சென்று உண்போம்) கிழக்கே பார்த்திருந்து உண்பது முதலான நியமமில்லை; பசுக்கள் நிற்கும் திசையே நாங்கள் உண்ணும் திசை. (சென்று உண்போம்) இருந்து உண்பது என்னும் நியமமுமில்லை. பசுக்கள் நின்றால் நின்றுண்போம்; சென்றால் சென்றுண்போம். (உண்போம்) பசுக்கள் அசையிடாதிருக்கும் நேரத்திலும் எங்கள் வாய் ஆடாமலிராது. (உண்போம்) உச்சிஷ்டம், அபோஜ்யம், பர்யுஷிதம், மயிர்ச்சோறு, புழுச்சோறு முதலானவற்றை உண்ணலாகாது என்னும் வரம்பே

யில்லை. இது நாங்கள் கர்மயோகத்திலே நின்ற நிலை; இவற்றைக் கர்மயோகமாகக் கொள்வதாயிருந்தால் நீ தாராளமாகக் கொள்ளலாம் என்கிறார்கள்.

இப்போது கர்மயோகம் இல்லையாகிலும், ஜந்மாந்தரங்களிலே கர்மயோகம் பக்வமாகி, இப்போது ஜ்ஞானயோகத்தை அநுஷ்டிக்கும் தசையாயிருக்கலாமே; மாம்ஸவிக்ரயம் செய்த தர்மவ்யாதன் ஞானிகளில் சிறந்தவனாயிருந்தான்; கோரக்ஷணம் செய்யும் நீங்கள் அவனிலும் உயர்ந்தவர்களன்றோ; நகரத்திலே வசித்துவந்த விதுரன் ஜ்ஞானாதிகனாயிருந்திருக்க வநவாஸிகளான நீங்கள் ஞானாதிகராயிருக்கக் குறையென்? இஷ்டப்படி திரிந்தபோதிலும், பரதன் ஞானோபதேசம் செய்யத்தகுந்தவனாயில்லையா? உங்களைப்போன்ற பெண்பிள்ளைகளான மைத்ரேயி, ச்ரமணி முதலானாரும் ஞானிகளாயிருந்திருக்கிறார்களே; ஆகையால் நீங்கள் ஜ்ஞானயோகநிஷ்டர்களாயிருந்துகொண்டு உங்கள் பலனைப் பேற விரும்புகிறீர்களோ?'' என்று கண்ணன் கேட்கச் சொல்லுகிறார்கள்:-(அறிவில்லாத) முதன் முதலில் அறிவிருந்தாலன்றோ ஞானயோகமிருக்க ப்ரஸக்தியுள்ளது; இடக்கை வலக்கையறியாத எங்களுக்கும் ஜ்ஞானயோகத்திற்கும் மடுவுக்கும் மலைக்குமுள்ள தூரமுண்டு என்கிறார்கள். ''அறிவில்லாதார்க்கும் அன்பிருப்பதுண்டே; ஜந்மாந்தரங்களிலே ஞானம் கனிந்து பக்தியோகதசையிலிருக்கிறதோ?'' என்று கேட்க, (அறிவு ஒன்றும் இல்லாத) அறிவில்லையென்றபோதே அறிவிலே ஒருவகையான பக்தியும் இல்லை என்பதை அறியலாமே; பக்தியோகமும் இல்லை என்கிறார்கள். ''ப$_4$க்திச்ச ஜ்ஞாநவிசேஷ:'' ''சேமுஷீ ப$_4$க்திரூபா'' [பக்திரூபமான அறிவு] என்று பாஷ்யத்தில் சொல்லப்பட்டதன்றோ. (அறிவில்லை) (அறிவொன்றில்லை) (அறிவொன்றுமில்லை) ஞானயோகமுமில்லை; பக்தியோகமுமில்லை; இவையெல்லாவற்றுக்கும் காரணமான ப்ரக்ருத்யாத்மவிவேகம் முதலான அறிவுகள் ஒன்றுமே இல்லை என்கிறார்கள்.

''அறிவுடையாரும் உங்களைப்போலவே சொல்லுகிறார்கள்; மேலும், ஜ்ஞானபக்திகள் இப்போது இல்லாவிட்டால் போகிறது; இனியாவது ஏற்படட்டும்; பிறகு பார்த்துக்கொள்ளலாம்'' என்று அவன் திருவுள்ளமாகச் சொல்லுகிறார்கள். (ஆய்க்குலத்து) எங்கள் குலத்தைப் பார்த்தால் அறிவு எப்போதாவது உண்டாகுமென்று தோற்றுகிறதோ உனக்கு? எங்களிடம் அறிவை எதிர்பார்க்கும் நீ அறிவுகேடனாவாய். பக்திபரவசராயும், ஸர்வஜ்ஞராயுமிருந்து

உன்னைப் பற்றுமவர்களன்று நாங்கள்; அஜ்ஞராகையாலே உன்னைத் தவிர வேறொரு உபாயத்தைக் கனவிலும் கருத யோக்யதையும் அற்றவர்கள் என்று அறிவிக்கிறார்கள். (அறிவொன்றுமில்லாத ஆய்க்குலத்து) "ஒன்றுமறிவொன்றில்லாத உருவரைக் கோபாலர்" என்றாரன்றோ பெரியாழ்வாரும்.

"உங்கள் பலனைப்பெறுவதற்கு, கர்மஜ்ஞான பக்திகளாகிற புண்யங்கள் ஒன்றுமில்லையாகில், உங்களைக் கைவிடவேண்டியது தானே" என்று அவன் கேட்க உரைக்கிறார்கள்: (உன்தன்னைப் பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாமுடையோம்) என் சொன்னாய்! "ராமோ விக்₃ரஹவாந்த₄ர்ம:" "க்ருஷ்ணம் த₄ர்மம் ஸநாதநம்" "புண்யா நாமபி புண்யோஸௌ" என்று போற்றப்படும் புண்ணியத்திற்குப் பாலும் சோறுமிட்டு வளர்க்கிற எங்களுக்கோ புண்ணியமில்லை யென்பது என்கிறார்கள். (உன் தன்னை...) ஸ்வார்ஜித தனம் இல்லை யென்றால் பித்ரார்ஜிததனம் இல்லையென்றதாகிவிடுமோ? ஸாத்ய மான புண்யமில்லையெனில் ஸித்தமான புண்யமும் இல்லையாகி விடுமோ? அந்த தர்மங்களையும் ஸ்தாபித்தவனாய், அவற்றுக்கும் பலப்ரதனாய் நீயே எங்களுக்குக் கையாளாயிருக்கும்போது, எங்களை விடப் புண்யசாலிகள் யார்? என்கிறார்கள். (ஆய்க்குலத்துன்றன்னை) "உய்ய இவ்வாயர்குலத்தினில் தோன்றிய ஒண்சுடர் ஆயர் கொழுந்தே" என்று ஆய்ச்சி அருளியபடியே, ஆயர்குலம் முழுவதும், அவர்களோடு ஸம்பந்தம்பெற்ற சட்டிபானைகளும் உய்வதற்காக வன்றோ நீ அவதரித்தது. (ஆய்க்குலத்துன்றன்னை) "வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றிய" ராமாவதாரமும் பகல் விளக்காகும், "ஆயர்பாடிக்கு அணிவிக்கு" ஆகிய உனக்கு ஒப் பிட்டால். (பிறவி பெறுந்தனைப் புண்ணியம்) உன்னைப் பெற்றிருக் கும்படியான பாக்யம். அதாவது:-உன்னுடைய நிர்ஹேதுககடாக்ஷம். அவனைத் தரவல்லது அவனுடைய அருளைத்தவிர வேறு எது உள் ளது? போற்றப் பறைதரும் புண்ணியனே பிறவிபெறுந்தனைப் புண்ணியமாகவும் ஆகிறான். (யாம் உடையோம்) நாங்கள் பிறந்து படைத்த செல்வமிது. (புண்ணியம் யாமுடையோம்) "யாவர்க்கும் புண்ணியமே" [திருவாய் 6-3-3] என்கிறபடியே எல்லாருக்கும் புண்ணியமாயிருப்பதொன்றையன்றோ நாங்கள் பற்றியிருக்கிறோம். "புமாம்ஸம் நயதிதி புண்ய:" என்கிறபடியே மனிதர்களை உயர் கதிக்கு அழைத்துச் செல்வது புண்ணியமாகிறது.

"அறிவொன்றுமில்லாத என்றும், புண்ணியம் யாமுடையோம் என்றும் ஒன்றுக்கொன்று சேராதபடியன்றோ சொல்லுகிறீர்கள்"

என்ன, ''இதுவன்றோ எங்கள் அறியாமை இருந்தபடி'' என்று இவர்களுரைக்க, ''அப்படியாகில் உங்களை விடவேண்டியதுதானே'' என்று அவன் கேட்கச் சொல்லுகிறார்கள்: (குறைவொன்றுமில்லாத கோவிந்தா) நீ குறைவொன்றுமில்லாதிருக்க நாங்கள் இழக்கலாமோ? எங்களுக்குக் குற்றம் சொன்னோமேயொழிய உன் பூர்த்திக்குக் குறை சொன்னதுண்டோ? எங்களுடைய அறிவொன்றுமில்லாமைக்குப் போராதோ உன்னுடைய குறைவொன்றுமில்லாமை? இப்பள்ளத்தையும் மேடாக்கவல்லதன்றோ அம்மேடு. இப்பாதாளத்துக்கு அப்பர்வதம் நேர் என்கை. (குறைவு இல்லை) (குறைவு ஒன்று இல்லை) (குறைவு ஒன்றும் இல்லை) எங்களுடைய புண்யத்தினிடத்திலே, எங்கள் பக்கல் ஒன்றை எதிர்பார்த்திருக்கையாகிற குறைவும் இல்லை; அளவுடைத்தாயிருக்கையாகிற குறையும் இல்லை; மற்றும் சில பாபங்களாலே தடைபடும் குறையும் இல்லை. சேதனனாலே சிரமப்பட்டு ஸாதிக்கப்படவேண்டியிருக்கையாகிற குறைவும் இல்லை; பலங்கொடுத்தால் குறைவதாகிற குறையுமில்லை; ஸஹாயாந்தரங்களை அபேக்ஷிக்கும் குறையுமில்லை. (குறைவொன்றுமில்லாத) உன் குறைவில்லாமை எங்கள் அறிவில்லாமையை அபேக்ஷித்தன்றோ கிடக்கிறது. எங்களைப்போனற குறைவாளரைப் பெறுவிடில் உன் பூர்த்திக்கு விஷயமேது? பெருமைதான் ஏது? உண்மையில் கர்ம ஜ்ஞானபக்தியோகங்கள் எங்களிடமிருந்தால் உன்னை விட்டு விலகுகைக்கேயன்றோ அவை ஹேதுவாய் முடியும். தன் முயற்சியாலே உன்னைப் பெற இருப்பவர்களை **''ஏஷ பந்த₂ா வித₃ர்ப்ப₄ாணும் ஏஷ யாதி ஹி கோஸலாந்''** [இது விதர்ப்பதேசம் போகும் வழி; இப்பாதை கோஸலதேசத்தை அடைகிறது] என்று தமயந்திக்கு வழி காட்டி விட்டுச்சென்ற நளனைப்போலே, நெறிகாட்டி நீக்குவதற்காக ஏற்பட்ட உபாயங்களன்றோ அவை. உன்னுடைய பூர்த்தியானது வெள்ளமிட்டுப் பெருகுவதற்குத் தடையாயிருக்கும் அவை எங்களிடமில்லாமையாலே, உன் பூர்த்தியாகிற பெருக்காற்றை அணை வெட்டிவிடுவாயாக என்கிறார்கள்.

''இப்படி நான் குறைவாளர்க்கே உதவுவதை எங்காவது கண்டதுண்டோ?'' என்று கண்ணன் கேட்கச் சொல்லுகிறார்கள்: (கோவிந்தா) தங்கள் காரியத்தைத் தாங்கள் ஸாதித்துக்கொள்ள மாட்டாத பசுக்களை நீயாகத் தேடியடைந்து ரக்ஷிக்கும் இவ்விருப்பிலேயே காணலாம்படியிருப்பதொன்றன்றோ இப்பெருங்குணம்.

(குறைவொன்றுமில்லாத கோவிந்தா) பரமபதத்தில் இருப்பையும் குறைவாக நினைத்து, அக்குறையைப் போக்கிக்கொள்ளப் பசுக்களை அடைந்தவிடத்திலே பசுப்ராயர்களான எங்களையும் நோக்கினாலன்றோ நீ குறைவொன்றுமில்லாதவனாவது. (கோவிந்தா) "ஸர்வ த₄ர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ" [எல்லா ஸாதனங்களையும் அடியோடு விட்டு, என்னையொருவனையே உபாயமாக அடை.] என்றவனன்றோ நீ என்கிறார்கள்.

"நான் குறைவொன்றுமில்லாதவனாகவும், நீங்கள் அறிவொன்றுமில்லாதவராகவும் இருப்பதுகொண்டு உங்கள் காரியத்தை நான் செய்யவேண்டுமென்று ஏதாவதொரு நிர்ப்பந்தமுண்டோ? என்னுடைய குறைவொன்றுமில்லாமை உங்களைக் கைவிடுகைக்கும் ஹேதுவாகக்கூடுமே" என்று கண்ணன் திருவுள்ளமாகச் சொல்லுகிறார்கள். (உன்தன்னோடு உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது) உனக்கும் எங்களுக்கும் உண்டான ஸம்பந்தத்தைப் பார்த்தால், எங்கள் காரியத்தை நீயே செய்யவேண்டும் என்னுமிடம் தோன்றியிருக்கிறதன்றோ என்கிறார்கள். உடைமை தன்னைத் தானே நோக்கிக் கொள்ளுமோ? அதை ரக்ஷிப்பது உடையவனின் பொறுப்பன்றோ? பூர்த்தியைக் குலைத்துக்கொண்டாலும் பந்தத்தைக் குலைத்துக் கொள்ளமுடியுமோ? ஸம்பந்தமுள்ளவிடத்திலே ஸ்வாதந்த்ரியம் ஜீவிக்குமோ? என்கிறார்கள்.

"ஒரு குடநீரோடே போமதான உறவைக் கொண்டோ காரியம் கொள்ள நினைக்கிறீர்கள்" என்று கேட்க, (நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது) உனக்கும் எங்களுமுள்ள உறவு எங்களாலும் ஒழிக்க முடியாது; உன்னாலும் ஒழிக்கமுடியாது; நீயும் நாங்களும் சேர்ந்தும் ஒழிக்கமுடியாது என்கிறார்கள். உன்னைவிட்டு ப்ருதக்ஸ்திதி (தனியிருப்பு) இல்லாத வஸ்துவை ஸர்வசக்தியான உன்னாலும் அழிக்க முடியுமோ? என்கிறார்கள். "இது எந்த ப்ரமாணத்தைக்கொண்டு சொல்லுகிறீர்கள்" என்ன, "நானுன்னையன்றி இலேன் கண்டாய் நாரணனே! நீ என்னையன்றியிலை" என்னும் ப்ரமாணத்தைக் கேட்டறியாயோ? என்ன, "அது உங்களுடைய தமப்பனார் வார்த்தையன்றோ" என்ன, "ஆனால், நீ எங்களுக்குத் தந்த மூலப்ரமாணத்தில் முதலெழுத்தாகிற ஓங்காரத்தைப் பார்த்துக்கொள்" என்கிறார்கள். (இங்கு ஒழிக்க ஒழியாது) பரமபதத்திலே ஸ்வதந்த்ரனாய் எழுந்தருளியிருக்கும் அவ்விருப்பிலே இதை ஒழித்தாலும் ஒழிக்கலாம். இங்கு வந்து எங்களுக்குப் பரதந்திரனாயிருந்து, எங்களுடைய

கையைக் காலேப்பிடித்து ஏற்படுத்திக்கொண்ட உறவை உன்னால் ஒழிக்கவேமுடியாது. (கோவிந்தா உன்றன்னோடு உறவு...) நாராயணத்வமாகிற பழைய உறவு கிடக்கட்டும்: இங்கு வந்து நீ ஏற்படுத்திக்கொண்ட ப்ரணியித்வமாகிற உறவை உன்னால் உதறப்போமோ? (உறவு) "மாதா பிதா ப்$_4$ராதா...ஸுஹ்ருத்" என்று வேதத்திலும், "ப்$_4$ராதா ப$_4$ர்த்தா ச ப$_3$ந்து$_4$ச்ச பிதா ச மம ராக$_4$வ:" "பிதாஹமஸ்ய ஜக$_3$த: மாதா த$_4$ாதா பிதாமஹ:" "பூ$_4$தாநாம் யோவ்யய: பிதா" "யஸ்ய மந்த்ரீ ச கோ$_3$ப்தா ச ஸுஹ்ருச்சைவ ஜநார்த்த$_3$ந:" என்று இதிஹாஸங்களிலும், "சேலேய் கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும் மேலாத் தாய்தந்தையும் அவரேயினி ஆவாரே" என்று ஆழ்வாராலும் அறிவிக்கப்பட்டதன்றோ சேதனனுக்கும் பரமசேதனனுக்கும் உள்ள உறவுகள். நவவிதஸம்பந்தங்களையும் இங்கு அநுஸந்திப்பது. (அறிவொன்றுமில்லாத...உறவு) நீ தயையினாலே பூர்ணனாயிருக்கையும், நாங்கள் தயநீயதயா பூர்ணராயிருக்கையுமாகிற இந்த உறவை ஒழிக்கமுடியாது என்பதாகவும் கொள்ளலாம்.

"தத$_3$ஹம் த்வத்$_3$ருதே ந நாத$_2$வாந் மத்$_3$ருதே த்வம் த$_3$யநீயவாந்ந ச|
விதி$_4$நிர்மிதமேதத$_3$ந்வயம் ப$_4$க$_3$வந் பாலய மா ஸ்ம ஜீஹப:||"

[பகவானே! ஆகையாலே அடியேன் உன்னைத்தவிர வேறு நாதனற்றவன்; (ஆள்பார்த்துத் திரியும்) நீயும் என்னைத்தவிர வேறொருவனை அருளுக்கு விஷயமானவனாக உடையையல்லை. (உன் அருளாகிற) விதியாலே ஏற்பட்ட இந்த உறவை ரக்ஷித்துக்கொள்; கைவிட்டுவிடவேண்டாம்.] என்று ஆளவந்தார் இவ்வர்த்தத்தை அநுஸந்தித்தருளினார். (கோவிந்தா ஒழிக்க ஒழியாது) கோவர்த்தனத்தை எடுத்து எங்களை ரக்ஷித்தவனாய், கோவிந்த பட்டாபிஷேகம் செய்யப்பெற்றவனாய், கோவிந்த நாமத்தையே உகந்திருக்குமவனான நீ இவ்வுறவை ஒழிக்கமுடியுமோ? (கோவிந்தா...உறவு ஒழிக்க ஒழியாது) "அஹம் வோ பா$_3$ந்த$_4$வோ ஜாத: நைதச்சிந்த்யமிதோந்யதா$_2$" [நான் உங்களுக்கு பந்துவாகப் பிறந்திருக்கிறேன். இது உங்களால் வேறுவிதமாக எண்ணத்தக்கதல்ல.] என்று எங்களை சிக்ஷித்த நீயே இப்போது வேறுபடியாக எண்ணத் தொடங்கிவிட்டாயோ என்கிறார்கள்.

"இப்போது 'குறைவொன்றுமில்லாத கோவிந்தா' என்றும், 'கூடாரைவெல்லுஞ்சீர்க்கோவிந்தா' என்றும் எனக்குப் பெருமையைத் தரும் பேரைச் சொல்லும் நீங்கள் ஆரம்பத்திலே எனக்குத்

தகாத பேரையிட்டு அழைத்தீர்களன்றோ" என்று அவன் கோபிக்கச் சொல்லுகிறார்கள்: (அறியாத பிள்ளைகளோம்) நாங்கள் அறியாத்தனத்தாலே செய்த பிழையைப் பொறுக்கவேண்டியது உன் கடனன்றோ; "பிழைப்பாராகிலும் தம்மடியார்சொல் பொறுப்பது பெரியோர் கடனன்றே" என்று எம் தமப்பனார் சொல்லுவதைக் கேட்டிருப்பாயே! பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும் பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ? என்கிறார்கள். (அன்பினால்) "காதல் கடலின் மிகப்பெரிதால்" "என்றன் அளவன்றால் யானுடைய அன்பு" என்று சொல்லத்தக்க எங்கள் அன்பு படுத்தும் பாடன்றோ இது. (உன்றன்னை) கோவிந்தாபிஷேகம் பண்ணப்பெற்று, அத்தாலே பெருமைபெற்றிருப்பதை அறியாத பிள்ளைகளன்றோ நாங்கள். (அன்பினால் உன்றன்னை) "பேரமர் காதல் கடல் புரைய விளைவித்த காரமர் மேனி நம் கண்ணன்" [திருவாய் 5-3-4] "துளையார் கருமென் குழல் ஆய்ச்சியர்தம், துகில் வாரியும் சிற்றில் சிதைத்தும் முற்றா, இளையார் விளையாட்டொடு காதல் வெள்ளம் விளைவித்த அம்மான்" [பெரிய-திருமொ 3-8-8] என்கிறபடியே நீ விளைவித்த அன்பு எங்களை இப்பாடு படுத்த, அதற்கு நீ கோபிக்கலாமோ? "அறிவொன்றுமில்லாத" என்றவிடத்திலே ஸாதனபக்தியில்லை என்கிறார்கள். இங்கு ஸ்வரூபப்ராப்தமான அன்புள்ளதென்கிறார்கள்.

(உன்றன்னைச் சிறுபேர் அழைத்தனவும்) எங்களுடைய அறியாமையாலே உன்னுடைய சிறுபேரான நாராயண நாமத்தை "நாராயணனே நமக்கே பறைதருவான்" என்று ஆரம்பத்திலே சொன்னதைப் பொறுத்தருளவேணும் என்கிறார்கள். (சிறுபேர்) கோவிந்த பட்டாபிஷேகம் பண்ணினபின்பு நாராயணநாமத்தைச் சொல்லுவதும் குற்றமாகிறது. பரமபதத்திலேயிருக்கும்போது நாராயண நாமம் பெரும்பேராயிருக்கலாம்; அவ்விருப்பில் பொருந்தாமல், கோவிந்தநாமத்தை ஸம்பாதிக்கவேண்டி இங்குவந்து மிகவும் சிரமப்பட்டு அதை ஸம்பாதித்தபிறகு, பழம்பெயரான அதைச் சொன்னால் அவன் திருவுள்ளம் சீறுவது ஸஹஜம்தானே; ஆகையால் அதைச் 'சிறுபேர்' என்கிறார்கள்; அதைச் சொன்னதற்கு க்ஷாமணமும் கொள்கிறார்கள்.

"ஸகே₂தி மத்வா ப்ரஸப₄ம் யது₃க்தம்
ஹே க்ருஷ்ண ஹே யாத₃வ ஹே ஸகே₂தி!

அஜாநதா மஹிமாநம் தவேமம்
மயா ப்ரமாத₃ாத் ப்ரணயேந வாऽபி||"

[தேவரீருடைய இந்த மஹிமையை அறியாத என்னால் மறதியாலேயும், அன்பினாலேயும், நண்பனென்னும் எண்ணத்தாலேயும் "ஏ கிருஷ்ணா! ஏ யாதவா! ஏ நண்பா" என்று வாய்தவறி யாதொன்று சொல்லப்பட்டதோ அதை க்ஷமித்தருளவேணும்.] என்ற அர்ஜுனனைப்போலே மன்னிப்புக் கேட்கிறார்கள். அவன் நீர்மையே இவனுக்குப் பெருமைதருவது என்பதை அறியாதவனாகையாலே, பரத்வத்தை மஹிமையாக நினைத்தான். இவர்கள் நீர்மையின் பெருமையை அறிந்தவர்களாகையாலே பரத்வப்ரகாசகமான நாராயண நாமத்தைச் சிறுபேர் என்கிறார்கள். "தங்களுக்கு அஸாதாரணனாயிருக்கிறவனை ஸாதாரணனென்று சொல்லுகை குற்றமிறே. ஊடினால் சொல்லுமத்தைப் படுக்கைத்தலையிலே சொல்லலாமோ? அந்தःபுரவாசலிலே படுகாடு கிடப்பாரை நாட்டுக்குக் கடவன் என்கிறது ப்ரணயியல்லன் என்கையிறே" என்று ஆறுயிரப்படி. (சிறுபேர்) "கற்றினம் மேய்க்கிலும் மேய்க்கப்பெற்றான்...பாவிகாள் உங்களுக் கேச்சுக்கெகாலோ" என்கிறபடியே அஜ்ஞர்களுக்கு கோவிந்த நாமம் சிறுபேராகத் தோற்றும். ஸர்வஜ்ஞர்க்கு நாராயணநாமம் சிறுபேராகத் தோற்றும்.

(அழைத்தனவும்) "நாராயணனே நமக்கே பறைதருவான்" என்றும், "நாற்றத்துழாய்முடி நாராயணன்" என்றும், "நாராயணன் மூர்த்தி" என்றும் பலகால் சொன்னதை நினைக்கிறார்கள். (அழைத்தனவும்) நாராயண நாமத்துடன் நில்லாமல், "பாற்கடலில் பையத்துயின்ற பரமன்" "ஊழிமுதல்வன்" "பாழியந் தோளுடைப் பற்பநாபன்" "தேவாதிதேவனை" என்று பரத்வத்தைச் சொல்லும் சிறுபேர்கள் பலவற்றையும் சொன்னதை நினைக்கிறார்கள்.

(உன்றன்னைச் சிறு பேர் அழைத்தனவும்) 'உம்' என்கையால் தங்களுக்குள் ஒருவரையொருவர்"பேய்ப்பெண்ணே" "ஊமையோ" "செவிடோ" என்று சொல்லிக்கொண்டதுக்கும் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறார்கள். இவை முக்கரணங்களாலும் செய்யப்படும் மூவகையபசாரங்களுக்கும் உபலக்ஷணம். (சீறி அருளாதே) "ஸர்வாந் அசேஷத: க்ஷமஸ்வ" [எல்லா பாபங்களையும் மீதியில்லாமல் க்ஷமித்தருள்வாயாக.] என்ற எம்பெருமானாரைப்போலே சொல்லுகிறார்கள். "என்னாலே உங்கள் பேற்றைப் பெறும்படியான ஸம்பந்தமிருந்தாலும், பலன் உங்களதாகையாலே நீங்களும் சிறிது

முயற்சி செய்யவேண்டாவோ?'' என்று அவன் கேட்க, (இறைவா) உடையவனன்றே நீ; உடைமை உடையவனைப் பெறமுயலுமோ? உடையவனன்றே உடைமையைப் பெற முயல்வதை உலகில் காண்கிறோம் என்கிறார்கள். (இறைவா) ஸர்வசக்தனே! நீ தரமறுத்தால் எங்களுடைய எந்த முயற்சிதான் உன்னை மாற்றமுடியும்? நீ தர இசைந்தால் எவரால் விலக்கமுடியும்? என்கிறார்கள். (சீறியருளாதே இறைவா) தன் கைகால்கள் குற்றம் செய்தனவென்று அவற்றின் மேல் கோபிக்கலாமோ? 'இறைவா' என்று மறுபடியும் சிறுபேரைச் சொல்லலாமோ என்னில்: இங்கு சொல்லுவது வானோரிறையை நினைத்தன்று; ஆய்க்குலமாய் வந்து தோன்றிற்று நம்மிறையை நினைத்தே சொல்லுகிறார்கள். ஆகையால் இது சிறுபேராகாது. (சீறியருளாதே இறைவா) ''செய்தகுற்றம் நற்றமாகவே கொள் ஞாலநாதனே!'' என்றாரன்றே. (இறைவா தாராய்) நீ உன்னுடைய சேஷித்வத்தை நிலைநிறுத்திக் கொள்ளவேணுமாகில் எங்களுக்குப் பறை தருவாயாக. ''இவர்கள் கேட்பவற்றை ஆராய்ந்து கொடு'' என்று நப்பின்னைப்பிராட்டியைக் காட்டினான். (நீ தாராய்) அவள் செய்யும் புருஷகாரக்ருத்யத்தை அவள் செய்துவிட்டாள்; நீ செய்ய வேண்டிய பலப்ரதத்வமாகிற காரியமே செய்யப்படாமலுள்ளது என்கிறார்கள். (நீ தாராய்) நீ தந்தாலொழிய வேறு கதியில்லை. சைதந்யகார்யமானருசியும், ஸ்வீகாரமும் எங்களுக்கு ஸ்வரூபத்திலே புகும்; ஆகையாலே உபாயமென்று பேரிடலாவது எங்களிடத்தில் ஒன்றுமில்லை. (பறை) பறை யாதென்பதை அடுத்த பாட்டிலே சொல்லுகிறார்கள்.

(கறவைகள்...) எங்களைப் பார்த்தாலும் நீயே கார்யம் செய்ய வேணும்; உன்னைப்பார்த்தாலும் நீயே கார்யம் செய்யவேணும்; நமக்கு உள்ள ஸம்பந்தத்தைப் பார்த்தாலும் நீயே செய்யவேணும். ''நாராயணனே நமக்கே பறை தருவான்'' என்றவிடத்திலே ஸங்க்ரஹமாகச் சொன்ன ப்ராப்ய ப்ராபகங்களில் ப்ராபகவிவரணமாயிருப்பது இப்பாட்டு. ப்ராப்ய விவரணமாயிருப்பது அடுத்த பாட்டு. ப்ராபகவிவரணமான இப்பாட்டில் பகவானை ஆச்ரயிப்பதற்கு ஸௌகர்யத்தைச் செய்துதரும் (ஆச்ரயண ஸௌகர்யாபாதகமான) நான்கு குணங்களையும் அனுஸந்திக்கிறார்கள். 'கோவிந்தா' என்கையாலே ஸௌலப்யம், ஸௌசீல்யம், வாத்ஸல்யம் என்னும் குணங்கள் அநுஸந்திக்கப்படுகின்றன. ''இறைவா'' என்கையாலே ஸ்வாமித்வம் அநுஸந்திக்கப்படுகிறது. ''நிகரில் புகழாய், உலகம் மூன்று உடையாய் என்னை ஆள்வானே!-திருவேங்

கடத்தானே'' என்று நம்மாழ்வாரும் ஆச்ரயணஸ்தலத்திலே இந் நான்கையும் அநுஸந்தித்தார். 'நாராயணனே நமக்கே பறை தருவான்' என்றவிடத்தில் சொன்னவற்றை இங்கும் படிப்பது.

''கறைவைகள்......ஆய்க்குலத்து'' என்கையாலே தங்களுடைய ஆகிஞ்சந்யத்தையும், அநந்யகதித்வத்தையும் சொன்னூர்கள். ''உன்றன்னை...கோவிந்தா'' என்று அவனுடைய சரண்யத்வத்தை அநுஸந்தித்தார்கள். ''உன்றன்னோடு...ஒழியாது'' என்று ஸம்பந்தம் சொன்னூர்கள். ''அறியாத......சீறியருளாதே'' என்று அபராத க்ஷாமணம் செய்தார்கள். ''இறைவா நீ தாராய் பறை'' என்று ப்ராப்யப்ரார்த்தனம் செய்கிறூர்கள். சரணுகதர்களுக்கு இருக்க வேண்டிய ஸம்பாவிதஸ்வபாவங்கள் இவை.

## திருப்பாவை—இருபத்தொன்பதாம் பாட்டு.

29. சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்
பொற்ரு மரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம்மேய்த் துண்ணுங் குலத்திற் பிறந்த நீ
குற்றேவ லெங்களைக் கொள்ளாமற் போகாது
இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கு மேழேழ் பிறவிக்கு முன்றன்னே
டுற்ரேமே யாவோ முனக்கேநா மாட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.

பதவுரை:— **கோவிந்தா**—*கண்ணபிரானே!* **சிற்றஞ்சிறு காலே**—*உஷ: காலத்திலே*. **வந்து**—*(இங்கு) வந்து*. **உன்னை சேவித்து**—*உன்னை வணங்கி*, **உன் பொன்தாமரை அடி போற்றும் பொருள்** — *உனது அழகிய திருவடித்தாமரைகளை மங்களாசாஸநம் பண்ணுவதற்குப் பலனை*. **கேளாய்** — *கேட்டருளவேணும்;* **பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்தில் பிறந்த நீ**—*பசுக்களை மேய்த்து உண்ணும் இடைக்குலத்தில் பிறந்த நீ*, **எங்களை**—*எங்களிடத்தில்*, **குற்றேவல்**—*அந்தரங்க கைங்கரியத்தை*. **கொள்ளாமல் போகாது** — *திருவுள்ளம் பற்ருதொழியவொண்ணுது*. **இற்றைப் பறைகொள்வான் அன்று காண்**—*இன்று (கொடுக்கப்படுகிற இப்) பறையைப் பெற்*

றுக்கொள்வதற்காக நாங்கள் வந்தோமல்லோம்; **எற்றைக்கும்**—காலமுள்ளவளவும், **ஏழ் ஏழ் பிறவிக்கும்** — எவ்வளவு பிறவியெடுத்தபோதிலும், **உன் தன்னோடு**—உன்னோடே. **உற்றோமே ஆவோம்** — உறவு உடையவர்களாகக்கடவோம்; **உனக்கே**—உனக்குமாத்திரமே, **நாம்**—நாங்கள், **ஆள் செய்வோம்** — அடிமைசெய்யக்கடவோம்; **நம்** — எங்களுடைய, **மற்றை காமங்கள்**—இதர விஷய விருப்பங்களை, **மாற்று**—தவிர்த்தருளவேணும்.

அவதாரிகை:—கீழே பல பாட்டுக்களில் தங்களுக்கு ஒரு பறையுள்ளதாகச் சொல்லிப்போந்தார்களன்றோ. அதை இப்பாட்டில் விவரிக்கிறார்கள். ப்ராப்யவிவரணமாயிருக்கிறது இப்பாட்டு. தாங்கள் பறையென்று சொல்லுகிறது கண்ணன் திருவடிகளில் செய்யும் கைங்கரியமே என்று நிர்ணயிக்கிறார்கள். அக்கைங்கர்யமும் அவனுகப்புக்காகவே செய்யப்படுகிறதேயொழியத் தங்களுடைய ஆநந்தத்துக்காகவன்று என்னும் அரும்பொருளையும் அறிவிக்கிறார்கள். "ருசம் ப்$_3$ராஹ்மம் ஜநயந்த: தே$_3$வா அக்$_3$ரே தத$_3$ப்$_3$ருவந்" [ப்ரஹ்மத்துக்கு முகமலர்த்தியை உண்டுபண்ணுவதற்காக நித்யஸூரிகள் 'நம:' என்னும் அச்சொல்லைச் சொன்னார்கள்.] என்று வேதத்திலும், "அபி$_4$ஷிச்ய ச லங்காயாம்...விஜ்வர: ப்ரமுமோத$_3$ ஹ" [ராமபிரான் லங்கையில் விபீஷணனை அபிஷேகம் செய்வித்து, துன்பம் நீங்கப் பெற்றவராய் ஆநந்தித்தார்.] என்று ஸ்ரீராமாயணத்திலும், "தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே" என்று நம்மாழ்வாராலும் அறிவிக்கப்பட்ட அர்த்தத்தை, "உனக்கே நாம் ஆட்செய்வோம்" என்னும் அடியிலே அறிவிக்கிறார்கள். நம்மாழ்வார் "எம்மாவீட்டு" என்று தொடங்கும் திருவாய்மொழியிலே "தனக்கேயாக எனைக் கொள்ளும்" என்று பகவத்கைங்கர்யத்தின் நிலையை அறிவித்து விட்டு, அதின் எல்லைநிலமான பாகவத கைங்கரியத்தை "நெடுமாற்கடிமை" என்னும் திருவாய்மொழியிலே அநுஸந்தித்தார். இவர்கள் ஒருவரையொருவர் எழுப்பும் பாட்டுக்களிலே பாகவத கைங்கர்யத்தின் பெருமையை அறிவித்து, அது நிலைநிற்கைக்காக இப்பாட்டிலே அதற்கும் அடியான பகவத்கைங்கரியத்தின் நிலையை நிர்ணயிக்கிறார்கள்.

பகவானையே உபாயமாகப் பற்றினார்க்கு, சவஸ்பர்சம்போலேயும் நீசஸ்பர்சம்போலேயும் விடவேண்டியவை இரண்டு; அவையாவன:

ஸாத்யோபாயங்களான கர்மயோகாதிகளில் அந்வயருசி வாஸனை களும், ஸித்தோபாயமான பகவானைப் பற்றுவதாகிற ஸ்வீகாரத் திலே உபாயத்வபுத்தியும். "தூயோமாய் வந்தோம்" "தூயோமாய் வந்து நாம்" என்று அடியிலேயும் சொல்லப்பட்ட இவ்விரண்டு அசுத்திகளின் அபாவமும் சென்றபாட்டிலே விவரிக்கப்பட்டன. ஸாத்யத்திலும் வந்தால் விஷபோஜனம்போலேயும், எச்சிற் சோறு போலேயும் வெறுக்கத்தக்கவையான இரண்டு அசுத்திகள் உண்டு. அவையாவன: ப்ரயோஜநாந்தரங்களை விரும்புவதும், பகவத்கைங் கர்யம் தமக்கு ஆநந்த ஹேது என்றிருக்கையும். அவ்விரண்டு அசுத்திகளையும் கழித்து போகசுத்தி பண்ணுகிறார்கள் இப்பாட்டில். தொண்டரடிப்பொடிகள் இவ்விரண்டு அசுத்திகளுமற்றவரை "ஆசற்றார்" என்றும், "மாசற்றார்" என்றும் அழைத்தார். "ஸர்வ த₄ர்மாம்ச்ச ஸந்த்யஜ்ய" என்ற அர்த்தம் சென்ற பாட்டில் சொல்லப் பட்டது; "ஸர்வகாமாம்ச்ச ஸந்த்யஜ்ய" என்ற அர்த்தம் இங்கு உரைக்கப்படுகிறது.

வியாக்கியானம்:-(சிற்றஞ்சிறுகாலே வந்து) சிறுபெண்கள் எழுந்திருக்கமாட்டாத விடியற்காலையிலேயே வரும்படியன்றோ எங்க ளுடைய ப்ராப்யத்வரை. (சிற்றஞ்சிறுகாலே)

**"ப்₃ராஹ்மே முஹூர்த்தே சோத்த₂ாய சிந்தயேதா₃த்மனோ ஹிதம்|**
**ஹரிர் ஹரிர் ஹரிரிதி வ்யாஹரேத்₃ வைஷ்ணவ: புமாந் ||"**

[வைஷ்ணவன் ப்ராஹ்ம முஹூர்த்தமாகிற விடியற்காலையில் எழுந்து, தனக்கு நன்மையைச் சிந்திக்கக்கடவன். 'ஹரி:' 'ஹரி:' 'ஹரி:' என்று உச்சரிக்கக்கடவன்.] என்கிறபடியே பகவத்விஷயத் திலே அந்வயிக்கத்தகுந்த ஸத்வப்ரதானமான காலத்திலே என்றும் கொள்ளலாம். "**நாரணனைக் கண்டேன்–பகற்கண்டேன்**" என்று சொல்லப்படுகிறதன்றோ. 'மார்கழித்திங்கள்' என்கிற ஒரு மாதமும் 'மதிநிறைந்த' என்கிற ஒரு பக்ஷமும், 'நன்னாள்' என்கிற ஒரு நாளும் 'சிற்றஞ்சிறுகாலே' என்கிற ஒரு வேளையும், இப்படியெல்லாம் ஸத் வோத்தரமாயிருக்கும்படி யாத்ருச்சிகமாக நேர்பட்டபடியென்! 'வெட்டவெளிச்சம்' என்றாப்போலே, 'சிற்றஞ்சிறுகாலே' என்பது சாதிப்பேச்சு. 'சிறுகாலை' என்றும் பாடமுண்டு. (காலை, சிறுகாலை, சிற்றஞ்சிறுகாலை) "செங்கல்பொடிக்கூறை" என்றவிடத்தில் தாமஸர் களும் உணரும் காலைவேளையைச் சொல்லிற்று; "ஆய்ச்சியர் மத்தி

ஞல் ஓசைப்படுத்த'' என்றவிடத்திலே இடைச்சியர் தம் தொழிலிலே ஈடுபடும் சிறுகாலேயைச் சொல்லிற்று. அதற்கும் முன்னே இவர்கள் எழுந்தார்களாகையால் 'சிற்றஞ்சிறு காலே' என்கிருர்கள். (காலே) ''காலே நன்ஞானத்துறைபடிந்தாடி'' என்று ஞானத்துறையிலே குளிக்கத்தகுந்த சமயம் இதுவேயென்று நம்மாழ்வாரும் நிர்ணயித்தார். (காலே) தங்களுடைய விச்லேஷதுக்கமாகிற இருளேப் போக்கிக்கொண்டு, விரியும் கதிரேபோல்வாஞன அவன் முகங்காட்டியபோதாகையாலே இதுவே காலேயெனத்தகுந்தது. அவனேக் காணும்பொழுதேயன்ருே காலேயாகிறது. '' ஆவிர்ப்பூ$_4$தம் மஹாத்மநா '' என்கிறபடியே அவனுதித்த அர்த்தராத்ரி வேளேயும் விடியற்காலே வேளேயாயிற்று. ''ஸுப்ரப$_4$ாதா ச மே நிசா'' [என் இரவு நன்கு விடிந்தது] என்ருரும் உண்டன்ருே.

(வந்து) நீ எங்களிடம் வரவேண்டியிருக்க, நாங்கள் உன்னிடம் வந்தோம். ''ஹ்ரீரேஷா ஹி மமா துலா—உபஸ்தே$_2$யைருபஸ்தி$_2$த:'' [நான் வந்தடையத்தக்கவர்களாலே, வந்து அடையப்பட்டேன் என்பது எனக்கு மிகவும் லஜ்ஜையாயிராநின்றது.] ''பத்$_3$ப்$_4$யாமபி$_4$க$_3$-மாச்சைவ—அர்ச்சிதா:'' [காலாலே நடந்துவருவதன்மூலம் அர்ச்சிக்கப்பட்டோம்.] என்று தான் நெடுந்தூரம் நடந்துவந்திருக்க, தன்னேக்குறித்து நாலடி நடப்பாரைக்கண்டு நெஞ்சு புண்படுமவனன்ருே இவன். ''எழுதும்'' என்னும் இதுவும் மிகையாகவும், அஞ்ஜலியும் பரமாகவும், ஒரு நம உக்தியும் பூயிஷ்டையாகவுமன்ருே இவனுக்கு இருப்பது. (வந்து) செய்யத்தகாதனவற்றையும் செய்யும்படி தூண்டும் ஆற்ருமையிருக்கும்படி. தாங்கள் விரும்பும் ப்ராப்யத்தின் வைலக்ஷண்யம் வழியல்லா வழியிலும் செல்லத் தூண்டுகிறது இவர்களே. ''தத் தஸ்ய ஸத்$_3$ருசம் ப$_4$வேத்'' [என்னே அழைத்துச்செல்வது அவனுக்கே தகுந்தது.] என்று இருக்க வேண்டியவர்களன்ருே.

(உன்னேச் சேவித்து) அப்படி வருவதுடன் நின்ருேமோ? ஸேவ்யரான நாங்கள் உன்னே ஸேவிப்பதன்மூலமும் புண்படுத்திஞேம்; ''லோகநாத$_2$: புரா பூ$_4$த்வா ஸுக்$_3$ரீவம் நாத$_2$மிச்ச$_2$தி'' [உலகிற்கெல்லாம் முன் நாதஞயிருந்தவன் (இப்போது) சுக்ரீவனே நாதஞக விரும்புகிருன்.] எனருப்போலாயிற்று எங்கள் தசை. (வந்து உன்னேச் சேவித்து) எங்கள் ஸ்வரூபமாகிற அத்யந்த பாரதந்த்ரியத்தைத்தான் மறந்தோமென்ருல் உன் ஸ்வரூபமாகிற ஆச்ரிதபாரதந்த்ரியத்தைத்தான் உணர்ந்தோமோ? (வந்து உன்னேச் சேவித்து)

''ஸோப$_4$ கச$_3$ச்ச$_2$ந்'' [ராமன் சென்றான்.] ''ஸ ஸர்வாநர்த்தி$_2$நோ த்$_3$ருஷ்ட்வா ஸமேத்ய'' [ராமபிரான் யாசகர்கள் அனைவரையும் கண்டு அவர்களிருக்குமிடம் சென்று...] என்றிருக்கும் உன்னை நாங்கள் வந்தடைந்தோம்; ''பதிஸம்மாநிதா ஸீதா'' [பதியினால் (பாதஸ்பர்ச பூர்வகமாக) ஸம்மானம் செய்யப்பட்டாள் ஸீதை] என்று எங்கள் காலிலே விழும் உன்னுடைய காலிலே விழுந்தோம் என்கிறார்கள். (உன்னைச் சேவித்து) ''ஸுஸுக$_2$ம் கர்த்தும்'' [செய்ய இனியதா யிருப்பது] என்றும், ''பலம் முந்து சீர்'' என்றும் சொல்லுகிறபடியே ஸாதனதசையிலேயே ரஸிக்கும் உன்னை ஸ்வயம் ப்ரயோஜனமாக ஸேவித்து என்பதாகவும் கொள்ளலாம்.

(உன் பொற்றாமரையடியே போற்றும்...)பொன்போலே உயர்ந்த தாய், அழகியதாய், தாமரைபோலே மிருதுவானதாய், ஸுகந்த மானதாய், மதுஸ்யந்தியான உன்னுடைய திருவடிகளின் கீழே யிருந்து போற்றும் அர்த்தத்தைக் கேட்பாயாக. (உன் பொற்றா மரை...) வந்து உன்னைச் சேவித்ததுடன் நிற்கக்கூடியதோ எங்கள் ஆற்றாமை. ஸர்வஜ்ஞனை உன்னையும் தட்டியெழுப்பி விண்ணப் பிக்கும்படி செய்ததன்றோ அது. (உன் அடிபோற்றும்) ப்ராப்த சேஷியான உன் அடிகளையன்றோ போற்றுகிறோம். (உன் அடி போற்றும்) உன்னுடைய ஸ்வரூபகுணாதிகளைப் போற்றுகிறோமல் லோம். சுபாச்ரயமான உன் திவ்யமங்களவிக்ரஹத்திலும் மற்ற அவயவங்களைப் போற்றுகிறோமல்லோம். சேஷபூதரான எங்களுக்கு தாரகபோஷக போக்யமான திருவடிகளைப் போற்றுகிறோம். (அடியே போற்றும்) நீ முடியைப் போற்றச்சொன்னாலும் மாட் டோம்; அடியே போற்றுவோம். ''ஸர்வாத்மநா பர்யநுநீயமாந: பத$_2$ா ந ஸௌமித்ரிருபைதி யோக$_3$ம்'' [மிகவும் நிர்ப்பந்தபடுத்தப்பட்ட போதிலும், லக்ஷ்மணன் யௌவராஜ்யாபிஷேகத்துக்கு இசையாத வளவில்...] என்று முடிசூடுமரசை உபேக்ஷித்து, அடிசூடும் அரசையே அபேக்ஷித்த இளையபெருமாளைப்போலே. (அடியே போற்றும்) ''அடியோமோடும் நின்னோடும்'' என்ற பெரியாழ்வாரைப் போலல்லாமல் அடியையே போற்றுகிறபடி. (அடியே போற்றும்) அடியார்க்கு அடியிலிருந்து அடியொழிய வேறுண்டோ? (அடியே) ''ஏறாளும் இறையோனும் திசைமுகனும் கூறாளும் திருவுடம்பன்'' என்கிறபடியே ரஜஸ்தம:ப்ரசுரர்கள் கூறுபோட்டுக்கொண்டுகிடக் கும் பக்கமெல்லாம் பார்க்கவும்மாட்டோம் நாங்கள்.

(உன் பொன் அடி) தேவதானவாதிகளுக்குப் பொதுவாயிருக்கை, ஆசைப்படத்தக்கதாயிருக்கை, கண்டால் விடவொண்ணாதிருக்கை,

விட்டால் பிழைக்கவொண்ணுதிருக்கை முதலான குணங்களாலே பொன்னை ஒத்திருக்கும் அடி. பொன்னடியாகில், கடினமாய், கந்தரஹிதமாய், ரஸவிஹீனமாயிருக்குமோவெனில்; (தாமரை யடி) மார்த்தவத்திலும், மணத்திலும், மதுப்பொழிவதிலும் தாமரையை ஒத்திருப்பது. புஷ்பஹாஸஸுகுமாரமாய், ஸர்வ கந்தமாய், அம்ருதஸ்யந்தியாயிருப்பதன்றே விஷ்ணுவினுடைய பரமமான பதபங்கஜம். (பொன் தாமரை அடி) பொன்போலே பலஸாதனமாகவும், தாமரைபோலே ஸாத்யமாகவும் உள்ள அடி. "த₄நம் மதீ₃யம் தவ பாத₃பங்கஜம்" என்றுரன்றே ஆளவந்தார். 'பொன்' என்று த்வயத்தின் பூர்வக₂ண்டார்த்தத்தையும், 'தாமரை' என்று உத்தரகண்டத்தின் பொருளையும் உணர்த்துகிறுர்கள். (உன் அடிபோற்றும்) "கண்ணன் தாள் வாழ்த்துவதே கண்டாய் வழக்கு" என்னும் உபதேசத்தை அனுஷ்டிக்கிருர்கள். "பரமனடிபாடி" என்று முதலிலும், "அடிபோற்றி, கழல்போற்றி" என்று நடுவிலும், "அடியே போற்றும்" என்று முடிவிலே இங்கும் சொல்லச் செய்கிறதன்றே இவர்களுக்கு அடியிலேயுள்ள ஆசை.

(போற்றும் பொருள்) போற்றுகிற ப்ரயோஜனம். போற்றுவதே ஸ்வயம் ப்ரயோஜனமாயிருக்க, அதற்கு வேறொரு ப்ரயோஜன முண்டோ? என்னில்: அடிபோற்றுகை முதலான குற்றேவல்கள் நித்யமாய்ச் செல்லவேணும் என்றே அபேக்ஷிக்கிருர்களாகை யாலே ப்ரயோஜநாந்தரத்தை விரும்புகையாகிற குற்றம் இவர்களுக் கில்லை. (கேளாய்) விரும்பியது பெறப்போகிறோம் என்னும் மகிழ்ச்சி யாலே புகர்பெற்று விளங்கும் இவர்கள் வடிவழகைக்கண்டு மயங்கிக்கிடக்கும் அவனை, "கேளாய்" என்று துடைதட்டியெழுப்பு கிருர்கள். (கேளாய்) "'எங்கள் ப்ராப்யத்தை அழித்தோ நீ உன் ப்ராப்யம் பெறப்பார்ப்பது?' என்று அடியைவிட்டுத் துடையைத் தட்டுகிருர்கள்" என்று ஆறுயிரப்படி. (கேளாய்) வேதாந்த விழுப் பொருளின் மேலிருந்த விளக்கை விரித்த விட்டுசித்தர் திருமகளா ராகையாலே வேதமோதின அந்தணனுக்கும் அத்யயனம் செய்விக் கிருள். "அத்யாபயந்தீ" என்று பட்டர் அருளிச்செய்ததும் இப் பதத்தை நினைத்தன்றே.

(நீ போற்றும் பொருள் கேளாய்) ப்ராப்யம் எங்களுடையது என்று தப்பச்சொன்னோம்; உன்னுடையதன்றே ப்ராப்யம். ப்ராப் தாவும் நீயன்றே என்கிருர்கள். 'உங்களுக்கும் ப்ராப்யத்தில் அந்வயமுண்டே' என்ன, (பிறந்த நீ) எங்களைப் பெறுகைக்கு நீ முயற்சி செய்தாயா? உன்னைப் பெறுகைக்கு நாங்கள் முயற்சி

செய்தோமா? என்பதை நினைத்துப்பார் என்கிறார்கள். 'நான் எவ்வளவோ காரியத்திற்காகப் பிறப்பதுண்டு; அதனால் என்னாகும்?' என்ன, (பெற்றம் மேய்த்துண்ணும் குலத்திற் பிறந்த நீ) நீ இங்கு பிறந்தது யாருக்காக என்பதை விசாரித்தாலாகாதோ? என்கிறார்கள். (பெற்றம் மேய்த்துண்ணும்) "அஜாயமாந:" என்றவிடத்திலே வந்தோமோ? "பஹுதா விஜாயதே" என்றவிடத்திலன்றோ நாங்கள்வந்தது. "அஜோபிஸந்...ஈச்வரோபி ஸந்" என்றவிடத்திலோ நாங்கள் விழுந்துகிடக்கிறது? "ஸம்பவாமி" என்றவிடத்திலேயன்றோ வேண்டுகிறோம். பிறப்பிலியாயிருக்குமிடத்திலேயோ நாங்கள் விண்ணப்பம் செய்கிறோம்? பல்பிறவிப் பெருமானிடத்திலேயன்றோ போற்றும்பொருள் பெறவிருக்கிறோம். (பெற்றம்...) வஸிஷ்ட ஸுமந்த்ராதிகள், அருகில் வரவும் அனுமதிமறுக்கும் ராஜக்ருஹத்தின் முன்னேயோ நாங்கள் வந்திருக்கிறோம். (பெற்றம்...) பசுக்களை மேய்க்கும் இக்குலத்திலே உன்னைப் பிறக்கச்சொன்னாரார்? தாழ்ந்தாரை ரக்ஷிக்கும் குலத்தில் பிறந்துவிட்டு எங்களை ரக்ஷிக்காமலிருக்க முடியுமோ உன்னால். (குலத்தில் பிறந்த) குலத் தலைவனுக்குப் பிறக்கையாலே, குலத்திற்கே பிள்ளையாயிருக்கிறபடி. ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கு என்றார்களன்றோ.

"வந்து பிறந்த குற்றத்துக்காக என்னை என்செய்யச்சொல்லுகிறீர்கள்?" என்ன, (பிறந்த நீ எங்களை...) நீ எதை ஆசைப்பட்டு வந்தாயோ அதைப்பெறவேண்டும். பால் குடிக்கக் கால்பிடிக்க வேணுமோ என்கிறார்கள். (பிறந்த நீ எங்களை) "சூட்டு நன்மாலை... கோட்டிடை ஆடினை கூத்து அடலாயர்தம் கொம்பினுக்கே' என்கிறபடியே எங்களில் ஒருத்தியைப் பெறவன்றோ பிறந்தது. (பெற்றம் ...எங்களை) பசுக்களுக்காவது வேறு ரக்ஷகருண்டு. எங்களுக்கு வேறு ரக்ஷகரில்லை. (குற்றேவல்) அந்தரங்க கைங்கரியம். "க்ரியதாம்" என்கிறபடியே கூவிப் பணிகொள்வது. (குற்றேவல்) 'விடுத்த திசைக்கருமம் திருத்துவது,' 'கருதுமிடம் பொருதல்' முதலானவற்றைப்போல் பிரிந்திருந்து கைங்கரியம் செய்வதை நாங்கள் விரும்பவில்லை; சத்ரசாமராதிகள் பிடித்தல், அடிவருடுதல் முதலான குறுகி நின்று செய்யும் கைங்கரியங்களையே விரும்புகிறோம். (கோவிந்தா... குற்றேவல்) "கொம்மை முலைகள் இடர்தீரக் கோவிந்தற்கோர் குற்றேவல்" செய்யவன்றோ இவர்கள் பாரிப்பது. (எங்களைக் குற்றேவல்) வழியல்லா வழியிலும் எங்களை ப்ரவர்த்திக்கச்செய்தது இக் குற்றேவலிலுள்ள ஆசையன்றோ என்கிறார்கள். (எங்களை) இதைப் பெறுவிடில் தரிக்கமாட்டாத எங்களை.

(குற்றேவல் கொள்ளாமல் போகாது) கைங்கரியம் செய்யாம லிருக்க எங்களாலும் ஆகாது; கைங்கரியம் கொள்ளாமலிருக்க உன்னாலுமாகாது. (பிறந்த நீ கொள்ளாமல் போகாது)ஸாதனத்தை அனுஷ்டித்தபின்பு பலம் வேண்டாமென்பாயோ? குற்றேவல் கொள்ளமாட்டாயாகில் பின்னெதுக்காகப் பிறந்தாய்? (கொள்ளாமல் போகாது) 'உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்'' என்னும் தசையை எங்களுக்கு விளைவித்தபின் எங்களுக்கு எல்லாமானதைத் தராமலிருப்பாயோ? ''வளைத்துவைத் தேன் உன்னைப் போகலொட்டேன்'' என்ற பெரியாழ்வாரைப் போலேயும், ''திருவாணை நின்னாணை கண்டாய்'' என்ற நம்மாழ் வாரைப்போலேயும் ஆணையிடுகிறார்கள். ''உண்டிட்டாய் இனி உண் டொழியாய்'' என்று தேறுகிறார்கள்.

''நான் கொள்ளும் அந்தரங்க கைங்கரியங்களை வேண்டும் போது கொள்ளுகிறேன்; நீங்கள் நோன்புக்கு அங்கமாகப் பலகால் வேண்டிய பறையைக் கொண்டு செல்லுங்கள்'' என்று கண்ணன் சொல்ல, (இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண்) இன்று ஒரு ப்ரயோஜநத்தைப் பெற்று அகல வந்தவர்களோ நாங்கள்? நாங் கள் சொல்லும் சப்தத்தை அப்படியே கிரஹித்துவிட்டாய்; அதன் தாத்பரியத்தை அறிந்தாயல்லை. ஊராரிசைவுக்காகப் பறை என் றொரு வியாஜத்தைக் கொண்டோமேயொழிய எங்களுக்கு வேண்டி யது அதுவாகுமோ? அபிமதவிஷயம் இருந்தவிடத்தே சென்று தண்ணீர் என்றால், தண்ணீரை வார்ப்பார்களோ என்கிறார்கள். (கொள்ளாமற் போகாது...கொள்வானன்றுகாண்) எங்களிடம் நீ கொள்ளவேணுமேயொழிய, உன்னிடம் உன்னையொழிய வேறொன்றை நாங்கள் கொள்ளோம் என்கிறார்கள். ''இன்று வந்து இத்தனையும் அமுதுசெய்திடப்பெறில் நான் ஒன்று நூறாயிரமாக் கொடுத்துப் பின்னுமாளும் செய்வன்'' என்பாரன்றே. (கோவிந்தா) பசுக்களின் பின்னே திரியும் உனக்கு எங்கள் வார்த்தையின் கருத்து எப்படித் தெரியும்? அவற்றைத் தொடர்ந்ததால் அவற்றின் அறிவையே பெற்றாய்போலும்! உபாயஸ்வீகாரம் பண்ணுமிடத்திலே ''குறைவொன்றுமில்லாத கோவிந்தா'' என்று அவனுடைய ஜ்ஞாநாதி குண பூர்த்தியைச் சொன்னார்கள். இங்கு தங்களை அகல்விக்கும்படியான வார்த்தைகளைச் சொல்லுகையாலே மயங்கிக் கோபமாக வார்த்தை சொல்லுகிறார்கள். ப்ராப்யருசி இவர்களை இப்பாடு படுத்துகிறது. (கோவிந்தா) எங்களையும், எங்கள் ப்ராப் யத்தையும் மறந்தாலும், உன்னையும் உன் பிறவியையும் மறக்க

லாமோ? (கோவிந்தா) "பூமியை எடுத்து நோக்கின மஹாவராஹ மாக நினைக்கிருயோ? பூமியை நீரேற்ற வாமனனுக நினைக்கிருயோ? சப்தராசியைப் பிரித்தெடுத்த ஹம்ஸரூபியாக நினைக்கிருயோ? அத்தை ப்ரகாசிப்பித்த ஹயக்ரீவ வேஷமாக நினைக்கிருயோ? ஆதித்யாந்தர்வர்த்தியாக நினைக்கிருயோ?' என்று ஆருயிரப்படி. கோசப்தம், பசுக்களைக் குறிப்பதோடன்றியில், பூமியையும் சப்த ராசியான வேதத்தையும், கிரணங்களையும் குறிக்குமாகையாலே கோவிந்த பதத்தை, பூமியைத் தூக்கியெடுத்து அடைந்த மஹா வராஹத்தையாவது, பூமியை நீரேற்றடைந்த வாமனனையாவது, சப்தராசியைப் பிரித்தெடுத்து ப்ரகாசிப்பித்த ஹம்ஸ ஹயக்ரீவர் களையாவது, ஸஹஸ்ரகிரணனுக்கு நடுவிலிருக்கும் ஆதித்யமத்ய வர்த்தியையாவது குறித்துப் பிரயோகிக்கிருேம் என்று நினைத்து விடாதே; அவர்களாகில், எங்கள் வார்த்தையைக் கேளாமலிருக்க வழியுண்டு; பசுக்களைத் தேடியடைந்த உன்னையே நாங்கள் 'கோவிந்தா' என்கிருேமாகையால் குற்றேவல் எங்களைக் கொள்ளா மற்போகாது என்று கருத்து.

"பறைக்கு ஊராரெல்லாம் கொண்டிருக்கும் பொருளை நான் கொண்டதற்காக, கோவிந்தா என்று இசழுகிறீர்கள். நீங்கள் விரும்பும் குற்றேவல் யாது என்பதை விவரித்துச் சொல்லுங்கள்; இற்றைப் பொழுதை உங்களோடே கழிக்கிறேன்" என்று கண்ணன் கேட்கச் சொல்லுகிருர்கள்: (எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்) இற்றைப் பொழுதுடன் போவதில்லைகாண்; இப்பிறவியுடன் கழிவது மில்லைகிடாய். (ஏழேழ் பிறவிக்கும்) இப்பிறவிபோலே நீ எவ்வளவு பிறவியெடுத்தாலும், அங்கெல்லாம் உன்னைத் தொடர்ந்து அடிமை செய்யவன்றோ நாங்கள் பாரிக்கிறது. (ஏழேழ் பிறவிக்கும்) "ப₃ஹூதா₄ விஜாயதே" என்று வேதமும், "ப₃ஹூநி மே ஜந்மாநி" என்று நீயும், "பல்பிறவிப் பெருமான்" "சன்மம் பல பல செய்து" "பல பிறப் பாய் ஒளிவரும்" என்று ஆழ்வாரும் சொன்ன அளவிடவொண்ணுத அவதாரங்கள்தோறும் அடிமை செய்யவேண்டும். "தே₃வத்வே தே₃வ தே₃ஹேயம் மநுஷ்யத்வே ச மாநுஷீ" [பகவான் தேவனுகும்போது தேவதேஹத்தைக்கொண்டும், மநுஷ்யனுகும்போது மானிடவுருக் கொண்டும் பிறக்கிருள் பிராட்டி] என்று சொல்லப்படும் பெரிய பிராட்டியாரைப்போலே அடிமை செய்ய ஆசைப்படுகிருர்கள். (ஏழேழ் பிறவிக்கும்) "காமயே வைஷ்ணவத்வம் து ஸர்வஜந்மஸு கேவலம்" [எல்லா ஜன்மங்களிலும், வைஷ்ணவனுயிருக்கையையே நான் விரும்புகிறேன்.] என்று ஜிதந்தேயில் ஜந்மத்தை அநுமதி

பண்ணினாற்போலே, இவர்களும் தாங்கள் எவ்வளவு பிறவியெடுத்தாலும், பகவத்கைங்கர்யபரர்களாக விளங்கவேண்டுமென்று பிரார்த்திப்பதாகவும் கொள்ளலாம்.

(உன்றன்னோடு) நீ பரமபதத்தேறப் போனால் அங்கேயும் உன்னோடே திரியவேணும். (உற்றோமேயாவோம்) நீ பிறக்குமிடமெல்லாம் உனக்கு உறவினராகவே பிறக்கக் கடவோம். இன்ன உறவு என்று விசேஷியாமையாலே மாதா, பிதா, ப்ராதா, ஸுஹ்ருத், பர்த்தா, பந்து, நன்மக்கள் முதலிய எல்லாவுறவும் நீயே ஆகவேணும் என்கை. (உற்றோமேயாவோம்) சரீரம்போலே நீ எங்களை நோக்கும்படி ஆகவேணும். "ரக்ஷதே ப₄க₃வாந் விஷ்ணுர் ப₄க்தாநாத்ம-சரீரவத்" [பகவான் விஷ்ணு பக்தர்களைத் தன் சரீரம்போல் காப்பாற்றுகிறார்.] என்கிறபடியே. (உற்றோமே ஆவோம்) உறவுண்டானாலும், சில மாஸங்களும், சில வருஷங்களும் பிரிந்திருந்த பிராட்டி, பரதன் முதலானோரைப்போலேயாகக் கூடாது. இளையபெருமாளைப் போலே என்றும் உன்னோடு கூடியிருக்கவேணும். உனக்கு ஒரு தீங்கு நேரிடிலும், உன்னைவிட்டுக் கணநேரம் பிரியிலும் "ந ச ஸீதா த்வயா ஹீநா ந சாஹம்" என்கிறபடியே ஸத்தையை இழக்கும்படியான உறவுடையாராகவேணும்.'

"நான் பிறக்கும் பிறவிதோறும் உறவினராகப் பிறக்கும் இத்தனைதானோ உங்களுக்கு வேண்டியது?" என்ன, (ஆட்செய்வோம்) உறவாயிருக்கைக்குப் பலமான கைங்கரியத்தைப் பெறவேண்டாவோ? என்கிறார்கள். (உனக்கு ஆட்செய்வோம்) ஆட்கொள்ளத் தோன்றிய அச்சுதனை உனக்கு ஆட்செய்வோம். (உனக்கே ஆட் செய்வோம்) எங்களுடைய ஆநந்தத்துக்காக ஆட்செய்வோமல்லோம்; உனக்கும் எங்களுக்கும் ஆநந்தஹேது என்று ஆட்செய்வோமல்லோம். உன் முகமலர்த்திக்காகவே ஆட்செய்வோம். "தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே எனக்கே கண்ணனை யான் கொள் சிறப்பே" என்ற நம்மாழ்வாரைப்போலே ப்ராப்யத்தை நிஷ்கர்ஷிக்கிறார்கள். அப்படியாகில் சேதனனுக்கு ஆனந்தமில்லையோ வெனில், கைங்கர்யத்தைக்கண்டு உகந்த எம்பெருமானுடைய முகமலர்த்தியைக்கண்டு ஏற்படும் ஆனந்தம் இவனுக்கு உண்டு. ஆனால், இவன் கைங்கர்யத்திலே இழிவது அவனுடைய ஆநந்தத்திற்கேயொழியத் தன்னுடைய ஆநந்தத்திற்கல்ல. திருமந்திரத்திலும், த்வயத்தின் உத்தரகண்டத்திலும் நமச்சப்தத்தாலே கழிக்கப்படும் ஸ்வப்ரயோஜநபரதையை 'உனக்கே' என்னுமிடத்தில் ஏகாரத்தாலே

கழிக்கிருர்கள். இப்பிரபந்தத்துக்குக்கும், இப்பாசுரத்துக்கும் உயிரான அடியிது.

"பதிவ்ரதையான ஸ்த்ரீக்கு பர்த்ருஸம்ச்லேஷஜநித ஸாரஸ்யாநுபவம் உண்டாகாநிற்கச் செய்தேயும், ப்ரயோஜனம் பர்த்தாவினுடைய முகவிகாஸமாய், 'அவ்விகாஸஹேது' என்று ஸம்ச்லேஷாதிகளிலே ஸங்கம் பிறக்குமோபாதி, பகவத்குணநுபவாதிகளில் 'நான் போக்தா' 'எனக்கு ரஸித்தது' என்று புருஷபோகத்தோபாதி ஸ்வதந்த்ரமாயிருத்தல், ஸாதாரணமாயிருத்தல் செய்கையன்றியிலே, 'ஈச்வரன் முகமலர்த்தி எனக்கு (ஆனந்த)ஹேது' என்று அவற்றிலே ஸங்கமாய், முகமலர்த்தியே தனக்கு போக்யமாக நினைத்திருக்கை. அத்தைப் பற்றவிறே முதலிலே 'அஹமந்நம்' என்று சொல்லி, பின்னே 'அஹமந்நாத$_3$:' என்றதும்" என்று பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளை பரந்தரஹஸ்யத்திலேயருளிய பரமபோக்யமான ஸ்ரீஸூக்த்யம்ருதம் இங்கு பருகத்தக்கது. "பு$_4$ங்க்தே ஸ்வபே$_4$ாகமகி$_2$லம் பதிபே$_4$ாக$_3$சேஷம்" [பதிபோகத்திற்கு சேஷமாயிருக்கும் தன்னுடைய போகத்தை அனுபவிக்கிருன்.] என்ருர் தேசிகரும். இவ்விஷயத்தில் ஆசார்யர்களுக்குள் அபிப்பிராயபேதம் இல்லை.

(நாம் ஆட்செய்வோம்) கைங்கர்யத்தாலேயே உயிர்தரிக்கும் நாம், நீயுகந்த அடிமைசெய்வோம். (கோவிந்தா உனக்கே நாம் ஆட்செய்வோம்) "உறுவதாவது-நீள்குடக்கூத்தனுக்கு ஆட்செய்வதே" என்றன்ருே எங்கள் தமப்பனும் உபதேசித்தார். "நீங்கள் விரும்புவது வேறு ஏதாவது உண்டோ" என்ருன்; (காமம் மாற்று) எங்களுக்கு ஏற்படக்கூடிய மற்ற காமங்களை நீயே மாற்றவேணும் என்கிருர்கள். விண்ணுளார் பெருமாற்கடிமைசெய்வாரையும் செறும் ஐம்புலன்களையும் சஞ்சலமான நெஞ்சையும் உடையவர்களாகையாலே இதரவிஷய காமங்கள் உண்டாகப்போகின்றனவே என்று பயந்து அவற்றை மாற்றச் சொல்லுகிருர்கள். "இவ்வளவு தானே" என்ருன்; (மற்றை காமம் மாற்று) பரமபதநாதனிடத்திலேயுள்ள காமத்தையும் மாற்றி, அதை உன்னிடத்திலேயாம்படி பண்ணு. "மற்ருென்றினைக் காணவே" "ப$_4$ாவோ நாந்யத்ர க$_3$ச்ச$_2$தி" [என் நினைவு மற்ருேரிடத்தில் செல்லுகிறதில்லை.] "சிந்தை மற்ருென்றின் திறத்ததல்லா" "அச்சுவை பெறினும் வேண்டேன்" என்ருர்களன்ருே. (கோவிந்தா மற்றை காமம் மாற்று) கோவிந்தனயிருக்கும் இருப்பைத் தவிர்த்து, பரமபதநாதனயிருக்கும் இருப்பிலும் எங்கள் மனம் செல்

லாதபடி பண்ணு. "கோவிந்தற்கோர் குற்றேவல் இம்மைப் பிறவி செய்யாமே இனிப்போய்ச் செய்யும் தவந்தானென்" என்பவ ளன்றே. "இத்தனையோ வேண்டுவது" என்றான். (நம் காமம் மாற்று) நாங்கள் கைங்கரியம் செய்யும்போது உன்னுடைய அழ கானது எங்களை மயக்கிக் கைங்கரியத்திலே ஈடுபடாமல் செய்யும். அதையும் தவிர்த்துக் கைங்கர்யபரர்களாகும்படி பண்ணு. "இவ் வளவுதானே வேண்டுவது" என்றான். (நம் காமங்கள் மாற்று) இருவர் கலந்து பரிமாறும்போது அதனால் ஏற்படும் ஆநந்தம் இரு வர்க்கும் ஒத்திருக்கும்படியாகவன்றோ உலகில் நாம் காண்பது. இங்கு அப்படியாகக்கூடாது; போக்தாவான நீ எங்களைக் கைங் கரியங்கொண்டு உகப்பதைக்கண்டு நாங்கள் உகக்கவேண்டும். உன்றன் திருவுள்ளம் இடர்கெடுந்தோறும் நாங்கள் இன் புறவேண்டும். உன்னுடைய போகம் ஸ்வதந்த்ரமானதாகவும், எங்களுடையது பதிபோகசேஷமானதாகவும் இருக்கவேண்டும். போஜனத்துக்கு க்ருமிகேசங்கள்போலுள்ள போக்த்ருத்வப்ரதிபத்தி யும், மதீயத்வப்ரதிபத்தியுமான நம் காமங்களையும் நீயே மாற்றி யருளவேணும். ஆக, இத்தால் விஷயாந்தர ப்ராவண்யம், பரம பதநாத ப்ரேமம், பகவத்ஸௌந்தர்ய ப்ராவண்யம், ஸ்வபோக்த் ருத்வாபிஸந்தி ஆகிய இவற்றை நீயே மாற்றி, கோவிந்தனாகிற உன் விஷயத்தில், உனக்காகவே செய்யப்படும் கைங்கரியத்தை என்றும் கொடுத்தருளவேண்டும் என்று ப்ராப்யப்ரார்த்தனம் செய்தார்களாயிற்று. "நீ மாற்று" என்ற விடத்தில் ஆச்ரிதகார்யா பாதகமான ஸர்வஜ்ஞத்வம், ஸர்வசக்தத்வம், அவாப்தஸமஸ்த காமத்வம், ஸர்வஸ்வாமித்வம், பரமதயாளுத்வம் என்னும் ஐந்து குணங்களும் அநுஸந்திக்க உரியன. பரந்தரஹஸ்ய சரமச்லோக ப்ரகரணத்திலே 'அஹம்' சப்த விவரணத்தைப் படிப்பது.

இப்பாட்டு திருவெட்டெழுத்துக்கு விவரணமாயிருக்கிறது. "நீ...கோவிந்தா...உனக்கு" என்று அகாரத்தின் பொருள் அநு ஸந்திக்கப்பட்டது. "உனக்கே" என்னும் ஏகாரத்தினாலே உகா ரத்தினுட்பொருள் உணர்த்தப்பட்டது. "நாம்" என்று மகாரார்த்த மான ஜீவஸ்வரூபம் சொல்லப்பட்டது. "உன்றன்னோடு உற்றோமே யாவோம்" என்று நாராயணபதத்தின் அர்த்தம்அறிவிக்கப்பட்டது. "எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் ஆட்செய்வோம்" என்று 'ஆய' என்னும் சதுர்த்தியின் பொருள் பேசப்பட்டது. "மற்றை நம் காமங்கள் மாற்று" என்று நமச்சப்தார்த்தம் நவில்ப்பட்டது. இப்படி ஸர்வார்த்தங்களையும் தன்னுட் பொதிந்துகொண்டிருக்கும் அஷ்டா

க்ஷரத்துக்கு விவரணமாயிருக்கையால் நம் ஆசாரியர்கள் இப்பாட்டை மிகவும் ஆதரிப்பார்கள். "விடிவோரை எழுந்திருந்து முப்பது பாட்டையும் அநுஸந்தித்தல், மாட்டிற்றிலனாகில் 'சிற்றஞ்சிறுகாலே' என்கிற பாட்டை அநுஸந்தித்தல், அதுவும் மாட்டிற்றிலனாகில் நாம் இருந்த இருப்பை நினைப்பது" என்று பட்டர் அருளிச் செய்ததை அநுஸந்திப்பது. இப்பாட்டையும், அடுத்த பாட்டையும், தினந்தோறும் ஒருதடவையாவது ஓதாதார் வைஷ்ணவராகார்.

## திருப்பாவை—முப்பதாம் பாட்டு.

30. வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட வாற்றை யணிபுதுவைப்
பைங்கமலத்தண்டெரியற் பட்டர்பிரான் கோதைசொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதுந் தப்பாமே
இங்கிப் பரிசுரைப்பா ரீரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்குந் திருவருள்பெற் றின்புறுவ ரெம்பாவாய்.

**பதவுரை:—வங்கம் கடல்** — *கப்பல்களையுடைய (திருப்பாற்கடலை,* **கடைந்த**-*(தேவர்களுக்காகக்) கடைந்த,* **மாதவனை**—*ச்ரிய:பதியான,* **கேசவனை** — *கண்ணபிரானை,* **திங்கள் திருமுகத்து சே இழையார்**—*சந்திரன்போன்ற அழகிய முகத்தையும் செவ்விய ஆபரணங்களையுமுடைய ஆய்ச்சிகள்,* **சென்று**—*அடைந்து,* **இறைஞ்சி**—*வணங்கி,* **அங்கு**—*அத்திருவாய்ப்பாடியில்,* **அப் பறை கொண்ட ஆற்றை**—*ப்ரஸித்தமான (தங்கள்) புருஷார்த்தத்தைப்பெற்ற வ்ருத்தாந்தத்தை,* **அணி புதுவை**—*அழகிய ஸ்ரீவில்லிபுத்தூரில் உதித்த,* **பை கமலம் தண் தெரியல் பட்டர்பிரான்**—*பசுமை பொருந்திய தாமரை மலர்களினாலான குளிர்ந்த மாலையையுடைய பெரியாழ்வாருடைய (திருமகளான)* **கோதை**—*ஆண்டாள்,* **சொன்ன** — *அருளிச்செய்த,* **சங்கம் தமிழ் மாலை முப்பதும்**—*திரள்திரளாக அநுபவிக்கவேண்டிய தமிழ்மாலையாகிய இம்முப்பது பாசுரங்களையும்,* **தப்**

பாமே–தப்பாமல். **இங்கு**—இந்நிலத்தில். **இ பரிசு**—இவ்வித மாக, **உரைப்பார்**–ஓதுமவர்கள். **ஈர் இரண்டு மால் வரை தோள்**–பெரியமலைபோன்ற நான்கு திருத்தோள்களையுடையனும். **செம்கண் திருமுகத்து**—சிவந்த திருமுகத்தையுடையவனும். **செல்வம்**-ஐச்வர்யத்தையுடையனும். **திருமாலால்**—ஸ்ரீமானுமான எம்பெருமானாலே. **எங்கும்** — எல்லாவிடத்தும். **திரு அருள் பெற்று**—(அவனுடைய) க்ருபையைப்பெற்று. **இன்புறுவர்**—ஆனந்தமுறுவர்.

அவதாரிகை:–"நீங்கள் வேண்டிய குற்றேவல்களைக் கொள்கிறேன் நான்; உங்களுடைய பாக்கியமிருந்தபடியென்! நீங்கள் பெற்ற பலனைப் பிற்பட்டார் இழக்கவேண்டியதுதானோ" என்று கண்ணன் கேட்க, "எக்காலத்திலுள்ளவர்களும், இப்பிரபந்தத்தைக் கற்றுணர்ந்தார்களாகில், அவர்கள் பிராட்டியாலேயும், எம்பெருமானாலும், விஷயீகரிக்கப்படுவார்கள்; திருவாய்ப்பாடியிலே இந் நோன்பை அநுஷ்டித்த ஆயர் சிறுமியரைப்போலேயும், அதை அநுகரித்த எங்களைப்போலேயும் ஆனந்தமடைவர்" என்று கூறிப் பிரபந்தத்தை இப்பாட்டுடன் முடிக்கிறார்கள். "கன்றிழந்த பசு, தோல்கன்றையிட, அதுக்கும் இரங்கிப் பால் சுரக்குமாபோலே, அன்பு நிறைந்தார் சொன்ன இப்பாசுரம் கொண்டு புகுந்தால், நமக்கும் பலஸித்தியுண்டாம்" என்று பட்டர் அருளிச்செய்ததை அநுஸந்திப்பர்கள்.

**வியாக்கியானம்**:—புருஷகாரபூதையான பிராட்டியின் ஸம்பந்தத்தாலேயே பலஸித்தியுண்டாகிறதாகையாலே, அவளைப்பெற அவன் செய்த செயலைப் பேசுகிறார்கள் முதலடியாலே. (வங்கக் கடல் கடைந்த) வங்கமாவது–கப்பல்கள். கப்பல்கள் நிறைந்திருக்கச் செய்தே அவற்றுக்கு ஒரு தீங்கும் வாராதபடி கடல்கடைந்த ஸாமர்த்யத்தை அநுஸந்திக்கிறார்கள். க்ஷீராப்தியில் கப்பலுண்டோவெனில்: ச்வேதத்வீபவாஸிகளின் விஹாரார்த்தமாகக் கப்பலுண்டாகக் குறையில்லை. "வங்கம் விட்டுலவும் கடல்பள்ளியானை" என்றார் பெரியாழ்வாரும். அன்றிக்கே, கடல்கடைந்தபோது எங்கும் சுழன்று வந்த மலையும், அலைகளும் கப்பல்களைப்போலே காட்சியளித்தபடியைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். ப்ரயோஜநாந்தரபரரான தேவர்க்கும் உடம்பு நோவக் கடல்கடைந்து காரியம் செய்தவன் அநந்ய ப்ரயோஜனரான எங்கள் காரியம் செய்ததில் வியப்பென்ன என்று

பாவம். தேவகாரியமென்று ஒரு வியாஜத்தையிட்டுப் பெரிய பிராட்டியாராகிற பெண்ணமுதைப் பெறுகைக்குக் கடல்கடைந்த தன்மை, ஊரார் விரும்பிய நோன்பை ஒரு வியாஜமாக்கி, பெண் களைப்பெற்ற கண்ணன் தன்மையை ஒத்திருக்கையாலே க்ஷீராப்தி நாதனைக் கவிபாடுகிறார்கள்.

(வங்கக் கடல் கடைந்த) "விண்ணவர் அமுதுண அமுதில் வரும் பெண்ணமுதுண்ட எம்பெருமானே!" என்று கடல் கடைந்து பெண்ணமுதைப் பெற்ற அவனைப்போலே, "தெண்டை யொண் கண் மடவாளொருத்தி, கீழையகத்துத் தயிர் கடையக் கண்டொல்லை நானும் கடைவனென்று கள்ள விழியை விழித்துப்புக்கு" என்று தயிர்கடைந்து பெண்களைப் பெறுமவனன்றோ இவனும். "அமரர்க் கமுதீந்த ஆயர்கொழுந்தை" "கண்ணன் கையால் மலக்குண்டு அமுதம் சுரந்த மறிகடல்' என்று அமுதளித்த பிரான் இவனே யென்று அறுதியிட்டாரன்றோ ஆழ்வாரும். (வங்கக் கடல் கடைந்த) "பாற்கடலில் பையத்துயின்ற" என்றும், "வங்கக் கடல்கடைந்த" என்றும் முதலிலும் முடிவிலும் அவனையே பாடுகிறார்கள்.

"இவன் கடல் கடைந்தது ஏதுக்காக' என்னில்: (மாதவனை) பிராட்டியைப் பெறுகைக்காகவன்றோ கடல்கடைந்தது என்கிறார்கள். "அமுதங்கொண்ட பெருமான் திருமார்வன்" "பெண்ணமுதுண்ட வெம்பெருமானே" என்றாரன்றோ. (மாதவனை) ஆச்ரயித்தார் குற்றத்தைப் பொறுப்பிக்கும் பிராட்டியின் ஸம்பந்தத்தை அநுஸந் திக்கிறார்கள். ஸ்ரீமந்நாராயணனே ஆச்ரயணவேளையோடு போக வேளையோடு வாசியற உத்தேச்யன் என்னும் அர்த்தத்தை அறிவிக் கிறார்கள். (கடல் கடைந்த மாதவனை) பிராட்டியைப் புருஷகாரமாகப் பற்றிச் சரணமடைவார்க்கு அரிய காரியங்களையும் தலைக்கட்டிக் கொடுக்கும் என்னும் அர்த்தத்தை அநுஸந்திக்கிறார்கள்.

(மாதவனைக் கேசவனை) பிராட்டியும் ஆசைப்படும்படியான அழகிய மயிர்முடியை உடையவனை. "ஹிரண்யகேச:" என்று வேத மும் புகழும்படியான கேசத்தையுடையவனை. (கடல் கடைந்த கேசவனை) கடல் கடையும்போது அலைந்திருக்கையாலே மயிர்முடியின் அழகு விஞ்சியிருக்கிறபடியைச் சொல்லுகிறார்கள். (மாதவனைக் கேசவனை) தன்னிடத்தில் அன்புடையாரை அடைவதற்கு விரோதியா யுள்ளவற்றை, கேசியைக் கொன்றொழித்தாப்போலே போக்கடிப் பவனை. கேசிஹந்தாவாகையாலே கேசவனாகிறானன்றோ. (கடல் கடைந்த மாதவனைக் கேசவனை) பல அருங்காரியங்களையும் செய்து

தேவர்களுடைய காரியம் செய்கையாலும், "பச்யதாம் ஸர்வதே₃வாநாம் யயௌவக்ஷ: ஸ்த₂லம் ஹரே:" [எல்லா தேவர்களும் பார்த்திருக்கும் போதே பிராட்டி ஹரியினுடைய திருமார்பை அடைந்தாள்] என்கிற படியே பிராட்டியை ஸ்வீகரிக்கையாலும் இவனே ப்ரஹ்மருத்ராதி தேவர்களுக்குக் காரணம் என்று தோன்றியிருக்கிறபடியைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். "க இதி ப்₃ரஹ்மணோ நாம" என்னும் சுலோகத்தின்படியே, ககாரவச்யனுகிற பிரமனுக்கும், ஈசனை சிவனுக்கும் காரணன் கேசவன் என்றபடி. (மாதவனைக்கேசவனை) "மாமாயன் மாதவன்" "கேசவனைப் பாடவும்" "மாவாய் பிளந்தானை" என்று தொடங்கியபடியே முடிக்கிறார்கள். "பரமனடிபாடி" என்றுதொடங்கி "கேசவனை" என்று தலைக்கட்டுகையாலே, பாதாதிகேசாந்தமாகக் கண்ணனை அனுபவித்தார்களாயிற்று. "அசோதை முன்சொன்ன திருப்பாதகேசத்தை" என்கிறபடியே திருப்பாதகேசம் பாடுகை இவர்களுக்குக் குடிப்பிறப்பு. கேசவநம்பியை அடிபிடிப்பதோடு, முடி பிடிப்பதோடு வாசியில்லை ப்ரணயினிகளான இவர்களுக்கு. "வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனை" என்கையால் "ஸ்ரீமந்நாராயண சரணௌ" என்னும் பகுதியில் அர்த்தம் அறிவிக்கப்படுகிறது. "மாதவனை" என்று ஸ்ரீமச்சப்தார்த்தம். "வங்கக் கடல் கடைந்த" என்கையாலே, கடல் கடைந்த வ்யாபாரத்திலே தோற்றும் ஸௌலப்ய, ஸௌசீல்ய, வாத்ஸல்ய, ஸ்வாமித்வ குணங்களுடன் கூடியவன் என்னும் நாராயணசப்தார்த்தம் நவிலப்பட்டது. "கேசவனை" என்று சரணசப்தார்த்தமான விக்ரஹயோகம் உணர்த்தப்படுகிறது.

இனி, 'ப்ரபத்யே' என்னும் பதத்தில் உணர்த்தப்பட்ட அதிகாரிகளின் பெருமையைச் சொல்லுகிறது. (திங்கள் திருமுகத்துச் சேயிழையார்) க்ருஷ்ணஸம்ச்லேஷத்தாலே குளிர்ந்து, மலர்ந்து, செவ்விபெற்று, பூர்ணசந்திரன்போலே பொலியும் முகமுடையரானார்கள்; "சூடகமே பாடகமே" என்று தாங்கள் பாரித்தபடியே அவனும், பிராட்டியும் பூட்டிய ஆபரணங்களாலும் அழகுபெற்றுர்கள். (வங்கக் கடல் கடைந்த...திங்கள் திருமுகத்து) கடல்கடைந்தபோது உண்டானது ஒரு சந்திரனே; இங்கேயோ ஐந்து லக்ஷம் பூர்ணசந்திரர்கள் ஏககாலத்தில் உதித்ததுபோலுள்ளது. (திங்கள் திருமுகம்) "ப்₃ரஹ்ம வித்₃ இவ் ஸௌம்ய தே முக₂ம் ப₄ாதி" [குழந்தாய்! உன் முகத்தைப் பார்த்தால் ப்ரஹ்மத்தை அறிந்தவன்போல் தோற்றுகிறதே.] என்றுப்போலே பகவத்ஸம்பந்தம் முகத்திலே நிழலிடுகிறபடி. (திங்கள் திருமுகம்) சந்திரன் இவர்களுடைய முகத்துக்கு

ஒப்பாகமாட்டாமையாலே, 'திருமுகம்' என்கிருர்கள். ''சந்த்₃ர-காந்தாநநம் ராமம்'' [சந்திரனைப்போல அழகிய திருமுகமண்டலத்தை உடைய இராமனை] என்றதும், ''ஐயோ! தப்பச்சொன்னேம்'' என்று அநுசயித்து, ''அதீவ ப்ரியதர்சநம்'' [அச்சந்திரனைக் காட்டிலும் மிகவும் அழகியவனுயிருப்பவனை] என்ற வால்மீகிபகவானைப்போலே. (திங்கள் திருமுகம்) ''கதிர்மதியம்போல் முகத்தான்'' என்னும் அவனைப்போலே, தாபமும் கலந்திராமல், தண்மையே வடிவாயிருக்கிறது இவர்கள் முகம். அவனுடைய தண்டதரத்வம் இவர்களுக்கு இல்லையென்றதாயிற்று.

(சேயிழையார்) இயற்கையாக உள்ள அழகுக்குமேலே, செவ்விய ஆபரணங்களாலுண்டான அழகையும் உடையவர்கள். ஆபரணங்களுக்குச் செவ்வியாவது: அவனாலும், பிராட்டியாலும் அணிவிக்கப்பட்டதாயிருக்கை. (திங்கள்...சேயிழையார்) ரூபகுணங்களாலும் ப்ரஹ்மாலங்காரத்தாலும் குறைவற்றவர்களாயிருக்கை. (சென்று) அவனிருந்தவிடத்தே சென்று. அதிகாரிக்கு பகவத்விஷய ருசியினுல் ஏற்படும் த்வரையைச் சொல்லுகிறது. (இறைஞ்சி) தூமலர் தூவித் தொழுது வாயினுல் பாடி மனத்தினுல் சிந்தித்து, அடி போற்றித் திறல்போற்றிப் புகழ்போற்றிக் கழல்போற்றிக் குணம் போற்றி வேல்போற்றிச் செய்தவற்றையெல்லாம் நினைக்கிறது. 'சரணம் ப்ரபத்யே' என்றதின் அர்த்தம் சொல்லிற்றுயிற்று. ஆக, த்வயத்தின் பூர்வகண்டார்த்தம் உரைக்கப்பட்டது.

(அங்கப் பறைகொண்ட ஆற்றை) அவ்விடத்திலே பரமபுருஷார்த்தமான அப்பறையைப் பெற்ற ப்ரகாரத்தை. சென்ற பாட்டிலே சொல்லப்பட்ட த்வயத்தின் உத்தரகண்டார்த்தத்தை அநுவதிக்கிருர்கள். (அங்கு) ஆச்ரயணீயனுன அவனிருந்தவிடத்திலே. (அங்கு) திருவாய்ப்பாடியிலே, நந்தகோபாலன் கோயிலிலே, நப்பின்னைப்பிராட்டியுடன் கூடியிருந்த திவ்யஸிம்ஹாஸநத்திலே. (அப்பறை) தங்களுக்குள் பறை என்னும் ஸங்கேதத்தால் பிரஸித்தி பெற்றிருக்கும் கைங்கரியமாகிற புருஷார்த்தம். ஊரார் வேண்டிய பறையன்று இங்கு சொல்லுகிறது. (கொண்ட) ''நீ தாராய்'' என்று வேண்டி, அவன் தரப்பெற்ற. (பறைகொண்ட ஆற்றை) பறை பெற்ற ப்ரகாரத்தை; தங்களுடைய வெறுமையையும், அவன் பூர்த்தியையும், பந்தத்தையும் முன்னிட்டு, அபராதங்களுக்கு க்ஷமை கொண்டு, ருசியையும் த்வரையையும் காட்டிப் புருஷார்த்தத்தைப் பெற்ற வழியை.

(அணி புதுவை) ஸம்ஸாரத்துக்கு ஆபரணமாயுள்ள ஸ்ரீவில்லி புத்தூர். அகாரவாச்யனை வடபெருங்கோயிலுடையானும், உகார வாச்யையான ஆண்டாளும், மகாரவாச்யரான பெரியாழ்வாரும் ஒன்றுசேர்ந்திருக்கையாலே ப்ரணவம்போலே பெருமை பெற்றிருக் கும் ஊர். "பொன்னும் முத்தும் மாணிக்கமும் இட்டுச்செய்த ஆபரணம்போலே, நாச்சியாரும், பெரியாழ்வாரும், வடபெருங் கோயிலுடையானுமான அலங்காரமுள்ள தேசமிறே" என்று ஆரு யிரப்படி. (பைங் கமலத் தண்தெரியல்) பசுத்த கமலங்களாலான குளிர்ந்தமாலை. ப்ராஹ்மணர்க்குத் தாமரைமாலையாகச் சொல்லி யிருக்கையாலே, ப்ராஹ்மணோத்தமரான பெரியாழ்வார் தாமரைமாலை களுடன் விளங்குகிறபடி. (தண் தெரியல்) குளிர்ந்தமாலை. "தண் ணந்துழாய் அழல் போலடும்" என்கிறபடியே தன்னையடைந்தாரை விரஹதாபத்தாலே தஹிக்கச்செய்யும் துழாய் மாலையைப்போலல் லாமல் ஆச்ரிதரைக் குளிரச்செய்யும் தாமரைமாலை. பிரிந்தவன் மாலைபோலன்றே சேர்ப்பார் மாலை. (பட்டர்பிரான்) ப்ராஹ்மணர் களுக்குப் பரதத்வநிர்ணயாதி முகத்தாலே உபகாரகராயிருப்பவர். வேதப்பயன் கொள்ளவல்லவராய், வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கை விரித்தவராய் விளங்குமவரன்றோ இவர். பட் டர்களுக்கு வித்யாதானம் பண்ணிய உபகாரகர் என்றும் பொருள் கொள்ளலாம். 'மறை நான்கு முன்னோதிய பட்டன்' ஆகிய அவ னுக்கும் கந்யாப்ரதானம் பண்ணிய உபகாரகர் என்றும் கொள்ளலாம்.

(பட்டர்பிரான் கோதை) "ஸ ஹோவாச வ்யாஸ: பாராசர்ய:" [பராசர புத்திரரான அந்த வியாஸரன்றோ சொன்னார்] என்று வேதம் வியாஸருடைய ஆப்திக்காக, இவர் பராசர புத்திரர் என்றாற்போலே, பட்டர்பிரான் கோதையாகையாலே, சொன்ன அர்த்தத்தில் மிகைபடக் கூறுதல் முதலான குற்றங்கள் சிறிதும் இல்லையென்றபடி. (பட்டர்பிரான் கோதை) 'ஆற்றப்படைத்தான் மகனே' என்று சொல்லுகை அவனுக்கு ஏற்றமாயிருக்குமாபோலே 'பட்டர்பிரான் கோதை' என்கை பூதேவியான இவளுக்கு ஏற்றத்தைத் தருகிறது.

**"க்ருஷ்ணத்₃வைபாயநம் வ்யாஸம் வித்₃தி₄ நாராயணம் பரம்।**
**கோऽஹ்யந்யோ பு₄வி மைத்ரேய! மஹாப₄ாரதக்ருத் ப₄வேத்॥"**

[மைத்ரேயரே! க்ருஷ்ணத்வைபாயனரான வியாஸரை பரமாத்மா வான நாராயணனென்றே அறிவீராக. இவ்வுலகில் வேறு எவன்

மஹாபாரதத்தை இயற்றமுடியும்?] என்று தந்தையான பராசரராலும் கொண்டாடப்பட்ட வியாஸரைப்போலே, "ஒரு மகள் தன்னையுடையேன் உலகம் நிறைந்த புகழால் திருமகள் போல வளர்த்தேன்" என்று பெரியாழ்வாராலும் கொண்டாடப்படுபவளாயிருக்கை. (கோதை) பாமாலை தந்தவள் என்று பொருள். (சொன்ன) ஆயர் சிறுமிகளின் அனுபவத்தை அடியொற்றி ஆண்டாள் உரைத்த. (கோதை சொன்ன) பெண்ணுடையுடுத்துப் *பத்துப் பாட்டையும் பாடினவுடனே பதினேராம் பாட்டில் "அணி குருகூர்ச்சடகோபன் சொன்ன"என்று ஆண்மை மேலிடும்படியான குற்றமற்றிருக்கிறபடி. (சொன்ன) ச்ருதிசதசிரஸ்ஸித்தமான அர்த்தத்தைப் பெண்ணுக்கும் பேதைக்கும் அறியலாம்படி சொன்ன. மேகம் பருகின ஸமுத்ர ஜலம்போலே இவள் வாயிலே பட்டவுடனே வேதக்கடலும் உவர்ப்பற்றதாயிற்று. "இவள் வாயனகள் திருந்தவே" என்றுப்போலே. (சொன்ன) வேதம்போல் தான்றேன்றியல்ல; பிறப்பாலுண்டான ஏற்றமுண்டு. பரமபதத்திலே "அவாக்யநாத$_3$ர:" என்றும், "வ்ருக்ஷ இவ ஸ்தப்த$_4$:" என்றும் இருக்கும் நிலையிலே துதிக்க வேதம் போரும்; ஒருத்தி மகனுய்ப் பிறந்த நிலையிலே பட்டர்பிரான் கோதையையொழிய ஒருவரால் கவிபாடவொண்ணுது.

(சங்கத் தமிழ்மாலை) ஒருவராக அனுபவிக்க இழிந்தால் இக்கடலில் அமிழ்ந்துபோகவேண்டியதே; திரள்திரளாக இழிந்தாலும் கரைகாண அரிதாயிருக்கை. பஞ்சலக்ஷம் குடியில் பெண்கள் அனைவரும் அனுபவித்ததாய், ஆண்டாளுடன் கூடிய ஸ்ரீவில்லிபுத்தூர்ச் சிறுமிகளாலே அநுகரிக்கப்பெற்றதாகையாலே குழாங்களாய் உடன் கூடிநின்று பாடி அநுபவிக்கவேணும். 'ஸங்க$_4$ம்' என்னும் வடசொல் 'திரள்' என்னும் பொருளையுடையது. (தமிழ்மாலை) அயர்வறும் அமரர்கள் அதிபதியானவன் மனிதனுய்ப்பிறந்தவுடன் வேதமானது வால்மீகியின் வாயிலாக ஸ்ரீராமாயணமாக அவதரித்தாப்போலே, அவன் மனிசரிற் கடையான ஆயர்குலத்திலே கண்ணனுய் அவதரித்தவுடன் உபனிஷத்துக்கள், ஆண்டாள் வாயிலாக, ஸர்வஸுலபமான தமிழ்ப்பிரபந்தமாக அவதரித்தபடி. (தமிழ்) ஸம்ஸ்க்ருதம்போலே தேவர்களுக்கே நிலமாம்படியான பாஷையன்றிக்கே, ஸர்வோபஜீவ்யமாய், அமிழ்தினும் இனிதாயிருக்கும் பாஷை; ஆழ்வார்களின் ஈரச்சொற்களாலே தண்மைபெற்ற பாஷை. (மாலை) மாலைபோலே பாவனமுமாய், போக்யமுமாய் அவனுக்கும் அவனடியார்க்கும் தலையாலே சுமக்கத்தக்கதாயிருக்கிறபடி. "க்$_3$ருஹ்ணதி

சிரஸா ஸ்வயம்'' [பக்தர்கள் அளிப்பதைத் தலையாலே தாங்குகிறான் எம்பெருமான்] என்கிறபடியே பாமாலை பூமாலை சூடிக்கொடுத்த சுடர்க்கொடியன்றோ நம் கோதை. (தண்தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்னமாலை) மாலையணிந்தவர் மகளான மாலை மாலுக்குக் கட்டினமாலையன்றோ இது. 'கோதை' என்னும்சொல்லுக்கு 'மாலை' என்றும் பொருளுண்டு.(மாலை) ஒரு செவிப்பூவை அவன் கொடுக்க ஒப்பற்றதொரு மாலையையே அவனுக்களித்த வண்மையிருந்தபடியென்!

(முப்பதும்) திருமந்திரமும், திருப்பல்லாண்டும்போலே சுருங்கியிராமலும், வேதமும், திருவாய்மொழியும்போலே விரிந்திராமலும் ஸ்வரூபோபாயபலங்களை அவற்றிலும் விசதமாகத் தெளிவுபடுத்துவதாயும் விளங்குகையால் வந்த ஏற்றத்தை உடைத்தாயிருக்கை. (முப்பதும் தப்பாமே) விலையில்லாத ரத்னங்கள் பதிக்கப்பெற்ற ஒரு மாலையிலே, ஒரு ரத்னம் குறைந்தாலும் அஸஹ்யமாயிருக்குமா போலே, இம்முப்பது பாட்டுக்களில் ஒருபாட்டு குறைந்தாலும் பேரிழவாயிருக்கும். (இங்கு) பிற்பட்ட காலத்திலே, இப்பரிமாற்றத்துக்கு மேட்டுமடையான இந்நிலத்திலே. (இப்பரிசு உரைப்பார்) இப்பிரபந்தத்தைக் கற்பதனால்மட்டும், இதை அநுஷ்டித்தாரைப்போலேயும், அநுகரித்தாரைப்போலேயும் பலம் பெறுவர்.

இப்பிரபந்தத்தைக் கற்றார் அடையும் பலனை இனிவரும் அடிகளாலே சொல்லுகிறார்கள். (ஈரிரண்டு மால் வரைத்தோள்) பெரிய மலைபோலே பருத்த நான்கு தோள்களையுடையவன். ''இக்காலத்திலும் இதைப் பாடுவார் உண்டாவதே!'' என்று கைகள் பூரித்துவிடுகின்றன. பெண்கள் அணைத்தவுடன் கண்ணனுடைய கைகள் பணைத்தபடியைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். ''உத்$_3$த்$_4$ருதாஸி வராஹேந க்ருஷ்ணேந சதபா$_3$ஹுநா'' [நூறு கைகளை உடையவனாய், க்ருஷ்ண நாமவாச்யனான மஹாவராஹத்தாலே குத்தியெடுக்கப் பட்டாயன்றோ] என்று வேதபுருஷனும், ''தடம்பெருந்தோள் ஆரத் தழுவும் பாரென்னும் மடந்தையை'' என்று ஆழ்வாரும், ''ப்ரஹர்ஷயந்தம் மஹீஷீம் மஹாபு$_4$ஜம்'' என்று ஆளவந்தாரும் இவ்வர்த்தத்தை அருளினரன்றோ. (ஈரிரண்டு) அன்பில்லார்க்கு இரண்டு தோளும், அன்புடையார்க்கு நான்கு தோளுமாகத் தோற்றும்.

(செங்கண்) எதிர் சூழல் புக்குப்படாதன பட்டும் கிடைக்கப் பெறாதவர்களை இப்ரபந்த ப்ரபாவத்தாலே கிடைக்கப்பெற்றோமன்றோ என்று கண்கள் வாத்ஸல்யத்தாலே சிவக்கிறபடி. பெண்களைக்கண்ட பிரீதியாலே சிவக்கிறபடியைச் சொல்லுவதாகவும்

கொள்ளலாம். (திருமுகம்) அக்காரணத்தாலேயே முகம் நிறம் பெறுகிறது. (செங்கண் திருமுகம்) "ஸக்2ய: பச்யத க்ருஷ்ணஸ்ய முக2மத்யருணேக்ஷணம்" [தோழிகளே! மிகச்சிவந்த திருக்கண்களையுடைய கண்ணனுடைய திருமுகத்தைப்பாருங்கள்] என்று இவர்கள் ஒருவர்க்கொருவர் காட்டி அனுபவிப்பவையன்றோ இச்செங்கண்ணும் திருமுகமும். திங்கள் திருமுகமும், செங்கண் திருமுகமுமாகிற சேர்த்தியழகு இருந்தபடியென்! "கதிர் மதியம் போல் முகத்தான்" "பங்கயக் கண்ணன்" "செங்கண் சிறுச் சிறிதே" "அங்கணிரண்டுங் கொண்டு" "செங்கண் திருமுகம்" என்று முகத்திலும் கண்ணிலும் வைத்தகண் வாங்கமுடியவில்லை இவர்களுக்கு. (செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமால்) பிராட்டியுடைய ஸம்பந்தத்தாலும் உபயவிபூத்யைச்வர்யத்தாலும் கண்கள் சிவந்திருக்கிறபடி. (செல்வத் திருமால்) திருத்தக்க செல்வத்தையுடைய எம்பெருமான். திருவுக்கும் திருவாகிய செல்வனுகிற 'திருமால்' என்றுமாம். 'மாதவன்' என்று தொடங்கி, 'திருமால்' என்று முடிக்கையாலே த்வயத்தின் இரண்டடிகளின் பொருளையும் உணர்த்துகிருர்கள். முதலிரண்டடிகளிலே பூர்வகண்டார்த்தம்; கடைசியிரண்டடிகளிலே உத்தரகண்டார்த்தம். (எங்கும்) இங்கும், அங்கும். (எங்கும் திருமாலால்) 'இங்கும் அங்கும் திருமாலன்றியில்லை' என்றன்றே ஆழ்வாரும் அருளினர். (திருவருள்பெற்று) "திருமாலாலருளப்பட்ட" "திருமாமகளால் அருள்மாரி" "நின் திருவருளும், பங்கயத்தாள் திருவருளும் கொண்டு" என்கிறபடியே இருவராலும் அருளப்பெற்று. (இன்புறுவர்) பரமானந்தமடைவர்; (எங்கும் இன்புறுவர்) இவ்வுலகிலும் அவ்வுலகிலும் ப்ரஹ்மானந்தத்தை அடைவர். (திருமாலால் இன்புறுவர்) 'அடியேனுக்கின்பாவாய் பொன்பாவை கேள்வா" என்கிறபடியே பிராட்டியும் பெருமாளும் ஒருவரையொருவர் அனுபவித்துப் பெறும் ஆநந்தத்தைவிட விலக்ஷணமாயிருப்பதன்றோ அம்மிதுனத்தைப்பிறர் அனுபவிப்பதால் ஏற்படும் ஆனந்தம். (எம்பாவாய் இன்புறுவர்) எங்கள் பிரபந்தத்தாலே ஆநந்தமெய்துவர்.

**ஆண்டாள் திருவடிகளே சரணம்.**
**பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.**
**அழகியமணவாளப்பெருமாள் நாயனர் திருவடிகளே சரணம்.**
**ஆய் திருவடிகளே சரணம்.**

**ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் ஸ்தாபகரான**
**ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி அருளிய**
**திருப்பாவை வ்யாக்யானம் முற்றிற்று.**

# ஸ்ரீஸூக்திமாலா வெளியீடுகள்

பதவுரை, அரும்பதவுரை, ப்ரமாணத்திரட்டு முதலானவற்றோடு கூடிய பெரியவாச்சான்பிள்ளை முதலான பூர்வாசார்யர்களின் க்ரந்தங்கள்.

| க்ரந்தங்கள் | விலை | தபால் |
|---|---|---|
| 1. பரந்த ரஹஸ்யம் முதலிய எட்டு ரஹஸ்யங்கள் | 1-50 | -18 |
| 2. ஸ்தோத்ரரத்ந சது:ச்லோகீ ஜிதந்தே வ்யாக்யானங்கள் | 3-00 | -38 |
| 3. திருப்பல்லாண்டு வ்யாக்யானம் | 1-50 | -18 |
| 4. முதல் திருவந்தாதி வ்யாக்யானம் | 1-88 | -25 |
| 5. பெருமாள் திருமொழி வ்யாக்யானம் | 1-88 | -25 |
| 6. திருமாலை வ்யாக்யானம் | 2-75 | -31 |
| 7. திருவாசிரியம் பெரியதிருவந்தாதி வ்யாக்யானம் | 1-63 | -25 |
| 8. சது:ச்லோகீ வ்யாக்யானம் (நாயனாராச்சான்பிள்ளை) | 1-50 | -18 |
| 9. கத்ய வ்யாக்யானங்கள் | 2-00 | -25 |
| 10. நாச்சியார்திருமொழி வ்யாக்யானம் | 4-00 | -50 |
| 11. திருச்சந்தவிருத்த வ்யாக்யானம் | 3-00 | -38 |
| 12. நான்முகன்திருவந்தாதி வ்யாக்யானம் (விவரணத்துடன்) | 2-50 | -38 |
| ஷை மலிவுப்பதிப்பு | 2-00 | -38 |
| 13. ஸ்ரீராமாயண தனிச்லோகம் (விவரணத்துடன்) (அச்சில்) | 3-50 | -38 |
| ஷை இரண்டாம்பாகம் (விவரணத்துடன்) | 7-00 | -75 |
| 14. திருப்பள்ளியெழுச்சி வ்யாக்யானம் | 0-50 | -08 |
| 15. பாசுரப்படி ராமாயணம் (விலையில்லை தபால்கூலி 0-08) | | |
| 16. அமலனாதிபிரான் வ்யாக்யானங்கள் | 1-88 | -25 |
| 17. கண்ணிநுண்சிறுத்தாம்பு வ்யாக்யானம் | 2-75 | -38 |
| 18. சிறியதிருமடல் வ்யாக்யானம் (விவரணத்துடன்) | 1-38 | -25 |
| 19. முமுக்ஷுப்படி வ்யாக்யானம் | 2-50 | -37 |
| 20. பெரியதிருமடல் வ்யாக்யானம் (விவரணத்துடன்) | 1-50 | -25 |

## ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. திருப்பாவை வ்யாக்யானம் | 3-00 | -37 |
| 2. ஸந்த்யாவந்தந பாஷ்யம் | 2-25 | -25 |
| 3. புருஷஸூக்த வ்யாக்யானம் | 0-75 | -12 |
| 4. நாராயணஸூக்த வ்யாக்யானம் | 0-75 | -12 |
| 5. ஸ்ரீஸூக்த வ்யாக்யானம் | 2-00 | -38 |
| 6. பூ நீளா விஷ்ணுஸூக்த வ்யாக்யானங்கள் | 1-75 | -25 |
| 7. தேஹளீச ஸுப்ரபாதம் | -25 | -8 |
| 8. கம்பராமாயணம் (கையடைப்படலம் முடிய) | 2-50 | -38 |
| 9. ராமாநுஜதேசிக ஸ்தோத்ரங்கள் | 1-00 | -18 |
| 10. ஸாத்விகவிஜயஸர்வஸ்வம் | -25 | |
| 11. பாகவத தசமஸ்கந்த கீர்த்தனை பூர்வபாகம் | 4-00 | 1-00 |
| ஷை உத்தரபாகம் | 4-00 | 1-00 |
| 12. ஸ்ரீகேசவ மணிமாலை | 0-50 | -08 |
| 13. ஸ்ரீலக்ஷ்மீநருஸிம்ஹஸ்தவம் | 0-37 | -08 |
| 14. யதிராஜவிம்சதி வ்யாக்யானம் | 0-88 | -12 |
| 15. ஸந்மதகாரிகாவளீ | 1-75 | -25 |
| 16. விஷ்ணுசித்தவிஜயம் முதல் பாகம் | 5-00 | -75 |
| ஷை இரண்டாம்பாகம் | 7-00 | 1-00 |

கிடைக்குமிடம்:— S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அட்வகேட்,
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.